தென்று, சென்ற தை மாஸத்திய ஸ்ரீவேதாந்ததீபிகையில் ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ. உப. கபிஸ்தலம் தேஶிகாசார்யர், ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீ. உப. ராயம்பேட்டை அபிநவபட்டபாண க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யர், ஸ்ரீ. உப. திருப்புல்லாணி ரகுபதியாசார்யர், ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ. உப. நாச்சியார்கோயில் க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ. உப. பகல்தீவட்டி ஶடகோபாசார்யர் ப்ரப்ருதிகளான வித்வத்ரத்நங்களுடைய அநுக்ரஹத்தினாலும், ஸ்ரீ. உப. ஸ்ரீரங்கம் ஏ. வி. கோபாலாசார்யர், ஸ்ரீ. உப. திவான்பஹதூர் டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீ. உப. வி. ராகவாசார்யர், ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யர் முதலிய வைதிக லௌகிகங்களில் சிறந்த ஆஸ்திகர்களுடைய ஆதரவினாலும் எந்த அம்ஶத்திலும் குறைவின்றிக்கே பூர்ணமான பரிநிஷ்பத்தியை இந்த ஸங்கம் அடைந்தது என்பதில் ஆக்ஷேபமே இல்லை. ஸ்ரீமதுராந்தக நிவாஸிகளான ஆஸ்திகஶிரோமணிகள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய தேஹஶ்ரமத்தையும் அர்த்தவ்யயத்தையும் கொஞ்சமேனும் கவனியாமல் இந்தவிஷயத்தில் அதிஶ்ரத்தை யுடையவர்களாக ப்ரவ்ருத்தித்ததனால்தான் அந்தஸ்தலத்திற்குப் புதிதாய் வந்திருந்த எல்லாரும் எவ்வகையிலும் கவலையில்லாமல் உபந்யாஸாதி ஸத்விஷயங்களில் பத்தசித்தர்களாக இருக்கவும், அவைகளின் ரஸத்தை ஆத்ருப்தி அநுபவிக்கவும் ஸாத்யமாயிற்றென்று சொல்லவேண்டும். அப்பொழுது அந்த மூன்று தினங்களிலும் அம்மதுராந்தகவாஸிகள் அதிதிஸத்காரவிஷயமாக உழைத்ததை இவ்வளவு என்று சொல்லமுடியாது. அதேமாதிரி ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபையின் கார்யதர்சி, ஸ்ரீ. உப. வி. ராஜகோபாலாசார்யரும் இரவும் பகலும் நித்ரையின்றிக்கே அவ்விடத்திற்கு ஆஹூதர்களாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்வாமிகள் விஷயத்தில் தமது அஶ்ரத்தையால் எப்பொழுது என்ன அபசாரம் நேர்ந்துவிடுமோ வென்று அஞ்சி, ப்ரீதிபூர்வகமாகப் பரிஶ்ரமப்பட்டதை அங்கேவந்திருந்த எல்லாரும் பார்த்திருக்கலாம். பஹுஜநங்கள் ஆநுகூல்யத்தை அடையவேண்டுமானால், சிலர் ஶ்ரமப்பட்டே ஆகவேண்டுமென்பது, இதனால் நன்றாக விளங்குகின்றது.

இவ்வளவுதூரம் அநேகர் இந்த ஸங்கவிஷயத்தில் ஜாகரூகர்களாய் உழைத்தும், அங்கே எழுந்தருளியிருந்த பாகவதோத்தமர்களில் சிலருக்கு ஆதரவில் குறைவு உண்டாய்விட்டதென்றும், அதனால் அவர்களுக்கு மநஸ்ஸில் கொஞ்சம் வ்யதை உண்டாயிருக்கிறதென்றும் இப்பொழுது நாம் கேள்விப்படுகிறோம். அது விஷயமாக நமக்கு ஜநிக்கும் வ்யஸநம் அளவிடமுடியாது. எவ்விதமான அபசாரத்திற்கும் அவகாசம் கொடுக்கக்கூடாதென்று எண்ணி, எல்லாரும் ச்ரத்தையுடன் உழைத்துவரும் காலத்தில் இப்படிப்பட்ட பர்யவஸாநம் ஏற்பட்டு விட்டதே என்பது, மிகுந்த அநுதாபத்தை ஜநிப்பிக்கிறது. யதார்த்தமாகவே, பெருத்த ஸங்கம் கூடுகிறதென்றும், தம்மை ஆஹ்வாநஞ் செய்தவர்கள் தமக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்வார்களென்றும் நம்பி, மற்ற எவ்விதமான ஸம்விதாநங்களையும் செய்துகொள்ளாமலே விதேசத்தில் வந்திருக்குமவர்கள்விஷயத்தில் அநாதரம் நடந்துவிட்டால், அவர்களுக்கு ஏன் வைமநஸ்யம் ஜநிக்காமலிருக்கும்? அப்படி அவர்கள் அஸௌகர்யப்படும்படி பார்த்திருந்தது பெருத்த தவறுதல்தான். ஆனால், மனிதர்களுக்கு நைஸர்க்கிகமாக இருக்கும் ஸாமர்த்ய ஸங்கோசத்தால் அது உண்டாயிருக்கலாமே தவிர, புத்திபூர்வகமாக உண்டானதாயிராது. இம்மாதிரியான பெருத்த ஸமவாயங்களில் கார்யங்களை அளவற்ற ஸாமர்த்யத்துடன் நிர்வஹித்துவந்தாலும், ஏதாவது ஒருபாகத்தில் கொஞ்சம் குறைவு உண்டாவது ஸஹஜமே. ப்ராக்ருதக்குறைவு அவ்விதமாக உண்டானதேதவிர புத்திபூர்வகமாக நடத்தப்பட்டதன்று என்று நாம் கூறும் உறுதிமொழியை வைமநஸ்ய மடைந்திருக்கும் பாகவதோத்தமர்கள் க்ருபையுடன் விச்வஸித்து, அபுத்திபூர்வகமாக நேர்ந்த அந்த அபசாரங்கள் அனைத்தையும் க்ஷமித்து, யதாபூர்வம் இந்த ஸபையின்மீதும் இந்தஸபாஸம்பந்தமான கைங்கர்யத்தில் அந்வயித்திருக்கும் அஸ்மதாதிகள்மீதும் ப்ரீதிவைப்பார்களென்று நம்புகிறோம்.

தவிரவும், சென்ற தைமாஸத்திய ஸஞ்சிகையில் இந்தஸங்கத்தின் அறிக்கையை எழுதிவருங்காலத்தில் அவச்யமாக எழுதவேண்டிய சில அம்சங்கள் எழுதப்படாமல் விடுபட்டன. ஸங்கத்து இரண்டாவது தினத்தின் இரவில், இம்மாதிரியான ஒரு



ஸ்ரீவைஷ்ணவ ஸமாஜத்தில் தமக்கு இருக்கும் உத்ஸாஹமாகிற ஒரு காரணத்தைக்கொண்டே தம்மோடு ஸமாநோத்ஸாஹர்களான தம்முடைய ஸுஹ்ருத்துக்கள் சிலருடன் கூடி, 'ஸ்ரீவிபீஷணசரணாகதி' என்னும் கதையை அம்ருதவர்ஷம்போல எல்லாருடைய கர்ணங்களிலும் வர்ஷித்து, ஹ்ருதயத்துக்கு மஹத்தான குளிர்ச்சியையும் ஆஹ்லாதத்தையும் உண்டாக்கின ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யராகிற மஹானுடைய ப்ரஸ்தாவமே அந்த அறிக்கையில் வாராமற் போய்விட்டது. மூன்று வருஷமாக நடந்துவரும் இந்த மஹாஸங்கங்கள் ஒவ்வொன்றிலும் இவர் இம்மாதிரியாகவே ஹரிகதாரூபமான உபந்யாஸத்தைச் செய்துவருகிறார். அதுகேட்டு ஸந்தோஷிக்காத வ்யக்தி அந்தஸமாஜங்களில் இருந்ததில்லை. இப்படிப்பட்ட மஹோபகாரத்தைச் செய்துவரும் ஆஸ்திக சிரோமணியாகிற ஸ்ரீ. உப. தாதாசார்யர்விஷயத்தில் உண்டான நமது தவறுதலுக்காக நாம் மிகவும் துக்கிக்கிறோம்.

ஸ்ரீ பகவத் விஷயத்திலும் ஸ்ரீ வேதாந்தத்திலும் இக்காலத்தில் சிறந்த அதிகாரிகளாக இருக்குமவர்களில் அந்யதமரான ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி செய்தருளிய உபந்யாஸ ஸம்பந்தமாகவும் சில ந்யூநதைகள் அந்த அறிக்கையில் நேர்ந்துவிட்டனவாம். 'ஆழ்வார்கள் அநுபவித்து வெளியிட்ட பக்திரூபரஸத்தை ச்ரோதாக்களுடைய அந்தராத்மா ப்ரஸந்நமாகும்படி லளிதமாகவும் அதிரஞ்ஜகமாகவும் எடுத்து உரைப்பதற்காகவே இந்தஸ்வாமி அவதரித்திருக்கிறார்' என்று நன்றாக உணர்ந்திருக்கும் அடியோங்களுடைய புத்தியில் அந்யதாவான அபிப்ராயமும் ஜநிக்குமோ? அந்த ஸ்வாமியின் உபந்யாஸத்தைப்பற்றியாவது மற்ற ஸ்வாமிகளுடைய உபந்யாஸங்களைப்பற்றியாவது எழுதியிருப்பதில் ஏதாவது ந்யூந பாகங்கள் இருந்தால், அவைகளை ஜாக்ரதைக் குறைவாலேயே ஏற்பட்டனவென்று எண்ணி, அவர்கள் அவைகளைப் பொறுமையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். "[illegible] ॥"

∴ ∴ ∴

**ஸ்ரீ அகோபில மடமும், ஸ்ரீ அழகியசிங்கரும்.**

“[illegible].” ஸர்வ பூதங்களிடத்தும் ஸமமாக ஸஞ்சரிக்கும் எம்பெருமானுக்கு ஒருவன் த்வேஷ்யன், மற்றொருவன் தயிதன் என்பதும் உண்டோ? நம்முடைய புத்தியில் வைஷம்யம் இருக்கிறதேதவிர, அவனிடத்தில் வைஷம்ய கந்தமே கிடையாது. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹமன் நமக்குத் தெரியாத சில காரணங்களால் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளத்தில் ஶிஷ்யர்கள் விஷயமாக ஓர் ஔதாஸீந்யத்தை ஜநிப்பித்தால், அதனால் நாம் அவனிடத்தில் வைஷம்யாபாதநம் செய்யலாமா? ஆபாததஃ நிக்ரஹம்போலத் தோன்றும் எம்பெருமானுடைய சேஷ்டிதம் அந்ததஃ அநுக்ரஹ ரூபமாகப் பலிப்பதை நாம் பார்த்ததில்லையோ? ஸ்ரீ மடத்தில் இரண்டொருமநஸமாக நடந்துவரும் கார்யங்களெல்லாம் ஒருகால் ஶிஷ்யர்களின் ஶாஶ்வத க்ஷேமத்தின்பொருட்டே பலித்தாலும் பலிக்கலாம். ஶிஷ்யர்களுக்கு நைஸர்க்கிகமாக இருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கைங்கர்ய விஷயமான பாத்யதை இதுவரையில் ஸர்வஸம்ப்ரதிபந்நமாகவும் ஸதஸ்யமாகவும் ஏற்படாமலிருந்தால், இப்பொழுது அந்தப் பாத்யதைக்கு ஒரு தார்ட்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்கும்பொருட்டே ப்ரக்ருத கார்யங்கள் ஸம்பவித்திருக்கலாம். ஆகையால், நம்மில் சிலர் ஶோகிக்குமளவு ஶோகிக்க ஹேதுவில்லை.

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸமீபகாலத்தில் திருமேனியில் நோவுசாத்திக்கொண்டு எழுந்தருளியிருந்ததாகவும், அப்பொழுது தமக்கு ஒருகால் ஹாநி ஸம்பவிக்குமோவென்று திருவுள்ளம்பற்றித் தமக்குப்பிறகு ஆஸ்தாநநிர்வாஹத்திற்காக ஸ்ரீ. உப. காரக்குறிச்சி ஐயமாசார்ய ஸ்வாமியை உயில்மூலமாகத்தாமே நியமித்ததாகவும், அந்தக் காரக்குறிச்சி ஸ்வாமியினிடத்தில் அதிஶங்கையினாலோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ அந்த ஸ்வாமிக்குப் பிறகும் ஆஸ்தாந நிர்வாஹத்திற்காக வேறு ஒரு வ்யக்தியைக் குறிப்பிட்டு அந்த உயிலில் ப்ரஸ்தாவித்திருப்பதாகவும் எழுதப்பட்டிருந்தது. இப்படி ஸ்ரீ ஸ்வாமி செய்திருப்பதில்,



இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்குப் பிறகும் இன்னார்தான் ஆஸ்தாநத்திற்கு வரவேண்டுமென்று இப்பொழுதே குறித்திருப்பது ஒரு க்ரீடார்த்தமாகச் செய்தது போலத் தோன்றுகிறபடியால், அது நமது ஆவாபோத்வாபத்திற்கு அர்ஹமாகவில்லை. ஆனால், லோகத்தில் ஒருவன் தனக்குச் சொந்தமான சொத்தை விநியோகிப்பதுபோல ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குச் சொந்தமான இந்த ஶிஷ்யஸம்பத்தை உயில் மூலமாகத் தமக்குத் தோன்றியபடியெல்லாம் விநியோகிப்பது தர்மமா? இதுவரையில் ஸ்ரீ மடத்தில் நடந்துவந்த ஸம்ப்ரதாயத்திற்கு அவிருத்தமா? என்பதைப்பற்றி மாத்திரம் விசாரிக்கவேண்டியது அவஶ்யம்.

இது விஷயமாக ஸ்ரீ அழகிய சிங்கருடைய முக்ய தர்மமாவது:—தம்முடைய அதீநத்திலிருக்கும் ஏராளமான சொத்தை வ்ருத்திபண்ணுவதும், தம்மை ஆஶ்ரயித்திருக்கும் கணக்கற்ற ஶிஷ்யர்களுக்கு ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸைத் தேடுவதும், அந்தச் சொத்துக்களால் உண்டாகும் பலத்தையும் அதிஶயத்தையும் தம்மை ஆஶ்ரயித்திருக்கும் ஶிஷ்யர்களுக்கே உபயோகப் படுத்துவதும் ஆம். அப்படிக்கில்லாமல் அந்தச் சொத்துக்களால் உண்டாகும் பயனைத் தாமே அநுபவிக்கத் துரீயாஶ்ரமத்தை அவலம்பித்து நிற்கும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸம்பாவனையே இல்லாததால், அவைகளை ஶிஷ்யாதீநமாகப் பரிபாலிப்பதுதான் அவருடைய தர்மமாகின்றது. ஆகையால், ந்யாஸத்தை ரக்ஷிப்பதுபோல இவைகளை ரக்ஷித்துவரும் ஸ்ரீ ஸ்வாமி இவைகளின் விநியோக ஸமயம் நேரும்போது, பல போக்தாக்களாகிற ஶிஷ்யர்களைக் கலந்தே ஹிதாஹித விவேசநம் செய்து, ஸர்வவிதத்திலும் ஸத்தமரென்று ஶிஷ்யர்களால் அப்யுபகமம் பண்ணப்படும் ஸ்ரீ ஸ்வாமியிடம் தமக்குத் திருப்தியிருந்தால் இவைகளை ஒப்புவிப்பதுதான் தர்மமாகும். அப்படிச்செய்வதை விட்டு, ஶிஷ்யர்களுடைய விஜ்ஞாபந ரூபமான கைங்கர்யத்தை ப்ரதீக்ஷிக்காமலே, அவர்களை அநாதரித்து, தாமே யதேஷ்டம் விநியோகிப்பது தர்மலோபத்திற்கு ஹேதுவாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை. மேலும், ப்ராயஶஃ மற்றொரு அழகிய சிங்கரை நியமிக்கும் காலங்கள் எல்லாம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் தேஹ

ஸ்வாஸ்த்யத்தையும் ஸ்ம்ருதி தார்ட்யத்தையும் வஹிக்கும் காலங்களல்லாமையால், வரப்போகும் ஶ்ரேயஸ்ஸுக்குப் பாத்ரமாகும் ஶிஷ்யர்களுடன் ஆலோசித்துச் செய்தாலொழிய மஹத்தான தவறுதலும் ஸம்பவிக்க ஹேதுவுண்டு. இம்மாதிரியாகத் தவறுதலுக்கு ஆஸ்பதமாகும் மார்க்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சரிப்பது தர்ம்யமாகுமா?

ஆனால், ‘நம்மால் ஆசார்யனென்று வரிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் நாம் தவறுதலை ஆஶங்கிக்கலாமா? அவரிடம் போய் நாம் கார்யாகார்யங்களை ஸ்மரிப்பிக்கலாமா? அப்படிச் செய்வது அபசாராவஹமாகாதா?’ என்று சில ஆக்ஷேபங்கள் ஜநிக்கலாம். இம்மாதிரியாகவே சேலத்திலிருக்கும் ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களிற் சிலர் அபிப்ராயப்பட்டு, சென்றமாஸத்திய ஸ்ரீ வேதாந்த தீபிகையில் இது ஸம்பந்தமாக எழுதப்பட்டுள்ள சில வாக்யங்களை அபசாராவஹங்களென்று சோத்யம்செய்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம், இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இப்படிச் சோத்யம் செய்பவர்களுக்கு நாம் ப்ரத்யுத்தரம் சொல்வது ஒன்றே; அதாவது - ஸ்ரீ ஸ்வாமிக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருப்பதனால், ஜ்ஞாநஶக்த்யாதிகளின் ஸங்கோசம் ஸம்பாவிதமே; அப்படிப்பட்ட ஸங்கோசம் வெளிவரும் காலங்களில் உசிதாநுசிதங்களை ஸ்மரிப்பிப்பது ஸந்நிஹிதர்களான ஶிஷ்யர்களின் தர்மம்; அவ்விதமான ஸ்மரணம் செய்யாமல் ஸ்ரீ ஸ்வாமியை அநுசிதமான கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி பார்த்திருப்பது ஶிஷ்யதர்மத்திற்கு அத்யந்தம் விருத்தம், ஈஶ்வரன் திருவுள்ளத்திற்கும் உகப்பாகாது. வார்த்தகப்ரயுக்தமாக ஸாபாய நிரபாய விவேசநம் செய்யும் புத்திக்கு க்லாநி ஏற்பட்டு, நிம்நோந்நத ஜ்ஞாநம் இல்லாமல் ஒரு ஆசார்யன் வழியல்லாவழியில் நடந்துபோவாரானால், ‘ஆசார்யனாயிற்றே; நாம் எவ்விதமாக ஸ்மரிப்பிக்கிறது?’ என்று ஸமீபத்திலிருக்கும் ஶிஷ்யன் தூஷ்ணீம்பாவத்தை ஆஶ்ரயித்திருப்பது தர்மமாகுமா? இந்தக் காலங்களில் யதாஶக்தி நிர்ப்பந்தம் செய்தாவது கார்யாகார்யங்களை ஸ்மரிப்பித்து, ஸம்பவிக்கும் போலிருக்கின்ற ச்யவநத்திலிருந்து எல்லாரையும் ஸம்ரக்ஷிக்க ஶிஷ்யர்கள் முயல்வதன்றோ தர்மமாகும்?



தவிரவும், இதுவரையில் ஸ்ரீமடத்தில் நடந்துவந்திருக்கும் ஸம்ப்ரதாயத்தைப் பார்த்தாலும், ஸ்ரீ ஸ்வாமி இவ்விதமாக நியமிப்பது ஸரியன்று என்றே தோன்றும். இதற்குமுன்னே அநேக அழகிய சிங்கர்கள் தங்களுக்குத் தேஹவியோகம் நேரும்போல ஸம்பவித்திருந்த காலங்களில் ஶிஷ்யர்களுக்கு ஸ்ரீமுகம் அனுப்பி, அவர்களை வரவழைத்திருப்பதையும், ஏற்கெனவே தாங்கள் ஒரு வ்யக்தியை ஆஸ்தாநார்ஹராக ஆலோசித்திருக்கையிலும் அவருக்கு ஶிஷ்யஸம்மதி யில்லையென்பதைத் தெரிந்துகொண்டு ஶிஷ்யர்களால் உத்தேசித்து ப்ரார்த்திக்கப்பட்ட மற்றொருவரையே ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளப் பண்ணியிருப்பதையும் நாம் ஆப்தவாக்யத்தாலும் ரிக்கார்டு மூலமாகவும் அறிகிறோம். ஆகையால், இப்பொழுது ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுஷ்டிக்கப்பட்டிருக்கும் மார்க்கம் இரண்டு ப்ரகாரத்திலும் ஸம்ப்ரதிபந்நமன்று என்பதே நம்முடைய அபிப்ராயம்.

ஆனால், ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி ஸம்பந்தப்பட்டவரையில் இந்தநியமநத்தில் நமக்கு ஆக்ஷேபிக்கக்கூடிய அம்ஶமொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மற்றவர்களைப்போல அவர் இந்த ஆஸ்தாநத்தைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டவரல்லர். அவரை நாம் நேரில் தண்டன் ஸமர்ப்பித்துக் கொள்ளாவிட்டாலும் அவரைப்பற்றிய ஜநஶ்ருதியின் மூலமாக அவர் ஆத்மகுணமும் ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்தும் பொருந்தினவர் என்றே கேள்விப்படுகிறோம். ஆகையால், இந்த நியமந ஸம்பந்தமாக நம்மால் கீழ்க் கூறப்பட்டிருக்கும் ஆக்ஷேபங்களை அவர் நன்றாக உணரலாம். முதலிலேயே, ஸ்ரீ அழகியசிங்கர் தமக்கு ஆஸ்தாந நியமநத்தைப்பற்றி ஸ்ரீமுகம் ஸாதித்தபோது ‘தேவரீருடைய ஸ்ரீமுகத்தை ஶிரஸ்ஸினால் வஹிக்க அடியேன் கடமைப்பட்டிருக்கையிலும், இப்பொழுது இந்த நியமநவிஷயத்தில் தேவரீர் அநுஷ்டிக்கும் மார்க்கம் ந்யாயவிருத்தமாக இருப்பதால், அடியேன் அதற்கு இணங்குவது உசிதமாக இராது’ என்று இவர் ஒரு விஜ்ஞாபநம் செய்துகொண்டிருந்தால் எவ்வளவோ அழகாயிருந்திருக்

கும். இம்மாதிரியான அபிப்ராயம் அவர்திருவுள்ளத்தில் ஜநிக்காத தற்கு அவருடைய ஸாத்விககுணமே காரணமென்று எண்ணுகி ரேம். இல்லாவிடில், அதனால் அவருக்கு ஆகவேண்டிய கார்ய மான அம்ஶம் அவ்வளவாக ஒன்றும் தெரியவில்லை. "[illegible] ॥"

∴ ∴ ∴

பாஷ்யார்த்தஸங்க்ரஹ தீபிகை.

இந்த ஸஞ்சிகையில் ஸ்ரீ காரக்குறிச்சி ஐயமாசார்ய ஸ்வாமியால் எழுதியருளப்பட்ட 'பாஷ்யார்த்த ஸங்க்ரஹ தீபிகை' என்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் மணிப்ரவாள ரூபமான வ்யாக்யாநத்தினுடைய ஒரு பாகம் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்க்ருத பாஷையில் அதிகமாகப் பரிசயம் இல்லாதவர்களுக்கு நமது உத்தேஶ்யதமமான ஸ்ரீ பாஷ்யத்தின் அர்த்தம் விளங்கவேண்டுமானால் இம்மாதிரியான ஒரு க்ரந்தம் வெளிவர வேண்டியது அவஶ்யமே. அதை எழுதி வெளியிடுகிற விஷயத்தில் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி தகுந்த அதிகாரி யென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? ஷை ஸ்வாமி தம்முடைய இந்த க்ருதியை தீபிகையில் அச்சிடும்படி நியமித்ததையே நாம் ஒரு பெருத்த அநுக்ரஹம் என்று எண்ணி மிகுந்த க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாக இருக்கிறேம்.

---

ஶ்ரீ:

[illegible]

# பாஷ்யார்த்த ஸங்க்ரஹதீபிகை.

ஶ்ரீமத்வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
[illegible]

[illegible] ॥

[illegible] ஸாரரூபமான உபநிஷத்தினுடைய அர்த்த நிர்ணயார்த்தம் ஸ்ரியப்பதியான ஸர்வேஶ்வரன், க்ருஷ்ண

த்வைபாயந ரூபமாக அவதரித்து ஶ்ரீமச்சாரீரக ஶாஸ்த்ரத்தை நாலு அத்யாயரூபமாகச் செய்தருளினார். அந்தஶாரீரக மீமாம்ஸா ஸூத்ரத்திற்கு போதாயந பகவாந் அறுபதினாயிரம் க்ரந்த ரூபமான வ்ருத்தி வ்யாக்யாநம் செய்தருளினார். பிறகு இந்தக் கலியுகாரம்பத்தில் ப்ராஹ்மநந்தி என்று திருநாமாந்தரத்தையுடைய டங்கரென்றும் த்ரமிடரென்றும் குஹதேவரென்றும் திருநாமங்களையுடைய மூன்று ரிஷிகள் ஶாரீரக மீமாம்ஸாஶாஸ்த்ரத்திற்கு ப்ரவர்த்தகரானார்கள். அவர்களுக்குள்ளே டங்கரென்கிற ரிஷி விஸ்தீர்ணமான போதாயந வ்ருத்தி க்ரந்தத்தை ஆறாயிர க்ரந்தம் அளவுள்ள வாக்ய க்ரந்தத்தாலே ஸங்க்ரஹித்தருளினார். த்ரமிடரென்கிற ரிஷி அந்த வாக்ய க்ரந்தத்துக்கு பாஷ்யம் செய்தருளினார். குஹதேவரென்கிற ரிஷி அந்த பாஷ்யத்திற்கு டீகை செய்தருளினார். இப்படி ப்ரவ்ருத்திதமான ஶாரீரக ஶாஸ்த்ரார்த்தத்தை ஸ்வாமி நம்மாழ்வார் ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுடைய கடாக்ஷத்தினாலே யதாவஸ்திதமாக ஸாக்ஷாத்கரித்து, ஶ்ரீமந்நாதமுநிகளுக்கு அநுக்ரஹித்தருளினார். அந்த நாதமுநிகள் ந்யாயதத்வமென்கிற க்ரந்தத்தையும் செய்தருளி அத்யாத்ம ஸம்ப்ரதாயத்தை அங்குரிப்பித்தார். பிறகு ஆளவந்தாரும் மணற்கால்நம்பி அநுக்ரஹத்தினாலே அத்யாத்மஸம்ப்ரதாயத்தை அடைந்து, ஸித்தித்ரயம் கீதார்த்த ஸங்க்ரஹம் ஆகமப்ராமாண்யம், மஹாபுருஷ நிர்ணயம் இப்படிப்பட்ட க்ரந்தங்களைச் செய்தருளி ஶாரீரக ஶாஸ்த்ரார்த்தத்தை ஸ்தாபித்தருளினார். பிறகு திருவநந்தாழ்வானே பகவத்ராமாநுஜ ரூபமாக அவதரித்து, ஸூர்யோதய ஸ்தாநீயங்களான ஶ்ரீ பாஷ்ய தீப ஸார கீதாபாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹ கத்யாதி க்ரந்தங்களைச் செய்தருளி ஶாரீரக ஶாஸ்த்ரார்த்தத்தை யதாவஸ்திதமாக ப்ரகாஶிக்கும்படிச் செய்தருளினார். அவைகளுக்குள்ளே ப்ரதாநமான ஶ்ரீபாஷ்யத்தினுடைய அர்த்தமானது க்ரமமாக அநபேக்ஷித ஸங்கோச விஶிஷ்ட அபேக்ஷிதார்த்த விஸ்தாரத்துடன் இங்கு ஸங்க்ரஹிக்கப்படுகின்றது.

அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே
விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே |



ஶ்ருதிஶிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்திரூபா ||

இந்த ஶ்லோகத்தாலே தாம் செய்தருளுகிற ஶ்ரீமத் பாஷ்யத்திற்கு அவிக்ந பரிஸமாப்தி நிமித்தமாக ஶ்ரிய:பதி விஷயக பக்தி ப்ரார்த்தநா ரூபமான மங்களத்தைச் செய்தருளி நாலு அத்யாயங்களிலே ப்ரதிபாத்யங்களான காரணத்வம், அபாத்யத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்கிற அர்த்தங்களையும் ஸங்க்ரஹித்தருளுகிறார். இந்த ஶ்லோகத்திலுள்ள 'பக்திரூபா' என்கிற அம்ஶம், பாஷ்யகாரர் ப்ரபந்ந ராகையாலே ஸ்வாதிகார விருத்தையான முக்த்யுபாயமாகிற பரபக்தி ப்ரார்த்தனையைச் சொல்லவில்லை; ஆனால் 'ஶாஸ்த்ராதாவந்ததோ ஸக்ருத் ஶாஸ்த்ரஸ்யேஷ்ட ஜநார்த்தநம்,' என்கிறபடியே தாம் செய்யப்போகிற வேதாந்த ஸூத்ரார்த்தத்தின் விஶத ஜ்ஞாநத்திற்குக் காரணமாகிற பகவத் ப்ரீதிரூப பக்தி ப்ரார்த்தனையைக் காட்டுகிறது. ஶ்லோகத்திற்கு ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹ பரத்வ தஶையிலோவென்றால், பரபக்தியில் தாத்பர்யம்.

'பாராஶர்ய' இத்யாதியான ஶ்லோகத்தாலே, 'ப்ரஹ்மேதி ஜ்ஞாதவிஷயம் ப்ராப்யஞ்சேவ ப்ரயோஜநம் - ஜிஜ்ஞாஸா ஶப்தஸம்பந்தம் ஸம்பந்தம் ஸ்வாப்ரவீத்' என்கிறபடியே தம்முடைய க்ரந்தத்திற்கு விஷய ப்ரயோஜந ஸம்பந்தங்களைக்காட்டி, 'யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி' என்று சொல்லுகிறபடியே ஶிஷ்டாசார ப்ராப்தமான குரு உபாஸந ரூப மங்களத்தையும் செய்தருளினார்.

'ஸம்ஶோதயாமாஸ' இத்யாதி வாக்யத்தாலே தம்முடைய க்ரந்தத்திற்கு ஸபலத்வத்தை அருளிச்செய்தார்.

ஸூ. அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா |

வேதார்த்த விசாரரூப மீமாம்ஸா ஶாஸ்த்ர மொன்றாகையாலே அதில் பூர்வபாகமான கர்ம மீமாம்ஸையினுடைய கடைசி

யில் 'ஸவிஶேஷணாஹி தம் ப்ரஹ்மத்ராவக்ஷதே தம் ப்ரஹ்ம த்ராவக்ஷதே', என்று ப்ரஹ்மம் ப்ரஸக்தமாகையாலே உத்தர பாகார்த்த விசாரரூபமான ப்ரஹ்ம மீமாம்ஸையை ஆரம்பிக்கிறார் வ்யாஸ பகவாந்.

'அத்ராயமதஶப்த' இத்யாதி வாக்யங்களாலே, அத அத: என்கிற ஶப்தங்களுக்கு க்ரமமாக ஆநந்தர்யத்தையும் வ்ருத்தமான க்ரமவிசாரத்திற்கு ஹேது பாவத்தையும் அர்த்தமாக ஸாதித்தருளினர்.

'அதீத ஸாங்க' இத்யாதியாலே, கர்மவிசாரம் பூர்வ வ்ருத்தமென்றும், ப்ரஹ்மவிசாரம் வர்த்திஷ்யமாணமென்றும், கர்மங்களுக்கு அல்ப அஸ்திர பலத்வ நிர்ணயத்தோடு கூடின ப்ரஹ்ம ஜ்ஞாந அநந்த ஸ்திர பலாபாத ப்ரதீதிதானே ப்ரஹ்ம விசாராரம்பத்தில் ஹேதுவென்றும் காட்டினர்.

'ப்ரஹ்மணோ ஜிஜ்ஞாஸா' இத்யாதி வாக்யத்தாலே ப்ரஹ்மண: என்கிற ஷஷ்டிக்கு கர்மார்த்தத்வத்தை ஸமர்த்தித்தார்.

'ப்ரஹ்மஶப்தேந' இத்யாதியாலே ஶப்த ஶக்தியினாலும் அர்த்த ஸாமர்த்யத்தினாலும் புருஷோத்தமனை ப்ரதிபாதிக்கிறது என்று ஸமர்த்தித்தார்.

'ஜ்ஞாதக்ஷிப்ர' இத்யாதியால், 'அக்ஷய்யம் ஹ வை சாதுர்மாஸ்ய யாஜிந:' என்கிறபடியே ப்ரஹ்ம விசாரம் ராகப்ராப்தமாகையால் ப்ரஹ்ம விசாரம் கர்த்தவ்யதயா விதேயமன்று; ஆனால் வேதாந்தங்களுக்கு ஸித்த வஸ்து பரத்வமில்லாததனால் ஸத்யம் ஜ்ஞாநம் இத்யாதி வாக்யம் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கமாட்டாதாகையால் வேதாந்த ஶாஸ்த்ரம் ஆரம்பயோக்யமன்று என்று மீமாம்ஸகன் ஶங்கிக்க, அந்த ஶங்கைக்கு 'அம்ப, தாத, மாதுல' இத்யாதி ஶப்த வ்யுத்பத்தி க்ரமம்போல பரிஹாரத்தையும் ஸிந்தித்து, மீமாம்ஸா விசாரத்திற்கு கர்த்தவ்யத்வம் பூர்வம் அநிஶ்சிதமாகையாலே அந்தக் கர்த்தவ்யதா ஜ்ஞாநமே விதேயமென்று காட்டியருளினர்.



'மீமாம்ஸாபூர்வபாக' இத்யாதியாலே ஸூத்ரத்திற்கு வாக்யார்த்தத்தை ப்ரதர்ஶிப்பித்தார்.

'ததாஹ வ்ருத்திகார:' இத்யாதியாலே கர்மமீமாம்ஸைக்கும் ப்ரஹ்மமீமாம்ஸைக்கும் ஐக ஶாஸ்த்ர்யத்தை ஸமர்த்தித்தார்.

'ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்ய:' இத்யாதியால் ஸாங்க வேதாத்யயநத்தை விதிக்கிற வாக்யத்திற்கு அக்ஷர ராஶிக்ரஹணமாத்ர பர்யவஸாநத்தை ஸமர்த்தித்தார்.

'தத்ர கர்மவிதி ஸ்வரூபே' இத்யாதியால் கர்ம ப்ரஹ்ம விசாரங்களுக்கு பௌர்வாபர்யத்தை ஸமர்த்தித்தார்.

'ததா ச வேதாந்த வாக்யாநி' இத்யாதியால் ஆபாததீஜநக வாக்யங்களைக்காட்டினர்.

'நநு ச' இத்யாதியால் கர்ம விசாரம் வேண்டாமென்கிற ஶங்கையை பரிஹரித்தார்.

'பாடம்' இத்யாதியால் பாஸ்கரமதத்தை அவலம்பித்து பார்ஶ்வஸ்தன் ஶங்கித்தான். 'நைதத்' இத்யாதியால் அத்வைதி அதற்கு உத்தரம் சொல்லுகிறான். நித்யாநித்ய வஸ்து விவேகம், ஶமதமாதி ஸாதந ஸம்பத், இஹ அமுத்ர பலபோக விராக:, முமுக்ஷுத்வம் என்கிற ஸாதந சதுஷ்டயம் ப்ரஹ்ம விசாரத்திற்கு பூர்வ வ்ருத்தம் என்பது அத்வைதிகளின் மதம். தாபத்ரய அபிஹதியானது பூர்வ வ்ருத்தமென்று யாதவ பாஸ்கர மதம்.

'ஸ தத்ஷக்தம் பவதி' இத்யாதியால் மித்யா பூத பந்த நிவர்த்தகமான ப்ரஹ்மாத்மைகத்வ விஜ்ஞாநத்திற்கு கர்மாபேக்ஷை இல்லை என்கிற அர்த்த ஸ்வபாவத்தைக் காட்டினர்.

'அத்ராவ்ருத்தே' இத்யாதியால் லகு ஸித்தாந்தாரம்பம். ஐக்யஜ்ஞாநம் முக்தி ஹேதுவாகில் ப்ரத்யக்ஷ விரோதம் வருமென்று காட்டினர்.

'அதோ வாக்யார்த்த ஜ்ஞாநாதந்யதேவ' இத்யாதியால் கர்மயோக ஆரம்பக பக்திரூப ஜ்ஞாநமே மோக்ஷஹேதுவென்று

ஸமர்த்தித்தார். கர்மவிசாரமே பூர்வ வ்ருத்தம், ஸாதந சதுஷ்டயம் பூர்வ வ்ருத்தமன்று என்று ஸமர்த்தித்து லகு ஸித்தாந்தத்தை நிகமித்தருளினார்.

'விரோதாந்ந ப்ரமாணத்வாத் விதிஸம்பவயோஜநாத்। ஜ்ஞாநஸ்யைவ ஹேதுத்வாச் ச்ருதேஸ் ஸாமர்த்யதோபி ச ॥ ஶாஸ்த்ரார்த்தமகர்த்ருதா ந யீக்ஷ்யஸமுச்சய: । ஶ்ரவணாதிக்ரமேணைவ வாக்யஜாயா விமுக்திதா ॥ [அதாவது:— விரோதாத் - வஸ்து விரோதம். ந ப்ரமாணத்வாத் - கர்ம ஜ்ஞாநஹேதுத்வத்தில் ப்ரமாணமில்லை. விதிஸம்பவயோஜநாத் - கர்ம ஜ்ஞாநத்திற்கு சித்த ஶுத்தி மாத்ரஹேதுத்வம். ஜ்ஞாந... ச்ருதே: - ஜ்ஞாநத்துக்கே அவித்யா நிவ்ருத்தி ஹேதுத்வம். ஸாமர்த்யதோபி ச - வஸ்து ஸாமர்த்யத்தால் என்கிறபடி. ஶிஷ்டம் ஸ்பஷ்டம்.] என்று கர்மவிசாரம் பூர்வவ்ருத்தமன்று என்கிற விஷயத்தில் அத்வைதி சொன்ன ஆறு ஹேதுக்களில் வஸ்து ஸாமர்த்ய வ்யதிரிக்தங்களான ஐந்து ஹேதுக்களை, உபாய பரமான வேதாந்த வாக்யங்களைப் பர்யாலோசித்து இந்த லகு ஸித்தாந்தத்தில் நிராகரித்தார். வஸ்து ஸாமர்த்யமாவது - மித்யா பூதமான ஸம்ஸாரபந்தத்தை நிரஸிக்கிற ப்ரஹ்மாத்மைகத்வ விஜ்ஞாநத்திற்கு பேதாவலம்பியான கர்மாபேக்ஷை இல்லை என்பது தான். இந்த வஸ்து ஸாமர்த்ய ரூபமான ஹேதுவை மஹா பூர்வ பக்ஷத்தில் உபந்யாஸம் செய்து மஹாஸித்தாந்தத்தில் உபேய பரமான வேதாந்த வாக்ய பர்யாலோசனையினாலே நிராகரிக்கிறார். அதில், ஶங்கரமதத்தில் ப்ரஹ்மாத்மைகத்வ விஜ்ஞாநம் உபாயம், நிர்விஶேஷ ப்ரஹ்மம் உபேயம், அநிர்வசநீய அஜ்ஞாநமும் தந்மூலமான ப்ரபஞ்சமும் நிவர்த்யம். இந்த மூன்று அர்த்தத்தையும் 'யதோ வா இமாநி' இத்யாதி வாக்யங்களாலே மஹாபூர்வபக்ஷத்தில் விஸ்தரேண ப்ரதர்ஶிப்பிக்கிறார்.

காரக்குறிச்சி. அய்யமாசார்யார்.

ஸ்ரீ:.

# மோக்ஷ ஸ்வரூபம்.*

## லோகாயதமதம்.

இந்த மதத்தில் ஶரீரமே ஆத்மா என்று சொல்லப் படுகிறது. லௌகிகனான அரசனே ஈஶ்வரன். ப்ரத்யக்ஷம் தவிர வேறு ப்ரமாணம் இல்லையாகையினால் ப்ரத்யக்ஷ த்ருஷ்டங்களான சந்தந குஸுமாதிகளே போக்யங்கள். இதைத் தவிர ஸ்வர்க்க மோக்ஷாதிகள் இல்லை. 'மம ஶரீரம்' என்கிற வ்யவஹாரம் 'ஶிலாபுத்ரகஸ்ய ஶரீரம்' என்பதுபோல கௌணம். 'ஸ்தூலோஹம்' 'ப்ராஹ்மணோஹம்' இத்யாதிகளாகிற ஸர்வாநுபவ ஸித்தமான ஶரீர அபேதாநுபவத்தினால் 'ஶரீரமே ஆத்மா' என்பது ப்ரமமன்று. அசேதநமான ப்ருதிவ்யாதி ஸங்காதத்தினால், தாம்பூல சூர்ண யோகத்தினால் ராகம்போல, ஜ்ஞாநமுண்டாகிறது. இப்படி ஒப்புக்கொள்வதற்கு, ஒருவனாலும் செய்யப்படாததாய் ப்ரத்யக்ஷ ஸித்தமான கண்டகதைக்ஷ்ண்யாதியும் ரூப ரஸாதி வைசித்ர்யமும் ஔஷ்ண்யாதி ஶக்தியும் ப்ரத்யக்ஷமான த்ருஷ்டாந்தங்கள். வெட்டின கிளை உய்யக் காண்கையாலும், ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா ஒருவன் அங்கீகரிக்கக் கூடியவனன்று. தர்ம அதர்ம ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் கீர்த்தி அகீர்த்திகளாகிற பலங்களுக்கே ஒழிய வேறு இல்லை. ஆகையினால் வேத வைதிக வாக்யங்கள் விப்ரலம்பக வாக்யங்களே என்பார்கள்.

'ஶரீரமே ஆத்மா' என்பதை ப்ரத்யேகமா? ஸமுதாயமா? என்று விகல்பித்தால், நிரூபிக்க முடியாததினாலும், அவயவத்திலில்லாத ஜ்ஞாநம் அவயவிக்கு உண்டாகாதாகையினாலும், அவய

* இது, சென்ற ஸ்ரீமதுராந்தக மஹாஸங்கத்தில் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வான். ஸ்ரீநிவாஸாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

வங்களுக்கு ஜ்ஞாநமுண்டானால் ஶரீரம் பஹுநாயகமாக ப்ரஸங்கிக்கையாலும், ஶரீர அவயவங்களில் சைதந்ய புத்தி அபாதிதையாய் உண்டாகையினாலும், ஶிலாபுத்ரகதேஹ வ்யவஹாரம் தன்னுடைய ஶரீராத்மதேஹ வாஸநாஜந்யஹேது மாகையினாலும், கீர்த்தி முதலியவைகளில் அபேக்ஷை யில்லாதவர்களும் தர்மத்தில் ப்ரவ்ருத்திக்கையாலும், வெட்டின மரத்தில் அந்ய ஜீவ ப்ரவேஶத்தினால் துளிர் உண்டாவதாலும், கண்டக தைக்ஷ்ண்யாதிகள் ஈஶ்வர ஸங்கல்ப ஸித்தங்களாகையாலும், ஆத்மா ஶரீர அதிரிக்தனாக ஸித்திக்கிறான். பின்னும், ஒருவனால் அநுபவிக்கப்பட்டதற்கு மற்றொருவனுக்கு ஸ்ம்ருதி கூடாதாகையால், இந்த்ரியாத்ம வாதமும் கூடாது. பரம ஸுகமான ஸுஷுப்தியைக் கண்டு பயப்படவேண்டி வருவதால் ஜ்ஞாநாத்மவாதமும் கூடாது. மாதாவினுடைய அவயவ ஸம்பந்தத்தினால் புத்ரனுக்கு ஸ்ம்ருதி உண்டாக ப்ரஸங்கிக்கையால், அவயவ ஸங்க்ராந்தியால் வாஸனை ஸம்பவிக்காது. இம்மாதிரியே ப்ராணாத்ம வாதிகளுக்கும் தூஷணமுண்டாகையினால், இவைகளுக்கெல்லாம் ஆஶ்ரயமாய் ஸர்வாநுபவ ஸித்தமான ஆத்மா நித்யனாய் ஸித்திக்கிறான். இவர்களே பசியின் நிவ்ருத்திக்காக போஜந ப்ரவ்ருத்தி காண்கையினாலும், இந்த மதத்தை ப்ரவ்ருத்தித்தவருடைய வாக்யங்களை நம்பி ப்ரவ்ருத்திக்கையாலும் மற்ற ப்ரமாணங்களையும் ஒத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது அநாதி வேத ஸித்த ஈஶ்வர மோக்ஷாதிகளும் ஸித்தமாகும். க்ஷணிகமாயும் துக்க மிஶ்ராதி தோஷதுஷ்டமாயும் இருக்கும் ஐஹிக ஸுகங்கள், "பரிவ்ராட்காமுகஶுநாம் ஏகஸ்யாம் ப்ரமதாதநௌ - குணபம் காமிநீ பக்ஷ்ய இதி திஸ்ரோ விகல்பநா:" என்கிறபடி விரக்தர்களுக்கு அபோஹ்யங்களாகையினாலும் இவர்கள் சொல்லுமது மோக்ஷமன்று.

## புத்த மதம்.

பௌத்த மதத்தில் நாலு பிரிவுகளுண்டு. அவைகளில் வைபாஷிக ஸௌத்ராந்திக யோகாசாரர் என்கிற மூன்று பிரிவுகளிலும் ஜகத் க்ஷணிகமென்னப்படுகிறது. ஆனால் வைபாஷிகன் ஜகத்தை ப்ரத்யக்ஷமென்று ஒத்துக்கொண்டு க்ஷணிக மென்கிறான். ஸௌத்ராந்திகனோ, 'ஜகத் ப்ரத்யக்ஷமன்று ஜ்ஞாந வைசித்ர்ய ஜ்ஞாநாகாரவைசித்ர்யா அநுமேயம்,' என்று சொல்லுகிறான். யோகாசாரனோ, 'ஜ்ஞாநாதிரிக்த வஸ்து இல்லாமையினால் ஜ்ஞாந மாத்ரமுள்ளது' என்கிறான். க்ஷணிகமென்று சொல்வது எல்லாருக்கும் துல்யம. இவர்களுடைய மதத்தில் மோக்ஷமாவது- "விஷயாகார ஶூந்யஸந்தாநவிச்சித்தி ஸந்தாந ஶரணம்" அதாவது - வஸ்துவை விஷயீகரிக்காததான புத்தி பரம்பரைதான். இந்த மோக்ஷத்திற்கு உபாயம், இப்படி தெளிந்து பாவிக்கை.

இந்த மதத்தில் இப்படிப்பட்ட ஜ்ஞாநமும் க்ஷணிகமாதலால் அநுபூத ப்ரத்யபிஜ்ஞை ஸம்பவிக்காது; ஸுஷுப்தியில் ஜ்ஞாந மில்லாததனால் ஜ்ஞாந ஸந்தாநமும் அஸம்பாவிதம்; ஆத்ம நாஶமும், போக ஸாங்கர்யமும், ஸர்வ ப்ரமாண விரோதமும், ஸர்வாநுபவ அபலாபம் முதலான தூஷணங்களும் வரும். உபாஸித்தவனுக்கு மோக்ஷமும் வராது; மோக்ஷமும் க்ஷணிகமாகையினால் புருஷார்த்தமு மாகாது.

மாத்யமிகன் என்பவன், 'வஸ்துக்கள் ஒன்றுமில்லை; ஸர்வம் ஸத்யமென்கிற ப்ரமம் கழிந்து நிருபாதிக ஶூந்யதா வ்ருத்தியே மோக்ஷம்' என்கிறான். இந்த மதத்தில் ஸர்வஜ்ஞனென்று ஒத்துக்கொள்ளப்பட்ட புத்ததேவனும் வந்த்யா ஸுத ப்ராயனாகையினாலும், ஸர்வஜ்ஞன் என்கிற பெயர் மஹாவ்ருக்ஷம் என்பதுபோல ஆகையினாலும், இதற்கு ஆதார ப்ரமாணங்களும் இல்லையென்று ஒத்துக்கொள்ளவேண்டி வருகையினாலும், இது "மாநமில்லை மேயமில்லை" என்று தூஷிக்கப்பட்டது.

## ஜைந மதம்.

இந்த மதத்தில் ஆத்மாக்கள் அந்தந்த ஶரீராநுகுண பரிமாணமுள்ளவைகள். ஈஶ்வரன் கிடையாது. ஆத்மாவுக்கு ராகாதி துக்கமில்லாத ஸ்வாபாவிக ஸ்வரூபாவிர்பாவம் மோக்ஷமென்னப்படுகிறது. தர்ம அதர்மங்கள் ஜகத் வ்யாபியான த்ரவ்யங்கள். முக்தன், நித்யம் ஊர்த்வ கமநம்செய்து ஆலோகா காஶத்தில் ஓரிடத்தில் வஸிப்பன். "அநேகாந்தம் ஜகத்ஸர்வம் ஹேரம்ப நரஸிம்ஹவத்" என்கிறபடி ஸர்வம் அநேகாந்தமென்று ஒத்துக்கொள்வார்கள்.

இப்படி ஸாவயவனாய் [illegible] ஸுக துக்கங்களுடைய உபலம்பத்தினால் ஜீவனை பரிணாமியாய் ஒத்துக்கொண்டது, அவனுக்கு ஸ்வரூபநாஶ ப்ரஸங்கம் வருகையினால் அநுசிதம். ஈஶ்வரனை அங்கீகரிக்காததனால் அசேதநமான தர்மம் பலப்ரதாநம் செய்யமாட்டாது. ஸ்ருஷ்டி ப்ரளய வ்யவஸ்தையும் அஸம்பாவிதம். ஆகையினால் இந்த மதமும் "சொன்னார் தாம் சொன்னவெல்லாம் துறவோமென்று" இத்யாதியால் தூஷிக்கப்பட்டது.

## ஸாங்க்ய மதம்.

இந்த மதத்தில் ஜ்ஞாந ஸ்வரூபனாயும், நிர்குணனாயும், நிஷ்க்ரியனாயும், நிரவயவனாயும், கர்த்ருத்வ போக்த்ருத்வ ஹீநனாயும், அபரிணாமியாகவு மிருக்கும் ஜீவனுக்கு, நித்யமாய் ஸ்வதந்த்ரமாய் நிரவயவமாய் நிஷ்க்ரியமாயுமுள்ள விபுவான ப்ரக்ருத்யாஸத்தினால் ஸம்ஸாரமென்கிறது. ப்ரக்ருத்யாத்ம பேத ஜ்ஞாநத்தினால் மோக்ஷம். புருஷன், ப்ரக்ருதி ஸாந்நித்யத்தினால் அதற்குண்டான கர்த்ருத்வ போக்த்ருத்வாதிகளை தாம் அத்யவஸிக்கிறான். இந்த ப்ரம நிவ்ருத்திதான் மோக்ஷமென்னப் படுகிறது.

இந்த மதப்படி ப்ரக்ருதி புருஷன் இருவரும் அறிவு இல்லாதவர்களாகையினால் மோக்ஷார்த்த ப்ரயத்நமே ஸித்திக்காது; ஜீவனுக்கு முக்தியில் ஆநந்தாநுபவமும் இல்லை; பத்தாவஸ்தையிலேயே நித்ய முக்தனாயிருக்கிறவனுக்கு முக்தி ஸாத்யையுமாகாது; அறிவில்லாமையினால் பந்தத்தில் ப்ரமமு முண்டாகாது; அது துக்கமுமன்று; ஜடமான ப்ரக்ருதி புருஷனுடைய மோக்ஷத்திற்கு ப்ரவ்ருத்தியாது; நியந்தாவான ஈஶ்வரனில்லாததனால் ஸ்ருஷ்டி ப்ரளயாதி நியமும் அஸம்பாவிதமாம்; விபுக்களான ஆத்ம வஸ்துக்களுக்கு கர்த்ருத்வ மில்லாமையால் போக வ்யவஸ்தை ஸித்தியாது; ஈஶ்வராதிஷ்டிதங்களான க்ஷீராதிகளும், சேதநனான பங்கு முதலியவர்களும், அசேதநையான ப்ரக்ருதியின் ப்ரவ்ருத்திக்கு த்ருஷ்டாந்தமாகா; இவ்விதமான மோக்ஷத்தை விரும்புவாருமில்லை.

## வைஶேஷிக மதம்.

இந்த மதத்தில் ஜீவேஶ்வரர்களான ஆத்ம வஸ்துக்கள் ஜடங்கள். தேஶாந்தர ஸுகோபலப்தி இருக்கையால் ஜீவர்களும் விபுக்கள். இந்த ஜீவர்களுக்கு ஸுக துக்க உபய ஹீநமான பாஷாண துல்ய அவஸ்தை மோக்ஷமென்னப் படுகிறது.



இதில், அநுமாநத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஈஶ்வரனுக்கு கர்ம வஶ்யத்வமும் அநேகத்வமும் அல்ப ஶக்தித்வாதிகளும் ப்ரஸங்கிக்கையாலும் ஜீவன் பாஷாண துல்யமாயாவது இருக்கிறானென்று அறியக்கூட முடியாது. அபாவ பர்யாயமான மோக்ஷத்தை அபேக்ஷிப்பது அரிதாகையாலும், ஈஶ்வரோக்தமானதனால் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்பட்ட வேதத்திற்கு விருத்தமாய் ஆத்ம ஸ்வரூபத்தையும் ஈஶ்வர ஸ்வரூபத்தையும் தர்மபூத ஜ்ஞாநங்களையும் மோக்ஷாதிகளையும் ப்ரக்ருத்யநங்கீகாரத்தையும் ஒத்துக் கொள்வதனால் இதுவும் அநுசிதம்.

## அத்வைத மதம்.

இந்த மதத்தில் நித்யமாயும் நிரவயவமாயும் ஜ்ஞாந ஸ்வரூபமாயும் நிர்விஶேஷமாயு மிருக்கிற யதார்த்த தத்வமான ப்ரஹ்மம் ஒன்றே மித்யாவான அவித்யா ஸம்பந்தத்தினால் ஜீவனாகவும் அசேதநமாகவும் ப்ரமிப்பதாகவும், 'தத்த்வமஸி' முதலிய வாக்யங்களால் ப்ரஹ்மாபேத புத்தி உண்டானால் ஜீவன் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறதாகவும், அப்படி ஆவதே மோக்ஷமென்றும், இதற்கு த்ருஷ்டாந்தமாக தரங்கங்களால் சந்த்ர ப்ரதி பிம்பத்தையும் கட ஆகாஶாதிகளையும் அத்வைதிகள் சொல்லுகிறார்கள்.

இதில் வ்யாவஹாரிகமென்று ஸர்வ பதார்த்தங்களையும் ஒத்துக்கொண்டு, எல்லாம் மித்யை என்கிற மித்யாவான ப்ரமாணங்களைக்கொண்டு மித்யையான ஜ்ஞாதாவாயும் மித்யையாக பரோபதேஶ ப்ரவ்ருத்தரான மித்யையான பகவத் பாதாதி வாக்யங்களை ஆப்தோபதேஶமாக நம்பி, மித்யா ஸம்ஸாரியான ப்ரஹ்மம் மித்யா மோக்ஷத்திற்கு ப்ரவ்ருத்திப்பது அத்யந்தாஶ்சர்யம். ஸர்வத்தையும் வ்யாவஹாரிகமாய் ஒத்துக்கொண்டு ஸர்வம் மித்யை என்பதும், ஸம்ஸ்ருதி துக்க ஸந்தப்தன் பாஷாண கல்ப பர்யாயமாயும் ஸ்வரூப நாஶபர்யாயமுமான மோக்ஷத்தை அபேக்ஷிப்பதும், அஹமர்த்தமல்லாத மாம்ஸ க்ரந்திக்கு ஜ்ஞாத்ருத்வ

மும், ப்ரஹ்மமென்கிற நித்யமுக்தனுக்கு மோக்ஷமென்பதும் ஆஶ்சர்யப்படக் கூடியவைதாம். தவிரவும், ஶங்கராசார்ய ப்ரப்ருதிகளுக்கு அஜ்ஞானம் போயும் பேத புத்தியினாலே உபதேஶாதிகளும் அஸம்பாவிதமானவைதான். இதனால் வையாகரண யாதவ பாஸ்கராதி மதங்கள் உக்தோத்தரங்கள்.

## த்வைத மதம்.

இந்த மதத்தில், ஆத்ம ஸ்வரூபத்தில் அத்யந்த தாரதம்யத்தையும், மோக்ஷாநுபவத்திலும் தாரதம்யத்தையும், குண குணிகளுக்கு அபேதத்தையும், ஸர்வேஶ்வரியான லக்ஷ்ம்யாதிகளுக்கு ஸ்ருஷ்ட்யாதிகளையும் வேத விருத்தமாக ஒத்துக்கொண்டிருப்பதால் இதுவும் அநுசிதமே.

## ஸ்ரீ விஶிஷ்டாத்வைத மதம்.

ஸ்ரிய: பதியாய் ஹேய ப்ரத்யநீகனாய் கல்யாணகுண நிவாஸனாய் நித்ய விபுவாய் ஜ்ஞானாநந்தாதி ஸ்வரூபனாய் ஸ்வாபாவிக ஜ்ஞாநாதி ஷாட்குண்ய விஶிஷ்டனாய் உபய விபூதி நாதனாய் நித்யமான திவ்ய மங்கள விக்ரஹ விஶிஷ்டனாயும் இருக்கும் நாராயணனை, நித்யனாயும் ஜ்ஞாநாநந்தாதி ஸ்வரூபனாயும் ஜ்ஞாதாவாயும் அணுவாயும் ஆவிர்பூத அபஹத பாப்மத்வாதி குண விஶிஷ்டனான ஜீவன் வைகுண்டமென்கிற தேஶவிஶேஷத்தில் அஶரீரனாகவாவது ஸஶரீரனாகவாவது அநுபவித்துக்கொண்டும், அவ்வநுபவ பரீவாஹமான கைங்கர்யாதிகளைப் பண்ணிக் கொண்டும் தன் இஷ்டாநுகுணமான போக்ய வஸ்துக்களை, "ஸ யதி பித்ருலோககாமோ பவதி" என்கிறபடி ஸ்ருஷ்டித்து அநுபவித்துக் கொண்டும் ஈஶ்வரனோடு ஸமாநபோகனாக இருப்பது இந்த மதத்தில் மோக்ஷமென்னப்படுகிறது. ஆனால் ஈஶ்வரனுக்கு அஸாதாரணமான ஸ்ருஷ்ட்யாதி ஜகத் வ்யாபாரமும், லக்ஷ்மீபதித்வாதிகளும் ஸ்வரூப விபுத்வாதிகளும் ஜீவனுக்கு ஸம்பாவிதங்களன்று. ஜீவர்களான நித்யர்களுக்கும் முக்திகால தாரதம்யமுள்ள முக்தர்களுக்கும் ஆநந்தாநுபவத்தில் தாரதம்யமில்லை. அந்த நித்யர்களுக்குள்ளும் நியத கைங்கர்யம் பண்ணுகிற அநந்தாதிகளுக்கும் அதைப் பார்த்து உகக்குகிற முக்தர்களுக்கும் ஆநந்த தார



தம்யமில்லை. கர்ம மூலமான ராகாதி தோஷமில்லாததனால் ஒருவர் பண்ணும் கைங்கர்யத்தில் மற்றொருவர் ஆசைப்படுவதுமில்லை. ஈஶ்வர ப்ரீதி ரூபமான பலத்திலும் கைங்கர்யம் செய்பவருக்கும் அதைச் செய்யாதவருக்கும் வாசி இல்லை. இவ்விதமான மோக்ஷத்திற்கு கர்ம ஸம்பந்தமில்லாததனால் கர்ம நாஶ ப்ரயுக்தமாய் ச்யுதி இல்லை. ஈஶ்வரன் அநந்யேஶ்வரனாகையினாலும் ஸத்ய ஸங்கல்பனாகையினாலும் அவனால் ச்யுதி இல்லை. இச்சித்தால் முக்தனுக்கு ஸர்வபோகமும் கிடைக்குமாகையினால் போகேச்சையால் புநராவ்ருத்தி இல்லை.

சதுர்முகாதி லோகங்களிலுள்ள ஸுகாநுபவம் "ஸர்வே தே நிரயாஸ்ம்ருதா" என்கிறபடி ப்ரஹ்மாநுபவாபேக்ஷயா நரகதுல்யங்களாகையினால் அறிவுள்ளவர்களால் அர்த்திக்கப்படுகிறதில்லை. இந்த ப்ரஹ்மாநுபவமே புருஷார்த்தமென்கிற பதத்திற்கு முக்யார்த்தமாகின்றது.

இவ்விதமான மோக்ஷமிருப்பதில் அநாதியான வேதம் ப்ரமாணமாகையினால் யுக்தி விரோதம் சொல்லமுடியாது. ப்ரமாணங்கள் நிற்க, யுக்தியால் ஆலோசித்துப் பார்த்தாலும் ஸம்ஸார ஸுகத்தை அல்பமென்று விட நினைத்திருப்பவர்களால் விஶ்வஸிக்கக்கூடிய மோக்ஷம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறதாகவே ஆகும். ஜீவன்களுக்குப் பாரதந்த்ர்யம் ஸ்வாபாவிகமாகையினால் மோக்ஷத்திலும் பரதந்த்ரனாகவே இருக்கிறான். ஆனாலும் ஜீவனுக்கும் ஈஶ்வரனுக்கும் விருத்தேச்சை அவ்விடத்தில் உண்டாகாதாகையினால் இந்தப் பாரதந்த்ர்யம் துக்க ஹேதுவன்று. இந்த அர்த்தத்தை "[illegible]" இத்யாதியாக பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஶ்ரீ:

# மங்களாஶாஸநம்.

ஹேயப்ரத்யநீகனையும், ஸகலகல்யாண குணங்களையுடையவனையும் இருந்துகொண்டு, தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்கு ஸகல அமங்களங்களையும் போக்கி, எல்லா மங்களங்களையு முண்டாக்கிக்கொண்டு ஸர்வரக்ஷகனாய் ஸர்வேஶ்வரனிருக்கின்றானென்றும், அவனே நமக்கு ரக்ஷகனென்றும், ப்ரணவத்திற் சொல்லியபடி தெளியக்கண்டு, அநுஸந்திக்கும் தஶை ஜ்ஞாநதஶையாம். அந்தத் தஶையில் "களைவாய் துன்பம் களையாதொழியாய்" என்கிறபடியே ஸகல அநிஷ்ட நிவ்ருத்திகளுக்கும் அவனே கடவுன் என்று ஜ்ஞாநிகள் இருப்பர். இந்த ஜ்ஞாநிகளே பகவானுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களை அநுஸந்தித்து, ப்ரேமம் நிரம்பவும் தலையெடுத்து, பகவானுக்கு என்வருகிறதோ என்று மனம் கலங்கி, பகவானுடைய ஜ்ஞாநஶக்திகளை மறந்து, அவன் ஸ்வரூபத்தை அநுஸந்திக்கப் பொறுமையில்லாமல், மநஸ்ஸு மறுகுவர். ஈஶ்வரனுடைய ஸௌந்தர்யத்தையும் ஸௌகுமார்யத்தையும் நன்றாய்த்தெரிந்து பரிவர் இல்லாமையையும், ப்ரதிகூலர்கள் இருப்பதையும் கண்டு, வயிறு எரிந்து, தன்னை ரக்ஷகனாகவும், பகவானை ரக்ஷிக்கப்படுமவனாகவும் தடுமாறி நினைத்து, பல்லாண்டுபாடி, அவனுக்கு மங்களமுண்டாக வேண்டுமென்று, பக்தனொருவன் ப்ரார்த்திக்கும் தஶைக்கு மங்களாஶாஸந தஶையென்று பெயர்.

இப்படி ஸர்வரக்ஷகனைத் தான் ரக்ஷிப்பதுபோல நினைத்தல் அவனுடைய அத்யந்தபாரதந்த்ர்யத்துக்கு விரோதமன்று என்றும், இது ஶ்ரேஷ்டமான தஶையென்றும் ஆசார்யர்கள் அநேகர் நிர்வஹித்திருக்கிறார்கள். இதற்கு ஶிஷ்டாசாரம் இருக்கிறதைக்கொஞ்சம் காட்டுவோம்.

மஹாஜ்ஞாநிகளில் முக்யமானவர் ஜநகர் என்ற ப்ருஹ்மஜ்ஞாநி. இவர் தநுர்ப்பங்கத்தால் பெருமாளுடைய ஶக்திவைபவ



த்தைக் கண்டிருக்கச்செய்தேயும், "இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ - ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா" அதாவது - 'ஆபிஜாத்யாதிகளால் பெருமையுடைய இவளை கைக்கொண்டருளும்' என்றுசொல்லி, இவருடைய அழகையும் ஸௌகுமார்யத்தையும் கண்டு கலங்கி, "இச்சேர்த்திக்கு யாதொருதீங்கும் வராமலிருக்கவேண்டும்" என்று "பத்ரம் தே" (க்ஷேமமுண்டாக வேண்டும்) என மங்களாஶாஸநம் செய்தார்.

பெருமாளுடைய ஸகல வைபவமும் தெரிந்தவளான ஸீதாப்ராட்டி பெருமாள் பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்ள திவ்யாலங்காரராய், தஶரத சக்ரவர்த்தியின் திருமாளிகைக்கு எழுந்தருளும்போது, அவரழகில் தோற்று, ப்ரேமத்தால் கலங்கி, "ஆ[illegible]" என்று வாசல்வரையில் மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு பின்சென்று "பூர்வாம் திஶம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம: - வருண: பஶ்சிமாமாஶாம் தநேஶஸ்தூத்தராம் திஶம்" என்பதாக, திக்பாலர்களை பெருமாளுக்கு ரக்ஷகராக அபேக்ஷித்தாள்.

"அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்று பெருமாளுடைய ஶக்தி வைபவத்தை நன்றாய்த்தெரிந்த விஶ்வாமித்ரர் தம்முடைய யாகம் நிறைவேறும்படி பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகும்போது, தாடகை ஆரவாரத்துடன் ஆக்ரமித்து வருகிறதைப்பார்த்து, பெருமாளுடைய ஸௌகுமார்யத்துக்கு என்வருகிறதோ என்றுபயந்து, "விஶ்வாமித்ரஸ்து ப்ரஹ்மர்ஷிர் ஹுங்காரேணாபிபர்த்ஸ்ய தாம் - ஸ்வஸ்தி ராகவயோரஸ்து ஜயம் சைவாப்யபாஷத" என்று, தாம் முன்னின்று அவளை ஹுங்கரித்து, ராமலக்ஷ்மணர்களுக்குத் தீங்குவாராதிருக்க மங்களாஶாஸநம் செய்தார்.

தண்டகாரண்யத்திலே ரிஷிகள் தங்களுடைய ஆபத்தைநிவ்ருத்திக்கும்படிக்கும் அபிமத ஸித்தியைக் கொடுக்கும் படிக்கும் ராக்ஷஸர்களுடைய க்ரௌர்யத்தினின்றும் தங்களை விடுவிக்கும்

படிக்கும் ப்ரார்த்தித்திருக்க, அப்பெருமாள் தங்களிடத்தில் எழுந்தருளினவுடன் அவருடைய ஜ்ஞாநஶக்திகளை மறந்து, வடிவழகில் மநஸ்ஸு சென்று, "தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: - மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா:" என்று பெருமாளுக்கு மங்களத்தை ப்ரார்த்தித்தனர்.

சிறிய திருவடியாகிய ஹநுமான் முதலில் பெருமாளைக்கண்டதும், அப்பெருமாளுடைய தோள்வலியை நோக்கி, இவர் நமக்கு ரக்ஷகர் என்று எண்ணியும்கூட, திருத்தோள்களின் அழகைக்கண்டு, மதிகலங்கி, இவற்றிற்கு த்ருஷ்டிதோஷம் வரக்கூடாதென்று எண்ணி, 'ஏன் ஆபரணங்களால் அத்தோள்கள் மறைக்கப்படவில்லை? வெளியிடுவதற்கு என்னகாரணம்?'- "ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா: - ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா:" என்று விண்ணப்பம் செய்தார். மேலும், பெருமாளுடைய வைபவத்தை நன்றாய்த்தெரிந்திருந்தும், அவருடைய ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்து என்வருகிறதோவென்று ஸர்வதஶையிலும் அவரைத்தாம் பாதுகாப்பதாக அவர் துடித்துக்கொண்டிருப்பர்.

ஸுக்ரீவ மகாராஜா, வாலியை வதம்செய்த பெருமாளின் ஶக்தியை அறிந்திருந்தும், ப்ரேமத்தால் கலங்கி, விபீஷணாழ்வான், வந்தபோது, "ஏஷ ஸர்வாயுதோபேதஶ் சதுர்பிஸ் ஸஹ ராக்ஷஸை: - ராக்ஷஸோப்யேதி பஶ்யத்வமஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய:" 'நமக்கு உயிரான பெருமாளை நலிவதற்காக வருகிறான் இவன்' என்று நிச்சயித்து, "ராவணம் ஶரணம் கத:" "நிக்ருஹ்யதாம் க்ஷிப்ரம்" என்று அவன் சொல்லியும் கூட 'இவன் ராவண ஸம்பந்தப்பட்டவன்' என்று, "ராவணஸ்ய ... ப்ராதா ஹ்யேஷ விபீஷண:" என்று அவனைச் சித்ரவதம் பண்ணவேணும் என்றார். தாம் வாலியின் தம்பியாயிருந்தும் ராமனுக்குத் தாம் பக்தன் ஆனதுபோல, விபீஷணனும் ராவண ப்ராதாவாயிருந்தும் ராமபக்தனாகலாம் என்பதை மறந்தார். இவரை த்ருப்தி செய்விப்பதற்காக கபோதோ பாக்யாநம் முதலான கதைகளும், விபீஷணர் சரணாகதியால் ப்ரபத்தி ஶாஸ்த்ரமும் வெளியிடப்பட்டன.



ஜடாயுவோ, ஜநஸ்தாநத்தில் பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் பெருமாள் ஜயித்தவீரத் தன்மையை அறிந்திருந்தும், தாம் ராவணனால் தோல்வியடைந்து குற்றுயிரா யிருக்கும்போது, பெருமாள் ஸீதாப்பிராட்டியைத் தேடிக்கொண்டு வருகையில் "யாமோஷதிமிவாயுஷ்மந் நந்வேஷஸி மஹாவநே - ஸா தேவீ மம ச ப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம்." [அதாவது-"என்னுடைய உயிரையும் உமக்கு நித்யப்ராணன் போலிருக்கிற பிராட்டியையும் ராவணன் அபஹரித்துப் போய்விட்டான்"] என்று சொல்லும்போது, பிராட்டியின் பிரிவால் பெருமாள் அடைந்திருக்கிற தளர்ச்சியையும் ஸௌகுமார்யத்தையும் ராக்ஷஸர்களின் ஸ்வபாவத்தையும் நினைத்து, "ஆயுஷ்மந்" என்று பெருமாளுக்கு ஆயுஸ்ஸைப் பிரார்த்தித்தார்.

ஶ்ருங்கிபேரபுரத்தில் பெருமாள் எழுந்தருளினபோது இளையபெருமாள் நிர்மித்த ஶயநத்தில் அப்பெருமாளும் பிராட்டியும் பள்ளிகொண்டருள, அவ் இளையபெருமாள் தாம் உறங்காமல் வெகு ஜாக்ரதையாய் பெருமாளுக்கு என்வருமோ என்று அஞ்சி, முதுகில் அம்பறாத்தூணியும் கையில் வில்லுமாகப் பெருமாளை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டே இருந்தார். குஹப்பெருமாள், "இவனும் பரதனுக்கு ஒரு தம்பிதானே; இவனும் ராஜ்யத்துக்காகப் பெருமாளை ஏதேனும் செய்யக்கூடும்" என்று அவர் மீதும் ஶங்கையுடையவராகி, தாம் விழித்திருந்து ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடன் கூடவே அவரிருக்குமிடத்தி லிருந்த அவர் பரிவாரம் எல்லாரும், "இவர் ஜாதியில் ஒரு வேடர்தானே" என்று அந்த குஹப் பெருமானிடத்து அதிஶங்கையோடு அவர்களும் உறங்காமல் பாதுகாத்தார்கள்.

“[illegible] ஸதா” என்கிறபடி பெருமாளின் மேலுள்ள ப்ரேமத்தால் இவர்களெல்லாரும் இப்படிப் பாடுபட்டார்கள். ஆகையால் இந்த மங்களாஶாஸன நிஷ்டையானது அஸ்தாநபய ஶங்கையை உண்டு பண்ணும்.

“ஜாதோஸி தேவதேவேஶ ஶங்கசக்ரகதாதர திவ்யரூபமிதம் தேவ ப்ரஸாதேநோபஸம்ஹர” என்று ‘இவர் பரமாத்மா’ என்றறிந்த பிற்பாடும், வஸுதேவர், மனம் கலங்கி, கம்ஸன் என்ன செய்வானோ என்றஞ்சி, தமது ஶங்க சக்ரங்களை மறைத்துக்கொள்ளும்படி கண்ணனை ப்ரார்த்தித்தார். “உபஸம்ஹர விஶ்வாத்மந்நதோ ரூபமலௌகிகம் ஶங்கசக்ரகதாபத்மஶ்ரியா ஜுஷ்டம் சதுர்புஜம்” என்று வஸுதேவனைப்போல தேவகியும் கேட்டுக்கொண்டாள்.

ஸ்ரீ நந்தகோபர், ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஶக்தியை பூதநா நிரஸநத்தாலே தெரிந்திருந்தும், குழந்தையின் ஸௌந்தர்யத்தில் துவக்குண்டு, கலங்கி, வயிறெரிந்து அவருக்கு ரக்ஷையிட்டார்.

ஸ்ரீ விதுரர் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் ஸர்வஶக்தியையும் அறிந்தும் கூட, துர்யோதந கோஷ்டியில் பகவான் எழுந்தருளினபோது அவருக்கு அவன் பொய்யாஸநமிட்டபடியைக் கண்டஞ்சி, தன் திருமாளிகைக்குக் கண்ணன் எழுந்தருளின பின்னரும் மாநஸ ப்ரேமத்தால் கலங்கி, தாம் ஸமர்ப்பித்திருக்கிற ஆஸநத்தையும் அதிஶங்கைபண்ணி, அதைத் தம் கையால் அழுத்திப்பார்த்தார்.



பிள்ளை யுறங்காவில்லி தாஸர் என்று ஒரு மஹான் எழுந்தருளியிருந்தார். அவருக்குப் பெருமாள்தாம் ரக்ஷகர் என்று தெரியும். ஆயினும் ப்ரேம பரவஶராய், விக்ரஹவைலக்ஷண்யத்தில் ஈடுபட்டு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் உத்ஸவத்தில் வெளியில் எழுந்தருளும்போது ஏதாவது ஒரு சலநம் பிறக்கில் நம் ப்ராணனை விடுகிறதென்று, சொட்டை என்கிற ஓர் ஆயுதத்தை உருவிப் பிடித்துக்கொண்டு ஸேவிப்பர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிஷ்டையில் மேற் சொன்னவர்களைவிட ஆழ்வார்களின் நிலைமை ஶ்ரேஷ்டமானது. அவ் வாழ்வார்களில் பெரியாழ்வார் மஹாஶ்ரேஷ்டர். அப் பெரியாழ்வாரைத் தவிர்த்த மற்ற ஆழ்வார்கள் பகவத் விக்ரஹ வைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கையில், அந்த அநுபவம் இல்லாது ஆற்றாமை கரைபுரண்டு, “கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன், ஒருவர்க்கு உரியேனோ?” என்றபடி, பகவானுக்கே அடிமையென்னும் பகவத் ஶேஷத்வத்தையும், “உற்றதும் உன்னடியார்க்கு அடிமை” என்றபடி பாகவத ஶேஷத்வத்தையும் தங்கள் ஆற்றாமையால் மறந்து, ரோஷமும் வெறுப்பும் உண்டாகி, ‘கழகமேறேல்’ என்றும், ‘போகு நம்பி’ என்றும், ‘வெஞ்சிறைப்புள்’ என்றும் கோபமாய் வசநித்து, பகவத் ஸௌந்தர்யத்தில் மநஸ்ஸு சென்று, இப்படி ஸ்வரூப விரோதமாகத் தோற்றுவிக்கும் செயல்களைப் பண்ணுவிப்பதால், அவ்வாழ்வார்கள் ஸ்வப்ரயோஜநமே விஶேஷமென்று எண்ணுவதுபோலப் பிறருக்குத் தோன்றும். பெரியாழ்வாரோ இந்தப் பகவத் ஸௌந்தர்யத்திலே ஈடுபட்டு, ஸ்வரூப விரோதமாகத் தோற்றும் கார்யத்தில் ப்ரவேஶிக்காமல் அந்த ஸௌந்தர்யத்துக்கு என் வருகிறதோவென்று வயிறு எரிந்து, தன் ப்ரயோஜநத்தைக் கொஞ்சம்கூட நினையாமல், பகவானுடைய ஸேவைக்கும் பாகவதாநுபவத்துக்கும் என்ன தீங்கு வருகிறதோ என்று தடுமாறி, அவை மேன்மேலும் வ்ருத்தி யடையவேண்டுமென்று ப்ரார்த்திப்பர். இந்த மங்களாஶாஸந நிஷ்டை நமக்கு எல்லாம்

யாத்ரையாய் இருக்கவேண்டும். இதை உத்தேசித்தே ஆசார்யர்கள் ஸேவாகாலங்களிலும் சாற்று முறைகளிலும் உத்ஸவாதிகளிலும் பெரியாழ்வார் பல்லாண்டு பத்துப் பாட்டுக்கும் மிகப்ராதாந்யம் வைத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பகவத் ஸௌந்தர்யத்துக்கு என்வருகிறதோ என்று பெரியாழ்வார் பல்லாண்டு அருளிச்செய்ய, பெருமாள் தாம் மல்லவர்க்கத்தை ஓர் ஆயாஸமு மில்லாமல் அழித்த தம்முடைய புஜபலத்தை அவ்வாழ்வாருக்குக் காட்ட "திண்டோள் மணிவண்ணா" என்று அந்தத் தோள்களுக்கு மங்களாஶாஸநம் செய்ய, அதற்குப் பெருமாள் தம்மிடத்தில் பிராட்டி எப்போழ்தும் "அகலகில்லேன் என்றிறையும் அலர்மேல்மங்கை" இருக்கிறாள் என்று காட்ட, "திருமங்கையும் பல்லாண்டு" என்று நித்யமாய் அந்தச் சேர்த்தி நடக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, பெருமாள் மஹா ஶக்தியுள்ள சக்ரம் தம் ஆயுதம் என்று காண்பிக்க "ஆழியும் பல்லாண்டு" என்று அச்சக்ரத்தாழ்வான் விஷயமாயும் மங்களாஶாஸநம் செய்து, பிறகு, "அப்பாஞ்சஜந்யமும் பல்லாண்டு" என்று ஶங்கத்திற்கு மங்களாஶாஸநம் அருளிச் செய்தார்.

இப்படி பகவானுக்கு அதிஶயத்தை விளைவிக்க வேண்டும் என்பதே இந்த மங்களாஶாஸந நிஷ்டையின் முக்ய தாத்பர்யம். இந்த நிஷ்டையில் ஶேஷத்வ பாரதந்த்ரியத்துக்கு விரோதமாகத் தோற்றக்கூடியது யாதொன்று மில்லை. இந்த நிஷ்டையே முக்யமென்றும், உடையவருடைய அபிப்ராயமும் இதுவே என்றும் நம் ஆசார்யர்களில் அநேகர் நிர்வஹித்திருக்கிறார்கள். மேற்சொன்ன விஷயங்கள் திருப்பல்லாண்டு பத்துப்பாட்டையும் வ்யாக்யாநத்துடன் ஸேவிக்க இந்த அர்த்தம் விஶதமாய் விளங்கும்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

# அமலனாதிபிரான்.

[illegible]

(க) [illegible]

(உ) [illegible]

[illegible]

(௩) [illegible]

(௪) [illegible]

(௫) [illegible]



(௬) [illegible]

(௭) [illegible]

(௮) [illegible]

(௯) [illegible]

கடாக்ஷை: விக்ஷேப ரக்ஷாஸஹஸ்ரித தநா:
ய: பாதா ஸத்வமோக்ஷௌ |
ஸதா ஶேஷஶாயா நாऽத்பவி தயாதணி
ஶ்ரேணி தீர்த்தாதிராஜா
ஶ்ராத்தா த்ருஷ்டிஸ்துதீயா பரகயதி ததா
வ்யஞ்ஜநஜ்ஞம் ஹி யஜ்ஞே ||

(ஏ) நீலம் காலாப்தபாலம் யது குல திலகம்
ஸாத்த்வதேஹ்யஜ்ஞவீதம்
ஶ்ருத்யுத்தபோதம் த்ரிவிஷ்டபிவதிம்
ஸ்வாதுவாஸ்வாதநீயம் |
யஜ்ஞக்ஷேத்ரே வதீர்ணம் நிரவதிஸுஷமா
தேஹமாதாநவீக்ஷ்ய
ஶ்ரீஷஷ்டாந்த்யக்ஷராலி ப்ரபவதி ஸததே
தைவ வா தோஷதேஷு ||

---

ஸத்ஸிம்ஹாஸநிவாஸதோ விதஸிதம்
யஜ்ஞஸ்ரஜ்ஞஶயம்
த்ருஷ்ட்வா ஶ்ராவிபஸத்க்திஹிவ்யுபசயஞ்ச
ஸோத்ரும் விசித்ராயுதம் |
த்ரைய்யந்தாஶயஸாரஸாரதயோரம்
நீவாரணவாண்யாதிதம்
ஸம்ஸ்ப்ருத்யாஹதோத்பவாநி நிதராம்
க்ருஷ்ணேऽபி ஶரம் பராஞ் ||

எம். கே. தாதாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ அஹோபிலமடத்து

## ஶிஷ்யஸபையின்

## 1912 - வருஷத்திய அறிக்கை.

ஸ்ரீ மதுராந்தக மஹாஸங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்ப்ரதாயத்தின் அபிவ்ருத்தியையும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனது நியமநத்தின் அடியாக ப்ரதிஷ்டிக்கப்பட்ட ஸ்ரீ ஸந்நிதியின் க்ஷேமத்தையும் உத்தேசித்து, ஏற்படுத்தின இந்தஸபையின் மூன்றாவது ஸம்வத்ஸரம் சென்ற புரட்டாசி மாஸத்துடன் பூர்த்தியடைந்தது. நடந்தவருஷத்தில் இந்தஸபையார் தங்கள் அபீஷ்ட ஸித்யர்த்தமாகச்செய்த க்ருஷிகளையும் நடத்திய வியாபாரங்களையும் ஸங்க்ரஹமாக விஜ்ஞாபிக்கிறோம்.

### ஸபையின் அபிவ்ருத்தி.

ஸபையின் அபிவ்ருத்திக்காக, நடந்தவருஷத்திற்செய்த முயற்சிகளில் பலபாகத்தில் சில அம்ஶங்கள் கொஞ்சம் அநுகூலமாகவும் மற்றும் சில அம்ஶங்களில் பூர்வஸ்திதியிலேதான் இருப்பதாகவும் சொல்லவேண்டியிருக்கிறது.

### உபஸபைகளும், அதன் அங்கத்தினரும்.

இந்த வருஷாரம்பத்தில் உபஸபைகள் சென்னை, தஞ்சாவூர், மஞ்சக்குப்பம், பெங்களூர், கோயம்புத்தூர் ஆகிய இந்தவிடங்கில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. வருஷமுடிவில் மதுராந்தகத்தில் ஒருபிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. இப்படி அநேக இடங்களில் அபிமாநம் ஸபைகளுக்கு வைக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றின் அங்கத்தினருடைய ஸங்க்யை மட்டும் அதிகமானதாகச்சொல்ல இடமில்லை.

### உபந்யாஸங்கள்.

ஸபையினது அபிவ்ருத்தியின் பொருட்டு நடந்தவருஷத்தில் உபயஸ்ரீ இஞ்சிமேடு ரங்கநாதாசார்யரால் பெங்களூரில் சில உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. விஶிஷ்டாத்வைதம், பக்தியோகம், வர்ணாஶ்ரமதர்மம் முதலிய விஷயங்களைப்பற்றிச்செய்த உபந்யாஸங்களை ஸ்ரீமான் ஜட்ஜ் ரங்கஸ்வாமி ஐயங்கார், ப்ரொபெஸர் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலியோர் வந்திருந்து ஆதரித்தார்கள்.

## நிர்வாஹ ஸங்கத்தின் கூட்டம்.

சென்றவருஷத்தில் இரண்டுதரம் இந்தஸபை கூடிற்று. முதல் கூட்டம் ஸங்க்யையில் குறைவாகி, ஸபை வ்யாபாரங்கள் தபால்மூலமாக நடத்தும்படி ஆயிற்று.

## ஸ்ரீவேதாந்ததீபிகை.

இந்தப்பத்திரிகையின் முதல் வருஷத்துக்கணக்குகள் ஸ்ரீ. உப. ஏ. வரதாசாரியரால் பரிசோதிக்கப்பட்டன. அவர் தமது பரிசோதனை அறிக்கையில், வருஷம் ஒன்றுக்கு இப்பத்திரிகைக்கு ரூபா ஆயிரத்துக்குக் குறைவில்லாமல் திரவியம் எடுத்துவைக்க வேண்டுமென்றும், சுமார் எண்ணூறு ரூபாய் தான் பத்திரிகையினின்றும் வரக்கூடுமென்றும், இருநூறு ரூபாய் முன்னதாகப்பணம் கையில் இருக்கவேண்டு மென்றும், குமாஸ்தா பண்டிதர்களுக்கு உபகரிக்கவேண்டிய அம்சத்தில் செலவு அதிகம் செய்யவேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறார். நடந்தவருஷத்தில் நிர்வாஹஸபையார் வெகுஸ்ரமத்துடன் பத்திரிகையை நடத்திவந்தார்கள். இந்தப்பத்திரிகையை நடத்துவதே ப்ரதான கைங்கர்யம் என்று ஸபையார் நினைத்திருப்பதால், அதற்குத்தகுந்த மூலதநத்தைச் சேர்த்து, உதவிசெய்வது முக்யமாகிறது.

## ஸபையின் கணக்குகள்.

ஸ்ரீ. உப. சித்தூர் ஹைகோர்ட் வக்கீல் டீ. கே. நரஸிம்ஹமாசாரியர் ஸ்வாமி ஆடிடராக நியமிக்கப்பட்டார். அவர் ஸபையின் கணக்குகளைப் பரிசோதனை செய்து, ஓர் அறிக்கையும் அனுப்பியிருக்கிறார். அஃது இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

---

## 1912ஞ்த்திய ஆடிடருடைய அறிக்கை.

### (1—10—11 முதல் 30—9—12 வரையில்.)

இந்த வருஷாரம்பத்தில் கையிருப்பு ரூபா 18 - 15 - 0; முடிவில் கையிருப்பு ரூபா 33 - 15 - 3. வருஷத்தில் மொத்த வரவு ரூபா 674 - 1 - 6. இதில் கடனாகவாங்கின தொகை 340 - 0 - 0 ம் வாபீஸ் ரூபா 10 - 0 - 0 ம் போக க்ரமமான வரவு ரூபா 324 - 1 - 6.

செலவு மொத்தம் ரூபா 659 - 1 - 3 இந்தத்தொகையில் வேதாந்த தீபிகைக்குக் கடனாகக்கொடுத்த ரூபா 170 - 0 - 0 போக பாக்கிஸபையின் க்ரமமான செலவு.

ஸபையின் ரொக்கச்சிட்டா:—இதில் வரவு செலவு தொகைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் 136, 155 - ம் பக்கங்களில் செலவு செய்திருக்கும் காலங்களுக்குப்பிறகு கணக்கு எழுதிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாமல் அந்தக்காலங்களிலேயே எழுதிக்காட்டுவது உசிதம்.



[இது மகாஸங்கம் நடந்தகாலத்தில் அதற்காகச் செய்யப்பட்ட செலவாதலால் ஸங்கம் முடிந்தபிறகு ஒரேதேதியில் அச்செலவுகள் எழுதப்பட்டன:—கார்யதரிசி.]

ரசீதுகள்:—கேவலம் சில்லறையான தொகைகளுக்குத்தவிர மற்றத்தொகைகளுக்குக் கூடியவரையில் ரசீதுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சிலரசீதுகள் கொஞ்சகாலம் தாமதித்து வாங்கப்பட்டிருக்கின்றன. [தஞ்சாவூர்ப்பிரிவிலிருந்து கணக்குகள் வந்தமையால் ரசீதுகள் தாமதமாக வந்தன—கார்யதரிசி.] ரயில்செலவுகளுக்கு தக்கரசீதுகள் இருத்தல் உசிதம்.

சந்தாதார் ரெஜிஸ்டர் ஸரியாகவைக்கப்பட் டிருக்கிறதாக ஏற்படவில்லை. தபால்செலவுகள் ரொக்கச்சிட்டாவிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அதைப்ரத்யேகமாக ஒருபுஸ்தகத்தில் எழுதப்பட்டு, மாதமொருமுறை சிட்டாவில் கொண்டுவரப்பட்டிருந்தால் உசிதமாயிருக்கும். தவிர, கணக்குகள் 3 - அல்லது 6 - மாதத்துக்கு ஒருமுறை அத்யக்ஷரால் பரிசோதிக்கப்பட்டபிறகு ஆடிடரிடம் அனுப்பப்படுதல் உசிதமாயிருக்கும்.

---

## வரவு செலவு கணக்கு.

### (1911ஞ் அக்டோபர்மீ 1உ முதல் 1912 செப்டம்பர்மீ 30உ வரையில்.)

| வரவு. | | செலவு. | |
|---|---|---|---|
| 1. கையிருப்பு. | 18—15—0 | தபால் மணியார்டர் செலவு. | 46—13—3 |
| 2. சபைக்கு விசேஷ வசூல். | 160— 0—0 | மகாஸங்கச் செலவு. | 210— 0—0 |
| 3. அங்கத்தினர்சந்தா | 64— 8—0 | காகிதம் அச்சுக்கூலி | 85— 3—6 |
| 4. பிரிவுகளிலிருந்து 26-ம்விதிப்படி வரவு. | 99— 9—6 | தந்தி. | 7—14—6 |
| 5. துரைத்தனத்தார்கள் கொடுக்கும் கடன் வரவு. (Debenture Loan) | 100— 0—0 | ரயில்செலவு. | 134— 2—0 |
| இதரக்கடன்வரவு | 240— 0—0 | வெளியாருக்குக்கடன். | 170— 0—0 |
| வாபீஸ்தொகை. | 10— 0—0 | படம். | 5— 0—0 |
| | | ஆக ... | 659— 1—3 |
| | | கையிருப்பு ... | 33—15—3 |
| ஆக ... | 693— 0—6 | | 693— 0—6 |

இந்தக்கணக்குகள் என்னால் பரிசோதிக்கப்பட்டன.

டீ. கே. நரஸிம்ஹமாசாரியர்.
ஆடிடர் 18—12—12.

ஸி. ராஜகோபாலாசாரியர்,
காரியதரிசி.
20—12—12.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பிரிவுகளின் அறிக்கை.

## 1. மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற ஜநவரி மாஸத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் நோவு சாத்திக்கொண்டு எழுந்தருளியிருந்ததாகவும், அந்த ஸமயத்தில் தமக்குப் பிந்தி ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளவேண்டும் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமாக உயில் த்வாரா சில வ்யவஸ்தைகள் அவர் செய்திருப்பதாகவும் ஸமாசாரம் கிடைத்தவுடன், அதைப்பற்றி பர்யாலோசனை செய்யும்பொருட்டு, ஷை பிரிவின் கார்யதர்ஸியினால் ஷை பிரிவின் ஸங்கம் ஒன்று, 1913 பிப்ரவரி 2உ ஞாயிற்றுக்கிழமைதினம் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் கூட்டப்பட்டது. ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீ. உப. வி. ராகவாசாரியர், ஸ்ரீ. உப. சித்தூர். வி. ராஜகோபாலாசாரியர் முதலிய ப்ரமுகரான ஸ்ரீ ஸந்நிதி ஸிஷ்யர்களில் அநேகர் வந்திருந்தார்கள். திவான் பஹதூர் டி. டி. ரங்காசாரியர் அங்கு வந்திருந்தவர்களின் வேண்டுகோளின்பேரில் அக்ராஸநத்தை வஹித்து, முதலில், ஸ்ரீமடம் இப்பொழுது இன்ன ஸ்திதியில் இருக்கிறதென்றும், அதை சீர்திருத்தம்செய்ய நாம் இன்ன விதமான முயற்சியைச் செய்யவேண்டுமென்றும் விஸ்தாரமாகக் கூறினார். பிறகு, ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ ஸ்வாமிக்குத் திருமேனி பாங்காக இல்லையென்கிற ஸமாசாரம் தெரிந்தவுடன தாம் ராஜமன்னார் ஸந்நிதிக்குப் போயிருந்ததாகவும், அப்பொழுது ஸ்ரீ மடத்தில் நடந்திருக்கும் வ்ருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் தாம நேரில் அறிந்து வந்திருப்பதாகவும், அவை இன்னவையென்றும் எடுத்து உரைக்க, அங்கு ஸந்நிஹிதர்களாக இருந்த எல்லாருக்கும், உயில் மூலமாகவும் ஸிஷ்யர்களிடம் ஆலோசிக்காமலும் ஸ்ரீ அழகியசிங்கர் இம்மாதிரியாகச் செய்திருப்பதைப்பற்றி ஒரு பெருத்த ஆவேகம் ஜநித்தது. ஸ்வாதந்த்ர்ய அக்ராஸநாதிபதி ஊருக்குப் போகவேணுமென்கிற த்வரையுடன், ப்ரக்ருத விஷயத்தைப்பற்றி தம் அபிப்ராயத்தைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனார். அதற்குமேல் ஸபாத்யக்ஷர் அக்ராஸநத்தை வஹித்தார்; வந்திருந்த ஸிஷ்யர்களும் தங்கள் தங்களுக்குத் தோன்றின ஆலோசனைகளைச் சொன்னார்கள். கடைசியில், பிரிவின் கார்யதர்ஸி, பிந்தி ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளுவதாக உயிலில் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் ஸ்ரீ. உப. காரக்குறிச்சி அய்யமாசாரிய ஸ்வாமி ஆஸ்தாநத்திற்குத் தகுந்த ஸ்வாமியானதால் ஸ்ரீ அழகியசிங்கர் காலவிளம்பமன்றிக்கே



அவருக்கு ஜீவஸ்ராத்தாதிகளைச் செய்வித்து ஆஸ்ரம ஸ்வீகாரத்தைப் பூர்த்திசெய்து தமக்குப்பிறகு அவர் அதிகாராதிகளை நிர்வஹிக்க வேண்டியது என்று நியமிக்கும்படி க்ருபைசெய்ய வேணுமென்றும், ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி ஸம்பந்தப்பட்ட வரையில் நிராக்ஷேபமாக இருந்தாலும், ஸாமாந்யமாக உயில் மூலமாகவும் ஸிஷ்யர்களுடைய ஆலோசனை அன்றிக்கும் தாமே ஸ்ரீ அழகியசிங்கர்கள் தமக்குப்பின் வருமவரை நியமிப்பது தர்மத்திற்கும் பஹுகாலமாக ஸ்ரீ மடத்தில் நடந்துவந்திருக்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் அத்யந்தம் விருத்தமென்றும், ப்ரக்ருத உயிலில் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்குப் பிற்காலம் எழுந்தருளவேண்டிய ஸ்வாமியையும் இப்பொழுதே குறித்திருப்பது சட்டத்திற்கும் விருத்தம் ந்யாய்யமுமன்று என்றும், அந்த ஸமயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரையும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ராஜமன்னார் ஸந்நிதியைவிட்டு நரஸிம்ஹபுரத்திற்கு எழுந்தருளப் பண்ணிப்போக சிலர் ப்ரயத்நப்படுவது மிகப் பிசகு, அதற்கு ஸ்ரீ அழகியசிங்கர் இணங்கக்கூடாது என்றும், இத்யாதியான தீர்மானங்களை இந்தப் பிரிவினர் செய்வது உசிதமென்று எடுத்துச் சொன்னதன்பேரில், இவைகளைப்பற்றி பலவிதமான சர்ச்சை ஏற்பட்டு ஒருவிதமான முடிவுக்கும் வராமல் அன்றியதினம் கூட்டம் கலைந்தது. அதற்குப்பிறகு இதுவரையில் மறுகூட்டமொன்றும் நடக்கவில்லை.

மயிலாப்பூர்.<br>
10—3—13.

கார்யதர்ஸி.<br>
(சென்னை - சைதாப்பேட்டை பிரிவு.)

## 2. சேலம் பிரிவு.

சேலம் 1 - வது. அக்கிரகாரம். உ. ப. வெ. டி. எஸ். பெரியகோர்ட் வக்கீல் திருவேங்கடாசார் சுவாமி கிருகத்தில் 1913௵ பிப்ரவரி௴ 16உ ஞாயிற்றுக்கிழமை காலை $8\frac{1}{2}$ - மணிக்குச் சேர்ந்த சபையில் நடந்த நடவடிக்கைகள்:—

### சபைக்கு வந்திருந்தவர்கள்.

1. ஸ்ரீ. உப. வே. தொரைசாமி அய்யங்கார் - டிஸ்திரிக்ட் கோர்ட்சிரஸ்தார்.
2. ,, கிடாம்பி. இராமானுஜாசார் - ஸம்ஸ்கிருதபண்டிதர் ஹைஸ்கூல்.
3. ,, ஏ. கிருஷ்ணய்யங்கார் - கோர்ட் பென்ஷன்கிளர்க்கு.
4. ,, S. A. இராமசாமி அய்யங்கர் - நேடிவ் டாக்டர்.
5. ,, C. S. தேசிகாசாரியர் - டிஸ்திரிக்ட்கோர்ட் ஹெட்ரைடர்.
6. ,, கிடாம்பி. சீனிவாசய்யங்கார் - ஹெட்மாஸ்டர் டவுன்ஸ்கூல்.
7. ,, முத்தரசனூர். நரசிம்மய்யங்கார் - போலீஸ் சூபர்ண்டன்ட் ஆபீசு கிளர்க்கு.
8. ,, வெலாமுர். கோபாலய்யங்கார் - போலீஸ் சூபர்ண்டன்ட் ஆபீசு கிளர்க்கு.
9. ,, டி. இராமானுஜய்யங்கார் - கலெக்டராபீசு கிளர்க்கு.
10. ,, டி. எஸ். திருவேங்கடாசாரி - டிஸ்திரிக்ட்கோர்ட் வக்கீல்.

11. ,, பி. தேசிகாசாரியார் - கலெக்டராபீசு ஹெட் அக்கவுண்டா
12. ,, டி. கிருஷ்ணய்யங்கார் - ஹைகோர்ட்வக்கீல்குமாஸ்தா[ண்ட்.
13. ,, ரங்காசாரியார்.

இன்றையதினம் இந்த சபைக்கு ஸ்ரீ. உப. வெ. ஏ. சி. கிருஷ்ணய்யங்கார் சுவாமி அக்ராஸநாதிபதியாக எழுந்தருளி இருந்து கார்யம் நடத்தப்பட்டது.

1. ... ... ... ... ... ... ...

2. 1913ளு பிப்ரவரிமீ 9உ யில் இந்தச் சபையில் நடந்த நடவடிக்கையின் 7 - வது தீர்மானம்:—(இப்போது ஸ்ரீ அழகியசிங்கர் தமக்கு பின்னால் ஸ்ரீ. உ. ப. வெ. காரக்குரிச்சி, அய்யமாசார் சுவாமியை ஆஸ்தாந நிர்வாஹத்துக்கு திருவுள்ளம் பற்றி ஏற்பாடு செய்திருப்பதில் சேலத்தில் உள்ள சிஷ்யர்கள் எல்லாரும் ரொம்ப ஆஹ்லாதப்படுவதை ஸ்ரீ ஸந்நிதிக்கு விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேணுமாய் தீர்மானிக்கப்பட்டது. வேதாந்ததீபிகை என்னும் ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்திரிகை பரீதாபிளு தைமீ த்திய 12 - வது ஸஞ்சிகையில் 515-வது பக்கத்தில் பத்ராதிபரால் வரயப்பட்டிருக்கும் கடசீ பாராவும் அநுபந்தமாய் அனுப்பப்பட்டிருக்கும் துண்டுச் சீட்டும் இந்த சபையோர்களின் முன்பாகபடிக்கப்பட்டது.

3. ஸ்ரீ அழகிய சிங்கர் தமக்குப் பின்னால் ஆஸ்தாந நிர்வாக நியமன விஷயமாக "ஸ்ரீ அழகிய சிங்கர் உயில் மூலமாயும் சிஷ்யர்களின் அபிப் "ராயத்தை கொஞ்சமேனும் கேட்காமலும் செய்த நியமனம் இந்த ஆஸ் "தானத்தின் வழக்கத்துக்கும் யுக்தத்துக்கும் விரோதம் என்றும் அது "விஷயத்தில் சிஷ்யர்கள் பாத்தியதையை ஸ்ரீ அழகிய சிங்கர் அதிக்கிர "மித்து பல சிஷ்யர்களுக்கும் அத்ருப்திகரமா யிருக்கிறதென்றும் வ்யக்த "மாகிறது" என்று மேற்படி வேதாந்ததீபிகை பத்ரிகையில் பத்ராதிபர் எழுதியிருக்கும் வாசகம் சம்பிரதாயத்துக்கு விரோதமா யிருக்கிறதென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயத்தில் அபசார ஹேதுவாகிறது என்றும், ஆஸ்தாந நிர்வாகத்துக்கு ஸ்ரீ அழகியசிங்கர் தமக்கு பின்னால் ஏற்பாடு செய்யவேண்டிய விஷயத்தில் சிஷ்யர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்டே செய்யவேண்டும் என்றும் அப்படிச் செய்யாவிட்டால் சிஷ்யர்கள் பாத்தியதையை ஸ்ரீ அழகியசிங்கர் அதிக்கிரமிக்கிறார் என்றும் அதில் சொல்லியிருப்பது பூர்வாசார்யாளுடைய அநுஷ்டானங்களுக்கு ஒற்றுமை இல்லாததினால் இந்தச் சபையாருடைய அபிப்ராயத்துக்கு முற்றிலும் விரோதமா யிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

4. மேற்கண்ட இந்தச் சபையின் தீர்மானங்களை ஸ்ரீ சன்னிதிக்கும் வேதாந்த தீபிகையின் பத்ராதிபருக்கும் அனுப்பி மேற்படி பத்ராதிபரை அடுத்த சஞ்சிகையில் பிரசுரம் செய்யவேணுமாயும் கேட்டுக்கொள்ள வேணும் என்று தீர்மானிக்கப்பட்டது.

முமேம்பை. தேசிகாசாரியார். ஏ. சி. கிருஷ்ணய்யங்கார்.
கிடாம்பி. இராமானுஜாசாரியார், அக்ராஸநாதிபதி.
காரியதரிசிகள்.

OFFICE ... MA

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] பரீதாபிளு பங்குனிமீ [ஸஞ்சிகை 2.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரயீஸ்துதிப்ரமாணம் தர்மவிஜய க்ஷேத்ரஸமீக்ஷாம் ப்ரவாசம் நயாமி - லுஜுலக்ஷ்மீவ்யாகாரநாஜை விஜய ஸதி ப்ரதிஷ்டிதம் ஸர்வத்ர ॥

"கலிதே விஸ்வாஸ: ஸுவபகாஸ்கே ஸகலிகால: கவா
தெம்ஹம்ஹா: வமலிஷூம்கே ஸுஜநதா।
. ஜாதி வ்யவஸ்தை. பரிக்ஷீணாசாரே ஶ்ருத நிதீதெவ
நிமந: ஸதஸிஷ்டாம் ஶுஷ்கம் த்ருஜதி விபரீ
தம் வ ஹதி ॥" ரத்நம் தான் இருக்கவேண்டிய விடத்தில் இருந்தாலொழிய ஶோபிக்காது. அதுமாத்திரமல்ல: தகாதவிடத்தில்

போனால், தனக்கு ஸ்வபாவமாக இருக்கும் ஶுத்தி நஷ்டமாகப் போவதன்றிக்கே விபரீதமான அஶுத்தியும் ஜநிக்கிறது என்பது உண்மையே. அபதத்தில் போகும் புத்தியை யுடையவனுக்கு ஶ்ருதம் உண்டானால், அது அநர்த்தத்தை விளைவிக்காமல் நன்மையைச் செய்வது முண்டோ? ஆதுநிக ரீதிப்படி வித்யாப்யாஸம் செய்து ஸம்ஸ்க்ருத பாஷையிலும் அதில் எழுதப்பட்டுள்ள ஶாஸ்த்ரங்களிலும் பரிமிதமான தேர்ச்சி யடைந்து ஸ்வல்ப வாக்மித்வத்தையும் பெற்றிருக்கும் சில வித்வாங்கள் ஜாதிவ்யவஸ்தையைக் குறித்துப் பல விடங்களில் உபந்யாஸம் செய்வதையும், பத்ரிகைகளில் விஶேஷித்து எழுதுவதையும் நாம் அடிக்கடி பார்த்துவருகிறோம். மநுஷ்யஜாதிக்குள் பேதபாவனைகூடாது என்பதும், ப்ரத்யக்ஷமாக இருக்கும் ஶுத்தி அஶுத்தி நீங்கலாக வேறு ஶுத்தி அஶுத்திகள் இல்லை என்பதும், ஜந்மப்ரயுக்தமாக ஒரு விதமான ஔத்கர்ஷ்யமும் ஒருவனுக்கும் ஜநிக்காது என்பதும் அவர்களுடைய முக்யமான கொள்கை. இந்தத்தேஶத்து ஜநங்கள், பஹு காலமாக, பிறப்பினால் மனிதர்களுக்குள் ஒரு விஶேஷத்தைப் பெருத்த அஜ்ஞதையால் அவலம்பித்துக்கொண்டு தேஶத்துக்கு அளவற்ற தீங்கை விளைவித்துவிட்டார்களென்று அவர்கள் பஹு ப்ரகாரமாக ஶோகிக்கிறார்கள். அவர்கள் கொள்கைப்படி, இக்காலத்தில் நமக்கு நேரும் துக்கமெல்லாம் ஜாதி வ்யத்யாஸ பாவனையினாலேயே ஏற்படுகின்றதே தவிர மற்ற எக்காரணத்தினாலும் ஏற்படவில்லை. இந்த ஜாதி ப்ரயுக்தமான ஒரு வ்யத்யாஸம் மாத்திரம் நமக்குள் இராமலிருந்தால், நாம் மிகவும் மேன்மையான ஸ்திதியி லிருந்திருப்போமென்றும், இப்பொழுது நாம் பரஸ்பரம் த்வேஷிப்பது போல த்வேஷிக்கமாட்டோ மென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி மஹத்தான ஶ்ரேயஸ்ஸுக்கெல்லாம் ப்ரதிபந்தகமாக இருக்கும் இந்த ஜாதி வ்யத்யாஸத்தை நிவ்ருத்தி செய்யும் பொருட்டே, பரதுக்காஸஹிஷ்ணுக்களாக இருக்கும் இவர்களில் அநேகர், தங்களுக்குப் பலம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் கைக்கொண்டு, ராஜாங்கத்தாருடைய ஸஹாயம் லப்யமானால் அதையும் அவலம்பித்து ஜாதியை அழிக்கவேண்டுவதற்கான உபாயங்களைத் தேடுவதையே ஸ்வதர்மமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் ப்ரயத்நம் தேஶத்தின் ஆநுகூல்யத்தின் பொருட்டு ஆகுமா? என்பதை நாம் விசாரிக்க வேண்டும்.



இப்பொழுது, இவர்களால் குறித்துக் காட்டப்படும் துன்பங்களெல்லாம் நாம் ஜாதியை ஒத்துக்கொண் டிருப்பதனாலே உண்டானவையானால், அவ்வளவு துக்க ஹேதுவான அந்த ஜாதியை நாம் வேரறுப்பாக அறுக்க முயற்சிசெய்வது ந்யாயத்திற்கு ஒத்தேயிருக்கும். ஆனால், ஆக்ரஹமின்றிக்கே வஸ்து ஸ்திதியைப் பரிஶோதித்துப் பார்க்குமளவில் இந்தத் துன்பங்களுக்கு வேறு காரணங்கள் இருக்கின்றனவென்றே தோன்றுகிறது. ஓர் அநுமாநம் செய்ய வேண்டுமானால் ஸமீசீந தர்க்கம் அவஶ்யமன்றோ? 'ஜாதிபேதமிருக்குமிடத்தில் இவ்வகையான துன்பங்கள் காணப்படுகின்றன' என்பது மாத்திரம் ஜாதிபேதம் துன்பங்களுக்குக் காரணமென்று சொல்வதற்குத் தகுந்த ஹேதுவாகுமா? ஜாதிபேதமில்லாதவிடங்களில் துன்பங்களில்லையானால் இவர்களுடைய அநுமாநம் ஸித்திக்குமே தவிர, அப்படிக்கு இல்லாவிடில் ஸித்தியாதே. இந்த வ்யாப்தியை இவர்கள் கண்டிருக்கிறார்களா? என்று இவர்களையே கேட்போம். பல தேஶத்துச் சரித்ரங்களைப் படித்து லோக வ்யவஹாரத்தை அறிந்திருக்கும் இவர்கள் அந்தரங்கத்திற்கு விரோதமில்லாமல் 'இம்மாதிரியான வ்யாப்தி உண்டு' என்று சொல்லத் துணிவார்களோ? அப்படிச் சொன்னாலும் அது ஸர்வ ஸம்மதமாகுமோ? ஆகாது; ஆதலால், ஜாதிபேதததினாலே தீங்கு விளைகின்றது என்று சொலவது ஸரியான அநுமாநமன்று.

அதை ஸரியான அநுமாநமென்று ஒத்க்கொண்டாலும் அவர்கள் விரும்புகிறபடி ஜாதிபேதத்தைப் போக்கடிப்பது ஸாத்யமான விஷயமென்று நம்முடைய புத்தியில் தோன்றவில்லை. நம்மிடத்தில் காமக்ரோதாதிக ளிருக்கும் வரையில் ஒருவிதமான ஜாதிபேத மில்லாவிட்டால் மற்றொருவிதமான ஜாதிபேத மிருந்து கொண்டே இருக்கும். ப்ராக்ருதமான ரஜஸ் தமோ குணங்கள் நம்மைவிட்டு விலகி, ஶுத்தமான ஸத்வ குணமே நம்மிடத்தில் தலையெடுத்து நின்றால், அப்பொழுது, மஹாயோகிகளுடையதென்று சொல்லப்படும் ஸமதர்ஶித்வம் நமக்கு உண்டாகி நாம் கலக்கமற்ற ஐகமத்யத்தைக் கைக்கொண்டு நிற்போமென்பது நிஶ்சயமே. அது இந்தக் கர்மபூமியில் கிடைக்கத் தகுந்ததா? எவ்விடத்திலாவது அப்படிப்பட்ட ஐகமத்யத்தை நாம் பார்க்கிறோமா? அநேக தேஶங்களைப்பற்றி இப்பொழுது எழுதப்பட்டுள்ள சரித்ரங்கள் உண்மையாக இருந்தால், அந்தந்த விடங்களி

லிருக்கும் ஜநங்கள் ஒவ்வொரு விதமான பேதத்தைக் கைப்பற்றி, சிலர் உயர்ந்தவரென்றும் சிலர் தாழ்ந்தவரென்றும் இத்யாதியான வ்யவஹாரங்களைச் செய்துகொண்டு, அவைகளுக்குத் தகுந்தபடி நடந்து வருகிறார்களென்றே நாம் அறிகிறோம். இந்த அம்சத்தில் நமது தேசம் தனிமையாகவும் ஜகத் விசித்ரமாகவும் நிற்கவில்லை. ஆகையால், த்ரிகால ஜ்ஞாநிகளான மஹர்ஷிகளால் ஏற்படுத்தப்பட்டு பஹு காலமாக மிகுந்த நன்மைகளுக்கெல்லாம் ஹேதுவாக இருந்துகொண்டு வழங்கிவந்திருக்கும் இந்த வர்ணாச்ரம பேதத்தைத் தொலைக்க யத்நிக்கும் இவர்களுடைய ப்ரவ்ருத்தி, நமக்குள் மிகுந்த சைதில்யத்தை உண்டுபண்ணி, இன்னும் அதிகமாக வருத்தக் கூடிய பரஸ்பர பேதங்களுக்கே ஹேதுவாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இதை அறியாமல் மூடத்தனமான ஓர் ஆக்ரஹத்துடன் அநேகர் பரிச்ரமப் படுகிறார்களே என்பது நமக்கு அளவற்ற வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. வ்யபதிஷ்டர்களாக இருக்குமவர்கள் இப்படி ப்ரவ்ருத்தித்துவிட்டால் லோகம் எந்த ஸ்திதிக்கு எவ்வளவு சீக்ரத்தில் வந்துவிடுமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

நாம் பரஸ்பரம் த்வேஷமற்று ஹிதைஷிகளாக இருக்கவேண்டுமென்பது அவச்யமே. அந்தநிலையை ஸம்பாதித்துக்கொள்வதற்கு இவர்கள் அநுஷ்டிக்கும் மார்க்கம் ஸரியானதல்லவென்பது தான் நம்முடைய அபிப்ராயம். ச்ருதியிற் சொல்லப்பட்டதான சாதுர் வர்ண்யமாகிற ஜாதிகளின் ஸாங்கர்யத்தைத் தேடாமலே, கேவலம் அபிப்ராயபேதத்தினால் உண்டாகியிருக்கும் மதபேதங்களையும் அது காரணமாக ஏற்பட்டிருக்கும் த்வேஷத்தையும் தூர விலக்கி, நாம் அந்யோந்யம் ஸௌஹார்த்தமுள்ளவர்களாக இருப்பது துஸ்ஸாத்யமன்று. நாம் பரஸ்பரம் த்வேஷித்து வருந்துவதைப்பற்றி சோகிக்கும் இந்த வ்யபதிஷ்டர்களும் இன்னும் உபசாந்தர்களாக அநேக இடங்களில் தென்படும் மஹாந்களும் ஸ்வாநுஷ்டாநத்தினாலும், காலதேச வர்த்தமானங்களை யறிந்து இதரர்களுக்குப் போதிப்பதனாலும், கேவலம் மனிதர்களுக்குள் மாத்திரமன்றிக்கே, ஸர்வபூதங்களுக்குள்ளும் அவச்யம் இருக்கவேண்டுவதான ஸௌஹார்த்தத்தை நன்றாக லோகம் முழுவதற்கும்



வற்புறுத்தக்கூடும். 'ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து' என்று சொல்லியிருக்கிறபடி பத்து ஜநங்களாவது இந்த லோகத்தில் தென்பட்டால் லோகம் க்ஷேமத்தை அடைந்துவிடுமென்பதில் ஆக்ஷேபமு மிருக்குமோ?

∴ ∴ ∴

ஸ்வதேச பண்டிதர்கள்.

"விதிரேவ விசேஷகர்ஹணீய: கரட த்வம் கரட க்வணிதவா வராய: - ஸஹகாரதரௌ வகார யத்ர ஸஹவாஸம் ஸரஸைர் ந கோகிலைர் ந ||" நமது தேச பாஷைகளாகிற ஸம்ஸ்க்ருதம் த்ரமிடம் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஹிந்துஸ்தாநி முதலிய பாஷைகளில் பரிச்ரமப்பட்டு அவைகளில் ப்ராவீண்யத்தை அடைந்து மஹாகவிகளாலும் மஹர்ஷிகளாலும் சொல்லப்பட்டுள்ள நல்வழிகளையும் கம்பீரமான பாவங்களையும் நன்றாக உணர்ந்திருக்கும் நமது பண்டிதர்கள் இப்பொழுது மிகுந்த சோச்யமான தசையை அடைந்திருக்கிறார்கள் என்பது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். வித்யாபிவ்ருத்தி ஸம்பந்தமான வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் ஜநங்களுள் தேசபாஷை பண்டிதர்களை வெறுக்காதவர் ஸ்வல்பமே; வேறு விதமான வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்திருக்குமவர்கள், பண்டிதர்விஷயமாக ஔதாஸீந்யத்தை வஹிக்கிறார்களே தவிர, அவருடைய ஜ்ஞாநத்திற்குத் தகுந்த கௌரவத்தைப் பாராட்டுவதாக நமக்குத் தெரியவில்லை. இது மிகவும் சோகிக்கத்தகுந்ததே. ஔதாஸீந்யத்தை வஹிக்குமவர்களுடன் நமக்கு யாதொரு விவாதமு மில்லை. அர்த்தார்ஜநத்தில் ஊக்கமுள்ள நமக்கு அர்த்த ஸம்பாதநத்திற்கு உபயோகமில்லாத பண்டிதாபிமாநம் கார்யகாரி யாகாது. ஆனால், அந்தப் பண்டிதர்களின் ஸத்தையே லோகத்திற்கு அநர்த்தாவஹமென்று நினைத்து அவர்கள் நசித்துவிடவேணு மென்று ப்ரார்த்திப்பவர்களுடன் நமக்கு விவாதமுண்டு. அஜ்ஞதையினாலாவது ஆக்ரஹத்தினாலாவது அவர்கள் அம்மாதிரியான எண்ணங்கொண்டவர்களாக இருந்தால், அவர்களுடைய தவறுதலை எடுத்துக் கூறவேண்டியது நம்முடைய தர்மமே.

பண்டிதர்களை அவர்கள் இவ்விதமாகத்வேஷிப்பதற்கு அநேக காரணங்களிருக்கலாம். அவைகளுள் முக்யமென்று அவர்களால் எடுத்துச் சொல்லப்படும் காரணமாவது - ஜ்ஞானத்திற்கு ஸமீசீநமான பயிற்சியைக் கொடுக்கத்தகுந்த நல்ல க்ருதிகள் ஸ்வதேஶ பாஷைகளிலில்லையென்றும், நம்மால் மஹாகவிகளென்று கொண்டாடப்படுமவர்கள் ஆதுநிக ரீதிப்படி கவிகளுக்கு இருக்க வேண்டிய குணங்கள் பொருந்தினவர்களல்லரென்றும், இம்மாதிரியான க்ருதிகளைப் படித்து அதனால் தேர்ச்சியடைந்திருக்கும் பண்டிதர்கள் ஸரியான தேர்ச்சியுடன் கூடினவர்களல்லரென்றும், அப்படிப்பட்ட பண்டிதர்களைப் பாடஶாலாதிகளில் தமக்குத் துல்யமான அதிகாரத்தில் இதுவரையில் வைத்திருந்தது மௌட்ய பரீவாஹமென்றும், அம்மாதிரியான ஸ்தானங்களைத் தகுந்த யோக்யதையின்றிக்கே அவர்கள் அபேக்ஷிப்பது ந்யாய விரோதம் என்றும் கூறுவதுதான். இதற்கு நாம் என்ன ப்ரத்யுத்தரம் சொல்லுகிறது? அப்ரியமாக இருந்தாலும் உண்மையைப் பேசவேண்டியது அவஶ்யமே. ‘நம்முடைய பாஷைகளிலுள்ள க்ருதிகளை இவர்கள் நன்றாகப் பார்க்கவில்லை; பார்த்திருக்கும் பக்ஷத்தில், குணதோஷக்ரஹணத்தில் தகுந்த அதிகாரிகளாக இருக்கும் இவர்கள் இப்படி ஆக்ஷேபிக்கமாட்டார்கள்’ என்பதே நம்முடைய ப்ரத்யுத்தரம். மஹாகவிகள் ஏற்படுவது உத்திஷ்டமான ஒரே பாஷா ஸம்பந்தத்திலும் ஒரே தேஶத்திலும் தான் என்கிற நியமமொன்றுமில்லை. இங்கிலாந்து முதலிய தேஶங்களிலும் இங்க்லீஷ் முதலிய பாஷைகளின் ஸம்பந்தமாகவும் நல்ல க்ருதிகள் ஏற்பட்டுப் பிறருக்குப் பயிற்சியைக் கொடுக்கத்தகுந்தவையாக அவைகளிருக்கும் பக்ஷத்தில், ஏன் வேறு தேஶங்களிலும் அம்மாதிரியான க்ருதிகள் உண்டாகியிருக்கக்கூடாதென்று நமக்குத் தெரியவில்லை. தைவம் அவ்வளவு பக்ஷபாதியல்லவே. தவிரவும், ஸம்ஸ்க்ருதம் தமிழ் முதலிய சில பாஷைகளை நேரில்படித்துப் பார்த்ததனாலும், மற்றும் சில பாஷைகளின் விஷயங்களில் ஆப்தர்களுடைய வாக்யங்களினாலும், இங்க்லீஷ்பாஷையிலிருக்கும் காவ்யங்களுக்குத் துல்யங்களாக அநேக க்ரந்தங்கள் இந்தப் பாஷைகளில் இருக்கின்றனவென்றே நாம் அறிகிறோம். காவ்யங்களுக்கு எம்மாதிரியான சிறப்பை இவர்கள் அபேக்ஷிக்கிறார்களோ அம்மாதிரியான சிறப்புள்ளவைதான் இவைகள் என்பதில் நமக்குக் கொஞ்சமேனும்



ஸந்தேஹமில்லை, ஆகையால், இந்தப் பண்டிதர்களுக்கு ஸரியான பயிற்சி ஜநிக்க ஹேதுக்களில்லையென்று சொல்வதாவது, அவர்கள் பாடஶாலைகளில் பெரிய பதவியை அபேக்ஷிப்பது ந்யாயவிருத்தமென்று சொல்வதாவது ந்யாய்யமாகாது.

ஆனால், பண்டிதர்களுக்கு இங்க்லீஷ் ஸம்பந்தமான ஜ்ஞானமில்லையென்று ஒரு குறைவு சொல்லலாம். ஜநங்கள் பெரும்பாலும் இங்க்லீஷ் பாஷையை அப்யஸிப்பதனாலும், இங்க்லீஷ் ராஜ பாஷையாக இருப்பதனாலும் அதை அப்யஸிக்காமலிருப்பது பாண்டித்யத்திற்கு ஒரு குறைவுதான். ஆனால், அந்தக் குறைவு இக்காலத்துப் பண்டிதர்களின் விஷயத்தில் அவ்வளவாகக் காணப்படவில்லை. ஸாக்ஷாத்தாக இங்க்லீஷ் பாஷாஜ்ஞானம் அவர்களுக்கு இல்லாவிட்டாலும், இங்க்லீஷ் பாஷையை அப்யஸித்தவர்களின் ஸம்பர்க்கத்தால் அந்தப் பாஷாஜ்ஞானத்தாற் கிடைக்கக்கூடிய பயனில் முதிர்ந்த பாகத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். தவிரவும், ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளைக் கற்றவர்களுக்கு இங்க்லீஷ் பாஷாஜ்ஞானமில்லாமை ஒரு குறைவானால், இங்க்லீஷ் பாஷையைக் கற்றவர்களுக்கு ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் ஜ்ஞானமில்லாமை ஏன் குறைவு ஆகக்கூடாது? ஆகையால், இங்க்லீஷ் ஸம்பந்தமான ஜ்ஞானமில்லையென்கிற ஒரு காரணத்தினால் மாத்திரம் பண்டிதர்களைத் தூஷிப்பது புத்திஶாலிகளின் க்ருத்யமன்று; அவர்களை த்வேஷித்து, அவர்களொழிந்தால்தான் தேஶத்திற்கு க்ஷேமமென்று சொல்வது மநுஷ்யக்ருத்யமாகாது.

நம்மால் கீழ்க் கூறப்பட்டிருக்கும் உண்மையை உணராமலே, பாடஶாலைகளில் பாடங்களை நிர்ணயிப்பதில் அதிகாரமுள்ள அநேகர், ஸமீபகாலத்தில், ‘இங்க்லீஷ் பாஷையைப் நிர்பந்தமாக அப்யஸிக்க வேண்டியதுபோல ஸ்வதேஶ பாஷைகளையும் பாலர்கள் நிர்பந்தமாகக் கற்கவேண்டியதில்லை’ என்று ஒரு நிர்ணயம் செய்துவிட்டார்கள். அதன் பலமாக இப்பொழுது பாடஶாலைகளில் ஸ்வதேஶ பாஷாப்யாஸமே அத்யந்தம் பரிமிதமாகி விட்டது. இந்த ஸ்திதி இன்னும் கொஞ்சகாலம் அநுஸ்ருதமாக வந்தால் நமது தேஶத்திற்குக் கெடுதல் உண்டாகுமென்பது நிஶ்சயம். மந்த்ரிகளுடைய ஆலோசனையை அங்கீகரிப்பது ராஜாங்கத்தாருக்கு

உசிதமேயாயினும், அந்த ஆலோசனை அத்யந்தம் பிசகென்று தோன்றும்பொழுது ராஜாங்கத்தார் அதை நிராகரித்துவிட்டு ஜனங்களாற் சொல்லப்பட்ட ஸரியான ஆலோசனையை மற்ற விஷயங்களில் அங்கீகரிப்பதுபோல, இந்த விஷயத்திலும் பஹுஜனங்கள் எடுத்துச் சொல்லும் ஆலோசனையை நமது ராஜாங்கத்தார் ஏற்றுக்கொண்டு, முன்புபோலப் பாடஶாலைகளில் ஸ்வதேஶ பாஷாப்யாஸத்தை அவஶ்யமாகச் செய்யவேண்டிய கோடியிற் சேர்ப்பார்களென்று நம்புகிறோம். இப்படிச் செய்வதனால் நிஷ்காரணமாக நிந்திக்கப்படும் பண்டிதர்களுக்கும் ந்யாய ப்ராப்யமான ராஜாங்கத்தாரின் ஆதரவு ஏற்படும்.

∴ ∴ ∴

ஸ்ரீ அழகியசிங்கரின் திருமேனி.

சென்ற மாஸம் ஏற்பட்ட நோவுக்குப் பிறகு, ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனி பாங்காக எழுந்தருளியிருப்பதாகவே கேள்விப்படுகிறோம். ஆனால், திருமேனியில் ஸமீசீநமான ஸ்வாஸ்த்யம் இன்னும் வராமல் அடிக்கடி சிறிய உபாதிகள் பாதித்து ஸ்ரீ ஸ்வாமிக்குக் கொஞ்சம் வ்யதையை உண்டுபண்ணுகின்றனவாம். ஸ்ரீ ஸ்வாமிக்கு எவ்விதமான உபத்ரவமும் வரக்கூடாதென்று ஆஶம்ஸித்துக்கொண்டிருக்கும் நமக்கு இந்த வார்த்தை மிகுந்த வ்யஸநத்தை ஜநிப்பிக்கிறது. இந்த விபூதியில் எழுந்தருளியிருக்கும் வரையில் ஸ்ரீ ஸ்வாமி ஒருவிதமான க்லாநிக்கும் பாத்ரமாகாமல் திருமேனியில் பாடவத்தையும் அந்தரங்கத்தில் ஸௌமநஸ்யத்தையும் அநுபவித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ருபை செய்யவேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

---

ஸ்ரீ:.

# பகவானுடைய கல்யாணகுணங்களில்

## தயை க்ஷாந்தி ஔதார்யம் என்பவை.

அநந்த கல்யாணகுணாகரனாக இருக்கும் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களுள், தயை க்ஷாந்தி ஔதார்யம் என்னும் இம்மூன்றும் நம்மை ரக்ஷிப்பதற்கு உபயோகிகளான குணங்கள். தயையாவது - ஸ்வப்ரயோஜந மொன்றையும் அபேக்ஷிக்காமலே பிறருடைய துக்கங்களை நிராகரிக்கவேணுமென்கிற இச்சையை உடைத்தாயிருக்கும் தன்மை; க்ஷாந்தியாவது - பிறர் எவ்விதமான அபராதத்தைச் செய்தாலும் அதைத் தாம் பரிக்ஷண க்ஷமராக இருக்கையிலும் ஸஹித்து நிற்கும் தன்மை; ஔதார்யமாவது - தாத்ருத்வம்; உபஸத்தி தாரதம்யாநுஸந்தாநமன்றிக்கே ப்ரியவாக்காகவும் தாநஶீலனாகவு மிருக்கும் தன்மை. தயை பிறந்தவிடத்தில் க்ஷாந்தி பிறக்கிறதென்றும், க்ஷாந்தி பிறந்தவிடத்தில் ஔதார்யம் பிறக்கிறதென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அநேக கோடி ப்ரஹ்ம கல்பகாலம் அநுபவித்தாலும் நஶிப்பிக்கக் கூடாததான கில்பிஷத்தை அர்த்தக்ஷணத்திற் செய்துகொண்டு ஸம்ஸார தாபத்தால் வருந்தும் நம்மிடத்தில் எம்பெருமானுக்குத் தயை பிறந்து, ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்யவர்ஜநமு மில்லாமல் அப்ரதிவிதேயமான பெருத்த தௌராத்ம்யத்துடன் எப்பொழுதும் அபராதஸஹஸ்ரங்களைச் செய்துகொண்டிருக்கும் நம்முடைய குற்றங்களை ஸஹிக்குமளவு க்ஷாந்தியும் ஜநித்து, தம்மிடத்திலிருக்கும் ஔதார்யத்தால் எப்பொழுதாவது நம்மாற் செய்யப்பட்டிருக்கும் யத்கிஞ்சித்தை வ்யாஜமாகக்கொண்டு நமக்குப் பரமஸாம்யரூபமாகிற பேரானந்தத்தையும் அவர் கொடுத்தாலன்றோ நமக்கு ரக்ஷணமென்பது ஏற்படும்? இல்லாவிட்டால், நிரந்தரம் விஷயாநுபவ ப்ரார்த்தநா பரர்களாகவும் பஹுகாலமாகத் துஷ்கர்மங்களிலே நிமக்நர்களாகவும் ஒருவிதமான ஜ்ஞா

நமுமின்றிக்கே ஸத்தா ஹாநியை அடைந்திருக்கும் நமக்கு, எவ்வித ஹேயகுணமுமில்லாமல் ஸகல மங்கள குணங்களும் நிறைந்திருக்குமவனுடைய கடாக்ஷமென்பது எவ்விதமாகக் கிடைக்கும்? பக்தர்களுள் அக்ரேஸராக இருக்கும் ஸ்ரீ ஆழ்வானே, ஒரு ஸமயத்தில் பகவதநுபவ ப்ரார்த்தநையைச் செய்து, பிறகு தமது நைச்யம் ஸ்பூர்த்திக்கு வர, ‘ஹா! ஹா! வாய்திறந்து எவ்விதமான தைர்யத்துடன் எதை ப்ரார்த்தித்தேன்? பெருத்த துஷ்க்ருதங்களைச் செய்திருக்கும் நான் இப்படி ப்ரார்த்திப்பதும் கூடுமோ? என்செய்வேன்?

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்று நடுங்கினதாகத் தெரிகிறது. இப்படி நடுங்கும் ஹ்ருதயத்திற்கு ஸமாதாநம் கிடைக்கவேணுமானால், எம்பெருமானுடைய தயை முதலிய குணங்களே ஶரணமாகவேண்டும்.

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்கிறபடி அநந்த துக்காகுலர்களாக இருக்கும் நமக்கு அவனுடைய க்ருபை முதலியவைகளே கதி.

இந்தக் கல்யாண குணங்களில்தான் ஆழ்வார் ஆசார்யர்கள் முக்யமாக ஈடுபட்டு அவைகளில் அபாரமான ஆநந்தாநுபவம் செய்திருக்கிறார்கள் என்பது அவர்களது திவ்ய ஸூக்திகளை ஸேவிக்குமவர்களுக்கு நன்றாக விளங்கும். அவதார வைபவத்தைப் பேசிக்கொண்டு வருகையில், ஸ்ரீ ஆழ்வான், ‘ஓரிடத்தில், ஹே ஸ்வாமிந்! ஶேஷ ஶேஷாஶநர்கள் முதலிய நித்யஸூரிகளால் ஸேவிக்கத் தகுந்தவனும், உபயவிபூதி நாதனும், ஸர்வவிதத்திலும்



க்ருத க்ருத்யனும் எழுந்தருளியிருக்கும் தேவரீர் அதிக்ஷுத்ரமாகவும் நிஹீநர்களால் வஸிக்கத்தகுந்ததாகவு மிருக்கும் இந்த ஜகதண்டத்தின் நடுவில், ஆஶ்ரித ஜநங்களுடைய ஸ்வபாவத்திற்குத் துல்யமான ஸ்வபாவத்தை உடையவனாக வந்து அவதரிப்பது ஏன்? க்ஷுத்ரர்களான எங்களுடைய கண்ணுக்கு ப்ரத்யக்ஷமாகி எங்களுடைய துக்கத்தை நிவ்ருத்தி செய்யவேணுமென்கிற இச்சையைத்தவிர வேறு காரண முண்டோ?’

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்று எம்பெருமானுடைய தயாளுத்வத்தைப்பற்றிப் பேசி அந்தத் தயாளுத்வமே நமக்குக் கதியென்று அநுஸந்திக்கிறார்.

உண்மையாகவே எம்பெருமானுடைய அவதார சேஷ்டிதங்களை ஆலோசித்துப் பார்த்தால், நம்மிடத்திலிருக்கும் தயையைத் தவிர அவருடைய அவதாரத்திற்கு வேறு முக்யகாரணமொன்றும் தெரியவில்லை. அப்ரத்யக்ஷமாக இருக்கும் தத்வார்த்தங்களை ஸாக்ஷாத்கரிக்க யோக்யதையுள்ள பராஶர பாராஶர்யர் முதலிய மஹர்ஷிகள், ‘ஜ்ஞாந கர்ம பக்தி யோகங்களாலே எம்பெருமான் ப்ராப்யன்’ என்றும், ‘மற்ற உபாயங்களாலே அவன் அலப்யன்’ என்றும் சொல்லியிருக்க, எம்பெருமான் சக்ரவர்த்தித் திருமகனாகத் திருவவதரித்திருந்த காலத்தில் ஜ்ஞாநயோகாதிகளில் ஒன்றையும் அறியாமலேயிருந்த உத்தரகோஸல வாஸிகளான புல் பூண்டு முதலிய ஸ்தாவரங்கள்டங்கிய எல்லா வுயிர்களுக்கும் தம்முடைய கருணையையே காரணமாகக்கொண்டு ப்ராப்யராக வில்லையோ? கண்ணனாகத் திருவவதரித்திருந்த காலத்தில் கோகுலவாஸிகளான ஜந்துக்களெல்லாம் இந்தச் சிறந்த பாக்யத்தைப் பெறவில்லையோ? இந்தக் கருணை யில்லாமல் இவர்களுக்கு இந்தப்பாக்யம் கடிக்குமோ?

“ [illegible]
[illegible] ।

ஸநேதஷ யேந பரஶோத்தரகோஸலோத்₃பூ₄த:
பாதா₃வக₃ம் ஸத்₃வ்ருவஹேஜந ஹி ஜந்தவஸ்தா₂ம் ॥ ”

தவிரவும், பஹுகாலமாக நம்மை அநுஸரித்து வந்திருக்கும் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குகைக்கும், நல்லதையும் தீயதையும் விவேசநம் செய்து அறிகைக்குமே, காருணிகனை எம்பெருமான் பெருவிளக்குப்போலிருக்கிற ஶாஸ்த்ராதிகளை ப்ரகாஶித்திருக்கிறுன்; இதுவும் அந்த க்ருபையின் கார்யமே. ‘ஶாஸ்த்ரம் ப்ரதீ₃பமிவ காருணிகோ த₃தா₃தி’ என்று ஸ்ரீ பட்டர் அருளிச்செய்திருக்கிறபடி, உத்பத்தி விநாஶ ரஹிதங்களான ஶ்ருதிகளும், அவைகளை உபப்ரும்ஹணம் செய்யும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணுதிகளும், நம்முடைய நிஶ்ஶ்ரேயஸத்தின் பொருட்டே அவனது க்ருபா தரங்கங்களின் உல்லாஸங்களாக ஏற்பட்டிருக்கின்றனவே தவிர வேறில்லை. இந்த அர்த்தத்தை ஸ்ரீ ஆழ்வான் மற்ருேரிடத்தில் பின்வருமாறு அருளிச்செய்திருக்கிறுர்.

“ ஶாஸ்த்ராணி நாநிதியமேந ஸூத்ரிதஸ்ஸீய
திவ்யாவதார ஸஹிதே ஶ்ருதயா வ ஸ்ருஷ்டா: ।
நிஶ்ஶ்ரேயஸம் யத₃பவர்க₃ யஸி ப்ரஜாநாம்
ஸா கேவலா க்ருபா ஜயதி தவரஜ வர்தி₄தஶ்ரீ: ॥

ஸ்ரீ ஆளவந்தாரும், எம்பெருமானுடைய இந்தத் தயை என்னும் குணத்தையே த்ருடமாகக் கைப்பற்றியிருக்கிறுர். ஸ்ரீ ஸ்தோத்ரரத்நத்தில், ஸ்ரீ ஆளவந்தார், அநாதிகாலமாக ப்ரவஹித்து வரும் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தின் நடுவே அநந்யகதிகராகத் தாம் மூழ்கிக்கொண்டிருக்கிறதாகவும், இப்படி பஹுகாலமாகக் கஷ்டப்பட்டுவரும் தமக்கு ஒரு பெருத்த கரைபோலப் பகவாந் அகப்பட்டிருப்பதாகவும், அதே மாதிரி பஹுகாலமாகத் தமது தயைக்குத் தகுந்த பாத்ரம் கிடைக்காமல் ஶ்ரமப்பட்டுக்கொண்டிருந்த பகவானுக்கு அநுத்தமமான தயாபாத்ரம் தம்மிடத்தில் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லி, வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாத அநந்தங்களான கஷ்டங்களை அநுபவித்துவரும் தமக்கு எம்பெருமானுடைய க்ருபையின்றிக்கே மற்ற எதுவும் ரக்ஷகமாகாது என்பதை ஸூசிப்பிக்கிறுர்.



“ நிமஜ்ஜதோऽநந்த ப₄வார்ணவாந்த:
ஶ்சிராய மே கூலமிவாஸி லப்₃த₄: ।
த்வயாऽபி லப்₃த₄ம் ப₄க₃வந்நிதா₃நீம்
அநுத்தமம் பாத்ரமித₃ம் த₃யாயா: ॥ ”

ஸ்ரீ ஆளவந்தாரே இவ்விதமாக ஆக்ரந்தநம் செய்திருந்தால் நாம் நமது பலத்தினுலே ஶ்ரேயஸ்ஸைத்தேட முயல்வது பரிஹாஸாஸ்பதமாகாதோ? “ த₃யாஸிந்தோ⁴! ப₃ந்தோ⁴! நிரவதி₄கவாத்ஸல்ய ஜலதே₄!” என்று நாம் ஶரணம் புகுந்தாலொழிய நமக்கு வேறு கதியில்லை.

இவ்விதமாகப் பெருத்த கஷ்டங்களை அநுபவித்து வருந்தும் நம்மிடத்தில் எம்பெருமானுக்கு க்ருபை ஜநித்தும், நம்முடைய அபராதங்களை ஸஹிக்கக்கூடிய க்ஷாந்தியில்லாவிடில், எப்பொழுதும் அபராதஸஹஸ்ரங்களைச் செய்துகொண்டிருக்கும் நமக்கு மோக்ஷமே துர்லபமாகிவிடும். அப்படியின்றிக்கே எம்பெருமான் மஹா க்ஷமாஶீலன் என்பதை நமது ஆசார்யர்களது திவ்யஸூக்திகளிலிருந்து நாம் அறிகிறேரும். யத்கிஞ்த் வ்யாஜத்தைக்கொண்டு எல்லாருடைய அபராதங்களையும் எம்பெருமான் க்ஷமித்துக் கொள்வன் என்பதை ஆசார்யர்கள் ப்ராசுர்யாய பலத்தால் நிரூபித்திருக்கிறுர்கள்.

“ ரகு₄வர யத₃பூ₄ஸ்த்வம் தாத்₃ருஶோ வாயஸஸ்ய
ப்ரணத இதி த₃யாலுர்யச்ச சைத்₃யஸ்ய க்ருஷ்ண ।
ப்ரதிப₄வமபராத்₃து⁴ர்முக்₃த₄ ஸாயுஜ்யதோ₃ऽபூ₄:
வத₃ கிமபத₃மாக₃ஸ்தஸ்ய தேऽஸ்தி க்ஷமாயா: ॥ ”

என்பது ஸ்ரீ ஆளவந்தாருடைய திவ்ய ஸூக்தி. ‘ஶரணம் புகுந்தவரைக் கைவிடுகிறதில்லை யென்று வ்ரதம்கொண்ட ரகுவம்ஶத்தில் திருவவதரித்த ஹே பகவந்! ‘சிறுகாக்கை முலைதீண்ட’ என்று அந்த:புர விஷயத்தில் மஹத்தானஅபராதத்தைச் செய்த வாயஸத்தினிடத்தில் வேறுபுகலற்று விழுகையைக் கைப்பற்றி, நிரவதிகமான க்ஷமையைத் தேவரீர்செய்ததை அடியேன் கேட்டதில்லையோ? ஆர்த்ராபராதியாக இருக்கையிலும் எப்பொழுதோ ஒருஸமயத்தில் ஓர் அபராதத்தைச் செய்த இந்த வாயஸம் இருக்கட்டும்; ஒவ்வொரு ஜந்மத்திலும் தீவ்ரமான வைரத்தை

யே கொண்டாடிக்கொண்டு 'கேட்பார் செவிசுடு கீழ்மை வசைக ளெவையும்' என்கிறபடி வாசாமகோசரமாக ஸ்வவிஷயத்திலே ஸர்வதா அபராதஶீலனாக விருந்த ஶிஶுபாலனிடத்தில் அவன் கூறிய ஒவ்வொரு பருஷோக்தியிலும் க்ருஷ்ணநாமோச்சாரணமா கிற குணலேஶ மிருக்கின்றதென்பதை அவலம்பித்துத் தேவரீர் அபராத அநபராத விவேசநத்தைச் செய்யாமலே மஹாயோகிக ளுக்கும் துர்லபமாகவிருக்கும் பரமமான ஸாம்யத்தை அளித்தது அடியேனுக்குத்தெரியாதோ? ஆகையால், அப்படிப்பட்ட உம்மு டைய க்ஷமைக்குப் பாத்ரமாகாத அபராதமும் இருக்குமோ? ஸர்வதர்ஶியாக இருக்கும் தேவரீர் அப்படிப்பட்ட அபராதத்தை எங்கேயாவது கண்டிருந்தாற் சொல்லும் பார்ப்போம்' என்று ஸ்ரீ ஆளவந்தார் ப்ராங்ந்யாயங்களாலே தேறுதலை அடைந்தவரா ய்க்கொண்டு ஒருதைர்யத்துடன் பேசுகிறார்.

இந்த மாதிரியாகவே, ஸ்ரீ கூரத்தாழ்வானும்,

"யஸ்யா: க்ருதாமஸுபிரபி வ்யதித ப்ரஸக்தம்
ஶம் வாயஸம் ஶரணயோ ர்யயாऽக்ஷிஷோ: ।
தேநைவ ராக்ஷஸஜநஸ்ய க்ஷமாமஸோऽபி
யுக்தம் ஸரோஷஸந்தித்யவபாஶயாத் ॥"

என்று அந்த வாயஸ ந்யாயத்தையே நிரூபித்துத் தம்முடைய அபராதத்தையும் எம்பெருமான் க்ஷமித்துக்கொள்வர் என்று நிஶ்சயிக்கிறார்.

ஸ்ரீ பட்டரும்,

"ஶஶ்வத் ஶிஶுபாலகே ராகவமாமஸர்வா
மாந்தவ ஸஹவாஸாச க்ஷந்தரா ஸங்கதஞ் ।
மயி மாநவஶரணாத்தந்தவிஹா நமிஜ்ஞ
விஹரந்த வரதாऽஸள ஸவர்தா ஸாவதுமளீ ॥"

என்பதில், ஸர்வ ப்ரகாரத்தாலும் குணமில்லாமையே நிரவதிக மஹிமாவான எம்பெருமானுடைய க்ஷமையின் அஸங்குசித ப்ரவ் ருத்தியின் பொருட்டு ஹேதுவாகின்றது என்று திருவுள்ளம்பற்றி, 'ஸர்வாபராதங்களையும் ஸஹிக்கிற ஸ்வபாவமுள்ள தேவரீருடைய க்ஷமை, குணலேஶ வ்ருத்தாந்த விசாரமின்றிக்கே யிருக்கிற அடி யேனிடத்தில் நிரங்குஶமாக க்ரீடிக்கக்கடவது' என்கிறார்.



'இப்படி க்ஷமையைச் செய்தருளும் பகவானால் நமக்கு உண் டாகும் பலமென்ன? என்று கேட்டால், "ஸகோ ஸஹஸ்ர நாம் யோ விதயாதி காமாந்" "ஸ தஸ்த்வாத்மாநம் ஜந்தா யோ யதிஷ்டதி தஸ்ய தஸ" என்கிறபடி எம்பெருமான் ஸ்வாத்ம பர்யந்தம் ஸர்வஸ்வ தாநம் செய்யும் ஸ்வபாவமுள்ளவன்; ஆகை யால், ஸர்வமநோரதங்களையும் அவனிடமிருந்து அடையலாம்' என்பதுதான் ப்ரத்யுத்தரம்.

"யதா கல்பத்ருமாத்ஸர்வம் ப்ராப்யதே மநஸேப்ஸிதம் -
ததா ஸம்ப்ராப்யதே விஷ்ணோரபி ஸர்வார்த்தஸஞ்சயம் த்விஜ"

என்று இதிஹாஸோத்தமத்திலும், 'கல்பவ்ருக்ஷத்திலிருந்துபோல ஸ்ரீ விஷ்ணுவிடமிருந்து ஸகல மநோரதங்களையும் பெறலாம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ப்ரியவாக்குடன் ஸ்வா த்ம பர்யந்தம் ஸர்வஸ்வதாநம் செய்யும் ஶீலத்தைத் தான் ஔதார்யமென்று ஆசார்யர்கள் கொண்டாடியிருக்கிறார்கள்.

ஸ்ரீ கூரத்தாழ்வான், ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தில்,

"யேநைவ ஸர்வபரிபூர்ணதயாஸ்தி யஸ்ய
ஸத்தாऽபி தஸ்ய தவ வீக்ஷணத: ப்ரஜாநாம் ।
ஸம்பத்து கிம்புநரதோ ந வதாந்யதந்யம்
மந்யே ஶ்ரியோ வஸந்தம் ஶ்ரிதஶரணாயாஸ் ॥"

'ஹே பகவந்! தேவரீரோ அவாப்த ஸமஸ்தகாமர்; அப்படிப் பட்ட தேவரீருடைய கடாக்ஷத்தினாலே ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர் யந்தங்களான ப்ரஜைகளுக்கு ஸத்தை முதலியவை ஏற்படுகின் றன; ஸாக்ஷாத் ஸ்ரீயும் தேவரீரிடத்திலே குடிகொண்டிருக்கி றாள்; ஸம்பத்துக்கள் தேவரீரிடமுண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால், மற்ற எவனையும் உதாரனென்று சொ ல்ல அடியேன் ஸித்தனாக வில்லை' என்று ஸ்ரிய:பதியின் ஔதார் ய்த்தை ஸர்வாதிஶாயியாகப் புகழ்ந்திருக்கிறார்.

ஸ்ரீ ஆளவந்தார், லகுதமமான உபாயமாகவும் நிவ்ருத்தி தர்ம கோடி நிவிஷ்டமாகவு மிருக்கும் அஞ்ஜலியின் ப்ரபாவத்தை ப்ர ஸ்தாவிக்கையில்,

“ த்வதங்க்ரிமுத்திஶ்ய கதாபி கேநசித்
யதா ததாவாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: ।
ததைவ முஷ்ணாத்யஶுபாந்யஶேஷத:
ஶுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ॥ ”

என்று அருளிச்செய்திருக்கிறார். ‘ ஹே பகவந்! ஸர்வலோக ஶரண்யனான தேவரீருடைய திருவடிகளில், யாராகிலுமொருவன், எந்தக் காலதேஶத்திலாவது ஓர் அஞ்ஜலியை ஸமர்ப்பித்தானேயானால், அந்த அஞ்ஜலியில் எவ்வித அசாதுர்யமிருந்தாலும், அஞ்ஜலி செய்யுமவன் எவ்வளவு அஜ்ஞனாகவும் ஹீனனாகவு மிருந்தாலும், அந்தக்ஷணத்திலே தேவரீர் அவனுடைய ஸகல அநிஷ்டங்களையும் நிவ்ருத்திசெய்து அவனுக்குப் பரிபூர்ண கைங்கர்ய பர்யந்தமான ஸர்வாபேக்ஷிதங்களையும் ஸாதித்துக் கொடுக்கிறீர் ’ என்றன்றோ ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம்? “ [illegible] ” என்றன்றோ சொல்லப்பட்டிருக்கிறது.

‘ ஸ்ரீ குண ரத்நகோஶம் ’ என்னும் லக்ஷ்மீ ஸ்தோத்ரத்தில், ஸ்ரீ பட்டரும், நமக்குத் தைவதமாக இருக்கும் தம்பதிகளுள் அந்யதரையான லக்ஷ்மியின் ஔதார்யத்தைப் பின்வருமாறு ஶ்லாகித்திருக்கிறார்.

“ ஐஶ்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா
கஸ்மைசிதஞ்ஜலிபரம் வஹதே விதீர்ய ।
அஸ்மை ந கிஞ்சிதுசிதம் க்ருதமித்யதாம்ப
த்வம் லஜ்ஜஸே கதய கோயமுதாரபாவ: ॥ ”

ஸக்ருதாவ்ருத்தி அஞ்ஜலிசெய்த ஒருவனுக்குப் பரமபத பர்யந்தமான மநோரதங்களைக் கொடுத்தும், பிராட்டி ‘ இன்னும் அநுரூபமான அநுக்ரஹம் செய்யப்படவில்லையே ’ என்று லஜ்ஜைப்படுகிறாளாம். இது, அந்யாத்ருஶமான உதாரபாவமாக இருக்கின்றது.

இப்படி தயை க்ஷாந்தி ஔதார்யம் என்னும் மூன்றும் பொருந்திய ஸர்வ ஶரண்யனைவிட வேறு யார்தான் நமக்கு ரக்ஷகராவார்?



ஸ்ரீ பட்டர், புண்யவான்களுக்கும் பாபிஷ்டர்களுக்கும் வாசியறத் தன்னில் ஸ்நாநம்செய்யுமவரை ஸ்வர்க்கமேற்றிவைக்கிற கங்காநதியின் மாஹாத்ம்யத்தை “ க: ஸ்வர்துநி விவேகஸ்தே வாவி தேநா நயஸே திவம் ” என்று ஒருவர் நிந்திப்பதுபோல, இந்த மூன்று குணங்களும் பூர்ணமாகப் பொருந்திநிற்கும் ஸ்ரீ பகவானைப் பின்வரும் ஶ்லோகத்தால் நிந்தாஸ்துதி செய்கிறார்.

“ தயா து:கத்வேஷோ ந ச க²லு பரேஷாம் ஸ பவதோ நிரஸ்தாஸ்த்யாஸங்காத்
து:ஸ்யாத ஸ்வஸ்யாநாம் த்வம் வ்யஸநவிவராயா நவிஷ்டேஷு: ।
க்ஷமா தோஷாஸம்ஜ்ஞா ! ஸவதி நதராம் நாத ! நதராம்
தவௌதார்யம் ஸ்வத்வே ஸதி ஹி பரகீயஸ்வவிதரணம் ॥ ”

“ ஹே ரங்கநாத! தயை என்பது, தன்னையொழிந்தவர்களுடைய துக்கத்தைப் பொறுக்க மாட்டாமையன்றோ? தேவரீர், “ ஸர்வஶரீரீ ” என்கிறபடி எல்லாப் பதார்த்தங்களோடும் பேதமில்லாதவராகிவிட்டபடியால், தேவரீர் தயாளுவன்று. க்ஷமையென்பது, பிறருடைய குற்றங்களை யறிந்தும் அவைகளைப் பொறுத்தலன்றோ? நிஸர்க்க வத்ஸலனாக இருக்கும் தேவரீர், ஆஶ்ரிதர்களின் அபராதங்களைப் பார்ப்பதில்லை யாதலால், அபராதங்களே இன்னவையென்று அறியாமலிருக்கும் தேவரீருக்கு க்ஷமையென்பதே ஸம்பவிக்காது. ஔதார்யமென்பது, தமக்கே அஸாதாரணமான ஸ்வத்தை இரந்தவர்க்குக் கொடுப்பதன்றோ? “ உதாரா: ஸர்வ ஏவைதே ” என்கிறபடி உமது உடைமை முழுவதும் இரந்தவருடைய ஸ்வம் என்று ஸங்கல்பித்துவிட்ட தேவரீருக்கு ஸ்வகீயமான ஸ்வம் ஒன்று மில்லை யாதலால், ஔதார்யமும் ஸம்பவிக்காதே! என்செய்வீர்? ” என்று பரிஹஸிக்கிறார். ப்ரபஞ்சத்திற்கு ஶரீரியாகவும், வத்ஸலனாகவும், ஆஶ்ரிதர்களுக்கு ஸர்வஸ்வதாநம் செய்யும் ஸங்கல்பத்துடன் கூடினவனாகவு மிருந்துகொண்டு, ஸ்ரீ பகவாந், தமது தயை முதலிய குணங்களை ஆஶ்ரிதர்கள்பக்கல் அதிஸ்வாரஸமாக ப்ரவஹிக்கச்செய்து, லௌகிகர்களுக்கு உண்டான தயாதிகளை அதிஶயித்து அதிவிலக்ஷணங்களாக இருக்கும் கல்யாணகுணங்களுடன் பொருந்தி நின்றால், அப்படி நிற்பதும் நிந்தைக்கு ஆஸ்பதமாகுமோ?

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

# ப்ருதாதேவி.

നമഃ പങ്കജനാഭായ നമഃ പങ്കജമാലിനേ ।
നമഃ പങ്കജനേത്രായ നമസ്തേ പങ്കജാംഘ്രയേ ॥

ஸ்வார்த்த நிரபேக்ஷனாகவும் பரதுக்கங்களை நிராகரிப்பதிலேயே பத்தஸங்கல்பனாகவுமுள்ள பரம க்ருபாளுவான ஸ்ரீ கண்ணபிரானுடைய அநுக்ரஹம் பெற்றவர் பலருண்டு. அவர்களுள் வாஸுதேவாநுசரரென்று சொல்லப்படும் பாகவதோத்தமரான உத்தவர், முதலில் எடுத்துக்கூறத்தகுந்தவர். அவர், பால்யம்முதலாகவே பகவத்ஸேவையிலேயே காலத்தைக்கழித்தவர். ஐந்து வயதுள்ளபாலனாக இருந்தபொழுதே க்ருஷ்ணனென்று ஒருபொம்மையைப் பரிகல்பித்து, பாலக்ரீடையாக அவர் அந்த க்ருஷ்ணனுக்கு எப்பொழுதும் பரிசர்யையைச் செய்துகொண்டிருப்பராம். தமது தாயார் தம்மைப் போஜநத்திற்கு அழைப்பதையும் கவனியாமல் அந்தப்பரிசர்யையிலேயே அவர் ஈடுபட்டிருந்ததாகவும் அவரைப்பற்றிப் புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. “യഃ പഞ്ചഹായനോ മാത്രാ പ്രാതരാശായ യാചിതഃ । തന്നൈച്ഛദ്രചയൻ യസ്യ സപര്യാം ബാലലീലയാ ॥”. தமது குலத்தை ஸம்ஹரித்து விடவேணுமென்று எண்ணங்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணன், ஒருநாள், யாதவர்கள் எல்லாரையும் மத்யதோஷத்தால் ப்ரஷ்டசித்தர்களாகச் செய்து, தாம் ஸரஸ்வதீ நதிக்கரையில், நீலஶ்வேத வர்ணமுடையவராக ப்ரஸந்நமான கண்களுடன் பீத கௌஶேயாம்பரம் தரித்து “വാമ ഊരാവധിശ്രിത്യ ദക്ഷിണാംഘ്രിസരോരുഹം” என்று சொல்லப்படும் ஸேவையுடன் ஓர்



அஶ்வத்த மரத்தினடியில் தனிமையாக எழுந்தருளியிருந்த பொழுது, அவரைத் தர்ஶநம் செய்யும்படியான மஹாபாக்யத்தைப் பெற்றவர் இந்த உத்தவரே. ‘மர்த்யலோகத்தை விட்டு ஸ்ரீவைகுண்டத்துக்குப் போகவேணுமென்று ஏகாந்தத்தில் வந்திருக்கும் என்னை நீர் தர்ஶித்ததே உமக்கு ஶ்ரேயஸ் ஸமீபித்திருண்டாகும் என்பதை ஸூசிப்பிக்கிறது’, என்று ஸ்ரீபகவானே அவரை நோக்கி அந்தஸமயத்தில் அநுக்ரஹிக்கும்படியாக இருந்தது. “സവൈഷ സാധോ ചരമോ ഭവാനാമാസാദിതസ്തേ മദനുഗ്രഹോ യത് । യന്മാം നൃലോകാൻ രഹ ഉത്സൃജന്തം ദിഷ്ട്യാ ദദൃശ്വാൻ വിശദാനുവൃത്ത്യാ ॥”. கண்ணன் ஸ்ரீ வைகுண்டம் எழுந்தருளினபிறகு, அவர்ஸம்பந்தமான ஜ்ஞாநம் லுப்தமாகாமலிருக்கும்படி இந்த லோகத்திற்கு ஜ்ஞாநோபதேஶத்தைச் செய்யும் அதிகாரத்தைப் பெற்றவரும் இவரே. “നോദ്ധവോഽണ്വപി മന്ന്യൂനോ യദ്ഗുണൈർനാർദിതഃ പ്രഭുഃ । അതോ മദ്വയുനം ലോകം ഗ്രാഹയന്നിഹ തിഷ്ഠതു ॥” இம்மாதிரியான கடாக்ஷம் எல்லாருக்குமே கிடைத்துவிடுமோ?

அக்ரூரர் என்பவரும், இவ்விதமான மஹா பாக்யத்தைப் பெற்றவர்களில் ஒருவர். க்ருஷ்ணனை மதுராபுரிக்கு அழைத்துவரும்பொருட்டுக் கம்ஸன் அக்ரூரரை ஆஜ்ஞாபிக்க, அக்ரூரர், அதை ஒரு பெருத்த அநுக்ரஹமாக நினைத்து, தாம் நந்தகோகுலம் போகும் மார்க்கமெல்லாம், ‘நாம் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்க்கப் போகிறோம்? நம்முடைய ஜந்மம் க்ருதார்த்தமாகிவிட்டது. [മമാദ്യ സഫലം നഷ്ടം പാപം ധ്രുവ മേ ഭവഃ]’ என்றும், ‘அநந்ய தைவதனான என்னைக் கண்டவுடன் கண்ணன் ப்ரீதியால் ஓடிவந்து என்னை ஆலிங்கநம் செய்துகொள்வர் [ഷാഹ്യതി വ്യാഹരിഷ്യതി പരിഷ്വജ്യ കേശവഃ]; ஹே அக்ரூர! ஹே தாத! என்று என்னை அழைப்பார்; [തദാ വയം ജന്മഭൃതഃ] அப்பொழுதே நமது ஜந்மம் ஸபலமாகும்’ என்றும், இத்யாதியான மநோரதங்களைச் செய்துகொண்டே கோகுலம் சென்றார். அங்கே

சென்றவுடன் தரையில் எம்பெருமானுடைய திருவடிகளின் விந்யாஸங்களைப் பார்த்துவிட்டு, ["தைஹம் ஹ்ரகாதியாநயோதூஷி தூர தேஹம் ஹியம் ஶோகம்"] 'டம்பம் பயம் ஶோகம் லஜ்ஜை இவைகளை விட்டுப் பகவந்நாமத்தைச் சொல்லிக் கதறுவதும், அவனுடைய திருவடிகளில் ஸாஷ்டாங்கமாக விழுந்து புரள்வதுமன்றோ ஜந்மத்தின் ப்ரயோஜநம்?' என்று சொல்லிக்கொண்டே ரதத்தைவிட்டுக் குதித்து அந்தத் திருவடி விந்யாஸங்களில் விழுந்துபுரண்டார் [ரயாதவ ஸ்கந்த்ய ஸதேஷ்வேஷ்டத]. "நதோ ஸ்ஸ்மஹம் தாஸவிஜ தேஹகம் தேஹகம்" என்றும், "நதேஷு வாஸுதேவாய ஸவஸ்ஹஸ்ரத க்ஷயாயவ - ஹ்ரஷீகேஶ நதேஷு ஸ்ம் ஹ்ய வாசநம் வாஷி ஊம் விஸோர" என்றும் கதறும்படியான ஜ்ஞாந பக்திகளையும் பெற்றவரன்றோ இவர்?

இம்மாதிரியான மஹா பக்தர்கள் இன்னும் பலர் இருக்க, ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ஹார்த்தமான பரமக்ருபைக்குப் பாத்ரமானவர் சிலரே. உத்தவாதிகளிடம் பகவான் செய்த விஶ்வாஸமும் ஹார்த்தமாக இருக்கையிலும், நாம் குறிப்பிடும் சிலரிடம் அவர் செய்த ப்ரீதி அத்யாத்ருஶமாகவே இருக்கின்றது. ப்ருதை அல்லது குந்தி என்பவள், ஸ்ரீக்ருஷ்ணனுடைய பிதாவுடன் பிறந்தவள்; பாண்டுமஹாராஜாவின் பத்நீ; தர்ம புத்ராதிகளாகிற பஞ்சபாண்டவர்களின் தாயார். ஸுக்ருதம்செய்த அநேக வேறு ஜீவன்களைப்போல அந்த ப்ருதையின் ஜீவனும் பெருத்த ஸுக்ருதங்களைச் செய்து அதுகாரணமாக ஒரு பெரிய ராஜவம்ஶத்தில் ஜநிக்கவும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பந்துவாக இருக்கவும், மஹா ஶூரர்களான பாண்டவர்களைப் புத்ரர்களாகப் பெறவும், இன்னும் இம்மாதிரியான பலவகைகளில் மேன்மையை அடையவும் ஸம்பவிப்பது ஸஹஜம்; ஆனால் ஸ்த்ரீயாக விருக்கையிலும், "ஜாயமாநம்ஹி புருஷம் யம்பஶ்யேந் மதுஸூதந" என்கிறபடி அத்யாத்ருஶமான ஜாயமாந கடாக்ஷத்திற்கு இவள் பாத்ரமாயிருப்பதை ஸூசிப்பிக்கத்தகுந்த மோக்ஷார்த்த சிந்தநார்ஹ ஜ்ஞாநத்தை அடைந்தாளே என்பது அத்யந்தம் ஆஶ்சர்யப்படத்தகுந்தது. நீண்டகாலமாகவே இந்த ஸாத்வியினிடம் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு விஶேஷித்த விஶ்வாஸம் உண்டு. இந்த விஶ்வாஸத்திற்கு அநேக காரணம் இருக்கலாம். ஒரு மஹாராஜனுடைய வம்ஶத்தில் பிறந்து மற்றொரு மஹாராஜன் வம்ஶத்திற் புகுந்து அமாநுஷ போகங்களுக்கும் மஹா ஸுகத்திற்கும் அர்ஹையாக இருக்குமவளுக்குத் தனது புத்ரர்களின் பால்யத்திலேயே பதியை இழக்கும்படியாகவும், தாயாதர்களான துர்யோதநாதிகளின் தௌஷ்ட்யத்திற்குப் பாத்ரமாகும்படியாகவும், புத்ரர்கள் அஸஹாய ஶூரர்களாக இருக்கையிலும் ராஜ்யத்தைத்தோற்று அவர்களை வநவாஸம் புகுவிட்டுத் தான் பரக்ருஹத்தில் கூசி வஸிக்கும்படியாகவும் நேர்ந்துவிட்டதே என்கிற காரணத்தினாலேயும் அந்த பித்ருஷ்வஸையினிடத்தில் க்ருஷ்ணனுக்கு ஓர் அநுதாபம் ஜநித்திருக்கலாம். எதுகாரணமாக இருந்தாலும் பாவியான ஶ்ரேயஸ்ஸைக் காண்பிக்கத்தகுந்த விஶ்வாஸமிருந்தது என்பதில் ஆக்ஷேபமே இல்லை; யாராவது ஹஸ்திநாபுரம் சென்றால் அந்தக் குந்திக்கு விஶேஷித்து ரஹஸ்யமான ஸமாசாரம் சொல்லியனுப்புவதும், ஹஸ்திநாபுரத்திலிருந்து யாராவது வந்தால் அவளது குஶலத்தை விஶேஷித்து விசாரிப்பதும், தாம் ஹஸ்திநாபுரம் போகும் பொழுதெல்லாம் வேறு எவ்விதமான ராஜ்யகார்யங்களிருந்தாலும் தனிமையாக அவளுடன் நீண்டகாலமிருந்து ஸம்பாஷித்து அவளுடைய துக்கங்களை நிதானித்துச் செவிகொடுத்துக்கேட்டு ஆறுதலைக் கொடுக்கக்கூடிய பேச்சுக்களைச் சொல்வதும் க்ருஷ்ணனுக்கு வழக்கம். ஆனால், 'இப்படி நடப்பது க்ருஷ்ணனுக்கு ஆஶ்சர்யமன்று; தம்மிடத்தில்தான் அதிக ப்ரீதியுடன் க்ருஷ்ணன் இருக்கிறார் என்று ஒவ்வொருவரும் எண்ணும்படி நடந்துகொள்வது அவரது ஸ்வபாவமாயிருக்க, குந்தியினிடத்தில் இதைப்பற்றி விஶேஷித்துப் பேசுவதற்குக் காரணமென்ன?' என்று நினைக்கலாம். அது யதார்த்தமேயாயினும், மற்வர்களுக்குத் தாத்காலிகமான ஆஹ்லாதத்தைக் கொடுப்பரேதவிர, இவரிடம்போல ஜ்ஞாநாதிகளைக் கொடுத்து அநுக்ரஹிப்பதில்லை. மஹாநான ஒரு ஸதாசார்யனைத் தேடி அவரிடம் நீண்டகாலம்

குருகுலவாஸம் செய்து அவருடைய ஹார்த்தமான கடாக்ஷத்தால் ஸமீசீநமாயுள்ள ஜ்ஞாநத்தைப் பெற்று ஸாத்விக அக்ரேஸராக வரும் பாகவதோத்தமரிடம்கூட, இந்த ப்ருதைக்கு ஜநித்த த்ருட பக்தியும் அந்தரங்கமான விஸ்வாஸமும் இருக்கமாட்டா. இந்த ப்ருதைவிஷயத்தில் பஹுகாலமாகப் பகவத்கடாக்ஷம் முதிர்ந்துவந்து, ஒருவராலும் ப்ரதீக்ஷிக்கப்படாமலிருந்த ஒரு அவஸரத்தில் பலித்தது என்பதை நாம் ஸ்ரீ பாகவதத்தில் பார்க்கிறோம்.

குருக்ஷேத்ர யுத்தம் முடிந்தபிறகு, பந்துக்களுடைய நாஸத்தால் அதி துக்கிதர்களாக இருந்த காந்தாரீ ப்ரப்ருதிகளுக்கு உசிதமான ஸாந்த்வநத்தைச் செய்தும், தர்மபுத்ரர்க்கு அஶ்வமேதம் முதலிய யாகங்களை நடத்திவைத்தும், ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாத்யகி உத்தவர் முதலியவருடன் த்வாரகைக்கு ப்ரயாணமாக இருந்த ஸமயத்தில், அர்ஜுநனுடைய ஸ்நுஷையாகிற உத்தரை பய விஹ்வலையாக, "பாஹி பாஹி மஹாயோகிந் தேவதேவ ஜகத்பதே" என்று கதறிக்கொண்டு ஓடிவருவதையும், அதே ஸமயத்தில் பாண்டவர் ஐவர் முன்னிலையிலும் ஐந்துபாணங்கள் சீறிக்கொண்டு நிற்பதையும், அவைகளைக்கண்ட பாண்டவர்கள் அவற்றின் நிரஸநார்த்தம் ரோஷத்துடன் அஸ்த்ரங்களை க்ரஹிப்பதையும் பார்த்து ஸ்ரீ க்ருஷ்ணன், 'ஜகத்தை அபாண்டவமாகச் செய்யும்பொருட்டு அஶ்வத்தாமாவால் ப்ரயோகம் செய்யப்பட்ட அஸ்த்ரமன்றோ இது?, என்று அறிந்து, விராடபுத்ரியாகிற உத்தரையினுடைய கர்ப்பத்தை நாஸமடையவொட்டாமல், ஸகல வஸ்துக்களின் உள்ளிலும் ப்ரவேஸித்து ஸர்வ தாரகனாக நிற்கும் தம்முடைய ஸக்தியால் உத்தரையின் உதரத்தில் ப்ரவேஸித்து, அங்குக் கர்ப்பத்தை நஸிப்பிக்க உத்யதமாக விருந்த அஸ்த்ரத்தைத் தம்முடைய ஸுதர்ஸநத்தால் சேதித்து அநந்யரக்ஷகர்களான பாண்டவர்களெல்லாரையும் காப்பாற்றினர். இதைக் கண்டு நின்ற ஸமயமே ப்ருதைக்கு ஸ்ரேயஸ்ஸாதகமான ஸமயமாயிற்று. அப்பொழுது, முன்னமே பலதடவைகளில் ஸ்ரீ க்ருஷ்ணனால் தாமடைந்த உபக்ருதிகளெல்லாம் ஸ்பூர்த்திக்கு வர,



'நமஸ்யே புருஷம் த்வாத்யம் ஈஶ்வரம் ப்ரக்ருதே: பரம்' என்று உபநிஷதர்த்தங்களடங்கிய சொற்களைச் சொல்லிக் குந்தி ஆவேஸம் வந்தவள்போல ஸ்துதித்தாள். பகவாந் இச்சித்தால் எதுதான் ஸம்பவிக்காது? குழந்தை என்றும் ஸ்த்ரீ என்றும் அவருக்கு அலக்ஷ்ய ஜ்ஞாநமும் உண்டோ? ஐந்து வயதுள்ள பாலனாக இருந்த த்ருவனுக்குத் தமது பாஞ்சஜந்ய ஸ்பர்ஸத்தால் அநந்ய ஸாதாரணமான ஜ்ஞாநத்தைப் பகவாந் கொடுக்கவில்லையோ? இம்மாதிரியான பகவதநுக்ரஹத்திற்குப் பாத்ரமானதனால்தான், இந்தப்ருதையைப் பாகவதோத்தமையென்று கூறத்துணிந்தோம். "ஶ்ருண்வந்தி காயந்தி க்ருணந்த்யபீக்ஷ்ணஶ: ஸ்மரந்தி நந்தந்தி தவேஹிதம் ஜநா: - த ஏவ பஶ்யந்த்யசிரேண தாவகம் பவப்ரவாஹோபரமம் பதாம்புஜம்" என்றும், "விபத: ஸந்து தா: ஶஶ்வத் தத்ர தத்ர ஜகத்குரோ - பவதோ தர்ஶநம் யத்ஸ்யாத் அபுநர்பவ தர்ஶநம்" என்றும், "த்வயி மே(அ)நந்யவிஷயா மதிர்மதுபதே(அ)ஸக்ருத் - ரதிமுத்வஹதாதத்தா கங்கேவௌகமுதந்வதி" என்றும் கதறுவதற்குப் பகவதநுக்ரஹமில்லாவிடில் ஸாத்யமாகுமோ? இடைவிடாமல் பகவத்கதைகளைக் கேட்பதும், அவைகளைச் சொல்வதும், பகவத்குணங்களைக் காநம்செய்வதுமே ஸம்ஸாரதாபத்தின் உபஸமத்திற்கு ஹேதுவாகின்றன என்றும், 'உம்முடைய தர்ஸநத்திற்கு விபத்தேகாரணமாக இருந்தால், அப்படிப்பட்ட விபத்தின் கூட்டங்கள் எனக்கு ப்ரார்த்தநீயங்கள் 'என்றும்,' ஓய்வின்றிக்கே கங்கா ப்ரவாஹம் ஸமுத்ரத்துடன் சேர்வதுபோல என்னுடைய புத்தியும் உம்முடைய விஷயத்திலேயே ஸதா ப்ரவஹித்து நிற்கவேண்டும்' என்றும் இவள் ப்ரார்த்தித்ததுபோல ப்ரார்த்திப்பது ஸாமாந்யமான கார்யமாகுமா? இம்மாதிரியான தத்வஜ்ஞாநம் ஜநிப்பதைவிட வேறு ஸ்ரேயஸ்ஸும் மநுஷ்யர்களுக்கு உண்டோ?

To know He rules—come loss or gain,
Sorrow or sadness, sun or rain,
To know He loves—in ease or pain,
Is perfect rest.

பௌராணிகர்.

ஸ்ரீ:.

# ஹிந்து ஸ்த்ரீகளின் நிலைமை.

இங்க்லீஷ் பாஷையில் கணக்கில்லாமல் ப்ரசுரம் செய்யப்படும், மாஸாந்தரப் பத்ரிகைககளில் 'ப்ரோக்ரெஸ்' என்னும் பெயருள்ளது ஒன்று. அது முக்யமாகப் பாடசாலைகளில், வித்யார்த்திகளாகப் படிக்குமவர்களுடைய உபயோகத்திற் காகவே உத்தேசிக்கப் பட்டுள்ளது; 'க்ரிஸ்டியன் லிட்ரச்சர் ஸொஸைடி' என்னும் ஒரு பெருத்த ஸங்கத்தின் ஆதரவினால் நடைபெற்று, அநேகமாக க்ரைஸ்தவ மதத்திற் சொல்லப்பட்டுள்ள பொதுவான சில தர்மங்களைப் பாலர்களுக்கு அது போதித்து வருகின்றது. அதனுடைய சென்ற ஜநவரி மாஸத்திய ஸஞ்சிகையில் 'ஏ. ஸி. ஸி.' என்று கையொப்ப மிட்டிருக்கும் ஒருவர், தாத்காலிக ஹிந்து ஸ்த்ரீகளின் நிலைமையைப் பற்றி விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். ஸாமாந்யமாகப் பத்ரிகையில் எழுதுவது எல்லாவற்றிலுமே எழுதுமவர் வஸ்து ஸ்திதியை அந்யூநாதிரிக்தமாக விவரித்து எழுதல்வேண்டும் என்கிற நியமம் ஸர்வ ஸம்மதமாக இருக்கையிலும், இம்மாதிரியான பத்ரிகையில் இதுபோன்ற விஷயங்களைப் பற்றி எழுதும்பொழுதெல்லாம் அந்த நியமவிஷயமாக விசேஷித்த ஜாக்ரதை அபேக்ஷிதம் என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். ஏதாவது சொல்லப்படவேண்டிய விஷயம் விடுபட்டுப் போய் விட்டாலும், அந்யதாவாக உரைக்கப்பட்டிருந்தாலும், அது, நிரபராதிகளாக இருக்கும் ஒரு பெருத்த ஜநஸமூஹத்திற்குத் தீங்காகப் பரிணமிப்பதுடன், அதனைப்படிக்கும் பாலர்களுக்கு லௌகிக ஜ்ஞாநத்தையும் விபரீதமாகப் பாதித்துவிடும். இவையெல்லாவற்றையும் நன்றாக உணர்ந்திருக்கும் 'ஏ. ஸி. ஸி' என்னுமவர், இந்த விஷயத்தில் எவ்விதமாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதை விசாரிப்போம்.



ஹிந்து ஸ்த்ரீகளின் நிலைமையைப் பற்றி அவர் எழுதியிருப்பதாவது:—'ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்ய மர்ஹதி' என்று மாநவ தர்மசாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கிறபடி இந்த ஸ்திரீகளுக்குப் பாரதந்த்ர்யமே முக்யமாக இருக்கின்றதென்றும், புத்ரர்கள் விஷயமாகப் பரிச்ரமப்படுவதுபோல மாதா பிதாக்கள் இவர்களுடைய ஜ்ஞாநாபிவ்ருத்த்யர்த்தமாகப் பரிச்ரமப்படுகிறதில்லையென்றும், அதனால் இவர்களெல்லாரும் அஜ்ஞாநமாகிற இருளால் மூடப்பட்டு அத்யந்தம் நிஹீநர்களாகிவிட்டார்களென்றும், இவர்கள் தங்களுக்கு லோக வ்யவஹார ஜ்ஞாநம் ஜநிக்கு முன்னமே மாதா பிதாக்களால் விவாஹஞ் செய்யப் பெற்று அந்யாதீநர்களாகி மஹத்தான துக்கங்களுக்குப் பாத்ரமாகிறார்களென்றும், இவர்கள் தங்களுடைய புத்தியைக்கொண்டு யுக்தாயுக்த விவேசநம் செய்யாமல் ஸாமாந்யமான விஷயங்களில் கூட அந்த பரம்பரையாக அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கும் ஸம்ப்ரதாயத்தையே உறுதியாக அவலம்பித்துவருகிறார்களென்றும், இன்னும் இம்மாதிரியான துக்கங்களுக்கு ஆஸ்பதமான நிலைமையில் இந்த ஸ்த்ரீகள் இருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார். விதேசத்திலிருக்கும் ஒருவர் இதைப் படித்தால், நாம் நமது ஸ்த்ரீகளை அதிக்ரூரமாகவும் மிகுந்த வைஷம்யத்துடனும் நடத்துவதாகவே அவர் புத்தியில் தோன்றும். மனிதர்களுக்கு இயற்கையாக இருக்கும் வாத்ஸல்யாதிகள் கூட நம்மிடத்தில் இராமல் நாம் ஜீவித்துவருகிறோமென்று நம்மைப் பற்றி அவர் நினைக்கக்கூடும். யதார்த்தமாகவே இவ்விதமாக நினைப்பவர் பலருண்டு. அதற்கு எல்லாம் முக்யமான காரணம், அவர்களால் ஆப்தரென்று நினைக்கப்படும் அநேகர் இம்மாதிரியாக மனம்போன படியெல்லாம் பத்ரிகைகளில் எழுதத் துணிவதே. ப்ரக்ருத 'ஏ. ஸி. ஸி.' என்பவர் நம்மைப் பற்றித் தூஷிக்கவேணுமென்கிற எண்ணத்துடன் இப்பொழுது எழுதியிருக்கிறார் என்று நாம் சொல்ல வரவில்லை. அதிகமாக எல்லா ஹிந்துக்களுடைய வழக்கங்களையும் தெரிந்துகொள்ளாதவராய், அவர் தாம் எழுதியிருப்பதே வஸ்து ஸ்திதியென்று நினைத்திருக்கலாம். அது எவ்வகையில் தவறுதல் என்பதை நாம் எடுத்து உரைப்போம்.

முதலில், 'ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி' என்று மநுஸ்ம்ருதியிற் சொல்லியிருப்பது உண்மையே. அதற்குத் தாத்பர்யமென்னவென்றால், எவ்விதமான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததனால் இப்பொழுது இங்க்லீஷ்காரர்கள் இங்க்லாந்தில் சில ஸ்த்ரீகளால் துன்பமடைந்து வருந்துகிறார்களோ அவ்விதமான ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கக் கூடாது என்பதுதான். ஸ்த்ரீகளுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கு ஓர் எல்லை யுண்டு; அந்த எல்லையை மீறி ஸ்வாதந்த்ர்யம் கொடுப்பதைத்தான் மநுஸ்ம்ருதி நிஷேதிக்கிறது. காராக்ருஹத்தி லிருப்பவனுக்கு ஸ்வாதந்த்ர்ய நிஷேதம் ஏற்படுவது போல ஸ்த்ரீகளுக்கும் ஸ்வாதந்த்ர்ய நிஷேதம் இந்த வாக்யத்தால் ஏற்படுகிறது என்று சொல்வது ஸரியான அர்த்தமன்று. 'எல்லைக்குட்பட்ட ஸ்வாதந்த்ர்யமாவது இப்பொழுது ஸ்த்ரீகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறதா?' என்று ஒருவர் கேட்கலாம். அது விஷயமாக நம்முடைய நடவடிக்கை சில சீர்திருத்தங்களை அபேக்ஷிக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். ஶாஸ்த்ர விதியில்லாமலே நமக்குள் சில அநுஷ்டானங்கள் வந்துவிட்டன. அவை அபிஜ்ஞர்களால் அங்கீகரிக்கப்பட்டனவல்ல. ஏதோ சில இடங்களில் சில கட்டுப்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்கிற காரணத்தைக்கொண்டு ஹிந்துஸ்த்ரீ ஸாமாந்யமே அடிமை பூண்ட நிலைமையில் இருக்கிறார்களென்று சொல்வது ந்யாயமாகுமா? பைத்ருகமான க்ரியைசெய்யவேண்டிய புத்ரர்களை உத்பாதநம் செய்வது தவிர்த்து வேறு அதிகாரம் ஹிந்து ஸ்த்ரீகளுக்கு இல்லை என்று இவர்சொல்வதை இந்தத் தேஶத்தின் நடவடிக்கை தெரிந்த யாராவது ஒத்துக்கொள்வார்களா?

இரண்டாவது, நமது ஸ்த்ரீகள் விஷயத்தில் நாம் யதோசிதம் வித்யாபிவ்ருத்திக்காகப் பரிஶ்ரமப்படவில்லை என்று சொல்வது உண்மையே. எழுதவும் படிக்கவும் ஸ்த்ரீகளுக்கு நாம் கற்றுக்கொடுக்கவேண்டியது நம்முடைய தர்மமே. அதை ஸரியாக நாம் செய்யாமலிருக்கும் வரையில் நாம் தர்ம லோபத்திற்குப் பாத்ரமாகிறோமென்பதைப்பற்றி ஆக்ஷேபமே இல்லை. ஆனால், இது காரணமாக, நம்முடைய ஸ்த்ரீகள் எல்லாரும் அஜ்ஞாநாவ்ருதர்களாக இருக்கிறார்கள் என்றும், அதனால் நிஹீ



நதையை அடைந்துவிட்டார்களென்றும், அதனால்தான் ஸஹபோஜநத்திற்கு அநதிகாரிகளாகிவிட்டார்களென்றும் சொல்வது ந்யாய்யமாகுமா? ஜ்ஞாநமென்பது படிப்பினால்மாத்திரம் ஜந்யமோ? ஸாத்விகர்களாகவும் லோக வ்யவஹாரம் தெரிந்தவர்களாகவுமுள்ள தமது பெரியோர்களின் நடுவில் வஸித்து அவர்களுடைய போதநத்திற்கு அடிக்கடி பாத்ரமாகி அதனால் ஒரு பயிற்சி புத்திக்கு உண்டாகியிருந்தால் அந்தப்பயிற்சி ஜ்ஞாநமாகாதோ? நம்முடைய ஸ்த்ரீகளில் அநேகம் பெயர், எழுதப்படிக்க அநபிஜ்ஞராக இருக்கையிலும் யுக்தாயுக்த விவேசநம் செய்து தகுந்த ஆலோசனை சொல்வதில், நன்றாய்ப் படித்துத் தேர்ந்த புருஷர்களைவிடத் தேர்ச்சியை அடைந்திருப்பதாக நாம் பார்க்கிறோமல்லவா? ஆகையால், ஜ்ஞாந ஹீநர்களாக இருக்கும் ஜநங்களுக்குத் துல்யமாக நம்முடைய ஸ்த்ரீ ஜநங்களைச் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததா? ஆதுநிக ஶாஸ்த்ர ஜ்ஞாநமும் பாஷா ஜ்ஞாநமும் அவர்களுக்கு இல்லையென்று மாத்ரம் சொல்லலாம். அந்த அபவாதத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள நாம் முயல்வது அவஶ்யமே.

மூன்றாவது, பால்யத்திலேயே கந்யகைகளுக்கு நாம் விவாஹத்தைச் செய்து விடுவதாகவும், அதனால் மஹத்தான துக்கம் அவர்களுக்கு ஜநிக்கிறதாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஹிந்து ஸ்தரீ ஸாமாந்யமன்று. ப்ராஹ்மண ஜாதியில் மாத்திரம் இந்தப் பால்ய விவாஹம் நடக்கின்றது. ப்ராஹ்மணர்களை விலக்கிவிட்டால், மற்றைய ஜாதியார் விஷயத்தில் அநேகமாக ப்ரௌடா விவாஹம் நடக்கிறது என்றே சொல்லவேண்டும். ப்ராஹ்மணர்களுக்குள்ளும் கூட அதி பால்யத்தில் விவாஹம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மதமன்று என்று எல்லாராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடக்கும் பால்ய விவாஹமும், நூற்றிற்குப் பத்துக்கு மேற்படாது என்று சொல்லலாம். இப்படியிருக்க, ஹிந்து ஸ்த்ரீகள் எல்லாரும் பால்ய விவாஹத்தால் வருந்துகிறார்க்ள் என்று சொல்வது யதார்த்தமாகுமா? தவிரவும், இவராற் சொல்லப்படும் பால்ய விவாஹம் எவ்வகையில் துக்காஸ்பதமாகிறது? என்று ஆலோசித்துப் பார்த்தால், சில விடங்களில் அநுரூப தாம்பத்ய மேற்படாமல் குடும்பத்தில் அத்ருப்தி ஜநிக்கிற

தென்றும், சில விடங்களில் பால்யத்திலேயே வைதவ்யம் நேர்வதால் அளவற்ற கஷ்டங்களுக்கு ஸ்த்ரீகள் பாத்ரமாகி விடுகிறார்களென்றும் ஏற்படும். இந்த ஸ்திதி, மிகவும் ஶோகிக்கத் தகுந்தது தான். ஆனால், இதற்கு ப்ரதீகார மென்ன? ப்ரௌடையான பிறகு ஸ்த்ரீகளே பர்த்தாக்களை வரித்துக் கொள்ளுகிறது என்கிற வ்யவஸ்தை ப்ரதீகார மாகுமா? இந்த வ்யவஸ்தை நடைபெற்றுவரும் இங்க்லாந்து அமெரிக்கா முதலிய தேஶங்களில் பர்த்தாக்கள் அலப்யர்களாகி விவாஹமின்றிக்கே நிர்கதியாக ஸ்த்ரீகள் படும் கஷ்டங்களையும், லப்யர்களாகு மிடத்தும் பரஸ்பரம் தகுந்த அநுராக மில்லாமல் பரஸ்பரம் நிராகரித்துக்கொள்ள அநேகர் முயல்வதையும் பார்த்தால், நமது தேஶத்திய கஷ்டம் ஸஹ்யமென்றே தோன்றுகின்றது. தகுந்த ப்ரதீகாரம் தெரியும் வரையில், இந்தத் துக்கம் அப்ரதீகார்ய கோடியில் சேர்கிறபடியால், அதைப்பற்றி 'எ. ஸி. ஸி' அவ்வளவாக நிந்திக்கக் காரணமில்லை.

நான்காவது, நமது ஸ்த்ரீகள் பரம்பரையாக வரும் ஸம்ப்ரதாயத்தை த்ருடமாகக் கைக்கொண்டிருக்கிறார்களென்பது உண்மைதான். ஆனால், அந்த ஸம்ப்ரதாயம் ஏன் தூஷ்யமாகவேணும்? சிலர் மேல்வஸ்த்ரத்தை இடத்தோள் பக்கமாகத் தரிப்பதாலும் சிலர் வலத்தோள் பக்கமாகத் தரிப்பதாலும் என்ன பாதித்யம் ஜநிக்கிறது என்று தெரியவில்லை. எவ்வித ஹாநிக்கும் காரணமாகாம லிருக்கும் வரையில் ஸம்ப்ரதாயத்தை நாம் ஏன் நிந்திக்கவேணும்? வஸ்த்ரம் தரிக்கும் மாதிரியை ஒரு தூஷணத்திற்கு ஹேதுவாக்குவது புத்திஶாலிகளுக்கு லக்ஷணமாகுமா? மேலும், ஒரு வ்யவஸ்தைக்கும் கட்டுப்படாமல் இஷ்டப்படி வஸ்த்ரம் தரிப்பதைவிட இம்மாதிரி ஒரு வ்யவஸ்தைக்கு உட்பட்டுத் தரிப்பது ஶ்லாக்யமே.

'எ. ஸி. ஸி' எழுதியிருக்கும் ரீதி முழுவதும் இம்மாதிரியாக ஆக்ஷேபார்ஹமாகவே இருக்கிறது. திருவள்ளுவருடைய பத்நீ தமது பதியினுடைய ஓர் ஆஜ்ஞையை ஹேது விசாரியாமல் யாவஜ்ஜீவம் அநுஷ்டித்து வந்ததாகச் சொல்லும் ஓர் ஐதிஹ்யமே ஹிந்து ஸ்த்ரீகளின் கீழ்ப்படிந்து நடக்குந் தன்மையை நன்றாக விளக்குகின்றது என்றும், இந்தியாவில் பல விடங்களில்



ஶீதோஷ்ண ஸ்திதி பலவிதமாக வேறுபட்டிருப்பதுபோல ஸ்த்ரீகளுடைய நடை உடைகளும் வேறுபட்டிருக்கின்றன என்றும், அவர்கள் தங்கள் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் தைவத்தையே கொண்டாடுகிறார்களென்றும், அவர்களுக்குத் தேஶாந்தர ஸஞ்சாரத்திற்கும் ஸ்தலாந்தரங்களில் நடக்கும் விசித்ரங்களைப் பார்ப்பதற்கும் உத்ஸாஹமுமில்லை அவகாசமு மில்லையென்றும், இன்னும் இம்மாதிரியான நிலைமைகளைப்பற்றி அவர் பரிஹஸித் திருக்கிறார். இவையெல்லாம் அஸம்பத்தமாகத் தோன்றுகிறபடியால், நாம் இவைகளை ப்ரத்யுத்தரார்ஹங்களாக நினைக்கவில்லை.

இப்படி நாம் எழுதியிருப்பதனால், நமது ஸ்த்ரீகள் இப்பொழுது இருக்கும் நிலைமையே ஶ்லாக்யமென்பது நம்முடைய அபிப்ராயமென்று ஒருவரும் எண்ணக்கூடாது. கணக்கற்ற அம்ஶங்களில் இவர்களுடைய ஸ்திதி சீர்திருத்தங்களை அபேக்ஷிக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆனால், இங்கிலாந்து முதலிய தேஶங்களில் நடைபெற்றுவரும் வ்யவஸ்தைகள் நமது தேஶத்திலிருக்கும் வ்யவஸ்தைகளைவிடச் சிறந்தனவென்றாவது, அவைகளை நாம் ஏற்றுக்கொண்டால் நாம் அபேக்ஷிக்கும் சீர்திருத்தங்களெல்லாம் ஸித்தியாகிவிடுமென்றாவது நாம் நினைக்க ஸித்தமாகவில்லை.

ஒரு ஹிந்து.

ஸ்ரீ:.

# ஸங்க்ரமண புண்யகால நிர்ணயம்.

"𑌅𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌕𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑍋𑌽𑌯𑌨𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍 𑌵𑌿𑌷𑍁𑌵𑌤𑍍𑌸𑍂𑌰𑍍𑌯 𑌸𑌂𑌕𑍍𑌰𑌮𑌃 ॥
𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤𑍋 𑌗𑌜𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌯𑍋𑌃 ।
𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌰𑍁𑌚𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।"

என்று யாஜ்ஞவல்க்ய மஹர்ஷி ஶ்ராத்தகாலங்களைக் குறித்திருக்கிறார். இவைகளில் அமாவாஸ்யை, க்ரஹணம், ஸங்க்ரமணம், மஹாளயம் ஆக இந்த நான்குமே, முக்யமாக அநுஷ்டாநத்தில் இருக்கின்றன. அஷ்டகைமுதலிய ஶ்ராத்தங்கள் அநேகமாக லுப்தமாகிவிட்டன. மாதா பிதாக்களுடையவும், தத்துல்ய பந்துக்களுடையவுமான ம்ருததிதி ஶ்ராத்தம் நீங்கலாக பாக்கி ஶ்ராத்தங்கள் எல்லாவற்றையும் தில தர்ப்பணரூபமாக அநுஷ்டிப்பது ஶாஸ்த்ரீயமென்றே ஶிஷ்டர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தத் திலதர்ப்பணம் செய்வதனுடைய காலவிஷயமாகவும், க்ரஹணம் ஸம்பந்தப்பட்ட வரையில் உபராக ஸமயமே ஶ்ராத்த காலமென்றும், அமாவாஸ்யை முதலியவைகளுக்கு அபராஹ்ந வ்யாப்தியை அநுஸரித்து திநநிர்ணயம் செய்து அப்படி நிர்ணயிக்கப்பட்ட திநத்தில் குதபகாலமாகிற ஸூர்யன் தாழ ஆரம்பிக்கும் ஸமயமே ஶ்ராத்தகாலமென்றும் எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஸங்க்ரமண விஷயமாக அபிப்ராய பேதம் ஏற்பட்டு, அநேக ஸங்க்ரமணங்களில் சிலர் பூர்வ திநத்தில் ஶ்ராத்தத்தை அநுஷ்டிப்பதையும் சிலர் மறுதிநத்தில் அநுஷ்டிப்பதையும் நாம் பார்த்து வருகிறோம். இரண்டு கக்ஷியிலும் தர்மஶாஸ்த்ர விசாரார்ஹமான யோக்யதையுள்ள பண்டிதர்கள் இருக்கிறபடியால், அஸ்மதாதிகளான ஸாமாந்ய ஜநங்களுக்கு இந்த ஶ்ராத்த விஷயமாகப் பெருத்த கலக்கம் ஏற்படு



கிறது. இந்தத்தீபிகையைப் படித்து வரும் வித்வான்களைக்கொண்டு அந்தக் கலக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளலாமென்று எண்ணி இந்தப் பத்ரிகையை எழுதத் துணிகிறேன்.

"𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌰𑌵𑌿𑌮𑌤𑌾 𑌨𑌕𑍍𑌰𑍇 𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌘𑌟𑌿𑌕𑌾 𑌜𑌨𑌾𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌕𑌟𑍇 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌘𑌟𑌿𑌕𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥"

இத்யாதியான வாக்யங்களின் பலத்தைக்கொண்டு, மகர ஸங்க்ரமண காலத்தில் ஸங்க்ரமணத்திற்குப் பிறகும், கடக ஸங்க்ரமண காலத்தில் ஸங்க்ரமணத்திற்குப் பூர்வத்திலும், மேஷ துலா ஸங்க்ரமண காலங்களில் ஸங்க்ரமணத்திற்கு முந்தியாவது பிந்தியாவது ஏதாவது ஒரு ஸமயத்திலும், எல்லாக் காலங்களிலும் ஸங்க்ரமணத்தின் காலத்திற்கு ஸாமீப்யத்தையேப் பெரிதாக நினைத்து, குதபகாலம் முதலியவற்றை எதிர்பார்க்காமலே நாம் காலையிலும் ஸாயாஹ்நத்திலும் ஶ்ராத்தத்தை அநுஷ்டித்து வருகிறோம். இப்படி அநுஷ்டிப்பதை அஶாஸ்த்ரீயமென்று சிலர் நிராகரித்து, எப்பொழுது ஸங்க்ரமணம் நேர்ந்தாலும், ஸர்வ ஸம்மதமான சில வாக்யத்திற்கு விரோதமின்றிக்கே குதபகாலம் வந்துதான் ஶ்ராத்தத்தை அநுஷ்டிக்க வேணுமென்று நிர்த்தாரணம் செய்திருக்கிறார். அதாவது ப்ராத:காலம் முதலிய குதபகால பிந்நகாலங்களில் ஶ்ராத்தம் அநுஷ்டிப்பது பிசகு என்று ஏற்படுகிறது. பால்யம் முதல், அநேக இடங்களில், அநேகம் பெரியோர்கள் ஸூர்ய ஸங்க்ரமண ஶ்ராத்தத்தை உதயம் முதலிய காலங்களில் அநுஷ்டித்திருப்பதைப் பார்த்திருக்கும் நமக்கு, இது ஒரு புதிய அநுஷ்டாநமாகத் தோன்றுகிறது. இரவில் ஸங்க்ரமணம் நேர்ந்தால், அது அர்த்தராத்ரிக்கு முன்னதானால் பூர்வதிநத்தில் புண்ய காலமென்றும் பிந்தியானால் பரதிநத்தில் புண்ய காலமென்றும் விதிக்கும் ஸாமாந்ய விதிக்கு விருத்தமாக, ஷடஶீதி விஷயமாக மாத்திரம் எப்பொழுதும் பரதிநத்திலேயே ஶ்ராத்தத்தைச் சிலர் அநுஷ்டிக்கிறார்கள். இதற்கும் நியாமகம் எது? என்று தெரியவில்லை. ஆஸ்திக ஶிரோமணிகள் இந்த ஸந்தேஹத்தைத் தெளிவிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஓர் ஆஸ்திகன்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

### நம்மாழ்வாரென்னும் திருநாமம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

முப்பத்தாறாயிரப்படியில் இரண்டாவது ஸ்ரீயஃபதியில் "நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வயவிவரணம் பண்ணுகிறார்" என்று இருப்பதாலும் நம்பிள்ளையோடு ஸமகாலத்திலே எழுந்தருளி இருந்த வாதி கேஸரி அழகிய மணவாளஜீயர் அருளிச்செய்த 'த்ரமிடோபநிஷத்ஸாரம்' என்னும் க்ரந்தத்தில் பதினைந்தாம் பக்கத்திலும், மற்றும் பல வேறு இடங்களிலும், பின் பழகிய பெருமாள்ஜீயர் அருளிச்செய்த ஆறாயிரப்படி குருபரம்பராப்ர பாவத்தில் பல இடங்களிலும் "நம்மாழ்வார்" என்னும் திருநாமத்தை உபயோகித்திருப்பதாலும், பன்னீராயிரப்படியில், "த்ரமிடபாஷா ஸந்தர்ப்பத்தாலே ப்ரதமாசார்யரான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம்" என்றிருப்பதாலும், ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் பல இடங்களில் "நம்மாழ்வார்" என்னும் திருநாமத்தை உபயோகப்படுத்தியிருப்பதாலும், மணவாள மாமுனிகள் "உபதேசரத்னமாலை"யில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை" என்று அருளிச்செய்திருப்பதாலும், சடகோபனுக்கு "நம்மாழ்வார்" என்னும் திருநாமம் ஆதிவண் சடகோப ஜீயருக்கு முந்தியே இருந்ததாகத் தெரியவருகிறது.

"ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார"த்திலும் சில்லறை ரஹஸ்யங்களிலும் "நம்மாழ்வார்" என்று சில விடங்களிலும், "ஆழ்வா"ரென்று சில விடங்களிலும் இருப்பதால், ஆதிவண் சடகோபஜீயர் நியமநத்தை அநுஸரித்து, 'அச்சு க்ரந்தங்களிலும் மற்றைய க்ரந்தங்களிலும் "நம்மாழ்வார்" என்று எழுதப்பட்டிருப்பது ஒருவருக்கும் பாதகமாகாது என்று புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி எழுதியிருப்பது எப்படி உபபந்நமாகுமென்று பெரியோர்களான பக்தி சிகாநண்பர்களே அறிந்துகொள்ளக்கடவர். ஓரிடத்தில் 'நம்மாழ்வார்" என்று எழுதப்பட்டிருப்பதற்கும் வேறோர் இடத்தில் அப்படி எழுதப்படாமலிருப்பதற்கும் காரணமொன்றும் தெரியவில்லை.

சடகோபனுக்கு "நம்மாழ்வார்" என்கிற திருநாமம் உண்டானதற்கு அடியான ஐதிஹ்யங்கள் :—



"கோயிலில் திருவத்யயநோத்ஸவத்திற்காக முதலில் சடகோபன் எழுந்தருளியவாறே பெருமாள் ஆழ்வாரைக்கடாக்ஷித்து, "நம்மாழ்வார்" என்னும் திருநாமம் சாத்தியருளினார்" என்று சொல்வார் பலர். இப்படியே தன் கோயிலொழுகு என்னும் க்ரந்தத்திலிருக்கிறது.

அன்றிக்கே "ஒருநாள் மலையநாட்டில் பெரிய பெருமாள் எழுந்தருளின போது மற்றுமுண்டான திருப்பதி எம்பெருமான்களும் சடகோபனும் திரண்டிருக்கக்கண்டு, ஆழ்வார் பக்கலில் பெரியபெருமாள் மிகவும் க்ருபை பண்ணியருளி, 'நம்மாழ்வார், நம்மருகேவாரும்' என்று தம்முடைய திவ்ய ஸிம்ஹாஸனத்தில் வைத்துக்கொண்டு, ஸகல வரிசைகளையும் ப்ரஸாதித்து, அருள்செய்தார்" என்று சொல்வாருமுண்டு.

அன்றிக்கே, "ஈதாவிதா யாவதய ஸந்தநயா [illegible]
[illegible]
[illegible] ஸ்ரீ [illegible]" என்கிற ஸ்லோகார்த்தத்தைப் பராமர்ஸித்தால் ஆளவந்தாரைப் பெருமாள் நம்மாழ்வாரென்று அபிமாநித்துக்கொண்டிருப்பர்" என்பாருமுண்டு.

திருக்குடந்தை
பாட்ராசாரியர்வீதி
7-2-1913.

சின்னமு ர. ஸ்ரீநிவாஸபாட்ராசாரியர்.

[இதைப்பற்றிய சர்ச்சை இதனோடு நிற்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். வே. தீ. பத்ராதிபர்.]

## (2)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ அழகிய சிங்கருடைய அஸ்வாஸ்த்யமும், ஆஸ்தாநத்தைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமி ஓர் உயில் எழுதிவைத்திருப்பதும், பத்ராபிமாநிகளுக்குத் தெரிந்தவிஷயம். மேற்படி ஆஸ்தாநத்தின் க்ஷேமத்தை உத்தேசிக்கும் அநேக ஸிஷ்யர்களைக் கொஞ்சமேனும் கேட்காமல் பிந்தி ஸ்வாமி எழுந்தருளப் பண்ணவேண்டியதைப்பற்றி ஓர் உயில்மூலமாகச் செய்த ஏற்பாடானது ஸ்ரீ மடத்தின் ஆசாரத்திற்கும் ஸிஷ்யர்களுடைய பாத்யதைக்கும் விரோதம் என்று அந்த ஸிஷ்யர்களும் ஸபைகளும் அதிக சிந்தையுடனிருக்கிறார்கள். இப்படி உயில் மூலமாக நியமிப்பது அநுசிதமென்றும், ஆக்ஷேபிக்க வேண்டிய அம்ஸமென்றும் ஸிஷ்யர்கள் அநேக இடங்களில் கூட்டங்கள் கூடி, தந்திகள் தீர்மானங்கள் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளை ஸ்ரீ ஸ்வாமியிடம் நேரில் தெரிவிக்க ஸரிப்படாமல் போய்விட்டதென்று சென்ற ஸஞ்சிகையிலேயே சொல்லப்பட்டது. அதற்குப் பிறகும், பெங்களூர், கூடலூர், கோயம்புத்தூர், மசூலிபட்டணம் ஆகிய இவ்விடங்களில் நடந்த கூட்டங்களின் அறிக்கைகளாலும், சென்னை, தஞ்சாவூர், திருவள்ளூர், மதுரை, வடஆர்க்காடு, ஆரணி, ப்ரொதத்தூர் ஆகிய இவ்விடங்களி

லிருக்கும் நிர்வாஹ ஸங்கத்தின் அங்கத்தினர்களது கடிதங்களாலும், இன்னும் அநேக வ்யாபக ஶிஷ்யர்களது தெரிவிப்புகளினாலும் இந்த நியமநம் ஆக்ஷேபிக்க வேண்டியதாகவே இருக்கிறது. இப்படி ஶிஷ்யர்கள் பல இடங்களிலிருந்து தெரிவித்த அபிப்ராயங்கள் ஸம்பந்தமாக முன்னமேயே "ஹிந்து" பேப்பரில் நான் ஒரு லேகநம் எழுதியிருக்கிறேன். ஶிஷ்யர்களைத் திரஸ்கரித்து, ஸ்வாமிகள் தமது இச்சையின்படி நியமநங்கள் செய்தும், ஸரியான ஆசாரத்திற்கு வரத்தக்க ஏற்பாடுகளைச் செய்யாமல் ஒழித்தும் இருந்தால், இந்த ஶிஷ்யர்கள் செய்வன யாவும் அரண்யரோதனமாகவே முடியும்.

அவ்வவ்விடங்களில் ஶிஷ்யர்கள் படும் சிந்தையும் ஸ்ரீ அஹோபில மடத்தில் அவர்களுக் குண்டாகும் விஶ்வாஸக் குறைவும் எனக்குத் தெரிந்தவரையில் ஸங்க்ரஹமாகவும் கூட இதில் எழுதக் காலமும் இல்லை, இடமும் இராது. ஆனால் இதுமட்டும் உண்மை:— இதுவரையில் இரண்டு ஸ்தானங்களாக நடத்திவந்த அநுஷ்டானத்தைப் பிந்திய ஸ்வாமிகளும் அநுஸரித்துவந்தால், வெகு தீங்குகள் நேரிடும். இரண்டுமூன்று குடும்பங்களைவிட்டு ஸ்ரீ அஹோபிலமடமும் அதனுடைய சொத்துக்களும் வெளியில் போகா. ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையாருக்கும் ஶ்ரமம் குறைவுபடும். அப்படி நேராமலிருக்கத்தக்க ப்ரயத்நங்கள் செய்வது ஶிஷ்யர்களுக்கு இப்போது ப்ராப்தம்போலும்!

இப்படி இருக்க, சேலத்தில் சில சிஷ்யர்கள் சேர்ந்து, தீபிகையின் சென்ற, ஸஞ்சிகையிலுள்ள பத்ராதிபரின் குறிப்புக்களில் உயில் விஷயமாகச்செய்த ஆக்ஷேபங்கள் ஸரியல்லவென்று தெரிவித்திருக்கிறதாகக் கேள்வி. இந்த ராஜதானி மொத்தமும் ஆயிரக் கணக்காகப் பரவியிருக்கும் ஶிஷ்யர்களுக்கு மடத்தில் யாதொரு பாத்யமும் இல்லையென்றும், ஆசார்ய ஸ்தானத்திற்கு உரிய ஶ்ரேஷ்டரான ஓர் ஸ்வாமியைப் பொறுக்கி யெடுப்பதில் இவர்களுக்கு (ஶிஷ்யர்களுக்கு) யாதொரு அந்வயமும் இல்லையென்றும், சொத்துக்களை விநியோகப் படுத்துவதில் ஶிஷ்யர்களுக்கு ஆநுகூல்யம் வேண்டுவதில்லையென்றும் சொல்லுகிறவர்கள் தகுவத்தல் ஶிஷ்யர்கள் அல்லர். அவர்கள் வேறு ஆநுகூல்யங்களை நினைத்துத் தங்கள் பாத்யத்தை இழக்க ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமி எழுதின உயிலில் ஶிஷ்யர்களின் பாத்யதைக்கு என்ன தீங்குகள் உண்டாகுமோவென்று ஆலோசிக்க ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் நிர்வாஹ ஸங்கம் சென்ற பிப்ரவரியீ 2, 9, 16, 23, ஆகிய இந்தத் தேதிகளில் கூட்டங்கள்கூடி அநேக விஷயங்களைப் பரிசோதித்துத் தீர்க்காலோசனை செய்து, ஶிஷ்யர்களுடைய பாத்யதைகளுக்குத் தீங்கு நேரிடாமலிருக்கத்தக்க ப்ரயத்நங்கள் செய்யவேணுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

சித்தூர்.
14—3—13.

ஸி. ராஜகோபாலாசாரி.



(3)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

சென்ற மார்கழி மாஸத்தில் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த மகா ஸபைக்கு எழுந்தருளியிருந்த உப. ஸ்ரீமான் சக்ரவர்த்தி ஐயங்கார் பிஏ. பி. எல். திரிசிராப்பள்ளி ஹைகோர்ட் வக்கீல், இந்த ஸபை நடந்த ரீதியைப் பார்த்து, அபிமாநத்தால் ஸபையின் செலவுக்காக ரூபா. 50—0—0 கொடுப்பதாய் அங்கு வந்திருந்த தம் ஸ்நேஹிதர் ஒருவரிடம் சொல்லிப் போயினர் சொல்லியபடியே அந்த ஸ்வாமி ஷை தொகையை க்ருபையுடன் அனுப்பினர். முன் ஸஞ்சிகையிலேயே ஸபையாருடைய க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கத் தவறிப்போனதை மன்னிக்கும்படி அந்த ஸ்வாமியைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் மார்கழிமாஸ ஸஞ்சிகையில் 464-வது பக்கத்தில் ப்ரசுரம் செய்த தொகைகளில் அடியில் கண்டிருக்கும் ஸ்வாமிகள் மாத்திரம் அவர்கள் பெயருக்கு நேராகக் கண்டிருக்கும் தொகையைக் கொடுத்தார்கள்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| ஸ்ரீ. | டி. நரஸிம்ம ஐயங்கார் ... ... | 50—0—0 |
| ,, | டி. கோதண்டராம ஐயங்கார் ... ... | 25—0—0 |
| ,, | பி. கே. கெருடாசார் ... ... | 25—0—0 |

இவை தவிர, திவான் பகதூர் சதுர்புஜதாஸ் குசால்தாஸ் ஒரு பெரிய வைஷ்ணவ அபிமாநியாதலால் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த ஸபையின் ததீயாராதனச் செலவுக்காக ரூ. 50—0—0 உதவிசெய்திருந்தார். இந்த ப்ரபு நிரந்தரமாக இந்தத் தர்மத்தைச் செய்து ஸபையின் க்ருதஜ்ஞதையை எப்பொழுதும் அடைவாரென்று நம்புகிறேன்.

சித்தூர்.
14—3—13.

ஸி. ராஜகோபாலாசாரி.
கார்யதர்ஶி.

(4)

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

சென்ற ஸஞ்சிகையில் சேலம் பிரிவிலிருந்து தீபிகைக்கு அனுப்பி அச்சிட்டிருக்கும் கடிதத்தைப் பார்த்தேன். ஷை ஸஞ்சிகையிலேயே ப்ரசுரமாகும்படி நான் எழுதின கடிதத்துடன் இதையும் ப்ரசுரம் செய்யும்படி தேவரீரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஸஞ்சிகையிலேயே தேவரீருடைய குறிப்புகள் ப்ரசுரமானபின் அடியேனுக்கு எழுதவேண்டிய அம்ஸங்கள் யாதென்றுமில்லை. ஆகிலும் இரண்டொரு விஷயங்கள் சொல்ல வேண்டியது அவசியமாகத் தோன்றியதால் மருபடியும் எழுதலானேன்.

1. சேலத்தில் சேர்ந்த ஸ்வாமிகளுடைய அபிப்ராயத்தில் எந்தக் காரணத்தினால் ஸம்ப்ரதாயத்துக்கும் பூர்வாசார்யர்களுடைய அநுஷ்டானத்

துக்கும் சிஷ்யர்களைக் கலந்து ஆஸ்தானத்துக்கு ஸ்வாமியை நிர்தேசிப்பது விரோதம் என்பது விளங்கவில்லை. ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்துக்கு முக்கிய கிரந்தமான ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளியில் ஸ்ரீஸந்நிதி ஶிஷ்யாதீநமென்று வ்யக்தமாகக் காணப்பட்டிருக்கிறது. அந்த ப்ரமாணத்தை அநுஸரித்தே ஸ்ரீ ஸந்நிதிக்கு ஸம்பந்தப்பட்ட யாவத்து தஸ்தவேஜுகளில் ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யாதீநமென்றே கண்டிருக்கிறது. ஸ்ரீ ஸந்நிதியினுடைய ஆசாரப்படியும், ஸ்ரீ ஸ்வாமி திருமேனியில் எப்பொழுதாவது பலக்குறைவு நேர்ந்து பிந்தி ஆஸ்தானத்துக்கு ஸ்வாமியை நிர்தேசிக்க ஹேது ஏற்பட்டால், ஸ்ரீ ஸ்வாமியாவது ஸந்நிதானத்திலிருக்கும் ஸ்ரீ ஶிஷ்யர்களாவது ஸ்ரீமுகம் மூலமாக ஶிஷ்யர்கள் எல்லோரையும் வரவழைத்து, அவர்களே வ்யக்திநிர்தேசித்து ஸ்ரீ ஸ்வாமியிடம் ஜ்ஞாபித்து அந்தப்படி நடத்தினதைக் கண்டிருக்கிறோம். தவிரவும், ஸ்ரீ ஸ்வாமி தங்களுடைய பூர்வாஶ்ரம பந்துக்களுக்கு ஸ்தானத்தைக் கொடுக்க உத்தேசித்தபோதும் ஶிஷ்யர்கள் சேர்ந்து ஆக்ஷேபித்து, ஸ்ரீ ஸ்வாமி தம் இஷ்டப்படிச் செய்யாமல் ஶிஷ்யர்கள் அபிப்ராயத்தை நடத்தினதையும் கேட்டிருக்கிறோம்.

2. இதுவுமல்லாமல் இந்த ஸந்நிதிக்கு ஸம்பந்தப்பட்ட மூன் வ்யாஜ்யங்களில் முக்கியமாகச் செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட்கோர்ட் 11/91 என்னும் வியாஜ்யத்தில் ஆஸ்தானத்தில் இருந்த ஸ்வாமிகளுடையவும் பிந்தி ஸ்வாமியாக வந்தவர்களுடையவும் வாக்காலேயே கோர்ட்டில் தாக்கலாயிருக்கும் ரிகார்டுகளால் இந்த ஸந்நிதியில் ஆசாரப்படி ஶிஷ்யர்கள் சேர்ந்து ஸ்வாமியை குறிப்பிடுவதும் அவர்கள் நிர்தேசித்த வ்யக்தியை ஸ்வாமிஸம்மதித்தால் ஆஸ்தானத்துக்கு வரவேண்டியதென்றும் ரிக்கார்டுகளால் ஏற்படுகிறது.

3. இப்படி அநேக ஆயிரம் ஶிஷ்யர்களுக்கு ஸம்பந்தப்பட்ட ஒரு பாத்யதையை ஏதோ ஓர் இடத்தில் சில ஸ்வாமிகள் கலந்து அதை இழக்க ஆலோசிப்பது நியாயமில்லை. இப்படி சிலர் சொல்வதால் ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் பாத்தியம் போய்விட நியாயமில்லாமலிருந்தாலும் தத்வத்தை உணராத அநேக ஸ்வாமிகள் மனதில் ஸம்சயங்கள் ஜநிக்குமோவென்று பயந்து நான் எழுதலானேன்.

4. இதுவும் தவிர ஸ்வார்ஜிதமான ஸொத்துகள் விஷயத்தில் கூட சட்டத்தால் அப்யுபகமம் செய்யாமலிருக்கும் (Reversion) பிந்திபாத்தியம் என்று சொல்லப்பட்ட ஓர் புதிய பாத்தியதையை உயில் மூலமாகக் கொண்டாடும் தர்ம ஸொத்தாகிய இம்மடத்துக்குப் புதிதாக ஏற்பட்டிருந்த ஆசாரத்தைக்கண்டு என்னகாரணத்தினால் சேலம் ஸ்வாமிகள் ஆஹ்லாதப் படுவதோ விளங்கவில்லை.

5. கொஞ்ச காலமாக ஸஞ்சாரமும் காலக்ஷேபமும் இல்லாத இந்த மடத்தில் உயிலாகிய புது ஆசாரம் ஏற்பட்டால் இன்னும் எவ்வித குறைவுகளுக்கு ஆஸ்பதமாகும் என்று சொல்லத்தெரியவில்லை. காலக்ஷேபாதிகள்



ஸ்ரீ ஸந்நிதியில் நடக்கவேணுமென்று சொல்ல பாத்தியமில்லாமலிருப்பதை 3-வருஷமாகப் பார்த்து வருகிறோம். இனி உயிலும் ஓர் பத்ததியாக ஏற்பட்டு விட்ட பிறகு பழய ஆசாரங்களும் ரிக்கார்டுகளும் மித்யையாகத்தான் போய்விடும் என்பதற்கு ஸம்சயமில்லை.

6. மாசி மாதம் ஸஞ்சிகையில் சேலம்பிரிவு என்று காணப்பட்டது எப்பொழுது பிரிவாக முதலில் ஏற்பட்டதோ விளங்கவில்லை. ஆனால் 1913 பிப்ரவரிமீ 9உ யிலேயே ஆரம்பம் என்று தோன்றுகிறது. ஸ்ரீ ஸ்வாமியினுடைய ஆஹ்லாதகரமான உயிலே சேலம் ஸ்வாமிகளை ஓர் பிரிவாக கூடும்படியாகச் செய்ததாக தோன்றுகிறது.

சித்தூர்.
26—3—13. } ஸி. ராஜகோபாலன்.

ஸ்ரீ:

## புஸ்தக விமர்ஶம்.

1. **யதீந்த்ர மத தீபிகை.** இந்த க்ரந்தம், சற்றேறக்குறைய 300-வருஷங்களுக்கு முன் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாந் சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்யர் என்னும் மஹாசார்யருடைய ஶிஷ்யர்களில் அந்யதமரான ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸ ஸ்வாமியால் இயற்றப்பட்டது. இது, பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தின் கொள்கைளை பாலர்களுக்கு உரியபடி தெளிவான ஸம்ஸ்க்ருத நடையில் அடங்கியுள்ளது. இந்த க்ரந்தத்தை, இப்பொழுது மைஸூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மாந். ஏ. கோவிந்தாசார்ய ஸ்வாமி என்னும் ஓர் ஆஸ்திக ஶிரோமணி, இங்கிலீஷ் பாஷையில் தர்ஜமா செய்து அநேக இடங்களில் கடிந பாகங்களை விளக்கக்கூடிய வ்யாக்யாநங்களுடன் வெளியிட்டிருக்கிறார். இம்மாதிரியான க்ரந்தங்களை இங்க்லீஷ் பாஷையில் தர்ஜமாசெய்து, நம்முடைய ஸித்தாந்தத்திலும் நமது ஆசார்யர்களுடைய ஆஸ்திக்யாதிகளிலும் அபரிசிதர்களாக இருக்கும் பாஶ்சாத்ய வித்வாந்களுக்கும், இங்க்லீஷ்பாஷாப்யாஸத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் நமது பாலர்களுக்கும் நமதுமதக் கொள்கைகளை க்லேஶமன்றி போதமாகும்படி வெளியிடுவது, நம்முடைய முக்யதர்மங்களில் ஒன்று என்பது நம்முடைய த்ருடமான அபிப்ராயம். அந்தத் தர்மத்தை நன்றாக உணர்ந்து அது விஷயத்தில் பரிஶ்ரமப்படும் இந்தக் கோவிந்தாசார்ய ஸ்வாமிக்கு இந்தியா தேஶத்தின் அபிவ்ருத்தியைக் கோறும் நாம் எல்லாரும் க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கவேணும். நமது ஸித்தாந்தத்திலும் ஸம்ஸ்க்ருதம் இங்கலீஷ் இந்த இரண்டு பாஷைகளிலும் தகுந்த ஜ்ஞாநமுள்ளவர்களே இம்மாதிரி உபகரிப்பதற்கு அதிகாரிகள். அப்படிப்பட்ட ஜ்ஞாநம் இந்த மஹாநிடத்தில் பொருந்தியிருக்கிறது என்பதை இந்தப் புஸ்தகம் நன்றாக வெளியிடுகின்றது. இந்தப் புஸ்தகத்தை அபேக்ஷிப்பவர்கள், மைஸூர் வைஸ்ராய் ரோட் 1050-வேதக்ருஹம் ஸ்ரீ ஏ-கோவிந்தாசார்ய ஸ்வாமியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. **ஸ்ரீ ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்.** இது, பெருமாள்கோவில் ஸம்பந்தமான ஒரு ஸ்தலபுராணம்; ஸ்ரீ ப்ராஹ்ம புராணத்தின் ஒரு பாகம்; 18 - அத்யாய மடங்கியது. இது, பூர்வர்களால் எழுதி அருளப்பட்டுள்ள மணிப்ரவாள வ்யாக்யாந ஸஹிதமாய் ஸ்ரீ. முசர்ப்பாக்கம் கடாம்பி ரங்காசார்யர் என்னும் வித்வானால் பரிசோதிக்கப்பட்டு, பெருமாள்கொவில் ஸ்ரீ. கொமடம் அழகிய சிங்கராசார்யரால் வெளியிடப் பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 1-8-0. இப்புஸ்தகம் வேண்டுமவர்கள், காஞ்சீபுரம் தேவராஜஸ்வாமி ஸந்நிதி கீழண்டைமாடவீதி 22-நெ. கோமடம் அழகிய சிங்கராசார்யரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. **ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை:**— இது இந்தப்பரீதாபி வருஷம் கார்த்திகைமாதம் முதல் வெளிவரும் ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகை. ஸங்கீத ஸம்பந்தமான விஷயங்களைத் தெளிவாகவிளக்கி ஸர்வ ஜநங்களுக்கும் உபகாரம் செய்கிற இந்த ஸஞ்சிகையில் கமகப்ரகரணம் கீதப்ரகரணம் முதலியவையும் த்யாகையர்க்ருதி தீக்ஷிதர்க்ருதி முதலியவற்றையும் காணலாம்.

---

ஸ்ரீ:-

# வர்த்தமானங்கள்.

## பால்கன் யுத்தம்.

இரண்டு மூன்றுமாஸ காலமாக, ஐரோப்பாகண்டத்தின் தென்கிழக்கிலிருக்கும் பல்கேரியா என்னும் தேஶத்தில் வஸிக்கும் ஐரோப்பியர்களுக்கும் அதற்கு அடுத்திருக்கும் டர்கி என்னும் தேஶத்தில் வஸிக்கும் மஹமதியர்களுக்கும் பெருத்தசண்டை நடந்துகொண்டு வருகின்றது. இந்தச் சண்டைக்குக் காரணம் இன்னது என்று இன்னும் வ்யக்தமாக ஏற்படவில்லை. டர்கி என்னும் தேஶத்தில் அநேக பல்கேரியா தேஶத்திய கிருஸ்துவர்கள் வஸிப்பதாகவும், அவர்கள் விஷயத்தில் ந்யாயமான ராஜ்யதந்த்ரத்தை வஹிக்காமல் மஹமதீய ராஜாங்கத்தார் அவர்களை ஹிம்ஸை செய்ததாகவும், அந்தப்படி அதர்மமாக ஹிம்ஸிப்பதை நிறுத்துவதற்காக இந்த யுத்தம் ஆரம்பித்ததாகவும் பல்கேரியா ராஜாங்கத்தாரின் அபிப்ராயம். டர்கி ராஜாங்கத்தாரோ, ஐரோப்பா கண்டத்தில் மஹமதீயர் ராஜ்யம் வஹித்துவருவதை பல்கேரியர்கள் பொறுக்கவில்லையென்றும், இப்பொழுதுதான் மற்றும் ஒரு யுத்தத்திலிருந்து மஹமதியர் நிவ்ருத்தராக வந்திருக்கிறபடியால் அவர்களை அடித்துத் துறத்திவிட இதுவே ஸமயமென்று எண்ணி அவர்கள் யுத்தத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார். இரண்டிலும் கொஞ்சம் கொஞ்சம் உண்மை இருந்தாலும் இருக்கலாம். அதன் யாதார்த்யம் நமக்குத்தெரியவில்லை. எது காரணமாக இருந்தாலும், லக்ஷக்கணக்காக ஜநங்கள் மடிவதைப்பார்க்கும் நம்முடைய மநஸ்ஸில் மிகுந்த வருத்தம் ஜநிக்கின்றது. இதை உணர்ந்த ஐரோப்பாவிலிருக்கும் மற்றைய அரசாங்கத்தார், எவ்விதத்திலாவது ஸமாதாநத்தைச் செய்துவிடுவது நலமென்று எண்ணி ஸ்வல்ப திநங்களுக்குமுன் ஒரு வ்யவஸ்தை செய்ய முயன்றார். ஆனால் அது ஸாத்யப்படாமற் போய்விட்டது. இன்னமும் யுத்தம் க்ரூரமாகவே நடந்துவருகிறது; ஜநங்களின் நாஶம் குறைவதைக்காணோம். மறுபடியும் ஸமாதாநத்தின் பொருட்டு ஏதோ ஒரு ப்ரயத்நம் நடக்கப்போகிறதாக கேள்விப்படுகிறோம். அந்த ப்ரயத்நமாவது ஸபலமாக வேண்டும். “லோகாஃ ஸமஸ்தா ஸுகிநோ பவந்து” என்பது நம்முடைய ப்ரார்த்தனை.



---

## ஆகாஶக்கப்பல்.

ஸ்வல்ப காலமாக ஆகாஶ ஸஞ்சாரம் மநுஷ்ய ஸாத்யமாகிவிட்டது என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். இரண்டு வருஷங்களுக்குமுன் ஓர் ஐரோப்பியர் சென்னபட்டணம் வந்து பக்ஷிரூபமான ஒரு விமாநத்தில் பறந்து லாகவமாக ஸஞ்சரித்ததை அநேகர் பார்த்திருக்கலாம். ஆனால், யதேச்சமாக ஸஞ்சரிக்கவும், அபேக்ஷித்த இடங்களில் இறங்கவும், அபாயகரமான புசல்காற்று முதலியவைகளிலிருந்து தப்பித்து வரவும் ஸ்வாதீநம் இன்னும் கிடைக்கவில்லையென்று ஒரு எண்ணம் பஹுஜநங்களின் மநஸ்ஸில் இருந்தது. இப்பொழுது அந்த பீதியும் நிவ்ருத்தமாகிவிட்டது. அநேக தேஶங்களில் யுத்தத்திற்கு உபயோகமாகும் பொருட்டு பெருத்த ஆகாயக்கப்பல்கள் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன வென்று கேள்விப்படுகிறோம். இக்கப்பல்களில் இங்கிலாந்துக்கு 2-ம், ப்ரான்ஸுக்கு 10-ம், ரஷ்யாவுக்கு 6-ம், ஜர்மனிக்கு 13-ம் இருக்கின்றனவாம். சிறிய விமாநங்களில், ஜர்மனிக்கு 250-விமாநங்கள் இருக்கின்றனவாம். மற்றைய அரசாங்கத்தாருக்கு இதைவிட குறைவாகவே இருப்பதாகத் தெரியவருகிறது. இப்பொழுது நடந்துவரும் பல்கேரியா துருக்கி சண்டையில்கூட யுத்தவீரர்கள் விமாநங்களில் ஏறி உயரப்போய் ஶத்ருக்களின் பலாபலத்தைப்பார்த்து வருவதாகவும், உயர இருந்துகொண்டே ஶத்ருக்களைநோக்கி வெடிகுண்டுகளைப் போடுகிறதாகவும் சொல்லுகிறார்கள். ஸ்வல்பதிநங்களுக்குமுன் இங்கிலாந்தின் சில பாகங்களில் பலமுறை, இரவு 10-மணிக்குமேல் உயர சில விமாநங்கள் வந்து ஸஞ்சரித்ததாகவும், இரண்டு மூன்று மணி காலம் வெகுதூரம் ஸஞ்சரித்து தாங்கள் கொண்டுவந்த தீவ்ரமான விளக்குகளைக்கொண்டு அந்த விமாநததிலிருந்தவர்கள் பலவிடங்களை ஆராய்ந்து போனதாகவும் அநேகப் பத்ரிகைகளில் எழுதப்பட்டிருந்தது. இவ்விதமாக வெல்லாம் ஜநஸஞ்சாரம் ஸுலபமாகிவிட்டால், ஸகலஜநங்களும் ஸத்வகுணம் பொருந்தினவர்களாக இருந்தாலொழிய ஜநங்களுடைய ஐஹிக க்ஷேமம் என்பதே விலகிவிடும். புராணங்களில் ராவணன்முதலிய துர்ஜநர்களால் ஜநங்களுக்கு உண்டானதாக நாம் படித்துவரும் தீமையெல்லாம் இப்பொழுதும் ஸம்பவிக்க இடமுண்டாய்விடுமென்பதில் ஸந்தேஹமே இல்லை. இங்கிலாந்தில், இம்மாதிரியான விமாநஸஞ்சாரிகள் ஸர்க்கார் உத்தரவன்றிக்கே ப்ரவேஶித்தால் அவர்களைப் போலீஸார் தடுத்து பரிக்ஷைக்கு உட்படுத்தவேண்டுமென்று புதிதாக சட்டம் செய்திருக்கிறார்களாம். எப்படித் தடுக்கப்போகிறார்களென்பது நமக்கு விளங்கவில்லை.

---

## ப்ரக்ருதி சாஸ்த்ரநிபுணரான ப்ரோபேஸர் ஜே. ஸி. போஸ்.

ப்ரொபெஸர் ஜெ. ஸி. போஸ் என்னும் பங்காளதேஶத்திய ஸ்ரீமாந் ஒருவர் கல்கத்தா ராஜதானி ஸர்வகலாசாலையில் ப்ரக்ருதி ஶாஸ்த்ர நிபுணராய், பற்பல நூதன ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறார். இப்பொழுது, செடிகளின் ஸூக்ஷ்மம் எத்தன்மையுள்ளது என்பதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அவர் உபயோகிக்கும் கருவிகள் ஒருவினாடியின் ஆயிரத்தின் ஓர் அம்ஶத்தையும் கணிக்கக்கூடியனவா யிருக்கின்றனவாம். செடிகள் கோடையில் வெயிலின் உஷ்ணத்தாலும் கதகதப்பாலும் எப்படி வளர்கின்றனவென்பதையும், மூடுபனிக்காலங்களிலும், மாரிக்காலங்களிலும் எப்படி அவை வளர்கின்றன வென்பதையும், காய்ச்சலால் இவ்வளவு சேதமுண்டென்பதையும், அதிக ஈரப்பசையினால் இவ்வளவு மாறுபாடென்பதையும் அவர் ப்ரத்யக்ஷத்தில் பார்க்கிறார். அவர் உபயோகிக்கும் கருவிகள் தாமே சுழன்று எவ்வெவ்வக் காலங்களில் எப்படி எப்படி அச்செடிகள் மாறுகின்றன வென்பதைக் குறிக்கின்றனவாம். செடிகள் மனிதர்களைவிட பதின்மடங்கு அதிகக் ஸூக்ஷமுள்ளனவென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இச்செடிகளுக்கு அதிக நீர்ப்பசையிருந்து விட்டால் ஸூக்ஷமற்றுப் போகின்றனவாம். அந்நீரமில்லாவிட்டாலோ பட்டுப்போகின்றனவாம். இவர்செய்த சோதனையினின்றும் சுத்தக் கரிய மலவாயுவே செடிகொடிகளுக்கு ஆஹாரமன்று என வெளியாகிறது. அதுதான் அவற்றிற்கு ஆஹாரமென்று மேற்றிசை சாஸ்த்ரவிற்பன்னர்கள் இதுவரையில் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அந்தவாயு அளவுக்கு மிஞ்சியிருந்தால் மனிதருக்கு எவ்வளவு தீங்கை விளைவிக்கின்றதோ அவ்வளவு தீங்கை செடிகளுக்கும் விளைவிக்கின்றதாம். மேற்சொல்லிய பரீக்ஷைகளையும் அவற்றின் முடிவையும், அவர் சிறிதுகாலம் முன் ஒரு ப்ரஸங்கத்தில் பெரிய சாஸ்த்ரநிபுணர்கள் முன் நிரூபணம் செய்தார். அவர் உபயோகித்துவந்த அதிநுட்பமான கருவிகள் காட்டப்பட்டன. அவை இந்தியக் கம்மியர்களாலேயே செய்யப்பட்டன. மேற்றிசை ஐரோப்பியர்கள் அவற்றைப்பார்த்துப் பெரு வியப்புக்கொண்டார்கள்.

## ந்யூயார்க்கிலுள்ள அத்யுந்நதமான கட்டிடங்கள்.

அமெரிகா எனப்படும் கண்டத்தின் ஒருபாகமான ஐக்யநாட்டின் ப்ரதானபட்டணமான ந்யூயார்க்கில் அத்யுந்நதமான கட்டிடங்களிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் 25, 30 மெத்தைகள் உண்டு. கீழிருந்து மேலே உள்ள ஒருமெத்தைக்குப் போகவேண்டுமென்றால் மின்சாரசக்தியால் எழும்பிப்பெறும் டோலிகளிருக்கும். நாளுக்குநாள் அந்நகரக்கட்டிடங்கள் உயர்த்திக்கட்டப்பட்டுக்கொண்டே வருகின்றன. இப்படி ஆவதை உத்தேசித்தே அந்நாட்டு கவர்ண்மெண்டார் பூமியில் விசாலத்திற்குத் தக்கபடி வரிப்பாடுவது போல ஆகாசத்தில் உயர்த்திக்குத்தக்கபடி வரிபோட ஆலோசனைசெய்து கொண்டிருக்கிறார்களாம். இப்பொழுது ஒருகட்டிடம் அந்நகரத்தில் கட்டப்பட்டுவருகின்றது. அதுகட்டி முடிந்ததும், 500 - அடி உயரமுள்ளதாகவும் உலகத்திலுள்ள எல்ல ஆபீஸ் கட்டிடங்களையும்விடப் பெரியதாகவு மிருக்குமாம். இதற்கு 37 - நிலைமாடம் உண்டாம். இதைவிட உந்நதமான சிலகட்டிடங்களும் அந்த ந்யூயார்க்கில் உள்ளனவேனும், விஸ்தீர்ணத்தில் இதுதான் மற்றெல்லாவற்றிலும் பெரிதெனப்படுகிறது. இதன்கீழ் நிலம் விலை ரூபா 500,000 - ஆம்.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர் :—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வருஷ சித்திரைமீ [ஸஞ்சிகை 3.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ருஷ்வ விக்ஷ்ட நம் தஶாவதாரம் ஸகிமளவாம் வாஸுதேவா
செந்தவச ஸுக்த ஜ்வாலா தான நாபெஜ விஜயஸவெ பதிரஸுஸ்து
செ நவஜ்ரா ॥

---

தேவ ஸுதீயவாணப்ரணயப்ரவீணஸா ஶாநஜாய விஷயீ
க்ருத ஶைப்ரஹா ஶா - ஸுகீயம் ப்ரயஷியதி வெவஷயிகா
விஶாஹா தத்ஶூணம் க ஶபக்ஷத்ர ஸூநஸாநம் ॥

**உத்ஸவங்களின் வைலக்ஷண்யம்.**

ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸைத் திருவுள்ளம்பற்றித் திவ்யதேஶங்களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திவ்யோத்ஸவங்கள், பகவத் கைங்கர்யத்தில் ப்ரவணர்களான சில ஆஸ்திக ஶிரோமணிகளுடைய ஶ்ரத்தையால் இக்

காலத்தில் மிக்க சிறப்புடன் நடைபெற்று வருகின்றன என்பது ப்ராயேண ஸர்வ ஜநங்களுக்கும் தெரிந்த விஷயம். ஏதோ பலீயஸ்ஸான துஷ்கர்மங்களைச் செய்திருக்கும் சில மந்தபாக்யர்கள் வஸிக்கும் இடம் நீங்கலாக மற்ற இடங்கள் எல்லாவற்றிலும் எம்பெருமானுடைய திவ்யோத்ஸவத்திற்கு யாதொரு குறைவும் தென்படவில்லை. இது ஜகத்தின் பெருத்த ச்ரேயஸ்ஸுக்கு ஹேதுவென்றே நாம் நினைக்கிறோம். இந்த்ரிய அபாடவத்தாலும் மற்றும் அது போன்ற அசக்தியாலும் எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடம் தாமே சென்று அவனது திவ்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாக்க வொட்டாததான ப்ரதிபந்தகங்களை உடைத்தாயிருக்கும் ஜந்துக்களையெல்லாம் அநுக்ரஹிப்பதற்கன்றோ எம்பெருமான் வீதிகளில் எழுந்தருளி உத்ஸவங்களைக் கண்டருளுகிறான்?

"ஏவம் ஜநம் ஹ்ருதி கடாக்ஷ விசேஷக்ருத்ய
ஸ்வதக்ஷிணேந்த்ர ப்ரமத! ப்ரணவாஹா।
ஸக்ருத்தி ப்ரேமாவ ப்ரவாஹதா
விஸ்ருத்வம் வீக்ஷண வீவிஸஞ்ஜதி:॥"

என்கிறபடி ஸம்ஸாரமாகிற காந்தாரத்தில் ஸஞ்சரிப்பதனாலுண்டாகும் ச்ரமத்தைப் போக்கடிப்பதற்கு எம்பெருமானுடைய திருக்கண்களாகிற நதியிலிருந்து ப்ரவஹிக்கும் நைஸர்க்கிகமான ப்ரீதிரஸமல்லாமல் மற்று எது தான் வல்லதாகும்? ஆகையால், இம்மாதிரியான உத்ஸவாதிகள் நடைபெறும்படியான வ்யவஸ்தைகளை ஆதியிற் செய்துவைத்த மஹான்களிடத்தில் நாம் எல்லாரும் மிகவும் க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாகவே இருக்கவேண்டும்.

ஆனால், இம்மாதிரியான உத்ஸவங்களுக்கு விசேஷித்துவைலக்ஷண்யத்தைக் கொடுக்கக்கூடிய ஸாமக்ரிகள் எவை? அவை இந்த உத்ஸவங்களில் நிறைந்திருக்கின்றனவா? என்பதை விசாரிக்க ப்ரவ்ருத்தித்தால், அந்த விசாரணைத்திற்கு த்ருப்திகரமான ஸமாதாநம் ஜநிக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. ஸாமாந்யமாக இக்காலத்து உத்ஸவங்கள், காலத்துக்கு ஏற்றபடி விசேஷித்து லௌகிகச்சிறப்பு நிறைந்திருந்தாலும், இரண்டொரு முக்யமான அம்சங்களில் அவைகள் குறைவுபட்டிருக்கின்றன வென்றே



நாம் நினைக்கிறோம். நாம் செய்யும் கைங்கர்யங்களை எம்பெருமான் திருவுள்ளம் பற்றவேண்டுமானால், நாம், தநாதிகளால் உண்டாகும் மதத்தைத் தூரவிலக்கி, காம க்ரோதம் முதலியவற்றை வர்ஜஜித்து, ஸமஸ்த கல்யாணகுணங்களாலும் நிறைந்திருக்கும் எம்பெருமானுடைய முன்னிலையில் ஸமஸ்த ஹேயகுணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கும் நம்முடைய நைச்யத்தை ஹார்த்தமாக அநுஸந்தாநம் செய்துகொண்டு, "யயா யாவா நம் ரா ஜாநம் யயாவ ரேஹவிநம்" என்கிறபடி மிகவும் வணக்கமான மநஸ்ஸுடன் அவனை ஸேவிப்பது அவச்யமல்லவா? நாம் ஸமர்ப்பிக்கும் அதி பல்குவான கிஞ்சித்காரத்தால் அவாப்த ஸமஸ்த காமனாக இருக்கும் பகவானுக்கு ஏதாவது ஆகவேண்டுவதும் உண்டோ? "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி - ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந:" என்கிறபடி பகவாந் நம்முடைய பக்தியையன்றோ திருவுள்ளம் பற்றுகிறான்? இப்படியிருக்க, நாம் ப்ரயதாத்மாவாக இருக்கும் தன்மையைக் கைக்கொள்ளாமலே, பரஸ்பரம் அதி ஜுகுப்ஸிதமான த்வேஷத்தை அவலம்பித்துக்கொண்டு, அஜ்ஞதையால் நம்மைப்பற்றிப் பொய்யான பெருமை பாராட்டி நமக்கே புரஸ்காராதிகளெல்லாம் நடக்கவேண்டுமென்றும் இதரர்கள் புரஸ்காராநர்ஹர்களென்றும் இத்யாதியான தாமஸ எண்ணங்களுடன் கூடியவர்களாய் ஆக்ரஹா விஷ்டர்களாகப் பகவத் ஸந்நிதியிற் ப்ரவேசிக்கிறோமே! இது பகவானுக்கு உகப்பாகுமா? க்ரோதம் மேலிட்டு, ஸேவார்த்திகளுக்கு இயற்கையாக இருக்கவேண்டிய ஸாத்விக குண மின்றிக்கே, அவிவேகிகளான க்ராம்ய ஜநங்களுக்குக்கூட ஹேயமாகத்தோன்றும் மார்க்கத்தில் நாம் இழியத் துணிகின்றோம். அத்யந்தம் ஜுகுப்ஸிதமான துர்பாஷைகளைப் பரஸ்பரம் ப்ரயோகித்துக்கொள்வதும், ம்ருகப்ராயர்களாக ஒருவரோடொருவர் யுத்தம் செய்வதும், பூதாவிஷ்டர்கள்போலவும் மத்யத்தால் மதிமயங்கினவர் போலவும் நம்முடைய தர்மத்தையே மறந்து பகவத் ஸந்நிதியில் மாநஸிகமாகவும் வாசிகமாகவும் காயிகமாகவும் குத்ஸித வ்யாபாரங்களைச் செய்வதும் பாகவத லக்ஷணமாகுமா? இம்மாதிரியான வைபரீத்யங்கள், இப்பொழுது நடந்து வரும் உத்ஸவங்களில் அத்யந்தம் மேலிட்டிருக்

கின்றனவே! அங்கோபாங்கம் ஸௌஹார்த்தத்தோடு வாழ வேண்டிய நாம் இப்படி த்வேஷத்தைப் பாராட்டி க்ரோத வஶகர்களாக நஶிக்க வேண்டுமென்பதா நமது ஆசார்யர்களுடைய திருவுள்ளம்?

தவிரவும், எம்பெருமானுடைய உத்ஸவ ஸம்ருத்தியை வ்ருத்தி பண்ணும்பொருட்டு, அந்தக் கைங்கர்யங்களில் அந்வயித்திருக்கும் ஆஸ்திகர்கள், ஆராதநோபயுக்தமான ஸம்பாரங்கள் ஒவ்வொன்றிலும் உத்க்ருஷ்டதமமானவற்றைப் பல பல விடங்களிலிருந்து ஸம்பாதித்து, அவைகள் எல்லாவற்றையும் எம்பெருமான் தனது அவலோகநத்தால் ஸபலீகரிக்கும்படி ஸமர்ப்பிக்கிறார்கள். இப்படி நடத்துவது எல்லாம் பகவானிடத்திலுள்ள பக்தியின் கார்யமானால், அது மிகச்சிறந்ததே. அப்படி யன்றிக்கே, எல்லாம் ஈஶ்வரார்ப்பண மென்று நினையாமல் தனது இந்த்ரிய த்ருப்த்யர்த்தமாகவே இவை எல்லாவற்றையும் ஒருவன் தேடினால் அது எப்படிச் சிறந்ததாகும்? அநேகமாக இக்காலத்தில் இதுபோன்ற உத்ஸவ ஸம்ருத்தியைத் தேடும் உபயதார்களெல்லாரும் தம்முடைய த்ருப்தியை உத்தேஶித்தே ப்ரவ்ருத்திக்கிறார்களென்று சொல்லக்கூடும். இந்த உத்தேஶத்தை அவ்வளவாக ஸாதுவென்று சொல்ல நாம் ஸித்தமாக இல்லாவிடினும், ஸமர்ப்பிக்கப்பட்ட ஸம்பாரங்கள் ஶாஸ்த்ரப்படிக்கு அஶுத்தங்களில்லாதவரையில் பெருத்த பாதக ஸம்பாவனை ஒன்றும் ஏற்படாது. உத்தமமான காநமும், அதி ஸுரபிகளான குஸும சந்தநாதிகளும், மஹார்க்கங்களான திருவாபரணம் வஸ்த்ரம் முதலியவைகளும், சத்ர சாமராதிகளும், பாணவேடிக்கைகளும் இன்னும் மற்றை உபகரணங்களும், ப்ராயேண டம்பார்த்தமாகக் கல்பிக்கப்பட்ட போதிலும், அவைகள் தோஷதுஷ்டங்களல்லவாதலால் எவ்விதமான தீங்கையும் விளைவிக்கமாட்டா என்பது உண்மைதான். தேவதாஸிகள் என்று சில வ்யக்திகளையும் இந்த ஸாமக்ரீ கோடியில் சேர்த்து அவர்களுடைய காநத்தாலும் நர்த்தநத்தாலும் பகவானுடைய உத்ஸவத்திற்கு ஒரு வைலக்ஷண்யத்தை ஸம்பாதிக்க இந்தக் கைங்கர்யபரர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்களே! இது ஸாதுவாகுமா? "ஸத்யம் வத, தர்மம் சர" என்று உபநிஷத்துக்கள் கதறும் விதி நிஷேதங்களுக்கெல்லாம் பஹிர்பூதர்களாகவும், ஸ்த்ரீகளுக்கு முக்யமாயுள்ள பாதிவ்ரத்ய தர்மத்தைப் புத்திபூர்வமாகக் கைவிட்டவர்களாகவும், அத்யந்தம் நிஹீநமான



துராசாரத்திற்கு ஹேதுபூதர்களாகவும் இருக்கும் இந்த வ்யக்திகளைப் பகவதர்ப்பணம் செய்யத்துணிவது மஹாபாபமான கார்யமன்றோ? அஜ்ஞதையால் வழியல்லாவழியில் போகும் இந்த வ்யக்திகளின்மீது அநுதாபம்கொண்டு, இவர்கள் நடக்கும் மார்க்கத்தின் தோஷத்தை எடுத்து இவர்களுக்குப் போதிப்பித்துத் தர்ம்யமான வழியில் இவர்களைச் செலுத்தவேண்டுவது போக, ஏற்கெனவே இவர்கள் போகும் கெட்டவழியிலேயே இவர்களை ஊர்ஜ்ஜிதப்படுத்துவதும், விஷய ஸாந்நித்யத்தாலும் அவைகளின் ப்ரகடநத்தாலும் இதரர்களுக்கும் அபத ஸஞ்சாரத்திற்கு அவகாஶத்தைக் கொடுப்பதும் ஶாஸ்த்ர ஸம்மதமான கார்யமாகுமோ? பகவானுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு அத்யந்தம் ஹேயமான அக்ருத்யங்களைச் செய்யத்துணியு மவர்களைவிட, பகவச்சிந்தந மின்றிக்கே கேவலம் விஷயப்ரவணராகப் பொழுது போக்கும் வ்ராத்யர்கள் எவ்வளவோ மடங்கு சிறந்தவர்களென்றும், இவ்வளவு அதர்மங்களுடன் உத்ஸவாதிகள் நடப்பதைக் காட்டிலும் பகவான் இப்படி அநுசிதமான உத்ஸவாதிகளைக் கண்டருளாம லிருப்பதே மிக்க ஶ்லாக்யமென்றும் நாம் நினைக்கிறோம்.

ஆனால், இது விஷயமாக ஒரு ஶங்கை ஜநிக்கலாம். ஶாஸ்த்ரங்களெல்லாவற்றையும் படித்து வ்யபதிஷ்டர்கள் என்னும் வ்யவஹாரத்தை வஹிக்கும் பெரியோர்களில் அநேகர், இப்பொழுது நம்மால் எடுத்து உரைக்கப்பட்டிருக்கும் அம்ஶங்கள் இரண்டையும் தோஷங்களாக பாவிக்கவில்லையே! கலா ப்ரயுக்தமாகவும் அது போன்ற மற்றைக்காரணங்களுக்காகவும் நாம் க்ரோதத்திற்கு உட்படுவது ஸாதுவென்றும், பகவானுடைய உத்ஸவ காலங்களில் தாஸீ ப்ரப்ருதிகளை ஆதரிப்பது ஶாஸ்த்ர ஸம்மதமென்றும் அவர்கள் நினைக்கிறார்களே! இப்படியிருக்க, அவைகளைத் தோஷங்களென்று நாம் எவ்விதமாகச் சொல்லத்துணிகிறோம்? என்று ஒருவர் கேட்கலாம். இது ஸரியான ஆக்ஷேபமாகாது. இது போன்ற காமக்ரோதாதி வ்யாபாரங்களைப் பெரியோர்கள் அநுமோதித்திருக்கிறார்கள் என்று சொல்வதே பிசகு. கணக்கற்ற ஆஸ்திக ஶிரோமணிகள் இந்த விஷயங்களைப்பற்றி மிகவும் ஶோகித்திருப்பதை நாம் அறிவோம். நமக்குத் தெரிந்த இரண்டொரு ஸமயங்களில், சிலர், இது விஷயமாகச் சீர்திருத்தங்களைச் செய்ய முயன்று, பக்ஷபாதிகளான மூர்க்கர்களின் முரட்டுத்தனத்தால்

வித ப்ரயத்நர்களாகத் திரும்பிவிட்டார்கள். இப்பொழுதும், அநேக பாபபீருக்கள் கலஹத்திற்கு ஆஸ்பதமான உத்ஸவங்களுக்குப் போகாமலிருப்பதையும், கேவலம் லௌகிக ஆடம்பரங்களுடன் நடைபெறும் உத்ஸவங்களைவிட ஏகாந்தமாகவும் ஸாத்விகமாகவும் நடத்தப்படும் உத்ஸவங்களையே விஶேஷித்து ஆதரிப்பதையும் எல்லாரும் பார்க்கலாம். ஆகையால், அபிஜ்ஞர்கள் காமக்ரோதாதிகளுக்கு இடமான இந்த வ்யாபாரங்களை ஒத்துக்கொண்டிருக்கிறார்களென்று சொல்வதே ஸரியன்று. அவைகளைக் கொண்டாடி ஸபாஜநம் செய்பவர்கள் எவ்விடத்திலாவது தென்பட்டால், அவர்கள் அளவற்ற ஶாஸ்த்ர படநம் செய்திருப்பவர்களாக இருந்தாலும் அவர்களைப் பகவத்கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாதவர்களென்றே சொல்லவேண்டிவரும்; அவர்கள் நல்வழி நடப்போருக்கு ஶத்ருகோஷ்டி ப்ரவிஷ்டராவரே தவிர ஒருகாலும் ஸுஹ்ருத்தாகமாட்டார்.

ஆனல், ஸாத்விகரான பெரியோர்கள் இந்த வ்யாபாரங்களை அப்யுபகமம் செய்யாமலிருந்தாலும், இது விஷயமாகத் தமக்கு இருக்கும் ஆக்ஷேபங்களை எடுத்துக்கூறி யதோசிதம் இதைக் கண்டிக்க ப்ரயத்நப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், நம்மவர்களுக்கு நைஸர்க்கிகமாக இருக்கும் ஔதாஸீந்யமே. இதுவிஷயத்தில் இவ்விதமாக ஔதாஸீந்யத்தை வஹிப்பது ந்யாய்யமன்று. "உபஹந்யாமிமா: ப்ரஜா:" என்று ஸ்ரீகண்ணபிரான் ப்ரஜைகளுக்கு நாஶத்தை விளைவிக்கும் ப்ரவ்ருத்தியைப்பற்றி நடுங்கினது போல, இவர்களும், ப்ரஜைகளின் நாஶத்திற்கு ஹேதுவாக இருக்கும் இந்த விஷயத்தைப்பற்றி நடுங்கி இதன் தோஷத்தை மற்றவர்களுக்கு நன்றாக எடுத்து உணர்த்தி, ஒருவரையும் இனி அந்த மார்க்கத்தில போகவொட்டாமல் தடுப்பதற்கு வேண்டிய உபாயங்களைத் தேட முயல்வதே இவர்களுக்குத் தர்மமாகும். இது விஷயமாக ஏற்கெனவே சென்ற விரோதிக்ருத் வருஷம் புரட்டாசி மாஸத்திய ஸஞ்சிகையில் நாம் முறையிட்டிருந்தோம். ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜமாகிற நமக்குள் த்வைவித்யம் ஸம்பவிப்பதும், நாம் பரஸ்பரம் சச்சரவு செய்துகொண்டு அது காரணமாக நம்மை ராஜஸேவகர்களுடைய ஶிக்ஷணத்திற்குப் பாத்ரமாக்கிக்கொள்வதும், ஶாஸ்த்ர நிஷித்தமான வ்ருத்தியில் வர்த்திக்கும் ஜநங்களைப் பாகவதர்களென்றும் அவர்களுடைய சேஷ்டிதங்களைப் பகவான் உகக்



கிறாரென்றும் நாம் கொண்டாடி அது காரணமாக மதாந்தரஸ்தர்களுடைய நிந்தைக்கு ஆஸ்பதமாகிறோமென்பதும் நமக்கு அளவற்ற ஶோகத்தை உண்டுபண்ணுகின்றன. யதார்த்தமாகவே இவ்விதமாக நாம் காமத்திற்கும் க்ரோதத்திற்கும் ஸ்வாதீநராகிவிட்டால், நாம் இருக்குமிடத்தில் எவ்விதமாகப் பகவத்ஸாந்நித்யம் ஏற்படும்? அந்த ஸாந்நித்யம் நம்மைவிட்டு விலகாதபடி நமக்கு ஸாத்விக புத்தியைக் கொடுத்து, நாம் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஶாஸ்த்ரீயமான மார்க்கத்தில் நடந்துகொண்டே தன்னை ஆராதிக்கும்படியாகப் பகவானே கடாக்ஷித்தருளவேணும்.

∴ ∴ ∴

**ஸ்வதேஶ பாஷைகள்.**

நமது தேஶத்திய பாஷைகளுக்கு ஒருவிதமான அநாதரவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது என்று சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் எழுதியிருந்தோம். நமது பாஷைகளை அப்யஸிப்பது எவ்வித மான நன்மைக்கும் ஹேதுவாகாது என்பதற்கு நமது பரிபந்திகளாற் சொல்லப்படும் காரணங்களெல்லாவற்றையும் பர்யாலோசித்து அந்தக் காரணங்களில் ஸாதுத்வமில்லையென்பதையும், அவர்கள் கேவலம் ஓர் ஆக்ரஹத்தால் மாத்திரம் இதுபோன்ற ஒரு பிடிவாதத்தைக் கைக்கொண்டு நிற்கிறார்களென்பதையும் நாம் எடுத்து விவரித்திருந்ததை எல்லாரும் படித்திருக்கலாம். அங்கு நம்மால் அநுவதிக்கப்பட்டிருந்த ஹேதுக்கள் நீங்கலாக, பாடஶாலைகளில் நமது பாஷா பாடங்களை நிர்பந்தமாகச்செய்யக்கூடாது என்பதற்குப் புதிதாக மற்றும் ஒருஹேது அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதாக இப்பொழுது நமக்குத் தெரியவருகிறது. இந்த ஹேதுவின் ஸதஸத்பாவத்தைக் கொஞ்சம் விசாரிப்போம்.

ஸ்வதேஶ பாஷைகளில் எழுதப்பட்டுள்ள காவ்ய நாடகாதிகளெல்லாம் ஹிந்து மத ஸம்பந்தப் பட்டவையென்றும், நமது பாடஶாலைகளில் படிக்கும் வித்யார்த்திகளில் பலர் ஹிந்து மதமல்லாமல் மற்றை மதங்களைத் தழுவினவர்களாக இருக்கிறபடியால் அவர்களை ஹிந்துமத ஸம்பந்தமான ஸ்வதேஶ காவ்யாதிகளைப் படிக்கும்படி நிர்பந்தப்படுத்துவது நிஷ்பக்ஷபாதிகளாக இருக்கவேண்டிய ராஜாங்கத்தாருக்கு ஒரு விதமான வைஷம்யத்தை ஆபாதநம் செய்யுமென்றும், அப்படி வைஷம்யம் நேர்ந்

தால் அது நமது தேசத்து ப்ரஜைகளில் அந்யதமர்களாகிய மஹம்மதிய கிறிஸ்தவர்களுக்கு அப்ரீதியை ஜநிப்பித்து ராஜாங்கத்திற்குத் தீங்கை விளைவிக்குமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வது, தாம் எடுத்த கோடியை ஸாதித்துக்கொள்ள வேணுமென்று ஓர் ஆக்ரஹம் கொண்டிருக்கும் வாதிகளுடைய மார்க்கமாகத் தோன்றுகிறதே தவிர, ந்யாய அபந்யாயங்களுடைய பரிசோதனையில் ஊக்கத்துடன் ப்ரவ்ருத்திக்கும் சித்த வ்ருத்தியைக் காண்பிக்கவில்லை. நமது பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும் க்ரந்தங்களில் பல நமது மத ஸம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றனவென்பது உண்மையே. அப்படிக்கிராமல் வேறுவிதமாக இருப்பதும் ஸாத்யமோ? இங்க்லீஷ் பாஷையில் மிகச் சிறந்தவைகளாக ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கும் 'பாரடைஸ் லாஸ்ட்' (Paradise Lost) முதலிய க்ரந்தங்கள் க்ரைஸ்தவ மத ஸம்பந்தமில்லாமலிருக்கின்றனவா? லாடின், க்ரீக் முதலிய பாஷைகளிலுள்ள க்ளாஸிக் (Classics) க்ரந்தங்கள் அந்தக் காலத்தில் அந்தத் தேசத்திய ஜநங்களால் அங்கீகரிக்கப்பட்ட மதக் கொள்கைகள் அடங்கியவைகளாக இல்லையோ? அவை போலவே ஹிந்துமதத்தை அவலம்பித்திருக்கும் கவிகளால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்கள் அந்த மத ஸம்பந்தத்தை யுடைத்தானவைகளாகவே இருக்கலாம். ஆனால், அதுபோன்ற க்ரந்தங்களைப் பாடமாகப் பாடசாலைகளில் வைப்பது பிசகு என்று சொல்வது ஸரியல்ல. இது பிசகானால், கணக்கற்ற ஹிந்துக்கள் வித்யார்த்திகளாக இருக்கும் பாடசாலைகளில் மில்டன் (Milton) முதலிய காவ்யங்களைப் பாடமாக வைப்பது ந்யாய்யமாகுமா? ராஜாங்கத்தாருடைய நிஷ்பக்ஷபாதமான தன்மைக்கு இது விருத்தமன்றானால் அதுவும் விருத்தமாகாது. மில்டன் முதலியவர்களுடைய க்ரந்தங்களை ஹிந்துக்களுக்குப் பாடமாக வைப்பதை அநுமோதிக்கு மிவர்கள் ஸ்வதேச பாஷா க்ரந்தங்களைப் பாடமாக வைக்கக்கூடாது என்று ஆக்ஷேபிப்பது இவர்களுடைய காம்பீர்யத்தைக் காண்பிக்கவில்லையே. ஒரு பாஷையில் ஜ்ஞாநம் ஸம்பாதித்துக்கொள்ளவும், அதன் குணதோஷங்களை விவேசநம் செய்யவும் ப்ரவ்ருத்திக்கும் வித்யார்த்தி இது போன்ற ஸங்கோசத்திற்கு ஆளாகக் கூடுமோ? அப்படி ஸங்கோசத்தை அடைந்தால் தேர்ச்சியென்பதே நிறைவேறாது.



இந்த ஆக்ஷேபத்தில் இவர்கள் மஹம்மதியர்களைப் பற்றியும் ப்ரஸ்தாவித்திருக்கிறார்கள். அந்த ப்ரஸ்தாவம் மிகவும் அஸம்பத்தமாக இருக்கின்றது. நமக்குத் தமிழ் முதலிய ஸ்வபாஷைகள் போல அவர்களுக்கும் ஹிந்துஸ்தாநி என்னும் ஒரு ஸ்வபாஷை உண்டு. அந்தப் பாஷையில் அவர்களுடைய மத ஸம்பந்தமுள்ள க்ரந்தங்கள் ஏராளமாக இருக்கிறபடியால் அவர்களுக்கு நாம் கேட்டுக்கொள்ளுகிறபடி செய்வதில் கொஞ்சமேனும் ஆக்ஷேபமிருக்காது.

இம்மாதிரியாக இவர்களாற் சொல்லப்படும் ஹேதுக்களின் அஸத்பாவத்தைப் பலவிடங்களில் பலர் அறிந்து, நமது பாஷைகளுக்கு ஹாநிவாராமல் ஸம்ரக்ஷிக்கும்படி ராஜாங்கத்தாரை ப்ரார்த்தித்து வருவதாக நாம் அறிகிறோம். அந்த ப்ரார்த்தநையை ராஜாங்கத்தார் நிறைவேற்றுவார்களென்றே நம்புகிறோம்.

∴ ∴ ∴

ஸ்ரீ அழகியசிங்கரும், ஶிஷ்யர்களும்.

சென்ற மாசி மாஸத்திய ஸஞ்சிகையில், ஸ்ரீ அழகிய சிங்கர் தமக்குப்பிறகு ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளுபவர் விஷயமாகச் சில ஏற்பாட்டைச் செய்திருக்கிறார் என்றும், அப்படி அந்தஸ்வாமி செய்திருப்பது க்ரம விரோதமென்றும் நாம் எழுதியிருந்தோம். இப்பொழுது பலவிடங்களிலிருக்கும் ஶிஷ்யர்களிற் சிலர் ஒன்றுசேர்ந்து இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசித்து இதற்கு ப்ரதிகாரத்தைக் கோர்ட்டில் வ்யாஜ்யம் செய்தே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று எண்ணி, இப்பொழுது ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் மன்னார்குடிக்கு ஸம்பந்தமான நாகபட்டணம் ஸப்கோர்ட்டில் நாளது ஏப்ரில்மீ 12-ம் வ சனிக்கிழமை பிரியாது கொடுத்துவிட்டதாகக் கேள்விப்படுகிறோம். திவான் பஹதூர் தட்டை டி. ரங்காசார்யர் முதலாக ஏழுபெயர்கள் வாதிகளாம். ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ காரக்குறிச்சி ஐயமாசார்யர், ஸ்ரீ திருக்குடந்தை சக்ரவர்த்யாசாரியர் ஆக இம்மூன்று பெயரும் ப்ரதிவாதிகளாம். 15-ம் வ கோர்ட்டார் பிரியாதை அங்கீகரித்துக்கொண்டு, அன்றைய திநமே ஸம்மன்ஸுடன் இன்டெரிம் இன்ஜங்ஷனுக்கும் (interim injunction) ஆர்டர் செய்திருக்கிறதாக ஸமாசாரம். இப்படி ஸம்பவிப்பதும் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸங்கல்பமே.

---

ஸ்ரீ:.

# விஸிஷ்டாத்வைதம.

## 10. ஸ்ரீ என்னும் தத்வம்.

"ஸ்ரியை ஸக்ஷுவிதவித்யா நவ்யஸநம் ஹம்ஸ: ।
ஸம்ஸ்காரஸித்திராமொஸ்கே: ஸாயுஜ்யமெஜை க்ருபெதாஸ்ஜய்ய: ॥"

விஸிஷ்டாத்வைதம் என்னும் மதத்தினுடைய கொள்கைகளையும் அதன் ப்ரக்ரியையையும் சொல்ல உபக்ரமித்து, முதலில் தத்வ த்ரய விபாகத்தைப்பற்றிப் பேசி, பிறகு ப்ரதம தத்வமாகிற ஈஸ்வர தத்வத்தைப்பற்றி இதுவரையில் ப்ரஸ்தாவித்து வந்தோம். இரண்டாவது தத்வமாகிற ஜீவனைப்பற்றிய விசாரத்தை நாம் ஆரம்பிக்கும் முன்னதாக, ஸ்ரீ என்றும் லக்ஷ்மீ என்றும் வ்யவஹரிக்கப்பட்டு நம்மால் தைவமாகக் கொண்டாடப்படும் தத்வத்தைப்பற்றி நமது மதம் சொல்வது என்ன வென்பதைச் சற்று ஆலோசிப்போம்.

இந்த ஸ்ரீயைப்பற்றி நமது மதம் சொல்லுகிறதாவது-எம்பெருமானைப்போல ஸ்ரீ என்பவள் ஓர் ஈஸ்வர தத்வம்; அவனைப்போல இவளும், ஜீவன் அசித் என்று சொல்லப்படும் தத்வங்களைக்காட்டிலும் அத்யந்தம் வேறுபட்டவள்; இவளுடைய ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவையெல்லாம் எம்பெருமானுடையவைபோலவே; இவளும் பகவானும், பத்நீ பதி என்கிற ஸம்பந்தத்துடன், ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸம்ரக்ஷணம் மோக்ஷம் இத்யாதியான வ்யாபாரங்களில் இரண்டு பெயரும் அந்வயமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; பகவானை நீக்கி ஸ்ரீயும், ஸ்ரீயைநீக்கிப் பகவானும் இல்லை; ஆதலால், அவர்க ளிருவருமே சேர்ந்து நமக்கு உத்தேஸ்யர்கள் என்பதுதான். அதாவது, நமக்கு தைவம் ஸ்ரீ விஸிஷ்டனான நாராயணனே என்று ஸித்திக்கும்.



இப்படிச் சொல்வதன் அர்த்தத்தைக் கொஞ்சம் பரிஸீலனம் செய்து பார்ப்போம். அநேக ஸ்ருதி வாக்யங்களாலும் இதிஹாஸ புராண வாக்யங்களாலும் ஸ்ரீ என்னும் ஒரு தத்வ முண்டு என்று தெரிகிறது. அந்தத் தத்வம் அசேதநங்களைச் சேர்ந்ததா? இல்லாவிட்டால் சேதநர்களாகிற ஜீவன்களில் ஒன்றா? அதுவு மில்லாவிட்டால் ஈஸ்வர கோடியைச் சேர்ந்ததா? என்று ஜனிக்கும் ஆகாங்க்ஷைகளில் பலர் பலவிதமாக அபிப்ராயப்பட் டிருக்கிறார்கள். பகவானுக்கு அதிஷ்டானமாக இருக்கும் ஜடமான ப்ரக்ருதியைத்தான் ஸ்ரீ என்று சொல்வார் சிலர். பகவானுடைய அஹந்தையென்றும் ஸக்தியென்றும் ப்ரபையென்றும் சொல்வார் மற்றும் சிலர். இவ்விதமாகச் சொல்வாரைவிட விலக்ஷணர்களாக, ஸ்ரீக்குச் சேதநத்வதை அங்கீகரித்து, பகவானைவிட ஸ்ரீ வேறுபட்டவளன்று பகவானே அவள் என்றும், ஸ்ரீதான் லோகநாதை தத்வ த்ரயத்திற்கும் ஈஸ்வரீ மற்று எவனும் லோகநாதனல்ல வென்றும், நாராயணனே லோகநாதன் ஸ்ரீக்கு லோகநாதத்வ மில்லை ஜீவத்வம் மாத்திரமுண்டு என்றும் சொல்வாரு முண்டு. நமது ஆசார்யர்கள் இந்த மதமொன்றையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்ரீ அசேதநமல்லள், ஜீவனுமல்லள், ஈஸ்வரகோடியைச் சேர்ந்தவளே; லோகநாதனாகிற நாராயணனைவிட வேறுபட்ட தத்வம்; பர வ்யூஹாதி பஞ்ச ப்ரகாரங்களான அவஸ்தைகளிலும், ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது முதலிய அவஸ்தைகளிலும், மற்றை ஸகல ஜகத்துக்கும் ஸேஷியாக நிற்கும் அவஸ்தையிலும் இவர்களிருவரும் பதி பத்நீ ஸம்பந்தத்தைக் கொண்டு "அகலகில்லே னிறையும்" என்கிறபடி ஒருபொழுதும் விஸ்லேஷமின்றிக்கே இருவரும் கூடவே அந்வயிகளாகிறார்கள்; ஷாட்குண்யம் அதற்குள் அடங்கியிருக்கும் மற்றைக் கல்யாண குணங்களெல்லாம் இரண்டு பெயருக்கும் ஸமம்; ஆனால், இரண்டு பெயரும் ஸ்வேச்சையால் குணங்களையும் விபூதிகளையும் வ்யாபாரங்களையும் கூறாக விபஜித்துக்கொண்டு ஈஸ்வரத்வத்திற்கு ஹாநியின்றிக்கே இருக்கிறார்கள்; இப்படி ஸர்வகாலத்திலும் ஸர்வதேஸத்திலும் ஸம்ஸ்லிஷ்டர்களாக இருக்கும் ஸரண்ய தம்பதிகளே நமக்கு உத்தேஸ்யர் என்பதுதான் நமது ஆசார்யர்களுடைய திருவுள்ளம்.

இது விஷயமாகச் சில ஸம்ஸயங்கள் ஜனிக்கலாம். முதலில், கீழ்ச் சொல்லியிருப்பதுபோல எம்பெருமான் பிராட்டி என்னும்

இரண்டு பெயருக்கும் ஸாம்யத்தை ஒத்துக்கொண்டால், ஈச்வர த்வித்வம் ஸம்பவிக்குமே; ப்ரஹ்மமொன்றேயென்றும், அது நிஸ்ஸமாப்யதிகமென்றும் சொல்லும் வாக்யங்களுக் கெல்லாம் இது விருத்திக்காதோ? என்று தோன்றும். அப்படிப்பட்ட விரோதத்திற்கு ஹேதுவில்லையென்றே நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். ஏனென்றால், ஜகத் காரணமாகிற ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் வாக்யங்களெல்லாம் ஸ்ரீ விசிஷ்டனான நாராயணனையே சொல்லுகின்றன; இப்படி ஈச்வரனைச் சொல்லும் ஸகல வாக்யங்களும் ஸ்ரீக்கும் உபலக்ஷணங்களாகிறபடியால், ஒன்றென்றும் நிஸ்ஸமாப்யதிகமென்றும் சொல்லுமிடமெல்லாம் ஜீவன்களும் அசேதநங்களும் விலக்கப் படுகின்றனவே தவிர, ஸ்ரீக்கு வ்யாவ்ருத்தி ஏற்படாது என்பது ஸித்தம். ப்ரஹ்ம ப்ரதிபாதக வாக்யங்கள் ஸ்ரீ விசிஷ்டனான நாராயணனையே குறிக்கின்றனவென்பதற்கு ப்ரமாண மென்னவென்று கேட்டால், அதற்குப் பின்வருமாறு ஸமாதாநமுண்டு. ஜகத்துக்குக் காரணமான வஸ்துவைப்பற்றிப் பேசும் காரண வாக்யங்களாகிற "ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்", "ப்ரஹ்ம வா இதமேக ஏவாக்ர ஆஸீத்", "ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே", "ஶிவ ஏவ கேவல:", "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" [முதலில் ஆத்மா என்னும் பொருளிருந்தது, ப்ரஹ்மமிருந்தது, ஹிரண்யகர்ப்பனென்னும் ப்ரஹ்மா இருந்தான், கேவலம் சிவனே இருந்தான், நாராயணன் ஒருவனே இருந்தான்] என்கிற இந்த வாக்யங்களெல்லாவற்றாலும் ச்ருதி, ஜகத் காரணத்தைக் காண்பிக்க உபக்ரமித்து, இப்படி நாநாவிதமான சப்தங்களைச் சொல்லியிருக்கிறபடியால், ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதிகளுக்குள் ஜகத் காரணம் இன்னுமொன்று நிர்த்தாரணம் செய்ய லிங்கமொன்றுமில்லாததைப் பார்த்து, "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" [ஹே பகவான், ஹ்ரீ என்னும் பூதேவியும், லக்ஷ்மியும் உம்முடைய பத்நிகள்] என்கிற வாக்யத்தால் லக்ஷ்மீபதித்வமே நிச்சாயகமான லிங்கம் என்பதை விவரிக்கிறது என்பதுதான். ஆகையால், ஸ்ரிய:பதியாகிற நாராயணனே ப்ரஹ்ம ப்ரதிபாதகங்களான வாக்யங்களால் குறிக்கப்படுகிறான் என்பதில் ஸந்தேஹமில்லை. இந்த அர்த்தத்தை,



"ஈசாநம் ஜகத இதி யம் பௌருஷே ஸூக்த உக்த:
ஸூக்தம் வக்தி [illegible] உத்தரஸ்தோநுவாக:।"

[புருஷ ஸூக்தத்தில் யாரொருவன் ஜகத்திற்கெல்லாம் ஈச்வரனென்று சொல்லப்படுகிறானோ, அவன், ஹேலக்ஷ்மி! உம்முடைய பதியே என்று உத்தராநுவாகமாகிற ஸ்ரீஸூக்தம் விளக்குகின்றது] என்கிற வாக்யத்தாலும்,

"வேதாந்தாஸ் தத்த்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ்தரந்தி"

[வேதாந்த வாக்யங்கள், பரமான தத்வம் இன்னது என்று கண்டுபிடிக்க ப்ரவ்ருத்தித்து, ஸ்ரிய:பதியாகிற நாராயணனுடைய மார்பில் ஸ்ரீயினுடைய திருவடிச் சுவடுகளிருப்பதைப் பார்த்து 'இவர்தான் பரதத்வம்' என்று நிச்சயம் செய்தன] என்கிற வாக்யத்தாலும் ஸ்ரீபட்டரும்,

"[illegible] தேஜ: ஸ்புரதி பவதீபாதலாக்ஷாரஸாங்கம்"

[அகண்டமாயும் வாங்மநஸ்ஸுக்கு எட்டாமலுமிருக்கும் ப்ரஸித்தமான அந்தப் பரம் ஜ்யோதிஸ், ஹேலக்ஷ்மி! உம்முடைய பாதாரவிந்தத்தின் அலக்தகத்தால் சிஹ்நிதமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது] என்கிற வாக்யத்தால் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும் நன்றாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்படி ச்ருதி முதலியவைகள் இருவருமே சேஷிகள் என்று சொல்வதுடன், இருவரும் பரஸ்பரம் விச்லேஷமின்றிக்கே ஸ்வரூபத்திலும் ரூபத்திலும் ஸம்ச்லிஷ்டமாக இருக்கிறார்களென்றும் சொல்வதால், இப்பொழுது விவரித்திருக்கிறபடி ஸ்ரீக்குப் பதியாக இருக்கும் புருஷோத்தமன் ஸ்ரீயுடன் விசிஷ்டனாகவே ப்ரஹ்மகார்யமான ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளில் அந்வயிக்கிறானென்று விளங்குகின்றது. "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" என்கிற வாக்யத்தில் விஷ்ணுவுக்கும் பிராட்டிக்கும் சொல்லப்படும் பதி பத்நீ ஸம்பந்தம், லோகத்தில் தம்பதிகளுக்குள் யாகாதி க்ருத்யங்களைக்குறித்து அந்யதர லோபம் கூடாதது போல, ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களிலும் இவர்களுக்குள் வைசிஷ்ட்யம் அவச்யம் என்பதை ஸூசிப்பிக்கிறது.

"யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம ।
ததா ஹ்யர்த்தோ ததா வாணீ நியந்தா ச ததைவ ஸா ।
யதா ஹ்யேகோ ததா ஸாऽபி ததா ஹ்யேகோऽபி ஸர்வக: ॥"

என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வாக்யம் பரஸ்பரம் இந்தத் தம்பதிகளுக்குள் பூர்ண வ்யாப்தியைச் சொல்லுகிறபடியால் இவர்கள் விஶ்லேஷமின்றிக்கே கடிதர்களாக இருக்கிறார்களென்பதற்கு இதுவே ப்ரமாணம். "விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ" என்கிற வாக்யமும் இவர்களுடைய அவிநாபூதத்வத்தைச் சொல்லுகிறபடியால் ஸ்ரீ விஶிஷ்டனே ப்ரஹ்மமென்பதற்கு ஆக்ஷேபமில்லை; ஈஶ்வரத்வித்வப்ரஸங்கத்திற்கும் ஹேதுவில்லை.

இரண்டாவது, இப்படி இருவரும் ஈஶ்வரர்களானால், குண விபூதி முதலியவை இருவருக்கும் ஸாதாரணங்களோ? இல்லாவிட்டால் அவைகளுள் இவர்களுக்கு ஏதாவது விபாகமுண்டோ? அவ்விதமாகக் குணவிபாகமேற்பட்டு ஒவ்வொருவருக்கும் சிற்சில குணங்கள்தான் உண்டு என்கிற ஒரு நியமமிருந்தால், ஸர்வகார்ய ஹேதுத்வமென்பது நீங்குமாதலால் ஈஶ்வரத்வம் ஓடிவிடாதோ? என்று கேட்கலாம். இவர்களுக்குள் குணாதி விபாகமொன்று உண்டு; ஆனால் அது ஈஶ்வரத்வத்தின் ஹாநிக்கு ஹேதுவாகாது. ஈஶ்வரத்வமென்பது ஸர்வகார்யங்களையும் ஸாதிக்கும் திறமையை உடைத்தாயிருக்கும் தன்மையேதவிர, எப்பொழுதும் ஸர்வ கார்யங்களையும் ஸாதித்துக்கொண்டே இருக்கவேணுமென்கிற நியமத்தை அவலம்பித்ததன்று. இவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் குணம் முதலியவற்றின் விபாகங்கள், ப்ராப்தியாதல் ஶக்தியாதல் இல்லாமையாலில்லை; தமது இச்சா மாத்ரத்தாலே உண்டானவை. இவர்கள் திவ்ய தம்பதிகளாதலால் விருத்தேச்சை என்பது ஒருபொழுதும் இவர்களுக்கு ஸம்பவியாது. ஸர்வகார்ய ஸமர்த்தத்வம் இரண்டு பெயரிடத்திலுமிருக்கிறபடியால் ஈஶ்வரத்வத்திற்கு ஹாநியில்லை.

இந்தக் குணாதி விபாகம் எப்படிப்பட்டது? என்பதைக் கொஞ்சம் விசாரிப்போம். "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" [விஷ்ணுபத்நியாக இருக்கும் லக்ஷ்மி, இந்த ஜகத்திற்கு ஈஶ்வரீ] என்று லக்ஷ்மிக்கு ஈஶாநத்வமும், "ஈஶாநம் பூதபவ்யஸ்ய" [பூதபவிஷ்யத் வர்த்தமாநமாக இருக்கும் ப்ரபஞ்சம் எல்லாவற்றிற்கும் பகவாந் ஈஶ்வரன்] என்று பகவானுக்கு ஈஶாநத்வமும், இப்படி இரண்டு பெயருக்கும் ஸமப்ராதாந்யம் கொடுத்து ஶ்ருதி படித்திருக்கையிலும், 'விஷ்ணுபத்நீ' என்கிற பதத்தால் லக்ஷ்மீ விஷ்ணுவுக்கு ஶேஷபூதை என்பது ஏற்படுகிறபடியால், இந்த விஶிஷ்டதத்வத்தில் லக்ஷ்மிக்கு நியமேந ஒரு விஶேஷணத்வத்தையும் பகவானுக்கு விஶேஷ்யத்வத்தையும் நாம் கண்டுகொள்ளுகிறோம். இந்த வாக்யத்தின் பலத்தினாலே பகவானுக்குப் பும்ஸ்த்வ ப்ரயுக்தமான தண்டதரத்வம் முதலிய குணங்களையும், பிராட்டிக்கு ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமான புருஷகாரத்வாதிகளையும் ஆசார்யர்கள் அநுமித்து, இதுபோன்ற ஒரு குண விபாகம் உண்டாகியிருக்கிறதாக விவரித்திருக்கிறார்கள். மேலும், ஸ்ரீ விஷ்ணு புராணத்தில்,



"தேவ திர்யங் மநுஷ்யேஷு பும்நாமா பகவாந் ஹரி: ।
ஸ்த்ரீநாம்நீ ஸ்ரீஶ்ச விஜ்ஞேயா நாநயோர் வித்யதே பரம் ॥"

[ஸகல ஜந்துக்களிலும் பும்ஸ்த்வமிருக்குமிடமெல்லாம் பகவாந் இருக்கிறார்; ஸ்த்ரீத்வமிருக்குமிடமெல்லாம் லக்ஷ்மீ இருக்கிறாள்] என்கிற வாக்யத்தால் விபூதியிலும் குணங்களிற் போலவே ஓர் ஐச்சிக விபாகமிருப்பதாகத் தெரிகிறது. இந்த விபாகத்தை ஸ்ரீ பட்டர் ஸ்ரீகுண ரத்ந கோஶத்தில் பரக்கத் தெரிவித்திருக்கிறார். முதலில் ஒரு ஶ்லோகத்தால் ஷாட்குண்யம் முதலிய ஸகல கல்யாண குணங்களும் இரண்டிடத்திலும் ஸமமென்று சொல்லிவிட்டு, பிறகு ஒரு ஶ்லோகத்தால் ஸ்வேச்சையினாலே ஏற்பட்டிருக்கும் விபாகத்தைப்பற்றிப் பேசுகிறார்.

"ப்ரஶக்த நவ ஜ்யோதி ஜ்ஞாநைஶ்வர்ய ஜயப்ரதா
ப்ரணத வரண ப்ரேமக்ஷேமங்கர ஸ்வ பராஸ்ரயா: ।
அபி பரிமள: காந்திர் லாவண்யமர்சிரிதீந்திரே
தவ பகவதஸ்ஸந்தி ஸாதாரணா மணாஶயம் ॥"

[ஹே லக்ஷ்மி! ஜ்ஞாநம் பலம் முதலிய ஆறு குணங்களும், பஶு புத்ராதி ஸம்ருத்தி ரூபமான மஹிமை ஸ்வர்க்க கைவல்ய அபவர்

க்கம் முதலிய மஹிமை இவை யெல்லாவற்றையும் ப்ரார்த்திப்பவருக்கு அவற்றைப் பூர்ணமாகக் கொடுக்கும் தன்மையும், காந்தி முதலிய ஸகலவிதமான ரூபகுணங்களும், இன்னும் இவை போன்ற மற்றைக் குணங்களும், பகவானுக்கும் உமக்கும் ஸாதாரணங்களே.]

"யதைவ தவ ஸௌஶீல்ய ஸௌலப்⁴யாத்³யா கு³ணா: ஸ்ம்ருதா:
ஸ்வாமிநஸ்தாத்³ருஶா ஏவ ஸமஸ்தா ஜநதாஹிதா: ।
த்வயி ஸ்த்ரீத்வோசிதா ந்ருஷ்டிர்வ்ருத்தி: பாரார்த்²யலக்ஷணா
ஸ்வாதந்த்ர்யோ பும்ஸ்த்வயோக்³யாஸ்து பத்யுரீஶா ॥"

[ஹேலக்ஷ்மி! கீழ்க் கூறியபடி ஸௌலப்யம் முதலிய குணங்கள் உங்களிருவருக்கும் துல்யமாக இருக்கையிலும், பும்ஸ்த்வத்திற்கு அநுகுணமான ஸ்வாதந்த்ர்யம் முதலிய குணங்கள் உம்முடைய பர்த்தாவுக்கும், ஸ்த்ரீத்வத்திற்கு அஸாதாரணமாக இருக்கும் மார்த்தவம் முதலிய குணங்கள் உமக்கும் என்கிற ஒரு விபாகத்தை இரண்டு பெயருமாக ஒத்துச் செய்துகொண்டிருக்கிறபடியால், உங்கள் இருவருக்கும் ஸ்வரூபத்தில் பேதமொன்று உண்டு.]

ஆனால், இவ்விதமாக லக்ஷ்மிக்குப் பாரதந்த்ர்யமுண்டு என்று அங்கீகரித்தால், பாரதந்த்ர்யம் ஈஶ்வர தத்வத்தினுடைய ஸ்வபாவமல்லாமல் ஈஶிதவ்ய தத்வங்களுடைய ஸ்வபாவமாதலால் லக்ஷ்மியினிடத்தில் ஈஶிதவ்யத்வம் ப்ரஸங்கிக்குமே! அது ஸாதுவாகுமா? என்கிற ஶங்கையொன்று உண்டாகலாம். அந்த ஶங்கை ஸரியன்று. லக்ஷ்மிக்கு நாம் அங்கீகரிக்கும் பாரதந்த்ர்யம் ஸ்வேச்சா ப்ரயுக்தமே தவிர ஸ்வத: ப்ராப்தமல்லவாதலால் லக்ஷ்மியின் ஈஶ்வரத்வத்திற்கு யாதொரு குறைவும் உண்டாகாது. ஈஶிதவ்யங்களாகிற ஜீவாதிகளுக்கு இருக்கும் ஶேஷத்வ பாரதந்த்ர்யங்கள் ஸ்வத: ப்ராப்தங்களென்றன்றோ சொல்லப்பட்டிருக்கின்றன? "க்ஷேத்ரஜ்ஞஸ்ய விஷ்ணோ: ஸ்வம் ஶேஷம் வ்யாப்தஸ்த்ரீஶஸ்ய ... ஸாஸஹாயாத்ந வ்யாப்யா ஸ்வயமபி ஜநநீ ஶ்ரீ ஶ்ரீ: ஶேஷிணோ வ்யாப்யா ச ஸர்வஸ்ய ஶேஷீ" [சித் அசித் அடங்கிய ப்ரபஞ்சமானது லக்ஷ்மிக்கு வ்யாப்யம். அந்த லக்ஷ்மீ தன்னுடைய பதியாகிற ஈஶ்வரனுக்கு வ்யாப்யை. அப்படி இருந்தாலும் ஶ்ரீ ஶ்ரிய:



பதி இரண்டு பெயருக்குமே அநந்ய ஸாதாரணமான ஈஶித்ருத்வமுண்டு; அவர்களிருவருமே ஸகலமான ப்ரபஞ்சத்திற்கும் ஶேஷியாகிறார்கள்.] என்கிற அஹிர்புத்ந்ய வசநம் ஶ்ரீ நிஷ்டமான ஜகதீஶ்வரத்வத்தை விளக்கும்.

இவ்விதமாக லக்ஷ்மீ என்னும் தத்வத்திற்கு ஸ்வரூபாதிகளை ஒத்துக்கொள்வதில் நமது ஆசார்யர்கள் ப்ரமாண ஶரணர்களாகவே புகுந்திருக்கிறார்கள். "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்கிற புருஷஸூக்த வாக்யமும், "ஈஶாநாம் ஸர்வபூ⁴தாநாம்", "அஸ்யேஶாநா ஜக³தோ விஷ்ணுபத்நீ", "ஶ்ரியம் லோகே தே³வஜுஷ்டாமுதா³ராம்", "ஶ்ரியம் வஸாநா அம்ருதத்வமாயந்" இத்யாதியான ஶ்ரீ ஸூக்த வாக்யங்களும், கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் "நித்யைவைஷா ஜக³ந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ" முதலிய ஶ்ரீ விஷ்ணுபுராண வாக்யங்களும், "லக்ஷ்மீ தந்த்ராதி³ஷு" முதலிய பகவச் சாஸ்த்ர வசநங்களும், இன்னும் இவை போன்ற பரஶ்ஶத வாக்யாந்தரங்களும் நமது ஆசார்யர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் மதத்திற்கு ப்ரமாணங்கள்.

ஆனால், ஶ்ரீக்கு ஸ்வரூபாந்தரங்களைச் சொல்லும் அநேக வாக்யங்களிருக்கின்றனவே!

"த்வம் யாத்³ருஶோऽஸி கமலாऽபி தாத்³ருஶீ தே
தா³ராந்வத³ந்தி யதயோ நநு தே மஹிம்ந: ।
சா²யா விஸ்ருஷ்டப⁴வதீ ச ந சைகதைவ
ஸாரம் ஶ்ரிதம் ச விதிதம் ச யதா²நுரோஹ: ॥"

[ஹேபகவந்! நீர் எவ்விதமான ஸ்வரூப ரூபாதிகளை யுடையவரோ, அவ்விதமான ஸ்வரூப ரூபாதிகளை யுடையவளாகவே உம்முடைய பத்நியாகிற லக்ஷ்மியையும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் உங்களுக்குள் பேதகந்தமே இல்லை. நீர்தான் மாயையால் ரூபத்தை விபாகித்துக்கொண்டு ஜகத்திற்குப் பிதாவாகவும் மாதாவாகவு மிருக்கிறீர்] இத்யாதியான பல வாக்யாந்தரங்கள் 'லக்ஷ்மியும் பகவானும் அநந்யர்கள்' என்பது முதலிய

பக்ஷாந்தரங்களைச் சொல்லுகிறபடியால், நமது ஆசார்யர்களாற் சொல்லப்பட்டிருக்கும் பேதத்தையும் ஈஶ்வரத்தன்மையையும் நாம் எவ்விதமாக ஒத்துக்கொள்ளக்கூடும்? என்று ஒரு ஸம்ஶயம் ஜநிக்கலாம். இவற்றிற் சொல்லப்பட் டிருக்குமவையெல்லாம் வேறு விதமாக உபபந்நமாகிவிடு மாதலால், ஶ்ருதிகள் முதலிய ப்ரமா ணங்களுக்கு விருத்தமாக இவர்களுக்கு ஸ்வரூபைக்யம் முதலிய வற்றை இந்த வாக்யங்கள் சொல்லுகின்றனவென்று நாம் அங்கீ கரிப்பது ஸாதுவாகாது என்பது ஆசார்யர்களுடைய நிர்வாஹம்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்றவராய் நமது ஆசார்ய ஸந் ததிகூடஸ்தராக இருக்கும் ஆழ்வாரே, 'அவஹிதராய்ச் சிரகாலம் ஸத்ஸம்ப்ரதாயத்தோடே பஹு ஶாஸ்த்ர ஶ்ரவண மநநங்களைப் பண்ணினார்க்கல்லது ஈஶ்வரதத்வம் நிஷ்கர்ஷிக்க முடியாது' என்று "இறைநிலை யுணர்வரிது" என்கிற வாக்யத்தால் அருளிச்செய் திருக்க, நாம் நமது ஸங்குசித ஜ்ஞாநத்தின் பலத்தை அவலம் பித்து, ஈஶ்வர தத்வத்தை இப்படிப்பட்டதுதான் என்று ஸுலப மாக நிஷ்கர்ஷிக்க ப்ரயத்நப்படுவது ஒரு பெரிய ஸாஹஸமே யாகும். ஆகையால், ஏற்கெனவே மற்றொரு ப்ரகரணத்தில் நாம் சொல்லியிருப்பதை இப்பொழுது திரும்பவும் சொல்லுகிறோம், ஆசார்யர்கள் காண்பித்திருக்கும் மார்க்கமே நமக்குக் கதி.

"கல்யாணாநாமவிகலநிதி: காऽபி காருண்யஸீமா
நித்யாமோதா நிகமவசஸாம் மௌலிமந்தாரமாலா ।
ஸம்பத்திவ்யா மதுவிஜயிந: ஸந்நிதத்தாம் ஸதா மே
ஸைஷா தேவீ ஸகலபுவந ப்ரார்த்தநாகாமதேநு:॥"

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே யஜ்ஞவராஹபரப்ரஹ்மணே நம:.

# ஶ்ரௌதகர்மங்கள்.

வதாம்ஹி ருக்ஷு வதாம்ஹி ருக்ஷு ஆஹ்யம் யஜுர்பிரேவ ச ।
ஹூயதே ச புநஸ்தாப்யாம் ஸ தேந விஷ்ணு:
ப்ரஸீததி ॥

இப்பொழுது க்ருஹ்யஸூத்ராதி வேதத்ரயங்களிலும் விஶேஷ மாய்ப் பிரதிபாதிக்கப்படுகிற பரம பாவநங்களான யாகங்களின் ஸ்வரூபங்களைப் பற்றியும், அவைகளின் ஆவஶ்யகதையைப் பற்றியும் சிறிது ஸங்க்ரஹமாக நிரூபிப்போம்.

"வைதிகை: கர்மபி: புண்யைர் நிஷேகாத்யைர் த்விஜந்மநாம் । கார்ய: ஶரீரஸம்ஸ்கார: பாவந: ப்ரேத்ய சேஹ ச ॥"

"சித்ரகர்ம யதாநேகை ரங்கை ருந்மீல்யதே ஶநை: । ப்ராஹ்மண்யமபி தத்வத் ஸ்யாத் ஸம்ஸ்காரைர் விதிபூர்வகை: ॥"

இதுபோன்ற மநு யாஜ்ஞ்ய வல்க்யாதி வசநங்களால், அநேக வர்ண விந்யாஸத்தால் சித்ரகர்மாவானது பூர்த்தியை அடைவது போல ப்ராஹ்மண்யமும் ஸம்ஸ்காரங்களென்று சொல்லப்படும் ஶ்ரௌத ஸ்மார்த்த கர்ம விஶேஷங்களாலேயே பூர்ணமாகிற தென்று வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. இப்படி ப்ராஹ்மண்ய பூர்த்திக்கு ஹேதுவான ஸம்ஸ்காரங்களனைத்தும் கௌதம மஹர்ஷியால் விஸ்தாரமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. அவையாவன:—

‘‘ கர்பாதாந ஸீமந்தோந்நயந பும்ஸவந அந்நப்ராஶந ஜாதகர்ம நாமகரண சௌளோபநயந சத்வாரி வேதவ்ரதாநி ஸ்நாநம் ஸஹதர்மசாரிணீஸம்யோக:, பஞ்சாநாம் யஜ்ஞாநாமநுஷ்டாநம், அஷ்டகா பார்வண ஶ்ராத்தம், ஶ்ராவண்யாக்ரஹாயணீ சைத்ர்யாஶ்வயுஜீதி ஸப்த பாகயஜ்ஞா:, அக்ந்யாதேயம், அக்நிஹோத்ரம், தர்ஶபூர்ணமாஸாவாக்ரயணம் சாதுர்மாஸ்யாநி நிரூடபஶுபந்த: ஸௌத்ராமணீதி ஸப்த ஹவிர்யஜ்ஞா:, அக்நிஷ்டோமோऽத்யக்நிஷ்டோம உக்த்ய: ஷோடஶீ வாஜபேயோऽதிராத்ரோऽப்தோர்யாம இதி ஸப்த ஸோமஸம்ஸ்தா: இத்யேதே சத்வாரிம்ஶத்ஸம்ஸ்காரா: ’’ இதி ॥ இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களாலும் யதாகாலம் ஸம்ஸ்கரிக்கப்பட்டவனே ஸம்பூர்ண ப்ராஹ்மண்ய முள்ளவனென்று சொன்னதாயிற்று. கீழ்ச்சொல்லிய ஸம்ஸ்காரங்களில் கர்பாதாநம் முதல் பாகயஜ்ஞம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்களுக்கு ப்ரத்யக்ஷ ஶ்ருதியில் விதி கிடைக்காதாயினும், மந்வாதி மஹர்ஷிகளுடைய வசநத்தாலும் ஆசாரத்தாலும் இவைகளுக்கு அநுமித ஶ்ருதி மூலத்வம் ஒத்துக்கொள்ள வேண்டியது. இவ்வர்த்தத்தையே ‘‘ஸர்வ ஸூத்ராண்யாசாராஹ்யாநி ப்ரஹ்மணே’’ என்கிற ஸூத்ரத்தால் ஆபஸ்தம்ப மஹர்ஷி விளக்கிக் காட்டினர். இப்படி ஔபாஸந வைஶ்வதேவ ஹோம யஜ்ஞாதிகளுக்கு ப்ரத்யக்ஷ ஶ்ருதியில் விதி யில்லாமல் ஸ்ம்ருதிகளிலேயே விதி கிடைப்பதால் அவைகளை ஸ்மார்த்த கர்மாக்களென்று சொல்வது வழக்கமாயிற்று. இந்த ஸ்மார்த்த கர்மங்கள் இப்போது உத்ஸவைகப் பிரதாநமாகவே யாவராலும் அநுஷ்டிக்கப்பட்டுவருவதால் அவைகளைப்பற்றி ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

மேற்படி ஸம்ஸ்காரங்களில் இரண்டாவது பாகத்திற் சொல்லப்பட்டிருக்கிற அக்நிஹோத்ரம் முதல் அப்தோர்யாமம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்களுக்கு இப்போது ஸம்ப்ரதாய வைதிக



162022

யங்களிலும் விதிகள் ஸ்பஷ்டமாகக் கிடைக்கிறபடியால் அவைகளுக்குப் பிரமாணாந்தராபேக்ஷை யில்லாததோடு மற்றை கர்மங்களைவிட இவைகளே ப்ரபலங்களென்றும் முக்கியமாய் அநுஷ்டிக்க வேண்டியவைகளென்றும் ஸ்பஷ்டமாகிறது. இப்படி இந்தக் கர்மங்கள் பிரத்யக்ஷ ஶ்ருதிகளாலேயே விதிக்கப்படுகிறபடியால் இவைகளை ஶ்ரௌத கர்மங்களென்று வ்யவஹரிப்பதுண்டு. இந்தக் கர்மங்கள் ப்ரதாநமாக மூன்று வேதங்களாலும் விதிக்கப்படுகின்றன. அதில் ‘அத்வர்யு’ என்பவனுக்கு வேண்டிய மந்திரங்களையும் பிரயோகங்களையும் யஜுர்வேதமொன்றே போதிக்கிறது. இக்காரணத்தைக் கொண்டுதான் யஜுர்வேதத்திற்கு ‘‘அத்வர்யுஶாகை’’ என்று நாமதேயம் வழங்கிவருகிறது. அப்படியே ‘ஹோதா’ என்பவன் செய்யவேண்டிய விதிகளை ருக்வேதமும், ‘‘உத்காதா’’ என்பவன் செய்யவேண்டிய விதிகளை ஸாமவேதமும் போதிக்கிறபடியால் அவைகளுக்கும் கிரமமாக ஹோத்ரஶாகை என்றும் உத்காத்ரஶாகை என்றும் வ்யவஹார முண்டு. இந்த மாதிரி அந்தந்த ஶாகையில் சொல்லப்பட்ட விஷயங்களை அநுஷ்டாநோபயோகிகளாகச் செய்ய விரும்பி ஆபஸ்தம்ப போதாயந ஆஶ்வலாயந பாரத்வாஜ காத்யாயந த்ராஹ்யாயணாதி மஹர்ஷிகள் ஸுவிஸ்தரமான கல்பஸூத்ரங்களைச் செய்திருக்கிறார்கள்.

இப்படி வேதத்ரயத்தாலும் கல்பஸூத்ரங்களாலும் ஆஶ்ரம தர்மங்களென்று, விதிக்கப்பட்ட அக்நிஹோத்ர தர்ஶபூர்ணமாஸ பஶுபந்த ஸோமயாகாதிகள் நித்யங்களாயும் அகரணே ப்ரத்யவாயாவஹங்களாயு மிருப்பதைக் கொண்டு தீதீக்ஷவாலும் மற்றை வைதிகர்களாலும் யாவஜ்ஜீவம் அநுஷ்டிக்க வேண்டியவைகளாகின்றன. ததாஹி தைத்திரீயே - ‘‘ஜாயமாநோ வை ப்ராஹ்மண ஸ்த்ரிபி: ருணவா ஜாயதே ப்ரஹ்மசர்யேண ருஷிப்யோ யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய: ஏஷ

RGS ... N...

வா அந்ருணோ ய: புத்ரீ யஜ்வா ப்ரஹ்மசாரிவாஸீ" என்று சொல்லப்படுகிறது. அதாவது பிராஹ்மணனுக்கு ஜாதமாத்திரத்தில் ரிஷிருணம், தேவருணம், பித்ருருணமென்கிற மூன்று ருணங்கள் உண்டாகின்றனவென்றும், அவைகள் கிரமமாக வேதாத்யயன, பிரஜோத்பாதன, யாகாநுஷ்டானாதிகளால் போக்கடிக்கக் கூடியவைகளென்றும், இந்த மூன்றும் செய்தவனே ருணதோஷமில்லாதவனென்றும் மேற்படி ஶ்ருதியிற் சொல்லப்படுகிறது. ஶ்ருதியில் யஜ்ஞஶப்தத்தால் பாகயஜ்ஞ ஹவிர்யஜ்ஞ ஸோமயஜ்ஞாதிகளான 21 யஜ்ஞங்களுக்கும் கிரஹணமுண்டு. ஏவஞ்ச, இந்த ஏகவிம்ஶதி யஜ்ஞங்களும் தேவருணத்தைப் போக்கடிக்கவேண்டிய நிமித்தம் ப்ராஹ்மணனால் அநுஷ்டிக்கப்படவேண்டியவைகளென்பது ஶ்ருதியின் ப்ரம தாத்பர்யம்.

இவ்வர்த்தத்தை வைத்துக்கொண்டுதான் வஸிஷ்ட மஹர்ஷியும் "அவஶ்யம் ப்ராஹ்மணோऽக்நீநாதததீத தர்ஶபூர்ணமாஸாக்ரயணசாதுர்மாஸ்யபஶுஸோமைஶ்ச யஜேத", "நையமிகம் ஹ்யேதத்ருணஸம்ஸ்துதம்" என்கிற ஸூத்ரத்தால் அக்நிஹோத்ராதி யஜ்ஞங்களை ருணாபநோதநரூபமாக அநுஷ்டிக்க வேண்டுமென்று நியமனம் செய்தார். மநு யாஜ்ஞவல்க்யாதி ஸ்மர்த்தாக்களும் இம்மாதிரி ருணங்களை யதாகாலம் யஜ்ஞாத்யநுஷ்டானத்தால் பரிஹரித்துக் கொள்ளாமல்போனால் உபபாதக தோஷமுண்டென்று, "ஶாவயோ வ்ராத்யதாஸ்தேநர்ணாநாமநபக்ரியா" "அநாஹிதாக்நிதாஸ்தேயம் ருணாநாமநபக்ரியா" இத்யாதிகளில் பிரபஞ்சித்தார்கள். இங்கு விஜ்ஞாநேஶ்வரர் "ப்ராப்தகாலஸ்ய ஸமவர்த்திதோஷாபநோதநம் ருணாநபா கரணம், ததா தேவர்ஷிபித்ருஸம்பந்திநோ ருணஸ்யாநபாகரணஞ்ச" என்று வ்யாக்யானம் செய்தார். இப்படி யதாகாலம் யஜ்ஞாதிகளை யநுஷ்டித்து ருணதோஷத்தைப் பரிஹரித்



துக் கொள்ளாமல் போனால் உபபாதகங்களுக்கென்று விதிக்கப்பட்டுள்ள பிராயஶ்சித்தம் செய்துகொள்ள வேணுமென்பதையும் விஜ்ஞாநேஶ்வரரே, "வைதிகஸ்ய ஜாயமாந இத்யேதச்சோதித ருணத்ரயஸ்ய யஜ்ஞாத்யகரணே ச 'உபபாதகஸம்ஜ்ஞாஸ்வேவ ஸம்ஸ்தாநாம் ப்ராயஶ்சித்தம்' இதி உபபாதக ஸாதாரணவிஹிதம் வ்ரதஷட்கம் ஶக்த்யபேக்ஷயா யோஜ்யம் ப்ராயஶ்சித்தார்த்தம் ஶோத்யந்தே நாத்ர" இத்யாதிகளால் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார்.

இப்படி ஏகவிம்ஶதி யஜ்ஞாநுஷ்டானம் ஆவஶ்யகமாயிருந்தாலும் அவைகளில் ஏதோ சில (ஔபாஸநாதி) கர்மாநுஷ்டானமாத்ரத்தாலேயே ருணதோஷம் பரிஹரிக்கப்பட்டுப் போகுமென்று சொல்வதற்கில்லை. ஏகவிம்ஶதி யஜ்ஞங்களுக்கும் ப்ரத்யேகமாக நித்யத்வம் ஸர்வ ஶாஸ்த்ர ஸம்மதமாயிருக்கிறபடியாலும், ஸங்கோசத்திற்கு பிரமாணமில்லாதபடியாலும் மேற்படி ஆஶங்கைக்கே அவகாஶமில்லையன்றோ? அப்படியானால் ஏதாவது ஒருகர்மாவினுடைய அநுஷ்டானத்தனாலேயே ருணதோஷம் பரிஹரிக்கப்பட்டுப் போகுமானால் மற்றை கர்மங்களனைத்தும் செய்யாமலிருந்துவிடவும் கூடுமே. அப்போது வேதவாக்யங்களுக்குக்கூட வையர்த்யம் ப்ரஸங்கிக்கும். ஆகையால் ஏகவிம்ஶதி யஜ்ஞாநுஷ்டாதாவுக்கே ருணதோஷ ஶங்கை கிடையாதென்று சிலர் சொல்வார்கள். வஸ்துதஸ்து, "ஜாயமாந" இதி ஶ்ருதியில் காணப்படுகிற யஜ்ஞ ஶப்தத்தால் ஶ்ரௌதமான அக்நிஹோத்ராதி யஜ்ஞங்களை கிரஹிப்பதுதான் ந்யாய்யம்; பாகயஜ்ஞத்திற்கு இவ்விடத்தில் கிரஹணம் சொல்வது அஸம்பந்தமானது. அநுமித ஶ்ருதி மூலங்களான பாகயஜ்ஞங்களின் உபஸ்திதியைக் காட்டிலும் பிரத்யக்ஷ ஶ்ருதி மூலமான அக்நிஹோத்ராதி ஶ்ரௌத யஜ்ஞ க்ரஹணந்தான் முக்கியமானது. தவிர "ஏஷ

வாசநாய" இதி வாக்யசேஷத்தால் "யஜ்ஞ" பதம் ப்ரயுக்த மாயிருக்கிறபடியாலும் யஜ்ஞ சப்தத்தால் ஸ்ரௌத யஜ்ஞ க்ரஹணந்தான் ச்ருதியின் பாவமென்பது விளங்கும். யஜ்ஞ பதமானது அக்நிஹோத்ர விஷயத்திலும் விசேஷமாக ஸோம யாக விஷயத்திலும் பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால்தான் போதாயனர் "ஸர்வா அஸ்ய வாசஃ பந்ந்யோ யஜ்ஞ ஸ்யாஹிதாக்நேரேவ உக்தா பவந்தி" என்கிறதால் இந்த ச்ருதி ஆஹிதாக்நி விஷயமென்று நிர்த்தாரணம் செய்தார். ஆகையால் யதாசக்தி அக்நிஹோத்ராதி ச்ரௌதகர்மங்களை அநுஷ்டிப்பவனுக்கே ருணதோஷம் கிடையாதென்பது நன்கு விளங்கும். இப்படி ருணதோஷாநபாகரணத்தை உபபாதக மத்யத்திற் சேர்த்தது போல ஆஹிதாக்நியாயில்லாமலிருப்பதும் தோஷாவஹமென்று நினைத்தேதான் அதையும் உபபாதக மத்யத்தில் ரிஷிகள் படித்தார்கள். யதாஹ மநுஃ "அநாஹிதாக்நிதாஸ்தேயம்" இதி, யாஜ்ஞவல்க்யஃ - "அநாஹிதாக்நிதா பண்யவிக்ரயஃ" இதி. ஆகையால் அதிகாரியிருக்கும்போது அநாஹிதாக்நியாயிருப்பவனுக்கும் உபபாதக பிராயச்சித்தத்தால் சுத்தி யென்று விஜ்ஞாநேச்வரர், "அதிக்ருதஸ்யாநாஹிதாக்நிதாக்நேரேவ ப்ரதிபந்தரூபம் ஸம்வத்ஸராதூர்த்வம் சாவதி சக்த்யபேக்ஷயா யோஜ்யம் । அநாவதி து சாபம் ஸாதிகம் । அவச்யம் ப்ரத்யஸம்வத்ஸராக் காண்டூரஜி திவிது சேஷசாஹ,

"காலேஷ்வயாய கர்மாணி கர்த்துமசக்தோ யதாக்ரமம் ।
ததஃ ப்ரபூததிரேண சாஸ்திசாஸ்தி விசுத்யதி ॥
அநாஹிதாக்நிர் விப்ராதிர யக்ஷ்யமாண ஸ்ஸோமயாதி
ஸ ஹி ப்ரா்த்யஜ பசுநா யஜேதக்நிஷ்டியாய த ॥" இதி



இத்யாதிகளில் விஸ்தாரமாகச் சொன்னார். இன்னும் ச்ருதி கல்ப ஸூத்ராதிகளில் ஸந்த்யோபாஸநாதி கர்மங்களுக்குப் போல அக்நிஹோத்ராதிகளுக்கும் ஆவச்யம் விதிக்கப்படுகிறபடியால் இவைகள் நித்யங்களென்றும் அவச்யாநுஷ்டேயங்களென்றும் விளங்கும். யதாஹ - "அஹரஹஃ ப்ரப்ரஜ்யேத யதக்நிஹோத்ரம் தஸ்யஸ்தேதந்ததேயரூபம் ஆஹவதே । அஸ்யேத்யாஸ்யேத ப்ரப்ரஜ்யேத" இத்யாதி ச்ருதிகளிலும் "யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி" "தர்சபூர்ணமாஸாப்யாம் யாவஜ்ஜீவம் யஜேத" "வஸந்தே வஸந்தே ஸம்வத்ஸரே ஸம்வத்ஸரே யஜேத, ஷட்ஸு ஷட்ஸு மாஸேஷ்வித்யேகே" "வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷ்டோமேந யஜேத" இத்யாதி கல்ப ஸூத்ரங்களிலும் இவ்விஷயம் ஸ்பஷ்டம். இவ்விஷயத்தையே பிராஹ்மண தர்ம பிரகரணத்தில் மநுவும்,

"அக்நிஹோத்ரஞ்ச ஜுஹுயாதாத்யந்தே த்யுநிசோஸ் ஸதா ।
தர்சேந சார்த்தமாஸாந்தே பௌர்ணமாஸேந சைவ ஹி ॥
ஸஸ்யாந்தே நவஸஸ்யேஷ்ட்யா ததர்த்வந்தே த்விஜோऽத்வரைஃ ।
பசுநா த்வயநஸ்யாந்தே ஸமாந்தே ஸௌமிகைர்மகைஃ ॥"

இத்யாதி வசநங்களால் ஊரீகாரணம் செய்தார். அப்படியே யாஜ்ஞவல்க்யரும்

"ப்ரதிஸம்வத்ஸரம் ஸோமஃ பசுஃ ப்ரத்யயநம் ததா ।
கர்த்தவ்யாக்ரயணேஷ்டிச்ச சாதுர்மாஸ்யாநி சைவ ஹி ॥"

என்கிறதால் அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸ பசுபந்த ஸோம யாகாதிகளுக்கு தத்தத்காலத்தில் அவச்யாநுஷ்டேயத்வத்தை ஸ்பஷ்டமாக பிரதிபாதித்தார்.

(இன்னும் வரும்.)

அக்நிஹோத்ரம் கோபாலதேசிகன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ப்ரியவசநம்.

"ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்" என்பது, ஸமஸ்த ஸூக்ஷ்ம தர்மங்களையும் நன்றாக அறிந்திருக்கும் மஹர்ஷிகளுடைய வாக்யம். அதற்கு, 'ஸத்யத்தையே பேச வேண்டும்; ப்ரியத்தையே பேசவேண்டும்; ஸத்யமாக இருந்தாலும் அப்ரியமான ஒரு வாக்யத்தை ஒரு பொழுதும் பேசக்கூடாது' என்று அர்த்தம். "ஸத்யம் வத" என்கிற ஸ்ருதி ஸத்ய வசநத்தையே பெரிதாகச் சொல்லுகையிலும், ஸ்ம்ருதி கர்த்தாக்கள், ஸத்ய வசநம் ஜகத்தின் ஸ்ரேயஸ்ஸுக்குக் காரணமாவதுபோல ப்ரிய வசநமும் ஜகத்தின் க்ஷேமத்திற்கு அவஸ்யமான காரணமென்று எண்ணி, ஸத்யவசநத்திற்குத் துல்யமாகவே ப்ரியவசநத்தையும் படித்திருக்கிறார்கள். 'ஒரு வார்த்தை ஒருவனுடைய காதுக்கு இனிமையாக இருந்தாலும் உண்மையல்லாமலிருந்தால் அதைப் பேசுவது எப்படிப் பிசகோ, அது போலவே ஒரு வார்த்தை உண்மையாக இருந்தாலும் அப்ரியமாக இருக்கும் பக்ஷத்தில் அதைப் பேசுவதும் பெருத்த பிசகே' என்பதுதான் இந்த வாக்யத்தின் கருத்து.

யதார்த்தமாகவே, பலவிதமான கஷ்டங்களுக்கு இருப்பிடமாக இருக்கும் இந்தப் பூமியில் பிறந்து, எவ்விதமான ப்ரதிவிதாநத்திற்கும் அஸக்தர்களாக அளவற்ற துக்கங்களை அநுபவித்து



வரும் நமக்கு, ஸௌஹார்த்தமென்றும் அது காரணமாக ஏற்படும் ப்ரியவசநமென்றும் சொல்லப்படும் ஔஷதம் இல்லாவிட்டால், ஆறுதல் என்பதே துர்லபமாகிவிடும். நாம் எல்லாரும் ஸகலவிதமான ஸம்பத்தும் நிறைந்தவர்களல்ல; சிலர் ஜீவநத்திற்கு அபேக்ஷிதமான தந தாந்ய மின்றிக்கே தாரித்ர்யத்தால் மிகவும் க்லேஸப்படுவதையும், சிலர் தநம் முதலிய ஸம்பத்துக்களுடன் கூடினவராக இருந்தும் ஆரோக்யமின்றிக்கே பெரும் பிணிகளுக்குப் பாத்ரமாகி அதிமாத்ரம் வருந்துவதையும், சிலர் தந தாந்ய ஆரோக்யங்கள் முதலிய அநுக்ரஹங்களை அடைந்திருந்தும் பராதீநர்களாகிப் பல பெயர்களால் பலவிதமான துன்பமடைந்து உலக வாழ்க்கையிலேயே வெறுப்படையும்படி கஷ்டப்படுவதையும் நாம் பார்க்கிறோமல்லவா? இவ்விதமான உபத்ரவங்கள் கர்மாதீநங்களாதலால், அநுபவமன்றிக்கே மற்ற எவ்வித ஸாதுவான ப்ரதீகாரம் இவைகளுக்கு இல்லையாயினும், இப்படி வருந்துமவர்களிடம் நாம் ஸம துக்க ஸுகர்களாக அநுதாபத்தைக் காண்பிக்கக்கூடிய பேச்சுக்களைப் பேசுவதும், மற்றை எல்லா விஷயங்களிலும் அவர்களுடைய மநஸ்ஸுக்கு இனிமையாக இருக்கும் சொற்களைச் சொல்லி அவர்களுக்கு த்ருப்தி வரும்படி நடப்பதும் கொஞ்சம் ஆறுதலைக் கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. வ்ரணத்தை ஆற்றும் தைலம் முதலியவை தேஹத்திற்கு ஆஹ்லாதத்தைக் கொடுப்பதுபோல, குளிர்ந்த வார்த்தைகளும் கலங்கிநிற்கும் மநஸ்ஸுக்கு ஓர் ஆஹ்லாதத்தைக் கொடுக்கின்றன.

Little words of kindness—
How they cheer the heart!
What a world of gladness
Will a smile impart!

என்று சொல்லியிருப்பது உண்மையே. தேறுதலுக்கு உரிய பரஸ்பர ஸௌஹார்த்தமும் ப்ரீதி ஸூசகங்களான சொற்களும்

இந்த லோகத்தில் நிரம்பி யிருந்தால், கர்ம பூமியில் பிறந்தது அடியாக நமக்கு உண்டாகும் கஷ்டங்களை நாம் மறந்து, இந்த லோகத்தை அபவர்க்கத்துக்குத் துல்யமாகவே பாவிப்போம்.

Little deeds of kindness,
Little words of love,
Make our earth a garden
Like the heaven above.

“𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑌭𑌵𑌨𑍍 𑌕𑌥𑌾𑌃 - 𑌰𑌾𑌮𑌭𑍂𑌤𑌂 𑌜𑌗𑌦𑌭𑍂𑌦𑍍 𑌰𑌾𑌮𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌤𑌿” என்று, சக்ரவர்த்தித் திருமகனுடைய ராஜ்யபரிபாலந காலத்தில் ஜநங்கள் ஆஹ்லாதப்பட்டதற்கு முக்யமான காரணங்களில் ஒன்று, அவருடைய ப்ரிய வாதித்வம். “𑌰𑌾𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿 𑌨𑌾𑌭𑌿𑌭𑌾𑌷𑌤𑍇” என்று அவருடைய உண்மை பேசும் தன்மை ப்ரக்யாதமாக இருக்கையிலும், “𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑍀 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂” என்று சொல்லப்படும் அவருடைய ப்ரியமாகப்பேசும்தன்மையே அவ்விதமாகக்கொண்டாடும்படி ஜநங்களுடைய மநஸ்ஸைக் கவர்ந்துகொண்டது. “𑌵𑍍𑌯𑌸𑌨𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌭𑍃𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌃” என்கிறபடி, ஆட்யன் தரித்ரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற தாரதம்யமின்றிக்கே அவர் ஸர்வ பூதங்களிடத்திலும் ஸமதுக்கஸுகராக ஸௌஹார்த்தத்தைப் பாராட்டினவரன்றோ? ஒருபொழுதும் அருந்துதமான ஒரு வார்த்தையையாவது ஒருவரிடமும் அவர் சொல்லி யறியார். ம்ருதுபாஷியென்றும் பூர்வாபிபாஷியென்றும் அவரை நாம் கொண்டாடுகிறோமல்லவா?

இப்படி பிறருக்கு அத்யந்தம் உபகாரகமாகவும், நமக்கும் மிகுந்த ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கக்கூடியதாகவு மிருக்கும் இந்தச் சிறந்த குணத்தை நாம் ஏன் கைக்கொள்ளக் கூடாது? நாம் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் இருந்தாலும் ப்ரியமான ஒரு வார்த்தையைச் சொல்லி நம்முடைய ஸஹவாஸத்திற்கு உட்பட்டு வரும் ஜநங்களது கஷ்டங்களைத் தணிக்கக்கூடிய திறமையுள்ளவர்களாகவே இருக்கிறோம். அப்படிச் செய்யாமல் உதாஸீநர்களாக நாம் இருக்கலாமா? உதாஸீநர்களாக இருப்பது அல்லாமல், அநேக ஸமயங்களில், ஏற்கெனவே பலகாரணங்களால் ஸந்தப்தர்களாக இருக்கும் ஜநங்களை, நாம் க்ரூரமான பேச்சைப் பேசி இன்னமும் தபிக்கும்படி செய்கிறோமே! இது ஶோபநமாகுமா? பிறருக்கு தேஹ வ்யதையை உண்டாக்குவதில் பயத்துடன் கூடிய நாம், மநோ வ்யதையை ஜநிப்பிப்பதில் ஏன் கிஞ்சித்தேனும் ஸங்கோசமற்று இருக்கிறோம்? ஒரு விதமான காரணமுமின்றிக்கே பல தடவைகளில், பிறருக்கு உத்வேகத்தைச் செய்யக்கூடிய வார்த்தைகளைச் சொல்லி அவர்களுடைய மநஸ்ஸைப் புண்படுத்துகிறோம். அந்த வார்த்தைகளால் அடிபடப்பட்டவர்களாக அவர்கள் இரவும் பகலுமாய் அளவற்ற வ்யதையை அநுபவிக்கிறார்கள். இப்படி நடப்பது தைவ ஸம்மதமாகுமா?



“𑌨𑌾𑌰𑍁𑌨𑍍𑌤𑍁𑌦𑌃 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨 𑌨𑍃𑌶𑌂𑌸𑌵𑌾𑌦𑍀
𑌨 𑌹𑍀𑌨𑌤𑌃 𑌪𑌰𑌮𑌭𑍍𑌯𑌾𑌦𑌦𑍀𑌤 ।
𑌯𑌯𑌾𑌽𑌸𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌪𑌰 𑌉𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌤
𑌨 𑌤𑌾𑌂 𑌵𑌦𑍇𑌦𑍍𑌰𑍁𑌶𑌤𑍀𑌂 𑌪𑌾𑌪𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌂 ॥
𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑌿𑌵𑌾𑌦𑌾𑌶𑍍𑌚 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍
𑌯𑍈𑌰𑌾𑌹𑌤𑌃 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌾𑌨𑌿 ।
𑌪𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑍍𑌮𑌸𑍁 𑌤𑍇 𑌪𑌤𑌨𑍍𑌤𑌿
𑌤𑌾𑌨𑍍𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋 𑌨𑌾𑌵𑌸𑍃𑌜𑍇𑌤𑍍𑌪𑌰𑍇𑌷𑍁 ॥”

என்று, அப்ரியமான பேச்சுப் பேசுவதன் தோஷத்தைப் பற்றி விதுரர் பேசியிருக்கிறார். மர்மத்தைத் துளைக்கக்கூடிய வார்த்தைகளைச் சொல்லுகிறவன் ஜ்ஞாநமற்றவன் என்பது அவருடைய தாத்பர்யம்.

இங்க்லாந்து தேசத்தில் ஜான்ஸன் என்னும் ஒரு பெரிய வித்வான், சற்றேறக்குறைய 150 - வருஷங்களுக்கு முன் இருந்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அவரிடத்தில் அநேக குணங்களிருக்கையிலும், வாதிகளுக்கு விருத்தம் சொல்வதாகிற ஒரு தோஷம் உண்டு. ந்யாயா பந்யாயம் விசாரியாமலே விதண்டை செய்வதையே அவர் கொஞ்சம் கைப்பற்றியவர். அந்த விதண்டை பேசுவதிலும் ம்ருது ஸ்வபாவமென்பதே இராது. அவர் ஒரு ஸமயத்தில் ஸ்வல்ப நோவால் வருத்தப்பட்டுக் கிடக்கையில் அவருடைய ஸுஹ்ருத்தாகிற லாங்டன் என்னும் ஒருவர் அவரைப் பார்க்க வந்தார். அவரிடத்தில் தமக்கு ஏராளமான விஸ்வாஸமிருந்தபடியால், அவரை நோக்கி ‘என்னிடத்தில் ஏதாவது ஒரு தோஷத்தை நீர் கண்டிருந்தால் அதைக் கூசாமலே சொல்லவேண்டும்’ என்று ஜான்ஸன் ப்ரார்த்திக்க, அவர் தோஷத்தை நேரில் சொல்லப் பயந்து, ஸாமாந்யமாக ஸௌஹார்த்தத்தைப்பற்றிய சில ஶாஸ்த்ர வாக்யங்களை ஒரு கடிதத்தில் எழுதி அவரிடம் கொடுத்தார். ‘இப்படி எழுதியதன் கருத்து என்ன?’ ‘என்று கேட்டதன் பேரில், அவர் ஒன்றும் வ்யக்தமாகச் சொல்லாமலே ‘சில ஸமயங்களில் நீர் வாதிகளுடன் விதண்டாவாதம் செய்திருக்கிறீர்; அது பிசகு’ என்று மாத்திரம் மறுமொழி கூறிப் போயினர். வாதிகள் சொல்வதை விரோதித்துப் பேசுவதில் என்ன தோஷம் இருக்கக்கூடும்? என்பதை ஜான்ஸன் நன்றாக உணராமலே, பஹு காலம் அதை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு, பிறகு தம்முடைய மற்றொரு ஸுஹ்ருத்தாகிற பாஸ்வெல் என்பவரிடம் தமக்கும் லாங்டன் என்பவருக்கும் நடந்தது முழுவதையும் சொல்ல, பின் வருமாறு அவர்கள் இருவருக்கும் ஸம்வாதம் நடந்தது.

*Johnson* :—What harm does it do to any man to be contradicted?



*Boswell* :—I suppose he meant the manner of doing it; roughly and harshly.

*Johnson* :—And who is the worse for that?

*Boswell*: —It hurts people of weaker nerves.

*Johnson* :—I know no such weak-nerved people.

இந்த ஸம்வாதத்தின் முக்ய தாத்பர்யமாவது - ‘க்ரூரமாகவும் அப்ரியமாகவும் எதிர்த்துப்பேசுவது தைர்யம் போதாத சிலருக்கு வ்யதையை உண்டாக்கும்’ என்று பாஸ்வெல் ஜான்ஸனுக்கு எடுத்துச் சொல்ல, ஜான்ஸன், ‘அப்படி தைர்யம்போதாத ஜநங்களுமுண்டோ?’ என்று கேட்டார் என்பது தான். இது நடந்து வெகுகாலமான பிறகு பாஸ்வெல் இந்தக் கதையைப் பர்க் என்னும் மஹாநிடம் ப்ரஸ்தாவிக்க, அவர், ‘நாம் நம்முடைய வாழ்நாளில் செய்திருக்கும் பிசகுகளெல்லாம், நம்முடைய ப்ராண வியோகம் ஸமீபிக்கும் காலத்தில் ஜ்ஞாபகத்தில் வந்து நம்மை வருத்துமன்றோ? அந்த ஸமயத்தில், ‘நாம் அப்ரியமான வார்த்தைகளைப் பேசிப் பிறருக்கு வ்யதையை உண்டுபண்ணிவிட்டோமே! அதற்கும் நிஷ்க்ருதி உண்டோ?’ என்கிற எண்ணம் நம்மை வருத்தாமலிருந்தால் போதும்’ என்கிற அர்த்தமடங்கிய மறுமொழியைச் சொன்னாராம். இதன் தாத்பர்யம் ஸ்பஷ்டமே.

“It is well if, when a man comes to die, he has nothing heavier upon his conscience than having been a little rough in conversation.”

---

ஒரு ஸாது.

ஸ்ரீ:

# அம்பரீஷோபாக்யாநம்.

“ அஹோ ஸுநஷ்டாவஸாநாம் ஹேஷாத்ரும் ஹ்ருஷீகேஷு ருசே।
க்ருதாமலோலாஸுவியத்ருஜஸு ! ஹம்ஸாதி ஸமீஹுலஸ ॥ ”

தீங்கு செய்பவர்களுக்கும் நன்மையைத் தேடுபவர்களன்றோ பாகவதர்கள்? கேவலம் பாகவத வேஷத்தைத் தரித்துக்கொண்டு ஸாத்விகமான சித்த வ்ருத்தியை அவலம்பிக்காதவர்கள் பாகவதர்களாவாரோ? அநந்தனுகவும் பக்த ப்ரியனுகவும் ஆஸ்ரிதார்த்திஹரனுகவு மிருக்கும் பகவானை ஒருவன் ஹார்த்தமாக ஆஸ்ரயித்திருந்தால், ‘இவர் நமக்குத் தீங்கு செய்தவர், இவர் நமக்கு நன்மை செய்தவர்’ என்கிற விஶேஷ புத்தியின்றிக்கே, பகவச் சரீரமாயுள்ள இந்த ப்ரபஞ்சம் ஸர்வத்திலும் அவனுக்கு அநிர்வசநீயமான ஒரு ஸௌஹார்த்தமன்றோ ஜநித்துவிடும்? அதுதான் அநந்த தாஸர்களுடைய மாஹாத்ம்யமாகின்றது.

இந்த மாஹாத்ம்யத்தைப் பூர்ணமாக வஹித்தவர், ஸூர்ய வம்ஶத்தில் ஜநித்த அம்பரீஷர் என்னும் ஒரு மஹாந். அவரை மஹாபாகவதரென்றும், க்ருதீ என்றும் ஶுகமஹர்ஷி கொண்டாடியிருக்கிறுர். க்ருதீ என்றுல், அபராதம் செய்தவர்களிடத்திலும் உபகாரணத்தைச் செய்வதையே ஶீலமாக உடைத்தானவரென்று அர்த்தம். அவர், ஸப்த த்வீபவதியான இந்தப் பூமி முழுவதற்கும் அரசனுக இருந்தும், போக்ய போகோபகரணுதி ஸம்ருத்தியை அடைந்திருந்தும், அவைகளுடைய நஶ்வரத்தன்மையை நன்றுக உணர்ந்து, அவைகளெல்லாவற்றிலும் வைராக்யத்தை அடைந்தவராய், லோகநாதனுன ஸ்ரீமந் நாராயணனிடத்திலும் அவனை ஆஶ்ரயித்திருக்கும் ஸாதுக்களிடத்திலும் பரமமான பக்தியுடன்கூடினவராக இருந்தார்.



“ ஸவை மந: க்ருஷ்ண பதாரவிந்தயோ
வசாம்ஸி வைகுண்ட குணாநுவர்ணநே ।
கரௌ ஹரேர் மந்திரமார்ஜநாதிஷு
ஶ்ருதிம் சகாராச்யுத ஸத்கதோதயே । ”

அவர், தமது மநஸ்ஸைப் பகவானைச் சிந்திப்பதிலும், வாக்கை அவனுடைய குணங்களை வர்ணிப்பதிலும், ஹஸ்தங்களை அவனுடைய ஆலய மார்ஜ்ஜநம் முதலிய வ்யாபாரங்களிலும், ஶ்ரவணங்களை அவனுடைய புண்யாவஹமான கதைகளைக் கேட்பதிலுமே ஸதா ப்ரவணங்களாகச் செய்தவர். இவ்விதமான ஸாத்விகத் தன்மையையுடையவராய், எப்பொழுதும் ப்ரஜைகளுக்கு ஆநுகூல்யம் செய்வதிலேயே த்ருடமான ஊக்கத்துடன் க்ஷத்ரிய தர்மத்தைக் குறைவின்றிக்கே பஹுகாலம் அநுஷ்டித்து வந்து, பிறகு (“ஸுஹ்ருத் ஸம்பந்தி தேஹ ஜேஹ”) தேஹ ததநுபந்தி விஷயங்களான ஐஹிக ஆமுஷ்மிகப் பற்றுதல் எல்லாவற்றையும் க்ரமஶ: ஒழித்து வந்தார். இப்படி இவர் இருப்பதைப் பார்த்து, பகவான், இவரது ஸம்ரக்ஷணத்திற்காக, எவ்வித ஆபத்திலும் காப்பாற்றக்கூடிய தனது ஸுதர்ஶநத்தை அவருடைய க்ருஹத்தில் எப்பொழுதும் ஸந்நிஹிதமாக இருக்கும்படி ஆஜ்ஞாபித்திருந்தான். இவ்விதமாக அந்தமஹாராஜன் வர்த்தித்து வருகையில், ஒரு ஸமயத்தில் பகவதாராதநரூபமாகிற ஸம்வத்ஸர ஸாத்யமான ஒரு த்வாதஶீ வ்ரதத்தை அநுஷ்டிக்க வேணுமென்று அவருக்கு ஆஶை ஜநித்தது. ஶ்ரத்தையும் அதற்கு அநுகுணமான விபவமும் நிறைந்திருந்தபடியால், அந்த வ்ரதத்தை எடுத்துக்கொண்டு ஒரு ஸம்வத்ஸரம் முழுவதும் ஒருவிதமான குறைவு மின்றிக்கே வ்ரதத்தைப் பூர்ணமாக அநுஷ்டித்து, ஸம்வத்ஸராந்த த்வாதஶியில் அநேகம் ப்ராஹ்மணர்களுக்கு உத்தம கல்பப்படி தக்ஷிணுதிகளைக் கொடுத்து, லப்த காமர்களான அந்த ப்ராஹ்மணர்களால் அநுஜ்ஞை கொடுக்கப் பட்டவராய், அவர் தாமும் பாரணை செய்யப்போகும் ஸமயத்தில், துர்வாஸஸ் என்னும் ப்ரஸித்தமான மஹர்ஷி அங்கு அதிதியாக வந்து சேர்ந்தார். இப்படி உத்தமமான அதிதியின் வரவு நேர்ந்ததில் மிகவும் ஸந்துஷ்டராய், அம்பரீஷர், அதிதிக்குரிய ப்ரத்யுத்தா நாதிகளான ஸத்காரங்களைச் செய்து ‘தேவரீரும் பார

ணைக்கு எழுந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, துர்வாஸஸ் அந்த ப்ரார்த்தநையை அங்கீகரித்து, மாத்யாஹ்நிக கர்மங்களைச் செய்து முடித்து வருவதாகச் சொல்லிக் காளிந்தீ நதிக்குப் போயினர். ஶுசியான அந்தக் காளிந்தீ தீர்த்தத்தில் ப்ரஹ்மத்தை த்யாநித்து அவர் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கையில், த்வாதஶீ திதி அநேகமாக முடிந்து விடும்போலிருந்தது. அம்பரீஷர், தாம் அந்த வ்ரதத்தை ஒரு கர்மாவாக ஸங்கல்ப பூர்வம் அங்கீகரித்திருந்தபடியால், த்வாதஶீ இருக்கும்பொழுதே பாரணையைப் பூர்த்தி செய்யாவிட்டால் வ்ரதலோபம் ஸம்பவிக்கும் என்பதையும், அதிதி வருமுன்னமே பாரணைசெய்தால் ப்ராஹ்மணாதிக்ரமம் நேரும் என்பதையும் உணர்ந்து, இவ்விதமான தர்ம ஸங்கடத்திலிருந்து தப்ப மார்க்கத்தைத் தேடுவதற்காக ப்ராஹ்மணர்களுடன் ஆலோசித்தார்.

«அம்பஸா கேவலேநாத கரிஷ்யே வ்ரதபாரணம் |
ஆஹுரப்பக்ஷணம் விப்ரா ஹ்யஶிதம் நாஶிதம் ச யத் ||»

என்று கேவலம் தீர்த்தத்தை உட்கொண்டு வ்ரதாங்கமான பாரணையை நிறைவேற்றுவதென்றும், அப்படி தீர்த்த முட்கொள்வதை 'அஶிதா நஶிதம்' [அதாவது - போஜநத்திற்குத் துல்யம், ஆனால் போஜநமாகாது] என்று ஶ்ருதிகள் சொல்லுகிறபடியால் அதனால் அதிதியின் அதிக்ரமணம் நேராதென்றும், வ்ரதத்திற்கும் ஸாபல்யம் நேர்ந்துவிடுமென்றும் நிஶ்சயித்து, பகவானை த்யாநித்துக்கொண்டே அவர் தீர்த்த ப்ராஶநம் செய்துவிட்டு, அதிதியின்வரவை எதிர்பார்த்திருந்தார். ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு துர்வாஸஸ் திரும்பி வந்தவுடன், அம்பரீஷர் தீர்த்த பாரணை செய்துவிட்டாரென்பதை உணர்ந்து, ப்ரக்ருத்யா கோபநராதலால் மிக்க கோபம் கொண்டு, தமது ஶிரஸ்ஸிலிருந்து ஒரு ஜடையை உத்பாடநம்செய்து, அந்த ஜடையினால் காலாக்நி துல்யமான ஒரு க்ருத்யையை உண்டுபண்ணி, அம்பரீஷரைக் கொல்லும்படி ஏவினர். அதி பீஷணமான அந்த க்ருத்யை தம்மை எதிர்த்து ஓடி வருவதைப் பார்த்தும், பகவத் பக்தரானதால், பயமின்றிக்கே அம்பரீஷர் சலியாது நிற்க, அப்பொழுது, அவரது ஸம்ரக்ஷணத்திற்காகப் பகவானால் நியமிக்கப்பட்டிருந்த ஸுதர்ஶநம், கோபத்துடன் சீறிவரும் ஸர்ப்பத்தைக்காட்டுத்தீப்போல, அந்த க்ருத்யையை தஹித்துவிட்டது. தமது ப்ரயத்நம் நிஷ்பலமாகப் போனதையும், க்ருத்யையை தஹித்த ஸுதர்ஶநம் தம்மை நோக்கி வருவதையும் பார்த்த துர்வாஸஸ், தமது ப்ராணன் தப்பினால் போதுமென்று எண்ணி, திக்குக்கள் ஆகாஶம் குகைகள் ஸமுத்ரம் ஸ்வர்க்கம் முதலிய பலவிடங்களுக்கு ஓடியும், தாமோடுமிடமெல்லாம் ஸுதர்ஶநம் வருவதைதப் பார்த்து, அலப்தநாதராக ப்ரஹ்மாவைப் போய் ஶரணமடைந்தார். அவராலும் இதர தேவதைகளாலும் ப்ரத்யாக்யாதராய், «அஹம் பக்தபராதீநோ ஹ்யஸ்வதந்த்ர இவ த்விஜ» என்று ஸாக்ஷாத் அச்யுதனுகிற நாராயணனை ஶரணமாக அடைய, அந்த நாராயணனும், 'ஓய் துர்வாஸஸ்ஸே! நான் பக்த பராதீநன்; அவர்களால் வஶீக்ருதமான சித்தத்தையுடையவன்; சதுர்புஜாதி விஶிஷ்டமான இந்த விக்ரஹமும், அநந்யார்ஹ ஶேஷபூதையான இந்த லக்ஷ்மியும் என்னுடைய பக்தர்களுக்குத் துல்யராகார்;



மயி நிர்பத்தஹ்ருதயா: ஸாதவ: ஸமதர்ஶநா: |
வஶே குர்வந்தி மாம் பக்த்யா ஸத்ஸ்த்ரிய: ஸத்பதிம் யதா ||

அநந்ய விஷயத்வேந என்னிடத்திலே ஸ்திரீக்ருதமான ஹ்ருதயத்தை உடையவர்களாய், அநந்ய ப்ரயோஜநையாந பக்தியினாலே, பதிவ்ரதைகள் பரதார பராங்முகர்களான பர்த்தாக்களைப்போல, என்னுடைய பக்தர்கள் என்னை வஶீகரித்துவிடுகிறார்கள். ஆனாலும், நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன்; அதைக் கேளும். யாரிடத்தில் அபசாரப்பட்டதால் இந்தத் தீங்கு உமக்கு நேர்ந்திருக்கிறதோ, அந்த அம்பரீஷரையே ஶரணமாகப் புகுரும்; உமக்கு க்ஷேமம் உண்டாகும்.' என்று நியமித்தான்.

ஸுதர்ஶநத்தால் தபிக்கப்பட்டவராய், துர்வாஸஸ், அது கேட்டு, அம்பரீஷரை அடைந்து அதிதுக்கிதராய் அவருடைய பாதாரவிந்தங்களைப் பிடித்துக்கொண்டு 'ஸ்வாமிந்! அஜ்ஞாந க்ருதமான எனது அபராதத்தை க்ஷமித்து என்னை ஸம்ரக்ஷிக்கவேணும்' என்று சொல்லவே, அம்பரீஷர் துர்வாஸஸ்ஸினுடைய வ்யஸநத்தை ஸஹியாமலே,

"𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌦𑌤𑍍𑌤𑌮𑌿𑌷𑍍𑌟𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
𑌕𑍁𑌲𑌂 𑌨𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌦𑍈𑌵𑌂 𑌚𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌭𑌵𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 ॥
𑌯𑌦𑌿 𑌨𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑍀𑌤 𑌏𑌕𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌭𑌵𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 ॥"

'ஹே ஸுதர்ஶந! உம்மை நமஸ்கரித்து நான் ப்ரார்த்திக்கிறேன்: என்னுடைய ஶ்ரௌத ஸ்மார்த்த கர்மாநுஷ்டாநங்களாலும், ஸ்வதர்மத்தின் அநுஷ்டாநத்தினாலும் பகவாந் ப்ரஸந்நராகி யிருப்பது உண்மையானால், இந்த ப்ராஹ்மணருக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் நீர் காப்பாற்றவேணும். நிஸ்ஸமாப்யதிகனாகவும் ஸகல கல்யாண குணங்களுக்கும் ஆஶ்ரயனாகவுமிருக்கும் பகவாந் என்னுடைய ஸர்வாத்மக ப்ரஹ்மோபாஸநத்தினால் ப்ரீதராக இருப்பது உண்மையானால், நீர் இந்த ப்ராஹ்மணரை நிர்துக்கராகச் செய்ய வேணும்' என்று, ஏதோ தமக்கே ஒரு விபத் நேர்ந்துவிட்டது போலக் கதறுவதைப் பார்த்து, அந்த ஸுதர்ஶநம், பகவத்பக்தருடைய ப்ரார்த்தநைக்கு இணங்கி ஶமநத்தை அடைந்தது. துர்வாஸஸ்ஸும், விஜ்வரராகக்கொண்டு அம்பரீஷருடைய ஸாத்விகத் தன்மையைப் பார்த்து மிக்க வியப்படைந்து,

"𑌅𑌹𑍋 𑌅𑌨𑌨𑍍𑌤𑌦𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌦𑍍𑌯 𑌮𑍇 ।
𑌕𑍃𑌤𑌾𑌗𑌸𑍋𑌽𑌪𑌿 𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑌨𑍍 𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑌿 𑌸𑌮𑍀𑌹𑌸𑍇 ॥"

என்று பகவத் பக்தர்களுடைய ஸாதுத்வத்தை நிரம்பவும் கொண்டாடினார். இதுவரையில் பாரணை செய்யாமல் போஜநமின்றிக்கே இருந்த அந்த அம்பரீஷர், துர்வாஸஸ்ஸினுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, தாம் ஏதோ பிசகு செய்துவிட்டதுபோல அவரை ஸமாதாநம் செய்து, அவருக்குப் போஜநம் செய்வித்து அவர் த்ருப்தரான பிறகு அவரால நியமிக்கப்பட்டவராய்த் தாமும் பாரணையைப் பூர்த்திசெய்தார். இப்படி வர்த்திப்பதன்றோ, பாகவத லக்ஷணமாகும்? அல்பகாரணத்தால் கோபம்கொண்டு பரஸ்பரம் இருக்கவேண்டிய ஸௌஹார்த்தத்தை விட்டு ஒருவருக்கொருவர் தீங்கை விளைவித்துக்கொண் டிருப்பவர்களும் பாகவதராவார்களோ?

ஒரு பௌராணிகர்.

ஸ்ரீ:

## கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

பரிதாவி௵ மாசி மாஸத்திய ஸஞ்சிகையில், 22-வது பக்கத்தில், ஸ்ரீவிஶிஷ்டாத்வைத மதத்தைப் பற்றி எழுதிவருகையில், ஸ்ரீ. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமீ, "பரம பதத்தில் பகவானுடைய ஆநந்தத்தை அநுபவிக்கும் முக்தாத்மாக்கள், அஶரீரர்களாகவும் ஸஶரீரர்களாகவும் இஷ்டாநுகுண போக்ய வஸ்துக்களைத் தாங்களே ஸ்ருஷ்டித்துக்கொண்டு ஆநந்தாநுபவம் செய்கிறார்கள்" என்கிற அர்த்தமுள்ள வாக்யங்களை எழுதியிருக்கிறார். இது விஷயமாக அடியேனுக்கு இரண்டு ஸந்தேஹங்கள் ஜநிக்கின்றன:—(1) முக்தர்கள் அப்ராக்ருத ஶரீரமில்லாமல் ஆநந்தம் அநுபவிப்பதுண்டா? (2) முக்தர்களுக்கு அநுகுணமாக இருக்கும் போக்ய வஸ்துக்களை ஈஶ்வரனுடைய க்ருபையால் உண்டாக்கிக் கொள்ளுகிறதா? அல்லது இவர்களே ஸ்ருஷ்டித்துக் கொள்ளுகிறார்களா? இந்த ஸந்தேஹங்களை ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமீ நிவ்ருத்திப்பாரென்று ப்ரார்த்திக்கிறேன்.

வெள்ளமடை தோட்டம்,
பரிதாவி௵ பங்குனிமீ 11உ. } க. ராமஸ்வாமி தாஸன்.

ஸ்ரீ:

## புஸ்தக விமர்ஶம்.

1. பகவத் ராமாநுஜ சரித்ரம்:—இது, மைஸூர் ஸ்ரீ. ஏ. கோவிந்தாசார்ய ஸ்வாமியால் இங்க்லீஷ் பாஷையில் எழுதப்பட்டு, 37-அத்யாயம் அடங்கியுள்ளது. முதல் 8-அத்யாயங்களால் ஸ்ரீ நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார் இவர்களுடைய சரித்ரத்தை ஸங்க்ரஹமாகச் சொல்லி, பிறகு மற்றை 29-அத்யாயங்களாலும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய சரித்ரத்தை ஸ்ரீ கோவிந்தாசார்ய ஸ்வாமி விஸ்தாரமாக விவரித்து எழுதியிருக்கிறார். ஆசார்ய ஶிஷ்ய பரம்பரையாக பஹுகாலமாக வந்திருக்கும் அநேக ஐதிஹ்யங்களை ஒன்று சேர்த்து ஒரு ஐதிஹ்யத்திற்காவது லோப மின்றிக்கே மிகுந்த விஶ்வாஸத்துடன் இந்த ஸ்வாமி எழுதியிருப்பதைப் பார்க்க நமக்கு மிக்க ஆநந்தம் உண்டாகின்றது. பரமஸத்

வம் நிறைந்துள்ள இவ்விதமான ஓர் ஆசார்யர் ஒருகாலத்தில் எழுந்தருளியிருந்தாரென்றும், நீசோத்க்ருஷ்டர்கள் வாசியற எல்லாரிடத்திலும் ஸௌஹார்த்தங்கொண்டு ஸகலரையும் உஜ்ஜீவிப்பிக்கும்பொருட்டு இந்த மஹாத்மா தமது வாழ்நாள் முழுவதும பரிஶ்ரமப்பட்டாரென்றும் அறியாத பலபெயர்களுக்கு ஸ்ரீ கோவிந்தாசார்ய ஸ்வாமி செய்திருக்கும் உபகாரம் அத்யந்தம் பாராட்டதகுந்ததே. யதார்த்தமாகவே, ஸ்ரீ பாஷ்யகாரருடைய சரித்ரத்தை அநுஸந்தாநம் செய்யுமெல்லாரும் ஸ்ரீ பகவானுக்கு அபிமதமாக இருக்கும் சித்தவ்ருத்தியை அடைவார்களென்பதில் ஆக்ஷேபமில்லை. அப்படிப்பட்ட சித்தவ்ருத்தியை அடைவிப்பதற்கு ஹேதுவாக இருக்கும் இம்மாதிரியான கைங்கர்யத்தில் இழிவதைவிட வேறு சிறந்த உபகாரமும் உண்டோ? இம்மாதிரியான மஹோபக்ருதியை இந்த ஸ்வாமி இன்னும் பஹுகாலம் செய்துகொண்டிருக்கும்படி பகவான் அநுக்ரஹிக்கவேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம். இந்தப் புஸ்தகத்தின் விலை ரூ. 2 - 12 - 0. இதை அபேக்ஷிப்பவர்கள் ஸ்ரீ. ஏ. கோவிந்தாசார்ய ஸ்வாமீ, வேதக்ருஹம் 1050, வைஸ்ராய்ரோட், மைஸூர், என்கிற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஜ்ஞாநாம்ருதம்:— இது ஒரு தமிழ்க்கதை. இது, கும்பகோணம் ம-ா-ா-ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி ஐயர் என்னும் ஒரு தமிழ்ப் பண்டிதரால் எழுதப்பெற்று, ம-ா-ா-ஸ்ரீ வி. எஸ். ராதாக்ருஷ்ண ஐயர் என்பவரால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருப்பதுடன், இது, மற்றவர்களால் இக்காலத்தில் எழுதப்படும் கல்பித கதைகளைவிட, சிறுவர்களுக்குத் தைவபக்தியையும் தர்மத்தில் ஒரு விஶ்வாஸத்தையும் உணர்த்தும் விஷயத்தில் மிகச் சிறந்ததாக இருக்கின்றதென்றே நாம் நினைக்கிறோம். இதன் விலை அணா 10. இந்தப் புஸ்தகம் அபேக்ஷிப்பவர்கள், ம-ா-ா-ஸ்ரீ வி. எஸ். ராதாக்ருஷ்ண ஐயர், மங்கள விலாஸ புஸ்தக சாலை, கும்பகோணம் என்கிற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:-

# வர்த்தமானங்கள்.

## பால்கன் யுத்தம்.

சென்ற மாஸத்தில் நாம் எழுதியதற்குப் பிறகு, இந்த யுத்த ஸம்பந்தமாக ஒரு விதமான ஸமாதாநமும் நடந்ததாகத் தெரியவில்லை. ஏட்ரியநோபில் என்னும் மகம்மதீயருடைய முக்ய பட்டணங்களில் ஒன்று, இரண்டு மூன்று மாஸகாலமாக எதிரிகளால் முற்றுகை செய்யப்பட்டிருந்தது. அந்தப் பட்டணத்திற்குள் அகப்பட்டிருந்த மகம்மதியர்கள் சிறந்த தைர்யத்துடன் வெகு காலம் எதிர்த்து வந்தார்கள். பத்துத் தினங்களுக்குமுன்,



இனி எதிர்த்து நிற்பது அஸாத்யமாகவே, அந்தப் பட்டணம் எதிரிகள் கைவசமாகிவிட்டதாம். அதற்குப் பிறகு சடால்ஜா என்னும் மற்றோரிடத்தில் நடந்த ஒரு பெரிய சண்டையில் மஹம்மதீயர்களுக்கு ஜயம் கிடைத்ததாகவும் கேள்வி. அந்தச் சண்டையில் இருகக்ஷியிலும் ஏராளமான ஜநநாசம் நேர்ந்ததாம். இன்னும் எவ்வளவு காலம் இந்த யுத்தம் நடக்குமோ தெரியவில்லை. பகவத் ஸங்கல்பம் இவ்விதமாக இருந்தால் நாம் ஶோகிப்பதில் பயனென்ன?

## அமெரிக்காவில் ஒரு டொர்ணடோ.

மேற்கே இருக்கும் அமெரிக்கா என்னும் தேஶத்தில் ஒரு பெரிய புசல் காற்று அடிப்பது உண்டு. அந்தக் காற்றுக்கு அந்தத்தேஶத்தவர்கள் டொர்ணடோ என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காற்றின் உக்ரத்தன்மையை அளவிடமுடியாதாம். சென்ற மார்ச்சு மாஸத்தில் அம்மாதிரியான காற்று ஒன்று, அந்தத் தேஶத்தின் ஒரு பாகமாகிய ஐக்யமாகாணம் என்னும் ஒரு ப்ரதேஶத்தில் அதி தீவ்ரமாக அடித்து, அளவற்ற ஜநங்களின் சேதத்தை உண்டு பண்ணிற்று என்று அவ்விடத்திலிருந்து ஸமாசாரம் வந்திருக்கிறது. காற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாமல் கணக்கற்ற கட்டடங்கள் விழுந்துவிட்டனவாம். வ்யாதி க்ரஸ்தர்களான ஜநங்களுடன் கூடிய பெருத்த வைத்ய ஶாலைகளும், சிறிய பாலர்களுடன்கூடிய பெரிய பாடஶாலைகளும், அநேக கூலியாட்கள் வேலைசெய்துகொண்டிருந்த அநேக தொழிற் சாலைகளும் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டன. எவ்வளவோ க்ராமங்களும் நாஶமடைந்தன. இந்தக் காற்றின் கொடுமைக்குத் துணையாக ஜல ப்ரவாஹம் ஒரு பக்கத்திலும், தீ ஒரு பக்கத்திலுமாகச் சேர்ந்துகொண்டு, ஓடி ஒளிந்துகொண்டிருந்த ஜநங்களைக் கொன்றுவிட்டன. நரகலோகத்தில் இருப்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கும் கொடுமைகளெல்லாம் இங்கும் ஒன்று சேர்ந்து நாலு ஐந்து தினங்கள் உபத்ரவித்து விட்டு, பிறகு பகவத் ஸங்கல்பத்தால் ஶமநத்தை அடைந்திருப்பதாக ஸமாசாரம். இந்த விபத்தைப் பற்றிக் கேட்க எல்லாருக்கும் துக்கமாகவே இருக்கும்.

## ஐயம்பேட்டைக்கு ஸமீபத்தில் ஒரு ஹிந்து மஹம்மதிய கலஹம்.

சென்ற மார்ச்சு மாஸத்தில் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஐயம்பேட்டைக்கு ஸமீபத்திலிருக்கும் சக்கராபள்ளி என்னும் ஒரு க்ராமத்தில் ஹிந்துக்களுக்கும் மஹம்மதியருக்கும் பெரிய கலஹமொன்று நடந்ததாம். அந்த க்ராமத்திலுள்ள ஒரு ஹிந்து ஆலயத்தில் உத்ஸவமொன்று நடந்ததாகவும், ஒருநாள் உத்ஸவம் முடிந்து ஸ்வாமியை ஆலயத்துக்குள் எடுத்துக்கொண்டு போவதற்கு

மூன் அந்தக்கோயிலைச் சுற்றியிருக்கும் ப்ராகார ப்ரமணம் ஆகவேண்டுமென்று எண்ணிக் கோயிலைச்சேர்ந்தவர்கள் வீதியில் புறப்பாட்டை நடத்தி வருகையில், அநேக மஹம்மதியர்கள் திரளாக வந்து ஹிந்துக்களை அடித்து, ஸ்வாமியின்மேல் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றிக்கொண்டு ஓடிப் போய்விட்டதாகவும் ஸமாசாரம். அப்படி நஷ்டமான ஆபரணங்களின் மதிப்பு, சற்றேறக்குறையப் பதினாயிரரூபாயாம். இந்த ஸமாசாரம் போலீஸாருக்கு எட்டினவுடன், அவர்கள் வந்து கலஹத்தை மேல் நடக்கவொட்டாமல் அடக்கியிருப்பதுடன், மஹம்மதியர்களில் உத்தேசம் 50 பெயர்களை இந்தக் கலஹத்தில் ஸம்பந்தப்பட்டதாகப் பிடித்து மிருக்கிறார்கள். ந்யாய ஸ்தலத்தில் இதன் விசாரணை நடந்த பிறகுதான் இதன் உண்மை வெளிவரும். கலி அதிகரிப்பதால், ஜநங்கள் ஒத்து வாழ்வதே துர்லபமாகி விடும்போலத் தோன்றுகிறது.

---

*Works in English*

BY

## A. GOVINDACHARYA SVAMIN,

C.E., M.R.A.S., M.R.S.A., ETC.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| 1. Bhagavad-gita with Ramanuja's commentary ... | 5 | 0 | 0 |
| 2. Lives of the Dravida Saints (Azhvars) ... ... | 1 | 8 | 0 |
| 3. Lives of Ramanuja and other Sages (with frontispiece etc) ... ... ... | 2 | 12 | 0 |
| 4. Divine Wisdom of the Dravida Saints ... ... | 2 | 0 | 0 |
| 5. Vade-Mecum of Vedanta ... ... ... ... | 1 | 0 | 0 |
| 6. Artha-Panchaka or Five Truths (JRAS) ... ... | 0 | 12 | 0 |
| 7. Vedanta and Theosophy ... ... ... ... | 0 | 4 | 6 |
| 8. Three Parts: Lectures on Inspiration, Intuition and Ecstacy ... ... ... | 1 | 0 | 0 |
| 9. Ideals of Ind, in Two Parts ... ... ... | 0 | 12 | 0 |
| 10. Yatindra-Mata-Dipika (or a Compendium of Visishtadvaita Philosophy and Religion) ... | 2 | 0 | 0 |

*[Obtainable at Veda-Griham, 1050, Viceroy Road, Mysore, South India, or The Publisher, The "Siddhanta Dipika" Choolai, Madras, N. C.]*

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 2 JUN 1913 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வைகாசி [ஸஞ்சிகை 4.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]
[illegible]
[illegible] ॥

"இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" என்கிறபடி விஶ்ருங்கலமாக ஸஞ்சரிக்கும் ஸ்வபாவமுள்ள இந்த்ரியங்களால் அபமார்க்கங்களில் இழுக்கப்பட்டும், "[illegible]" என்கிறபடி அதிகர்ஹிதமான கணக்கற்ற மனோரதங்களால் பீடிக்கப்பட்டும், "வித்யாமதோ தநமதஸ் ததைவாபிஜநோ மத:" என்று சொல்லப்பட்டுள்ள மத த்ரயத்திற்கும் காம க்ரோதாதிகளுக்கும் அடிமைப்பட்டும் தர்மாதர்ம விவேசநமின்றிக்கே வர்த்திப்பது அஶிக்ஷிதர்களான ஜநங்களுக்கு ஸஹஜம். அவ்விதமாகத் தமக்கும் நாஶத்தை ஸம்பாதித்துப் பிறருக்கும் தீங்கை விளைவித்துக்கொண்டு ஜநங்கள் வர்த்திக்காமலிருக்கும்பொருட்டு பால்ய யௌவந காலங்களிலே அவர்களை ஒன்றுசேர்த்துத் தர்மாதர்மங்களை க்ரந்த மூலமாகவும் ஸ்வாநுஷ்டாநத்தினாலும் அவர்களுக்

ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ்.

குப் போதிப்பித்து, அவர்களைப் பாப பீருக்களாகவும் ஸாதுக்களாகவும் ஜீவித்துவரும்படி செய்வதே ஜகத்திற்குச் செய்யப்படும் உபகாரங்களுள் மிகவும் சிறந்தது. இந்த உபக்ருதியை இக்காலத்தில், கவர்ன்மென்டாரும், உதாரர்களான சில ஸாத்விகர்களும், பாடஶாலா வ்யவஸ்தை முதலிய உபாயங்களைக்கொண்டு த்ருப்திகரமாக நடத்திவருகிறார்கள். உண்மையாகவே, இந்த உபக்ருதியை ஸாதித்துக்கொடுக்கக்கூடிய வேறு உபாயங்கள் இருக்கையிலும், பாடஶாலைகளை ஏற்படுத்தி அவைகளை ஒழுங்காக நடத்துவதே ஶ்லாக்யதமமான மார்க்கம். ஆனால், இம்மாதிரி இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடஶாலைகளில் நமது தேஶ ஆசாரங்களுக்குத் தகுந்த ஆநுகுண்யமில்லை என்று எண்ணி பாஶ்சாத்யர்களிற் சிலரும் நமது தேஶத்தவர்களிற் சிலரும் ஒன்று சேர்ந்து, கங்காதீரத்திலுள்ள காஶீ என்னும் புண்ய ஸ்தலத்தில் "ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ்" என்னும் ஒரு பெரிய பாடஶாலையை ஏற்படுத்திக் கொஞ்சகாலமாக அதை அதி விலக்ஷணமாக நடத்தி வருகிறார்கள். இது மிகவும் ஶ்ரேயஸ்கரமே. ஆனால், ஸ்வல்ப தினங்களுக்கு முன்னே அதில் த்வைவித்யம் ஸம்பவித்ததாகவும், அதனால் ப்ரமுகர்களான உபாத்யாயர்களுள் அநேகர் தங்களுக்குள்ள அந்தப் பாடஶாலா ஸம்பந்தத்தை நிவ்ருத்தித்துக் கொண்டதாகவும் கேள்விப்படுகிறோம். இப்படி நேர்வது, ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸைப் பெரிய ப்ரத்யாஶையுடன் எதிர்பார்த்திருக்கும் எல்லாருக்கும் மிக்க துக்கத்தை விளைவிக்கின்றது. "ஶ்ரேயாம்ஸி பஹு விக்நாநி" என்கிறபடி நல்ல கார்யங்களுக்குக் கணக்கில்லாத விக்நங்கள் ஸம்பவிக்கும். ஆனாலும், "[illegible] ஸ்வவிதா[illegible]ஜஹதி" என்று சொல்லியிருக்கும் ப்ரகாரம் உத்தம குணம் நிறைந்துள்ள இதன் ப்ரவர்த்தகர்கள் இவர்களுடைய த்வைவித்யத்தால் பாடஶாலைக்கு ஹாநி வராமலிருக்கும்படிப் பார்த்து வருவார்களென்று நாம் நம்புகிறோம்.

∴ ∴ ∴

ஸ்ரீ அஹோபிலம்.

இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில், பல்லாரியைச் சேர்ந்த குத்தியிலிருக்கும் கனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ கேசவப்பிள்ளை அவர்களால் ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதியைப்பற்றி 'ஹிந்து' என்னும் பத்ரிகைக்கு எழுதப்பட்டுள்ள ஒரு கடிதத்தின் ஸங்க்ர

MADRAS.



ஹத்தை ப்ரசுரம் செய்திருக்கிறோம். அவர் எழுதியிருப்பது கொஞ்சம் கடுமையாக இருந்தாலும், அதைப்பற்றி ஒரு விஷயத்திலும் அத்யுக்தி கொண்டதாகவாவது வஸ்து ஸ்திதிக்கு விருத்தமாக இருப்பதாகவாவது நமக்கு நினைக்க இடம்கொடுக்கவில்லை. ஸ்ரீ அஹோபிலம் இப்பொழுது அடைந்திருக்கும் ஶோச்யதஶையைப் பார்த்து, ஹிந்துக்களெல்லாராலும் கொண்டாடப்படும் ஒரு பகவத் ஸந்நிதி அந்த ஹிந்துக்களில் பலர் நல்ல நிலைமையில் இருக்கையிலே இப்படி ஶோச்ய தஶையை அடைகின்றது என்பது எல்லாருக்கும் தலை குனிவுக்குக் காரணமாகிறதே என்று எண்ணி, 'பகவத் பக்தி தலையெடுத்து ஸந்நிதி கைங்கர்யங்களில் ப்ரவணராக இருக்கும் யாராவது ஒருவர் நம்மை இந்தப் பரிபவத்திலிருந்து ஸம்ரக்ஷிக்க மாட்டார்களா?' என்று அவர் முறையிட்டிருக்கிறார். நமது தேஶத்தில் இம்மாதிரியான கைங்கர்யபரர்கள் அற்றுப்போய்விட்டார்கள் என்று சொல்லமுடியாது. இது விஷயமாக ஒருவர் நல்ல எண்ணத்தோடு ப்ரவ்ருத்தித்தால் ஏராளமான தநத்தை ஸம்பாதிப்பதும், ஸந்நிதியை த்ருப்திகரமாக ஜீர்ணோத்தாரணம் செய்வதும் அதிக ஶ்ரமமான கார்யமன்று. அப்படிச் செய்யவேணுமென்பது நம்முடைய ஆஶம்ஸையாக இருக்கையிலும், இந்த ஸந்நிதியின் தர்மகர்த்தாவாகிற ஸ்ரீ அழகிய சிங்கரிடம் இந்த ஸந்நிதிக்குச் சொந்தமான சொத்து ஏராளமாக இருக்கிறபடியால், ஜீர்ணோத்தாரணாதிகள் அந்தச் சொத்துக்களை விநியோகித்தே ஸ்ரீ அழகிய சிங்கரால் செய்யப்பட வேண்டியது என்று நாம் நினைக்கிறோம். ஸ்ரீ அழகிய சிங்கர்கள் இது விஷயத்தில் உதாஸீநர்களாக இருந்துவந்தாலும், அப்படி உதாஸீநம் பாராட்டுவது தர்மமன்று என்பதை நாம் அவர்களிடம்போய் விஜ்ஞாபநம் செய்துகொண்டு அவர்களைக் கொண்டே இந்த ஶோச்ய தஶையை நிவ்ருத்தி செய்து கொள்வதுதான் உசிதமாகும். இப்பொழுது ம-ா-ா-ஸ்ரீ கேசவப்பிள்ளை அவர்களால் நிர்தேஶிக்கப் பட்டுள்ள ஸ்ரீ அஹோபிலத்தின் ஜீர்ண நிலைமையைப்பற்றி நாம் ஏற்கெனவே விரோதிக்ருத் வருஷம் கார்த்திகை மாஸத்திய ஸஞ்சிகையில் விவரித்து எழுதியிருந்தோம். சென்ற பரீதாபி வருஷம் மார்கழிமாஸத்தில் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த மஹாஸங்கத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபையார் இதைப்பற்றி ஒரு தீர்மானம் செய்திருப்பதும், அந்தத் தீர்மானத்தை அநுஸரி

த்துப் பிறகு ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்து கொண்டதும் நமக்குத் தெரியும். இப்படி செய்துகொண்ட விஜ்ஞாபநத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் இதுவரையில் ஆதரிக்காமலிருந்துவிட்டாரென்பது உண்மைதான். அதனால், நாம் செய்யவேண்டும் ப்ரயத்நத்தை நாம் இப்பொழுதே பரித்யஜிப்பது ஸரியன்று; யதோசிதம் நிர்பந்த ரூபமான உபாயங்களை அவலம்பித்தாவது ஸ்ரீ அழகிய சிங்கருடைய தர்மமாகிற இந்தக் கைங்கர்யத்தை அவரைக் கொண்டே செய்விப்பதுதான் ந்யாய்யமாகும். ம-ள-ள-ஸ்ரீ கேசவப் பிள்ளை அவர்களுடைய கடிதத்தைப் படிக்கும் ஆஸ்திகர்களெல்லாரும் இது விஷயத்தில் ஒன்று சேர்ந்து ஸ்ரீ அழகிய சிங்கரை அவரது தர்மத்தைக்குறித்து ஸ்மரிப்பிப்பார்களென்று நம்புகிறோம்.

∴ ∴ ∴

**கர்மாநுஷ்டாநங்கள்.**

ஸ்ரீ அக்நிஹோத்ரம் கோபாலதேஶிகாசார்யர் என்னும் ஒரு ஸ்வாமீ, ஶ்ரௌத கர்மங்களுடைய அநுஷ்டாநத்தின் ஆவஶ்யகதையைப்பற்றிச் சென்ற ஸஞ்சிகையில் எழுதியிருந்ததை எல்லா ஆஸ்திகர்களும் படித்திருக்கக் கூடும். இந்த ஸஞ்சிகையிலும் அதன் தொடர்ச்சி ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அநேக ப்ரமாண புரஸ்ஸரமாகவும் ஏராளமான உபபத்திகளுடனும் அவர் தாம் எடுத்துக்கொண்ட கோடியை ஸித்தாந்தம் செய்திருக்கிறார் என்பதில் ஆக்ஷேபமில்லை. எல்லா த்விஜர்களும் கேவலம் ஸ்மார்த்த கர்மங்களுடைய அநுஷ்டாநத்துடன் த்ருப்தியடையாமல், அவஶ்யம் அநுஷ்டேயங்களான ஶ்ரௌத கர்மங்களையும் யதாஶக்தி யதாதிகாரம் அநுஷ்டிக்கவேண்டும் என்பது அவருடைய அபிப்ராயமென்று தெரிகின்றது. இது, மிகவும் ஶ்லாகிக்கத்தகுந்த நோக்கமே. அந்தந்த வர்ணத்தைச் சார்ந்தவர்கள் அவரவர்களுக்கு ஸ்வதர்மமென்று விதிக்கப்பட்டுள்ள வ்ருத்தியில் வர்த்தித்துக்கொண்டு தேஹயாத்ராதிகளைச் செய்வதுடன் ஆத்மோஜ்ஜீவநத்திற்குரிய கர்மாநுஷ்டாநங்களையும் யதாஶாஸ்த்ரம் செய்துகொண்டுவந்தால் மிகவும் நன்றாகவே இருக்கும். ஆனால், இது இப்பொழுது ஸாத்யமா? நம்முடைய உபந்யாஸாதிகளாலும் வேறு விதமான பரிஶ்ரமங்களினாலும், இப்பொழுது மிகவும் சீர்குலைந்து நிற்கும் வர்ணாஶ்ரம தர்ம வ்யவஸ்தை



களைப் பூர்வஸ்திதிக்குக் கொண்டு வருவது முடியுமா? என்பதை நாம் கொஞ்சம் விசாரிக்கவேணும்.

இப்பொழுது நமது தேஶம் இருக்கும் ஸ்திதியைப் பார்த்தால், கட்டுப்பாடு என்பதே அத்யந்தம் ஶிதிலமாகிவிட்டது என்றே சொல்லவேணும். த்விஜர்கள் எல்லாரும் ஸ்மார்த்த கர்மங்களைச் சரிவர அநுஷ்டித்து வருவதுபோல எண்ணிக்கொண்டு, ஸ்ரீ அக்நிஹோத்ரம் ஸ்வாமீ, 'அது மாத்திரம் போதாது; ஶ்ரௌத கர்மங்களையும் அவஶ்யம் அநுஷ்டிக்க வேணும்' என்று எழுதியிருக்கிறார். அந்த எண்ணம் ஸரியன்று. ஸ்மார்த்த கர்மங்களே அடியோடு போய்விட்டன. அத்யந்தம் ஸ்வல்பமாக இருக்கும் சில ஆஸ்திகர்களை விலக்கிவிட்டால் ஸ்மார்த்த கர்மங்களில் முக்யதமமான ஸந்த்யாவந்தநாதிகளைச் சரிவர அநுஷ்டிப்பவர் துர்லபராகி விடுவார். இந்தக் கர்மங்களின் அநுஷ்டாநத்தைப் பகவதாஜ்ஞை என்று நினைத்து அநுஷ்டிக்கிறவர்கள் ஆயிரத்தில் இரண்டு மூன்று பெயர்கள் இருந்தால் பெரிது. காலம் விபரீதமாகி, குடும்ப போஷணம் ஶ்ரம ஸாத்யமாகி விடவே, ஏதாவது ஒரு வ்ருத்தியை அவலம்பித்து 'எந்த உபாயத்தினாலாவது அர்த்தார்ஜநம் செய்யவேண்டும்' என்கிற எண்ணம் எல்லாருடைய மநஸ்ஸிலும் ப்ரவ்ருத்தித்து விட்டதே தவிர, 'இது நமது தர்மாநுஷ்டாநத்திற்கு விருத்திக்கிறது; இது விருத்திக்கவில்லை' இத்யாதியான விவேகமே அற்றுப்போய்விட்டது. தவிரவும், 'மாநஸிகமான பகவத் த்யாநாதிகள் அபேக்ஷிதங்களே தவிர, நிரர்த்தகங்களான தந்த்ராதிகளைச் செய்வதிலும் இன்னும் பாஹ்ய வ்யாபாரங்களிலும் பயனென்ன?' என்கிற எண்ணம் பஹுஶ: பரவிவிட்டது. ஆனால், இந்த எண்ணம் கொண்டிருக்கிறவர்களும், சிலகாரணங்களால் பாஹ்யாதி தந்த்ரங்களை விட்டுவிடப் பயந்து, மாநஸிக வ்யாபாரமின்றிக்கே சில கர்மாநுஷ்டாநங்களை வ்ருதாவாக அநுஷ்டித்து வருகிறார்கள். ப்ராயேண இன்னும் ஸ்வல்ப காலத்தில் இவைகளும் லோபத்தை அடைந்து விடலாம். இந்த ஸ்திதி லௌகிகர்களென்று வ்யவஹரிக்கப் படுமவர்களிடத்தில் மாத்திரம் காணப்படுகின்றது என்பது இல்லை; வைதிகர்களென்று பெயர்பூண்டிருக்குமவர்களிடமும் இதே ஸ்திதி தென்படுகின்றது.

இப்படி ஸார்வத்ரிகமாக ஸ்மார்த்த கர்மங்களிலே ஒரு லோபம் உண்டாகியிருக்க, ஶ்ரௌதங்களில் நாம் ப்ரத்யாஶை வைப்

பது ஸபலமாகுமா? அம்மாதிரியான கர்மாநுஷ்டாநங்களில் நிருபாதிக விஶ்வாஸம் கொண்டிருக்குமவர்கள் தம்முடைய ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடிக்கொள்வதற்காக அவைகளை வேண்டுமானால் அநுஷ்டித்து வரலாமே தவிர இதரர்களை அந்த அநுஷ்டாநத்தில் திருப்ப முயல்வது வ்ருதாவாகவே முடியும் என்பதில் ஸந்தேஹமில்லை.

ஆனால், இப்படிக் கர்மலோபம் ஸம்பவிப்பதனால் ஜகத்திற்கு ஒரு நாஶம் ஏற்படும் என்று உணர்ந்திருப்பவர்கள் அம்மாதிரியான லோபம் வரவொட்டாமல் தடுக்க முயல்வது அவஶ்யமன்றோ? அவர்கள் ஔதாஸீந்யத்தை வஹித்திருப்பது பிசகாகாதா? என்று கேட்கலாம். அவர்கள் உதாஸீநர்களாக இருக்க வேண்டுமென்பது நம்முடைய அபிப்ராயமன்று; பெருத்த ப்ரத்யாஶையுடன் வீணில பரிஶ்ரமப்படுவதைக் காட்டிலும், தேஶ காலங்களை அநுஸரித்து எவ்வளவு ஸாத்யமான அம்ஶமோ அவ்வளவுக்கு மாத்திரம் ப்ரயத்நப்படுவது உசிதமாகும் என்பது தான் நாம் இவ்விதமாக எழுதினதின் தாத்பர்யம். "ஸ ஶ்வவ்ருத்தா க்ஷாவம" என்று ஸர்வாதமமாகவும் பெரிய பாதித்யத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் சொல்லப்பட்டிருக்கும் ஸேவக வ்ருத்தியை ப்ராஹ்மணர்கள் த்யஜித்து விடவேண்டும் என்றும், ஹூணபாஷாப்யாஸமும் புகைவண்டி யாத்திரையும் பரம்பரையாகவாவது ஸாக்ஷாத்தாகவாவது பாதித்யாவஹங்களாகிறபடியால், அவைகளை விட்டுவிட வேண்டுமென்றும், சில சீர்திருத்தங்களைச் செய்ய ஒருவன் இக்காலத்தில் முயன்றால், அந்த முயற்சி ஶாஸ்த்ரத்திற்கு மிகவும் ஒத்ததாக இருந்தாலும் கேவலம் பரிஹாஸாஸ்பதமாகுமே தவிர ஸபலமாகுமா? இவைபோன்ற வ்யாபாரங்களில் தர்ம லோபத்திற்கு ஹேது விருந்தாலும், பஹுஜந ப்ரவ்ருத்தி ஸம்பவித்திருந்தால, சீர்திருத்தங்களைச் செய்ய விரும்புவோர் இவைகளை ஆத்யந்திகமாக நிறுத்த ப்ரயத்நப்படாமல், இவைகளால் உண்டாகும் தர்ம லோபாதிகளைக் குறைக்கவேண்டுவதற்கான மார்க்கத்தைத் தேடுவதே ஶ்லாக்யமாகும் என்பதுதான் நம்முடைய அபிப்ராயம்.

"அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ஶௌசமிந்த்ரியநிக்ரஹ: ।
தாநம் தமோ தயா க்ஷாந்தி: ஸர்வேஷாம் தர்மஸாதநம் ॥"

என்கிறபடி ஸகல ப்ரஜைகளுக்கும் பொதுவான தர்மங்களாகிற அஹிம்ஸை, ஸத்யம் பேசுதல், திருடாமலிருத்தல், சித்தம்



தேஹம் இவைகளுடைய ஶுத்தி, இந்த்ரியங்களை நியத விஷயங்களில் வர்த்தித்தல், யதாஶக்தி அந்நம் முதலியவைகளின் தாநத்தால் ப்ராணிகளின் ஆர்த்தியைப் பரிஹரித்தல், அந்த:கரண ஸம்யமம், ஆபந்நரக்ஷணம், பொறுமை இவைகளை ஒருபொழுதும் கைவிடாமல் இருக்கவேண்டுமென்றும்,

"ஆர்ஜவே தத்ஸ்பர்ஶம் வ்ருத்திரஹிதா ஶோதாம் தயா"

என்கிறபடி மாத்ஸர்யாதிகளற்று ஆர்ஜ்ஜவம் நிறைந்திருக்கும்படி வர்த்தித்து வரவேண்டுமென்றும், இந்தக் குணங்களுக்கு ஹாநியை விளைவிக்காத ஒரு வ்ருத்தியை அவலம்பித்து அந்த வ்ருத்தியில் வர்த்தித்துக்கொண்டே யதாஶக்தி ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் முதலிய ஸ்வகர்மங்களை அநுஷ்டித்து வரவேண்டுமென்றும், இப்பொழுது நம்மால் போதிக்கக்கூடிய ஸ்திதியில் இருப்பவர்களுக்கு நாம் போதித்தால், அதுவே போதுமானதாக இருக்கும் என்றே நாம் நினைக்கிறோம். இந்தப்படி ஒருவன் ஸரியாக அநுஷ்டித்து வந்தால் அவன் இதர கர்மங்களை விட்டவனே ஆயினும், பகவானால் அநுக்ரஹிக்கப்படுவன் என்பதில் நமக்கு ஸந்தேஹமே இல்லை. இந்தத் தர்மங்களுக்கு லோபம் வராமல் இவைகளை ஸம்ரக்ஷிக்கும்பொருட்டுச் செய்யப்படும் ப்ரயத்நங்கள் லோகத்தின் ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கத் தகுந்தவைகளே தவிர, இதர பெரிய ப்ரத்யாஶைகள் இக்காலத்தில் ஶ்ரேயஸ்ஸாதகங்களாகா. ஆதலால், ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டுப் பரிஶ்ரமப்படுபவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து சாதுர்வர்ண்ய விபாகத்தை ஸாங்கர்யமின்றிக்கே ஸம்ரக்ஷிப்பதற்கும், தேஹ ஶுத்திக்கும் சித்த ஶுத்திக்கும் நியத ஹேதுவான ஸ்நாநம், ஸந்த்யாவந்தநம், மற்றும் இவைபோன்ற முக்யமான சில கர்மாநுஷ்டாநங்கள் முதலியவைகளுக்கு ஆத்யந்திக லோபம் வரவொட்டாமல் தடுப்பதற்கும், ஸர்வஜந ஸாதாரணமான ஸர்வபூத ஸௌஹார்த்தம் முதலிய தர்மங்களைச் சரிவர அநுஷ்டிக்கும்படி செய்வதற்கும் ப்ரயத்நப் படவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

"ஸ ஏவ பந்தா: ஸர்வேஷாம் யஜ்ஞாத்யாயாத்யய க்ஷேணாம் ।
ஸர்வபூத ஹிதே ரக்தோ யதோ வேதேஷு பாஷிதம் ॥"

இத்யாதியான வாக்யங்களே நமக்கு ஶரணம்.

ஶ்ரீ:.

# ஶ்ரீ ஆளவந்தார் வைபவம்.

ஶ்ரீ ஆளவந்தார் அல்லது யாமுநமுநி யென்று சொல்லப்படும் பாகவதோத்தமர், சற்றேறக்குறைய 1000 வருஷத்துக்கு முன்னமே எழுந்தருளியிருந்தார். அவர், நமது ஶ்ரீவைஷ்ணவகுலத்திற்குக் கூடஸ்தரான ஶ்ரீநாதமுநிகளுடைய பௌத்ரர். சோளதேஶத்தில் காவேரீதீரத்தை ஆஶ்ரயித்திருக்கும் வீரநாராயணபுரமென்னும் அக்ரஹாரம், இந்த மஹாநுடைய அவதாரஸ்தலம். ஒரு ஸமயத்தில், இவருடைய பிதாமஹரான ஶ்ரீநாதமுநிகள், தமது திருத்தகப்பனாராகிற ஈஶ்வரபட்டர் தமது திருக்குமாரராகிற ஈஶ்வரமுநிகள் என்னும் இருவருடனும், தீர்த்தயாத்ரையாக அநேக ஸ்தலங்களுக்குப் புறப்பட்டுப்போய், ப்ருந்தாவநத்திற்கு வந்தவுடன் அந்த ப்ரதேஶத்தின் ரமணீயதையைப்பார்த்து, கொஞ்சகாலம் அவ்விடத்திலேயே வஸித்து, பிறகு பகவதாஜ்ஞையின்பேரில் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தமது ஊருக்கு எழுந்தருளினார். ப்ருந்தாவநத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது யமுனைத் துறைவனாகிற ஶ்ரீகண்ணபிரானுடைய அநுக்ரஹத்திற்கு அவர்கள் விஶேஷித்துப் பாத்ரமானபடியாலும், அந்தக்கண்ணபிரானிடம் ஶ்ரீநாதமுநிகளுக்கு அஸாதாரணமான பக்தி ஜநித்தபடியாலும், தமது புத்ரராகிற ஈஶ்வரமுநிக்கு ஜநிக்கும் புத்ரனுக்கு யமுனைத்துறைவனென்று பெயரிடவேண்டுமென்று ஶ்ரீநாதமுநிகளுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அந்தத் திருவுள்ளத்தை அநுஸரித்தே ஶ்ரீ ஆளவந்தாருக்கு யமுனைத்துறைவனென்றும், யாமுநாசார்யனென்றும் திருநாமங்கள் வழங்கி வருகின்றன.

இவருக்கு ஆளவந்தார் என்னும் திருநாமம் வந்ததற்குக் காரணம் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. இவர், மஹாபாஷ்யபட்டரென்னும் ஒரு ஸ்வாமியினிடத்தில் ஶிஷ்யராக இரு



ந்துகொண்டு ஶாஸ்த்ரபடநம் செய்துவந்த காலத்தில், அந்தத் தேஶத்தின் ராஜஸதஸ்ஸில் ஆக்கியாழ்வானென்று ஒரு பண்டிதன் இருந்தான். அவன் ராஜப்ரீதியை விஶேஷித்து அடைந்திருந்தபடியால், அவன் அந்தத் தேஶத்திலிருக்கும் பண்டிதர்கள் எல்லாரிடமிருந்தும் தஶபந்தம் (அதாவது - வரும்படியில் பத்தில் ஒரு பாகம்) என்கிற ஒரு கப்பம் வாங்கிவந்தான். ஒரு ஸமயம், மஹாபாஷ்ய பட்டரிடமிருந்து அந்தக் கப்பத்தை வாங்கி வரும்படி ராஜஸேவகர்களை அவன் அனுப்பியபொழுது, மஹாபாஷ்ய பட்டர் 'இந்தத் தஶையும் நமக்கு வந்துவிட்டதே!' என்று வருந்தி மிகவும் உத்விக்நராக இருந்தார். அவரது ஶிஷ்யரான ஆளவந்தார், தமது ஆசார்யன் உத்விக்நராக இருப்பதை ஸஹியாமலே ராஜஸேவகர்கள் கொண்டுவந்த ஆஜ்ஞா பத்ரிகையைத் தாமே வாங்கி, அந்த ஸேவகர்கள் முன்னிலையிலே அதைக்கிழித்து, 'இந்தக் கப்பத்தை நாம் செலுத்தமாட்டோம்; எங்களைக் கேவலம் கவிகளாகவாவது தந்த்ர ஶாஸ்த்ரத்தில் ஸமர்த்தர்களாகவாவது எண்ணிவிடவேண்டாம். எங்களை ப்ரதிவாதிகளாகிற மதம்பிடித்தயானைகளின் கொழுப்பை அடக்கக்கூடிய ஸிஹ்மங்களாக அறியவேண்டும்' என்கிற அர்த்தமுள்ள பின்வரும் ஶ்லோகத்தைப் பதில் ஸமாசாரமாக எழுதி அனுப்பினார்.

"𑌨 𑌵𑌯𑌂 𑌕𑌵𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌨 𑌵𑌯𑌂 𑌕𑍇𑌵𑌲𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌰𑌗𑌾𑌃 ।
𑌅𑌪𑌿 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌵𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌕𑌟𑌾𑌟𑍋𑌪𑌵𑌿𑌪𑌾𑌟𑌨𑌕𑍍𑌷𑌮𑌾𑌃 ॥"

இப்படி இவர் ப்ரத்யாக்யாநம் செய்த வார்த்தை ராஜ்ஞியினுடைய காதுக்கு எட்டினவுடன், அந்த ராஜ்ஞீ சற்று ஆலோசித்து, 'இவ்வளவு தைர்யத்துடன் நடப்பவர் ஒரு மஹாநாகவே இருக்கவேண்டும்' என்று எண்ணி, ராஜாவைப்பார்த்து 'ஹே ராஜந்! இந்த ஶ்லோகம் அனுப்பின வித்வானை இங்கு அழைத்து வரும்பொருட்டுத் தகுந்த மனிதர்களை உசிதமான மர்யாதையுடன் அனுப்ப ப்ரார்த்திக்கிறேன்' என்று விஜ்ஞாபித்தாள். இப்படிச்செய்வது ஆக்கியாழ்வானுக்கு அநபிமதமாக இருக்கையிலும், அரசன் புத்திஶாலியானதால் ஆழ்வானைக் கேட்காமலே ஶிபிகை முதலியவைகளுடன் தனது மந்த்ரிகளில் ஒருவரை அனுப்பினான். ஆளவந்தார், அரசனுடைய ஸாதுபாவத்தை உணர்ந்து, அவனுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி, தமது ஆசார்யனுடனும் மற்றை வித்வாங்களுட

னும், பின்வரும் பிருத ஶ்லோகத்தைத் தமது ஸுஹ்ருத்துக்களைக் கொண்டு உத்கோஷித்துக்கொண்டே ராஜஸதஸ்ஸுக்கு எழுந்தருளினார்.

“𑌆 𑌶𑍈𑌲𑌾𑌦𑌦𑍍𑌰𑌿𑌕𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑌣𑌕𑌿𑌸𑌲𑌯𑌨𑍍𑌯𑌾𑌸𑌧𑌨𑍍𑌯𑍋𑌪𑌕𑌣𑍍𑌠𑌾-
𑌦𑌾 𑌰𑌕𑍍𑌷𑍋𑌨𑍀𑌤𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌖𑌕𑌮𑌲𑌸𑌮𑍁𑌲𑍍𑌲𑌾𑌸𑌹𑍇𑌤𑍋𑌶𑍍𑌚 𑌸𑍇𑌤𑍋𑌃 ।
𑌆 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌧𑌰𑌯𑍁𑌗𑌲𑌾𑌦𑌰𑍍𑌕𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌤𑌂𑌸𑌾-
𑌨𑍍𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌗𑍍𑌮𑌶𑍍𑌰𑌮𑌵𑌿𑌮𑌲𑌮𑌨𑌾 𑌮𑍃𑌗𑍍𑌯𑌤𑌾𑌂 𑌮𑌾𑌦𑍃𑌶𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 ॥”

[பார்வதியினுடைய சரணவிந்யாஸங்களால் தந்யமாகியிருக்கும் ப்ரதேஶங்களையுடைய ஹிமவத்பர்வதம்முதல், ராவணனால் அபஹரிக்கப்பட்ட ஸீதாதேவியினுடைய திருமுக மண்டலத்திற்கு மலர்ச்சியைக் கொடுக்கும் ராமஸேது பர்யந்தமும், ஸூர்ய சந்த்ரர்களுடைய உதய அஸ்தமயங்களுக்கு ஹேதுவாகிற கிழக்கு மேற்கு மலைகளின் நடுவிலுமுள்ள இந்தப் பூலோகத்தில், பூர்வோத்தர மீமாம்ஸைகளில் பரிஶ்ரமப்பட்டு அதனால் நைர்மல்யத்தை அடைந்திருக்கும் மநஸ்ஸையுடைய எனக்குத் துல்யமான ஒரு வ்யக்தியு முண்டோ?]

ராஜா, ஆளவந்தாரை ப்ரத்யுத்தாநாதி ஸத்காரங்களால் உபசரித்து ஸதஸ்ஸுக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய், பலவிடங்களிலிருந்து வந்திருந்த வித்வத்ரத்நங்களால் நிறைந்துள்ள தனது ஸதஸ்ஸில் ஆக்கியாழ்வானுக்கும் ஆளவந்தாருக்கும் வாதத்தை ப்ரவர்த்திப்பித்தான். அப்பொழுது அங்கு ஸந்நிஹிதையாயிருந்த ராஜ்ஞீ, ஆளவந்தாருடைய முகத்திலுள்ள தேஜஸ்ஸைப் பார்த்து, அரசனுடன், ‘ஹே ராஜந்! நிஶ்சயம் இந்தச் சிறுவரே ஜயிப்பர்; ஜயிக்காவிட்டால் அடியேன் உமக்குத் தாஸியாகிறேன்’ என்று சொல்ல, அரசனும், ‘ஹே தேவி! நீ சொல்லுகிறபடி அவர் ஜயித்தால் என் ராஜ்யத்தில் பாதியை அவருக்கு நான் கொடுத்துவிடுகிறேன்’ என்று மறுமொழி கூறினான். இந்தச் சிறுவருடைய தேஜஸ்ஸை ஸஹிக்காமல் கோபங்கொண்ட ஆக்கியாழ்வான், ஆளவந்தார் சொல்லும் எல்லாவற்றிற்கும் விதண்டை சொல்லி ஸமர்த்திப்பதாக ப்ரதிஜ்ஞைகூற, ஆளவந்தார், பின்வருமாறு மூன்று வாக்யங்களைச் சொன்னார்:—



(1) 𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑌾𑌤𑌾 𑌨 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 [உன் தாயார் மலடியன்று]

(2) 𑌰𑌾𑌜𑌾 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌃 [இந்த அரசன் ஸார்வபௌமன்]

(3) 𑌰𑌾𑌜𑌪𑌤𑍍𑌨𑍀 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 [இந்த ராஜ்ஞீ பதிவ்ரதை].

அவற்றைக்கேட்ட ஆக்கியாழ்வானும் அவனைச்சார்ந்த வித்வாங்களும் ஸுசிரம் இதை ஆலோசித்தும், இவைகளுக்கு விதண்டை சொல்வது எவ்விதத்திலும் அஸாத்யமாகி விட்டதால், எல்லாரும் நிருத்தரர்களாக நின்று விட்டார்கள். பிறகு, ஆளவந்தார் தாமே அந்த மூன்று வாக்யங்களுக்கும் விதண்டைசொல்லி ஸமர்த்திக்கவே, அதுகேட்டு மிக்க ப்ரஹர்ஷத்தை அடைந்த ராஜ்ஞீ, தனது ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றின அந்தச் சிறுவரை நோக்கி, ‘என்னை ஆள (ரக்ஷிக்க) வந்தீரோ?’ என்று பஹுமானத்துடன் கொண்டாடினாள். அதுமுதல் இவருக்கு ஆளவந்தார் என்னும் திருநாமம் ப்ரதிதமாயிற்று. அரசனும் தனது ப்ரதிஜ்ஞைப்படிக்கே பாதிராஜ்யத்தைக் கொடுக்க, அதைப்பெற்று ஆளவந்தார் ராஜ்யபாரம் செய்துகொண்டு ஸந்துஷ்டராக வர்த்தித்து வந்தார்.

ஸ்ரீ ஆளவந்தாருடைய பிதாமஹராகிற ஸ்ரீ நாத முநிகளுக்கு எட்டு ஶிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள் முக்யர், உய்யக்கொண்டார் என்னும் ஸ்ரீ புண்டரீகாக்ஷர். நாதமுநிகள் தமக்கு யோகத்தால் தேஹ வியோகம் நேருமுன்னமே, இந்த உய்யக்கொண்டாரை அழைப்பித்து, ‘நமது புத்ரனாகிற ஈஶ்வர முநிக்கு ஒரு ஸாத்விகபுத்ரன் ஜநிக்கப்போகிறான். அவனுக்கு யமுனைத்துறைவனென்று பெயரிடும்படி ஈஶ்வர முநியிடம் சொல்லியிருக்கிறோம். நீர் அந்த யமுனைத்துறைவனுக்கு, நம்மால் உமக்கு உபதேஶிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ தர்ஶநத்தை உபதேஶம் செய்யவேணும்’ என்று நியமித்திருந்தார். ‘அந்த நியமநத்தை எப்பொழுது அநுஷ்டிக்கப் போகிறோம்’ என்று உய்யக்கொண்டார் ஆவலுடன் ப்ரதீக்ஷித்திருந்தும், ஸ்ரீ ஆளவந்தார் ஜநிக்கும் முன்னமே தமக்கும் தேஹவியோகம்நேர்ந்துவிடும் என்பதை உணர்ந்து, தம்முடைய ஆப்தஶிஷ்யரான மணக்கால் நம்பி என்னும் ஸ்ரீராம மிஶ்ரரிடம் அந்த நியமநத்தை நிவேதித்துவிட்டு, அவரும் எம்பெருமான் திருவடிகளைச் சேர்ந்தார். ஸ்ரீராம மிஶ்ரர் ஆளவந்தாருடைய பரிபக்வகாலத்தை ப்ரதீக்ஷித்திருக்கும் ஸமயத்தில்தான்,

நாம் கீழ்க்கூறியிருக்கும் விஜயம் ஆளவந்தாருக்கு நேர்ந்தது. இந்த விஜயத்தைக் கேள்விப்பட்டு, ஸ்ரீராமமிஶ்ரர், மஹத்தான ஸந்தோஷத்தை அடைந்து, ஆளவந்தாரைப் பார்க்கவேணுமென்கிற இச்சையுடன் அவருடைய முக்யநகரத்திற்கு வந்து சேர்ந்தார். ஆனால், ராஜாவின் ஸாந்நித்யத்திற்கு ப்ரவேஶம் கிடைப்பது துர்லபமாயிருந்ததால், ராஜ மஹாநஸத்திற் சென்று, அங்குப்பாசகர்களாக இருந்த ப்ராஹ்மணர்களுடன் ஸக்யம் செய்து, அவர்களிடமிருந்து 'தூதுளை என்னும் ஶாகம் ஆளவந்தாருக்கு அத்யந்தம் அபிமதம்' என்பதைத் தெரிந்துகொண்டு, 'அதைத் தாமே ஸம்பாதித்து ப்ரதிதிநம் கொடுத்துவந்தால், ஒருகால் ராஜப்ரீதி கிடைக்கும்' என்று எண்ணி, அந்த ஶாகத்தை ஒருதிநம் கூடத் தவறாமல் ஆறு மாஸம் கொடுத்துவந்தார். இப்படிச் செய்தும் ராஜவிமர்ஶம் நேராததுபற்றி மிகவும் துக்கிதராய்ச் சிலநாள் அந்தஶாகத்தைக் கொண்டுவந்து கொடாமல் நிற்கவே, ஆளவந்தார் பாசகர்களை நோக்கி, 'ஏன் இரண்டு மூன்று திநங்களாகத் தூதுளை பாகம்செய்யவில்லை?' என்று ப்ரஶ்நம் செய்தார். அதற்கு அவர்கள், 'ஆறுமாஸமாக யாரோஒரு ப்ராஹ்மணன் தவறாமல் அந்தக் கீரையைக் கொடுத்து வந்தார்; இப்பொழுது இரண்டு மூன்று திநங்களாக வராததால் செய்யப்படவில்லை' என்று மறுமொழி கூறினார்கள். 'நல்லது; அப்படியானல், அவர் மறுபடியும் வந்தால், அவரை என்னிடம் அழைத்துவரவேணும்' என்று ஆளவந்தார் ஆஜ்ஞாபித்துவிட்டுப் போக, அதற்கு மறுதிநமே, ராமமிஶ்ரர் தூதுளையைக்கொண்டு வருவதைப்பார்த்த பாசகர்கள், அவரை ஆளவந்தாரிடம் அழைத்துக்கொண்டு போய் விட்டார்கள். ஆளவந்தார், அந்த ப்ராஹ்மணனை நோக்கி, 'ஹே ப்ராஹ்மண! நீர் செய்யும் உபக்ருதி எனக்கு மிக்க ஸந்தோஷத்தை விளைவிக்கிறது. உமக்கு என்ன அபேக்ஷிதம்? தந தாந்யாதிகளில் எது தேவையானாலும் கொடுக்கிறேன்' என்று கேட்க, ராமமிஶ்ரர், 'ஹே ராஜந்! அதுபோன்ற ஸம்மாநம் ஒன்றையும் எதிர்பார்த்து நான் இந்தக் கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கவில்லை. உம்முடைய பெரியோர்கள், ஒருநிதியை என்னிடம் ஒப்புவித்து அதை ஸரியான ஸமயம் நேரும்பொழுது உம்மிடம் கொடுக்கும்படி ஆஜ்ஞாபித்திருக்கிறார்கள். அதைக்கொடுக்க வரும் எனக்குத் தடையின்றிக்கே உம்முடைய ஸந்நிதாநத்திற்கு ப்ரவேஶம் இருக்கும்படி த்வாரஸ்தர்களுக்கு ஆஜ்ஞாபிக்க



வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றுசொன்னார். அது கேட்டு மிக்க ஆநந்தமடைந்து ஆளவந்தார் 'அப்படியே செய்கிறோம்' என்றுசொல்லி, ப்ரதிதிநமும் அவரை நிராபாதமாகவே உள்ளே வரவழைத்து, அவர்செய்த பகவத்கீதா ஸம்பந்தமான உபதேஶம் முழுவதையும் நன்றாகக் கேட்டு உணர்ந்து, பகவானிடத்தில் பக்தியுடனும், 'இப்படிப்பட்ட தத்வஜ்ஞாநமில்லாமல் இவ்வளவுகாலம் சென்றுவிட்டதே' என்பதில் மிக்க ஆர்த்தியுடனும், இல்வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாகப் பற்றுதலற்றவராகி, ராமமிஶ்ரரைத் தமது ஆசார்யராகவே வரித்து, 'ஹே ஸ்வாமிந்! எனது பெரியோர்கள் எனக்காக வைத்திருந்த நிதியின் மஹிமையை நான் என்னசொல்வேன்? அடியேனுக்கு இன்னும் பரமமான உபகாரத்தைச்செய்ய க்ருபை செய்யவேணும்' என்று ப்ரார்த்தித்தார். ராமமிஶ்ரரும் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி, சரமஶ்லோகார்த்தத்தை அவருக்கு உபதேஶித்து, அவருடைய பரிபக்வமான மநஸ்ஸின் ஸ்திதியைப் பார்த்து,

"[illegible]
[illegible]"

என்று ஜ்ஞாந வர்த்தகமாகவும் புண்ய வர்த்தகமாகவுமிருக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய ஸேவையை அவருக்குச் செய்து வைத்து, 'ஹே ராஜந்! இதுதான் நான் உமக்கு ந்யாஸமாக வைத்து வந்த நிதி; இந்தப் பகவத் ஸேவையைத் தவறாமல் நீர் அநுபவித்து வரவேணும்' என்று அநுக்ரஹிக்கவே, ஆளவந்தார் அந்தப்பகவதநுபவத்திலே மக்நராய், இனி அந்த அநுபவத்திற்கு விச்சேதம் வராமலிருப்பதற்காக அந்த க்ஷணத்திலே துரீயாஶ்ரமத்தை அங்கீகரித்து, அதுமுதல் அங்கேயே எழுந்தருளியிருந்து, தம்மை ஆஶ்ரயித்த அநேக ஶிஷ்யர்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவ தர்ஶநத்தை உபதேஶித்துக்கொண்டு ஆநந்த பரிதராய்ப் பஹுகாலம் வர்த்தித்து வந்தார்.

ஸ்ரீராமமிஶ்ரரால் ஆளவந்தாருக்குக் கொடுக்கப்படவேண்டிய ந்யாஸங்களில் இன்னும் ஒன்று அவஶிஷ்டமாக இருந்தது. ஆளவந்தாருடைய பிதாமஹரான நாதமுநிகள், ஶாஸ்த்ரீயமானதும் பகவத்பக்தர்களால் அநுஷ்டிக்க வேண்டுவதுமான அஷ்டா

ங்க யோகமென்னும் வித்யையை அப்யஸித்திருந்தார். அதை அவர் அநுஷ்டித்து வந்து, அந்த வித்யையின் மாஹாத்ம்யத்தை நன்றாக உணர்ந்தவராக இருந்தபடியால், அது லுப்தமாகாமலிருக்கும் பொருட்டுத் தமது முக்யஶிஷ்யர்களில் ஒருவரான குருகை காவலப்பனுக்கு அதை உபதேஶம் செய்திருந்தார். உய்யக்கொண்டார் தமக்கு இன்னும் அந்த வித்யைக்குத் தகுந்த மநஸ்ஸுத்திவரவில்லையென்று தம்மிடத்தில் ப்ரத்யயக்குறைவு இருந்தபடியால் அதைத் தாம் உபதேஶம் செய்துகொள்ளவில்லை. ஆனால், அந்த வித்யைக்கு ஆளவந்தார் தகுந்த அதிகாரியானதால், அவரைக் குருகை காவலப்பனிடமிருந்து அந்தவித்யையைப்பெற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்கிற எண்ணம் உய்யக்கொண்டாருக்கு இருந்தது. தமது அந்த்யகாலம் ஸமீபித்தவுடன் அந்தச்செய்தியையும் ஆளவந்தாரிடம் சொல்லிவிட்டு ஸ்ரீ ராமமிஶ்ரர் பரமபதமடைய, ஆளவந்தார், குருகை காவலப்பன் எழுந்தருளியிருந்த இடம் தேடிப்போய், உபதேஶத்திற்காக அவரை ப்ரார்த்தித்தார். அப்பன், ஆளவந்தாருடைய ஸாத்விக குணத்தைப்பார்த்து ஸந்தோஷித்து, 'அடுத்த புஷ்ய மாஸத்தில் வந்து சேரும்' என்று ஒருகாலத்தைக் குறிப்பிட்டு நியமிக்க, ஆளவந்தார் அந்தக்காலத்தை ஆவலுடன் ப்ரதீக்ஷித்துக்கொண்டே ஸ்ரீரங்கம் எழுந்தருளினார். எம்பெருமானுடைய ஸங்கல்பம் அந்யதாவாக இருந்தபடியால், அந்த உபதேஶம் ஆளவந்தாருக்கு நேராமலே போய்விட்டது.

ஸ்ரீ ரங்கம் திரும்பிவந்தவுடன் அநந்தஶயநம்போய்ப் பத்மநாபனை ஸேவிக்கவேணுமென்கிற ஆஶையுடன் ஆளவந்தார் அங்கு எழுந்தருளி மங்களாஶாஸநம் செய்துகொண்டிருக்கையில், குருகை காவலப்பனுடைய நியமநம் ஸ்பூர்த்திக்குவரவே, குறிப்பிட்ட காலத்தை நிரூபித்துப் பார்க்கும் பொழுது, ஸ்பூர்த்திக்கு வந்த க்ஷணமே குறிப்பிட்ட க்ஷணமாக இருந்தது. ஆளவந்தார், 'ஹா! மோசம் போய்விட்டோமே!' என்று முதலில் நினைத்து, பிறகு, 'பகவத் ஸங்கல்பம் அப்படியிருந்தால் நாம் செய்யக்கூடியது என்ன?' என்று ஸமாதாநத்தைச் செய்துகொண்டு ஸ்ரீரங்கம் திரும்பி எழுந்தருளி யதாபூர்வம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்துகொண்டு அநேக ஶிஷ்யர்



களுடன் காலத்தை நயிப்பித்து வந்தார். குருகை காவலப்பனும் ஆளவந்தார் வராததைப் பார்த்து 'இப்படி நேர்வது எம்பெருமானுடைய திருவுள்ளம்' என்று எண்ணி, ஒருவருக்கும் அந்த வித்யையை உபதேஶிக்காமலே பரமபதத்தை அடைந்துவிட, யோக வித்யையே இப்பொழுது லுப்தமாகிவிட்டது.

இப்படி வர்த்தித்து வரும் காலத்தில், ஒருபொழுது, ஆளவந்தார், ஸ்ரீ தேவாதிராஜனை ஸேவிக்கவேண்டுமென்கிற ஆஸ்தையுடன் ஸத்யவ்ரத க்ஷேத்ரமென்னும் காஞ்சீ நகரத்திற்கு எழுந்தருளி, பகவத் ஸந்நிதியில் ஶிஷ்யர்களுடன் பகவத்ஸேவையை அநுபவித்து இருக்கையில், யாதவப்ரகாஶனென்னும் ஓர் ஆசார்யன் தனது ஶிஷ்யப்ருந்தத்துடன் அந்த ஸந்நிதிக்கு ஸேவார்த்தம் வந்தான். அந்த ஶிஷ்ய ப்ருந்தத்தில் அதிவிலக்ஷணமான தேஜஸ்ஸுடன் ப்ரகாஶித்து நிற்கின்ற பதினெட்டு வயஸ் உள்ள ஒரு ப்ரஹ்மசாரியைப் பார்த்து, ஆளவந்தார் கொஞ்சம் விஸ்மயமடைந்து, தமது ஶிஷ்யர்களால் 'ஹே ஸ்வாமிந்! ஏற்கெனவே ஸ்ரீராமாநுஜனென்னும் ஒரு மஹாமேதாவீ காஞ்சீநகரத்தில் யாதவப்ரகாஶனிடம் அந்தே வாஸியாக இருக்கிறார் என்று நாம் கேள்விப்பட்டிருந்தோமே! அந்த மஹாந்தான் இவர்' என்று விஜ்ஞாபிக்கப்பட்டவராய், அப்பொழுதே அவருக்கு வித்யோபதேஶங்களைச் செய்யவேணுமென்கிற எண்ணம் உண்டாயிருக்கையிலும், ஸரியான காலம் ஸம்பவிக்கட்டுமென்று திருவுள்ளம்பற்றி, தமது கடாக்ஷங்களால் மாத்திரம் அவரை அநுக்ரஹித்துவிட்டு ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பி எழுந்தருளிவிட்டார். அங்கே போனபிறகு ஸ்வல்ப காலத்திற்கெல்லாம், தம்முடைய இந்த்ரியங்களுக்கு அபாடவம் நேர்வதைப் பார்த்து, அவர், தமது ஶிஷ்யர்களிற் சிலரை ஸ்ரீராமாநுஜனிடம் அனுப்ப, ராமாநுஜனும், ஆளவந்தாருடைய நிர்வ்யாஜ வாத்ஸல்யத்தை உணர்ந்து, அவரை ஆஶ்ரயிக்கவேணுமென்கிற ஆவலுடன் அதித்வரிதமாக ஓடிவந்தும், அவர் ஸ்ரீரங்கம் வருமுன்னமே ஆளவந்தார் திருநாட்டை அலங்கரிக்கும்படி நேர்ந்துவிட்டது. ஆனால், ஸம்ஸ்காராதிகள் நடக்காமலிருந்தபடியால் ஆளவந்தாருடைய சரம திருமேனியை ஸேவிக்கும்படியான பாக்யம் பெற்றவராய், ஸ்ரீ ராமாநுஜன், அதி த்ருஷ்ணையுடன் அதை ஸேவித்து வருகையில், ஸ்வாமியின் திருக்கைகளில் மூன்று விரல்கள் மடங்கியிருப்பதைக் கண்டு அங்கிருந்தவர்களைப் பார்

ஸ்ரீ:-

# ஹிந்து மதத்திற்கு ஒரு பரிபவ ஹேது.

கனம் பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ குத்தி கேசவப்பிள்ளை யென்பவர், நாளது ஏப்ரல் மாஸம் 25 ம் வ ஹிந்து பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

ஹிந்து மதத்தை அவலம்பித்திருக்கும் ஆஸ்திகர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்:—இந்தப்ரதேசத்திலுள்ள ஸ்ரீசைலம் என்கிறபெரிய சிவஸ்தலமும் அஹோபிலம் என்கிற பெரிய விஷ்ணுஸ்தலமும் இவை இரண்டும் இப்பொழுது அத்யந்தம் சோசநீயமான தசையில் இருக்கின்றன. அநேகம் பெயர்கள், இன்னமும் இவைகளைப் பெரிய ஸ்தலங்களாக எண்ணிப் பஹுதூரத்திலிருந்து இவைகளுக்குத் திவ்யதேசயாத்ரையாக வருகிறார்கள். இந்த ஸ்தலங்களுக்குக் கணக்கற்ற விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. ஒரு ஸமயத்தில் அஹோபிலம் என்னும் ஸ்தலம் மஹம்மதியர்களுடைய உபத்ரவத்திற்குப் பாத்ரமாயிற்று. ஆனால், இவ்வளவு காலமாக இவைகளுக்கு நேர்ந்த விபத்துக்களைவிட, இப்பொழுது இவைகளின் தர்மகர்த்தாக்களாக இருக்குமவர்களுடைய அநாதரவும் க்ரமவிருத்தமான உபயோகமுமே பெருத்த விபத்தாக இருக்கின்றன. சைவமடமாகிற புஷ்பகிரி மடத்திற்கு ஸ்ரீ சைலம் சொந்தமாகவும், வைஷ்ணவமடமாகிற அஹோபில மடத்திற்கு அஹோபிலம் சொந்தமாகவும் இப்பொழுது ஆகிவிட்டன. இந்த மடங்களுக்குத் தாத்காலிக அதிபதிகளாக இருக்கும் ஜீயர்களும் அவர்களுக்கு முன்னிருந்த ஜீயர்களும், பக்திக்குறைவினாலோ அசக்தியினாலோ தமது தர்மத்தை ஸரியாக உணராததாலோ இந்த ஆலயங்களை நமது ஹிந்து மதத்திற்கே ஒரு பரிபவஹேதுவாகச் செய்துவிட்டார்கள். இந்த ஆலயங்கள் விஷயமாகத் தமக்கு இருக்கும் நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தை அவலம்பித்து பஹுகாலமாக அங்கு வரும்



ஸேவார்த்திகளிடமிருந்து ஏராளமான த்ரவியத்தை வசூல் செய்கிறார்கள். அந்தத் திரவியத்தில் ஸ்வல்பாம்சத்தைக்கூட இந்த ஆலயங்களுக்கு உபயோகப்படுத்துகிறதில்லை. இவர்கள் இந்த ஆலயங்களை ஒரு ந்யாஸசொத்தாக உணராமலே தம்மால் குத்தகைக்கு விடத்தகுந்த சொந்தச்சொத்துக்கள்போலவே பாவித்து வருகிறார்கள். ஆலயங்களைக் குத்தகைக்கு ஒத்துக்கொள்ளும் குத்தகைதாரர்களும் முன்னதாகவே ஜீயர்களுக்குக் குத்தகைப்பணத்தைக் கட்டிவிட்டு, யாத்ரிகர்களிடமிருந்து பணம் வசூல் செய்வதில் யாதொரு நியமத்தையும் வஹிக்கிறதில்லை; தமக்குத்தகுந்த லாபம் வரும்படி வசூல் செய்வதே இவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. வரும் ஸேவார்த்திகளுக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் கவரன்மெண்டாரால் செய்யப்படுகின்றனவே தவிர, இந்த ஜீயர்கள் அவைகளைப்பற்றிக் கவனிப்பதே இல்லை. குத்தகை விடவேண்டிய காலங்களில் மாத்திரம் இந்த ஆலயங்களின் ஜ்ஞாபகம் அவர்களுக்கு வருகின்றன,

அஹோபிலம் என்னும் ஸந்நிதி, பஹுகாலத்திற்கு முன்னமே நாஸ்திகனான ஹிரண்ய கசிபுவினிடமிருந்து தனது பக்தனாகிற ப்ரஹ்லாதனை ஸம்ரக்ஷிக்கும் பொருட்டுப் பகவான் ந்ருஸிம்ஹரூபியாக அவதரித்த ஸ்தலமென்று புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் அநாதிகாலமாக ஆலயமொன்று இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. ஆனால், விஜயநகரத்தின் அரசர்களில் ஒருவரான க்ருஷ்ண தேவராயன் காலத்தில்தான் அந்த ஆலயத்திற்கு ப்ரஸித்தி உண்டாயிற்று. பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்யும் பொருட்டு ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமி யென்னும் ஒருஜீயர் அந்தக் காலத்தில் ஒரு மடத்தை ஏற்படுத்தினார். அந்த அரசனும், அவனுடைய ஸதஸ்ஸில் வித்வானாக இருந்த அல்லஸானி பெத்தன்னா என்னும் கவியும், அவர்களுடைய விஷ்ணுசித்தீயம் மநுசரித்ரம் என்னும் க்ருதிகளில் இந்த ஜீயரால் தமக்கும் தமது ப்ரஜைகளுக்கும் ஆத்மவிஷயமாக உண்டான உபகாரத்தைப்பற்றி ச்லாகித்துப் பேசியிருக்கிறார்கள். இந்த ஜீயர் 22-வது வயதிலேயே ஸித்தாந்த ஸ்தாபநத்திற்காக ப்ரவ்ருத்தித்து, அஹோபிலத்தைத் தமது ஆஸ்தாநமாகக் கொண்டு பக்திப்ரதாநமான இந்த மதத்தை எல்

லாருக்கும் உபதேஶிக்கும்படி அநேக ஆசார்யர்களை வெளியில் அனுப்பினர். அவருடைய செல்வாக்கால் அவருடைய காலத்திலே அந்த மடத்திற்கு ஏராளமான சொத்துக்கள் சேர்ந்தன. பிறகும் சற்றேறக்குறைய இருநூறு வருஷ காலமாகப் புதிதாகச் சொத்துக்கள் சேர்ந்து வந்தபடியால், மடம் வரவர அபிவ்ருத்தியை அடைந்து கொண்டே வந்தது. மஹம்மதியர்கள் அஹோபிலம் வந்து உபத்ரவித்த பொழுது இந்தச் சொத்துக்களுக்கு ஒரு பெருத்த நாஶம் உண்டாயிற்று; ஆனால், ஆலயத்திற்கு எவ்வித நாஶமும் அப்பொழுது ஏற்படவில்லை. அந்த மஹம்மதீய உபத்ரவ காலத்தில் அப்பொழுது இருந்த ஜீயரால் தக்ஷிண தேஶத்திற்கு மாற்றப்பட்ட இந்த மடம், பிறகு உபத்ரவங்களெல்லாம் நிவ்ருத்தியாகியும் இந்த ப்ரதேஶத்திற்குத் திரும்பக் கொண்டுவரப்படவில்லை. ஆனால், மைஸூர் கத்வால் தஞ்சாவூர் முதலிய தேஶத்து அரசர்களாலும் ஶ்ருங்கேரி ஆதி ஶங்கராசார்யராலும் கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை மாத்திரம் ஜீயர்கள் நிராபாதமாக அநுபவித்து வருகிறார்கள். ஜீயர்களுக்கு இந்த ஸந்நிதிவிஷயமாக ஶ்ரத்தையே குறைந்துபோய் விட்டது; ந்யாஸ சொத்துக்களைப் பரிபாலநம் செய்யும் தர்மகர்த்தாக்களாகத் தங்களை அவர்கள் நினைக்கவே இல்லை. இந்தக்காரணத்தால், பாஶ்சாத்யர்களுக்குக்கூட ஒரு வியப்பை உண்டாக்கக்கூடிய அளவு ரமணீயமாக இருக்கும் இந்த அஹோபில ஆலயம் எவ்வித பராமர்ஶமுமின்றிக்கே அத்யந்தம் அநாத்ருதமாகப் பலவிடங்களில் இடிந்தும் பலவிடங்களில காடு வளர்ந்தும் இருக்கிறது. ஜகதுஜ்ஜீவநத்தின் பொருட்டு ஏற்பட்டுள்ள ஒரு பெரிய மடத்திற்கு அதிபதியாக இருக்குமவர், தமது ஐஶ்வர்யம் ஶக்தி செல்வாக்கு பெயர் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகிற இந்த ஸந்நிதி விஷயத்தில் இம்மாதிரி உதாஸீநராக இருப்பரா? என்று ஒருவர் நினைக்கலாம். அப்படி ஸந்தேஹப்படுவதற்குக் காரணமே இல்லை. யதார்த்தமாகவே மற்றை மதத்தைத் தழுவியுள்ளவர்களுக்குக்கூட விஶேஷித்த வருத்தத்தை ஜநிப்பிக்கக்கூடிய நிலைமையில் தான் இந்த ஆலயம் இப்பொழுது இருக்கின்றது. கொஞ்சநாள் முன்னமே நான் மஹாநந்தி என்னுமிடத்திற்குப் போயிருந்தபொழுது, ஒருஜில்லா கலெக்டர் இந்த அஹோபிலத்தைப் போய்ப் பார்த்ததாகவும், அதன் ஜீர்ண ஸ்திதியைக் கண்டு, 'ஹிந்துக்களுள் ஶ்ரத்



தாளுக்களே அற்றுப்போய்விட்டார்களோ? இந்த ஆலயத்தை அபிவ்ருத்தமாக்க வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டாலும், இடிந்து காடுமூடிப்போகாமலிருக்கும்படி ஸம்ரக்ஷித்துவருவதற்கு உரிய முயற்சியாவது செய்வார் ஒருவருமில்லையா?' என்று துக்கித்ததாகக் கேள்விப்பட்டேன். இந்த ஆலயத்திற்கு என்றே கொடுக்கப்பட்டிருக்கும் ஏராளமான சொத்துக்களின் வருமானத்தை அநுபவிக்குமவர்கள் எல்லாரும், ஜீயர்களென்று பெயர்பூண்டு பஹுகாலமாக இப்படி அநாதரித்து வருவதால் உண்டாகக்கூடிய பெரிய விபத்தை நிவாரணம் செய்ய அவஶ்யம் ப்ரயத்நப்பட வேண்டும்.

இவ்விடத்தில் மஹாநந்தீஶ்வரம் என்னும் ஒரு ஶிவஸ்தலம் இருக்கின்றது. அதற்கு ஸம்பந்தமாக விஶேஷ ப்ரஸித்தியடைந்துள்ள ஒரு ஸரஸ்ஸும் காடும் உண்டு. இவைகள் அவ்வளவாக த்ருப்திகரமான ஸ்திதியில் இல்லாததைப்பார்த்து, மஹாநந்தையா என்னும் ஒரு பக்தர் சில தர்மகர்த்தாக்களின் ஸஹாயத்தின் பேரில் ஏராளமான சீர் திருத்தங்களை அந்த ஸ்தலத்திற்குச் செய்திருக்கிறார். ஸர்க்கார் ஸஹாயமாவது வேறுவிதமான ப்ராசீந ஸர்வமாந்யமாவது கொஞ்சமேனும் அந்த ஆலயத்திற்கு இல்லை. இப்படியிருக்கையிலும், சென்ற பத்து வருஷங்களுக்குள், சற்றேறக்குறைய ரூ. 80,000 செலவிட்டு அந்த மஹாநந்தையா அவஶ்யமான கைங்கர்யங்களைச் செய்திருப்பதுடன் இன்னமும் மேன்மேல் அபிவ்ருத்திக்கு வேண்டுவதான முயற்சியைச் செய்து வருகிறார். இந்த மாதிரி கைங்கர்யங்களை ஸ்ரீ ஶைலத்திற்கும் ஸ்ரீ அஹோபிலத்திற்கும் செய்ய, மஹாநந்தையாவைப்போன்ற பக்தர் துர்லபராகி விட்டாரோ? ஜீயர்களுடைய மநஸ்ஸில் ஶ்ரத்தை அற்றுப் போய்விட்டாலும், ஸாதாரணமான பக்தர்கள் மநஸ்ஸிலாவது ஶ்ரத்தை இல்லாமல் போய்விட்டதோ?

ஸ்ரீ:.

ஸ்ரீமதே யஜ்ஞவராஹவரப்ரஹ்மணே நம:.

## ஸ்ரௌதகர்மங்கள்.

(தொடர்ச்சி.)

ஆபஸ்தம்பரும் தமது தர்மஸூத்ரத்தில், "அஶூத்ராணாமதுஷ்டகர்மணாமுபாயநம் வேதாத்யயநமக்ந்யாதேயம் பலவந்தி ச கர்மாணி" என்கிற ஸூத்ரத்தால் அக்ந்யாதேயாக்நிஹோத்ராதிகளுக்கு உபநயந வேதாத்யயநாதிகளுக்குப்போல ஆவஶ்யகதையை நியமித்தார். ஆகையால் உபநயநவேதாத்யயநாதிகளைப்போல அக்ந்யாதேயாதிகளும் அகரணே ப்ரத்யவாயாவஹங்களென்று ஸூத்ரகாரருடைய பாவமாகும். போதாயநரும் தமது க்ருஹ்ய ஸூத்ரத்தில் விவாஹ கர்மாவைச் சொல்லிவிட்டு, அடுத்தாப்போல "அத அக்ந்யாதேயஸ்ய கால:, யதா ப்ரஜாதஸ்யாம் ஜீவதி பிதரி அக்நீநாததீதேதி போதாயந:, ஜீவதி த்வேவ வா ஜாயாதேவாஸ்ய தஶமேऽஹநீதி ஶாலீகி: । ஸ துர்ப்ராஹ்மணஸ்ஸூதஶ்ச யஸ்யாபத்யாதாஹாரஶ்ச யஸ்ய வேதஶ்ச வேதிஶ்ச விச்சித்யேதே த்ரிபுருஷம் । ஸ வை துர்ப்ராஹ்மணோ நாம யஶ்சைவ வ்ருஷலீபதி:" இதி ॥ இத்யாதி ஸூத்ர ஸந்தர்ப்பத்தால் ஆதாநாதிகளுக்கு ஆவஶ்யகத்வத்தைச் சொல்லிவிட்டு மூன்று தலைமுறைக்குள் வேதிஶப்தத்தாற் சொல்லப்படுகிற அக்நிஹோத்ராதி கர்மங்களுக்கு விச்சேதம் ஏற்பட்டால் தௌர்ப்ராஹ்மண்யமுண்டாகுமென்று ப்ரதிபாதித்தார். இப்படிப்பட்ட துர்ப்ராஹ்மணன் ஸோமயாகம் செய்வதாயிருந்தால் அவனுக்கு "ஆஶ்விநம் த்ரிஶ்யாவாதாஸ்யஹோதயோ துர்ப்ராஹ்மணஸ்ஸோமம்பிபாஸேத்" இத்யாதி ஶ்ருதியால்



ப்ராயஶ்சித்தரூபமாக ஒரு யாகம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஶ்ருத்யஶ்ச "யஸ்ய பிதா பிதாமஹோ வா ஸோமம் ந பிபேத் ஸ வ்ராத்ய:" என்று த்ரிபுருஷம் ஸோம பாநமில்லாதவனுக்கு தோஷம் சொல்லப்பட்டிருக்கிறது. "ஸோமஞ்சாத்ரம் பாந ஸஹஸ்ரஷா ஶாஸஹேதய ஸ்ரு த்ருதீயா த்வாதஶாஹ ஸோமம் ந பிபேத்" என்று இவனுக்கு சோதிதமான ப்ராயஶ்சித்தத்தால் ஶுத்தி என்று தைத்திரீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியும் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் "தமேதம் வேதாநுவசநேந" என்கிற ஶ்ருதி பலத்தால் இந்த அக்நிஹோத்ராதி யஜ்ஞங்கள் ப்ரஹ்மவித்யாங்கமாக வித்யாநிஷ்டாதிகாரி மாத்ரத்தாலே உபாதேயங்களாகுமோ வென்று ஆஶங்கித்து, "விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி" என்கிற ஸூத்ரத்தால் யாவஜ்ஜீவ ஶ்ருதி சோதிதங்களான அக்நிஹோத்ராதிகளை ஆஶ்ரம தர்மங்களாக அநுஷ்டிக்க வேண்டுமென்று சொன்னார். இவ்விஷயம் அங்கு ஸ்ரீ பாஷ்யத்திலும் ஸ்பஷ்டம்.

ஸ்ரீ பகவத்கீதையில் பதினெட்டாவது அத்யாயத்திலும் ஸ்ரீ பகவானாலே "த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மநீஷிண:" என்று யஜ்ஞாதி கர்மங்கள் பஶு ஹிம்ஸாரூப தோஷயுக்தமாகையாலே அநுஷ்டேயங்களல்ல வென்கிற காபில மதாநுயாயிகளுடைய பூர்வபக்ஷத்தை உத்தாபநம் செய்து, "நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர" என்று ஆரம்பித்து,

"யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் ।
யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ॥
ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச ।
கர்தவ்யாநீதி மே பார்த நிஶ்சிதம் மதமுத்தமம் ॥"

இத்யாதிகளால் இந்த யஜ்ஞங்கள் பரம பாவநங்களென்றும் அவஶ்யாநுஷ்டேயங்களென்றும் கண்டத: ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இங்குச் சிலர் யஜ்ஞாதிஶப்தத்தால் பஞ்சமஹாயஜ்ஞங்களுக்கு

மாத்ரம் தான் க்ரஹணமென்று ஆக்ஷேபிப்பார்கள். ஆயினும், அந்த ஆக்ஷேபமானது கீதாபாஷ்யம் தாத்பர்ய சந்த்ரிகை முதலிய க்ரந்தங்களுடைய அபரிசயமூலமானதென்று மேற்படி க்ரந்தங்களை ஸேவித்தவர்களுக்கு விளங்காமல் போகாது. கீதா பாஷ்யத்தில் “அநிஷ்டமிஷ்டம்” இத்யாதி ஸ்தலங்களில் யஜ்ஞ கர்ம இத்யாதி பதங்களுக்குக் கீதையிலே “விதிஹீநமஸ்ருஷ்டாந்நம் மந்த்ரஹீநமதக்ஷிணம்” இத்யாதி ஸ்தலங்களிலும் யஜ்ஞசப்தம் ஜ்யோதிஷ்டோமாதிகளைச் சொல்வதைக் கண்டுகொள்ளலாம். ஆகையால், இந்த ஆக்ஷேபம் உபேக்ஷணீயமாகும்.

வைஷ்ணவீயே -

“விவாஹாத்ப்ரப்ருதி ஜுஹுயாதக்நிஹோத்ரகம் ।
தர்சபூர்ணமாஸௌ சாதுர்மாஸ்யாநி கர்மஸு ॥
ஸர்வயா ப்ரயத: ஸோம யாக: காலேஷ்வபி ஜோஷித: ।
யதா ஸம்பவிநா யேந சக்த்யா தக்ஷிணா தக்ஷிணாம்
ப்ராத்ய ப்ராஹ்மணாதி ஸம்ஸ்தாவிதோ வஸாந்தயே ॥”

காயவீயே -

“ஆஹ்யஸ்தாயவாஜ்ஞாநா தேஷ்வக்நீந் நாயாக்நிஹோத்ரி ।
ஸ யாதி நரகாந் கோராந் யாவதாசந்த்ரதாரகம் ॥
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ப்ராஹ்மணோ ஹி விசேஷத: ।
ஆதாயாக்நீந் விசுத்தாத்மா யஜேத பரமேச்வரம் ॥
ஸர்வஸம்ஸ்தாயிகாநீ ஸ்யாத் தாஹிதாக்நிர் யதேத ஸதி ।
ஆதேயா விதிவத் தேந் வ்ருத்த்ரீந் நித்யம் ஸர்வ ஹ்யாஜ்ஞ: ॥”

இத்யாதிகளாலும் ஆதாந அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸாதிகளுக்கு ஆவஶ்யகத்வம் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டது.

இந்த அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸ பசுபந்த ஜ்யோதிஷ்டோமாதிகளுக்கு ஆத்மநிஷ்க்ரயணார்த்தமாகவும் அநுஷ்டாந மாவஶ்யகமென்று “ஸர்வதா ஸ்யாத் அக்நிஹோத்ரதர்சபூர்ணமாஸ பசுபந்த” என்கிற ஸூத்ரவாக்யத்தாற் சொல்லப்படுகிறது.

வேதாந்த தீபிகை. 

இங்கு அக்நிஹோத்ர சப்தத்தால் அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸ பசுபந்த ஸோமயாகாதி நான்கு யாகங்களுக்கு க்ரஹணம். பூர்வவாக்யங்களில் இந்த நான்கு யாகங்களுக்கே ப்ரஸ்தாவம் வந்திருக்கிறபடியால் இவ்வர்த்தம் நிர்ணீதமாகிறது. இதனுடன், “அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்சநாத்” என்கிற ஶ்ருதி வாக்யத்திலுள்ள அக்நிஹோத்ர பதத்திற்கும் இந்த அர்த்தத்தையே ஸ்ரீ பாஷ்யகாரர் “யே ச ந்யேவதா ஹக்தா:” என்கிறவிடத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆகையால், இந்த நான்கு யாகங்களையும் அநுஷ்டித்து ஆத்மாவை நிஷ்க்ரயம் செய்து கொள்ளவேண்டியதாகையால் இவைகளை ஆத்மநிஷ்க்ரயணங்களென்று சொல்வது. பசுபந்தத்திற்கு ஆத்மநிஷ்க்ரயணார்த்தத்வம் வாஜஸநேயக ஶ்ருதியிலும் “ஸம்வத்ஸரம் யஜ்ஞவா அக்நயோ ஸம் ஸஜாதோ யஜமாநஸ்ய தே யஜமாநமேவ த்யாயந்தி யஜமாநம் ஸங்கல்பயந்தி பசந்தி ஹ வா அஸ்ய அக்நிஷு வயா ஸம்ஸதேயேஷாம் நாந்யா ஸம்ஸாரா விஷ்டே யஸ்ய வைதே பவந்தி தம் ததா நாநீஜாநம் பசுநாஸம்வத்ஸரோऽதீயாதாயுஷ்யா ஹ வா அஸ்யைஷ ஆத்மநிஷ்க்ரயணோ பவதி” என்கிறதாற் சொல்லப்பட்டது. அதாவது - எவனொருவன் ஆஹிதாக்நியாயிருந்துகொண்டு மாம்ஸகாமுகங்களான தன்னுடைய அக்நிகளுக்கு விஹிதகாலத்தில் மாம்ஸ ஹோமத்தைச் செய்யவில்லையோ அப்போது அந்த அக்நிகள் தமது யஜமாநனையே பக்ஷிப்பதற்கு ஸங்கல்பம் செய்யும். ஆகையால், ஆத்மநிஷ்க்ரயணார்த்தமாயும் ஆயுர்ஹிதமாயுமிருப்பதால் பசுபந்தத்தை விஹித காலத்தில் அவஶ்யம் அநுஷ்டிக்கவேண்டுமென்பது மேற்படி ஶ்ருதியின் அர்த்தம். இந்த விஷயத்தையே தான் மநுவும், “நவேநாநஷ்டிவா ஹவ்யஸ்ய பசுஹவ்யேந வாக்நய: । ப்ராணாநேவாத்துமிச்சந்தி நவாந்நாமிஷகர்திந: ॥” என்கிற ஶ்லோகத்தால் விவரித்தார். இக்காரணத்தைக் கொண்

டேதான் ஆபஸ்தம்பாதி கல்பஸூத்ரக்காரர்களனைவரும், "पशुबन्धः संवत्सरे संवत्सरे यजेत, षट्सु षट्सु मासेष्वित्येके" இத்யாதிகளால் ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் பஶுபந்தம் அவஶ்யாநுஷ்டேயமென்று நிர்பந்தித்தார்கள். மநு யாஜ்ஞவல்க்யாதி மஹர்ஷிகளும் "पशुना त्वयनस्यादौ" "पशुः प्रत्ययनं तथा" இத்யாதிகளால் பஶுபந்தத்தை ஆறு மாதத்திற்கொருதடவையாவது, ஶக்தியில்லாமல் போனால் ஒரு வருஷத்திற்கொருதடவையாவது அநுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு, அப்படி விஹிதகாலத்தில் பஶுபந்தத்தை அநுஷ்டிக்காமல் போனால்,

"इष्टिं वैश्वानरीं चैव निर्वपेदब्दपर्यये ।
कॢप्तानां पशुसोमानां निष्कृत्यर्थमसम्भवे ॥"

என்று வைஶ்வாநரேஷ்டியை ப்ராயஶ்சித்தமாக விதித்தார்கள். ஆகையால் இது ஸ்வகாலத்தில் அவஶ்யகார்யமென்று நிஶ்சயமாகும். ப்ராஹ்மண ஶ்ருதியிலும், "यस्याग्निहोत्रमदर्शमपौर्णमासमचातुर्मास्यमनाग्रयणमतिथिवर्जितं च । अहुतमवैश्वदेवमविधिना हुतमासप्तमांस्तस्य लोकान् हिनस्ति" என்கிறதாலும் அக்நிஹோத்ராதிகள் அவஶ்யாநுஷ்டேயங்களென்பது நிர்ணயிக்கப்படுகிறது.

இன்னும் இவைபோல ஶ்ருதி ஸ்ம்ருதி கல்பஸூத்ராதிகளில் அநேக ப்ரமாணங்கள் கிடைக்கின்றனவானாலும் விஸ்தர பயத்தினால் அவைகளை இங்குக் குறிப்பிடாமல் நிறுத்துவோம். இப்படி இங்மாத்ரம் காண்பிக்கப்பட்ட ப்ரமாணங்களைக் கொண்டு அக்நிஹோத்ரம் முதலிய ஶ்ரௌத கர்மங்கள் அகரணே ப்ரத்யவாயாவஹங்களாயிருப்பதாலும் வைதிகர்களனைவராலும் யதாகாலம் யதாஶக்தி அநுஷ்டித்துத் தீரவேண்டியதென்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

அக்நிஹோத்ரம் கோபாலதேஶிகன்.

ஶ்ரீ:.

## ஜீ. நாராயண ஐயருடைய கேஸ்.

ஸ்வல்பதிநங்களுக்கு முன்னமே, நமது சென்னைராஜதாநியின் ஹைகோர்ட்டில், ஜீ. நாராயண ஐயர் என்னும் ஒருவர் மிஸ்ஸிஸ் பெஸண்டு என்னும் ஒரு இங்க்லாந்து ஸ்த்ரீயின்மீது செய்திருந்த வ்யாஜ்யம் முடிவுபெற்றது என்பது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். முதலில் ஸங்க்ரஹமாக இந்த வ்யாஜ்யத்தின் வரலாற்றைச் சொல்வோம். மிஸ்ஸிஸ் பெஸண்டு என்னும் ஸ்த்ரீ, தியஸாபிகல் ஸொஸைடி என்னும் ஒரு பெரிய ஸமாஜத்திற்கு அத்யக்ஷை. நாராயண ஐயர் என்பவர் கொஞ்சகாலம் அந்த ஸமாஜத்தில் ஓர் அங்கத்தினராக இருந்தார். இவருக்கு இரண்டு மூன்று குமாரர்கள் உண்டு. இவர் இதற்கு முன்னமே தாசில்தாராக இருந்து இப்பொழுது பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார். மூன்று வருஷங்களுக்கு முன்னமே, இவர் தம்முடைய குமாரர்களில் இருவரை மிஸ்ஸிஸ் பெஸண்டினிடம் ஒப்புவித்து, அந்தப் பிள்ளைகளுடைய ரக்ஷணத்தில் தமக்கு ஸ்வபாவமாயுள்ள பாத்யதையை மிஸ்ஸிஸ் பெஸண்டுக்கே கொடுத்துவிட்டதாக ஒரு பத்ரமும் எழுதிக்கொடுத்தார். மிஸ்ஸிஸ் பெஸண்டும், ஏற்கெனவே அநேகம் தடவைகளில் அந்தப் பிள்ளைகளுடன் ஸந்தித்து ஸம்பாஷித்திருந்தபடியால் அவர்களிடம் அவருக்கு ஒரு வாத்ஸல்ய முண்டாயிருந்தது. அந்தப் பிள்ளைகளில் மூத்தவன் ஜகதாசார்யகத்திற்கு உரிய குணங்களுடைய ஸாத்விகனென்றும், இளையவன் நல்ல மேதையுள்ளவனென்றும் மிஸ்ஸிஸ் பெஸண்டினுடைய க்ரஹணம். ஆகையால், நாராயண ஐயர் தமது குமாரர்களை அவரிடம் ஒப்புவிக்கும்பொழுது, மிகுந்த ஸந்தோஷத்துடன் அவர்களை அவர் அங்கீகரித்தனர். இது நடந்து மூன்று வருஷமாகி விட்டது. இந்த மூன்று வருஷகாலமாக அந்தப் பிள்ளைகளுடைய வித்யாபிவ்ருத்தி விஷயமாக அவர் ஏராளமான பரிஶ்ரமத்தை எடுத்துக்கொண்டு, அவர்களை ஐரோப்பா முதலிய அநேக இடங்களுக்கு அழைத்துப்போய், பலதேஶத்தின் வ்ருத்தாந்தங்களை அவர்களுக்குத் தெரிவித்து, இப்பொழுது இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு யுநிவர்ஸிடி ( Oxford University ) என்னும் ஒருவித்யாலயத்தில் அவர்களைச் சேர்ப்பிக்க வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்திருக்கிறார். தமக்கு இவ்விடத்தில் இப்பொழுது கார்யாந்தரங்கள் இருந்தபடியால் அவர் அந்தப் பிள்ளைகளுடைய படிப்பு விக்ஷித

மாக வேண்டாமென்று எண்ணி, அவர்களை இங்கிலாந்திலே தகுந்த மநுஷ்யர்களிடம் ஒப்புவித்துவிட்டு இவ்விடம் வந்திருக்கிறார்.

பிள்ளைகளுடைய அபிவ்ருத்தி இவ்விதமாக நடந்துகொண்டிருக்கையில் அவர்களுடைய ஜநக பிதாவாகிற நாராயண ஐயருக்கு, கொஞ்சகாலமாக ஓர் அதிஶங்கை மநஸ்ஸில் ஜநித்தது. மிஸ்ஸிஸ் பெஸண்டு அத்யக்ஷையாக இருக்கும் ஸமாஜத்தில் மிஸ்டர் லெட்பீடர் என்று ஒரு அங்கத்தினர் உண்டு. அவர் இதற்கு முன்னமே இங்கிலாந்தில் கொஞ்சகாலம் பாதிரியாக இருந்துவிட்டு இப்பொழுது இந்த ஸமாஜத்தைச் சேர்ந்திருக்கிறார். அவர், தமக்கு இஷ்டமிருக்கும் பொழுது இந்த ஶரீரத்தை விட்டு வெளிவந்து லோகாந்தரம் முதலிய இடங்களுக்குப் போய்வரக்கூடிய ஶக்தியைத் தாம் பெற்றிருக்கிறாரென்றும், தமக்கு தைவ ஸாந்நித்யம் உண்டென்றும், ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தமே தாம் இவ்விடத்தில் இருந்து வருகிறாரென்றும் சொல்லிக்கொண்டு வருகிறார். அதை நம்பியிருப்பவர் பலருண்டு. மிஸ்ஸிஸ் பெஸண்டு அதை த்ருடமாக நம்பிவருவரென்றும், அந்த லெட்பீடரிடத்தில் தேவதா விஶ்வாஸம் செய்து வருகிறாரென்றும் தெரியவருகிறது. கொஞ்சகாலத்துக்கு முன்னமே, கர்னல் ஆல்காட் என்பவர் இந்த ஸமாஜத்திற்கு அத்யக்ஷராக இருந்த ஸமயத்தில், இந்த லெட்பீடர்மீது, சில அமெரிகாதேஶவாஸிகளான இந்த ஸமாஜத்தைச்சேர்ந்த ஜநங்கள் ஒரு குற்றத்தைச்சாட்டி, 'அதை விசாரித்து அவர் அப்படிக் குற்றவாளியென்று நிருபணம் ஏற்பட்டால் அவரை ஸமாஜத்திலிருந்து விலக்கிவிட வேண்டும்' என்று அத்யக்ஷருக்கு மநுச்செய்து கொண்டார்கள். கர்னல் ஆல்காட், மந்த்ரி ஸ்தாநீயர்களான சில கனவான்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு அந்த மநுவில் குறிப்பிட்ட குற்றத்தைப்பற்றி விசாரணை செய்ய உபக்ரமித்தார். விசாரணை பாதிநடந்துகொண்டிருக்கையில் லெட்பீடர் தாமே தம்முடைய அங்கத்தினர் தன்மையை நிவ்ருத்தி செய்துகொள்ள, அந்த விசாரணை அதனுடன் பூர்த்தியாயிற்று. விசாரணை நடந்தவரையில் லெட்பீடர்மீது குற்றம் ஒன்றுமில்லையென்றே ஏற்பட்டதாம். ஆனால், கர்னல் ஆல்காட்டு தேஹவியோகமடைந்து மிஸ்ஸிஸ் பெஸண்டு ஸமாஜத்திற்கு அத்யக்ஷையாக வந்த பிறகு, லெட்பீடர் மறுபடியும் தாம் ஸாமாஜிகராக வேண்டுமென்று ப்ரயத்நப்பட, மிஸஸிஸ் பெஸண்டும், லெட்பீடர்மீது யாதொரு குற்றமும் ருஜுவாகாததால் அவரை ஸாமாஜிகராகச் சேர்த்துக்கொள்வதில் யாதொரு ஆக்ஷேபமுமிருக்காது என்று எண்ணி அவரை ஸாமாஜிகராகச் சேர்த்துக் கொண்டுவிட்டார். இப்படி அவரைத் திரும்பச் சேர்த்துக்கொள்ள அபிப்ராயப்படாதவரில் அநேகர் அப்பொழுது ஸமாஜத்தை விட்டு விலகும்படியாகவும் நேர்ந்தது. லெட்பீடர்மீது சாற்றப்பட்ட குற்றமாவது - அமெரிகாவில் அவர் இருக்கும்பொழுது அவரிடமுள்ள ஶக்தியைப் பார்த்துச் சிலர் தமது குமாரர்களை அவரிடத்தில் ஶிஷ்யர்களாக ஒப்புவித்தார்களாம்; அப்படி ஒப்புவிக்கப்பட்ட ஶிஷ்யர்களுக்கு அவர் சில துர்வ்ருத்தங்களை உபதேஶம் செய்து விட்டார் என்பதுதான். மிஸ்ஸிஸ் பெஸண்டு, தாம் நாராயண ஐயருடைய பிள்ளைகளைத் தமது ரக்ஷ்ய கோஷ்டியிற் சேர்த்துக்கொண்ட காலம்முதல், இந்த லெட்பீடரை அவர்களுக்கு ஆசார்யராகவும், மற்றை அம்ஶங்களிலும் பித்ருஸ்தாநத்தில் இருக்கும்படியாகவும் இத்யாதியான சில வ்யவஸ்தையைச் செய்து வந்திருக்கிறார். இப்படி அவர் செய்ததற்குக் காரணம், தாமே எப்பொழுதும் அந்தப் பிள்ளைகளைக் கவனிக்கக் கூடாததும், லெட்பீடரிடம் யாதொரு நம்பிக்கைக்குறைவும் தமக்கு இல்லாததுமே. ஆனால், ஏதோ சில காரணங்களால் இந்த ஏற்பாடு அந்தப் பிள்ளைகளுடைய பிதாவாகிற நாராயண ஐயருக்கு ருசிக்கவில்லை. மிஸ்ஸிஸ் பெஸண்டிடம் தமக்குத் தைவபக்தி இருக்கையிலும், அவர், பலதடவை, தமது குமாரர்களை லெட்பீடரை விட்டு விலக்கிவிட வேண்டுமென்று பெஸண்டை ப்ரார்த்தித்தும், அதற்கு பெஸண்டு இணங்காததால் கொஞ்சகாலமாக அவருக்கு மநஸ்ஸில் வருத்த மிருந்து வந்தது. 'லெட்பீடர் தமது பிள்ளைகளுக்கு ஏதோ சில துர்வ்ருத்தங்களை உபதேஶித்து வருகிறார்' என்கிற பீதி அவருக்குப் பூர்த்தியாக உண்டாயிற்று. அதனால் தமது பிள்ளைகளைத் தம்மிடம் திரும்பக் கொடுத்துவிடவேண்டுமென்று கொஞ்ச காலம் முன்னமே அவர் பெஸண்டைக் கேட்டார். பெஸண்டு பிள்ளைகளை ஒப்புவிக்காததால் அவர் ஹைகோர்ட்டில் வ்யாஜ்யம் செய்யும்படியாக நேர்ந்தது.



ஜஸ்டிஸ் பைக்வெல் என்னும் ஜட்ஜு இதை விளங்க விசாரித்து, ந்யாயத்தை உணர்ந்து, 'பிள்ளைகளைத் திருப்பிக்கேட்கப் பிதாவுக்கு பாத்யமுண்டு' என்றும், 'வருகிற மே மாஸம் 26-ம் தேதிக்குள்ளாக அவர்களைப் பிதாவிடம் ஒப்புவித்துவிட வேண்டும்' என்றும், ஸ்வல்ப திநங்களுக்கு முன்னமே தீர்ப்புச் செய்தார். இந்தத் தீர்ப்பு எல்லாருக்கும் மிகுந்த த்ருப்தியை விளைவிக்கிறது என்பதில் ஆக்ஷேபமில்லை.

இது விஷயமாக நாம் விசாரிக்கவேண்டிய அம்ஶங்கள் சில உண்டு. தியஸாபிகல் ஸொஸைடி என்னும் இந்த ஸமாஜம் ஒரு பெரியது; பலவிடங்களில் பரவியிருப்பதுடன், வ்யபதிஷ்டர்களாக இருக்கும் அநேகர் இதில் ஸாமாஜிகர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். தவிரவும், நமது தேஶத்தில் கொஞ்சகால முன்னமே, நமது மதத்திலும் இன்னும் நமது ஸம்பந்தமான மற்றை அம்ஶங்களிலும் ஸாராம்ஶம் ஒன்றுமில்லையென்றும், பாஶ்சாத்யர்களிடமே ஸகல வைதுஷ்யம் முதலிய ஶ்லாக்யகுணங்களும் உண்டு என்றும் ஓர் எண்ணம் இங்க்லீஷ்பாஷையைப் படித்து வந்த நமது பாலர்களிடம் பரவி, அவர்கள் ஸர்வ விதத்திலும் பாஶ்சாத்யர்களுடைய நடை உடை பாவனைகளைக் கொண்டாட ஆரம்பித்த பொழுது, இந்த ஸமாஜத்தைச் சார்ந்த கர்னல் ஆல்காட் மிஸ்ஸிஸ் பெஸண்டு ப்ரப்ருதிகளே, நமது தேஶத்தின் மாஹாத்மயத்தையும், நமது தேஶத்தில் ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தம் அவதரித்து நிரதிஶயமான உபகாரத்தை ஜகத்திற்குச் செய்துவந்த த்ரிகாலஜ்ஞாநிகளான மஹர்ஷிகளின் மஹிமையையும் எல்லாருக்கும் விள

ங்கும்படியாக எடுத்துச்சொல்லி நமது பாலர்களுடைய புத்தியில் நம்மவர்கள் அவ்வளவு நிஹீநர்களல்லரென்கிற எண்ணத்தை உண்டுபண்ணி, அதிவிசேஷணமாக ஸங்கிஹிதமாயிருந்த துர்தசையிலிருந்து நமது கட்டுப்பாட்டைக் காப்பாற்றினார்கள். இவர்களுடைய ப்ரவ்ருத்தி சேர்ந்திராவிட்டால், நமக்கு இப்பொழுது இருக்கும் கௌரவம் வந்திராது என்பது உண்மையே. இப்பொழுதும் இந்த ஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள் ஸாமாந்யமாக ப்ரபஞ்சத்திற்கு செய்துவரும் உபகாரம் அளவற்றதாகவே இருக்கிறது. காசியில் ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ் என்னும் ஒரு பெரிய ஹிந்து பாடஸாலையை, இவர்கள், ஹிந்துக்களுடைய அபிவ்ருத்தியை உத்தேஸித்தே ப்ரதிஷ்டாபநம் செய்திருப்பதும், இந்தத்தேஸத்தில் ஹிந்துக்களுக்கு அநுகுணமாக ஒரு ஹிந்து யூநிவர்ஸிடியை ஏற்படுத்த இவர்கள் பரிஸ்ரமப்படுவதுமே இவர்களுடைய ஜகதுபகாரஸீலத்திற்கு முக்யமான நிதர்ஸநங்கள். இவ்விதமாகப் பலவிதங்களில் ஜநங்களுக்கு உபகாரகமாகவும், ஜ்ஞாநபாகத்தில் மிக்க ஸ்ரேஷ்ட்யத்தை அடைந்திருக்கும் பலபெயர்களால் கொண்டாடப்பட்டு நடைபெற்று வரும் இந்த ஸமாஜம் எவ்விதத்திலும் நிர்துஷ்டமாக இருக்கிறதா? அப்படியில்லாவிட்டால் எந்த அம்ஸங்களில் இது ஆக்ஷேபார்ஹமாகின்றது? என்பதை நாம் அவஸ்யம் விசாரிக்கவேண்டும்.

நமக்குத் தெரிந்த வரையில், இந்த ஸபையார்களுடைய கொள்கைகள் ஆக்ஷேபார்ஹங்களல்ல என்பது நம்முடைய அபிப்ராயம். அவர்கள் முக்யமாகப் பிறருக்குப் போதிக்கிறதாவது — ஜகத்பிதாவாகிற பகவானுடைய ப்ரஜைகளான நாம் எல்லாரும் பரஸ்பரம் ப்ராதாக்களாகிறோம்; ஆகையால், நமக்குள் ஸௌப்ராத்ரத்தை வ்ருத்தி செய்யக்கூடிய வ்யாபாரங்களில் நாம் நடப்பதே நம்முடைய முக்ய தர்மமாகின்றது என்பது தான். ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் மோக்ஷம் இவைகளுக்கெல்லாம் கர்த்தாவாகிற லோகநாதன் விஷயத்தில் அஸாதாரணமான பித்ருத்வத்தையும், கர்மாதீநமாக வேறு வேறு ஸரீரங்களை எடுத்திருக்கையிலும் ஜ்ஞாந ஸ்வபாவத்தில் ஸகலஜீவன்களுக்கும் ஒரு விஸேஷித்த ஸாம்யத்தையும் அங்கீகரிக்கும் நமக்கு இந்தப் போதனை எவ்வகையிலும் விருத்தமாகாது. ஸர்வபூத ஸௌஹார்த்தத்தை முக்ய கல்பமாகப் போதிப்பிக்கும் நம்முடைய ஸாஸ்த்ரம் இந்த ஸௌப்ராத்ரத்தை அங்கீகரிக்காதோ? 'வர்ணாஸ்ரம விஸேஷமின்றிக்கே ஸௌப்ராத்ரம அபேக்ஷிதம்' என்று இவர்கள் ஓரிடத்திலும் சொல்லவில்லை. ப்ரத்யுத அவரவர்கள் தங்கள் தங்களுடைய வர்ணாஸ்ரமக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடப்பதே ஸ்லாக்யமென்று அவர்கள் சொல்லியிருப்பதை நாம் அறிவோம். அந்த ஸமாஜத்திலே சேர்ந்தவர்களிற் சிலர் இந்தக் கட்டுப்பாட்டை உதறிவிட்டு வர்த்தித்தால் அது ஸமாஜத்தின் தோஷமாகுமா? 'மஹம்மதீய மதத்தை ப்ரவர்த்தித்த மஹம்மது, க்ரைஸ்தவ மத ப்ரவர்த்தகரான க்ரைஸ்து, இன்னும் மற்றை ஆசார்யர்கள், எல்லாரும் ஸாதுக்கள்' என்றும், எல்லாரும் தைவாம்ஸங்களென்றும் இவர்கள் சொல்வது உண்



மையே. அதிலும் அவ்வளவாக பாதக ஸம்பாவனையை நாம் அறியவில்லை. இவர்கள் எல்லாரிடத்திலும் ஸாத்விககுணம் தலையெடுத்திருந்தது என்பது யதார்த்தமானால், தேஸாசாரங்கள் பிந்ந பிந்நங்களாக இருந்தன என்கிற காரணத்தால் மாத்திரம் அவர்களை நமது ஸத்காரங்களுக்கு அநர்ஹர்களாக நாம் நினைப்பது தர்ம்யமாகாது. மேலும்,

"யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஸஸம்பவம் ॥"

[எந்த எந்த வ்யக்தியினிடத்தில் ஒரு மஹிமையை நாம் காண்கிறோமோ, அந்த அந்த வ்யக்தி பகவத்தேஜஸ்ஸால் அநுப்ரவிஷ்டமென்றே நீ அறிய வேணும்] என்று ஸ்ரீ கண்ணபிரானே நமக்கு உபதேஸித்திருக்கிறானன்றோ? இப்படியெல்லாமிருக்க, நாம் எந்த ப்ரமாணத்தை அவலம்பித்து இந்த ஸாமாஜிகர்களிடத்தில் இது விஷயமாகத் தோஷத்தை ஆரோபிக்கக்கூடும்? ஸகல ஜநங்களும் பரஸ்பரம் த்வேஷமின்றிக்கே ஒத்து வாழும்படியும், கேவலம் வாக்ய ஜந்ய ஜ்ஞாநமின்றிக்கே நமது தத்வஸ்திதியை நம்முடைய மநஸ்ஸில் நன்றாக உணர்த்தும்படியுமான வ்யவஸ்தைகளைச்செய்து வரும் இந்த ஸமாஜ விஷயமாக நாம் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்க வேண்டுமே தவிர, அதை நிந்திக்கவாவது அதனிடம் ஒருத்வேஷத்தைப் பாராட்டவாவது நாம் ப்ரவ்ருத்திப்பது ந்யாய்யமாகாது.

ஆனால், இப்பொழுது இதற்கு வந்திருக்கும் அபக்யாதி வருவானேன்? பெரிய கோர்ட்டாரால், அதன் ஸாமாஜிகர்களுள் முக்யராயுள்ள லெட்பீடர் ஸஹவாஸாநர்ஹர் என்று சொல்லப்படுவதே அந்த ஸமாஜத்தின் அஸாதுபாவத்தை ஸூசிப்பிக்கவில்லையா? என்று கேட்கலாம். இது ந்யாயத்திற்கு ஒத்த அதிஸங்கைதான். இந்த ஸமாஜத்திற்கு வந்திருக்கும் அபக்யாதிக்கு அநேக காரணங்களுண்டு. இக்காலத்தில் நமது தேஸத்தில், ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தையே ப்ரமாணமாக ஒத்துக்கொண்டு, அதீந்த்ரியமான விஷயங்களில் பெருத்த அவிஸ்வாஸத்துடன் கூடியவர் பலருண்டு. ஆப்த வாக்யமென்று நம்பி, ஸாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் விதிநிஷேதங்களை, யுக்தி அயுக்தி விசாரணையின்றிக்கே அநுஷ்டித்துவரும் சில ஆஸ்திகர்களை இவர்கள் அஜ்ஞர்களென்றும் மூடர்களென்றும் தூஷித்து வருகிறார்கள். த்யாந விஸேஷத்தாலும் தேவதைகளுடைய அநுக்ரஹ விஸேஷத்தாலும் நாம் ஸித்திகள் பெறக்கூடும் என்பதே இவர்களுக்குப் பரிஹாஸாஸ்பதமாகின்றது. ஸந்த்யாவந்தநாதிகளைச் செய்வதே மௌட்ய பரீவாஹமென்பது இவர்களுடைய அபிப்ராயம். இதுபோன்ற அபிப்ராயம் கொண்டவர்கள் ப்ராயஸ: வாக்மிகளாக இருக்கிறபடியாலும், ஸாமாந்ய ஜநங்கள், அதீந்த்ரிய விஷயங்களைப்பற்றித் தூஷணமாகச் சொல்லப்படும் எல்லாவற்றையும் ஸுலபமாக நம்பும்படியான ஸ்வபாவமுள்ளவர்களாக இருக்கிறபடியாலும், அப்ராத்

யக்ஷ விஷயங்களில் விஸ்வஸிக்கும் ஒரு வ்யக்தியின் மீதாவது ஒரு ஸமாஜத்தின்மீதாவது அதிக ஸ்ரமமின்றிக்கே அபக்யாதியைப் பரவச்செய்வது இவர்களுக்கு ஸுலபமாகவே இருக்கும். தவிரவும், அதீந்த்ரிய விஷயங்களை வாஸ்தவமாக அறிந்து சொல்லும் ஸாதுக்களுக்கும், இந்த அதீந்த்ரியத்தன்மையை ஒரு அவலம்பமாகப் பிடித்துக்கொண்டு மனதில் தோன்றும் எல்லாவற்றையும் பகவதாஜ்ஞையென்று பர ப்ரதாரணத்தில் ப்ரவ்ருத்திக்கும் துஷ்டர்களுக்கும் வாசி பாஹ்யமாக ஏற்படக்கூடாததலால், சில ஸமயங்களில், நிர்துஷ்டமான நோக்கங்களையுடைய ஸமாஜத்திலும் சில துஷ்டர்கள் ப்ரவேஸித்து அந்த ஸமாஜத்திற்கே ஒரு கெட்டபெயரை உண்டுபண்ணுவதும் உண்டு. இதுபோன்ற காரணங்களால் இந்த ஸமாஜத்திற்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அபக்யாதி ஸம்பவித்திருக்கக்கூடும் என்றே தோன்றுகிறது. இந்த ஸாமாஜிகர்களில் பலர் அதீந்த்ரிய வஸ்து பராமர்ஸத்தில் ப்ரவ்ருத்தித்தவர்களாதலால் அந்த ப்ரவ்ருத்தியே இந்த அபக்யாதிக்கு ஹேதுவாகிவிட்டது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், இது தோஷமாகிவிடுமோ? அதீந்த்ரிய வஸ்துவில் விஸ்வாஸமில்லாதவர்கள் இதை எவ்வளவு தூஷித்தாலும், அதில் விஸ்வஸிக்கும் நாம் இதைத் தோஷமாக க்ரஹிக்கமாட்டோம். நாம் ப்ரவ்ருத்திக்கும் மார்க்கம் ஸாதுவான மார்க்கம் என்கிற எண்ணம் நமக்கு இருக்கும் வரையில், அதன் ஸாதுபாவத்தை அறியாதவர்கள் நம்மைத் தூஷிப்பது தோஷாவஹமாகாது. 'பகவன்முகோல்லாஸத்தைத் தவிர்த்து மற்றை அவாந்தர ஸித்திகளை உத்தேஸித்து ப்ரவ்ருத்திப்பதும், அப்படி ஸ்வல்ப ஸித்தியை அடைந்திருக்கும் வ்யக்திகளிடத்தில் அவர்களுடைய மற்றைக் குணதோஷ விவேசநமின்றிக்கே பரதேவதா விஸ்வாஸம் செய்வதும் ஸமீசீந ஜ்ஞாநமுடையவர்களது கார்யமாகாது' என்று நாம் த்ருடமாக நம்பியிருக்கையிலும், இந்த ஸமாஜத்தில் அப்படிப்பட்ட ஸித்தியை அடைந்திருப்பதாகச் சொல்லிக்கொள்பவர்கள் எல்லாரும் பொய் சொல்லுகிறார்களென்றாவது, அவர்கள் எல்லாரும் பிறரை மோசம் செய்ய வேணுமென்கிற எண்ணம்கொண்டவர்களென்றாவது சொல்ல நாம் ஸித்தமாக இல்லை.

ஆனால், லெட்பீடரைப்பற்றின வரையில் நமக்குக் கொஞ்சம் அதிஸங்கை உண்டு. அவருடைய நடத்தையைப்பற்றியாவது நோக்கங்களைப்பற்றியாவது நமக்கு யாதொன்றும் தெரியாமலிருந்தாலும், அவருடைய ஸாக்ஷ்யத்திலிருந்து வெளிவந்திருக்கும் சில அம்ஸங்களின் பலத்தைக் கொண்டு, ஸர்வவிதத்திலும் ஸாத்விகமாக இருக்கவேண்டிய இந்த ஸமாஜத்தில் அவர் ஸம்பந்தப்பட்டிருப்பது ஸமாஜத்திற்குக் கொஞ்சம் ந்யூநதையை உண்டுபண்ணும் என்றே நாம் நினைக்கிறோம். அவருடைய பரமோத்தேஸ்யமான அபிப்ராயம், அஜ்ஞதையால் தமக்கு தீங்கை விளைவித்துக்கொள்ளும் ஜநங்களை அந்தத் தீங்கிலிருந்து ஸம்ரக்ஷிக்கவேண்டும் என்பதே ஆயினும், அந்த அபிப்ராயத்தை ஸாதித்துக்கொள்ள அவர் அநுஷ்டிப்பதாக உத்தேஸித்திருக்கும் மார்க்கம் ஜுகுப்ஸிதமானதால், அவரை அத்யந்தம் ஸாத்விகரென்று நாம் கொண்டாட ஸித்தமாக இல்லை. பலவகைப்பட்ட ஜநங்கள் தமது ஆத்மகுணங்களில் ஓர் அபிவ்ருத்தியை உத்தேஸித்து வந்துசேரும் இந்த ஸமாஜத்தில் அவரை ஒரு முக்ய அங்கத்தினராக மிஸ்ஸிஸ் பெஸன்டு பாவித்து, அந்தப் பாவனைக்கு அநுகுணமான மர்யாதையுடன் அவரை நடத்திவருவது அத்யந்தம் அநுசிதமே. அவரிடம் சிறந்த மற்றை நற்குணங்களிருக்கலாம்; மிஸ்ஸிஸ் பெஸன்டும் அவரிடத்தில் பெருத்த கௌரவம் வைக்குமளவு அவர் மஹிமையுள்ளவராக இருக்கலாம்: எது இருந்தாலும், குணதோஷ விவேசநம் செய்யக்கூடிய ஸக்தியற்ற ஜநங்களும் சேரும் இந்தப் பொது ஸமாஜத்தில் அவரைக் கௌரவித்து ஓர் சிறந்த அங்கத்தினராக வைத்துக்கொள்வது அந்த ஸமாஜத்திற்குக் குறைவை உண்டுபண்ணும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஸமஸ்த ஜநங்களும் பரஸ்பரம் த்வேஷமற்று ஒத்து வாழும்படியான பெருத்த நன்மையை விளைவிக்கக்கூடிய இந்த ஸமாஜம் இப்படி ஒருகுறைவை அடையும்படி அதற்கு அத்யக்ஷையாக இருக்கும் மிஸ்ஸிஸ் பெஸன்டு பார்த்து வருகிறாரே என்பது நமக்கு மிக்க ஸோகத்தை உண்டுபண்ணுகிறது.

· · ·

நாராயண ஐயர் புத்ரவிஷயமாகவும், மிஸ்ஸிஸ் பெஸன்டு நடந்துகொண்டதை நாம் ஸ்லாகிக்கமுடியவில்லை. பிதாவுக்குப் புத்ரர்களிடமிருக்கும் பாத்யதையை விட, அந்தப் பிதாவினிடத்திலிருந்து அநுமதி பெற்றுப் புத்ரர்களை ஸம்ரக்ஷித்துவரும் அயலாருக்குப் பலீயஸ்ஸான பாத்யதை உண்டாகிறது என்று மிஸ்ஸிஸ் பெஸன்டு நினைத்தது ஸரியன்று. அந்தப் புத்ரர்களுக்கு ஆந்தரமாக இருக்கும் சிறந்த திறமைகளை வெளிப்பட்டு விகஸிக்கவொட்டாமல் தடுக்கும் ப்ரதிபந்தகங்கள் பிதாவின் ஸாந்நித்யத்தில் இருக்கின்றன என்பது உண்மையாக இருந்தாலும், அந்தக் குணங்களின் விகாஸத்திற்காகவும், அதனால் ஜகத்திற்கு உண்டாகக்கூடிய நன்மைக்காகவும், நைஸர்க்கிகமாகப் பிதாவினிடத்திலுள்ள பாத்யதையை அநாதரிப்பதும், அதனால் அந்தப் பிதாவை வருத்தப்படுத்துவதும், மிஸ்ஸிஸ் பெஸன்டைப்போன்ற ஸாத்விகர்களுக்கு ஸுதராம் அநுபபந்நம். யதார்த்தமாகவே, இந்த ஸமாஜத்தில் ஸாக்ஷாத் ஸம்பந்தமொன்றையும் நாம் வஹிக்காமலிருந்தாலும், அதன் ஸாதுபாவத்தைக் கருதி அதன் அபிவ்ருத்தியை ப்ரார்த்தித்து வரும் நமக்கு, 'லெட்பீடர் விஷயமாகவும் இந்தப்பிள்ளைகள் விஷயமாகவும் மிஸ்ஸிஸ் பெஸன்டு இன்னும் கொஞ்சம் ஸாத்விகமாக நடக்கக்கூடாதா? இப்பொழுது ஸமாஜத்திற்கு வந்திருக்கும் அபயஸஸ்ஸை வாராமல் தடுத்திருக்கக்கூடாதா?' என்றே அடிக்கடி தோன்றுகிறது. ஆனால், தைவாயத்தமான விஷயங்களில் நாம் ஸோகிப்பதால் பயனென்ன?

ஒரு ஆஸ்திகர்.

ஸ்ரீ:.

# பிரிவுகளின் அறிக்கை.

## மசூலிபட்டணம் பிரிவு.

கிருஷ்ணாஜில்லா மசூலி பட்டணத்தில் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசநத்திற்காக ஒரு சபை ஏற்படவேணுமென்று சில கனவான்கள் நெடு நாளாய் உத்தேசித்திருந்தபடியால், 1913௵ ஏப்ரில் மாதம் 25௳ வெள்ளிக்கிழமை ஸாயங்காலம் 5 - மணிக்கு பெடாயபேட்டை ஹாலில் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூடி அடியிற்கண்டிருக்கும் ஸபையை ஸ்தாபித்து, அதை ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்யஸபையைச்சேர்ந்த ஒரு பிரிவாக இருக்கவேணு மென்று நிர்ணயிக்கப்பட்டது.

### மேற்படி சங்கத்துக்கு வந்திருந்தவர்கள்.

ம-ள-ா-ஸ்ரீ K. கிருஷ்ணமா சாரியர், அவர்கள், Retired Head-master
,, கந்தாடை வித்வான் சடகோபா சாரியர்காரு.
,, முத்தேவி வித்வான் அப்பளாசார்லு காரு.
,, அக்னிஹோத்திரம் ஜகந்நாதா சார்லுகாரு.
,, உதயகிரி கோபாலரத்தினம்காரு, Pleader Merchant.
,, T. கஸ்தூரி ரெங்காசாரியர், Head Accountant.
,, T. S. ஸ்ரீநிவாஸ ராகவாசார்லு, Sheristadar, Sub Court.
,, ஆஸூரி காந்தய்யகாகாரு, Joint Sub-Registrar.
,, வி. பாஷ்ய நாயடுகாரு, Record keeper, Dt. Court.
,, W. நரஸிம்மலு நாயுடுகாரு.
,, ஸிம்மம் பலவய்ய நாயடுகாரு.

இன்னும் சிலரும் வந்திருந்தார்கள்.

---

### கந்தாடை வித்வான் சடகோபாசார்லுகாரு அக்ராஸநாதிபத்யத்தை வஹித்தார்.

ஆரம்பத்தில் ம-ா-ா-ஸ்ரீ உதயகிரி கோபாலரத்தினம்காரு ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த பிரவசனம் செய்வதற்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் அன்பும் ஐகமத்யமும் அதிகரிப்பதற்க்கும் இந்தப் பட்டணத்தில் ஸபை ஏற்படுத்த வேண்டிய ஆவசியகதையைக்குறித்து உபந்யஸித்தார். பிறகு வித்



வான் அப்பளாசாரியரும், சடகோபா சாரியரும் த்ரிமதஸ்தர்களும் பேதமில்லாமல் ஸித்தாந்த விஷயத்தில் ஒரு பத்திரிகை விஷயமாய் சிரமப்பட வேணுமென்றும், வேதாந்த விஷயங்களைப்பற்றி சர்ச்சைசெய்ய கூட்டங்கள்கூட வேணுமென்றும் சொல்லி நம்முடைய ஸித்தாந்தத்தின் பெருமையைப்பற்றியும் ப்ரஹ்மஸூத்திரம் முதலிய கிரந்தங்களைப்பற்றியும் உபந்யஸித்தார்கள்.

### தீர்மானங்கள்.

(1) ம-ா-ா-ஸ்ரீ உ. கோபால ரத்தினம்காருவினால் பிரேரிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த சபை யென்னும் ஒருவிசிஷ்டாத்வைத சபையை மசூலி பட்டணத்தில் ஸ்ரீ அகோபிலமடத்து சிஷ்யஸபைக்கு உபசபையாக ஸ்தாபிக்கவேண்டியது.

ம-ள-ா-ஸ்ரீ T. S. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

2. ம-ா-ா-ஸ்ரீ அப்பளாசாரியரால் பிரேரிப்பிக்கப்பட்டது.

இந்தச் சபைக்கு அடியில் குறிக்கப்பட்டவர்கள் கார்ய நிர்வாஹகர்களாக நியமிக்கப்படவேணும்.

ம-ா-ா-ஸ்ரீ கஸ்தூரி ரெங்காசாரியரால் ஆமோதிக்கப்பட்டு ஸபையால் அங்கீகரிக்கப்பட்டது.

### சபா அத்யக்ஷர்.

ம-ா-ா-ஸ்ரீ K. கிருஷ்ணமா சாரியர், B. A.

### சபைப்பண்டிதர்கள்.

ம-ா-ா-ஸ்ரீ வித்வான் கந்தாடை சடகோபாசாரியர்.
,, ஷை முத்தேவி அப்பளா சாரியர்.

### காரியதரிசிகள்.

ம-ா-ா-ஸ்ரீ T. S. ஸ்ரீநிவாஸ ராகவாசார்லு.
,, V. கோபால ரத்னம்காரு.

### நிர்வாஹ கம்மிட்டியார்.

ம-ள-ா-ஸ்ரீ வித்வான் முத்தேவி அப்பளா சாரியர்.
,, T. கஸ்தூரி ரெங்கா சார்லு.
,, வி. பாஷியம் நாயுடுகாரு.
,, அக்னிஹோத்திரம் ஜகந்நாதா சார்லு.
,, ம. நரஸிம்மலு நாயுடுகாரு.
,, ஆஸூரி காந்தய்யகாரு.
,, சிங்கம் பலவய்ய நாயடுகாரு.

MASULIPATAM, 26—4—1913. } T. S. SRINIVASA RAGHAVA CHARLU.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

சேலத்திலிருந்து தீபிகைக்கு அனுப்பியதாகப் பிரசுரம் செய்திருக்கும் கடிதத்தைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. சேலம் ஸிஷ்யப் பிரிவிலுள்ளோர் ஸ்ரீ ஸந்நிதியின் பூர்வ விருத்தாந்தத்தையும் உபயோகத்தையும் தத்கால நிலைமையையும் சரிவர ஆராய்ந்தறிந்து தீர்மானத்திற்கு வந்ததாகத் தோன்றவில்லை. பல்லாரி, கர்நூல், அனந்தபுரம், கடப்பை, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களடங்கிய பூர்வ விஜயநகர் மண்டலாதிபதிகளால் ஸ்ரீ நரஸிம்ம ஸந்நிதியானது ஸ்ரீ வைஷ்ணவர்களை ஒன்று சேர்ப்பதற்கும் அவர்களில் ஆசார்ய புருஷர்களை ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தங்களில் நிபுணர்களாகவும் ஸ்ரீ வைஷ்ணவ ஆசார சீலங்களில் நல்ல அநுஷ்டாதாக்களாகவும் செய்து இந்தியா தேசமுழுதும் அவர்களையனுப்பி ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை பிரவர்த்திப்பிக்கும்பொருட்டு ஏற்பட்ட வித்யாஸமாஜம்.

மநுஷ்ய ஸாமார்த்யத்திற்கு இயற்கையாயுள்ளதும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்துக்குத் தகாததுமான நானே தான் என்னும் அஹங்காரத்தை நீக்குமாறு, பூர்வம் தண்டகாரண்யமென்றும் தத்காலம் நல்லமலைநாடு என்றும் வழங்கிவருகிற பூர்வ ஹிரண்யகசிபு இராஜ்யத்திலிருந்து பிறகு விஜயநகர் ஸம்ஸ்தானத்தின் ஆளுகையில்வந்த ஸ்ரீ அஹோபிலத்தில் ஹிரிபக்தபாலனை ப்ரஹ்லாதர் மொழியை யுண்மையாக்கும் பொருட்டு, ஒரு க்ஷணத்தில் அவதரித்த ஸ்வயம் வ்யக்தமான ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் ஸர்வஜ்ஞ ஆசாரியராக வரிக்கபட்டார். ஸ்ரீ அர்ச்சாவதாரத்தில் தாமே ஆசாரியராய் வந்தா ரென்பது இந்த ஸமயமே.

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி, ஸ்ரீ கிருஷ்ண தேவராய மகாராஜ ஸபையில் கூடிய ஷண்மதஸ்தர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஜயநகர ராஜ்ய ஸ்ரீ வைஷ்ணவர்களில் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் கைங்கரியத்துக்காக ஏற்பட்ட பிரதமயதி. ஸ்ரீமந் நாதமுநிகள் பாஷ்யகாரர் இவ்விரண்டு ஆசாரியர்களுக்குப் பிறகு லோகஹிதத்துக்காக ஆத்மார்ப்பணம் செய்த ஆசாரியர்களில் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஜீயருக்கு நிகர் மற்றொருவரும்



காணப்படவில்லை. ஸ்ரீ ஸ்வாமியின் ஆத்மசுத்தி ஸௌலப்யம் முதலியகுணங்களால் லோகஹிதத்திற்காகவே 20 - வது திருநக்ஷத்திரத்திலே ஸந்யஸித்து வேதாந்த தேசிகன் ஸ்ரீ மணவாள மாமுனிகள் இவ்விருவர்களின் ஸம்பிரதாயங்களையும் ஒன்று படுத்திச் செய்த காரியங்களைவிட ஸ்ரீமந் நாராயணனுக்கு உகப்பான காரியங்கள் வேறுண்டோ ? ஸ்வாமியினுடைய பரமகாருண்ய ஹ்ருதயத்தை வெளிப்படுத்துவதற்குக், காட்டில் வசிக்கும் கிராதர்களையும் நாட்டில் வசித்தும் உபேக்ஷிக்கப்படுகிற பறையர்களையும் கைவிடாமல் அவர்களையுங்கூட வைஷ்ணவர்களாகும்படி, கொண்டதாஸரி (Hill men Preachers) மாலதாஸரி (Paria Preachers) என இருவகையாறை ஏற்படுத்தி அவர்களுக்கு மதபோதனை செய்வித்தும் வைஷ்ணவக்கூட்டத்தில் ஒருவராகச் செய்ததே போதுமான அத்தாட்சி. கர்நூல் ஜில்லா மார்க்காபுரத்தில் சென்னகேசவஸ்வாமி தேவாலயம் இவர்களுக்கெனவே ஏற்பட்டிருக்கிறது. ததநுகுணமாக இவர்கள் இன்றைக்கும் சென்னதாஸரிகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

விஜயநகர் இராஜாங்கத்தின் கீழ்வந்த திவ்யஸ்தலங்களில் ஸ்ரீ அஹோபிலமடங்கள் கட்டப்பட்டிருக்கிற ஸந்நிவேசமானது மகாராஜாவின் ஆதரவில்லாமல் கேவலம் ஓர் விரக்தஸந்யாஸியான ஆர்ஜிதத்தால் இருக்க முடியாது. திருமலை கஞ்சீபுரம் திருவெள்ளூர் ஸ்ரீரங்கம் இராஜமன்னார் கோவில் கும்பகோணம் ஆழ்வார்திருநகரி திருநாராயணபுரம் முதலிய திருப்பதிகளிலுள்ள கட்டடங்களைப்பார்க்க இதுநன்றாக தெரியவரும். அவைகளுக்கு கேவலம் மராமத்துச் செய்யக்கூட இப்போதிருக்கும் ஸ்வாமிகளுக்கு அஸாத்தியமா யிருக்கிறதையும் காண்கலாம்.

ஸ்ரீ நாதமுநிகள் வம்சத்தரான தோழப்பரும் கோவில்கந்தாடை அண்ணன் வம்சத்தாரும் சோளஸிம்மபுரம் தொட்டயாசாரியரும் மற்றை ஆசாரிய புருஷர்களும் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனே ஆசாரியராக விருப்பதாகக் கொள்கையில்லாவிடினும் தகுந்த ஸ்வாமிகள் பெருமாள் கைங்கரியத்துக்கு ஏற்படாமலிருந்தால், ஸந்நிதியில் ஆஸ்ரயித்திருப்பார்களா ? ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமிமுதல் ஷஷ்டபராங்குச ஸ்வாமி வரையிலுள்ள யதிகளை ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யம் கிரந்த ஆசாரியர்களாக அங்கீகரித்தார்க ளன்றோ ?

தெலுங்கு தேசத்தில் ஸ்ரீ ஸந்நிதிக்கு அநேக ஸ்ரோத்ரியங்களும் "மைனர்" இனுங்களும் சிலகாலம் வரையில் விசேஷமா யிருந்தன. கீழ்வரும் வழக்கப்படி ஸ்ரீ வைஷ்ணவர்கள் மேரையும் செலுத்தி வந்தார்கள்.

(1) நாலணா முதல் அந்தஸ்துக்குத் தகுந்தபடி ஒவ்வொருவரும் கொடுக்கும் வருஷாசனம்.

(2) வீட்டுவரி - வீடொன்றுக்கு நாலு அணாவீதம் வைசியர்கள் செலுத்துவது.

(3) பிராமணர்களாலும் வர்த்தகர்களாலும் அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு சுபமுகூர்த்தத்தில் செலுத்தும் காணிக்கைகள்.

(4) அக்ரபூஜைக்காகச் செலுத்தும் சாணிக்கைகள்.

(5) ஈடா - அதாவது; சிராத்தத்தில் ஆசார்யர்களுக்குக் கொடுக்கும் காணிக்கை.

(6) தெருப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் கூலிக்காகப்படிப்புச் சொல்லும் தோஷபரிஹாரார்த்தம், ஸ்ரீ நரஸிம்மனுக்கு பள்ளிக்கூடம் ஒன்றுக்கு வருஷத்துக்கு ரூபாய் இரண்டு.

1886வருஷ ஜனக் கணக்குப்பிரகாரம் கர்நூல் ஜில்லாவில் மாத்திரம் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸங்கியை 271,843. இதில் பெரும்பான்மையோர் ஸந்நிதி ஶிஷ்யர்கள்.

ஸ்ரீ ஸந்நிதி பரிபாலகர்களுடைய உபேக்ஷையினால் சிஷ்யர்களும் ஶ்ரோத்திரியங்களும் அன்யா க்ராந்தமாய் விட்டன.

மேலத்திருப்பதி கீழத்திருப்பதிபோல ஸ்ரீ அஹோபிலமும் மேல் அஹோபிலம் கீழஹோபிலம் என்று இரண்டாய் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்றுக்கொன்று நாலு மைல் தூரம். அர்ச்சக பரிசாரகர்கள் தினந்தோறும் டோலியில் போய் வரவேணும். ஒன்பது நரஸிம்ம மூர்த்திகள் இருக்கும் இந்தத் தேவாலயங்களுக்கு தினந்தோறும் ஆராதநம் நடந்துவருவதே இப்பொழுது ஸந்தேகம். தகுந்த சிப்பந்திகளை சரிவர நடப்பித்து ஜனங்கள் போக்குவரவுக்குச் சரியானபாட்டை ஏற்படுத்தி திருப்பணி கைங்கரியங்களையும் சரிவர நடத்தினால், கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீ அஹோபிலம் திருமலைக்குச்சமானமாய் விடும் என்பதற்கு ஐயமில்லை. ப்ரொதத்தூர் இரயில்வே ஸ்டேஷனுக்கு ஸ்ரீ அஹோபிலம் 35 - மைல் தூரத்திலிருக்கிறது. இந்த 35-மைல் தூரம் காட்டுப்பிரதேச மாகையால் சரியான தங்குமிடமும் இரஸ்தாவும் இடையாது. பாநத்துக்கு உதகம் துர்லபம். தேவாலயம் சிதிலமாயிருக்கிறது. ஜனங்கள் தங்க பத்துமைலுக்கு ஒருமடமும் ஜலாசயமும் ஏற்படுத்தி, இரஸ்தாவும் போட்டுவைக்க வேண்டும். பெருமாளுடையதா யிருந்த காடு மலைகளெல்லாம் ஸர்க்கார் ஸ்வாதீனமாய் விட்டன. ஸவிநயமாய் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் செய்து காடு மலைகளுக்குச் சொந்தமான கிராமங்களை ஸ்ரீ நரசிம்மன் கைங்கரியத்துக்குக் கொடுக்கும்படி ஒரு டெபுடேஷன் ஏற்படவேண்டும். மஹோபாத்யாய பரிட்சைக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களைத்



தேர்ச்சிசெய்யும் பொருட்டு ஸம்ஸ்கிருத இங்கிலீஷ் வித்யாலயம் ஒன்று ஸ்ரீ அஹோபிலமடத்து ஆதரணையின்கீழ் தெலுங்கு தமிழ் கன்னடதேச மத்தியில் ஏற்படவேண்டும். பூர்வாசாரியர்களால் ஏற்பட்ட அநேக கிரந்தங்களை தெலுங்கு தமிழ் கன்னடம் இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலும் ஹிந்தி மராதி பங்காளி பஞ்சாபி பாஷைகளிலும் வ்யாக்கியாநத்துடன் பிரசுரம் செய்யவேண்டும். கீர்வாணத்திலம், மற்றைபாஷைகளிலும் உபந்யஸிக்கத் தகுந்த ஸ்ரீ வைஷ்ணவ மதபோதகர்களை ஏற்பாடு செய்து அந்ய இடங்களுக்கு உபந்யாஸம் செய்ய அனுப்பவேண்டும்.

இஃதெல்லாம் செய்ய ஓர் ஸந்யாஸியால் முடியுமா? நியமிக்கப்பட்ட ஸ்வாமியும் தகுந்தவராயும் தத்கால நிலைமையை யெல்லாம் தெரிந்தவராயும் இருக்கவேண்டுமன்றோ? ஸ்ரீ ஸந்நிதி ஜபோபகாரமா யிருக்கவேண்டிய தவசியமானால் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹமன் ஆராதந கைங்கரியத்தையும், ஸ்ரீ ஸந்நிதி விசாரணையையும், கிரந்தகாலக்ஷேபத்தையும் பார்த்துவர ஸ்ரீ ஸந்நிதியிலேயே ஒரு ஸ்வாமியும், அவருக்குக்கீழ் தெலுங்குநாட்டிலும் கன்னடநாட்டிலும் சிஷ்யர்களுக்கு கிரந்தகாலக்ஷேபம் ஸாதிக்கவும் ஸமாஶ்ரயணம் முதலியவற்றை நடத்த வேறே பிரத்தியேகம் ஸ்வாமிகளும் ஏற்படவேணும். இவர்களுக்கு ஆராதநத்துக்கு ஒரு நரஸிம்ஹமூர்த்தியும் சின்ன ஸிப்பந்தியும் ஸ்ரீ ஸந்நிதிசெலவில் எற்பாடுசெய்து பிரதிகிராமத்திலும் ஸஞ்சரிக்கும்படி ஏற்பாடு செய்யவேணும். இவர்கள் தங்கள்பேரால் ஒன்றும் செய்யாமல் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹமனுகிய ஆசாரியனுக்காக தாங்கள் வியாபரிப்பதாக ஏற்படவேணும். இவைகள் ஸரிவர நடப்பதாய் பராமரிசிக்க ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரதிநிதியாக இரண்டு பேயர் ஏற்படுத்தப்பட்டு இவர்கள்கூடிய ஒரு மகாசபை வருஷந்தோறும் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருக்கும் ஸ்தாநத்தில் ஸங்கல்ப காலத்தில் கூடவேணும். இவர்களின்கீழ் இராஜதந்திர நிபுணரான ஒரு மானேஜர் தகுந்த சம்பளத்தில் ஏற்படவேணும். வருஷாந்தர வரவு செலவு கணக்குகள் பரிசீலனைக்கு ஸெக்ரிடெரி வைப்பதுடன் அடுத்த வருஷத்துக்கு ஆகவேண்டிய வரவு செலவுக்கு எஸ்டிமேட்டுகளும் ஏற்படவேணும். ஸ்வாமியின் பிரைவேட்டு சிப்பந்தியும், ஸ்ரீஸந்நிதி சிப்பந்தியும் வேறாக பிரித்துவிடவேணும். ஸ்ரீஸ்வாமியின் பிரைவேட்டு சிப்பந்தி செலவுக்காக மாதத்துக்கு ஒரு நிஷ்கரிஷையான தொகை ஏற்பட்டு ஸபையாரால் ஸாங்க்ஷன் செய்யப்படவேணும்.

இவ்விதமாக எல்லாம் ஏற்பாடு செய்யப்படாவிட்டால், மடமிருப்பதைவிட இராமலிருப்பதே நலம்.

இப்படி ஸ்ரீ ஸந்நிதி வரும்படிகளை ஸரியாய்ப் பாதுகாத்து ஸ்ரீஸந்நிதியை அபிவிருத்திக்குக் கொண்டு வரவேண்டிய பாரம் ஸ்ரீ ஸந்நிதியில் ஆச்ரியித்தவர்களுடைய கடைமை.

ஆதலால், வீண் ஆக்ஷேபணைகளைச் செய்யாமல் இப்போதே சிஷியர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து மேல்கண்ட விஷயங்கள் எல்லாம் நடைபெறுமாறு தகுந்த ஏற்பாடுகள் செய்ய முயலவேண்டுமாய் இருகரமும் கூப்பி பிரார்த்திக்கின்றனம்.

இங்ஙனம்,

மருலிபட்டணம், 17-4-13. } கஸ்தூரி ரெங்கா சார்யன்.

---

(2)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

சென்ற சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில், 'முக்தர்கள் ஶரீரமில்லாமல் ஆநந்தாநுபவம் செய்யலாமா?' என்றும், 'இவர்களால் அநுபவிக்கப்படும் போக்ய வஸ்துக்களை இவர்களே ஸ்ருஷ்டித்துக் கொள்ளுகிறார்களா?' என்றும் ஆகிற இரண்டு ஸம்ஶயங்களையும் நிவ்ருத்திக்கும்படி ஒருவர் அடியேனைக் கேட்டிருக்கிறார். ஸ்ரீ பாஷ்யம் 4-வது அத்யாயம் 4-வது பாதத்தில் 'த்வாதசாஹவச்ச' என்கிற ஸூத்ரத்தினால், முக்தர்கள் அஶரீரர்களாகவும் ஸஶரீரர்களாகவும் ப்ரஹ்மாநந்தாநுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதத்திலேயே "ஸங்கல்பாதேவ து தச்ச்ருதே:" என்கிற ஸூத்ரத்தினால் முக்தர்கள் தமக்கு வேண்டுமான போக்யவஸ்துக்களைத் தாமே ஸ்ருஷ்டித்து அநுபவிக்கிறார்கள் என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஈஶ்வரனுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் அவனுடைய தர்ம பூதஜ்ஞாநம் இவைகள் தவிர மற்றை வஸ்துக்களெல்லாம் ஈஶ்வரனுடைய நித்யாநித்யேச்சா ஸித்தங்களென்பது விஶிஷ்டாத்வைதிகளுடைய ஸித்தாந்தமாதலால் அந்த முக்தர்களுடைய ஸ்ருஷ்டியும் ஈஶ்வரேச்சாதீநமே.

ஸ்ரீரங்கம் 1—5—13. } புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச ஆனிமீ [ஸஞ்சிகை 5.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible] விஜயஸெ [illegible].

நாளது ப்ரமாதீச வருஷம் ஆடி மாஸம் 3உ ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் நடக்கிறதென்றும், அந்த மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களெல்லாரும் வந்திருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவித்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் மந்த்ராக்ஷதை பெற்றுக் கொண்டு போகவேண்டுமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபையுடன் ஸ்ரீமுகம் நியமித்திருக்கிறார். அந்த நியமநத்தை ஶிரஸ்ஸினால் அங்கீகரித்து அந்த நியமநப்படி அந்த மஹோத்ஸவகாலத்தில் அவ்விடம் விடைகொண்டு அப்பொழுது அங்கே ஸம்பவிக்கக்கூடிய ஸாத்விக கோஷ்டி ஸுகாதிகளை "ஈட்டங்கண்டி

ஸ்ரீஅஹோபில மடம்.

டக்கூடுமேல் அதுகாணும் கண்பயனாவதே” என்றபடி அநுபவித்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தினாலும் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடிகளுடைய ஸேவையினாலும் ஆத்மலாபத்தைத் தேடிக்கொள்ளவேண்டும் என்கிற ஆஸ்தை தீவ்ரமாக மநஸ்ஸில் இருக்கையிலும், தேஹபோஷக மார்க்கமான லௌகிக வ்யாபாராதிகளில் ப்ரவ்ருத்தித்து அவைகளின் நிர்பந்தத்தால் வருந்தி இம்மாதிரியான மநோரதங்களை நிறைவேற்றிக்கொள்ள அஶக்தர்களாக இருக்கும் அஸ்மதாதிகள் மீது ஸ்ரீ அழகியசிங்கர் க்ஷமைகொண்டு, தைஹிகமாக ஸங்க்ருஹிதர்களாக இராமற்போனாலும் மாநஸிகமாக ஸங்க்ருஹிதர்களாக இருக்கும் அடியோங்களை வாத்ஸல்ய பூர்வம் அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

யதார்த்தமாகவே ஸ்ரீ அஹோபில மடம் போன்ற ஆசார்ய ஸ்தாநங்கள் ஏற்படாவிட்டால், கலிப்ராபல்யத்தால் எப்பொழுதும் விஷயப்ரவணர்களாகவும் தர்மாதர்ம விவேகமற்றும் வர்த்தித்துவரும் ஜீவகோடிகளின் உஜ்ஜீவநம் எவ்விதமாக ஸம்பவிக்கும்? இந்த ஆசார்யர்கள் தேஶாத் தேஶம் ஸஞ்சரித்து அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தால் மூடப்பட்டு ஸம்ஸாரத்தில் உழன்றுகொண்டு இருக்கும் சேதநர்களுக்கு விவேகமுண்டாகும்படி தத்வோபதேஶாதிகளைச் செய்ய அஶக்தர்களாக இருந்தாலும், அவர்களுடைய ஸத்வோத்தரமாக இருக்கும் ஸத்தையே ஆகர்ஷகம் என்பதில் ஆக்ஷேபமுண்டோ? பற்பல இடங்களில் பற்பல ஸாத்விகர்கள் இம்மாதிரியாக ஜநித்து, ரஜஸ் தமஸ் ஸம்பந்தமான சித்தவ்ருத்தியையும் அதனால் உண்டாகும் வாசிக காயிக வ்யாபாரங்களையும் கிட்ட அணுகவொட்டாமல் தடுத்து எப்பொழுதும் பகவத் பக்தியினாலும் அதற்கு அநுகுணமான ஸாத்விக எண்ணங்களாலும் நிறைந்த மநஸ்ஸை யுடையவர்களாய் வர்த்தித்து வந்தால், அப்படி வர்த்திப்பதால் உண்டாகும் ஒரு ஶக்தி பஹுதூரம் வ்யாபித்து அதற்கு உட்பட்டிருக்கும் ஜீவகோடிகள் எல்லாவற்றையும் ஸந்மார்க்கத்தில் நிஶ்சயமாக ஆகர்ஷித்தே தீரும். இவ்விதமாக ஒரு விமோசநம் ஏற்பட்டாலொழிய, வேறு ஸம்ரக்ஷணோபாய



மொன்றும் இப்பொழுது இருக்கும் ஸ்திதியை விமர்ஶிக்கும் நமக்குத் தென்படாது. ஆகையால், ஆத்யந்திகமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டும் என்கிற எண்ணம் கொண்டிருக்கும் நாம் எல்லாரும், ஸ்ரீ அஹோபிலமடம் போன்ற ஆசார்ய ஸ்தாநங்களெல்லாம் ஜகத்தின் உஜ்ஜீவநத்தைச் செய்விக்குமளவு ஸத்வோத்தரங்களாக இருக்கவேண்டுமென்றும், அவைகளின் அத்யக்ஷத்வத்தை வஹிக்குமவர்களெல்லாரும் வைஷம்ய நைர்க்ருண்யங்களற்று அநிதரஸாதாரணமான கல்யாண குணங்கள் பொருந்தினவர்களாய் ஶத்ருமித்ரோதாஸீந பாவனையின்றிக்கே ஸர்வ ஜகத்துக்கும் ஹிதத்தை ஆஶம்ஸித்துக்கொண்டு வர்த்தித்து வரவேண்டுமென்றும், ஆஸ்தாந ஸந்நிதாநத்தில் ஸங்க்ருஹிதர்களாக இருக்கும்படியான மஹாபாக்யம் பெற்றவர்களும் வேதார்த்த பரிஶீலந ஶீலர்களாக இருப்பதுடன் அஶரண்யர்களாக வருந்தும் சேதநர்களை ஆகர்ஷித்து அவர்களுக்கு ஆஹ்லாதத்தை உண்டாக்குமளவு ஸாதுத்வத்தால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென்றும் பத்தாஞ்ஜலிபுடர்களாக எப்பொழுதும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திப்போம்.

“[illegible]
[illegible] ।
[illegible]”
[illegible] ॥

. ∴ ∴ ∴

**ஸங்க்ரமண ஶ்ராத்தம்.**

சென்ற பங்குனி மாஸத்திய ஸஞ்சிகையில் ஸங்க்ரமண ஶ்ராத்தகால விஷயமாகச் செய்யப்பட்டிருந்த ஒரு ப்ரஶ்நத்திற்கு ஸ்ரீ. உ.ப. மஹாமஹோபாத்யாயர் பெருகவாழ்ந்தான் ரங்காசார்ய ஸ்வாமீ ஒரு நிர்ணயம் ஸாதித்திருக்கிறார். அதை இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். த்ருடமாகவும் அஸந்திக்தமாகவுமுள்ள ஶாஸ்த்ர ப்ரமாணத்தைக்கொண்டு அவர் செய்திருக்கும் நிர்ணயத்தை ஆஸ்திக ஶிரோமணிகளான மற்றை

வித்வான்கள் பரிஶீலநம் செய்து, அது ஆக்ஷேபானர்ஹமாக இருந்தால் அதை அநுஷ்டாநத்திற்குக் கொண்டுவர முயலவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். இப்பொழுது இந்த ஶ்ராத்த விஷயமான அநுஷ்டாநங்கள் அத்யந்தம் பிந்நங்களாக இருக்கின்றன என்பது ஸுப்ரஸித்தம். வ்யபதிஷ்டர்களாக இருக்குமவர்களுக்குள்ளாகவே இம்மாதிரியான வைவித்யம் நேர்ந்துவிட்டால், கர்மாநுஷ்டாநங்களை ஒரு பெரிய உபத்ரவமாக எண்ணும் ஸ்வபாவமுள்ள அநேக ஸாமாந்ய ஜநங்கள் ஆத்யந்திகமாக இதை விட்டுவிடுவதற்கு அது ஒரு முக்யஹேதுவாகும்; மிதஜ்ஞர்களாக இருந்தாலும் ஶாஸ்த்ர விஶ்வாஸமுள்ள மற்றும் சிலர், 'வ்யவஸ்தை ஒன்றும் தெரியவில்லையே; ஒரு பக்ஷத்தை அநுஸரித்து அநுஷ்டித்தால் மற்றொரு பக்ஷ க்ரமப்படி கர்மலோபம் ஸம்பவித்துவிடுமோ!' என்று பயந்து வருந்துவதற்கும் அது காரணமாகும். ப்ரஜைகளுக்கு இம்மாதிரியான நாஶம் வரக்கூடாது என்று எண்ணும் ஸ்வபாவமுள்ள வித்வான்கள் எல்லாரும் இதுவிஷயமான சர்ச்சையைப் பூர்ணமாக செய்து சீக்கிரத்தில் ஏக முகமான ஒரு ஸித்தாந்தத்திற்கு வருவார்களென்று நம்புகிறோம்.

∴ ∴ ∴

கர்மாநுஷ்டாநம்.

கீழ்ச்சொல்லப்பட்டிருக்கும் இந்த ப்ரஸ்தாவம் அது ஸம்பந்தமான மற்றொரு விஷயத்தை ஸ்மரிப்பிக்கிறபடியால், அதையும் இவ்விடத்தில் கொஞ்சம் விசாரிப்போம். காலாநுகுணமாகப் பாஷாந்தராதிகளை அப்யஸித்து அவைகளில் ஸம்பாதிக்கப்பட்ட நிஷ்பத்தியைக்கொண்டு குடும்பபோஷணார்த்தம் ராஜஸேவை ப்ரப்ருதியான பராதீந வ்ருத்தியை அவலம்பித்திருக்கும் 'லௌகிகர்' என்று வ்யவஹரிக்கப்படுமவர்களில் அநேகர், தங்களுடைய நித்ய நைமித்திக கர்மங்களை விதிவத்தாக அதற்கு விஹிதமான காலங்களில் அநுஷ்டிக்க அஶக்தர்களாய் கௌணரீதியாகவும் கௌண காலங்களிலும் அவைகளை அநுஷ்டித்து வருகிறார்கள். பாஷாந்தராதிகளை அப்யஸிக்காமல் வேதத்திற் சொல்லப்பட்ட மார்க்கத்தில் நடப்பதாகச் சொல்லிக்கொண்டு அந்தக்



காரணத்தால் 'வைதிகர்' என்று பெயர் பூண்டு இருப்பவர்களில் அநேகரும், குடும்பபோஷணத்தை உத்தேஶித்தே நிர்பந்தங்களை உண்டு பண்ணக்கூடிய க்ருஷி பௌரோஹித்யம் முதலிய வ்ருத்திகளை அவலம்பித்து அந்த நிர்பந்தங்களால் உபருத்தர்களாய்த் தமது நித்ய நைமித்திக கர்மங்களை முற்கூறிய மாதிரியே கௌண ரீதியாகவும் கௌண காலங்களிலும் அநுஷ்டித்து வருகிறார்கள். இவர்களுடைய கதி என்ன? கர்ம ப்ரம்ஶம் ஏற்பட்டு அதனால் பாதித்யம் உண்டாகி பகவதநுக்ரஹத்திற்கு ஸர்வதா அநர்ஹர்களாகவே இவர்கள் ஆகிவிடுவார்களோ? இல்லாவிட்டால் இவர்களுக்கும் உஜ்ஜீவநம் உண்டா? என்பதுதான் இப்பொழுது நமக்கு விசாரிக்கவேண்டிய அம்ஶம்.

"விதிப்ரஷ்டம் ச யத்கர்ம கரோத்யவிதிநா ச ய꞉ -
ஸம்யக் கிஞ்சிந்ந வாப்நோதி க்லேஶமாத்ரம் ச தஸ்ய தத்"

என்கிற வ்ருத்த மநுவினுடைய வாக்யம், 'ஶாஸ்த்ரங்களிற்சொல்லப்பட்டிருக்கும் கால தேஶாதி நியமங்களை அதிக்ரமித்துச்செய்யப்படும் கர்மங்களெல்லாம் செய்யப்படாதவைகளுக்குத் துல்யங்கள்' என்று சொல்லுகின்றது. இவ்விதமாகவாவது கர்மங்களின் ஶாஸ்த்த த்யாகத்தாலாவது கர்மலோபம் ஸம்பவித்தால், அவர்களுக்கு பகவந்நிக்ரஹம் உண்டாகிறது என்றும் இந்தலோகத்திலும் ஶ்ரேயோஹாநி ஸம்பவிக்கிறது என்றும்

"ஶ்ருதி꞉ ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்ததே |
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ꞉ ||"

என்கிற பகவத் வாக்யமும்,

"யே நாஸ்திகா நிஷ்க்ரியாஶ்ச குருஶாஸ்த்ராதிலங்கிந꞉ |
அயஜ்ஞா துராசாராஸ்தே பவந்தி நராதமா꞉ ||"

என்கிற ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியின் வாக்யமும் இன்னும் இவை போன்ற அநேக வாக்யாந்தரங்களும் சொல்லுகின்றன. இவைகளெல்லாவற்றையும் பார்த்தால், ஸந்த்யாவந்தநாதிகளைக்கூட யதாக்ரமம் அநுஷ்டிக்கக் கூடாதவர்களாக இருக்கும் நாம் பகவதநு

க்ரஹத்திற்கு ஆசைப்படுவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்குத் துல்யமாகு மென்றே தோன்றும்.

ஆனால், நாம் இதில் கவனிக்க வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. கர்ம ந்யூநதை இரண்டு விதமாக ஸம்பவிக்கக் கூடும். சாஸ்த்ரங்களில் விச்வாஸ மின்றிக்கே, வேதங்கள் அப்ரமாணங்க ளென்றும், மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டிருக்கும் வாக்யங்கள் குத்ஸிதங்க ளென்றும், ப்ரத்யக்ஷ ஸுகதுக்க க்ருதமான வ்யவஸ்தை நீங்கலாக மற்ற எந்த வ்யவஸ்தையும் இல்லை யென்றும் எண்ணிக்கொண்டு அவச்யமான கர்மங்களை அநுஷ்டிக்காமலே விட்டுவிடுவது ஒரு விதமான ந்யூநதை; குடும்ப போஷண பாரத்தால் வருந்திக்கொண்டு பராதீநதையை ஸம்பாதிப்பது தவிர்த்து வேறு ஒரு உபாயத்தையும் குடும்ப போஷகமாகக் காணாமல் கீழ்க்கூறப்பட்டிருக்கும் ராஜஸேவை க்ருஷி முதலிய வ்ருத்திகளை அவலம்பித்து அவைகளின் நிர்பந்தத்தால் யதோக்தமான கால தேசங்களில் கர்மங்களைச் செய்ய அசக்தர்களாய் கௌணகாலாதிகளில் அவைகளை அநுஷ்டிப்பதால் உண்டாகும் ந்யூநதை மற்றொருவிதம். இந்த இரண்டு ந்யூநதைகளையும் பகவாந் துல்யங்களாக பாவித்து இரண்டிலும் ஆஜ்ஞாத்ரோஹம் ஏற்படுகிறது என்று அவர் திருவுள்ளம் பற்றுகிறதாக நாம் அர்த்தம் சொல்வது ந்யாயமாகுமா? "ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ" என்கிற வாக்யம் சாஸ்த்ரங்களில் விச்வாஸமில்லாமல் கர்மத்யாகம் செய்பவர்களுக்கு அந்வயிக்குமே தவிர அசக்தியால் கர்மாநுஷ்டானத்தில் ஒரு குறைவைச் செய்பவர்களுக்கு அந்வயிக்காது என்றே தோன்றுகிறது.

"அஶக்த்யாகரணம் ச வேதாந்தா ஶாஸ்த்ராணாம் சைவ கல்பிதம்।
ஸர்வஸ்வம் ச ஸமுத்ஸ்ருஜ்ய ஸந்தோஷம் ஶரணாகதஃ ॥"

என்கிற வஸிஷ்ட வாக்யம், இதற்கு நியாமகமாகும். அசக்தியால் கர்மங்களுக்குக் குறைவு ஸம்பவித்தால், அந்தக் குறைவு பகவந் நிக்ரஹத்தைக் கொடுக்கக்கூடியதானாலும், அம்மாதிரியான நிக்ரஹத்திற்கு நாம் பாத்ரமாகாதபடி நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ள உபாயமொன்று இருக்கிறது என்பதுதான் நமக்கு ஆச்வாஸத்தைக் கொடுக்கிறது. ஒரு சாஸ்த்ராதிலங்கநம் நேர்ந்து விட்டால், 'அஹோ! துஷ்க்ருதம் நேர்ந்துவிட்டதே!' என்கிற அநுதாபம் நமக்கு ஜநிக்கும்; சாஸ்த்ரத்தில் அவிச்வாஸிகளாக இருப்பவர்களுக்கு அப்படிப்பட்ட அநுதாபம் ஜநிக்க ஹேதுவில்லை. இந்த அநுதாபம் பகவத் தயோந்மேஷக மென்பதற்கு

"க்ருதே பாபே(அ)நுதாபோ வை யஸ்ய பும்ஸஃ ப்ரஜாயதே। ப்ராயஶ்சித்தம் து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம்"

என்பது முதலிய மஹர்ஷிகளின் வாக்யங்களே ப்ரமாண மாகின்றன. ஆகையால், நித்ய நைமித்திக ரூபங்களான கர்மங்கள் நமக்கு ப்ராப்தமாகும் காலங்களில் அவைகளை நம்முடைய ஸர்வாத்ம பக்திக்குப் பாத்ரமாகும் ஸ்ரீபகவானுடைய ஆஜ்ஞைகள் என்று உணர்ந்து, யதாசக்தி கால தேசாதிகளுக்கு அதிக்ரமம் வராமல் அவைகளை அநுஷ்டிக்க நாம் ஆரம்பித்து, அப்படி விதிவத்தாக நடத்த முயல்வது நம்முடைய வ்ருத்தியின் பங்கத்திற்கு ஹேதுவாகும் போலத் தோன்றினால், அப்படி நேரும் வ்ருத்தி பங்கம் அஸஹ்யமாக இருக்கும் பக்ஷத்தில், சாஸ்த்ரோக்தமான நியமத்திற்குக் கொஞ்சம் ந்யூநதையை ஸம்பாதித்தாவது அநுசயத்துடன் கூடின ஹ்ருதயத்தோடு அந்தக் கர்மங்களை நாம் அநுஷ்டித்தால், அதில் உண்டாகும் குறைவைப் பரம க்ருபாளுவான பகவான் நம்முடைய பச்சாத்தாபத்தை ஆதாரமாகக் கொண்டு க்ஷமித்து நம்மை அநுக்ரஹிப்பர் என்றே நம்புகிறோம்.

"நிரவதிஷு க்ருதேஷு ஆகஸ்ஸ்வஹோ
ஹ்ருதி நிரநுஶயிநீ யதி ஸ்யாத் மதிஃ।
ஶரத ஹி ஜயதே ந ஸம்ஶயோ(அ)த்ர
நிரநுஶயிநோ ஹதா ஏவ வயம் ॥"

∴ ∴ ∴

ஶ்ரீ:.

# ஸங்க்ரமண புண்யகால நிர்ணயம்.

ஸ்ம்ருதி ரத்நாகரம், ஸ்ம்ருதி முக்தாபலம் என்கிற ஆந்ஹிக க்ரந்தங்களில், ஸ்நாநப்ரகரணத்தில், அயந விஷு விஷ்ணுபதி ஷடசீதி முதலிய ஸங்க்ரமங்களுக்குத் தனித்தனியாகப் புண்யகாலங்கள் ஸ்நாந தாநாதிகளுக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர, ஶ்ராத்தங்களுக்காகச் சொல்லப்படவில்லை. ஸ்நாநஞ் செய்யாமற்போனால் ஏழுஜந்மங்களில் ரோகியாகவும் துக்கியாகவும் ஆய்விடுவானென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஶ்ராத்தத்தைப்பற்றி ப்ரவர்த்தித்திருக்கிற ஸார்வபௌமருடைய பித்ருமேதஸார ஸுதீவிலோசநங்களிலும், • தீக்ஷிதருடைய ஶ்ராத்த காண்டத்திலும், ஶ்ராத்தங்களை ஏகோத்திஷ்டமென்றும் பார்வணமென்றும் இரண்டுவிதமாகப் பிரித்து, ஏகோத்திஷ்டம் ஒருவனையே உத்தேசித்துச் செய்வது, பார்வணம் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹர்களாகிய மூன்று பேர்களை யுத்தேசித்துச் செய்யக்கூடியதென்று சொல்லி, பிரித்த ஶ்ராத்தங்களைச் செய்யக் காலம் சொல்லும் ப்ரகரணத்தில், வ்ருத்தி ஶ்ராத்தத்திற்கு உதயம்முதல் 6 நாழிகைவரையில் (ப்ராத: காலம்) காலம், ஆமஶ்ராத்தத்திற்குப் பகலில் முன்பாதியாகிய (பூர்வாண்ஹம்) காலம், ஏகோத்திஷ்டத்திற்கு 12 நாழிகைக்குமேல் 18 நாழிகைவரையில் (மத்யாந்ஹம்) காலம்; பார்வணத்திற்கு 18 நாழிகைக்குமேல் 24 நாழிகைவரையில் (அபராண்ஹம்) காலமென்றுங் கால வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. ஸங்க்ரமண ஶ்ராத்தங்கள் மூன்றுபேர்களை யுத்தேசித்துச் செய்யப்படுவதனால், பார்வணஶ்ராத்தங்களென்பதிற் சந்தேகமில்லை.

வேதாந்த தீபிகையில் உதாஹரித்த யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியின் ஆசார காண்டத்தில் 217, 218-வது ஶ்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிற ஶ்ராத்தங்கள், பார்வண ஶ்ராத்தங்கள்தான்; அவைகளில் ஸங்க்ரம ஶ்ராத்தங்களும் அடங்கியிருக்கின்றன. 219 - முதல் 225 - வரையில் 7 - ஶ்லோகங்களால், மேற்சொன்ன



ஶ்ராத்த] போஜநத்திற்குத் தகுந்த ப்ராம்ஹணர்களையும் தகாத ப்ராம்ஹணர்களையுஞ் சொல்லி, 226 - வது ஶ்லோகத்தில் மேற்சொன்ன ஶ்ராத்தங்களை அபராண்ஹகாலத்தில் துவக்கி நடத்தவேண்டுமென்று சொலலப்பட்டிருக்கிறது.

ஸுதீவிலோசநம் 11 - வது கண்டத்தில், போதாயந காத்யாயநர்களுடைய வசநங்களினாலும், தன் வாக்யங்களினாலும், ஸங்க்ரம நிமித்தகமாகிய ஶ்ராத்தங்களை ஆமத்தாலேயே செய்யவேண்டுமென்று தீர்மானித்து, மேற்சொன்ன ஆமஶ்ராத்தத்தை நடத்தக் காலஞ் சொல்லத்தொடங்கி, ‘சூத்ரன் செய்யவேண்டிய எல்லா ஶ்ராத்தங்களையும் ஆமத்தாலேயே செய்யவேண்டும்; த்விஜன் செய்யவேண்டிய ஶ்ராத்தங்களை அந்நத்தாலேயே செய்யவேண்டும்; சிலநிமித்தங்களில் ஆமமாகிற ப்ரதிநிதியினாலேயே செய்யவேண்டும்’ என்றும், அந்த ப்ரதிநிதிக்கு முக்யத்தின் காலமே காலமென்று ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறாரென்றும் சொல்லி, அந்த ஶ்ராத்தத்தை ஶ்ராத்தத்திற்கு அங்கமான திலதர்ப்பணத்தைச் செய்து பிறகு செய்யவேண்டுமென்றும், அந்த அங்கமான திலதர்ப்பணத்தை அபராண்ஹத்தில் தான் செய்யவேண்டுமாகையால் அதை முன்செய்து பிறகு செய்யவேண்டிய ஆமஶ்ராத்தத்திற்கு அபராண்ஹகாலத்தைத்தவிர, வேறுகாலம் சொல்ல முடியாதென்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

பின்னும், ப்ராம்ஹணனுக்கு, அந்ந ஶ்ராத்தம் நியதம்; ஆமஶ்ராத்தமோ ப்ரதிநிதியாய்க் காலவிஶேஷத்தில் அநியதமாக ப்ராப்தம். இவ்விரண்டுக்கும் சேர்த்து, ஓர் அபராண்ஹகாலத்தை விதித்தால் நித்யாநித்ய ஸம்யோகவிரோதம் வருமென்று ஆக்ஷேபித்து அவ்வாறு விதிக்கப்படவில்லை. நித்யத்திற்குத்தான் காலத்தை விதித்தது. ப்ரதிநிதிக்குக் காலம் விதிக்கவேண்டியதில்லை. முக்யஸ்தாநத்தில் ப்ரதிநிதி வந்தபடியால், முக்யத்தின் காலமே அதிதேசத்தால் ப்ரதிநிதிக்கு வந்துவிடுமென்று ஸமாதாநம் செய்யப்பட்டிருக்கிறது.

பின்னும், திலோதகதாநம் ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாக ரிஷிகளால் எடுக்கப்படாதபடியால், அது ப்ரதிநிதியாகமாட்டாது. யாராலாவது ப்ரதிநிதியாகச் சொல்லப்பட்டிருந்தாலும், மேற்சொன்ன ந்யாயங்களால அந்தத் தர்ப்பணத்தையும் அபராண்ஹகாலத்தில்தான் செய்யவேண்டும்.

ஒரு முக்யத்திற்கு அநேக ப்ரதிநிதிக ளிருந்தாலும், ப்ரதிநிதியைச் செய்யவேண்டுமென்று சொன்னால் மாத்திரம் இஷ்டமான ஏதாவது ஒரு ப்ரதிநிதியைச் சக்திக்குத் தகுந்தபடி செய்யக்கூடும். ஒரு ப்ரதிநிதியைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்குமிடத்தில் மற்றொரு ப்ரதிநிதியை எடுத்துக்கொள்ள ந்யாயமில்லை. ஆகையால், ப்ராக்ருத ஸங்க்ரமண விஷயத்தில் ச்ராத்தத்திற்கு ப்ரதிநிதியான ஆமச்ராத்தத்தை அபராண்ஹத்தில் அங்கமான திலதர்ப்பணத்தைச் செய்து பிறகு செய்யவேண்டும்.

பக்ஷாந்தரத்தை அநுஸரித்து ப்ரதிநிதியாகத் திலதர்ப்பணத்தைச் செய்தாலும், மேற்சொன்ன ந்யாயங்களால் அபராண்ஹத்திலேயே அதைச் செய்யவேண்டும்.

மேற் சொல்லியிருக்கிற விஷயங்களுக்கு ப்ரமாணமான வைதிக ஸார்வ பௌமருடைய ஸூக்தி விலோசநம் 11 - வது கண்டத்திலிருக்கிற வசநங்களும் வாக்யங்களும் :

போதாயந: - ஸங்க்ரமே த்வபராஹ்ணே ப்ராஸமே சந்த்ர ஜந்மநி । ஆமஶ்ராத்தம் ஸங்க்ரமே குர்யாத் விஶேஷாத் ஸூர்யபர்வணி ॥

காத்யாயந: - ஆபத்யநக்நௌ தீர்த்தே ச ப்ராஸமே சந்த்ர ஜந்மநி । ஆமஶ்ராத்தம் ப்ரகுர்வீத ஸாயாஹ்நே ஸங்க்ரமே ॥

அபராஹ்ண ஸ்துவேதி ஸ்ம்ருதிஸ்ஸங்க்ராந்திஷு ச ஆமஶ்ராத்தநிர்ணய:.

அதஶ் ஸங்க்ராந்தி க்ரஹணாதௌ தர்ப்பணாதிஶ்ராத்தம் ஆமேநைவ கர்த்தவ்யமிதி ஸித்தம்,

அத: - ஸங்க்ராந்தி க்ரஹணாதிஷு அபராஹ்ண ஏவ ஸதா ஆமஶ்ராத்தம் கார்யமிதி.

ஆபஸ்தம்பஸூத்ரம். 3 - வது. பாதம் ...
52 - வது. ஸூத்ரம் ...
தத்பாஷ்யஸ்யாச.

ஸஜ்ஜநவாஸ்ய:.

திருக்குடந்தை 20-6-1913.

பெருகவாழ்ந்தான்
மஹாமஹோபாத்யாயர்.

ஸ்ரீ:.
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.
ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம் ।
ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர: தம் வந்தே யாமுநாஹ்வயம் ॥
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம: ।
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம: ॥

நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாநவைராக்யராஶயே ।
நாதாய முநயேऽகாதபகவத்பக்திஸிந்தவே ॥ க.

ஸ்ரீ:.
ஸ்ரீயை நம:.

ஸ்ரீ வேதாந்தத்தின் ரஹஸ்யமாயும் த்வயமென்று சொல்லப்படும் மஹா மந்த்ரத்தினுடைய அர்த்தம் அடங்கியதாயுமுள்ள ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்யக் கருதி, ஸ்ரீ ஆளவந்தார், முதலில் ப்ரக்ருதமான ஸ்தோத்ரம் செய்வதற்கு உபயுக்தமாகிற தத்வஜ்ஞாநத்திற்குக் காரணமாகும் தமது ஆசார்யர்களை மிகுந்த நன்றியறிவுடன் ஐந்து ச்லோகங்களால் நமஸ்கரிக்கிறார். அந்த ஐந்து ச்லோகங்களுள் முதல் மூன்று, ஸ்ரீ ஆளவந்தாருடைய ஆசார்யருக்கும் ஆசார்யராகிற நாதமுநிகளைக் குறித்துச் செய்யப்படும் ப்ரணாமத்தைச் சொல்லுகின்றன. ஸ்ரீநாதமுநிகளுடைய ஸம்பந்தத்தாலே ஸ்ரீ ஆளவந்தாருக்கு ஸதாசார்ய கடாக்ஷம் முதலியவை கிடைத்தன என்பது ப்ரஸித்தம்.

1. இந்த ச்லோகத்தில், ஸ்ரீ நாதமுநிகளைப் பகவானுடைய பாரத்வத்தை அநுபவிப்பதனா லுண்டாகும் பக்தியால் நிறைந்தவராக த்யாநம் செய்துகொண்டு அவரை ப்ரணாமம் செய்கிறார். ‘அசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாநவைராக்யராஶயே அகாதபக

பகவத்பக்திஸிந்தவே நாதாய முநயே நம:' என்று அந்வயம். 'ஜ்ஞாநம் வைராக்யம் இவைகளால் நிறைந்தும், பக்தியாலும் நிறைந்து முள்ள ஸ்ரீ நாதமுநிகளுக்கு நமஸ்காரம்' என்பது இந்த ஶ்லோகத்தின் கருத்து. இதில் 'ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் நிறைந்தும், பக்தியாலும் நிறைந்தும்' என்று ஜ்ஞாந வைராக்யங்களை ஒன்றுசேர்த்துப் பக்தியைத் தனிமையாக உபாதாநம் செய்ததன் தாத்பர்யமாவது - இம்மூன்று குணங்களும் முமுக்ஷுக்களுக்கு ப்ரதாநங்களாக இருக்கையிலும் பக்தியென்பது அவைகளுள் அத்யந்தம் ப்ரதாநம் என்பது தான். தவிரவும், ஜ்ஞாந வைராக்யங்கள் பக்திக்கு ஸாதகங்கள் என்றும், பக்தி ஜ்ஞாந வைராக்யங்களாலே ஸாத்ய மென்றும், அப்படிப்பட்ட பக்தியினால் மாத்திரம் ஸ்ரீமந் நாராயணன் அடையத்தகுந்தவனே தவிர மற்றைக் கர்மஸமுச்சயம் வாக்யார்த்த ஜ்ஞாநம் முதலியவைகளால் அடையத்தகாதவனென்றும் ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தின் முதல் ஶ்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தாரால் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் இவ்விடத்திலும் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. "ஸ்வதர்ம ஜ்ஞாநவைராக்ய ஸாத்ய பக்த்யேககோசர:."

ஜ்ஞாநம் - எந்த ஜ்ஞாநத்தால் மோக்ஷம் லப்யமாகுமோ, எதனால் நிர்துஷ்டமான பரப்ரஹ்மத்தை அறியலாமோ, அது தான் ஜ்ஞாநம். "ஸா வித்யா யா விமுக்தயே", "ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம்" இத்யாதியான வாக்யங்கள் இதற்கு ப்ரமாணம். பரஶேஷதைகரஸமாகிய யதாவஸ்தித ஆத்ம விஷயமான ஜ்ஞாநமே இந்த ஜ்ஞாநமாகும். இப்படிப்பட்ட ஜ்ஞாநம் நிறைந்துள்ள ஆசார்யனே ஆஶ்ரயிக்கத்தகுந்தவன் என்றும் த்யோதிப்பிக்கப்படுகிறது.

வைராக்யம் - பரமாத்மா ஒன்று நீங்கலாக மற்றை ஸர்வபதார்த்தங்களிலும் உள்ள விரக்தியே வைராக்யம்; அதாவது - அல்பமாகவும் அஸ்திரமாகவும் இருக்கும் ஸ்வர்க்கம் முதலியவைகளிலும் ஸ்வாத்மாநுபவ மாத்ரத்திலும் ஸ்ப்ருஹை யற்று இருக்



குந் தன்மை. "ஸாரோத்தரி யோஸக்தோ விரக்தோऽஸாரோத்தரி" என்று முமுக்ஷுவினுடைய ஸ்வபாவம் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது.

பக்தி - மஹநீயர்களாக இருக்குமவர்களிடம் செய்யப்படும் ப்ரீதியே பக்தியென்று சொல்லப்படும். "ஸ்நேஹபூர்வம் அநுத்யாநம் பக்திரித்யபிதீயதே" என்று ஸாமாந்யமாக ஸ்நேஹத்தை முன்னிட்டுச் செய்யப்படும் அநுத்யாநத்திற்குப் பக்தியென்று பெயராகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், பூஜ்யர்கள்விஷயத்தில்தான் இது வழங்கிவருகின்றது. வேதநம் உபாஸநம் த்யாநம் முதலிய ஶப்தங்கள் இந்தப் பக்திக்குப் பர்யாய ஶப்தங்களாக அத்யாத்ம ஶாஸ்த்ரங்களில் ப்ரயோகம் செய்யப் பட்டுவருகின்றன.

'ஜ்ஞாந வைராக்யங்களுடைய ராஶி' என்றும், 'பக்திக்கு ஸிந்து' என்றும் சொன்னதன் தாத்பர்யம் - ஜ்ஞாநாதிகள் அக்ஷயங்களாக நிற்கின்றன என்பதையும், பக்தி ஸமுத்ரம்போல அபாரமாகவும் அஶோஷ்யமாகவும் நிறைந்திருக்கிறது என்பதையும் காண்பிக்க வேண்டும் என்பதே.

'ஜ்ஞாநம்' 'வைராக்யம்' இந்த இரண்டு பதங்களுக்கும், 'அசிந்த்யம்' 'அத்புதம்' 'அக்லிஷ்டம்' என்று மூன்று விஶேஷணங்கள் இருக்கின்றன. ஸ்ரீ நாதமுநிகளுடைய ஜ்ஞாந வைராக்யங்கள் இப்படிப்பட்டவை யென்று பரிச்சேதிக்கக் கூடாதவையாதலால் அசிந்த்யங்கள், லோகோத்தரங்களானபடியால் ஆஶ்சர்யகரங்கள், ப்ராசீந ஸுக்ருத விஶேஷத்தாலும் ஆசார்ய ப்ரஸாதத்தாலும் ஸ்வயத்ந மின்றிக்கே கிடைத்தவை யாதலால் அக்லிஷ்டங்கள் என்பது இந்த விஶேஷணங்களின் தாத்பர்யம்.

பக்தியைச் சொல்லுமிடத்தில் 'பகவத் பக்தி' என்றும், அது 'அகாதம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பக்திக்கு ஸமஸ்த கல்யாண குணாகரனாகவும் ஹேயகுண ரஹிதனாகவுமுள்ள ஸர்வஶேஷியான பகவானே யோக்யனென்றும், இந்தப்

தஸ்மை நமோ மதுஜித³ங்க்⁴ரி ஸரோஜ தத்த்வ
ஜ்ஞாநாநுராக³ மஹிமாதிஶயாந்த ஸீம்நே ।
நாதா²ய நாத²முநயே(அ)த்ர பரத்ர சாபி
நித்யம் யதீ³யசரணௌ ஶரணம் மதீ³யம் ॥ 2.

பக்தியானது எவ்வகையிலும் அபேக்ஷாப்ய மென்றும் இதனால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

நாதா²ய முநயே-நாதமுநிகளின் பொருட்டு. நமக்கு யாசநீயராகவும் ஸ்வாமியாகவு மிருக்கும் தன்மையும், ப்ரக்ருஷ்டமான மநந ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கும் தன்மையும் ஸ்ரீ நாதமுநிகளிடம் நிறைந்திருக்கின்றன என்பதை இந்தப் பதங்கள் த்யோதிப்பிக்கின்றன.

நம: - நமஸ்காரம். இந்த ஶப்தம், ப்ரணிபதநத்தை முன்னிட்டிருக்கும் ஆத்ம நிவேதநத்தைக் காண்பிக்கிறது. "நமஸ்காராத்மகம் யஸ்மை விதா⁴யாத்மநிவேத³நம் - க்ருதக்ருத்ய: [illegible]" என்று ஈஶ்வர ஸம்ஹிதையில் படிக்கப்பட்டிருக்கிறது. ஆசார்ய வந்தநத்தை முன்னிட்டுச் செய்யப்படும் பகவத் வந்தநமே அத்யந்தம் ஸாதுவானதால், பகவத் வந்தநரூபமான இந்த ஸ்தோத்ரத்தைச் செய்ய ஆரம்பிக்கும் ஸ்ரீ ஆளவந்தார் பாகவத வந்தநமாகிற இந்த ஆசார்ய வந்தநத்தைச் செய்கிறார். இதைத் தாமே செய்வது போதுமானாலும், மற்றவர்களுடைய ப்ரதிபோதநத்தின் பொருட்டு இந்த ப்ரணமம் க்ரந்தத்தில் நிவேஶிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நாதமுநிகளிடம் ஸ்ரீ ஆளவந்தார் இம்மாதிரியான தாஸ்யம் பூண்டதற்குக் காரணம் ஸ்ரீ நாதமுநிகளுடைய திருக்கல்யாணகுண பூர்த்தியே தவிர வேறு ஒன்று மன்று என்பதை நன்றாக விளக்கிக் காட்டுவதற்காகத்தான் இந்த முதல் ஶ்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தார் கேவல நமஸ்காரத்தைச் செய்யாமல் தமது ஆசார்யர்களுடைய குணகணங்களை அநுஸந்தாநம் செய்து கொண்டு நமஸ்கரிக்கிறார்.

2. இப்படி முதல்ஶ்லோகத்தால், ஸ்ரீ நாதமுநிகளைப் பகவத் பரத்வாநுபவத்தினால் பக்திபரிபூர்ணராய் இருப்பதாக அநுஸந்தித்து ப்ரணமம் செய்து விட்டு, ஸ்ரீ ஆளவந்தார் மறுபடியும் அவரையே பகவானுடைய ஸௌலப்ய அநுபவத்தினால் உண்டாகும் ஸ்நேஹ பரிபூர்ணராக அநுஸந்தித்து நமஸ்கரிக்கிறார். 'பக்தி ஸிந்து' என்று முதல் ஶ்லோகத்தில் வ்யவஹரித்து விட்டு 'அநுராக ஸீமா' என்று இந்த ஶ்லோகத்தில் வ்யவஹரித்திருப்பதே இந்த விபாகத்திற்கு முக்யமான நியாமகம். ஸேவ்யனிடத்தில் பரத்வாநுஸந்தாநம் செய்யும்பொழுது பக்தியும், ஸௌலப்யாநுஸந்தாநஞ் செய்யும்பொழுது அநுராகமும் ஜநிக்கின்றன என்பது ப்ரஸித்தம். "ஸ்நேஹோ மே பரமோ ராஜம்ஸ்த்வயி நித்யம் ப்ரதிஷ்டி²த: - ப⁴க்திஶ்ச நியதா வீர பா⁴வோ நாந்யத்ர க³ச்ச²தி" என்னு மிடத்தில் இம்மாதிரியான விபாகத்தைக் காணலாம். அவதாரத்தை த்யோதிப்பிக்கும் 'மதுஜித்' என்கிற ஶப்தத்தை இங்கு ப்ரயோகம் செய்திருப்பதும், அவதாரத்திற்கு ஹேதுவாக இருக்கும் ஸௌலப்ய குணமே இவ்விடத்தில் விவக்ஷிதம் என்பதைக் காண்பிக்கிறது.

அந்வயம் - மதுஜித³ங்க்⁴ரி ஸரோஜ தத்த்வஜ்ஞாநாநுராக³ மஹிமாதிஶயாந்த ஸீம்நே தஸ்மை நாதா²ய நாத²முநயே நம: ; யதீ³ய சரணௌ அத்ர பரத்ர சாபி நித்யம் மதீ³யம் ஶரணம். அதாவது - மதுஜித்தாகிற பகவானுடைய பாதாரவிந்த விஷயகமான தத்வஜ்ஞாநம், அந்தப் பாதாரவிந்த விஷயகமான அநுராகம் ஆக இவை இரண்டின் மஹிமையினுடைய ப்ரகர்ஷத்திற்குப் பரமாவதி பூதராகவும், மிகப்ரஸித்தராகவும், ஸர்வ ப்ரகாரத்தாலும் அஸ்மத் ஸ்வாமியாகவுமுள்ள ஸ்ரீமந் நாதமுநிகளுக்கு நமஸ்காரம். அந்த மஹானுடைய சரணாரவிந்தங்கள், இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸர்வகாலத்திலும் எனக்கு ஶரணமாகின்றன.

மதுஜித் - மது என்னும் அஸுரனை ஜயித்தவன். ஸாதுக்களுடைய பரித்ராணத்திற்காகவும் மதுவைப்போன்ற துஷ்க்ரு

த்துக்களுடைய விநாஶத்திற்காகவும் ப்ரதியுகமும் ஸம்பவிக்கும் ஶீலத்தை உடையவன் என்று தாத்பர்யம். கீழ்ச்சொல்லியிருப்பதுபோலவே, இதனால் பகவானுடைய ஸௌலப்யகுணம் த்யோதிப்பிக்கப்படுகிறது.

𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌰𑍋𑌜𑌂 - பாதாரவிந்தம். 'பகவத் விஷயகமான தத்வஜ்ஞாநம்' என்று சொன்னால் போதாது என்று எண்ணி, 'பகவானுடைய பாதாரவிந்த விஷயகமான தத்வஜ்ஞாநம்' என்று சொன்னதன் தாத்பர்யம், ஶேஷ பூதர்களான நமக்குப் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் அத்யந்தம் உத்தேஶ்யமான அம்ஶம் அவனது திருவடிகளே என்பதுதான்.

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - 'பகவாந் பிறப்பு இறப்பு அற்றவனாக இருக்கையிலும் நமது க்ஷேமத்தை உத்தேஶித்தே பஹுப்ரகாரமாக அவதரிக்கிறான்; அவனுடைய அவதாரங்களும் சேஷ்டிதங்களும் திவ்யங்கள்' இத்யாதியான அவனது அவதார ரஹஸ்ய ஜ்ஞாநமே இவ்விடத்தில் தத்வஜ்ஞாநமென்று சொல்லப்படுகிறது.

𑌅𑌨𑍁𑌰𑌾𑌗𑌃 - பகவாந் அவதரித்து நமது த்ருஷ்டி கோசரனாக இந்த விபூதியில் எழுந்தருளியிருந்தபொழுது அவனிடத்தில் ப்ரகாஶித்துநின்ற குணவிஶேஷங்களைப் பார்த்து அவைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு அவனிடத்தில் நாம் செய்யும் ஸ்நேஹமே அநுராகம்.

அப்படிப்பட்ட ஜ்ஞாந ஸ்நேஹங்களின் மஹிமாதிஶயத்திற்கு ஸ்ரீ நாதமுநிகள் எல்லைநிலமாக நிற்கிறார்; அதாவது - இவருடைய ஜ்ஞாநத்தையும் ஸ்நேஹத்தையும் பார்க்குமளவில் மற்ற யோகிகள் எல்லாரும் இவருக்குத் தாழ்ந்தவர்கள் என்றே தோன்றும் என்று தாத்பர்யம்.

𑌅𑌤𑍍𑌰 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿 - 'முக்திக்குப் பூர்வாவஸ்தையில் ஆசார்யன் ஜ்ஞாந பக்த்யாதிகளை உத்பாதநம் செய்கிறான் என்கிற காரணத்தால் அவன் அந்த அவஸ்தையில் ஶரணமாவது உபபந்நம்; முக்தியடைந்த பிறகு அவன் எப்படி ஶரணமாவான்'? என்று கேட்டால், அப்பொழுதும் அவன் நமக்கு ஶரணமே என்பதை '𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿' என்பதில் இருக்கும் '𑌚𑌾𑌪𑌿' என்னும் பதங்கள் காண்பிக்கின்றன. முக்தி தஶையிலும், பூர்வம் அவனால் நமக்குச்செய்யப்பட்டுள்ள மஹோபகாரங்களை அநுஸந்தித்து நாம் க்ருதஜ்ஞதையை முன்னிட்டு அவனிடம் விஶேஷ ப்ரதிபத்தி செய்வது உபபந்நமாதலால், அப்பொழுதும் அவன் ஶரணமாவது அஸம்பவமாகாது. "𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃" இத்யாதியான வாக்யங்கள் இதற்கு ப்ரமாணம்.



𑌭𑍂𑌯𑍋 𑌨𑌮𑍋𑌽𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿𑌪𑌰𑌿𑌵𑌾𑌹𑌶𑍁𑌭𑍈𑌰𑍍𑌵𑌚𑍋𑌭𑌿𑌃 ।
𑌲𑍋𑌕𑍇𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌮𑌗𑍍𑌰𑌭𑌕𑍍𑌤𑌿
𑌯𑍋𑌗𑌾𑌯 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇 𑌯𑌮𑌿𑌨𑌾𑌂 𑌵𑌰𑌾𑌯 ॥ ௩.

3. இவ்விதமாக ஸ்ரீ நாதமுநிகளைப் பக்திபரிபூர்ணராகவும் ஸ்நேஹ பரிபூர்ணராகவும் பாவித்து ப்ரணாமம் செய்துவிட்டு, மறுபடியும் அவரையே பரமௌதார்ய விஶிஷ்டராகப் பாவித்து நமஸ்கரிக்கிறார். 'ஜகதாசார்யராக இருக்குமவர் தாம் கேவலம் பகவத் குணாநுபவம் செய்வதுடன் த்ருப்தராக இருக்கமாட்டார்; தாம் அநுபவிப்பதுபோலவே லோகம்முழுவதும் அநுபவித்துப் பரமமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டும் என்று எண்ணி அதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடுவார்; இவரும் அப்படிப்பட்ட பரமோபகாரத்தைச் செய்திருக்கிறபடியால் பரமௌதார்ய விஶிஷ்டராகிறார்' என்று இந்த ஶ்லோகத்தில் அநுஸந்தித்து க்ருதஜ்ஞதை தாங்கமாட்டாமல் வாய்விட்டுக் கதறி அந்தப் பரமோபகாரகரை நமஸ்கரிக்கிறார். 'ப்ரஹ்மாநுபவரூபமான ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியது பக்தியோகம்; அந்த யோகத்தை இந்த லோகத்தில் அவதரிப்பித்தது ஸ்ரீ நாதமுநிகள்' என்பது ப்ரஸித்தம்.

'𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿𑌪𑌰𑌿𑌵𑌾𑌹𑌶𑍁𑌭𑍈𑌰𑍍𑌵𑌚𑍋𑌭𑌿𑌃 𑌲𑍋𑌕𑍇 𑌅𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌮𑌗𑍍𑌰𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌯 𑌯𑌮𑌿𑌨𑌾𑌂 𑌵𑌰𑌾𑌯 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇 𑌭𑍂𑌯𑍋 𑌨𑌮𑌃'

என்பது அந்வயம். 'அச்யுதனிடத்தில் அளவற்ற பக்தி, அவன் விஷயமான அளவற்ற தத்வஜ்ஞாநம், இவையே ஒரு பெரிய அம்ருத ஸமுத்ரமாகி அது நிரம்பி அதிகாம்ஸம் ப்ரவஹித்தாற் போல இருக்கின்றன, ஸ்ரீ நாதமுநிகளுடைய ஸூபமான வாக்யங்கள். அப்படிப்பட்ட வாக்யங்களால், பரமார்த்தமும் பரிபூர்ணமுமாகிற பக்தியோகத்தை இந்த லோகத்தில் அவதரிப்பித்த மஹாயோகி ஸ்ரேஷ்டரான ஸ்ரீ நாதமுநிகளுக்கு மறுபடியும் நமஸ்காரம்' என்பது அர்த்தம்.

அச்யுத: - ந ச்யுத:, நழுவாதவன்; அதாவது - ஆஸ்ரிதர்களைக் காப்பாற்றுவதாகிற ஒரு வ்ரதத்திலிருந்து ஒரு பொழுதும் நழுவாதவன் என்று தாத்பர்யம். "[illegible] 88" என்று கதறியிருக்கும் ஸ்ரீ பகவான்தான் அப்படிப்பட்ட அச்யுதனுவான். எந்தப் பகவத் ஸம்பந்தமான பக்தியோகத்தை ஸ்ரீ நாதமுநிகள் அவதரிப்பித்திருக்கிறாரோ, அந்தப் பகவான் ஆஸ்ரித ஸம்ரக்ஷணம் என்னும் பெரியதொரு வ்ரதத்தைப் பூண்டவன்; ஆகையால், நாம் அவனை ஆஸ்ரயித்தால் நமக்கு ரக்ஷணம் நிஸ்சயம் கிடைக்கும்' என்கிற விஸ்வாஸத்தை நமக்கு ஜநிப்பிக்கிறது இந்த அச்யுத ஸப்தம். அல்லது, 'ச்யுதோ யஸ்மாந்நாஸி' அதாவது - அவனை அடைந்தவர் அவனிடத்திலிருந்து ஒருபொழுதும் நழுவார் என்றும் இந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்லலாம். அல்லது 'ஜ்ஞாநம் பலம் முதலிய ஷாட்குண்யத்திலிருந்து நழுவாதவன், எப்பொழுதும் ஷாட்குண்ய பரிபூர்ணனுக இருக்கிறான்' என்கிற அர்த்தத்தையும் இந்த அச்யுத ஸப்தத்திற்குச் சொல்வது உண்டு.

அம்ருதாப்தி - அம்ருத ஸமுத்ரம். பகவத் ஸம்பந்தமான பக்தி ஜ்ஞாநங்களை அம்ருத ஸமுத்ரம்போல நிரூபித்ததன் தாத்பர்யம் - அதுபோல இதுவும் ஸஞ்ஜீவநம் ஸ்வயம்ப்ரயோஜநம் அக்ஷயம் என்பதை வ்யஞ்ஜிப்பதுதான்.

பரிவாஹ: - கடைப்போக்கு. தடாகாதிகள் நிறைந்துவிட்டால் அவைகளை ரக்ஷிப்பதற்கு வெட்டி விடப்படும் கடைப்



போக்குப்போல இருக்கின்றனவாம் ஸ்ரீ நாதமுநிகளுடைய திவ்ய ஸூக்திகள். கைதவமின்றிக்கே ஹார்த்தமாக ப்ரவஹித்தன என்பதையும், அப்படி ப்ரவஹிக்காமல் உள்ளே அடங்கிநிற்பது ஸக்யமில்லை என்பதையும் ஸூசிப்பிக்கிறது இந்த ஸப்தம்.

ஸாந்த்ரை: - ப்ரஸந்நமாயும் மதுரமாயும் ஸீதளமாயும் இருக்கின்றன அந்தத் திவ்ய ஸூக்திகள் என்று தாத்பர்யம்.

லோகே - லோகத்தில். 'நமக்கு ஆத்யந்திகமான ஸ்ரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடிய பரமோபகாரத்தை யார் செய்யப்போகிறார்? என்று எதிர் பாராமலும் அதற்கு உரிய ஜ்ஞாநமின்றிக்கே விஷயப்ரவணர்களாகவும் பகவத்விமுகர்களாகவுமுள்ள ஜநங்களால் நிறைந்திருக்கும் இந்த லோகத்திலன்றோ ஸ்ரீ நாதமுநிகள் பக்தியோகத்தை அவதரிப்பித்தது? அவருடைய ஔதார்யமே ஔதார்யம்!' என்று கருத்து.

அவதீர்ணம் - அவதரிப்பிக்கப்பட்ட. ப்ரகாஸிப்பிக்கப்பட்ட என்று சொல்லாமல் அவதரிப்பிக்கப்பட்ட என்று சொன்னதன் தாத்பர்யம் - பரமபதத்திலிருந்து ஜகத்தின் ஸ்ரேயஸ்ஸுக்காகப் பகவான் திருவவதரிப்பதுபோல, ஸ்ரீ நாதமுநிகளிடமிருந்து இந்தப் பக்தியோகமும் ஜகத்தின் ஸ்ரேயஸ்ஸுக்காக அவதரித்தது என்பதைக் காண்பிக்கவேண்டுமென்பதுதான்.

பரமார்த்தம் ஸமக்ரம் - பரமார்த்தமென்றால் ஸ்வயமே ப்ரயோஜநமாயுள்ள என்று அர்த்தம்; அதாவது - பக்தி யோகாநுஷ்டாநமே பரம ப்ரயோஜநமாகுமென்றபடி. ஸமக்ரமென்றால் பரிபூர்ணமான என்று அர்த்தம்; ஸ்ரீ நாதமுநிகளால் அவதரிப்பிக்கப்பட்ட பக்தியோகம் அவ்யவஹிதமாகப் பலத்தை ஸாதித்துக் கொடுக்குமளவு பூர்ணமாக இருக்கிறது என்று கருத்து.

பக்தியோக: - பக்திரேவ யோக:, பக்தியாகிற யோகம். ப்ரீதி ரூபத்தை அடைந்திருக்கும் த்யாநம் அல்லது உபாயம். 'யோகம்' என்னும் ஸப்தத்திற்கு - 'த்யாநம்', 'உபாயம்' என்னும் இரண்டு அர்த்தம் உண்டு.

தத்த்வேந யஶ்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ
போகாபவர்க ததுபாய கதீருதார: ।
ஸந்தர்சயந் நிரமிமீத புராணரத்நம்
தஸ்மை நமோ முநிவராய பராசராய ॥ சு.

யதீநாம் வராய - யோகிகளுக்குள் ஸ்ரேஷ்டர்; 'பகவானிடத்திலேயே நிவேசிக்கப்பட்ட வாங்மந:கர்மாக்களாகிற கரணத்ரயங்களை யுடைய யோகிகளுக்குள்ளே ஸ்ரீ நாதமுநிகள் ச்ரேஷ்டர் என்று கருத்து. 'எவன் மிக்க ஸ்ரத்தாளுவாய் என்னிடத்திற் செலுத்தப்பட்ட அந்த:கரணத்துடன் என்னைப் பஜிக்கிறானோ, அவன்தான் யோகிகளுக்குள் ஸ்ரேஷ்டன்' என்கிற அர்த்தமுள்ள "யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா - ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத:" என்னும் பகவத் வாக்யப்படி இவர் யோகி ச்ரேஷ்டர் என்று ஆகிறது.

4. ஸ்ரீ ஆளவந்தார், இவ்வாறு மூன்று ச்லோகங்களால் தமது ப்ராசார்யராகிற ஸ்ரீ நாதமுநிகளை நமஸ்கரித்து விட்டு, ப்ரபந்தங்களை அருளிச்செய்து ஜகத்துக்குப் பரம்பரையாக உபகரித்திருக்கும் மஹான்களை நமஸ்கரிக்க இச்சையுள்ளவராய், அவர்களுள் தத்வத்ரயாதிகளின் விவேகத்தை ஸுலபத்தில் ஸாத்யமாகச் செய்யும் ஸ்ரீ விஷ்ணுபுராண மென்னும் க்ரந்தத்தைச் செய்தருளிய ஸ்ரீ பராஸரரை இந்த ஸ்லோகத்தால் நமஸ்கரிக்கிறார். ஸ்ரீபாரதாதிகளை நிர்மித்திருக்கும் ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷி பாப்ருதிகளை விட்டு ஸ்ரீ பராஸரரை க்ரஹித்ததற்குக் காரணம் என்னவென்றால், ஸ்ரீ பாரதாதிகள் அதிவிஸ்தாரமாகவும் அதி கஹநமாகவும் இருப்பதால் அவைகளில் தத்வ த்ரயாதிகளுடைய விவேகம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திற்போல அவ்வளவு ஸுலப ஸாத்யமாகாது என்பதுதான்.

"ய உதார: சிதசிதீச்வர தத்ஸ்வபாவ போகாபவர்க ததுபாயகதீ: தத்த்வேந ஸந்தர்சயந் புராண ரத்நம் நிரமிமீத, தஸ்மை முநிவராய பராசராய நம:" - மஹத்தான ஔதார்யகுணங்கள் நிறைந்துள்ள ஸ்ரீ பராஸர மஹர்ஷி, சேதநன் அசேதநன் ஈஶ்வரன் என்று மூவகைப்படும் தத்வ த்ரயங்கள், அவர்களுடைய ஸாதர்ம்யரூபங்களாகிற ஸ்வபாவம், போகமென்னும் ஸ்வர்க்காதி ஸுகாநுபவம், அபவர்க்க மென்னும் மோக்ஷம், இந்தப் போகாபவர்க்கங்களை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்கள், இந்தப் போகாபவர்க்க ஸம்பந்தமான கதிகள் இவை முதலிய விஷயங்களை ஜகத்திற்குத் தெளிவாக விளக்கும் பொருட்டுப் புராணங்களுள் ஸ்ரேஷ்டமாயுள்ள ஸ்ரீ விஷ்ணு புராணத்தைச் செய்திருக்கிறார். அப்படிப்பட்ட ஸ்ரீ பராஸர மஹர்ஷிக்கு நமஸ்காரம்.

உதார:-ஔதார்யகுணம் பொருந்திய. தாம் ஒரு ப்ரத்யுபகாரத்தையும் அபேக்ஷியாமலே ஜகத்திற்கு மஹோபகாரத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கும் ஜகத்திற்குத் தத்வஜ்ஞாநமாகிற மஹாநிதியைக் கொடுப்பதைவிடச் சிறந்த உபகாரமும் உண்டோ? "அஜ்ஞாநாந்தஸ்ய யோ ஜ்ஞாநம் தத்யாத்ஸுபதேசநம் - க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாந்ந தத்துல்யம் ந தத்ஸமம்" என்கிறபடியே ஸமக்ரமான பூப்ரதாநத்தைக் காட்டிலும் மிகப்பல மடங்கு சிறந்ததன்றோ இந்த ஜ்ஞாந ப்ரதாநம்? அப்படிப்பட்ட மஹோபகாரத்தை ப்ரத்யுபகார லேஸத்தையும் அபேக்ஷியாமல் செய்திருப்பவராதலால், இவர் மஹோதாரர் என்று கொண்டாடப்படுகிறார்.

சித் - சேதந வர்க்கம்; அதாவது - பத்த முக்த ப்ரப்ருதிகள். அசித் - அசேதநங்கள்; த்ரிகுணம் காலம் முதலியவைகள். ஈச்வர: - தான் நீங்கலாக மற்றைச் சேதநாசேதநங்கள் எல்லாவற்றுக்கும் நியந்தாவாக இருக்கும் புருஷோத்தமன். இந்த மூன்று தத்வங்களைத்தான் 'தத்வத்ரயம்' என்று வ்யவஹரிப்பார்கள். இவைகளுள் முதல் தத்வமாகிற சேதநன் போக்தா, இரண்டாவதாகிற அசேதநம் போக்யம், மூன்றாவதாகிற ஈஶ்வரன் நியந்தா என்று 'போக்த்ரு போக்ய நியந்த்ரு க்ரமம்' என்னும் ஒரு க்ரமமும் வேதாந்திகளாற் சொல்லப்படும்.

தத்வஹாவாः - இந்த மூன்று தத்வங்களினுடைய ஸ்வபாவங்கள். இவைகளுக்கு ஸாதாரணமான குணங்கள், பரஸ்பரம் பிந்நங்களென்று வ்யவஹரிப்பதற்கு ஹேதுவாகும் வைதர்ம்யங்கள்; இவைகள்தான் அந்தத் தத்வங்களினுடைய ஸ்வபாவங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஹோகः - ஸ்வர்க்கம் முதலிய ஸுகாநுபவம்; கேவலம் தன்னுடைய ஆத்மாநந்தாநுபவமும் இங்கு விவக்ஷிதம். இந்த ஆத்மாநந்தாநுபவம் நச்வரமானாலும் அதன் ஸ்வபாவம் எவ்வகைப்பட்டது என்று தெரிவிக்கும் பொருட்டே புராணங்களில் அது விவரிக்கப்படுகின்றது. அதை முமுக்ஷுவுக்கு ப்ராப்யமான அம்சமாக க்ரஹிக்கக்கூடாது.

அவவ஗ः - மோக்ஷம். ஸர்வ கர்ம பந்தங்களும் விட்டு அவித்யை நிச்சேஷமாக நிவ்ருத்தியாகிப் பரிபூர்ண ப்ரம்ஹத்தை அநுபவிப்பதே மோக்ஷம். அநுபவிப்பதாவது - சேஷவ்ருத்தியைச் செய்வதே. முக்தர்களாகியும் சேதநர்கள் பகவானைக் குறித்து சேஷ வ்ருத்தியைச் செய்வது உண்டு; ஆனால், அது கர்மாதீநமன்று, ஸ்வச்சந்தமாகச் செய்யப்படும். இந்த மோக்ஷத்தில், சேதநர்களுக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநாதிகள் ப்ரகாசிக்கின்றனவே தவிர அவை புதிதாக உண்டாக்கப்படவில்லை யென்பதை, "தயா ஹெயஶுணயுஂஸாஷ வஹொயா உயொ ஶுணाः- ஷுகாஶ்யெ ந ஜநுகெ நிதூ வவாதுஜெரா ஹிதெ" இத்யாதி வாக்யங்களால் அறியவேணும்.

தஷவாயாः - போகாபவர்க்கங்களை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்கள். ப்ரவ்ருத்தி லக்ஷணமான தர்மம் போகங்களை ஸாதித்துக் கொடுக்கு மென்றும், நிவ்ருத்தி லக்ஷணமான தர்மம் அபவர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கு மென்றும் "ஷுவுத்தி லக்ஷணம் யூஃம் ஷுஜாவதி ரயாஷுவீக - நிவுத்தி லக்ஷணம் யஃ உஷிநாஃமாயணொவுவீக" என்று விபாகித்துச் சொல்லும் வாக்யங்களிலிருந்து தெரியவருகிறது. பக்தியோகத்தைத்தான் 'நிவ்ருத்தி தர்மம்' என்பதனால் நாம் அறியவேணும்.



ரதிः - அந்தப் போகாபவர்க்க ஸம்பந்தமான மார்க்கங்கள். மோக்ஷத்திற்குப் போகும் மார்க்கம் - அர்ச்சிராதி மார்க்கமென்றும், போகத்திற்குக் கொண்டுபோய் விடும் மார்க்கம் - தூமாதி மார்க்க மென்றும் இருவகைப்படு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மார்க்கங்களைத்தான் இங்கு 'கதி' என்னும் சப்தம் சொல்லுகின்றது.

இப்படி 'சேதநன்' தொடங்கி 'கதி' வரையிலுமுள்ள எட்டு விஷயங்கள் முதலிய மற்ற விஷயங்களும் இந்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

தத்வேந ஸஂஜ ஶஂயது - கண்டோக்தியினாலும் அர்த்தஸித்தியினாலும் விசதமாக ப்ரகாசிப்பிக்கும் பொருட்டு, "வெநு வாவ தாஃ தத்வெதா ஸுஹவிஜு" என்று ச்ருதி சொல்லுகிறது போலவே, கீழ்க்கூறப்பட்டுள்ள விஷயங்களை இந்தப்புராணம் யதாவஸ்திதமாகத் தெரிவிக்கின்றது என்று தாத்பர்யம். 'தத்வேந' என்றால் 'யதாவஸ்திதமாக' 'அநாரோபிதமாக' என்று அர்த்தம்.

வுராணரத்நம் - "ஸஶுஶ்ச ஷுதிஸஶுஶ்ச" என்கிறபடி ஐந்து லக்ஷணம் பொருந்திய க்ரந்தம். இந்தப் புராணத்துக்கு உள்ள ஏற்றத்தைப் பின்வரும் காரிகையால் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் வெளியிட்டிருக்கிறார்:— "கதூாஸஂ உாநஷஂ ரதூஂ ஹூிரஂ ஹொாஹூஂ ஷுகாஶகஂ । உஹாவஃஂ உஂஹஷஂ உாநூஂ ஸுரக்ஷஂ ஸஹூஹஂ நுணாஂ."

ஊநிவராய - பரப்ரஹ்மத்தை எப்பொழுதும் மநநம்செய்யும் சீலமுடையவர். வராஶராய - வரான் ஶுஶரதீதி வராஶரः; அதாவது - எதிரிகளை ப்ரமாணதர்க்கமாகிற பாணங்களால் சேதிக்கிறவர் என்று அர்த்தம். 'முநிவரர்' என்னும் சப்தம் - ஸ்வபக்ஷத்தை ஸ்தாபநம் செய்யும் திறமை யுள்ளவர் என்பதையும், 'பராசரர்' என்னும் சப்தம் - பரபக்ஷத்தை ப்ரதிக்ஷேபம் செய்யும் திறமை யுள்ளவர் என்பதையும் ஸூசிப்பிக்கின்றன.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥ ரு.

5. இந்த ஶ்லோகம், பராங்குஶரான நம்மாழ்வாருக்குச் செய்யப்படும் நமஸ்காரத்தைச் சொல்லுகிறது. இவர் அருளிச்செய்திருக்கும் உபப்ரும்ஹணங்கள் எல்லாருக்கும் உபஜீவ்யங்கள்; இவைகள், பராஶரர் செய்தருளியிருக்கும் ப்ரபந்தத்தைக்காட்டிலும் வேதாந்த ரஹஸ்யத்தை உணர்த்துவதில் அநேக மடங்கு சிறந்தவை; கேவலம் அத்யயநத்தால் இப்பொழுதே பரமாத்மாவினிடத்தில் நிரதிஶயமான ஓர் ஆஹ்லாதத்தை அத்யேதாக்களுக்கு ஜநிப்பிக்கக் கூடியவை. அப்படிப்பட்ட பராங்குஶமுநிக்கு, இவருடைய ப்ரபந்தங்களால்தான் தமக்கு ஸம்யக்ஜ்ஞாநம் கிடைத்தது என்னும் காரணத்தைக்கொண்டு பக்த்யதிஶயத்தால் விஶேஷித்த ப்ரணாமங்களை ஸ்ரீ ஆளவந்தார் இந்த ஶ்லோகத்தால் செய்கிறார்.

“மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: (இத்யாதிகம்) ஸர்வமபி மதந்வயாநாம் ஸர்வேஷாம் நியமேந யதேவ (அங்க்ரியுகளம்), தத் வகுளாபிராமம் ஸ்ரீமத் ந: ஆத்யஸ்ய குலபதே: அங்க்ரியுகளம் மூர்த்நா ப்ரணமாமி”. தாயார் தகப்பனார் யுவதிகள் ஸந்தாநம் ஸம்பத் இன்னும் புருஷார்த்த ஸாதகமாகிற மற்றை வஸ்துக்கள் எல்லாம், என்னுடைய வம்ஶ்யர்கள் எல்லாருக்கும் ஸர்வகாலத்திலும் எந்தத் திருவடிகளோ, அப்படிப்பட்ட, வகுள புஷ்பங்களால் அபிராமமாகவும் ஸ்ரீமத்தாகவுமுள்ள எங்களுடைய ஆதிகுலபதியின் திருவடிகளை ஶிரஸ்ஸால் நமஸ்கரிக்கிறேன்.

“மாதா பிதா ப்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்” என்று ஸ்ரீ பகவானைப்பற்றி உபநிஷத் சொல்லுகின்றது. அந்த ஸ்வபாவத்தைப் பாவித்தே, இவ்விடத்தில் ஸ்ரீ ஆளவந்தார் பராங்குஶ முநிகளைக் கொண்டாடுகிறார். மாதா - எப்பொழுதும் ப்ரியத்தையே செய்யும் ஸ்வபாவமுள்ளவள் என்று தாத்பர்யம். தவிரவும், எந்தத் தஶையிலும் மஹத்தான கௌரவத்திற்குப் பாத்ரம் தாய். “பதிதாயாமபி மாதாஸி ஶுஶ்ரூஷா நித்யா” என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிதா - அப்படியே ப்ரஸித்தமான கௌரவத்தை உடையவன் தகப்பனும்; எப்பொழுதும் ஹிதத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவன் என்பதையும் ஸூசிப்பிக்கிறது. யுவதய: - ஸ்த்ரீகள். தர்மம் அர்த்தம் காமம் இம்மூன்றுக்கும் இவர்கள் காரணமென்பது ப்ரஸித்தம். தம்பதிகளுக்குப் பரஸ்பரம் ஆநுகூல்யமிருக்குமிடத்திலேதான் த்ரிவர்க்கங்களுடைய வ்ருத்தி ஸம்பவிக்கிறது. “யத்ராநுகூல்யம் தம்பத்யோஸ் த்ரிவர்க்கஸ் தத்ர வர்த்ததே” என்பது ப்ரமாணம். தநயா: - குமாரர்கள். “தந்யாஸ் ததங்கரஜஸா மலிநீபவந்தி” என்று கொண்டாடும்படி அவ்வளவு ப்ரீதி பாத்ரர்கள்; கேவலம் ஆலோகநத்தால் மாத்திரம் ஆஹ்லாதத்தைக் கொடுப்பவர்கள்; அஶக்தி ஜநிக்கும் காலங்களில் ஸம்ரக்ஷணத்தைச் செய்வதுடன், ‘புத்’ என்னும் ஒரு நரகத்திலிருந்து மாதாபிதாக்களைக் காப்பாற்றுகிறவர்கள்; “ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா: - வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ நஸ் ஸந்தாரயிஷ்யதி” என்கிறபடியே தம்முடைய குணத்தால் பித்ருபங்க்திகளுக்கும் நிஸ்தாரகர்கள். ‘யுவதய:’ ‘தநயா:’ என்று பஹுவசநமாக ப்ரயோகம் செய்ததன் தாத்பர்யம் - இப்படிப்பட்ட பஹு பெயர்களால் ஸாத்யமான ஓர் உபகாரம் ஒரே வஸ்துவாக இருக்கும் அந்தப் பாதாரவிந்தத்தில் ஸமுதிதமாக இருக்கிறது என்பதை ஸூசிப்பிக்க வேண்டும் என்பது தான். விபூதி:- தந தாந்யம் முதலிய ஸம்பத். தாரகமாகவும் போஷகமாகவுமுள்ள இந்த ஸம்பத் இல்லாவிட்டால் கீழ்ச் சொல்லப்பட்டவைகளெல்லாம் ஸுக ஹேதுக்களாவதற்குப் பதிலாகத் துக்க ஹேதுக்களாகும் என்பதனால் இதற்கு ஏற்றம். ஸர்வம் -

புருஷார்த்தங்களை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய இன்னும் இவை போன்ற வஸ்துக்கள். ஸாத்விகர்களால் அங்கீகரிக்கப்பட்டவை என்று தாத்பர்யம்.

ஊஆ_நயா_நா॰ - என்னுடைய வம்ஶ்யர்களுக்கு. அதாவது - வித்யா ப்ரதாநத்தாலாவது, ஜந்மத்தினலாவது என்னுடைய வம்ஶத்தைச் சேர்ந்தவர்கள் என்று தாத்பர்யம். தனக்கு முன்புள்ளோரும் பின்புள்ளோருமாகிய இரண்டு வகையாருக்கும் இவ்விடத்தில் க்ரஹணம்.

_நியஜெ_ந - ஸர்வகாலத்திலும்; முக்தி யடைந்த பிறகு கூட என்று தாத்பர்யம்.

யஷெவ - எந்தத் திருவடிகளோ. அந்தத் திருவடிகளைத்தவிர மற்றை எதுவும் அபேக்ஷிக்கத் தகுந்தது அன்று என்று கருத்து. மாதா முதலியவரைப் போல ப்ரியமாகப் பாராட்டுவது முதலிய குணங்கள் திருவடிகளுக்கு அநுபபந்ந மாகையால், பராங்குஶ முனிகள் என்கிற அர்த்தத்தில் அவரது திருவடிகள் என்கிற பதம் உபசரிக்கப்பட்டிருக்கிறது என்று அறியவேண்டும்.

வகுளாலாவிராம॰ - வகுளபுஷ்பங்களால் அபிராமமாக இருக்கிற. பூஜார்த்தமாக ஸாத்விகர்களால் ஸமர்ப்பிக்கப்படும் வகுள புஷ்பங்கள் அந்தத் திருவடிகளை அத்யந்தம் அபிராமமாகச் செய்கின்றன என்று அர்த்தம். ஸ்ரீ பராங்குஶருடைய திவ்ய ப்ரபந்தங்கள் பரதத்வத்தை விஶதமாக நிர்ணயித்துக்கொண்டு ஸ்திரமான பரிமளத்தை வீசுகின்றன என்றும் இந்தப் பதம் ஸூசிப்பிக்கிறது.

ஸ்ரீஊஸ - பகவத் பக்தியாகிற ஸம்பத்தால் நிறைந்துள்ள. தம்மை ஆஶ்ரயிக்குமவர்களுக்கும் அப்படிப்பட்ட ஸம்பத்தைப் பூர்ணமாக அளிக்கும் திறமையுள்ளது என்று தாத்பர்யம். "ஸ_க_நாமவாஸீ ஸ்ரீ8ாஙு", "அஙரிக்ஷ_ம_தஃ ஸ்ரீ8ாஙு" என்னும் இடங்களிற்போல இவ்விடத்திலும் 'ஸ்ரீமத்' என்னும் ஶப்தம் பக



வத் ஸேவைக்கு அபிமுகமாக இருக்கும் தன்மையைக் காண்பிக்கிறது என்றும் சொல்லலாம்.

ஆஃஊஸ்ய _நஃ கூலுவதெஃ - நம்முடைய ஆதிகுலபதியினுடைய. தம்முடைய முன்னோர்கள் விஷயத்திலும் இவருடைய ப்ரபந்தங்களே ஜ்ஞாந வைராக்ய ஜநகங்களாயின என்பதால், 'ஆத்யர்' என்கிற ப்ரயோகம். ஸ்ரீ நாதமுனிகளுடைய ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்திருக்கும் தமக்கு அவர் அஸாதாரணமாகிற குலபதியாகிறதனுல், '[நஃ - நம்முடைய]' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமக்கு ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகராகவும் ஶேஷியாகவும் இருக்கிறபடியால், பதி என்கிற ப்ரயோகம்.

சூ॰வி_யா_ஜ॰ - திருவடி த்வயத்தை. 'அரவிந்தம் போன்ற திருவடிகள்' 'அம்புஜம்போன்ற திருவடிகள்' இத்யாதியான உபமை ஒன்றும் ப்ரயோகியாமல், 'திருவடி த்வயம்' என்று மாத்திரம் ப்ரயோகித்ததன் தாத்பர்யமாவது - இந்தத் திருவடிகளுக்கு மற்றையெதுவும் ஸத்ருஶமாகாது; "ராமராவணயொ யுத்த॰ ராமராவணயொரிவ" என்று சொல்வது போல இவைகளுக்கும் பரஸ்பர ஸாத்ருஶ்யம்தான் சொல்லக்கூடும் என்பதையும், நாம் தைவதமாகக் கொண்டாடும் தம்பதிகளாகிற ஸ்ரீ ஶ்ரிய:பதிகள் இருவரும் சேர்ந்தே நமக்கு உத்தேஶ்யராவதுபோல இந்தத் திருவடிகளும் அவிபக்தங்களாகவே நமக்கு உத்தேஶ்யங்கள் என்பதையும் த்யோதிப்பிக்க வேண்டும் என்பது தான் என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்.

ஊமூர்_நா வ்ருணஊமி - கேவலம் வாக்கினல் மாத்ரமாவது மநஸ்ஸால் மாத்ரமாவது நமஸ்கரிக்க வில்லை; "ஸஊஷிக்ஷ்: வ்ருணாஊஃ ஸ்யா ஷ॰ஜலி॰ ஊஷூமெக நுவெஸக" என்கிறபடி காயிகமாகவும் அஞ்ஜலியை ஶிரஸ்ஸில் வைத்துக்கொண்டு நமஸ்கரிக்கிறேன் என்று கருத்து.

(இன்னும் வரும்.)

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

# ஆர்யவித்யை.

ஸ்ரீயஃபதியான பகவான் ஸ்ரீமந்நாராயணன், ''ஸுப்திவிசிஷ்டாநு வச்யமய ஜகதந்தவமொக ஜ்ஞாதநிவேசநா - கரணகலேவரயோகம் விதரஸி வ்ருஷகிரிநாத கர்த்தும் க்ஷமம் ।'' என்று நம்ஆசார்யன் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தபடி, ப்ரளயகாலத்தில் அசேதநமான ப்ரக்ருதியோடு கலந்து பிரிவில்லாமல் மோஹஸாகரத்தில் மூழ்கியிருக்கும் ஜீவாத்மராசியைக் கண்ணோக்கி, அங்யாத்ருசமான க்ருபாப்ரீவாஹத்தால் அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதே ஆத்மலாபமென்று கருதி, அவர்களை ஓங்கவொட்டாமல் கட்டிக் கீழே அமிழ்த்தியிருக்கும் ப்ரக்ருதிபாசத்தையே அவர்கள் மேலேறுவதற்கு உபயோகமான நூலேணியாக்குவது ஸர்வ ச்லாக்யமான உபாயமென்றும், தன்னுடைய அகடிதகடநா சக்திக் கேற்றதென்றும் நிச்சயித்து, ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் தக்கபடியுள்ள சரீரத்தை அளித்து, அதைக் கருவியாகக் கொண்டு அவனவன் ஈடேறும் மார்க்கத்தை அநுஸரிக்கும்படி ஸங்கல்பித்திருக்கிறான் என்பது சாஸ்த்ரஸித்தம். இவ்வாறு சரீரத்தை நமக்கு அளித்த ஸர்வேச்வரனுடைய அபிப்ராயப்படி நாம் அதை நம்முடைய ச்ரேயஸ்ஸுக்கு ஸாதகமாக்கிக் கொள்வதனால் அதைச் சரிதார்த்தமாக்குவதே நமது கடமை யென்பதும், அப்படிக்கல்லாமல் அதை வேறு உபயோகப்படுத்துவது நாம் ஏறுவதற்குக் கொடுத்த கயிற்றைக் கழுத்திலிட்டுக்கொள்வதுபோல ஸர்வப்ரகாரமாயும் நம்முடைய அநிஷ்டத்துக்கு ஹேதுவாகுமென்பதும் ஸுநிச்சிதம். இவ்வாறு நமது ஜந்மத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரயோஜநத்தையும் தெளிவாய் அறிந்துகொண்டு அதற்கு அநுகுணமாகத் தங்கள் அநுஷ்டாநங்களைச் சீர்படுத்தியிருக்கும் தத்வதர்சிகளே, ஆர்யர்களென்று வ்யபதேசிக்கப்படுகிறார்கள். இந்தப் பரமோத்தேசத்தை நிர்விக்நமாய் நிறைவேற்றுவதற்காக அவர்கள்



நிஷ்பத்திபண்ணியிருக்கும் மார்க்கங்களும், உபாயங்களுமே, 'ஆர்ய வித்யை' என்று கூறப்படுகின்றன. 'வித்³யதே ஜ்ஞாயதே இதி வித்³யா, ஜ்ஞாநம் வித்³யா ஜ்ஞாநவித்³யா' அதாவது-எதனால் நமக்கு ஜ்ஞாநமுண்டாகிறதோ அது வித்யை; யதார்த்தஜ்ஞாநம். அதாவது - தத்வஜ்ஞாநம் உண்டாவதற்குத் தத்வதர்சிகளான மஹாங்களுக்குத் தங்களுடைய சக்தியாலும் பகவத் ப்ரஸாதத்தாலும் புலப்பட்டு அவர்களால் அநுஷ்டிக்கப்பட்டும் லோகோபகாரார்த்தம் ப்ரவசநம் பண்ணப்பட்டும் வரும் மார்க்கங்கள் ஆர்ய வித்யா சப்தத்தால் வாச்யமாகின்றன. மநுஷ்யஸ்ருஷ்டி விசித்ரமாயும் பஹுப்ரகாரமாயு மிருப்பதாலும், மநுஷ்யர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏற்பட்டிருக்கும் பேதங்கள் யாத்ருச்சிகமாக ஸம்பவிக்காமல் அவரவருடைய ப்ராசீந கர்மவாஸநையை அநுஸரித்து உண்டாயிருப்பதாலும், எல்லா மநுஷ்யர்களும் ஒரே ப்ரகாரமான மார்க்கத்தை அநுஷ்டிக்க அதிகாரிகளாக மாட்டார்கள். ஆகையால், அந்தந்த வ்யக்தியின் யோக்யதைக்குத் தக்கபடி அவரவர் அப்யஸிக்கவேண்டிய வித்யையின் பத்ததியும் வேறுபடவேண்டியது அவச்யம்.

ஒரே சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் அநேக குற்றவாளிகளில் ஒவ்வொருவனும் அவனவனது குற்றம் வயஸ் முதலியவற்றுக்குத் தகுந்த சிக்ஷையை அடைந்து அதற்கு அநுகுணமாக வெவ்வேறு வேலைகளில் நியோகிக்கப்பட்டு அவனவனுக்குக் குறிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் சிறைச்சாலையிலிருந்து விடுபடுவதைப் போல, ஒவ்வொரு சேதநனும் தன்தன் கர்மத்துக்கு அநுரூபமான சரீரத்தையும் அதற்குள்ள அந்தஸ்தையும் அடைகிறான். இவ்விதம் ஒவ்வொருவருக்கும் விஹிதமாயிருக்கும் அதிகாரத்தைக் கவனித்து அதற்கு அநுகுணமாக அவரவர் உஜ்ஜீவநமார்க்கம் தேடவேண்டுமேயொழியத் தன் அதிகாரத்துக்கு மீறியாவது குறைந்தாவது முயற்சிசெய்தால் அநர்த்தத்தையே தேடிக்கொள்வதாகும். வித்யாவிஷயத்தில் இது முதன்மையாகக் கவனிக்கவேண்டிய அம்சம். இதுவிஷயமாகப் பெரியோர்கள் அபிப்ராயங்களை ஆராய்ந்தால், வித்யாதிகாரிகளை ஸ்தூலமாய் உத்தமாதிகாரிகள், மத்யமாதிகாரிகள், அதமாதிகாரிகள் என்று மூன்று வகுப்பாகப் பிரிக்கலாமென்று தோன்றுகிறது. பிறவியிலேயே ப்ரபுத்தர்களாய் ஸஹஜமாகவே விஷயத்தில் பற்றுவையாமல் ஆத்மதுஷ்டர்களாய் ப்ர

ஹ்மானுபவ மல்லாது மற்றெதுவும் உணர ஶக்தியற்றுப் பிறந்திருக்கும் ஶுகர் முதலியவர்களை உத்தமாதிகாரிகளாக நினைக்கவேண்டும். லோகத்தில் பற்றுதல் ஜந்மவஸித்தமாய் ஏற்பட்டிருந்தும், முதலெடுப்பிலேயே லோகவ்யாபாரத்தை ஸங்யஸிக்கத் தகுந்த முதிர்ச்சி ஏற்படாமலிருந்தும், லோகமும் அதன் விஷயங்களும் நஶ்வரமென்றும் அவைகளை மிதித்தேறுவதே நமது கடமையென்றும் அக்கடமையைப் படிப்படியாய் அவதானத்துடன் நாம் ஸாதிக்க வேண்டுமென்றும் அப்படிச் செய்வதால் லோகத்தை நடத்த வேண்டிய பொறுப்பைக் கைவிடக்கூடாதென்றும் தெரிந்துகொள்ளவும், அந்த ப்ரகாரம் அநுஷ்டிக்கவும் அபிஸந்தியும் ஊக்கமும் ஶக்தியுமுடையவர்களை மத்யமாதிகாரிகளாகச் சேர்க்கலாம். இவ்வளவுகூட அறிந்துகொள்ளவாவது அநுஷ்டிக்கவாவது வல்லமை போதாமல் ஸ்வரூபத்தையே தெளிவாய் அறிந்து சொல்ல ஶக்தியற்றவர்கள், அதமாதிகாரிகளாவார்கள். ஏறக்குறைய இம்மாதிரியான விபாகத்தை 'அநுஸரித்தே சாதுர்வர்ணயம்' பிரிக்கப்பட்டிருப்பதாக நினைக்க இடமுண்டாகிறது.

இம்மூன்றுவகை அதிகாரி கோஷ்டிகளுக்கும் பாஹ்யர்களாயிருப்பவர்களு முண்டு. அவர்கள், தேஹாத்ம பரமாத்ம பேதமே இல்லையென்றும், அப்படி இருப்பதாகச் சொல்வது பொய் என்றும, பரலோகமென்பது மோசமென்றும், ப்ரத்யக்ஷம் தவிர வேறு ப்ரமாண மில்லையென்றும் பிடிவாதமாய் எண்ணியிருப்பவர்கள். அவர்கள், விபரீத ஜ்ஞாநமுடையவர்களாகையால் வித்யைக்கு அநதிகாரிகளாகிறார்கள். ஆகையால், அவர்களை அதிகாரி ஸமுதாயத்தில் எந்தப்படியிலும் சேர்க்க இடமில்லை. இந்த விசாரத்திலும் அவர்களுக்கு ப்ரவேஶமில்லை.

க்ஷீரஸாரமான நவநீதத்தைச் சேதநனுக்குக் கிடைக்கக்கூடிய 'நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி' என்று நிர்தேஶிக்கப்பட்ட ஸர்வோத்க்ருஷ்டமான பதவிக்கொப்பாகச்சொன்னால், மேற்கூறிய உத்தமாதிகாரிகளை நவநீத தஶைக்குக் கூடியவரையில் அவ்யவஹித பூர்வதஶையி லிருக்கும் தயிர்க்கு ஸமாநமாகச் சொல்லலாம். மத்தையிட்டுக் கடையுமளவான ஸம்ஸ்காரம்தான் அவர்களுக்குத் தேவை. அது நேர்ந்தவுடன் அவர்கள் உத்தம தஶையை அடைகிறார்கள். மத்யமாதிகாரிகளை க்ஷீரத்துக்கு ஸமாநமாகச் சொல்லக்கூடும். பஶுவின் மடியில் சேர்ந்திருப்பது முதல் புரை



குத்தித் திரிபு அடையும் வரையிலுள்ள எல்லாத் தஶைகளிலும் அது க்ஷீர ஶப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகிறது. பஶுக்களுடைய குண பேதத்தாலும் ஆஹார பேதத்தாலும் மறுபடி கறந்து உபயோகப்படுத்துபவர்கள் உண்டாக்கும் மாறுதல்களாலும் க்ஷீரத்தில் அநேக ப்ரகாரமான பேதங்கள் உண்டாகின்றன. இம்மாதிரியே மத்யமாதிகாரிகளும் பஹுவித பேத முள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால், க்ஷீரமென்கிற வஸ்துவுக்கு ஏற்படவேண்டிய ஸம்ஸ்கார ப்ரக்ரியை அநேகமாய் ஒரு மாதிரியாயிருப்பது போல மத்யமாதிகாரிகளுக்குத் தேவையான வித்யா ஸம்ஸ்காரமும் ப்ராயஶஃ ஒருவகைப்பட்டதென்றே எண்ணலாம். பஶுவுக்கு ஆஹாரமாயுள்ள புல் பூண்டு முதலியவை பஶுவினால் உட்கொள்ளப்பட்டு க்ஷீர ரூபத்தை அடைவதற்கு முன்னே த்ருணாதி ரூபமாயிருக்கும் தஶையை அதமாதிகாரத்துக்கு உபமாநமாகச் சொல்லலாம். இவர்கள் ப்ரபல ஸம்ஸ்காரத்தினால் ப்ராயேண ஜந்மாந்தரத்தில் ரூபாந்தரத்தை அடைந்து க்ஷீர தஶையை அடைய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். வித்யையைப் பற்றின இந்த விசாரத்துக்கு முக்யவிஷயம் மத்யமாதிகாரிகளே. உத்தமாதிகாரிகளின் ஸம்ஸ்காரத்தைப் பற்றிப் பேச நாம் அர்ஹரல்லர். மேலும், அது லோகஸாமாந்யத்தின் அநுஷ்டாநத்துக்கு உதவியாகமாட்டாது. அதமாதிகாரிகள் விஷயத்திற் சொல்லவேண்டிய அம்ஶம் அதிகமில்லை. மேலும், மத்யமாதிகாரிகள் செவ்வைப்பட்டால் அதமாதிகாரிகள் தாமே சரியாய் விடுவார்கள்; சரிசெய்யவும் படுவார்கள். மத்யமாதிகாரிகளை லோகத்துக்கு ஜீர்ணாஶயம் மாதிரி எண்ணலாம். ஜீர்ணாஶயம் கெடாமலிருந்தால் வ்யாதியே கிடையாது. அது ஸ்வஸ்தமானால் முழுஶரீரமும் ஸ்வாஸ்த்யத்தை அடைவதற்கு ஸந்தேஹமே யில்லை. ஆகையால், இப்போது மத்யமாதிகாரிகளின் வித்யாப்யாஸ ப்ரக்ரியையைப் பற்றிச் சற்று விஸ்தாரமாகச் சொல்லவேண்டியது அவஶ்யமாகிறது.

வித்யை மநுஷ்யனுக்கு ஸர்வதோமுகமான ஸம்ஸ்காரமாகையால், அது அவனுடைய எல்லாத் தத்வங்களையும் சீர்படுத்தும்படி பூர்ண நிஷ்பத்தி யுள்ளதாயிருந்தால்தான் அந்யூநமான பலஸித்தியைத் தரும். ஸாதாரணமாய் மநுஷ்யனுக்கு நாலு தத்வங்கள் (அல்லது அம்ஶங்கள்) அமைந்திருக்கின்றன; அவையாவன:—ஶரீரம், புத்தி, மநஸ், ஆத்மா என்பவை. ஶரீரம் மூன்று பிரிவுள்ளது;

ஜ்ஞாநேந்த்ரியங்கள் கர்மேந்த்ரியங்கள் இவ்விருவகை இந்த்ரியங்களின் உபகரணங்கள். ஜ்ஞாநேந்த்ரியங்கள் - சக்ஷுஸ் ஶ்ரோத்ரம் முதலியவை; கர்மேந்த்ரியங்கள் - பாணி பாதாதிகள்; இவைகளுக்குத் தளர்ச்சியுண்டாகாமல் இவைகளுக்கு வேண்டிய ஆஹாராம்ஶங்களைப் பாகம்செய்து குலவதூவைப்போலப் போஷித்து வரும் ஜீர்ணாஶயம், ரக்தாஶயம் முதலிய அந்தரவயவங்கள் கீழே சொல்லப்பட்ட மூன்றாவது பிரிவில் அடங்கியவைகள். புத்தி தத்வமானது, நம்முடைய யுக்தி ஆலோசனை முதலியவற்றின் காரணம். அதன் குணங்கள் எட்டு; அவையாவன:—க்ரஹணம்-விஷயங்களை க்ரஹிப்பது; தாரணம் - க்ரஹித்த விஷயங்களை நம்மிடம் நிலைநிறுத்திக்கொள்வது; ஸ்மரணம் - பின்பு வேண்டிய ஸந்தர்ப்பங்களில் அவ்விஷயங்களை ஜ்ஞாபகத்துக்குக் கொண்டுவருதல்; ப்ரதிபாதநம் - நமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குப் போதித்தல்; ஊஹாபோஹௌ - ஸாதகபாதகங்களை விவேசநம் செய்து வேண்டியதை எடுத்துக்கொண்டு வேண்டாததை விலக்குதல்; அர்த்தவிஜ்ஞாநம் - வஸ்துக்களின் ப்ரயோஜநத்தைச் செம்மையாய் அறிவது; தத்வஜ்ஞாநம் - உண்மையைத் தெரிந்துகொள்வது என்பவை. ஶரீரத்தையும் புத்தியையும் அதற்கு உரிய வ்யாபாரங்களைச் செய்யும்படி ப்ரேரணம் செய்வது, மநஸ்ஸின் தர்மம். மநஸ் ப்ரவ்ருத்திக்காமல் அவையிரண்டும் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. மநஸ்ஸினுடைய ஸஹாயமில்லாமலே புத்திக்குச் சிந்திக்கும் ஶக்தியிருந்தபோதிலும் மநஸ்ஸின் ப்ரேரணையில்லாமல் அதற்கு ப்ரவ்ருத்திக்கும் யோக்யதை கிடையாது. ஆகையால், மநஸ்ஸை ஶரீரம் புத்தி இவையிரண்டுக்கும் யந்தாவாக நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இம்மூன்றுக்கும் வேறுபட்டதும் உத்க்ருஷ்டமானதும் இவைகளுக்கு அங்கியாயும் ஶேஷியாயுமுள்ள ஆத்ம தத்வம், நிர்மலமாயும் ஜ்ஞாநமயமாயும் ஸ்வயம்ப்ரகாஶமாயுமுள்ளது. அது ஸ்வஸ்மை பாஸமாநமாகையால் 'ப்ரத்யக்' என்று வ்யவஹரிக்கப்படுகிறது; அதிலே மேற்கூறிய ஶரீரம், புத்தி, மநஸ் இம்மூன்றுக்கும் ஆதாரமாயும் நியந்தாவாயுமிருக்கிறது; ஸுக ரூபமானது. இதற்கு துக்கம் ஆகந்துகம்; கர்ம பந்தத்தினால் நேர்ந்திருக்கிறது.

இம்மாதிரியான மநுஷ்யனுடைய அம்ஶங்களைத் தெரிந்துகொண்டு அவற்றினுடைய தேர்ச்சியையும் உத்கர்ஷத்தையும் வ்ரு



த்திசெய்வதுடன் ஒன்றுக்கொன்று ஸங்கர்ஷம் நேராமலிருக்கும்படி (அதாவது - ஒரு அம்ஶத்தின் ஶக்தியை வ்ருத்தி பண்ணுவதால் மற்றொன்றின் பாடவத்துக்கு ஹாநியில்லாமல் மொத்தத்தில் எல்லாம் சேர்ந்த மநுஷ்யனுடைய ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸுக்கு ஸாதநமாகும்படி) அதனதனை எவ்வெவ்விதமாக ஸம்ஸ்கரிக்க வேண்டுமோ அந்தந்தப் பத்ததிகளைத் தெளிவாய் எடுத்துக்காட்டுவது தான் ஸத்க்ரியையின் லக்ஷணம். இதுதான், நமது பூர்வ பிதாமஹர்களான மஹர்ஷிகளால் முக்காலத்துக்கும் பொதுவான ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிகளில் வ்யக்தமாய் எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கிறது. நமது பெரியோர்களின் அபிப்ராயப்படி நமது ஶரீரம் ஆத்ம மநோ புத்திகளுக்குக் கீழ்ப்பட்டதும் அவைகளுடைய கார்ய ஸாதநத்துக்கு உபயோகப்படும்படியானதுமான ஒரு கருவி. இதுதான் 'ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்' என்று சொன்ன கவியின் அபிப்ராயம். இதனால், ஶரீரத்தின் ஸ்வரூப யோக்யதை தர்மத்துக்கு (அதாவது - புருஷார்த்த ஸம்பாதக வ்யாபாரங்களுக்கு) உபயோகமாயிருப்பதுதான் என்றும், அப்படி உபயோகப்படும் கருவிகளில் ஶரீரம் முதன்மையானதென்றும் (அதாவது - முதலில் கவனிக்கத் தக்கதென்றும்), அரண்மனைக்குள்ளிருக்கும் அரசனிடம் சென்று ஸம்பாஷணம் செய்ய விரும்புகிறவன் முதலில் த்வாரஸ்த ஸேவகனுடைய அநுமதியை ஸம்பாதிக்க அவனை ஸ்வாதீநம் செய்துகொள்வது அவஶ்யமாயிருப்பது போலப் புருஷார்த்த ஸாதநத்துக்கு ப்ரவ்ருத்திப்பவன் ஆதியில் ஶரீரத்தை வசப்படுத்த வேண்டியது அவஶ்யமென்றும் விளங்குகிறது. இவ்விதம் ஶரீரம் ஸ்வாதீநப்படுவதற்கு மநஸ்ஸை வஶப்படுத்த வேண்டியதும், மநஸ்ஸை வசப்படுத்துவதற்குப் புத்தியை ஸம்ஸ்கரித்துக்கொண்டு ஸதஸத் விவேசநம் ஸம்பாதித்துக்கொள்வது[illegible]வஶ்யமாயிருக்கின்றன. அநந்யமநஸ்கனாய் ஆத்மாநுசிந்தநம் [illegible] செய்யாதபக்ஷத்தில் மநஸ் வசப்படாது; புத்திக்கும் [illegible]ம் உண்டாகாது. அநந்ய பக்தியுடன் பகவத்த்யாநம் ப[illegible]க்ஷத்தில் ஆத்மாநுசிந்தநம் தேறாது. பகவானே உபேயனாய்[illegible]டன் உபாயமாகவும் இருக்கிறான். ஆகையால் அவனுடை[illegible]பையே நாம் தர்மாநுஷ்டாநம் ஸம்பூர்ணமாகப் பண்ணுவத[illegible]த்ய ஜ்ஞாநம் ஸம்பாதிப்பதற்கும் ப்ரதம ஸாதநம் என்கி[illegible]ாஸத்துடன், ஶாஸ்த்ரோக்தமான மார்க்கங்க

ளில் ப்ரவ்ருத்தித்தால் பல ஸித்திக்கு ஆக்ஷேபமில்லை. அப்படிக்
கில்லாமல் நமது சொந்த ஶக்தியால் ஸாதிக்கலாம் என்று ஆரம்பம்
செய்வது ஒரு ஸௌதத்தில் ஏறவேண்டுமென்று விரும்புகிறவன்
அந்த ஸௌதத்திலிருந்து கீழே தொங்கவிடப்பட்டிருக்கும் பல
மான கயிற்றை அவலம்பித்து ஸுலபமாய் ஏறாமல் தான் ஶரீர
லாகவத்தால் உயரக் கிளம்பி அவலம்ப மில்லாமலே ஏறிவிடலா
மென்று நினைத்து அந்த ப்ரகாரம் முயற்சிசெய்வது போலாகும்.
இம்மாதிரியாக ஶரீரம் மநஸ், புத்தி, ஆத்மா இவைகள் ஒன்றுக்
கொன்று அப்ருதக்ஸித்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்
றும், அவைகளில் ஒன்றை ஸம்ஸ்கரிக்க வேண்டுமானால் மீதி யெல்
லாவற்றையும் ஸம்ஸ்கரிக்கவேண்டியது அவஶ்யமென்றும், அவை
களில் ஒன்றின் ஶ்ரேயஸ் மற்றெல்லாவற்றின் ஶ்ரேயஸ்ஸையும்
பொருந்தி இருக்கிற தென்றும் தெரிந்துகொள்ளாதவர்கள் வித்யா
ப்ரக்ரியை விஷயமாக எந்த ஆரம்பமும் செய்ய அதிகாரிகளல்லர்.
ஆனால், வைபரீத்யமே ஒழுங்காய் விளங்கும் இந்நாட்களில் வித்
யையின் பத்ததி மேற்கூறியவாறு உள்ளதென்று சொல்வது பரி
ஹாஸ்யமாயிருக்கு மென்பதற்கு ஆக்ஷேபமில்லை. வித்யாவிஷயத்
தில் நமது தேஶத்தில் ஏற்பட்டிருக்கும் குணம் வேறெங்கு
மில்லை. ஸாதாரணமாய் இப்போது நமது தேசத்தில் வழங்கும்
வித்யா பத்ததிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று
ஸ்வதேஶ வித்யா பத்ததி; மற்றொன்று விதேஶ வித்யா பத்ததி.
இவற்றுள் ஸ்வதேஶ வித்யா பத்ததி யென்பது முக்யமாய் ஸம்ஸ்
க்ருத வித்யாப்யாஸம் நடந்துவரும் க்ரமத்தையே குறிக்கிறது.
இதரதேஶ பாஷைகள் ஸம்பந்தப்பட்ட வரையில் அவைகள்
கொஞ்சகாலமாய்த் தனிமையாகப் பலர்களால் அநேக காரணங்களை
முன்னிட்டுக் கற்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டு மிருந்தபோதிலும்
அவைகளின் வழி முழுவதும் ஸம்ஸ்க்ருதத்தை அநுகாரம் பண்ணு
கிறதே யொழிய வேறு இல்லை. விதேஶ வித்யா பத்ததி யென்
பது இங்க்லீஷ் பாஷையையும் அதில் ஏற்பட்டிருக்கும் ஶாஸ்த்ரா
திகளையும் ராஜாங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கலாஶாலைகளில் போ
திக்கும் ப்ரகாரம்தான்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1.)

## ஹிந்துக்களின் மதக்கொள்கையும் அநுஷ்டாநங்களும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஆர்யர்கள் உயர்ந்தவர்களென்றும் அவர்களது மதம் பெயர்பெற்ற தென்
றும் நாம் புகழுடன் சொல்லிக் கொள்ளுகிறோம். இதனாலேயே நாமும் நம்
முடைய மோக்ஷத்தை உபதேசிக்கும் மதம் ஶ்லாக்ய மென்றும், அப்படி
அநுஷ்டிக்காமலிருக்கும் நம்மவர்களும் பாஶ்சாத்யர்களும் கேவலம் லோக
விஷயங்களிலே காலத்தைக் கழிக்கிறார்கள் என்றும் ஹேளநமாய்ச் சொல்
வது வழக்கம். அப்படிச் சொல்வதிலும் நமது தேசாபிமாநம் அதிகரிக்கிற
தாகவும், ஆகையால் அதை வ்ருத்தி செய்யத்தக்க ப்ரயத்நங்கள் செய்ய
வேணுமென்றும் நினைக்கப்படுகிறது.

நம்முடைய மதக்கொள்கையினால் நம்முடைய ஸகல கர்மாவும் பாவந
மாகிறது என்பது உண்மையே. தவிரவும், ஆத்மோஜ்ஜீவநமே ஆவஶ்ய
கம், அதற்கு அநுகுணமாகவே ஒவ்வொரு கர்மாவும் இருக்கவேணும் இத்
யாதியான எண்ணம் அநேக நற்குணங்களை உண்டு பண்ணுகிறது என்பது
தத்வமே. எந்தவிஷயத்திலும் பகவானே ப்ரேரிப்பிக்கிறான் என்று சொல்
வதும், பலத்தை அவனுக்கு அர்ப்பணம் செய்வதும், முக்யமான நல்லகாரி
யங்களே. இதை ஸரியாகக் கொள்பவர்களுக்கு அஹங்கார மமகாரங்கள்
நீங்கி மனஸ்ஸுக்கு ஶாந்தியைக் கொடுக்கிறது என்பதற்கும் ஆக்ஷேபமில்லை.
இந்த முக்கிய அபிப்ராயங்களே ஹிந்துக்களுடைய நடவடிக்கைகளையும்,
மனதின் நிலைமையையும் நிஶ்சயிக்கும் ஹேதுவாக இருக்கின்றன. மதங்க
ளில விஶ்வாஸமும், அநுஷ்டாநமும், ஶக்தி அல்லது ஸாமர்த்யம் அற்ற
வர்களுக்கே லோகத்தில் அதிகரிப்பதைப் பார்க்கிறோம். தம்முடைய பலக்
குறைவினாலேயே மேலான ஓர் பலம், ஶக்தி, தேஜஸ் இவைகள் இருக்கி
ன்றன என்று முதலில் ஒரு நம்பிக்கை ஜநிக்கிறது. இந்த எண்ணம் ஸ்வ
பாவத்தினாலே ஸஸ்ய ஸம்ருத்தியும் வைஶால்யமு முள்ள இந்த ஹிந்து
தேஶத்தவர்களுக்கு ஸஹஜமா யிருக்கிறது.

இந்த எண்ணங்கள் அதிகரிக்கும்போது, லோகத்தை விடுவதும், தன்
ஆத்மாவின் க்ஷேமமாகிய மோக்ஷத்துக்கு உரிய ப்ரயத்நங்களைச் செய்வ
தும் பலப்படுகின்றன. இப்படி தம்முடைய மோக்ஷத்தைத் தேடிக்கொள்

வதில் ப்ரயத்னம் பலப்பட இதரருடைய ஸுகதுக்கத்தைக்கூடக் கவனியாமல் போவது வ்ருத்தியாவதை நாம் காண்கிறோம். தங்களுக்கு நேரிடும் அஸௌகர்யங்களை ஸரிப்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய ஸக்தியும் குறைவு படுகிறது; ஸ்வபாவமாகத் தேஹத்தில் பரபரப்புக் குறைந்து கார்ய நிர்வாஹஸக்தி நாளடைவில் குறைவுபட்டு, அல்ப விஷயங்களுக்குக்கூடத் தெய்வமே மூலமென்று சொல்லும் அநேகர் ஸம்பவிக்கிறார்கள். இவ்விதமாக மதப்பயிற்சியால் ஸ்வாபாவிகமான உத்தமகுணங்கள் சில லோபம் அடைகின்றன. பாஸ்சாத்யர்களிடம் விசேஷமாய்ப் பயிற்சி யடைந்திருக்கும் தைரியம், மனோநிஸ்சயம், உண்மையே பெரிது என்கிற நினைவு, பஹுஜன ஆநுகூல்யத்தையே தேடும் ஸ்வபாவம், அதற்காகத் தாம் அளவற்ற பரிஸ்ரமப்படுவது ஆகிய இந்தக் குணங்கள் நம்மிடத்தில் குறைந்திருப்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டியது. நம்மவர்களில் மதங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்கள்கூட அநேகர் தங்களுடைய புத்திக்கு ஸரியான பயிற்சியை உண்டாக்க உத்தேசித்தவர்களல்லர். நமது மதக்கொள்கைக்கு உயர்ந்த லோகோபகாரமான நடத்தையும் ஒன்றே என்று சொல்ல முடியாது. ஆகையினாலே தான் கோயில்களிலும் இதரமத ஸம்பந்தமான ஸ்தானங்களிலும் ஐகமத்யக் குறைவை நாம் பார்க்கிறோம். ம்ருது ஸ்வபாவமும், ஸாந்தகுணமும், எப்பொழுதும் ஒருவரையும் மனம் கலங்கச்செய்யாமலிருப்பதுமாகிய நல்ல குணங்கள் உத்தமங்களென்று நினைக்கப்படுகின்றன. துஷ்க்ருத்யங்கள் யாதரை செய்து பாபங்களைப் போக்கடிக்க வேணுமேதவிர தங்களுடைய மனத்தில் நல்ல நிஸ்சயம் இருக்கிறதென்றும் அதைப் பயிற்சி செய்ய வேணுமென்றும் நினைக்கப்படவில்லை. ஸத்யமும் மனோநிஸ்சயமும் இல்லாத பகவத் ஸேவை என்ன பயனைக் கொடுக்கும்? மேன்மையான பயிற்சியை வ்ருத்தி செய்யாத ஸித்தாந்தமும் மதமும் நம்மை வெகுகாலமாய்த் தாழ்ந்த ஸ்திதியில் வைத்திருக்கின்றன. ஸ்வலாபத்தைத் தேடும் உத்தேசத்தையும் ஸத்யத்திலிருந்து தவறுதலையும் வேதாந்திகளிடத்தில் காணலாம். தங்களைக்கூடக் கஷ்டப்படுபவர்களுக்கு ஸுகத்தையும் ஜ்ஞானத்தையும் பெருக்கமுயலாத ஒருவனை ஈஸ்வரன் திருவுள்ளம்பற்றித் தன்னோடு ஸாம்யத்தை உண்மையில் பண்ணுகிறான் என்பதை எப்படி நம்புகிறது? ஆகையினாலே எவ்வளவு மதஜ்ஞானமும் வைராக்யமும் இருந்தாலும், தன்னுடைய நித்யகர்மாவில் ஆர்ஜவமும் ஸ்வலாபத்தை அபேக்ஷியாமல் பிறர் உதவியிலும் அதனால் அவர்களுக்கு உண்டாகும் ஸுகத்திலும் ஊக்கமும் உள்ளவராய், ஈஸ்வரனே ஸர்வத்துக்கும் கர்த்தா பரமாத்மாவென்று அறிந்து என்னென்ன கொள்ளாமல் எல்லாரும் இருக்கவேணும். இதுவே பகவான் முகோல்லாஸத்தைச் செய்கிறது என்பதற்கு ஸம்ஸயமே இல்லை.

சித்தூர்,
20—6—18.

நிஜமதம்.



[வேதாந்திகள் பரதுக்க பராங்முகர்களாய் ஆத்மலாபத்தையே தேடி ப்ரவ்ருத்திக்கிறார்கள் என்றும், அப்படிப்பட்ட வேதாந்திகள் நமது தேஸத்தில் அதிகரித்திருப்பதால் தான் நமது தேஸத்திற்கு ஒரு தாழ்வு உண்டாகி யிருக்கிறது என்றும் இவர் எழுதியிருப்பதை அபிஜ்ஞர்கள் அப்யுபகமம் செய்யமாட்டார்கள். வேதாந்திகளிடத்தில் ஸத்யமில்லை என்றுசொல்வது அவிவேகியினுடைய வார்த்தைபோலத் தோன்றுகிற படியால் அது ப்ரதிக்ஷேபார்ஹமன்று என்று நாம்நினைக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.]

## விஸிஷ்டாத்வைதம்.

### (2.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

தேவரீர் அடியேனுக்கு வெகுநாளா யிருக்கிற ஒரு ஸம்ஸயத்தை வேதாந்த தீபிகையிற் ப்ரசுரஞ்செய்து, அடியேனை அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

தற்காலம், ‘த்வைதம்,’ ‘அத்வைதம்,’ ‘விஸிஷ்டாத்வைதம்’ என்று மூன்று மதங்கள் நிரம்ப ப்ரஸித்தி பெற்றவைகளென்று எல்லோர்க்கும் தெரிந்த விஷயமே. அவற்றுள், ‘த்வைதம்’ என்கிற பெயரைக் கேட்ட மாத்திரமே “ஜீவேஸ்வரபேதம்” ஸ்பஷ்டமாய்த் தோன்றுகிறது. அவ்விதமே ‘அத்வைதம்’ என்ற பதஸ்ரவணத்தாலே, அத்வைதிகளுக்கு அபிமதமான ‘ஐக்யம்’ ஸ்பஷ்டமாகிறது. அவ்வண்ணமே ஆலோசித்துப்பார்ப்போமேயாயின், “விஸிஷ்டாத்வைதம்” என்கிற பதத்தால் விஸிஷ்டாத்வைதிகளுக்கு அபிமதமான ஸித்தாந்தார்த்தம் யாதொன்றும் தோன்றுவதில்லையென்று நமக்குப் புலப்படுகிறது. ஆயினும், இன்னது தான் அந்த ஸப்தத்தின் அர்த்தமென்று நமக்கு நன்றாய் விளங்கவில்லை. அத்வைதந்தான்கூட விஸிஷ்டமென்பது அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறது. அங்கு ‘வைஸிஷ்ட்ய’ மென்பது என்ன? மேலும், எந்த அம்ஸத்தில் வைஸிஷ்ட்யம்? மற்றும் சிலர் ‘விஸிஷ்டாத்வைத மென்ற பெயர் கல்பிதம்; பாரமார்த்திகமாய்ப் பார்த்தால் ஸ்ரீ ‘ராமாநுஜீய மதம்’ என்றுதான் சொல்வது உசிதம்’ என்று சொல்லுகின்றனர். அப்படியே யிருப்பதாக ஒத்துக்கொண்டாலும், தற்காலமுள்ள வ்யவஹாரத்திற்கு என்ன நியாமகமென்று சொல்லவேண்டிய தவசியமென்று நமக்குத் தோன்றுகிறது. மேலும், சிலர் ‘விஸிஷ்ட’ பதம் சுத்தாத்விகதபரம் என்றும் சொல்லக்கேட்டோம். சுத்த விஸிஷ்டவ்யவஹாரமோ என்றால் அத்வைதிகளுக்கு மாத்திரமே கூடுமேயன்றி மற்றமதஸ்தர்களுக்குக் கூடாதென்று தோன்றுகிறது. ஆகையால், இந்த விஷயத்தில் நமக்குண்டான ஸம்ஸயத்தை விஸிஷ்டாத்வைத

பண்டிதர்கள் தயைசெய்து பரிஹாரம் செய்வார்களென்கிற நம்பிக்கையின் பேரில் நாம் தீபிகைக்கு எழுதலானேம். ஸர்வதா இந்த ப்ரச்நம் ஜிஜ்ஞாஸாமூலகமேயன்றி வேறல்ல.

இப்படிக்கு
தங்கள் ப்ரேமபாத்ரன்

கும்பகோணம்,
வெங்கட்டராயர்தெரு
ஜூன்—2—13.

கே. ஆர். நாகராஜசர்மா,
மத்வமதாபிமானி.

[ஸ்ரீ வேதாந்த தீபிகையின் முதல் (அதாவது விரோதிக்ருத்) வருஷத்திய சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில் 107-வது பக்கத்தில் இந்த ப்ரச்நத்திற்கு ப்ரத்யுத்தரத்தைக் காணலாம். ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு முன்னமே பகவத் போதாயந ஸ்ரீ நாதமுனி ஸ்ரீ யாமுநார்ய ப்ரப்ருதிகளான கணக்கற்ற விசிஷ்டாத்வைதிகள் இருந்தார்களென்றும், அவர்கள் விசிஷ்டாத்வைத ஸம்மதமாக அநேக க்ரந்தங்கள் செய்திருக்கிறார்களென்றும் தெரிந்தவர்கள் விசிஷ்டாத்வைத மதம் ஸ்ரீராமாநுஜாசார்யரால் உண்டு பண்ணப்பட்டது என்று சொல்லத்துணியார்.]

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.

---

ஸ்ரீ:.

# பிரிவுகளின் அறிக்கை.

## கூடலூர் பிரிவு.

சென்ற வைகாசிமீ 15உக்குச் சரியான மேமீ 28உ புதன்கிழமை மாலை 2-மணிக்கு, தென் ஆற்காடு ஜில்லா விழுப்புரத்துக்கடுத்த பெரும்பாக்கம் என்னும் க்ராமத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் உபஸபையாகிற கூடலூர் பிரிவினுடைய கூட்டமொன்று சேர்ந்தது. விழுப்புரத்தில் வக்கீலாக இருக்கும் ஸ்ரீ. வி. ரங்காசார்யர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். ஸமீப க்ராமங்களிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களில் அநேகர் அந்தக் கூட்டத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள்.

ஸ்ரீ ஸந்நிதி விஷயமாக ஸந்நிதி சிஷ்யர்களுக்குரிய தர்மங்களைப்பற்றி அக்ராஸநாதிபதி விஸ்தாரமாக உபந்யஸித்த பிறகு பின்வருமாறு மூன்று தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. ச்ரேயஸ் ஸாதகமான அநேக விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்வதற்கு அத்யந்தம் உபகாரகமாக இருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்து சிஷ்ய ஸபை போன்ற ஸபைகள் பலவிடங்களில் உண்டாக வேண்டியது அவச்யமென்றும், இந்த ஸபையைச் சேர்ந்தவர்களான சிஷ்யர்களிடத்தில் விச்வாஸத்துடன் அவர்கள் செய்துகொள்ளும் விஜ்ஞாபநங்களுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் ப்ரீதிபூர்வகமாகத் திருச்செவி சாற்றியருள்வதுடன், லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதாநத்தில் யாராவது அஸாதுவான போதனையைச் செய்தால் அவர்களுடைய போதனைக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் உட்படாமலிருக்கவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரை ப்ரார்த்திக்க வேண்டுமென்றும் முதலில் தீர்மானிக்கப்பட்டது.



2. இதற்கு முன்னமே தஞ்சாவூர் நீடாமங்கலம் மதுராந்தகம் ஆகிய இம்மூன்று ஸ்தலங்களில் நடந்த மஹாஸங்கங்களிற் செய்யப்பட்ட தீர்மானங்களெல்லாவற்றையும் இந்த ஸங்கம் அப்யுபகமம் செய்கின்றது என்பது, இரண்டாவது தீர்மானம்.

3. பிந்தி ஆஸ்தாநத்திற்கு எழுந்தருள வேண்டிய ஸ்ரீ ஸ்வாமி விஷயமாக இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர், சிஷ்யர்களுடன் கலந்து ஆலோசிக்காமலும் உயில் மூலமாகவும் செய்திருக்கும் ஏற்பாடு ஸ்ரீ மடத்தின் ஆசாரத்திற்கு விருத்தமாக இருக்கிறபடியால், அது விஷயத்தில் சிஷ்யர்களெல்லாரும் யதோசிதம் ச்ரத்தை எடுத்துக் கொண்டு சிஷ்யர்களுக் குள்ள பாத்யதையை ஸ்தாபிக்க வேண்டுவதற்கான முயற்சியையும் ஸஹாயத்தையும் செய்ய வேண்டும் என்பது, மூன்றாவது தீர்மானம்.

சித்தூர்.
12—6—18.

ஸி. ராஜகோபாலாசார்யர்.
கார்யதர்சி.

---

ஸ்ரீ:.

# வர்த்தமானங்கள்.

(1.)

## திருவள்ளூர் தேவஸ்தாநம்.

கொஞ்ச காலமாக இந்தத் தேவஸ்தாநத்தின் விசாரணை ஸரியானபடி நடக்கவில்லையென்று, திருவள்ளூர் வாஸிகளான ஸ்ரீ. ஈக்காடு ராகவாசார்யரும் ஸ்ரீ. ஒலையூர் க்ருஷ்ணமாசார்யருமாக, அந்தத் தேவஸ்தாநத்திற்குத் தர்மகர்த்தாவாகிற ஸ்ரீ அழகிய சிங்கர்பேரில் ஒரு வ்யாஜ்யம் செய்திருக்கிறார்கள். இந்த வ்யாஜ்யம் செங்கல்பட்டு ஜில்லாக் கோர்ட்டில் நடக்கிறது. சீக்கிரத்தில் அதைப் பற்றிய விசாரணையைக் கோர்ட்டார்கள் எடுத்துக்கொள்ளலாம். இந்தத் தேவஸ்தாநத்தின் தர்மகர்த்தாக்களாக ஸ்ரீ அழகிய சிங்கருடன் இன்னும் இரண்டொரு வடகலை ஸ்ரீவைஷ்ணவர்களை நியமிக்க வேண்டுமென்றும், தேவஸ்தாநத்தின் ஸம்பந்தமான

சென்ற சில வருஷத்திய கணக்குகளைக் கோர்ட்டார் பரிசீலனம் செய்து பார்க்கவேண்டு மென்றும், இனிமேல் இந்தத் தேவஸ்தானத்து விசாரணை எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லாமல் நடைபெறும் பொருட்டுத் தகுந்த வ்யவஸ்தைகளைக் கோர்ட்டார் ஏற்படுத்த வேண்டு மென்றும் வாதிகள் கேட்டுக்கொண்டிருக்கிறதாகக் கேள்வி.

---

## (2.)

## ஸ்ரீ அஹோபில மடத்திற்கு மைஸூர் மஹாராஜாங்கத்தாரால் செய்யப்படும் மர்யாதை.

ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர் ஸ்ரீ பரகால ஸ்வாமி ஸ்ரீ தோதாத்ரி ஜீயர் இவர்கள் மைஸூருக்கு எழுந்தருளும் பொழுதெல்லாம் மைஸூர் மஹாராஜாங்கத்தார் அவர்களுக்கு முதல்தர மர்யாதை செய்வது பஹு காலமாக வழக்கமாக இருந்தது. இவ்விதமான மர்யாதை நடத்த வேண்டு மென்பது, அந்த ராஜாங்கத்துத் தஸ்தாவேஜ் ஆகிற 'ஸம்ப்ரதாய ரத்னாகரம்' முதலிய ரிக்கார்டுகளிலிருந்து தெரியவரும். சென்ற 1909 - வது வருஷத்தில் ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர் ஸ்ரீ தோதாத்ரி ஜீயர் இந்த இரண்டு ஜீயர்கள் விஷயமாக இந்த மர்யாதையைத் திறத்தில் குறைத்து மூன்றாவது திறத்துக்கு மாற்றி அப்படி மாற்றியிருப்பதை அந்தக் காலத்திலேயே ராஜாங்கத்துப் பத்ரிகையில் ராஜாங்கத்தார் ப்ரசுரம் செய்திருக்கிறார்களாம். இப்படி ப்ரசுரம் செய்த விஷயம் இது வரையில் ஸ்ரீ ஸந்நிதிகளில் விச்வாஸமுள்ளவர் எவருக்கும் தெரிந்ததாகக் காணப்பட வில்லை. ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களைப் பராமர்சித்துவரும் ஸ்ரீ கார்ய கர்த்தாக்களும் இதைக் கவனிக்கக் காணோம். சென்ற மே மாஸத்தில் ஸ்ரீ தோதாத்ரி ஸ்வாமி மைஸூருக்கு எழுந்தருளியிருந்த பொழுது அவருக்கு நடந்த குறைந்த மர்யாதையைப் பார்த்த சில ஆஸ்திகர்கள் 'ஏன் இப்படி குறைந்த மர்யாதை நடக்கவேண்டும்?' என்று விசாரித்த பொழுது, 1909 - வது வருஷத்திய உத்தரவு வெளிக்கு வந்ததாம். இப்படிக் குறைத்தது ந்யாய விருத்தமென்று அநேக உபபத்திகளையும் ரிக்கார்டு பாத்யங்களையும் எடுத்து விசதமாக உணர்த்தி, அந்த உத்தரவை மாற்றி யதாபூர்வம் ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கரை முதல் தரமான மர்யாதைக்கு அர்ஹராக ராஜாங்கத்தார் கணநம் செய்துகொள்ள வேண்டியது என்று, ஸ்ரீ அஹோபிலமடத்து சிஷ்ய ஸபையின் பெங்களூர் பிரிவினுடைய கார்ய தர்சியாகிற ஸ்ரீ. பி. கே. கருடாசாரியர் மஹாராஜாவினுடைய திவானுக்கு மநுச்செய்து கொண்டிருக்கிறாராம். அந்த மநுவைத் திவான் அங்கீகரித்து அதிற்சொல்லப்பட்டிருக்கும் ந்யாயங்களைப் பராமர்சித்து ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்காகவே ப்ரவ்ருத்திக்கும் இந்த ஆசார்ய ஸ்தானங்கள் விஷயத்தில் நேர்ந்திருக்கும் தவறுதலை மாற்றுவா ரென்று நம்புகிறோம்.

---

REGISTERED 27 AUG 1913 MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமடத்து சிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச ஆடி [ஸஞ்சிகை 6.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]

**மைஸூர் முஜராய் பில்.**

பஹுஜநங்களுடைய ச்ரேயஸ்ஸை உத்தேசித்துச் சில ஸாத்விக அக்ரேஸரர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள மடம் முதலிய தர்ம ஆஸ்தாநங்கள், சில ஸமயங்களில் அநிஷ்டர்களான ஜநங்களின் ஹஸ்தகதங்களாகிப் பஹுஜநங்களுக்கு உபயுக்தங்களாக இருப்பதை விட்டு அந்தந்தக் காலங்களில் வாசாலர்களாகவும் தைர்யசாலிகளாகவும் இருக்கும் சில வ்யக்திகளுக்கு மாத்திரம் உபயோகப் படுவதையும், தர்ம ஸம்ஸ்தாபநத்திற்கு ஹேதுக்களாக இருக்க வேண்டியது போக அநேக வித அதர்மங்களுடைய பரவுதலுக்குக் காரணங்களாவதையும் பார்த்து, அதைச் சீர்திருத்தவேண்டுவது தமது முக்யதர்மங்களில் ஒன்று என்று நன்றாக உணர்ந்திருக்கும் மைஸூர் ராஜாங்கத்தார், தங்களுடைய ராஜ்யத்தி லுள்ள ஆஸ்தாநங்களின் விஷயமாக ஒருசட்டத்தை உண்டுபண்ணக் கொஞ்சகாலமாக ப்ரயத்நப் படுகிறார்கள் என்பது பல பெயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். மடத்திற்குச் சொந்தமாயுள்ள சொத்துக்

களெல்லாம் தமது சொத்துக்கள் என்றும், அந்தச் சொத்துக்களைத் தமக்குத் தோன்றினபடி செலவிடுவதைத் தடுக்க ஒருவருக்கும் அதிகாரமில்லையென்றும், தமது காலத்திற்குப் பிறகு அந்தச் சொத்துக்களுக்குப் பாத்யஸ்தர்களாக வாரிசை நியமிப்பது தமக்கே சொந்தமான அதிகாரமென்றும் நினைத்து ஸ்வச்சந்தமாக அபதத்தில் வர்த்தித்துவரும் ஆஸ்தாநாதிபதிகளைக் கட்டுப்படுத்தி, ஆதிகாலங்களில் உத்தேஶிக்கப்பட்ட ப்ரகாரமாகவே அந்த ஆஸ்தாநங்கள் நடைபெற்று வரும்படி செய்யவேண்டும் என்பதே இந்தச் சட்டத்தை ப்ரேரிப்பிக்கிறவர்களுடைய நோக்கம். இது மிகவும் புகழத்தக்க நோக்கமென்பதில் ஸந்தேஹமே இல்லை. யதார்த்தமாகவே இப்பொழுது இருக்கும் ஸ்திதியைப் பரிஶீலநம் செய்து பார்க்குமளவில், ஸாத்விகர்களான இரண்டொரு மடாதிபதிகளை விலக்கிவிட்டால் ப்ராயேண மடாதிபதிகள் எலலாரும் தமக்கு உரிய தர்மங்களை ஸரியாக உணரவில்லையென்றும், ஐஹிக போகங்களையும் தாத்காலிக யஶஸ்ஸையுமே பெரிதாகப் பாராட்டாமல் இருக்கவேண்டுவது போக அவர்களில் அநேகர் தமது தேஹஸம்பத்தமான ஸுகங்களைத் தேடிக்கொள்வதிலும் யஶஸ்ஸை ப்ரதீக்ஷித்துத் தர்மாதர்ம விவேசந மற்றவர்கள்போல யஶஸ் ஸாதகமான கார்யங்களைச் செய்வதிலும் ப்ரவ்ருத்திக்கிறார்களென்றும், நிஷ்பக்ஷபாதிகளாகவும் ஸர்வஜந ஸுஹ்ருத்துக்களாகவும் இருக்கவேண்டுவது போக ஸாமாந்ய ஜநங்களைப் போல ஶத்ரு மித்ராதி பாவனைகளைப் பாராட்டிச் சிலருடன் கலஹத்தையும் சிலருடன் ஸௌஹார்த்தத்தையும் செய்துகொண்டு அதுகாரணமாக ஏராளமான அர்த்த வ்யயங்களைச் செய்து வருகிறார்களென்றும் எல்லாருக்கும் தெரியவரும். இப்படியிருக்கும் ஸ்திதி ஸர்வப்ரகாரத்திலும் ஶோச்யமானதால் இதைச் சீர்திருத்த முயற்சிசெய்யும் மைஸூர் ராஜாங்கத்தார் ஜநங்களுக்கு மிக்க நன்மையைச் செய்ய ப்ரயத்நப்படுகிறார்கள் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

ஆனால், இந்தச் சீர்திருத்தத்தை ஸாதித்துக்கொள்ள அவர்களால் உத்தேஶிக்கப்படும் உபாயம் ஒரு அம்ஶத்தில் ஆக்ஷேபார்ஹமாக இருக்கின்றது என்று நாம் நினைக்கிறோம். அந்த அம்ஶத்தைப்பற்றி மாத்திரம் இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம். மடாதிபதிகள் தமது தர்மத்தைச் சரிவர அநுஷ்டித்து



வருகிறார்களாவென்று பரிஶீலநம் செய்வதற்கும், அப்படி அநுஷ்டித்துவருவதில் தவறுவதாகத் தெரியவந்தால் அவர்களை ஸரியான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பிக்கிறதற்கும், அவ்விதமாக ப்ரவ்ருத்திப்பிக்கவும் அவர்கள் இணங்கிவராவிட்டால் அவர்களை ஆஸ்தாநத்தைவிட்டு விலக்குவதற்கும், அப்படி யாராவது விலக்கப்பட்டாலும் அல்லது வேறு எவ்விதமாக ஆஸ்தாநங்களில் காலி நேர்ந்தாலும் பின் வரவேண்டிய அதிபதிகளை ஆஸ்தாநங்களுக்கு நியமிப்பதற்கும், இன்னும் இவைபோன்ற மற்றை முக்ய கார்யங்களுக்கு அவஶ்யமான சிபார்சு செய்வதற்கும் வேண்டுவதான அதிகாரத்தை அந்தந்த ஸ்தலங்களில் ராஜப்ரதிநிதிகளாக இருக்கும் ராஜஸேவகர்களுக்குக் கொடுப்பதாக இவர்கள் உத்தேஶிக்கிறார்கள். இந்த உத்தேஶம்தான் ஆக்ஷேபிக்கத் தகுந்தது என்று நமக்குத்தோன்றுகிறது. முதலில், பஹு ஜநங்களால் ஆசார்ய ஸ்தாநங்களாக வரிக்கப்பட்டு அநேகம் பெயர்களுடைய ஸர்வ வித ப்ரதிபத்திக்கும் பாத்ரமாகப் பாவிக்கப்படும் மடாதிபதிகளை, அங்கங்கு ஸ்வல்ப அதிகாரத்தை வஹித்து வரும் ராஜஸேவகர்களுடைய பரிஶீலநத்திற்கு உட்படுத்துவது எவ்விதத்திலும் ந்யாய்யமன்று. தவிரவும், ஸாத்விகர்களாயுள்ள மடாதிபதிகளுக்குப் பல விஷயங்களில் ந்யாய விருத்தமான உபரோதம் ஸம்பவிக்கவும், துஷ்டர்களாயுள்ளவர்களுக்கு அநுபருத்தமாக ஸ்வதந்த்ரப்ரவ்ருத்தி ஸம்பவிக்கவும் இந்த உபாயம் ஏராளமான அவகாஶம் கொடுக்கக் கூடும். மேலும், ராஜஸேவகர்களுடைய த்ருப்தியை ஸம்பாதித்துக் கொள்வதில் மாத்ரம் சிறந்த திறமையையுடைய பல பெயர்கள், அந்தத் திறமையைக் கொண்டே ஆஸ்தாநாதிபதிகளாக வரவும், அப்படிப்பட்ட திறமையற்றவர்கள் வேறு எவ்விதமான ஸாத்விக குணம் நிறைந்தவர்களாக இருந்தாலும் அந்தத் திறமையில்லையென்கிற காரணம்பற்றி அவர்கள் ஆஸ்தாந நியமந ப்ரஸ்தாவத்திலிருந்தே விலக்கப்படவும் ஏராளமான ஸாதக ஸம்பாவனைகள் இந்த உபாயத்தில் காணப்படுகின்றன. இவையெல்லாம் அநிஷ்டங்களானதால் இவைகளுக்கு ஹேதுவாகும் இந்த உபாயத்தை ஸாதுவென்று எப்படி நாம் அங்கீகரிக்கக் கூடும்?

இதுமாத்திரமன்று; சற்று ஆலோசித்துப் பார்த்தால் இந்த உபாயம் தர்மத்திற்கும் விருத்தமென்பது நன்றாக விளங்கும். மடம் என்பது, அதை ஆஶ்ரயிக்கும் ஶிஷ்யர்களுடைய ஶ்ரேயஸ்

ஸ[illegible]க்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது; மடத்தால் உண்டாகும் பலம் எல்லாவற்றையும் அநுபவிக்கும் பாத்யஸ்தர்கள் அந்த ஶிஷ்யர்களே. ஆகையால், அந்த மடத்தை நல்ல ஸ்திதியில் இருக்கும்படி பாதுகாத்து வரவேண்டிய பாத்யமும் பல போக்தாக்களாகிற அந்த ஶிஷ்யர்களுக்கே உரியது. அந்த ஶிஷ்யர்களைக் கவனியாமலே ராஜஸேவக ப்ரப்ருதிகள் அந்தப் பாத்யத்தை ஏற்றுக்கொள்வது தர்ம மாகாது.

இப்படிப் பலவகையில் ஆக்ஷேபத்திற்கு இடம் கொடுக்கும் இந்த உபாயத்தை அவலம்பிக்காமலே, வேறு உபாயங்களால் தங்களுடைய நோக்கத்தை மைஸூர் ராஜாங்கத்தார் ஸாதித்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஸகல ஜநங்களுக்கும் ஸந்தோஷமாக இருக்குமென்று தோன்றுகிறது. அந்தந்த மடத்தை ஆஶ்ரயித்திருக்கும் ஶிஷ்யர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, தங்களுக்குள் விவேகிகளும் தகுந்த ஸ்திதியில் இருப்பவர்களுமான சிலரைத் தங்கள் ப்ரதிநிதிஸங்கமாக நியமித்து, அந்த ஸங்கத்தினரைக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அப்போதைக்கப்போது செய்யப்படவேண்டும் விண்ணப்பங்களைச் செய்துகொண்டும், ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு அபேக்ஷிதமாயுள்ள மற்றை ஸர்வவித ந்யாய்ய ஸஹாயத்தைச் செய்வித்துக்கொண்டும் எவ்விதமான குறைவுமின்றிக்கே மடத்தின் விஷயங்களை நடத்திவர ஶிஷ்யர்கள் ஸாமர்த்ய முள்ளவர்களாக இருந்தால், அந்த ஶிஷ்யர்களுக்கு வேண்டிய உபபலத்தைக் கொடுப்பதும், இப்பொழுது ராஜஸேவகர்களுக்குக் கொடுப்பதாக உத்தேஶிக்கும் அதிகாரங்களை அந்த ப்ரதிநிதி ஸங்கத்தினருக்குக் கொடுப்பதும், அந்த ப்ரதிநிதி ஸங்கத்தினரை உபாயமாகக்கொண்டு தாம் உத்தேஶிக்கும் சீர்திருத்தங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்வதுமே, ராஜாங்கத்தாரால் நிராக்ஷேபமாக அவலம்பிக்கக்கூடிய உபாயமாகும். அப்படி ஒன்று சேர்வதற்கு வேண்டுவதான ஸாமர்த்யமும் யோக்யதையும் ஸர்வஶிஷ்ய ஸாமாந்யமாக இப்பொழுது காணப்படாத படியால், அந்த ப்ரதிநிதி ஸங்கம் போன்ற ஒரு ஸங்கத்தை அந்தந்த மடத்து ஶிஷ்யர்களுக்குள்ளிருந்து தாமே ஏற்படுத்தி, அவர்களுக்கு உசிதமான அதிகாரங்களைக் கொடுத்து, அவர்களுடைய அபிப்ராயத்தைக் கலந்து ராஜாங்கத்தார் தம்மால் உத்தேஶிக்கப்படும் சீர்திருத்தங்களைச் செய்வதுதான் உசிதமாக இருக்குமென்று தோன்றுகிறது. சீர் திருத்தங்கள் அவஶ்யம் அபேக்ஷிதங்கள் என்பதில் த்வைவித்



யமே யில்லை; அவைகளை ஸாதித்துக்கொள்ளும் மார்க்கத்தைப் பற்றி மாத்திரம் நமக்குக் கொஞ்சம் அதிஶங்கை ஜநித்த படியால் இம்மாதிரி எழுதலானோம்.

∴ ∴ ∴

கர்ம அநுஷ்டாநம்.

சென்ற வைகாசி ஆனி மாஸத்திய ஸஞ்சிகைகளில் கர்ம அநுஷ்டாந ஸம்பந்தமான சில விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் விசாரித்தோம். ஶாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேத ரூபமான கர்மங்களில் கால ஸ்திதியை அநுஸரித்துக் கொஞ்சம் ஸங்க்ரஹம் செய்துகொள்வதால் பகவந் நிக்ரஹம் அவ்வளவாக நேர்ந்துவிடாதென்றும், அப்படி ஸங்க்ரஹித்துச் செய்யப்படும் கர்மங்களிலும் அஶக்தியால் நியம லோபாதிகள் ஸம்பவித்தால் அது விஷயமாக நமக்கு ஹார்த்தமான அநுஶயம் ஜநிக்கும் வரையில் லுப்த நியமாதிகளான நமது கர்மங்களையும் யதா ஶாஸ்த்ரம் அநுஷ்டிக்கப்பட்டனவாகப் பகவான் திருவுள்ளம் பற்றுவனென்றும் நாம் எழுதியிருந்தோம். ஶக்தியிருந்தால், ஸகலமான ஶ்ரௌத ஸ்மார்த்த கர்மங்களையும் அநுஷ்டிப்பதே உத்தமம்; ஶக்தியில்லாவிடில், யதா ஶக்தி அநுஷ்டிப்பது அவ்வளவாகப் பாதகமாகாது: ஹார்த்தமான தைவபக்தியும் பாபபயமும் ஆஜ்ஞாதிலங்கநம் நேரும்பொழுது உண்மையான அநுதாபமும் நம்மைக் காப்பாற்றும் என்பதுதான் அவ்விதமாக எழுதினதன் அபிப்ராயம். இப்பொழுது இந்தக் கர்ம அநுஷ்டாந ஸம்பந்தமாக மற்றும் ஒரு அம்ஶத்தைப் பற்றி விசாரிக்கப்ரயத்நப் படுகிறோம்.

கர்மங்களுடைய ஸரியான அநுஷ்டாநம் மூன்றுவித கரணங்களின் வ்யாபாரத்தையும் அபேக்ஷிக்கிறது என்பது எல்லாரும் ஒத்துக்கொண்ட விஷயம். கேவலம் காயிகமாக யாதொரு கர்மமும் அநுஷ்டிக்கப்படுவதில்லை; மநஸ்ஸின் ப்ரவ்ருத்தி இருப்பதுடன் வாசிகமாகவும் அந்தந்தக் கர்மத்திற்கு அநுகுணமாகச் சில சில உச்சாரணங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதியை நாம் கொஞ்சம் ஆலோசித்துப் பார்த்தால், மநஸ்ஸின் வ்யாபாரமே முக்யமென்றும், அந்த மநோ வ்யாபாரத்தை த்ருடப்படுத்தும் பொருட்டே வாக்கினால் சில உச்சாரணங்களும் காயத்தினால் சில தந்த்ரங்களும் விஹிதங்களாக இருக்கின்றனவென்றும் நன்றாக விளங்கும். இப்படிக் கரணத்ரயங்களுக்கு

ஒரு விதமான தாரதம்யம் தோன்றினாலும், அந்தத் தாரதம்யத்தை அவலம்பித்து அமுக்யமான வாசிக காயிக வ்யாபாரங்களை விட்டுவிடவாவது, அவைகளில் ஒரு விதமான குறைவை ஸம்பாதித்துக்கொள்ளவாவது ஶாஸ்த்ரம் அவகாஶம் கொடுக்கவில்லை. வஸ்து ஸ்திதி இவ்விதமாக இருக்கையில், தைவ பக்தியுள்ள ஸாத்விகர்களும் சில கர்மங்கள் விஷயமாக முக்யமாயுள்ள மனோ வ்யாபாரத்தை ஆத்யந்திகமாக த்யஜித்துவிட்டுக் கேவலம் பாஹ்ய தந்த்ரங்களைமாத்திரம் அநுஷ்டித்து அதனால் த்ருப்தர்களாகி விடுகிறார்களே! வாக்கினால் உச்சரிக்கப்படும் ஶப்தங்களுடைய அர்த்தஜ்ஞானத்தை அவஶ்யம் அபேக்ஷிதமாக அவர்கள் க்ரஹிக்கவில்லையே! வாக்கினால் உச்சரிக்கப்படும் ஶப்தங்களுக்கு அநுகுணமான மனோ வ்யாபாரம் அவைகளின் அர்த்த ஜ்ஞானமின்றிக்கே எப்படி ஸம்பவிக்கும்? இப்படி மனோ வ்யாபாரத்தை இழந்திருக்கும் கர்ம அநுஷ்டானம் பூர்ண அநுஷ்டானம் ஆகுமா? என்பதை இப்பொழுது விசாரிப்போம்.

வேதாத்யயன விஷயமாக ஶ்ருதியிலேயே ஒரு வாக்யத்தைக் காண்கிறோம்:

“ஸ்தாணுரயம் பாரஹார꞉ கிலாபூத்
அதீத்ய வேதம் ந விஜானாதி யோ(அ)ர்தம் ।
யோ(அ)ர்தஜ்ஞ இத் ஸகலம் பத்ரமஶ்னுதே
ஸ நாகமேதி ஜ்ஞானவிதூதபாப்மா ॥”

அதாவது - ஒருவன் வேதங்களைக் கேவலம் அக்ஷராபிக்ரஹண மாத்ரமாக அத்யயனம் செய்து அவைகளின் அர்த்தத்தை அறியாமலே இருந்தால், அவனுக்கு அந்த வேதங்கள் பெரியதொரு சுமையாக இருக்கின்றனவே தவிர எவ்வித ஆநுகூல்யத்தின் பொருட்டும் ஆகா: அத்யயனம் செய்யப்பட்ட வேதங்களுடைய அர்த்தத்தை விசாரித்து அதைத் தெளிய அறிந்துகொள்ளுகிறவனே ஸகல விதமான ஶ்ரேயஸ்ஸையும் அடைகிறான், அர்த்த விசாரம்செய்து ஜ்ஞானம் ஸம்பாதித்தாலன்றோ பாபநாஶம் என்பது ஸம்பவிக்கும்?

கூர்ம புராணத்தில் பின் வருமாறு வாக்யங்கள் காணப்படுகின்றன:—

“ந வேதபாடமாத்ரேண ஸந்துஷ்டோ வை பவேத் த்விஜ꞉ ।
பாடமாத்ராவஸன்னஸ்து பங்கே கௌரிவ ஸீததி ॥



யோ(அ)தீத்ய விதிவத் வேதம் வேதார்தம் ந விசாரயேத் ।
ஸ ஸான்வய꞉ ஶூத்ரகல்ப꞉ பாத்ரதாம் ந ப்ரபத்யதே ॥”

அதாவது - கேவலம் வேதத்தைப் படிப்பதனால் மாத்ரம் ப்ராஹ்மணன் த்ருப்தியடையக் கூடாது; அப்படி கேவல பாட மாத்ரத்தால் த்ருப்தியடைந்தால், சேற்றில் அகப்பட்டுக்கொண்ட மாடுபோல அமிழ்ந்து விடுவானே தவிரக் கரையேறுவது ஸாத்யமாகாது. தவிரவும், அவனுக்கு ப்ராஹ்மண்யமே விலகிவிடும்; தனது ஸந்ததியாருள்பட ஶூத்ர ஸாம்யத்தை அடைந்து எவ்வித க்ரியைக்கும் அநர்ஹனாகி விடுகிறான்.

தக்ஷமஹர்ஷி யென்பவர், வேதாப்யாஸத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து வருகையில் ‘வேதாப்யாஸம் ஐந்து வகைப்படும்’ என்று பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

“வேதஸ்வீகரணம் பூர்வம் விசாரோ(அ)ப்யஸனம் ஜப꞉ ।
தத்தானம் சைவ ஶிஷ்யேப்யோ வேதாப்யாஸோ ஹி பஞ்சதா ॥”

அதாவது - முதலில் வேத படனம், பிறகு அதன் அர்த்தவிசாரம், அதை ஆவ்ருத்திசெய்தல், ஜபித்தல், தான் அப்யஸித்ததை ஶிஷ்யர்களுக்கு உபதேஶம் செய்தல் ஆக இந்த ஐந்தும் அடங்கியது, வேதாப்யாஸம் என்னும் ஶப்தம். இப்படியெல்லாம் ஶ்ருதியும், ஶ்ருதியின் அபிப்ராயமறிந்த மஹர்ஷிகளும், கேவல வேத படனத்திற்கு அவ்வளவாகப் பலமில்லையென்றும், படித்த வேதத்தின் அர்த்தத்தை விசாரித்து அதனால் ஜ்ஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டாலொழியப் பாபநாஶம் உண்டாகாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது யுக்திக்கும் ஒத்ததே. பஶு பக்ஷி முதலியவைகளுக்கும் மநுஷ்ய ஜந்மம் எடுத்திருக்கும் நமக்கும் ஜ்ஞானம் என்பது தான் முக்யமாக விஶேஷத்தைக் கல்பிக்கிறது. அந்த ஜ்ஞானத்தை அவலம்பியாமல் கேவலம் தேஹபுஷ்டியால் ஸாதிக்கக்கூடிய வாசிக காயிக தந்த்ரங்களை அவலம்பித்து அதனால் பகவன் முகோல்லாஸத்தை ப்ரதீக்ஷிப்பது மூடர்களுடைய கார்யமேயாகும். சில மதங்களில், உத்தாரகமான மந்த்ரங்களைப் பலகையில் எழுதி அந்தப் பலகையை ஒரு யந்த்ரத்தில் ஏற்றி அப்பலகை சுழலும்படி சுற்றிவருவது ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கின்றது என்று எண்ணி அம்மாதிரி அநுஷ்டானம் நடந்துகொண்டு வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். யதார்த்தமா

கவே இம்மாதிரி அநுஷ்டாநம் வேதத்தின் கேவல வாசிக பட்டநத்தைப்பார்க்கிலும் எவ்வகையில் தாழ்ந்தது என்று நமக்குத் தெரியவில்லை.

இப்படி வேதாப்யாஸ விஷயத்திலேயே அர்த்த ஜ்ஞாநம் ப்ரதாநமென்று எல்லாரும் ஒத்துக் கொண்டால், அந்த வேதங்களிலிருந்து எடுக்கப்பட்ட மந்த்ரங்களுடையவும் ருக்குக்களுடையவும் உச்சாரணாதிகளை அபேக்ஷிக்கும் கர்ம அநுஷ்டாநம் அவச்யம் அர்த்தஜ்ஞாநத்தை அபேக்ஷிக்கிறதென்று ஒத்துக் கொள்ள என்ன ஆக்ஷேபமிருக்கக் கூடும்? அப்படிப்பட்ட அர்த்தஜ்ஞாநமில்லாமலும், அந்த ஜ்ஞாநத்தால் உண்டாகக்கூடிய சித்த ஐகாக்ர்யமில்லாமலும் கர்ம அநுஷ்டாநம் செய்வது ஸுசிரம் ஊஷர பூமியில் வர்ஷிப்பதற்குத் துல்யமாகுமென்பது நம்முடைய த்ருடமான அபிப்ராயம். நம்மால் இப்பொழுது அநுஷ்டிக்கப்பட்டுவரும் கர்மங்களுள் பல கர்மங்கள் கேவல தந்த்ர ரூபமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஸந்த்யா வர்தநாதிகளை அநுஷ்டிக்கும் காலங்களில் சித்த வ்ருத்தியின்றிக்கே கேவல வாசிக காயிக வ்யாபாரம் மாத்ரம் நடந்து வருகின்றது என்றும், ஒரு பாபத்தின் ப்ராயச்சித்தார்த்தமாக க்ருச்ராதிகளை அநுஷ்டிக்கும் காலத்தில் ஸர்வதா அபேக்ஷிதமாயுள்ள அநுதாப ரூபமான மநோ வ்யாபாரமின்றிக்கே கேவல பாஹ்ய வ்யாபாரமான அர்த்த தாநம் மாத்ரம் நடந்து வருகிறது என்றும், அத்ருஷ்டாநுஷ்டாநமென்று வ்யவஹரிக்கப்படும் ஆத்யந்திக ச்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கக்கூடுமான பர ஸமர்ப்பண காலங்களிலும் அதற்கு முக்யாங்கமாக அபேக்ஷிதமாயுள்ள ஆர்த்தி ரூபமான மநோ வ்யாபாரமின்றிக்கே விசேஷித்த அந்நாதிகளுடைய நிவேதநமும் அது போன்ற மற்றும் சில பாஹ்ய வ்யாபாரமும் மாத்ரம் நடந்து வருகின்றன என்றும் நாம் ப்ரதிதிநம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட அநுஷ்டாநத்தையா ச்ருதிகளும் மஹர்ஷிகளும் விதித்திருக்கிறார்கள்? இந்த அநுஷ்டாநத்தைச் சீர்திருத்தி, மநோ வ்யாபாரத்திற்குத் தகுந்த ப்ராதாந்யத்தைக் கொடுக்காத வரையில் நம்முடைய அநுஷ்டாநங்கள் இதரர்களுடைய பரிஹாஸத்திற்கு ஆஸ்பதமாகும் என்பதில் ஸந்தேஹமேயில்லை; அந்த அநுஷ்டாநத்தின் பரம லாபமாக நம்மால் உத்தேசிக்கப்படும் பகவந் முகோல்லாஸமும் நமக்குக் கிடைக்காது.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# விசிஷ்டாத்வைதம்.

## 11. ஜீவ தத்வம்: ஜீவனுடைய நித்யத்வம்.

விசிஷ்டாத்வைதிகளுடைய ப்ரக்ரியையின்படி சித், அசித், ஈச்வரன் என்று மூன்று தத்வங்கள் உண்டு என்றும், இவைகளில் 'அசித்' என்று சொல்லப்படும் அசேதந வஸ்துவைக்காட்டிலும் 'சித்' என்று சொல்லப்படும் சேதந வஸ்து ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் அத்யந்த விலக்ஷணமென்றும், அந்தச் சேதந வஸ்துவைக்காட்டிலும் 'ஈச்வரன்' என்று சொல்லப்படும் பரமாத்ம வஸ்து அத்யந்த விலக்ஷணமென்றும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இந்தத் தத்வ த்ரயத்தில் முக்யதத்வமாயுள்ள ஈச்வர தத்வத்தைப்பற்றி அநேக விஷயங்களை இது வரையில் விசாரித்துவந்தோம். இப்பொழுது 'சித்' தத்வத்தைப் பற்றிக் கொஞ்சம் விசாரிக்கலாம் என்பது நம்முடைய ப்ரவ்ருத்தி.

இந்த 'சித்' என்னும் தத்வத்தைத்தான் 'ஜீவன்' என்றும், 'ப்ரத்யகாத்மா' என்றும் வேதாந்திகள் வ்யவஹரிக்கிறார்கள். 'இது உத்பந்நமான வஸ்துவன்று, நித்யமாக இருக்கின்றது' என்பது நமது கொள்கை. இந்தக் கொள்கைக்குள்ள ச்ருத்யாதாரத்தை முதலில் கொஞ்சம் விசாரிப்போம்.

கடோபநிஷத்தில் இரண்டாவது வல்லியில்,

"ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந்
நாயம் குதஶ்சிந்ந பபூவ கஶ்சித் |

அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥
ஹந்தா சேந்மந்யதே ஹந்தும் ஹதஶ்சேந்மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥"

என்கிற வாக்யங்கள் காணப்படுகின்றன. இவைகளின் ஸந்தர்ப்பமாவது - ஒரு காலத்தில் ம்ருத்யுவுக்கு நசிகேதஸ் என்னும் ரிஷிபுத்ர னொருவன் ஶிஷ்யனாக வரும்படி ஸம்பவித்தது. அந்த நசிகேதஸ்ஸை, ஆசார்யனாகிற ம்ருத்யு, பலவாறாகப் பரீக்ஷித்துப் பார்த்து, அவனுக்கு மோக்ஷேச்சை ஸ்திரமாக இருக்கிறது என்பதை நிஸ்சயமாகத் தெரிந்துகொண்டு, அவனை உபதேஶ யோக்யனென்று எண்ணி "தம் துர்தர்ஶம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் - அத்யாத்மயோகாதிகமேந தேவம் மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி" என்று ப்ராப்யமான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், அதை அடைவிக்கும்படியான உபாயத்தின் ஸ்வரூபம், அடைகிறவனாகிற ஜீவனுடைய ஸ்வரூபம் ஆக இம்மூன்று ஸ்வரூபங்களு மடங்கியதான ஒரு வாக்யத்தைச் சொல்லி அவனுக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேஶம் செய்தார். இந்த வாக்யத்தில் அடங்கியுள்ள விஷயங்களை இன்னும் நன்றாக ஶோதிக்கும்பொருட்டு, நசிகேதஸ், மறுபடியும் சில ப்ரஶ்நங்களைச் செய்ய, ம்ருத்யு, சில வாக்யங்களால் ப்ராப்யமாகிற ப்ரஹ்மத்தினுடைய வைபவத்தை ப்ரகாஶித்துவிட்டு, ப்ரக்ருதமாகிய "ந ஜாயதே ம்ரியதே" இத்யாதியான வாக்யங்களால் ப்ரத்யகாத்மாவாகிற ஜீவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார். வாக்யார்த்தமாவது:— ஜ்ஞாந ஸ்வரூபமாயுள்ள இந்த ஜீவன் பிறப்பு இறப்பு அற்றவன். கல்பாதிகளிலும் இவனுக்கு ஓரிடத்திலிருந்து உத்பத்தி என்பது இல்லை; கல்பாந்தங்களிலும் இவனுக்கு நாஶமில்லை. ஆகையினால், இவனை 'அஜன்' 'நித்யன்' 'ஶாஸ்வதன்' 'புராணன்' என்று தத்வமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஶரீரம் நஶிக்கும் காலத்தில் இவனுக்கு நாஶமில்லை. இவனைக் கொல்வது என்பதே ஸாத்யமில்லாத கார்யம். இவனுக்கு நாஶமுண்டு என்று நினைக்கிறவன் அறியாதவன்.



விபஶ்சித் - 'விபஸ்சித்' என்று சொல்லப்படுமவனுடைய தன்மைக்கு அர்ஹனாயிருக்கிற இந்த ஆத்மா; அதாவது - ஜ்ஞாத்ருத்வம் பொருந்தினவன். தேஹம் முதலிய அசேதந வஸ்துக்களைக் காட்டிலும் இந்தக் குணத்தால் விலக்ஷணன் என்று தாத்பர்யம். அதனாலே, தேஹம் முதலியவை நஶிப்பது போல நஶிக்கக்கூடாதவன் என்று த்வநிக்கிறது.

ந ஜாயதே ம்ரியதே - பிறக்கிறதுமில்லை, இறக்கிறதுமில்லை. அதாவது - அந்தந்தக் காலங்களில் அந்தந்தத் தேஹங்களில் இருந்துகொண்டிருக்கிறதாக அநுபவிக்கப்பட்டுவரும் ஜநந மரணங்கள், இந்த ஆத்மாவுக்கு ஒரு பொழுதும் நேருகிறதில்லை என்று தாத்பர்யம்.

நாயம் குதஶ்சித் - இந்த ஆத்மா எவனிடமிருந்தும் உண்டாகவில்லை. அதாவது - இவனுக்கு உத்பாதகனென்று ஒருவனும் கிடையாது. கல்பாதிகளில் கூட இவனுக்கு உத்பத்தி யென்பதே இல்லை யென்று தாத்பர்யம். 'ந ஜாயதே' என்பதனால், கல்பத்தின் ஆத்யந்தத்திற்கு உட்பட்ட காலங்களில் உத்பத்தி இல்லையென்று சொல்லப்பட்டது; 'ஒருகால் கல்பத்தின் ஆதியில் ஏதாவது ஒரு விலக்ஷணமான உத்பத்தி இருக்கலாம்' என்கிற ஶங்கை உண்டாகக் கூடுமென்று நினைத்து, 'அப்படிப்பட்ட உத்பத்தியு மில்லை' என்று 'நாயம் குதஶ்சித்' என்கிறதால் சொல்லப்படுகிறது.

கஶ்சித் ந பபூவ - 'ஒரு காலத்தில் மநுஷ்யாதி ரூபத்தோடு இவன் இருந்தான்' என்பது மில்லை. அதாவது - இவனுக்குக் கல்பாந்தத்திலும் மரணமில்லை யென்று தாத்பர்யம். 'ந ம்ரியதே' என்பதனால், கல்பத்தின் மத்யகாலங்களில் மரணமில்லை யென்றும், இந்த வாக்யத்தால் கல்பாந்தத்திலும் மரணமில்லை யென்றும் சொல்லப்படுகிறது. 'ப்ரஹ்மா முதலிய சில

ருடைய தேஹங்களின் விஷயமாகக் கல்பாதியில் ஜநநமும் கல்பாந்தத்தில் மரணமும் உண்டு’ என்று ஆகமத்திலிருந்து நாம் அறிகிறோம்; அப்படிப்பட்ட ஜநந மரணங்களும் ஜீவன் விஷயத்தில் கிடையாது என்பதைச் சொல்வதற்காகவே, ‘நாயம் குதஶ்சிந் நபபூவ கஶ்சித்’ என்கிற வாக்யம் ப்ரவ்ருத்தித்திருக்கிறது. ஆகையால், ‘ந ஜாயதே ம்ரியதே’ என்று பூர்வம் சொல்லியிருக்கையிலும், இந்த வாக்யத்தில் பௌநருக்த்யதோஷமில்லை. இது தான் அர்த்தம் என்பதை ஸூசிப்பிக்கிறதற்காக, இந்த உபநிஷத் வாக்யத்தின் உபப்ருஹ்மணமாகிய ‘ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் நாயம் பூத்வா பவிதா வா ந பூய:’ [பகவத்கீதை அ-2. ஶ்லோ. 20] என்கிற கீதாவாக்யத்தில், ‘நாயம் குதஶ்சிந் ந பபூவ கஶ்சித்’ என்பதற்குப் பதிலாகக் கீழ்க்கூறப்பட்ட அர்த்தமுள்ள ‘நாயம் பூத்வா பவிதா வா ந பூய:’ என்கிற ஶப்தங்களை ஸ்ரீ பகவாந் ப்ரயோகித்திருக்கிறான். அவ்விடத்தில் கீதா பாஷ்யத்திலும் இந்த அர்த்தத்தை விளக்கும் ‘கேஷுசித் ஜாயதிம்ரியதிவ்யபதேஶேஷு ஆத்மநோ ஜந்மம் கல்பாதௌ ஜநநம் கல்பாந்தே ச மரணம் ஶ்ருதாநம் ந ஸம்பவதீத்யர்த:’ என்கிற வாக்யத்தைக் காணலாம்.

‘அஜ:, நித்ய:’ - முற்கூறப்பட்டிருக்கும் காரணங்களாலே இந்த ஆத்மாவை ‘அஜன்’ என்றும், அஜனாக இருக்கிறபடியால் ‘நித்யன்’ என்றும் தத்வமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். பூர்வோக்தமான அர்த்தத்தை ஒன்று சேர்த்து நிகமநம் செய்கிறது, இந்த வாக்யம்.

‘ஶாஶ்வத:’ - மாறுதலற்றவன். ஸ்ருஷ்ட்யவஸ்தையில் உண்டாகும் பிறப்பு இறப்பு ரூபமான ஸ்தூலமான மாறுதல்கள் ஜீவன்களுக்கு இல்லை என்பது, ‘ந ஜாயதே ம்ரியதே’ என்னும் வாக்யத்தாற் சொல்லப்பட்டது. ப்ரளயம் முதலிய அவஸ்தை



களில் ஸூக்ஷ்மமும் ஸர்வகாலிகமுமான ஒரு மாறுதல் ப்ரக்ருதி முதலிய அசித் வஸ்துக்களுக்கு உண்டு; அந்த மாதிரியான பரிணாமமும் ஜீவன்களுக்கு இல்லை என்று இந்த ‘ஶாஶ்வதன்’ என்னும் பதம் சொல்லுகிறது.

‘புராண:’ - புராऽபி நவ:. அதாவது - கீழ்ச்சொல்லியிருக்கிறபடி உத்பத்தி யற்றவனாக இருக்கையிலும் புதியவனாக இருக்கிறான் என்று அர்த்தம். உத்பத்தியுள்ள வஸ்துவுக்கே உத்பத்தியானவுடன் புதியது என்கிற ஒரு அவஸ்தை உண்டு; ஜீவன் அநுத்பந்நனாக இருக்கையிலும், புதியது என்கிற அவஸ்தை கொண்டிருக்கிறான் என்று தாத்பர்யம்; எப்பொழுதும் அபூர்வவஸ்துபோல அநுபவிக்கத்தகுந்தவன் என்பது ஹ்ருதயம்.

‘ஶரீரே ஹந்யமாநே ஸதி ந ஹந்யதே’ - ஆகையால், ‘ஶரீரம் நாஶத்தை அடையும்பொழுது ஆத்மாவும் நாஶமடைகின்றது’ என்று சொல்வது பிசகே.

‘ஜீவன் ஜநந மரணங்களற்றவன்’ என்று இவ்விதமாக ப்ரபஞ்சித்துவிட்டு, ‘லோகவ்யவஹாரத்திலும் ஶாஸ்த்ரங்களிலும் “மநுஷ்யம் ஹந்தி” [மநுஷ்யனைக் கொல்லுகிறான்] “ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி” [ஒரு ப்ராணியையும் கொல்லக்கூடாது] இத்யாதியான ப்ரயோகங்கள் காணப்படுகின்றனவே! ஜீவன் கொல்லத்தகாதவனானால் இவைகளுக்கு நிர்வாஹம் எப்படி?’ என்கிற ஆக்ஷேபத்தை ஶங்கித்துக்கொண்டு ‘அந்த ப்ரயோகங்களில் இருக்கும் ஹநநம் [கொல்லுதல்] என்கிற ஶப்தத்திற்கு, ஶரீர வியோக கரணம் [ஶரீரத்தைவிட்டு ஆத்மாவை வெளிப்படுத்துதல்] என்கிற அர்த்தமே தவிர ஆத்மாவைக் கொல்லுகிறது என்கிற அர்த்தமில்லை; அப்படி அர்த்தம் சொல்வது உபபந்நமாகாது; ஏனென்றால், ஆத்மா கொல்லத்தகாத வஸ்து’ என்பதைச் சொல்ல அடுத்தவாக்யத்தில் ஶ்ருதி ப்ரவ்ருத்திக்கின்றது.

ஹந்தா ஹந்தும் மந்யதே சேத் - 'இந்த ஜீவனை நான் கொல்ல ப்ரவ்ருத்திக்கிறேன்' என்று எண்ணுகிறவனும், ஹத꞉ ஹதம் மந்யதே சேத் - 'இந்த ஜீவன் கொல்லப்பட்டுப் போய் விட்டான்' என்று எண்ணுகிறவனும், தாவுபௌ ந விஜாநீத꞉- இவர்கள் இருவரும் தத்வத்தின் உண்மையை அறிந்தவர்களல்லர்; நாயம் ஹந்தி - இவன் கொல்லவுமில்லை, நாயம் ஹந்யதே - இவன் கொல்லப்படவுமில்லை என்று வாக்யார்த்தம். இப்படிச் சொல்வதன் தாத்பர்யமாவது - ஜீவன் கொல்லத்தகாதவன்; கொல்லத்தகாதவனாதலால், 'அவனைக் கொல்லுகிறேன்' என்று நினைப்பதும் பிசகு; 'அவன் கொல்லப்பட்டான்' என்று நினைப்பதும் பிசகு என்பதுதான். ஆபாதத꞉ பார்க்கும்பொழுது, 'ஹந்தா சேந் மந்யதே ஹந்தும்', 'நாயம் ஹந்தி' என்கிற வாக்யங்களால், ஆத்மா கொல்லுகிறவனன்று என்று ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் நிஷேதிக்கப்படுவதுபோலத் தோன்றும். அது அர்த்தமன்று. ஶஸ்த்ரம் முதலிய பதார்த்தங்கள் ஆத்மாவைக் கொல்ல ஶக்தியற்றவை போல, ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவைக் கொல்ல ஶக்தியற்றது; அதாவது - ஆத்மா கொல்லத்தகாதது என்றுதான் அர்த்தம். இதுதான் அர்த்தமென்பதற்குப் பின்வரும் ஸ்ரீ பாஷ்ய வாக்யம் ப்ரமாணம்:- "யதுக்தம் 'ஹந்தா சேந் மந்யதே ஹந்தும்' இத்யாதிநா, ஹநந க்ரியாயா꞉ கர்த்ருத்வம் ஆத்மந꞉ ப்ரதிஷித்யத இதி; ததாத்மநோ நித்யத்வேந ஹந்தவ்யத்வாஸம்பவாதுச்யதே" [2 - 3 - 33.]

இந்த வாக்யத்திற்கு உபப்ருஹ்மண ரூபமாக, ஸ்ரீ பகவத் கீதையில் "ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம் - உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே" என்கிற வாக்யத்தைக் காண்கிறோம். அதற்கும் இதுவே அர்த்தம். ஶ்ருதியில் ஒரு ஆத்மாவின் ஹநநத்தைக் குறித்து மற்றொரு ஆத்மா ஹேதுவன்று என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டிருக்கிறது; கீதையிலோ, ஒரு ஆத்மாவின் ஹநநத்தைக் குறித்து மற்ற எந்தப் பதார்த்தமும் ஹேதுவாகாது என்று ஸாமாந்யமாகச் சொல்லியிருக்கிறது என்பது தான் விஶேஷம். 'ய ஏநம் வேத்தி ஹந்தாரம்' என்பதற்கு 'ஏநமாத்மாநம் ப்ரதி ஹநநாதி ஹேதுத்வேந கஞ்சிதபி யோ ஹந்தாரம் மந்யதே' என்பது அர்த்தமென்பதை ஸ்ரீ கீதா பாஷ்யத்திற் காணலாம்.



இவ்விதமாக ஜீவனுடைய நித்யத்வத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டு, ஶ்ருதி, மறுபடியும் இந்தக் கடோபநிஷத்திலேயே ஐந்தாவது வல்லியில் ஜீவனுடைய நித்யத்வத்தை அப்யுபகமம் செய்துகொண்டு மற்றொரு வாக்யத்தைச் சொல்லுகின்றது. அதாவது - "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்". இதன் ஸந்தர்ப்பமாவது - "ஹந்த த இதம் ப்ரவக்ஷ்யாமி குஹ்யம் ப்ரஹ்ம ஸநாதநம்" என்று அதிரஹஸ்யமான ஸநாதந ப்ரஹ்மத்தை மறுபடியும் தமது ஶிஷ்யனுக்குத் தெளிய உபதேஶம் செய்ய ஆரம்பித்து, ம்ருத்யு, பல வாக்யங்களால் பரமாத்ம ஸ்வரூபத்தைப் பலவாறாக ப்ரபஞ்சித்து வருகையில், 'சேதநர்கள் எல்லாருக்கும் ஸகல விதமான அபேக்ஷிதார்த்தங்களையும் கொடுக்கிறவன் ஈஸ்வரனே' என்று இந்த வாக்யத்தாற் சொல்லுகிறார். "நித்யஶ்சேதந ஏக ஏவ ஸந் நித்யாநாம் பஹூநாம் சேதநாநாம் காமாந் விததாதி" [நித்யனாக இருக்கிற ஈஸ்வரன் ஒருவனாகவே நித்யர்களாக இருக்கும் கணக்கற்ற சேதநர்களுக்குக் காமங்களைக் கொடுக்கிறான்] என்று இந்த வாக்யத்தில் ஈஸ்வரனையும் நித்யனென்றும் மற்றைச் சேதநர்களையும் நித்யரென்றும் சொல்லியிருக்கிறபடியால், ஈஸ்வரனைப்போல ஜீவன்களும் நித்யர்களென்பது ஶ்ருதியின் அபிப்ராயமென்று நாம் அறிகிறோம்.

இந்த மாதிரியாகவே ஸ்வேதாஸ்வதரோபநிஷத்தும், "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜௌ" என்று ஈஸ்வரன் ஜீவன் என்னும் இரண்டு வஸ்துவையும் நித்யர்களாகவே சொல்லுகிறது. இன்னும் இது போன்ற அநேக ஸ்ருதி வாக்யங்கள் இவ்விதமாகவே சொல்லுகிறபடியால், ஜீவனை நித்யனென்றே நாம் அறியவேணும்.

'இப்படி ஜீவனை நித்யனென்று நாம் ஒத்துக்கொண்டால், ஜீவன்களுக்கு ஸ்ருஷ்டியைச் சொல்லும் ஸ்ருதி வாக்யங்களுக்கு நிர்வாஹம் எப்படி?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். இதற்கு ஸமாதாநத்தைப் பின்வருமாறு ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள். ஒரு த்ரவ்யம், பூர்வம் இருக்கும் அவஸ்தையை இழந்து மற்றொரு அவஸ்தையை அடைந்தால், அந்த த்ரவ்யத்தை, கார்யமான வஸ்து [அதாவது - செய்யப்படும் பொருள்] என்று நாம் அறிகிறோம். அப்படிப்பட்ட செய்யப்படும் பொருளாக இருக்குந் தன்மை ஜீவனுக்கு உண்டு; அதாவது - அசேதந வஸ்துக்கள் அவஸ்தாந்தரத்தை அடைவது போலவே ஜீவனும் ஒரு அவஸ்தாந்தரத்தை அடைகிறான். ஆனால், இந்த அவஸ்தாந்தராபத்தியானது ஜீவனுடைய ஜ்ஞாநத்தைப் பற்றியதே தவிர ஸ்வரூபத்தைப் பற்றியது அன்று. ஜீவன் தான் செய்திருக்கும் கர்மத்திற்கு அநுகுணமாகச் சில காலங்களில் ஜ்ஞாநத்திற்கு ஒரு விகாஸத்தையும், மற்றும் சில காலங்களில் ஜ்ஞாநத்திற்கு ஒரு ஸங்கோசத்தையும் அடைகிறானே தவிர அசேதந வஸ்துவுக்கு ஸம்பவிப்பதுபோல ஸ்வரூப அந்யதாபாவம் ஜீவனுக்கு ஒருகாலும் நேராது. இப்படிப்பட்ட ஸ்வரூப அந்யதா பாவம் இல்லை என்பது தான் இங்கு ப்ரயோகஞ் செய்யப்பட்டிருக்கும் 'நித்ய' ஶப்தத்தின் அர்த்தம்.

"யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம்",



"ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத",

"ஸந்மூலா ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:",

"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே ||"

இத்யாதியான வாக்யங்கள் சேதநர்களுடன் கூடிய ஜகத்துக்கு உத்பத்தியைச் சொல்லுகிறபடியால், 'ஜீவனுக்கும் ஸ்வரூப அந்யதா பாவ ரூபமான உத்பத்தி உண்டு' என்று ஶங்கிக்கக்கூடுமானாலும், இப்படி ஜீவனுக்கு உத்பத்தியைச் சொல்லும் வாக்யங்களெல்லாம், ஜ்ஞாநத்தின் ஸங்கோச விகாஸங்களைச் செய்யக்கூடிய அந்தந்தத் தேஹ ஸம்பந்தம் தேஹவியோகம் இவைகளைக் காட்டுகின்றனவே தவிர, ஸ்வரூப அந்யதா பாவ ரூபமான உத்பத்தி விநாஶங்களைக் குறிக்கவில்லை என்று ஸ்ரீ பாஷ்யகாரர் நிர்வஹித்திருக்கிறார். "கர்மக்ருத ஜ்ஞாந ஸங்கோச விகாஸகர தத்தேஹ ஸம்பந்த வியோகாபிப்ராயா: ஜீவஸ்யோத்பத்தி மரண வாதிந்ய: ஶ்ருதய:; அசித்வஸ்துவத் ஸ்வரூபாந்யதாபாவாபிப்ராயா உத்பத்தி ப்ரதிஷேத வாதிந்யோ நித்யத்வவாதிந்யஶ்ச ஶ்ருதய:" [2 - 3 - 18.]

இப்படிப்பட்ட உத்பத்தியுள்ளவனன்று ஜீவன் என்றுஶ்ருதி போதிப்பதாக நாம் அர்த்தம் கொண்டால்,

"யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத், வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் ...... ஏவம் ஸோம்ய ஸ ஆதேஶோ பவதி" [மண்ணினுற் செய்யப்படுவன குடம்முதலியவை. இவைகளில் மண்ணை உபாதாநம் என்றும், குடம் முதலியவற்றை உபாதேயம் என்றும் சொல்வது உண்டு. உபாதாநமாக இருக்கும் மண்ணை அறிந்து கொண்டால், அந்த மண்ணின் உபாதேயமாகும் குடம் முதலியவை அறியப்படுகின்றன; குடம்போன்ற ரூபமும் குடம் என்னும் பெயரும் நாம் வ்யவஹரிக்கும்பொ

ருட்டு ஏற்படுகின்றனவே தவிர, அந்த மண், குடமாக மாறும் பொழுது வேறு பதார்த்தமாக மாறிவிட வில்லை; குடமும் மண்ணே; அதுபோலவே, சேதநனுடன் கூடிய ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்தின் உபாதேயமானதால் உபாதாநமாகிற ப்ரஹ்மத்தை அறிந்து கொண்டால் உபாதேயமாகிற ப்ரபஞ்சம் அறிந்துவிட்டபடியாகிறது. வ்யவஹாரார்த்தம் ப்ரபஞ்சம் என்று நாம் சொல்லுகிறோமே தவிர, உண்மையில் ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தை விட வேறு பதார்த்தமன்று என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம்.] என்கிற சாந்தோக்ய உபநிஷத்தின் வாக்யத்திற் சொல்லப்படும் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்கு முள்ள அபேதம் எவ்விதமாக உபபந்நமாகும்? என்று கேட்கலாம். ஜீவனுக்கு ஸ்வரூப அந்யதா பாவத்தை ஒத்துக்கொள்ளாம லிருந்தாலும், கீழ்ச்சொல்லியிருக்கிறபடி ஜ்ஞாந ஸங்கோசம் ஜ்ஞாந விகாஸம் ஆகிய ஒரு அந்யதா பாவத்தை ஒத்துக்கொண்டு, அதுவழியாக ‘அசேதந வஸ்துவுக்குப்போல ஜீவனுக்கும் ஒருவிதமான கார்யத்வமுண்டு’ என்று நாம் சொல்லுகிறபடியால், கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் ஶ்ருதி நமது கொள்கைக்கு எவ்விதத்திலும் விருத்தமாகாது.

நமது ஸித்தாந்தத்தை நாம் பின்வருமாறு அறியவேணும். போக்யம் என்னப்படும் அசேதந வஸ்து, போக்தா என்னப்படும் சேதநன், நியந்தா என்னப்படும் ஈஶ்வரன் ஆகிய இம்மூன்று தத்வங்களும் வேறுவேறு ஸ்வபாவங்களை உடையவை. போக்ய வஸ்துவினிடத்தில் இருக்கும் ஸ்வரூப அந்யதா பாவ ரூபமான உத்பத்தி முதலியவை போக்தாவினிடத்தில் இல்லை; போக்தாவினிடத்தில் இருக்கும் கர்மாநுகுணமாக உண்டாகும் ஜ்ஞாநஸங்கோச விகாஸ ரூபமான அந்யதா பாவம் நியந்தாவாகிற ஈஶ்வரனிடத்தில் இல்லை. இப்படி எவ்விதமான அந்யதா பாவமு மின்றிக்கே இருக்கும் ப்ரஹ்மத்துக்குச் சேதந அசேதந வஸ்துக்களடங்கிய ப்ரபஞ்சம் முழுவதும் எப்பொழுதும் ஶரீரம்; ப்ரஹ்மம் ஸர்வ காலத்திலும் ப்ரபஞ்சத்திற்கு ஶரீரீ, அதாவது - ஆத்மாவாக இருக்கிறது. ஶரீரமாக இருக்கும் இந்த ப்ரபஞ்சத்திற்குச் சில காலங்களில் ப்ரஹ்மத்தை விட்டு வேறுபட்டதாக வ்யபதேஶிக்கக்கூடாம லிருக்கும் ஸூக்ஷ்மாவஸ்தை யென்று ஒரு அவஸ்தை உண்டு. அந்தக் காலங்களில் அசேதந வஸ்துக்கள் எல்லாவற்றிற்கும் இப்பொழுது நம்மால் ப்ரத்யக்ஷீ கரிக்கப்படும் குணங்கள் யாதொன்று மில்லை; சேதந பாகத்திற்கு ஜ்ஞாநத்தின் ஸங்கோச விகாஸாதிக ளில்லை. மற்றும் சிலகாலங்களில் விபக்தமாயுள்ள நாம ரூபங்களையுடைய ஸ்தூலாவஸ்தை யென்று ஒரு அவஸ்தை உண்டு; அந்தக் காலங்களில்தான் அசேதந பதார்த்தங்களுக்கு ஸ்வரூப அந்யதா பாவத்துடன் ஸகல குணங்களும் உண்டாகின்றன; சேதந பதார்த்தங்களுக்கு அதனதன் கர்மங்களுக்கு அநுகுணமாக ஜ்ஞாந ஸங்கோச விகாஸங்கள் மாத்ரம் உண்டாகின்றன. இந்த இரண்டு அவஸ்தையிலும் ப்ரஹ்மம் ஸகல ப்ரபஞ்சத்திற்கும் ஶரீரியாக இருந்துகொண்டு அதனுடன் விஶிஷ்டமாகவே இருக்கிறபடியால், காரணாவஸ்தையிலிருக்கும் உபாதாநமாகிற ப்ரஹ்மத்திற்கும் கார்யாவஸ்தையிலிருக்கும் உபாதேயமாகிற ப்ரஹ்மத்திற்கும் ஶ்ருதியாற் சொல்லப்படும் அபேதம் உபபந்நமாகிறது; ‘ப்ரஹ்மத்தை அறிந்தால் ஸகலத்தையும் அறிந்ததாகிவிடும்’ என்னும் ஶ்ருதி செய்யும் ப்ரதிஜ்ஞையும் உபபந்நமாகிறது. ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து ஸ்தூலாவஸ்தையில் சேதந அசேதநங்கள் மாறுவதற்குக் காரணம், ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஆத்மாவாக இருக்கும் ப்ரஹ்மத்தின் ஸங்கல்பமே. இப்படி ஸங்கல்பித்து ப்ரஹ்மம் ப்ரபஞ்சத்தின் அவஸ்தையை மாற்றுவதைத்தான் நாம் ஸ்ருஷ்டியென்று வ்யவஹரிக்கிறோமே தவிர, இதற்கு முன்னமே இல்லாமலிருந்த ஒரு ஜீவனை இப்பொழுது ஈஶ்வரன் உண்டு பண்ணி விடுகிறான் என்கிற அர்த்தத்தில் நாம் ஸ்ருஷ்டி ஶப்தத்தை ப்ரயோகிக்க வில்லை என்பது தான், நமது ஸித்தாந்தம். ஆகையால், ஜீவன் நித்யனென்பதே ஶ்ருதியின் தாத்பர்யம் என்று நாம் அங்கீகரிப்பது ஸமஞ்ஜஸம்தான்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமதே பாஷ்யகாராய நம:.

# வேதாந்தார்த்த ஸங்க்ரஹம்.

ஶ்ருதயோ யத்ர விஶ்ராந்தா நிராபாயா: பராவரே ।
ஸர்வஶக்திஸமாராத்யம் ஶக்தயே தம் பஜே ஹரிம் ।
பாதராயணஸூத்ராணாம் ஶ்ரீபாஷ்யாத்யநுஸாரத: ।
ஸுபோதஸ்யைவகாராய பாஷாவ்ருத்திர் விரச்யதே ।
ஆசார்யகரணாயீயம் ஶிதஜ்ஞஸ்ய ஶரீரிண: ।
ஶிஷ்யாணாம் பஹுவ்ரஜ்ஞாநாம் ஸதஸத்வ்ருத்திஹேதவே ॥

ஸகல வேதாந்தங்களும் பகவானை ஸ்ரீமந்நாராயணனையே ப்ரதிபாதிக்கின்றன வென்பது, விஶிஷ்டாத்வைதத்தின் அபிப்ராயம். இந்த மதத்தின் மூலக்ரந்தங்களான ஸ்ரீ பாஷ்யம் தீபம் ஸாரம் முதலான ஆசார்ய ஸூக்திகளை அநுஸரித்து யதாமதி வேதாந்த ஸூத்ரங்களுக்கு ஒரு தமிழ் வ்ருத்தி எழுதப்படுகிறது.

பகவான் பாதராயணர் என்னும் வேதவ்யாஸர், வேதங்களின் உத்தரபாகங்களாகிய உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தை நிர்ணயிக்கக் கருதி அருளிச்செய்கிறார்:—

அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா ॥

இனி, அதே காரணத்தால், ப்ரஹ்மத்தை அறிய வேண்டும்.

(முதல் அத்யாயம், முதல் பாதம், முதல் ஸூத்ரம்.)

இனி - அங்கங்களுடனும் உபநிஷத்துக்களுடனும் எல்லா வேதங்களையும் அத்யயநம் செய்து கர்மங்களின் ஸ்வரூபங்களையும் ஸ்வபாவங்களையும் அறிந்த பிறகு. அதே காரணத்தால் -



கேவல கர்மங்களின் பலங்கள் அநித்யங்களென்றும், ப்ரஹ்ம ஜ்ஞாநத்தால் முடிவில் பேரின்பம் ஸித்திக்குமென்றும் ஸ்தூலமாக அறிந்ததனால். ப்ரஹ்மத்தை அறியவேண்டும் - அநந்த ஸ்திர பலத்தைக் கொடுக்கவல்ல ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கது.

இந்த ஸூத்ரத்துக்கு விஷயவாக்யம்:—“பரீக்ஷ்ய லோகாந்” என்று தொடங்கி “ப்ரஹ்மவித்யாம்” என்று முடிகிற (முண்டகோபநிஷத் 1. 2. 12 - 13) வாக்யம். இதன் பொருள்—‘வேதம் பயின்றவன் கர்மங்களால் பெறக்கூடிய க்ஷய ஸ்வபாவமான ஸ்தாநங்களைப் பூர்வமீமாம்ஸை யென்னும் கர்மகாண்டத்தாலறிந்து, நித்ய புருஷார்த்தமாகிய மோக்ஷம் கேவல கர்மங்களால் ஸித்தியாதென்கிற நிஶ்சயத்தால் ஒழிவு பிறந்து, ப்ரஹ்மஜ்ஞாநம் ஸம்பாதிக்க, வேதாந்தவித்தாய் ப்ரஹ்மத்யாநம் செய்யும் வல்லமையுள்ள ஓர் ஆசார்யனை வணக்கத்துடன் அணுகவேணும்; அவர் இவனுடைய ஶ்ரத்தை முதலான குணங்களைப் பரீக்ஷைசெய்து அக்ஷரமாயும், ஸத்யமாயு முள்ள பரமபுருஷனை அறியுமாறு நல்வழியான ப்ரஹ்ம வித்யையை உபதேஶிக்கவேண்டும்.’ இதனால், குருமுகமாய் வேதாந்தவிசாரம் செய்யவேண்டுமென்பதும், குரு ஶிஷ்ய குணங்க ளிருக்கவேண்டிய படிகளும் ஏற்படுகின்றன.

ஸூத்ரமாவது:—

அல்பாக்ஷரமஸந்திக்தம் ஸாரவத் விஶ்வதோமுகம் ।
அஸ்தோபமநவத்யம் ச ஸூத்ரம் ஸூத்ரவிதோ விது: ॥

என்கிறபடி, குறுகின பதங்களால் தெளிவாய் நிஷ்க்ருஷ்டமான அர்த்தத்தைச் சொல்லும் வாக்யம். இவைகள் தனித்தாவது பல சேர்ந்தாவது ஒரு விஷயவிசாரத்தை முடிக்குமிடம், அதிகரணமென்று சொல்லப்படுகிறது. அதற்கு ஐந்து பாகங்க ளுண்டு.

விஷய ஸம்ஶயஶ்சைவ விசாரோ நிர்ணயஸ்ததா ।
ப்ரயோஜநம் ச ஸம்பந்தம் ப்ராஞ்சோ(அ)திகரணம் விது: ॥

என்கிற காரிகையால், ஒவ்வொரு அதிகரணத்திலும், விஷயம், ஸம்ஶயம், பூர்வபக்ஷமும் அதன் யுக்திகளும், ஸித்தாந்தம், பலம் ஆகிய ஐந்து அம்ஶங்களும் இருக்கவேணும். மேலும், முன் அதிகரணத்துக்கும் அநந்தராதிகரணத்துக்கும் அல்லது முன்பாதம் அத்யாயம் முதலானவைகளுக்கும் அந்தந்தப் பின் அதிகரணங்க

ளுக்கும் ஏற்படும் ஸம்பந்தத்தை ஸங்கதி என்று சொல்வார்கள். இப்படி ஸங்கதியும் அதிகரண லக்ஷணங்களும் இருக்கும்படியை மூல க்ரந்தங்களால் ஊஹித்து அங்கங்கே அறிந்துகொள்வது.

பூர்வ மீமாம்ஸையின் பன்னிரண்டு அத்யாயங்களும், ஸங்கர்ஷ காண்டமென்னும் தேவதாகாண்டத்தின் நான்கு அத்யாயங்களும், உத்தரமீமாம்ஸை யென்னப்படும் வேதாந்தஸூத்ரங்களின் நான்கு அத்யாயங்களும் ஆகிய இருபது அத்யாயங்களும் சேர்ந்து வேதார்த்த விசார ரூபமான ஒரே ஶாஸ்த்ரமென்பது நமது ஆசார்யர்களின் தேர்ந்த கருத்து. இதை வ்ருத்திகாரராகிய போதாயநமஹர்ஷி "ஸம்ஹிதமேதச்சாரீரகம் ஜைமிநீயேந ஷோடஶலக்ஷணேந" என்று உபபாதித்திருக்கிறார். இந்த வேதாந்த விசாரத்திற்கு முன் செய்யவேண்டியது கர்மவிசாரமென்பதும், அவர் வாக்யமாகிய "வ்ருத்தாத் கர்மாதிகமாதநந்தரம் ப்ரஹ்மவிவிதிஷா" என்பதால் ஸித்தம். வேதாந்தவாக்யங்களால் ஸ்தூலமாய்க் கர்மங்களின் பலம் முடிவுள்ளதென்றும், ப்ரஹ்மஜ்ஞானத்தால்தான் மோக்ஷமென்றும் போத முண்டானாலும், ஸம்ஶய விபர்யயமில்லாமல் நிஶ்சயஜ்ஞானம் ஜநிப்பதற்கு விசாரமே அவஶ்யமாகையால் வேதாந்த விசாரம் செய்யவேண்டியது தான் என்பது ஸூத்ரத்தின் முடிவான அர்த்தம்.

இங்கு சிலர், "மோக்ஷம் பரமபுருஷார்த்தமென்பது வாஸ்தவமே. அதற்கு ப்ரஹ்மஜ்ஞானம் உபாய மென்பதும் சரி. அந்த ப்ரஹ்ம ஜ்ஞானத்துக்குக் கர்மவிசாரத்தால் என்ன உபகாரம்? நிர்விஶேஷமாய்க் கேவலஜ்ஞானரூபமாயுள்ள ப்ரஹ்மத்தை 'தத்த்வமஸி' முதலான வாக்யங்களால் அறிந்து அவித்யையை நீக்குவது மோக்ஷம். மோக்ஷமடைய, ஸகல பேதஜ்ஞானமும் நிவ்ருத்தமாக வேணும். வர்ணாஶ்ரமாதி ஸகல பேதங்களையும் அவலம்பித்த கர்மாநுஷ்டானம் ப்ரஹ்மஜ்ஞானத்துக்கு விரோதியே யல்லது அநுகூலமன்று. ஆகையால், கர்மவிசாரம் ப்ரஹ்ம விசாரத்துக்கு முன் செய்யவேண்டியது என்பதும், அதை அநுஸரித்து 'அத' என்னும் ஸூத்ரபதத்துக்கு அர்த்தம் சொல்வதும் யுக்தமன்று. ப்ரஹ்ம ஜ்ஞானத்துக்குப் பூர்வ வ்ருத்தமாய்ச் சொல்லக்கூடியதை "ஶாந்தோ தாந்த உபரதஸ் திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா"



(ப்ருஹதாரண்யகம். 6, 4, 23) என்று உபநிஷத்து சொல்லுகிறது. இதை (நித்யாநித்யவஸ்துவிவேக:) நித்ய மின்னதென்றும் அநித்யமின்னதென்றும் பகுத்தறிதல், (ஶமதமாதிஸாதந ஸம்பத்) இந்த்ரியங்களையும் மநஸ்ஸையும் அடக்குதல், (இஹாமுத்ரார்த்தபலபோகவிராக:) ஐஹிக பலங்களிலும் ஸ்வர்க்காதி பலங்களிலும் ஆசையற்றிருத்தல், (முமுக்ஷுத்வம்) மோக்ஷத்தில் இச்சை, ஆகிய நான்காக ஆசார்யர்கள் நிர்த்தேஶித்திருக்கிறார்கள். அப்படி யிருக்க, கர்மவிசாரத்தைப் பூர்வவ்ருத்தமாய்ச் சொல்வது ஒவ்வாது. கர்மங்களின் உபயோகந்தானென்னவென்றால், இந்த்ரியங்களை யடக்குவதிலும், அந்த:கரணத்தை நிர்மலமாய்ச் செய்வதிலும் ப்ரஹ்ம ஜ்ஞானத்தில் இச்சையை யுண்டாக்குவதிலும் மாத்ரம் கர்மங்களுக்கு உபயோகம். ப்ரஹ்ம வித்யைகளுக்குக் கர்மங்களின் சேர்க்கை ஆவஶ்யமன்று. இதை,

விநியோகஶ்ச கர்மணாம் விவிதிஷாப்ரயோஜநாச ।
ஜ்ஞாநோத்ரஸ்ய ஹேதுத்வம் ஸாத்யத்வமேவ ஸ ॥
ஶமாத்யங்கதாந்நாந்ந்யகர்மஸமுச்சய: ।
ஶ்ரவணாதிக்ரமோ நித்யவாக்யார்த்தே விசாரிகா ॥

என்று பூர்வர்கள் நிரூபித்திருக்கிறார்கள்" என்று ஆக்ஷேபிக்கிறார்கள்.

இதற்கு ஸமாதானம்: 'தத்த்வமஸி' முதலான வாக்யங்களின் அர்த்தத்தை அறிவதால் மாத்திரம் மோக்ஷம் ஸித்தியாது. வாக்ய ஜந்யஜ்ஞானம் இருந்தும் பேத வாஸனையும் பேத ஜ்ஞானங்களும் அவைகளுக்கு அநுகுணமான ப்ரவ்ருத்திகளும் அநுவர்த்திக்கக் காண்கிறோம். மோக்ஷஸாதநமான ஜ்ஞானம் உபாஸநரூபம்; அதாவது - நிரந்தரமான த்யாநரூபம். 'ஓமித்யேவாத்மாநம் த்யாயத' (முண்டகம்: 2. 2. 6), 'ஆத்மாநமேவ லோகமுபாஸீத' (ப்ருஹ: 3. 4. 15), 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:' (ப்ருஹ: 6. 5. 6), முதலான வேத வாக்யங்களில் இது ஸ்பஷ்டம். 'குர்வீத', 'ப்ரஹ்மவித்'

'ய ஏவம் வேத' என்பது முதலான இடங்களில் 'வேதந' ஶப்தம் உபாஸநார்த்தம் என்று கொள்ளவேணும். 'வேதநம் சோபாஸநம் ஸ்யாத் தத்விஷயே ஶ்ரவணாத்' என்பது, இந்த விஷயத்தில் பூர்வாசார்யர்கள் வாக்யம். இந்த த்யாநமே மோக்ஷோபாய மென்பதை 'த்ருவா ஸ்ம்ருதி꞉ ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ꞉' (சாந்தோக்யம். 7.26.2) என்னும் ஶ்ருதி சொல்லுகிறது. அது ஸாக்ஷாத் தர்ஶநம் போன்றதென்று

"பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்சித்யந்தே ஸர்வஸம்ஶயா꞉ ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ॥"

(முண்ட. 2. 2. 8)

என்கிற வாக்யம் சொல்லுகிறது. இப்படிப்பட்ட நிரந்தரமான த்யாநத்தைப் பகவத்விஷயமாய் எவன் அதிப்ரீதியுடன் செய்கிறானோ அவனே பக்தனென்று சொல்லப்படுகிறான். அவனது த்யாநமே, பக்தி என்னப்படுகிறது. அவனே பரமாத்மாவை அடைகிறான். இதை,

"நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா வ்ருணுதே தநூம் ஸ்வாம்" (முண்ட. 3, 2, 3) என்கிற ஶ்ருதி வெளியிடுகிறது.

இதன் அர்த்தத்தையே,

"நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ॥
பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப"

(பகவத்கீதை. 11. 53, 54)

என்கிற கீதாவாக்யங்களும் விவரிக்கின்றன. இந்த த்ருவஸ்ம்ருதி ரூபமான த்யாநம் யாவஜ்ஜீவம் ப்ரதிதிநம் ஏகாக்ரமான சித்தத்தால் அநுஷ்டிக்கப்படவேண்டியது. அதற்குப் பலாபிஸந்தியின்றியில் செய்யப்படும் யஜ்ஞம் முதலான ஸர்வமான ஆஶ்ரமகர்மங்களும் ஸஹகாரிகள். ப்ரஹ்மவித்யைக்கு வர்ணாஶ்ரமதர்மங்கள் அங்கமாய் ஸஹகாரிகள் என்பது, மேல் அத்யாயம் 3, 4 களில் விவரிக்கப்படும். "க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட꞉" (முண்டகம். 3. 1. 4) என்பதாலும் இது ஏற்படுகிறது. வாக்யகாரராகிய ஆசார்யரும், * ப்ரஹ்மவித்யைக்கு ஸாதநங்களை "தல்லப்திர் விவேகவிமோகாப்யாஸ க்ரியாகல்யாணாநவஸாதாநுத்தர்ஷேப்ய꞉" என்கிற வாக்யத்தால் குறிப்பிட்டிருக்கிறார். விவேகமாவது - அதுஷ்டமான அந்நத்தால் ஏற்படும் ஶரீரஶுத்தி. விமோகமாவது - காமாதிகளால் அலைக்கப்படாதிருத்தல், ஶமதமாதிகளுடனிருக்கை. அப்யாஸமாவது - நிரந்தர சிந்தையால் ஆவ்ருத்தி செய்தல். க்ரியையாவது - பஞ்ச மஹாயஜ்ஞாதிகளின் அநுஷ்டாநம். கல்யாணங்களாவன - ஸத்யம், ஆர்ஜவம், தயை, தாநம், அஹிம்ஸை, அநபித்யை (பரோபகாரங்களை எண்ணுமலிருத்தல்). அநவஸாதமாவது - மனந்தளராமை. அநுத்தர்ஷமாவது - அதி ஸந்தோஷம் இல்லாமை. இந்த நியமங்களுடன் கூடின ஸ்வ வர்ணாஶ்ரமோசித கர்மாநுஷ்டாநமே ப்ரஹ்மவித்யா நிஷ்பத்திக்கு அவஶ்யம் வேண்டுவது.



இப்படிப் பக்தி பலாபேக்ஷையில்லாத கர்மங்களின் ஸஹகாரித்வத்தை அபேக்ஷிப்பதால், கர்மஸ்வரூபஜ்ஞாநமும் அதற்காகக் கர்மகாண்டவிசாரமும் அவஶ்யமான பூர்வவ்ருத்தம். பூர்வபக்ஷி சொன்ன நித்யாநித்ய வஸ்து விவேகாதிகள் கர்மஸ்வரூபஜ்ஞாநத்தாலும், அந்த ஜ்ஞாநம் கர்மகாண்ட ந்யாயங்கள் மூலமாயும் உண்டாக வேண்டியவைகளாகையால், கர்மவிசாரமே உசிதமான பூர்வவ்ருத்தம்.

மறுபடி பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கிறார்: கீழ்ச் சொல்லப்பட்ட ஸமாதாநம் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் ஜீவஸ்வரூபத்தையும் மோக்ஷ

* இவருக்கு டங்கரென்றும், ப்ரஹ்மநந்தியென்றும் பெயரெனத் தெரிகிறது. ஆகவே, பகவான் போதாயநர், ப்ரஹ்மநந்தி, த்ரமிடாசார்யர், குஹதேவர் - இவர்கள் இந்த ஸம்ப்ரதாயத்தில் ப்ராசீநாசார்யர்கள். த்ரமிடர் பாஷ்யம் செய்தவர். ஸ்ரீ ஶங்கராசார்யருக்கும் ப்ராசீநர்.

ஸ்வரூபத்தையும் அறியாமல் சொன்னது: (1) ப்ரஹ்மமாவது - நிர்விஶேஷமாய் ஜ்ஞாநஸ்வரூபமாயுள்ள ஒரு வஸ்து: அந்த ஒரு வஸ்துவே பரமார்த்தம். இதர வஸ்துக்களெல்லாம் அந்த ப்ரஹ்மத்தில் இருப்பது போலத் தோன்றுவனவே ஒழிய வாஸ்தவத்தில் அவைகளில்லை. அவைகளெல்லாம் மித்யைதான். (2) நிர்விகாரமாய் ஜ்ஞாநஸ்வரூபமான ப்ரஹ்மத்தில் அநாதியாய் உள்ள அவித்யை என்னும் ஒரு தோஷத்தால் பலவிதமாய் ஜீவர்கள் போலவும், தேவமநுஷ்யாதி பேதமுள்ள ஶரீரங்கள் போலவும் விசித்ரமான இந்த ப்ரபஞ்சரூபமாயும் தோற்றங்கள் உண்டாகின்றன. அந்த அவித்யையின் கார்யமாகிய நாம் நம்மை ப்ரஹ்மத்தை விட வேறாகவும், நம்மைக் காட்டிலும் ப்ரபஞ்சத்தை வேறாகவும், நம்மை அறிபவர்களாகவும், ப்ரபஞ்சத்தை அறியப்படுவதாகவும், இன்னும் விவிதமான வேறுபாடுள்ளதாகவும் பார்க்கிறோம். இவையெல்லாம் அவித்யையின் கார்யமே. அது 'ஸத்' என்றாவது 'அஸத்' என்றாவது சொல்லக் கூடியதல்ல; வாஸ்தவ ஜ்ஞாநமுண்டானால் அந்த அவித்யை நிவ்ருத்தமாகும்; ஆகையால், அதை அஸத் என்றே எண்ணவேணும். அதற்குக் காரணமாய் வேறொன்றும் சொல்லமுடியாமையால் அதை 'ஸத்' என்றும் எண்ணலாம். (3) இப்படி விசித்ர ஸ்வபாவத்தையுடைய அவித்யையைப் போக்குவது ப்ரஹ்மாத்மைக்ய ஜ்ஞாநம்; அதாவது - 'ப்ரஹ்மமும் ஆத்மாக்களும் ஒன்றே, வேறு எதுவும் ஸத்யமன்று' என்னும் ஜ்ஞாநமே. இந்த ஜ்ஞாநம், 'தத்த்வமஸி' (சாந்தோ. 6. 8. 7) 'த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி' ( ) 'ஆத்மேத்யேவோபாஸீத' (ப்ருஹ. 3. 4. 7) 'இதம் ஸர்வம் யதயமாத்மா' (ப்ருஹ. 4. 4. 6), 'நேஹ நாநாஸ்தி கிஞ்சந' (ஷை, 6. 4. 18) முதலான வாக்யங்களால் ஏற்படுகிறது. 'ந பஶ்யோ ம்ருத்யும் பஶ்யதி' முதலான வாக்யங்களால் ஐக்ய ஜ்ஞாநமே மோக்ஷஹேது வென்று வெளியிடப்படுகிறது. முன்சொன்ன மாயை ப்ரஹ்மத்தை மறைத்து ஜீவபேதங்களையும் இதரபேதங்களையும் கல்பிக்கிற தென்பதற்கும்



'அந்ருதேந ஹி ப்ரத்யூடா:' (சாந். 8. 3. 2) 'அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்யதே' (மாண்டூக்யம். 2. 21) முதலான ஶ்ருதிவாக்யங்கள் ப்ரமாணங்கள். ஸ்ரீ விஷ்ணு புராணம் பகவத்கீதை முதலான ப்ராமாணிக ஸ்ம்ருதிகளிலும் இந்த ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான வாக்யங்கள் பல இருக்கின்றன. ஸ்ரீ பாஷ்யத்தில் இவை கண்டுகொள்ளவும். ஆகையால், வஸ்துஸ்திதியில் ப்ரஹ்மம் ஒன்றுமே ஸத்யமாயும் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்கும் அபேதமே தத்யமாயும், ப்ரபஞ்சம் மித்யை என்பதே வாஸ்தவமாயும், இந்தத் தத்யமான ப்ரஹ்மம் ஏகமென்கிற ஜ்ஞாநத்தால் பேதமெல்லாம் அற்று, தான் ஒருவனுமே சுத்த சைதந்யரூபமாயுள்ள நித்யவஸ்து வென்று உண்டாகும் அவஸ்தைதான் மோக்ஷமாகையால், அந்த ஐக்யஜ்ஞாநம் பெற வேதாந்த விசாரமும் அதற்குப் பூர்வவ்ருத்தமாய் நித்யாநித்ய வஸ்து விவேகாதிகளுமே சொல்லவேண்டியவைகளாகையால், கர்மவிசாரம் அநபேக்ஷிதமென்றும், ப்ரஹ்மவிசாரமே ஆரம்பணீயமென்றும் பூர்வபக்ஷியின் அபிப்ராயம். மேலும், "ஏகமேவாத்விதீயம், (சாந். 6. 2. 2) 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம்' (ஶ்வே. 6. 19) 'ஆநந்தோ ப்ரஹ்ம' (தை. ப்ருகு - 6) முதலான நிர்குண வாக்யங்களால், 'யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்' (முண்ட. 2. 2. 7) 'பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' (ஶ்வே. 6. 8) முதலான ப்ரஹ்மத்தின் குணங்களை ப்ரதிபாதிக்கும் வாக்யங்கள் பல மற்றவைகளாய்ப் பாதிக்கப்படுகின்றன. ஆகையால், ப்ரஹ்மம் நிர்க்குணம், அபேதமே ஸத்யம், பேதவ்யவஹாரம் ப்ராந்திமூலம். நமது அநுபவங்களை நன்றாய்ப் பரீக்ஷித்தால் ஸந்மாத்ரஜ்ஞாநமே ஸ்வயம் ப்ரகாஶமாய்ப் பரமார்த்தமாயுள்ள தென்றும் அதுவே ப்ரஹ்மமென்றும் ஏற்படும். இந்தத் தத்வத்தை நினைத்து, நித்யமாயும் ஶாந்தமாயும் ஏகமாயுமுள்ள ஆத்மாவை யறிய வேதாந்தவிசாரம் செய்தாலும் கர்மவிசாரத்தை முன்னிட்டுச் செய்வது கூடாதென்பது பூர்வபக்ஷியின்மதம்.

இதற்கு ஸமாதாநத்தை ஸ்ரீ பாஷ்யத்தில் விஸ்தாரமாய்க் கண்டுகொள்வது. இங்கு உபயுக்தாம்ஶங்களான விஶிஷ்டாத்வைத ப்ரக்ரியைகளை ஸங்க்ரஹமாய் உபபாதிக்கிறோம்.

(1) நமது அநுபவம் ஸந்மாத்ரஜ்ஞாந ரூபமென்பது, அநுபவத்துக்கும் யுக்திக்கும் விருத்தம். நமது அநுபவம் 'இதமித்தம்' என்றே எப்பொழுதும் தோன்றும்; அதாவது - சில விஶேஷங்களுடன் தோற்றும் வஸ்து வேறு சில விஶேஷங்களுடன் மறுபடி காணப்படும். முதலில் அது நிர்விஶேஷமாய்க் காணப்படவில்லை. வஸ்துவை விட்டுப் பிரியாத சில விஶேஷணங்கள் முதலிலும், தனிமையிலுள்ள சில விஶேஷணங்கள் பிந்தியும் காணப்படுவதால் அநுபவம் நிர்விஶேஷணமென்ன லாகாது. தூரத்தில் நிற்கும் தேவதத்தனை முதலில் மநுஷ்யனென்று பொதுவாய் அறிந்தாலும் கிட்டிப்போனால் அவனைத் தண்ட குண்டலங்களால் நாமறிந்த தேவதத்தனென்று அறிகிறோம்; இதில் கடைசி ஜ்ஞாநம்போல முதல் ஜ்ஞாநமும் ஸவிஶேஷந்தான்.

(2) ஜீவபேதம் அநுபவஸித்தம்; ஶ்ருதிகளாலும் ப்ரதிபாதிக்கப்படுகிறது. ஒரு ஜீவனுக்கு மற்ற ஜீவன்கள் அநுமாநத்தினால் அறியப்பட்டவைகள். 'நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம்' என்னும் ஶ்ருதி, ஜீவபஹுத்வத்தையும் ப்ரஹ்மம் வேறு என்பதையும் ஸ்தாபிக்கிறது.

(3) ஜீவன்களுக்கு ஜ்ஞாத்ருத்வம் அநுபவஸித்தம். 'அஹம் ஜாநாமி' (நான் அறிகிறேன்) என்னும் அநுபவத்தில் 'அஹம்' என்பதால் ஜ்ஞாதாவான ஆத்மா தோன்றுகிறது. 'அஹமர்த்தம்' ஜ்ஞாதாவல்லாதபோது சேதநத்துக்கும் அசேதநத்துக்கும் பேதமில்லை; மோக்ஷத்தில் 'அஹமர்த்தம்' அநுவர்த்திக்காதபோது ஒருவருக்கும் மோக்ஷருசி உண்டாகாது. இங்கு ஸ்ரீ யாமுநாசார்யர் காரிகை:—

"அஹமர்த்தவிநாஶஶ்சேத் மோக்ஷ இத்யத்யவஸ்யதி ।
அபஸர்பேதஸௌ மோக்ஷகதா ப்ரஸ்தாவ கந்தத: ॥"



(4) 'நான்' என்னும் ஜ்ஞாநம் அஹங்கார மென்கிற ப்ரக்ருதியின் கார்யத்தால் உண்டாகிறதென்பது, தன் தாய் மலடி என்பது போலாகும் என்கிறார் ஸ்ரீ பாஷ்யகாரர். ஸ்ரீ ஆளவந்தாரும்,

"ஶாந்தகோரவிமூடத்வம் அஹங்காரஸ்ய ஜாயதே ।
ஸ்வயம்ஜ்யோதிஷி போதாத்மந் வ்யநக்தி ந யுக்திகே ॥"

என்கிறார்.

(5) நமது ஸித்தாந்தத்தில், ஸுஷுப்தியிலும் மூர்ச்சாதிகளிலும் 'அஹம்' என்னும் ஜ்ஞாநம் முற்றிலும் மறையவில்லை. மோக்ஷத்தில் அஹமர்த்தமே தெளிவாய் ப்ரகாசிக்கிறது. ஸம்ஸார தஶையில் கர்ம க்ருதமான ஜ்ஞாந ஸங்கோசம் ஆத்மாவுக்கு உண்டாகிறது.

(6) வேதாந்த வாக்யங்களில் ஸகுணவாக்யங்கள் நிர்குண வாக்யங்களால் பாதிக்கப்படுகின்றன வென்பது ஸரியல்ல. நிர்குண வாக்யங்களில் முதலாகச் சொல்லப்படும் 'ஏகமேவாத்விதீயம்' என்னும் வாக்யத்திலும் முன்பின்வாக்யங்களைப் பார்த்தால் ஜகத் காரணத்வம், ஸர்வஜ்ஞத்வம் முதலான குணங்கள் வ்யக்தமாகின்றன. ஆகையால், நிர்குண வாக்யங்க ளென்பனவே ஒன்றுமில்லை. 'அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு:' முதலான வாக்யங்களால் தோற்றும் ஹேயகுணங்கள் இல்லையென்று சொல்வதே, நிர்குணவாக்யங்களுக்குத் தாத்பர்யம். "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தின் குணங்களை ஸ்பஷ்டமாயச் சொல்லுகிறது. ஆகையால், இரண்டுவிதமான வாக்யங்களுக்கும் விரோதமில்லை.

(7) ஸத்தாயுமில்லாமல் அஸத்தாயு மில்லாமல் அநாதியாய் அவித்யை என்று ஒரு வஸ்து இருப்பதாக நிரூபிப்பது துஸ்ஸாத்யம். அந்த அவித்யையைப்பற்றி உதாஹரித்த வாக்யங்கள் ப்ரக்ருதியையாவது அதன் ஸம்பந்தத்துக்கு ஹேதுவான கர்மத்தையா

வது குறிக்கின்றன. ஜ்ஞாநஸ்வரூபமாய் இருக்கும் ப்ரஹ்மத்தை ஜ்ஞாநபாத்யமான அவித்யை கவர்ந்துகொள்வதும், அந்த ஜ்ஞாநத்தினலேயே பிறகு விலகிவிடுவதும் யுக்திஸஹமன்று. இந்த விஷயத்திலும் ஸப்தவிதமான அநுபபத்திகள் ஸ்ரீ பாஷ்யத்தில் கண்டுகொள்வது.

(8) இந்த ஸித்தாந்தத்தில் ப்ரஹ்மஸ்வரூபமும் ஜீவஸ்வரூபமும் மோக்ஷஸ்வரூபமும் பிந்தின அதிகரணங்களினல் விளங்கும்.

(9) ஸ்ம்ருதி புராணங்களும் இந்த அர்த்தங்களுக்கே அநுகூலங்களென்பது, ஸ்ரீ பாஷ்யத்திலும் அந்தந்த வ்யாக்யாநங்களிலும் நன்ருய் விளங்குகிறது.

(10) ஜீவர்கள், அநாதியான கர்மங்களால் ஸங்குசிதஜ்ஞாநர்களாய் ஸம்ஸாரத்தில் உழலுகிருர்கள். அவர்கள் யாத்ருச்சிகமான ஈஶ்வரகடாக்ஷத்தாலுண்டான ஆசார்யாநுக்ரஹத்தால் தத்வஜ்ஞாநம் அடைந்து பிறகு அநபி ஸம்ஹித பலங்களாகக் கர்மங்களைச் செய்து அதனல் சுத்தாந்தஃகரணர்களாய்ப் பகவத் த்யாநமாகிய பக்தியைச் செய்து அதனலுண்டான பகவத்ப்ரீதியால் ஸம்ஸாரத்தை விட்டுப் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமாகிற மோக்ஷத்தை அடைகிருர்கள். இது நிஶ்சிதமான ஶாஸ்த்ரார்த்தமாகையால் இந்த மோக்ஷோபாயமான கர்மாங்கமாகிய பக்தியை அறியக் கர்மவிசாரம் செய்தபிறகு ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டியது யுக்தமாகிறது.

'இப்படி ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டியதென்று ஏற்பட்டும், இது ஒரு அதிகரணமாகையால், அதிகரணங்களான விஷயாதிகள் இதற்கு எவை?' என்ருல், இதற்கு விஷயம், வேதாந்தவிசாரம் என்கிற ப்ரஹ்மவிசாரம். ஸம்ஶயம் - இந்த விசாரம் செய்யவேண்டியதா? அல்லவா? என்பது. மறுபடி இந்த ஸம்ஶயத்துக்கு என்ன காரணமென்ருல், மீமாம்ஸகர்களில் சிலர் இங்கே பூர்வபக்ஷிகள். அவர்கள் அபிப்ராயத்தில் 'எல்லா ஶப்தங்களும் கார்யத்தில் ஒருவனை ப்ரவர்த்திப்பிப்பதால் மாத்ரம் அர்த்தத்தைக் கொடுக்கின்றன. 'காமாநய' (பசுவைக் கொண்டுவா) என்று வ்ருத்தர் ஒருவர் சொல்ல, அவர் வார்த்தையைக் கேட்ட வேறு ஒருவர் பசுவைக் கொண்டுவர அதைப் பார்த்திருந்த பாலன் அந்தப் பதங்களுக்கு இந்தக் கார்யம் அர்த்தம் என்று அறிகிருன். இப்படியே ஒவ்வொரு பதத்துக்கும் க்ரியாந்வயத்தினலே அர்த்தமுண்டாவதால், ஒருவராலும் செய்யமுடியாத வஸ்துஸ்திதியால் பரிநிஷ்பந்நமான ப்ரஹ்மத்தின் விஷயத்தில் ஶப்தங்களே அர்த்தங்களைக் கொடுக்கமாட்டா. ஆகையால், வேதாந்தவாக்யங்களால் ப்ரஹ்ம ஜ்ஞாநம் உண்டாகாது. ஆனதுபற்றி, வேதாந்தவிசாரம் ஆரம்பிக்க லாகாது' என்பது பூர்வபக்ஷம்.



இங்கே ஸித்தாந்தம் - கார்ய போதக மல்லாத போதிலும் "உன் அம்மா, அப்பா" என்று சொல்லிப் பெரியவர்கள் ஶப்தங்களை உச்சரிக்க, பாலர்கள் கேட்டு அந்தந்த வ்யக்திகளைப் பார்த்து அந்தந்தப் பதங்களுக்கு அர்த்தங்களை அறிவதை நாம் பார்க்கிருேம். ஶப்தங்களை ப்ரயோகியாமல் ஸம்ஜ்ஞைகளால் ஒருவன் ஒருவனுக்கு உரைக்க அவன் மற்ருெருவருக்குச் சொற்களால் தெரிவிப்பதைக் கேட்ட மநுஷ்யன் இன்ன பதங்களுக்கு இன்ன பொருளென்று அறியவும் கூடும். ஆகையால், ஸித்தவஸ்துவிஷயத்தில் வேதாந்தங்கள் அர்த்த போதகங்களாகக் குறையில்லை. மேலும், 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' 'ஸோऽந்வேஷ்டவ்ய:,' 'தத்விஜிஜ்ஞாஸிதவ்யம்' முதலான உபாஸந கார்யவிதிகள் உபநிஷத்துக்களி லிருப்பதால் அந்த வாக்யங்கள் போதமாகவே அதன் பலரூபமான ப்ரஹ்ம ப்ராப்தியும் ப்ரஹ்ம ஸ்வரூபமும் கார்யத்தைச் சேர்ந்தவைகளாகவே வ்யுத்பத்தியாகக் குறையில்லை. ஆகையால், இந்த ஆக்ஷேபமும் நிராக்ருதமாய் 'ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கது' என்று இந்த ஜிஜ்ஞாஸாதிகரணத்தால் ஸ்தாபிக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

டி. ராஜகோபாலாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

யந்மூர்த்நி மே ஶ்ருதிஶிரஸ்ஸு ச பாதி யஸ்மி
ந்நஸ்மந்மநோரதபத: ஸகல: ஸமேதி ।
ஸ்தோஷ்யாமி ந: குலதநம் குலதைவதம் த
த்பாதாரவிந்தமரவிந்தவிலோசநஸ்ய ॥ 6.

6. முதல் ஐந்து ஶ்லோகங்களால், தமது ஆசார்யர்களாகிற பாகவதர்கள் விஷயத்தில் தமக்கு இருக்கும் க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரித்துக்கொண்டு அவர்களுக்கு வந்தநம் செய்துவிட்டு, பிறகு பகவத்வந்தந ரூபமாகிற இந்த ஸ்தோத்ரத்தைச் செய்ய ஆரம்பித்தவராய், ஸ்ரீ ஆளவந்தார், தாம் ஸ்ரீ பகவானை ஸ்தோத்ரம் செய்வதாக ஆறாவது ஶ்லோகத்தால் ஸங்கல்பித்துக் கொண்டும், 'பரத்வம் பொருந்திய அந்தப் பகவானை நாம் எவ்விதமாக ஸ்தோத்ரம் செய்யப்போகிறோம்?' என்று பயந்து ஏழாவது ஶ்லோகத்தால் அந்த ஸ்தோத்ர ஆரம்பத்திற்கு ஒருவித ஆக்ஷேபத்தைச் செய்து கொண்டும், அந்த ஆக்ஷேபத்திற்கு 'பகவான் பரத்வமுடையவனாக இருக்கையிலும் ஸௌலப்யம் பொருந்தினவன்' என்கிற ஒரு ஸமாதாநத்தை எட்டு ஒன்பதாவது ஶ்லோகங்களாற் செய்து கொண்டும் ஸ்தோத்ரத்தில் இறங்குகிறார். இதனால் - ஆறாவது ஶ்லோகத்தால் ஸ்தோத்ர ஆரம்ப ஸங்கல்ப முகமாக 'நமக்கு ப்ராப்யமும் ப்ராபகமும் பகவானே' என்று ஸங்க்ரஹித்து, ஏழாவது ஶ்லோகத்தால் ஆக்ஷேபமுகமாகப் பகவானுடைய பரத்வத்தை ஸூசிப்பித்து, எட்டு ஒன்பதாவது ஶ்லோகங்களால் ஸமாதாந முகமாக 'பகவான் ஸௌலப்யம் பொருந்தினவன்' என்பதை ஸ்ரீ ஆளவந்தார் ப்ரகாஶிப்பிக்கிறதாக ஆயிற்று.



'யச்ச மே மூர்த்நி ஶ்ருதிஶிரஸ்ஸு ச பாதி, யஸ்மிம்ஶ்ச ஸகல: அஸ்மந்மநோரதபத: ஸமேதி, தத் ந: குலதநம் குலதைவதம் அரவிந்தவிலோசநஸ்ய பாதாரவிந்தம் ஸ்தோஷ்யாமி' - யாதொரு பாதாரவிந்தமானது என்னுடைய ஶிரஸ்ஸிலும் வேதாந்தங்களிலும் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிறதோ, நம்முடைய ஸகலவிதமான இச்சையும் யாதொன்றில் பரிஸமாப்தியை அடைகிறதோ, அப்படிப்பட்ட, நமக்கெல்லாம் குலதநமும் குலதைவதமுமான புண்டரீகாக்ஷனுடைய பாதாரவிந்தத்தை ஸ்தோத்ரம் செய்கிறேன்.

யந்மே மூர்த்நி ஶ்ருதிஶிரஸ்ஸு ச பாதி - வேதாந்தங்களில் ப்ரகாஶிக்கிறது என்று சொன்னபடியால், 'ஸர்வோத்தரனாகவும் ஸர்வரக்ஷகனாகவும் ஹேயகுணங்களுக்கெல்லாம் ப்ரதிபடனாகவும் கல்யாணகுணங்களுக்கெல்லாம் வாஸஸ்தலமாகவும் பகவானை வேதாந்தங்கள் வர்ணிக்கின்றன; அப்படிப்பட்ட குணங்களால் நிறைந்தவனே ப்ராப்யனாகையால் அந்தப் பகவான்தான் நமக்கு ப்ராப்யன்' என்று சொன்னதாயிற்று. 'ப்ராப்தி' அதாவது - அடைதல்; என்பது ஆஶ்ரயித்தலை அபேக்ஷித்து நிற்கிறதாதலால், ஒருகால் இந்தப் பகவானிடத்தில் ப்ராப்திக்கு உபயுக்தமான குணங்களிருக்கையிலும் ஆஶ்ரயணத்துக்கு உபயுக்தமான குணங்களிராமற்போனால் இவனை அடைவது எப்படி?' என்று ஶங்கித்து, இவனிடத்தில் ஆஶ்ரயணத்துக்கு உபயுக்தமான குணங்களும் பூர்ணமாக நிறைந்திருக்கின்றனவென்பதைக் காண்பிக்கிறதற்காக, 'தமது ஶிரஸ்ஸிலும் ப்ரகாஶிக்கிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'குருடன்ஶிரஸ்ஸில் கங்காப்ரவாஹம் விழுந்தாற்போல, அத்யந்த நிக்ருஷ்டரான தமது ஶிரஸ்ஸில் ஸர்வ ஶாஸ்த்ர ப்ரஸித்தமாயும் ஸர்வோத்தரமாயுமுள்ள அந்தப் பாதாரவிந்தம் அயத்நோபஸ்திதமாக இருக்கின்றது!' என்று ஆஶ்சர்யம் த்யோதிதமாயிற்று. இது நீச ஸ்தாநம், இது உத்தம ஸ்தாநம் என்கிற விஶேஷத்தைக் கவனியாமலே வேதாந்தங்களையும் தமது ஶிரஸ்ஸையும் துல்யமாகத் திருவுள்ளம் பற்றும் அந்தப் பகவானிடத்தில் ஜீவகோடிகள் ஆஶ்ரயிக்கிறதற்கு உபயுக்தமான ஸௌலப்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாதிகள் அபாரமாக

இருக்கின்றன என்று தாத்பர்யம். இம்மாதிரியான நீச உத்தம ஸ்தாந ஸம்பந்தத்தால் அந்தப் பாதாரவிந்தத்தின் இயற்கையாயுள்ள தேஜஸ்ஸுக்கு எவ்வித ஹாநியாவது வ்ருத்தியாவது உண்டாகிறதில்லை யென்றும் த்வநிக்கிறது. ஆஶ்ரயணம் முதலிலும் ப்ராப்தி பிறகுமானதால், ஆஶ்ரயண உபயுக்த குணங்களைக் காண்பிக்கும் வாக்யம் முதலிலும் ப்ராப்த்யுபயுக்த குணங்களைக் காண்பிக்கும் வாக்யம் பிறகுமாக 'ஶிரஸாம் ஶ்ருதி ஶிரஸாம் ச' என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. 'ஶ்ருதி ஶிரஸாம்' (வேதாந்தங்களில்) என்று பஹுவசநமாக ப்ரயோகம் செய்ததன் தாத்பர்யம், ஸகல வேதாந்தங்களும் பகவானொருவனையே பற்றிப் பேசுகின்றன என்பதைக் காண்பிக்க வேண்டுமென்பது தான். 'வேதாந்தங்கள் ஒரு பெரியகாடு; ஶ்ரமப்பட்டே அவ்விடத்தில் பகவானை அறியவேணும்; என்னிடத்திலோ ஸதாசார்ய ப்ரஸாதத்தால் ஸுலபமாக அவன் உபஸ்திதனாக இருக்கிறான்' என்று தமக்கு இருக்கும் ஒரு க்ருதார்த்ததையையும் இந்தப் பஹுவசநத்தால் வெளியிடுகிறாரென்றும் சொல்லலாம்.

யத்ர ஸகலா: க்ருதார்தா பவந்தி ஸர்வே இதி - ஐஹிக ஆமுஷ்மிகமான ஸகல மநோரதங்களும் அந்தப் பாதங்களிலேயே பரிஸமாப்தியை அடைகின்றன. "த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ" என்கிற வாக்யத்தின் அர்த்தம் இவ்விடத்தில் அநுஸந்திக்கப்படுகிறது. "பிதா த்வம் மாதா த்வம்" என்று ஸ்ரீ ஆளவந்தாரே பின்பு சொல்லுகிறார்.

ஸுலபம் - ஆபத்காலத்திற்காக ஸங்க்ரஹிக்கத் தகுந்ததாயும், யத்நமின்றிக்கே கிடைத்ததாயுமுள்ள அநுகூல உபாயம்.

ஸுதைவதம் - பெரியோர்களால் ஆராதிக்கப்பட்ட தைவம், ஆகையால் அதனிடத்தில் அதிலங்கநம் என்பதே கூடாது என்று தாத்பர்யம். 'அதிலங்கநம் செய்யாமல் ஆராதித்தால் ஏராளமான பலத்தைக்கொடுக்கும்; அதுவே பெரியதொரு பலமுமாகும்' என்றும் தாத்பர்யம்.

அரவிந்த விலோசநஸ்ய - 'பகவானுடைய' என்று ஒரு ஸாமாந்ய பதத்தை ப்ரயோகியாமல் 'அரவிந்த விலோசநனுடைய' என்று சொன்னது, "ராமோ ராஜீவலோசந:" என்



தஸ்யைவ ந யஸ்ய ஹிமாம்ஶுவஶீகராணாம்
ஶ்லோகோ ந ஶாதாரவி ஶப்தவிதாநாஸ்யே: ।
கதாம் தர்தீயஹிஶஸ்திதி ஶாஸ்த்ராய
ஹ்ருதம் நமோஸ்து கவயே நிரவத்யாய ॥ 7.

கிற விடங்களில் ப்ரஸித்தமாயுள்ள ஆஶ்ரிதர்களை அநுக்ரஹிக்கும் ஶீலம் இவனிடத்தில் நிறைந்திருக்கின்றது என்பதைக் காண்பிக்கும் பொருட்டே. 'அரவிந்தம்' என்னும் பதம், ஸௌம்ய குணத்தைக் காண்பிக்கின்றது. ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பிக்கும் தம்மை அரவிந்தம் போன்ற திருக்கண்களால் பகவான் கடாக்ஷிக்கிறான் என்றும் த்வநிக்கிறது.

ஸோஷ்யாமி - வாசிகமான ஒரு கைங்கர்யத்தைச் செய்கிறேன்; அதாவது - பரமார்த்தமாயுள்ள ஒரு குண வர்ணநத்தால் பஜிக்கிறேன் என்று அர்த்தம். அபூதமான குணங்களை ஆரோபித்துப் பேசுவதே ஸ்துதி என்று லோகத்தில் வ்யவஹாரமிருந்தாலும், இவ்விடத்தில் பரமார்த்த வர்ணநத்தையே 'ஸ்துதி' என்னும் ஶப்தம் காட்டுகிறது என்று அறியவேண்டும்; ஏனென்றால், ஸகல குணங்களும் நிறைந்துள்ள பகவானிடத்தில் குண ஆரோபணம் என்பது எப்படி ஸாத்யம்? மேலும், நீதி ஶாஸ்த்ரமறிந்தவர்கள், 'குணிகளிடமுள்ள குணங்களைச் சொல்வதே ஸ்தோத்ரம்' என்று 'குணவத்ஸு குணாக்யாநம் ஸ்தோத்ரம்' என்கிற வாக்யத்தால் சொல்லுகிறார்கள். ஸ்ரீ கூரத்தாழ்வான் தமது ஸ்ரீ ஸ்தவத்தில், ஸ்ரீயைப்பற்றிச் சொல்லியிருக்கும் ஶ்லோகத்தை இவ்விடத்தில் அநுஸந்திக்கக் கூடும்.

"ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோ(அ)திரோப்ய பணிதி: ஸா தர்ஹி வந்த்யா த்வயி।
ஸம்யக்ஸத்ய குணாபிவர்ணநமதோ ப்ரூயு: கதம் தாத்ருஶீ
வாக் வாசஸ்பதிநாபி ஶக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥"

7. இவ்விதமாகப் பகவத்ஸ்துதியைச் செய்வதாக ஸங்கல்பித்துக்கொண்ட ஆளவந்தார், பகவானுடைய பரத்வத்தை நினைத்து, 'அஹோ! பகவானுடைய குணங்கள் எங்கே? நான் எங்கே! என்ன ஸாஹஸத்துடன் அவைகளைச் சொல்வதாக நான் ஸங்கல்

பிக்கிறேன்?' என்று பயந்து, ஆரம்பிப்பதாக உத்தேசித்த வ்யாபாரத்திலிருந்து நிவ்ருத்தராய், தம்மையே நிந்தித்துக்கொள்ளுகிறார்.

'யஸ்ய மஹிமார்ணவஶீகராணு: ஶர்வபிதாமஹாத்யைரபி தத்வேந மாதும் ந ஶக்ய:, ததீயமஹிமஸ்துதிம் கர்துமுத்யதாய நிரபத்ரபாய கவயே மஹ்யம் நமோऽஸ்து'. பகவானுடைய மஹிமை ஸமுத்ரம்போலத் துரவகாஹம்; அந்த மஹிமையில் அதிக்ஷுத்ரமான ஒரு அம்ஶத்தைக்கூட யதாவத்தாக வர்ணிக்க, ஸர்வஜ்ஞரான ஈஶ்வரன் ப்ரஹ்மா முதலியவர்களும் அஶக்தராகிறார்கள். அப்படிப்பட்ட பகவானுடைய மஹிமையை ஸமக்ரமாக வர்ணிக்க முயலுகிறேனே நான்! என்னுடைய மௌட்யத்தையும் லஜ்ஜையற்ற தன்மையையும் என்ன சொல்வேன்? இவ்வளவு ஸாஹஸிகனாகிற நான் பிறரால் நமஸ்கரிக்கத் தகுந்தவனே!

மஹிமார்ணவஶீகராணு: - பகவானுடைய மஹிமையாவது, ஸர்வஜ்ஞனாகவும் ஸர்வஶக்தனாகவும் இன்னும் இதர அம்ஶங்களிலும் ஸர்வோத்தரனாகவுமிருக்கும் தன்மை. அது அகாதமாக இருப்பதனால், அதை ஸமுத்ரத்திற்குத் துல்யமாக வர்ணித்திருக்கிறது. அதன் திவலையென்றால், அதன் அத்யல்பமான ஒரு அம்ஶம்; அதாவது - அநந்தமாயுள்ள குணங்களில் ஒரு குணலேஶமென்று அர்த்தம்.

ஶர்வபிதாமஹாத்யைரபி தத்வேந மாதும் ந ஶக்ய: - லோகோத்தரமான ஜ்ஞானத்தை யுடையவர்களும் காலத்ரயத்திலுமிருக்கிறவர்களுமான ஶம்பு ப்ரஹ்மா முதலியவர்களாலும் யதாவத்தாகவும் ஸமக்ரமாகவும் அறியத்தக்கதன்று, என்று தாத்பர்யம். "ந யஸ்ய ரூபம் ந பலம் ப்ரபாவோ ந ச ஸ்வபாவ: பரமஸ்ய பும்ஸ: - விஜ்ஞாயதே ஶர்வபிதாமஹாத்யைஸ்தம் வாஸுதேவம் ப்ரணதோஸ்மி நித்யம்", "அந்தம் வேத ந கஶ்சந" இத்யாதியான வாக்யங்களே இதற்கு ப்ரமாணம்.

ததீயமஹிமஸ்துதிம் கர்துமுத்யதாய - ஈஶ்வராதிகளால் ஒரு குணலேஶமும் வர்ணிக்கக் கூடாமலிருக்க, பகவானுக்கே அஸாதாரணமாயுள்ள மஹிமையை ஸமக்ரமாக ஸ்தோத்ரம் செய்ய ப்ரவ்ருத்திக்கும் என்னுடைய சாபலம் அளவற்றதாக இருக்கிறது' என்று தாத்பர்யம்.



யத்வா ஶ்ரமாவதி யதாமதி வாப்யஶக்த:
ஸ்தௌம்யேவமேவ கலு தேऽபி ஸதா ஸ்துவந்த: |
வேதாஶ்சதுர்முகமுகாஶ்ச மஹார்ணவாந்த:
கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர்விஶேஷ: || 8.

---

கவயே - மற்றவர்களுக்கு ஒரு ரஸத்தை உண்டுபண்ணுகிறவன் கவி யென்னப்படுவன். இவ்விடத்தில், 'அத்யந்தம் உத்க்ருஷ்டர்களாலும் அஶக்யமான விஷயத்தில் அத்யந்தம் நிக்ருஷ்டனாகிற நான் ப்ரவ்ருத்தித்து எல்லாருக்கும் விடம்பந ரூபமான ஒரு ரஸத்தை உண்டுபண்ணுகிறபடியால் நானும் கவி' என்று தாத்பர்யம்.

நிரபத்ரபாய - நிர்லஜ்ஜனாகிற. 'பகவானோ அநந்தன்; என்னுடைய வாக்கோ பரிமிதம்; அந்த வாக்கினால் அவனை வர்ணிக்க உத்தேசிக்கும் நான் அபரிமிதனான பகவானிடத்தில் பரிமிதத்வ ரூபமான ஒரு தோஷத்தை உத்காடநம் செய்கிறவனாகிறேன். இப்படிச் செய்யும் என்னை எல்லாரும் பரிஹஸிப்பார்களே!' என்கிற ஶங்கையற்று இந்த வ்யாபாரத்தில் இறங்குகிறபடியால் நிர்லஜ்ஜனென்று சொல்லப்பட்டது.

மஹ்யம் நமோऽஸ்து - எனக்கு ஒரு நமஸ்காரம். 'ஸாஹஸிகர்களெல்லாரும் பெரியவர்கள், பூஜார்ஹர்கள்; நானும் பெரியதொரு ஸாஹஸத்தில் ப்ரவ்ருத்திக்கிறபடியால் நானும் நமஸ்காரார்ஹன்' என்று தாத்பர்யம். அதாவது - அத்யந்தம் நிந்தார்ஹனென்று கருத்து.

8. முதலில் பரத்வத்தைக் கண்டு அஞ்சி அகன்ற ஸ்ரீ ஆளவந்தார், பகவானிடத்திலுள்ள ஸௌலப்யாதி குணங்களை அநுஸந்தித்து ஒருவாறு ஸமாதானமடைந்தவராய், தமக்கு ஜ்ஞானம் ஶக்தி இவையுள்ள வரையில் ஸ்தோத்ரத்தில் ப்ரவ்ருத்தித்தால் ஶ்ரமம் வரும்பொழுது தீனாநுகம்பியான பகவான் க்ருபை செய்வன் என்கிற தைர்யத்துடன் மறுபடியும் ப்ரவ்ருத்திக்கிறார்.

'யத்வா, அஶக்தோऽபி ஶ்ரமாவதி யதாமதி வா ஸ்தௌமி; ஏவமேவ தேऽபி வேதா: சதுர்முகமுகாஶ்ச ஸதா ஸ்துவந்த: ஸந்தி; மஹார்ணவாந்த: மஜ்ஜதோரணுகுலாசலயோ: கோ விஶேஷ:!'

நான் பகவானுடைய குணங்களை யதாவத்தாக அறிய ஜ்ஞாந மற்றவனாகவும் சொல்ல ஶக்தியற்றவனாகவும் இருந்தபோதிலும், ஜ்ஞாநமும் ஶக்தியும் இருக்கிறவரையில் ஸ்தோத்ரம் செய்கிறேன். லோகோத்தரமான ஜ்ஞாந ஶக்திகளுடன் கூடிய வேதங்களும் ப்ரஹ்மா முதலியவர்களும் இம்மாதிரி யாகவே ஸ்தோத்ரம் செய்துகொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கும் எனக்கும் வேறு பல அம்ஶங்களில் தாரதம்யமிருந்தாலும் இந்த ஸ்தோத்ரம் செய்யும் அம்ஶத்தில் அந்தத் தாரதம்யம் கார்யகாரியாகாது; ஸமுத்ரத்தில் மூழ்கும் மிகச்சிறிய அணுவுக்கும் மிகப்பெரிய குல பர்வதத்திற்கும் என்ன வ்யத்யாஸம் தெரிகிறது? இரண்டும் பூர்ணமாக அமிழ்ந்து விடுமன்றோ?

யத்வா - இல்லாவிட்டால். 'ஏன் என்னை நான் நிந்தித்துக் கொள்ளவேணும்? என்னைவிட மிகப்பல மடங்கு சிறந்தவர்களான வேதங்கள் முதலியவர்களுடைய வ்ருத்தாந்தத்தைப் பார்த்தால் என்னை நிந்தித்துக்கொள்ளக் காரணமொன்றும் தெரியவில்லை' என்று தாத்பர்யம்.

𑌅𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌶𑍍𑌰𑌮𑌾𑌵𑌧𑌿 𑌯𑌥𑌾𑌮𑌤𑌿 𑌵𑌾 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 - இங்கு 'அஶக்தனாக இருந்தாலும்' என்று சொல்லப்பட் டிருக்கிறது; 'அஜ்ஞனாக இருந்தாலும்' என்கிற அர்த்தமும் விவக்ஷிதம்; '𑌶𑍍𑌰𑌮𑌾𑌵𑌧𑌿' '𑌯𑌥𑌾𑌮𑌤𑌿' என்னும் இரண்டு பதங்கள் பிந்தி யிருப்பது இதற்கு ஹேதுவாகும். அஸமர்த்தனானபடியால் அநுகம்பிக்கத் தகுந்தவன் என்று த்வநிக்கிறது.

𑌏𑌵𑌮𑍇𑌵 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌮𑍁𑌖𑌾𑌶𑍍𑌚 𑌸𑌦𑌾 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌃 - வேதங்கள் ப்ரஹ்மா முதலியவர்கள் விஷயத்திலும் பூர்ணமான ஸ்துதி ஸம்பவிக்கிறதில்லை என்பது இந்த வாக்யத்தால் உறுதிசெய்யப்படுகிறது. 'வேதம் முதலிய எல்லாரும் எப்பொழுதும் ஸ்தோத்ரம் செய்துகொண் டிருக்கிறார்கள்' என்று சொல்வதனாலேயே ஸ்தோத்ரம் இன்னும் ஸஶேஷமாக இருக்கின்றது என்று ஸூசிப்பிக்கப்படுகிறது. 'ப்ரஹ்மா' என்று சொல்லாமல் 'சதுர்முகன்' என்று சொன்னது, நாலு வேதங்களையும் ப்ரவ்ருத்தித்தவன் என்பதை க்யாபநம் செய்யும் பொருட்டே.



𑌕𑌿𑌂 𑌚𑍈𑌷 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌨 𑌤𑍇𑌽𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌃
𑌸𑍍𑌤𑍋𑌤𑌾𑌽𑌪𑌿 𑌤𑍁 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌕𑍃𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌮𑍇𑌣 ।
𑌤𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑌮𑌸𑍍𑌤𑍁 𑌸𑍁𑌲𑌭𑍋 𑌮𑌮 𑌮𑌨𑍍𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑍇-
𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌦𑍍𑌯𑌮𑍋𑌽𑌯𑌮𑍁𑌚𑌿𑌤𑍋 𑌮𑌮 𑌚𑌾𑌬𑍍𑌜𑌨𑍇𑌤𑍍𑌰 ॥ 9.

'𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍𑌤𑌃 𑌮𑌜𑍍𑌜𑌤𑍋𑌽𑌣𑍁𑌕𑍁𑌲𑌾𑌚𑌲𑌯𑍋𑌃 𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃?' - 'பகவானுடைய குணங்கள் பெரியதொரு ஸமுத்ரம்; அதில் நான் முழுகுவது போலவே வேதம் முதலியவையும் ஸமக்ரமாக மூழ்கி விடுகின்றன. அகாதமான ஸமுத்ரத்தில் ஒரு குலாசலம் முழுகினாலும், அணுவைப்போல அதுவும் காணாமல் போய் விடுகின்றது; அதுபோலவே, பகவத்குண வர்ணநத்தில் வேதம் முதலியவைகளுக்கும் எனக்கும் வாசியில்லை' என்று ஸ்ரீ ஆளவந்தார் தைர்யம் செய்துகொள்ளுகிறார்.

9. கீழ் ஶ்லோகத்தில், 'ப்ரஹ்மா முதலானவர்களுக்கும் தமக்கும் பகவானை ஸ்தோத்ரம் செய்யும் விஷயத்தில் வ்யத்யாஸமில்லை; நிஶ்ஶேஷ ஸ்துதி இரண்டு பெயர்களுக்கும் ஸாத்யமில்லை யாதலால்' என்று சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில், 'இரண்டு பெயருக்கும் விஶேஷமில்லை யென்பது மாத்ரமன்று; ஶக்திக்குறைவினால் தமக்கு ஶீக்ரம் ஶ்ரமமுண்டாகித் தீநாநுகம்பியான பகவானுடைய அநுக்ரஹத்திற்குத் தாமே ஶீக்ரத்தில் பாத்ரமாவ ராதலால், அந்த ஸ்தோத்ரத்தில் தமக்கே ப்ரக்ருஷ்டமான அதிகாரம் உண்டு' என்று சொல்லப்படுகிறது. இதனால், பகவானுடைய வாத்ஸல்யாதிஶயமே விளக்கப்பட்டதாயிற்று.

'𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌏𑌷 𑌸𑍍𑌤𑍋𑌤𑌾 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌤𑍇 𑌨𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌃, 𑌅𑌪𑌿 𑌤𑍁 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌕𑍃𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌮𑍇𑌣 (𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌃); 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌨𑍍𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌮𑌮 𑌤𑍁 𑌶𑍍𑌰𑌮𑌃 𑌸𑍁𑌲𑌭 𑌇𑌤𑌿 (𑌹𑍇𑌤𑍋𑌃) 𑌹𑍇 𑌅𑌬𑍍𑌜𑌨𑍇𑌤𑍍𑌰! 𑌅𑌯𑌮𑍁𑌦𑍍𑌯𑌮𑍋 𑌮𑌮 𑌉𑌚𑌿𑌤𑌃' - இது மாத்ரமன்று; (பின் சொல்லுகிறபடி நானே இந்த ஸ்தோத்ரம் செய்யும் விஷயத்தில் விஶேஷ அதிகாரமுள்ளவன்); ஏனென்றால், ஒருவன் ஸ்தோத்ரம் செய்ய ப்ரவ்ருத்தித்தால் அவன்மீது சீக்ரம் அநுகம்பை வருவதற்குக் காரணம் அந்த விஷயத்திலுள்ள அவனுடைய ஸாமர்த்யக்குறைவே தவிர விஶேஷித்த ஸாமர்த்யமன்று. எங்களிருவருக்குள் நான்தான் மந்தபுத்தி; ஆகையால், நான்தான்

ஶீக்ரத்தில் களைத்துவிடுவேன்; (என்மீது தான் பகவான் ஶீக்ரம் க்ருபை செய்வன்); ஆதலால் எனக்கே ஸ்தோத்ரம் செய்யும் உத்யமம் உசிதமாகும்.

ஶக்ஷ்யாமி நோ ஶக்தி ஶயந்ந தே நாநுகம்பய: - இதனால், ஸ்தோத்ரம் செய்பவனிடத்தில் ஸாமர்த்யாதிஶய மிருந்தால் அது ப்ராயேண க்ருபா மாந்த்யத்திற்குக் காரணம் என்று ஸூசிப்பிக்கப்படுகின்றது. 'இது, எல்லாருடைய விஷயத்திலும் உபபந்நமாகாது; உன் விஷயத்தில் தான் உபபந்நமாகும்; ஏனென்றால், நீ தீநாநுகம்பி; தைந்யம் எவ்விடத்தில் எப்பொழுது உண்டாகிறதோ, அவ்விடத்தில் அப்பொழுதே உன்னுடைய தயை ப்ரவஹிக்கிறது' என்பது 'தே' என்னும் பதத்திற்குத் தாத்பர்யம்.

அவிதாஹுதி க்ருதே நவரிஶ்ரமேண அநாநுகம்பய:- "வ்ரதம் மம" என்று ஆஶ்ரிதர்களுடைய ரக்ஷணத்தையே வ்ரதமாகக்கொண்டிருக்கும் பகவானுக்கு, அந்த ரக்ஷணத்திற்கு உபயுக்தமாயுள்ள ஏதாவதொரு வ்யாஜம் மாத்ரம் அபேக்ஷிதம்; பக்தனுடைய தைந்யம் அப்படிப்பட்ட வ்யாஜ மாகின்றபடியால், ரக்ஷணம் நிஶ்சயம் உண்டாகும் என்று தாத்பர்யம். வரிஶ்ரமேண - வரித: ஶ்ரமேண; அதாவது - ஜ்ஞாநமும் ஶக்தியு மில்லாததால் ஸ்தோத்ரம் செய்வதில் ஶீக்ரம் ஶ்ரமம் வந்துவிடுகிறது; ஶ்ரமத்தைக் கொடுக்கும் இந்த வ்யாபாரத்திலிருந்து உபரதனாகத் திரும்பலாமோவென்றால், பகவானிடத்திலிருக்கும் பக்தி அதற்கு இடம் கொடுக்கவில்லை; இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் வ்யாகுலனாக இருப்பதுதான் பரிஶ்ரமம். இப்படிப்பட்ட தைந்ய தஶை இருக்குமிடத்தில் பகவத்க்ருபை உடனே ப்ரவஹிக்கிறது என்று கருத்து.

மம து அயமேவ உசித: - 'மம' என்றால் 'மமைவ' என்று அர்த்தம். எனக்கே இந்த உத்யமம் உசிதமே தவிர, ப்ரஹ்மா ப்ரப்ருதிகளுக்கு உசிதமாகாது என்று தாத்பர்யம்.

அவேக்ஷேதா: - இந்த ஸம்புத்தியால், 'இப்படி அநுக்ரஹாதிஶயத்தை ஸூசிப்பிக்கும் அவலோகநத்தால் அடியேனைக் காப்பாற்ற வேணும்' என்பது குறிப்பு.

(இன்னும் வரும்.)

எஸ். வாஸுதேவன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2 SEP 1913 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச ஆவணி [ஸஞ்சிகை 7.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

"த்ருஷ்வநகேஷம் தரமலவணும் ஶிக்ஷமரஶாரம் ஶரம் உயாதெ - வளஶகக்ஷாவர்தாநாஜெ விஜய ஸவெ ஶதிஶஹ ஜெகவஷ்ரா" [ஸ்ரீபாகவதம் 1. 9. 33.]

கர்மாநுஷ்டாநம்..

சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் கர்மாநுஷ்டாந விஷயமாக விசாரித்து வருகையில், ஒரு கர்மத்தை நாம் அநுஷ்டிக்கும் காலத்தில் அதற்கு அநுகுணமான மநோவ்ருத்தி யின்றிக்கே கேவலம் பாஹ்ய வ்யாபாரங்களை மாத்ரம் அநுஷ்டித்து வந்தால், அந்தக் கர்மம் நிஷ்பல மென்றும், நம்மால் உத்தேஶிக்கப்படும் பகவந் முகோல்லாஸம் அதனால் கிஞ்சித்தேனும் ஏற்படாது என்றும் நாம் எழுதியிருந்தோம். கர்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொள்ள ஶக்தியற்றவர்களாகவும், அப்படி ஶக்தியில்லாதது பற்றி மிக்க அநுதாபத்துடன் 'பகவதாஜ்ஞாநுஷ்டாந ரூபமான ஒரு கைங்கர்யத்தை நாம் செய்கிறோம்' என்கிற ஸ்தூலமான ஒரு ஜ்ஞாநத்தை மாத்ர முடையவர்களாகவும் கர்மங்

களை ஶ்ரத்தையுடனும் விஶ்வாஸத்துடனும் அநுஷ்டித்து வரும் ஸாத்விகர்களுக்கு நாம் எழுதியது அந்வயிக்காது; ருஜுவான அநுதாபமுள்ள பக்தனைக் காணும்போது பகவாந் அவனிடம் அத்யந்தம் ப்ரீதனாகி ஶ்ரேயஸ் ஸாதநமான ஸாமக்ரிகளைக் கொடுத்து அவனைப் பூர்ணமாக அநுக்ரஹிக்கிறானென்று ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளிலிருந்து நாம் அறிகிறோம். அப்படிக்கில்லாமல், 'கர்ம ஸ்வரூபஜ்ஞாநத்தைத் தெரிந்துகொள்ள ஶக்தர்களாக இருக்கையிலும் அதில் ஶ்ரத்தையற்றவர்களாய்க் கேவலம் டம்பத்திற்காக அநுஷ்டாந பாவனையைப் பாராட்டிக் கொண்டு அந்தந்தக் கர்மங்களுக்கு அபேக்ஷிதமாயுள்ள மநோ வ்யாபார மின்றிக்கே பாப்ரதாரணத்தை மாத்ரம் செய்துவரும் அஸாத்விகர்கள் பகவதநுக்ரஹத்திற்கு ஸர்வதா பாத்ரமாக மாட்டார்கள் என்பதுதான் நம்முடைய அபிப்ராயம்.

நமது ஸித்தாந்தமும், நித்ய நைமித்திகாதி ரூபங்களாகிய அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களை நாம் அநுஷ்டிக்கும் காலங்களில் அவைகளுக்குரிய ஸ்வரூப ஜ்ஞாநத்துடனே அவைகளை நாம் அநுஷ்டிக்க வேண்டுமென்றே சொல்லுகின்றது. "தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந" என்கிற ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்யம் முதலியவற்றை அவலம்பித்து, ப்ரஹ்ம வித்யைக்கு ஆஶ்ரம கர்மங்களெல்லாம் அங்கங்களென்றும், அந்த ப்ரஹ்ம வித்யை உத்பந்நமாகி அதிஶய விஶேஷத்தை அடையும் பொருட்டு ப்ரதிதிநம் எவ்வித லோபமு மின்றிக்கே எல்லாக் கர்மங்களும் அநுஷ்டிக்கப்பட்டு வரவேண்டு மென்றும் ஸ்ரீ பாஷ்யத்தில் அக்நிஹோத்ராத்யதிகரணம் முதலிய பல இடங்களிலே ஸ்ரீ பாஷ்யகாரர் நிர்வஹித்திருக்கிறார். கர்ம ஸ்வரூப ஜ்ஞாநமின்றிக்கே கர்மாநுஷ்டாநம் செய்வது அந்தக் கர்மத்துக்கு ஒருவித லோபத்தை உண்டுபண்ணு மாதலால் ஸரியான ப்ரஹ்மவித்யா நிஷ்பத்திக்கு ஸ்வரூப ஜ்ஞாநத்துடன் அநுஷ்டிக்கப்படும் கர்மங்களே ஸாதநங்கள் என்பது இதனால் வ்யக்தமாகின்றது. தவிரவும், ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் 'கர்ம விசாரம் செய்துவிட்டே ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டியதா? இல்லாவிட்டால், கர்ம விசாரம் செய்யாமலே ப்ரஹ்மவிசாரத்தில் ப்ரவ்ருத்திக்கலாமா?'



என்பதை விசாரித்து 'ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸைக்குக் கர்ம விசாரம் பூர்வ வ்ருத்தம்' என்று அநேக ப்ரமாணங்களைக்கொண்டு ஸ்தாபிக்குமிடத்தில் பின்வருமாறு நிகமநத்தை நாம் பார்க்கிறோம். "அதோऽபேக்ஷிதகர்மஸ்வரூபஜ்ஞாநம் கேவலகர்மணாம் அல்பாஸ்திரபலத்வஜ்ஞாநம் ச கர்மமீமாம்ஸாவஸேயமிதி ஸைவ அபேக்ஷிதா ப்ரஹ்மஜிஜ்ஞாஸாயா: பூர்வவ்ருத்தா வக்தவ்யா" 'கர்ம ஸ்வரூப ஜ்ஞாநமும், கேவல கர்மங்களுடைய பலமானது அல்பமாகவும் அஸ்திரமாகவும் இருக்கின்றது என்கிற ஜ்ஞாநமும் கர்ம மீமாம்ஸையாலேயே உண்டாகத் தகுந்தவை யானதால், கர்ம விசாரம் செய்தே ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸையில் ப்ரவ்ருத்திக்கவேணும்' என்று இதற்கு அர்த்தம். இதனால், கர்ம மீமாம்ஸைக்குப் பூர்வ வ்ருத்தத்வம் வருவதற்கு 'அந்தக் கர்ம விசாரத்தால் கர்ம ஸ்வரூப ஜ்ஞாநமும் கர்மங்களுக்கு உள்ள அல்ப அஸ்திர பலத்வ ஜ்ஞாநமும் உண்டாகின்றன' என்பது ஹேது என்று சொன்னது ஆகிறபடியால், அல்ப அஸ்திர பலத்வ ஜ்ஞாநம் அவஶ்யம் அபேக்ஷிதமா யிருப்பதுபோல ஸ்வரூப ஜ்ஞாநமும் அவஶ்யம் அபேக்ஷிதமென்று ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவுள்ள மென்பது ஸித்தம். இந்த வாக்யத்திற்கு அவதாரிகையாக ஶ்ருத ப்ரகாஶிகையில் காணப்படும் வாக்யமும், கர்மாநுஷ்டாநத்திற்கு ஜ்ஞாநம் அபேக்ஷிதம் என்றே சொல்லுகின்றது. "கர்மவிசாரஸ்ய கிம் ப்ரஹ்மவிசாரபூர்வவ்ருத்தத்வமித்யபேக்ஷாயாம், கர்மாநுஷ்டாநஸ்ய ஜ்ஞாநாபேக்ஷத்வாத் ஜ்ஞாநஸ்ய ச விசாரஸாத்யத்வாத் ததுபய: பூர்வவ்ருத்த இத்யாஹ அத இதி॥"

ஆனால், 'ஜப காலங்களில் உச்சரிக்கப்படும் மந்த்ரங்களுடையவும் அந்த மந்த்ரங்களுக்கு பீஜாக்ஷரங்களாக உச்சரிக்கப்படும் அக்ஷரங்களுடையவும் அர்த்த ஜ்ஞாநம் அபேக்ஷிதம் தானோ?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். த்ருடமான விஶ்வாஸம் அவஶ்யம் அபேக்ஷிதமாவதுபோல, அர்த்த ஜ்ஞாநமும் அபேக்ஷிதமென்றே பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆசார்யர்களிடமிருந்து மந்த்ரோபதேஶம் பெற்றுக்கொள்ளும்பொழுது அதன் அர்த்தத்தையும் தெரிந்துகொள்வது ஶிஷ்டாசாரமன்றோ? நமக்கு ஸர்வவிதத்திலும் தாரகமாயுள்ள திருமந்த்ரங்களுடைய அர்த்தத்தை

நமது ஆசார்யர்கள் நமக்கு உபதேசிக்கவில்லையா ? மந்த்ரங்களுடைய அர்த்த ஜ்ஞாநம் அநபேக்ஷிதமானால் திருமந்த்ரார்த்தம் முதலிய க்ரந்தங்களின் ரசனையே வ்யர்த்தமாக ப்ரஸங்கிக்கும்.

"ஸத்த்வோத்தம் ஸகலஜ்ஞேய ஸாக்ஷாத்காரம் அபேக்ஷ்ய க்ஷிபது ... ... ஸாங்க்யஜ்ஞா யதி கஶ்சித்கஶ்சித் ஸம்ஸாரம் நாய ஸ்வயம்ருஷ்யஸ்ய நஃ ॥"

என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அநுக்ரஹித்திருக்கிறாரே தவிர, ஜ்ஞாநாபேக்ஷையைக் காட்டும் 'ஸாங்க்யஜ்ஞாஃ' என்னும் பதமின்றிக்கே 'கேவலம் அபோஹ்யாஸங்கேந காயம் க்ஷிபது யதிகஶ்சித்கஶ்சித் ஸ ஸோ நாயஃ' என்று அநுக்ரஹிக்கவில்லை. ஆகையால், எந்த அநுஷ்டாநத்திலும் ஜ்ஞாநம் அபேக்ஷிதமே தவிரக் கேவல காயிக வாசிக வ்யாபாரங்கள் ப்ரயோஜகங்களாகமாட்டா என்றே நாம் நினைக்கிறோம்.

∴ ∴ ∴

## ஸ்ரீரங்கம் தேவஸ்தானம்.

தர்மத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆலயங்கள் மடங்கள் முதலிய ஸ்தாநங்களுடைய பரிசீலநம் ஸரிவர நடந்துவராவிட்டால், அதற்கு வேண்டுபவையான சீர் திருத்தங்களை க்ரமமாகச் செய்துவைப்பதை நோக்கமாகக் கொண்டு 'தர்ம ரக்ஷண ஸபை' என்னும் ஒரு ஸபை கொஞ்ச காலமாக நடைபெற்று வருகின்றது என்பது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அந்த ஸபையார், ஸ்ரீரங்கம் தேவஸ்தாநத்தில் சீர் திருத்தங்கள் அபேக்ஷிதங்களாயிருப்பதை உணர்ந்து, அவைகளைச் செய்விக்கும்பொருட்டுத் திருச்சிராப்பள்ளி ஸப்கோர்ட்டில் ஸ்வல்ப காலத்திற்கு முன்னே ஒரு வ்யாஜ்யம் செய்தார்கள். அது இப்பொழுது முடிவுபெற்றது ; ஸரியான பரிசீலநத்திற்கு உரிய புதிய வ்யவஸ்தைகளும் கோர்ட்டாரவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வ்யவஸ்தைகளின் விசேஷித்த விஷயங்களை இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். இவைகளை ஸர்வ ப்ரகாரத்திலும் நிர்த்துஷ்டமென்று நாம் சொல்லத் துணியோம். பூர்ணமான பர்யாலோசனைகள் செய்து யாதொரு அத்ருப்திக்கும் இடங் கொடுக்காமலிருக்கவேண்டு



மென்கிற ஸாது தமமான எண்ணங்களுடன் புதிதாக எவ்விதமான வ்யவஸ்தையை நாம் உண்டுபண்ணினாலும், அந்த வ்யவஸ்தை ஸங்குசித ஜ்ஞாநர்களான மநுஷ்யர்களால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றது என்கிற காரணத்தினாலேயே, அநேக ப்ரகாரங்களில் தோஷ துஷ்டமாகவும் குறைவுள்ளதாகவுமே இருக்குமாகையால், ப்ரக்ருத இந்தத் தேவஸ்தாந ஸம்பந்தமான வ்யவஸ்தையும் சில அம்சங்களிலாவது தோஷயுக்தமாகவே இருக்கக் கூடும். ஆனாலும், அநேக அம்சங்களில் முந்தி இருந்த ஸ்திதியைக் காட்டிலும் இந்த வ்யவஸ்தை நடைபெற ஆரம்பித்தபிறகு தேவஸ்தாநத்திற்கு நன்மை ஏற்படுமென்பதில் ஸந்தேஹமே இல்லை. ஸேவார்த்திகளால் பகவதர்ப்பணமாக ஸமர்ப்பிக்கப்படும் த்ரவ்யங்களுக்கு ஸத் விநியோகமும், தாரித்ர்யத்தால் வருந்தும் அநேக ஏழைகளுக்கு தர்ம்யமான ஸஹாயமும், ச்ரேயஸ் ஸாதகமான ஆத்ம ஸம்பந்த ஜ்ஞாநத்தின் ப்ரசாரமும் பலவகையில் அபிவ்ருத்தங்களாகி, ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிவாரத்தை ஆச்ரயிக்கும் ப்ரஜைகள் எல்லாருக்கும் இனி மேன்மேல் க்ஷேமம் உண்டாகுமென்றே நாம் நினைக்கிறோம்.

∴ ∴ ∴

## ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரவசன ஸபை.

சற்றேறக்குறைய இரண்டு வருஷங்களுக்கு முன்னமே, இவ்விடத்திலுள்ள சில ஆஸ்திகர்களால், ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸம்பந்தமான க்ரந்தங்களை சுத்தமாக ப்ரசாரம் செய்து அதனால் ஜநங்களுக்கு ஒரு விதமான நன்மையைச் செய்ய வேணுமென்கிற எண்ணத்துடன் 'ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரவசந ஸபை' என்னும் ஒரு ஸபை உண்டுபண்ணப்பட்டது என்று அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். ஸர்வ விதத்திலும் எல்லாருடைய விச்வாஸத்திற்கும் கௌரவ புத்திக்கும் பாத்ரமாகும் அநேக ஆஸ்திகர்கள் இந்த ஸபையில் அந்வயித்திருந்தபடியாலும், பாகவதோத்தமர்களான பல வித்வத் ரத்நங்களுடைய அநுக்ரஹமும் இந்த ஸபைக்குக் குறைவின்றிக்கே கிடைத்திருந்தபடியாலும், இந்த ஸபையினுடைய நோக்கம் சீக்ரத்தில் பரிநிஷ்பத்தியை அடையுமென்று மிக்க ஆவலுடன் நாம் எதிர்பார்த்திருந்தோம். இது வரையில் அந்த ஸபையாருடைய ப்ரய

த்நம் ஸபலமானதாக நமக்குத் தெரியவரவில்லை. ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனுடைய திவ்யஸூக்திகளை முதலில் ப்ரசுரம் செய்வதாகவும் பிறகு இதர விஶிஷ்டாத்வைதிகளான ஆசார்யர்களுடைய க்ரந்தங்களை க்ரமஶ: வெளிப்படுத்துவதாகவும் இந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் எண்ணி, 'ந்யாய பரிஶுத்தி' என்னும் க்ரந்தத்தைச் சில பண்டிதவரர்களைக்கொண்டு பரிஶோதநம் செய்வித்து அதை அவர்கள் கொஞ்ச காலமாக அச்சிட்டுவந்ததை நாம் அறிவோம். பிறகு என்ன காரணத்தினாலோ அது பரிஸமாப்தியை அடையாமற் போய்விட்டது. "ஶ்ரேயாம்ஸி பஹூ விக்நாநி" என்கிறபடி நல்ல கார்யங்களுக்கு அநேக விக்நங்கள் நேர்வது ஸஹஜமானாலும், உத்தம குணமுடையவர்களான இந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் ஸர்வஶ்லாக்யமான இந்த ப்ரயத்நத்தை இப்படி விகடிதமாகும்படி பார்த்து வருகிறார்களே என்பது நமக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகின்றது. ஆனாலும், இந்த விக்நம் தாத்காலிகமான ஒரு மூர்ச்சை தான் என்றும், அதிஶீக்ரத்தில் பகவத் கடாக்ஷத்தால் அநுக்ருஹீதர்களாய் இந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் ஆரப்தமான கார்யத்தை முடிவுபெறச் செய்ய வேண்டுவதற்கு உரிய முயற்சிகளைச் செய்வார்களென்றும் நம்புகிறோம். [ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ப்ரவசந ஸபையைப்பற்றி நாம் இதை எழுதியதற்குப் பிறகு, 'ந்யாய பரிஶுத்தி' என்னும் க்ரந்தம் பூர்த்தியாகிவிட்டதென்றும், இனிமேல் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றிப் புதிதாகச் சில தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவென்றும் கேள்விப்படுகிறோம். இது எல்லாருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய ஸமாசாரம்.]

∴ ∴ ∴

**மைஸூர் மர்யாதை.**

சென்ற ஆனி மாஸத்திய ஸஞ்சிகையில், மைஸூர் மஹா ராஜாங்கத்தார் ஸ்ரீ அஹோபிலம் முதலிய சில ஸந்நிதிகளுக்கு பஹூகாலமாகச் செய்துகொண்டு வந்திருந்த மர்யாதையை இப்பொழுது குறைத்து விட்டார்களென்றும், அப்படிக் குறைத்திருப்பதன் ந்யாய விரோதத்தைப்பற்றி பெங்களூர் ஸ்ரீ. பி. கெ. கருடாசார்யர், திவான் அவர்களுக்கு மனுச் செய்துகொண்டிருக்கிறாரென்றும் எழுதியிருந்தோம். அதற்குத் திவான் அவர்



கள் இன்னும் எவ்வித உத்தரவையும் செய்ததாகத் தெரியவில்லை. இது இப்படியிருக்கையில், ஸ்ரீ. பி. கெ. கருடாசார்யர், தமது மனுவுக்கு ஒரு பலத்தை ஸம்பாதிக்கக் கருதி ஸ்ரீ. அஹோபிலம் ஸந்நிதிக்கு ஒரு விஜ்ஞாபந பத்ரிகையை அனுப்பி, ஸந்நிதி தஸ்தாவீஜுகளிலிருந்து மைஸூர் மஹாராஜாங்கத்தாராற் செய்யப்படவேண்டும் மர்யாதையின் ப்ரகாரம் ஏதாவது வெளிப்படும் பக்ஷத்தில் அதைத் தமக்கு நியமிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்திருந்தார். அந்த விஜ்ஞாபநத்திற்கு ஸ்ரீ ஸந்நிதி ஏஜண்டு ஸ்ரீ. குப்புஸ்வாமி ஐயங்கார், ஸந்நிதி ஸம்பந்தமான தஸ்தாவீஜுகளெல்லாம் ந்ருஸிம்ஹபுரத்தில் இருக்கின்றனவென்றும், அவைகளை இப்பொழுது தேடி எடுப்பது ஸாத்யப்படாதென்றும் ஒரு பதில் எழுதியிருக்கிறாராம். இந்த ஔதாஸீந்யத்தைப் பற்றி நாம் என்ன சொல்லலாம்? ஸ்ரீ ஸந்நிதியின் கௌரவத்தை உத்தேஶித்தே மிகுந்த ஶ்ரத்தையுடன் தமது ஶ்ரமத்தைப் பாராட்டாமல் இந்த விஷயத்தில் ப்ரவ்ருத்திக்கும் ஸ்ரீ. பி. கெ. கருடாசார்யர் போன்ற ஆஸ்திகருக்கு ஸ்ரீ ஸந்நிதி அதிகாரிகள் இவ்வளவு அநாதரவுடன் ஸ்ரீமுகம் நியமிப்பது அவர்களுடைய அதிகாரத்திற்கும் காம்பீர்யத்திற்கும் அத்யந்தம் அநுபபந்நம். இவர்களுடைய ஆதரவு இல்லாவிடினும், இந்த விஷயத்தில் ப்ரவ்ருத்திக்க வேண்டியது ஶிஷ்ய தர்மமென்றே எண்ணி ப்ரவ்ருத்தித்திருக்கும் ஸ்ரீ கருடாசார்யர், தம்மால் இயன்றமட்டும் கார்ய ஸாதநத்தில் பரிஶ்ரமப்படுவரே தவிர, ஸந்நிதியார் அநாதரித்து விட்டார் என்கிற காரணத்தால் உபரதராகத் திரும்பமாட்டார். ஆனாலும், ஶிஷ்ய ஸபை ஸம்பந்தமிருக்குமிடத்தில் ஸ்ரீ ஸந்நிதியார் ஹிதாஹித விவேசநமின்றிக்கே ப்ரமப்ரயுக்தமான சில அதிஶங்கைகளைச் செய்துகொண்டு வழியல்லா வழியில் ப்ரவருத்திக்கிறார்களே! என்பது மாத்ரம் நமக்கு ஶோகத்தை விளைவிக்கின்றது.

ஸ்ரீ:.

# வேதாந்தார்த்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

## ஜந்மாத்யதிகரணம். 2.

முன் அதிகரணத்தில், ஸித்த வஸ்துவான ப்ரஹ்மத்தை வேதாந்தங்கள் போதிக்கமாட்டா என்கிற ஆக்ஷேபம் நிவர்த்திக்கப்பட்டு வேதாந்தவிசாரம் ஆரம்பிக்கத்தக்கது என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ஆகிலும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் ஏற்பட்டாலன்றோ அதை விசாரிப்பது கூடும்; அதற்கு லக்ஷணமே சொல்வது கூடாது என்னும் ஆக்ஷேபம் உண்டாகிறது. இதை இந்த அதிகரணத்தில் பரிஹரிக்கிறார்.

**ஜந்மாத்யஸ்ய யத:** (க. க. உ.)

**இந்த ஜகத்துக்கு எதிலிருந்து ஜந்மம் முதலானவையோ (அது ப்ரஹ்மம்.)**

அதாவது - நாம் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிற மிக விசித்ரமான லோகமும், பலவகையாய் வேறு வேறு ஸுகதுக்கங்களுடன் கூடி விளங்கும் ஜீவகோடிகளும் ஸர்வஜ்ஞராய் ஸர்வஶக்தியான எந்தப் பகவானால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை யடைகின்றனவோ அந்த வஸ்துவே ப்ரஹ்ம மென்னப்படுகிறது.

விசாரிக்கப்பட வேண்டியதான ப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் சொல்லமுடியாதென்று **பூர்வபக்ஷம்.** ஏனென்றால், லக்ஷணமென்பது, ஒரு வஸ்துவை அதைப் போன்றனவும் அதைப்போலிராமலிருக்கின்றனவுமான மற்றெல்லாவஸ்துக்களிலிருந்தும் பிரித்துக் காட்டுவதே யாகும். அப்படி லக்ஷணம் சொல்வது **விஶேஷணத்தாலாவது உபலக்ஷணத்தாலாவது** சொல்ல வேண்டும். 'கறுத்த மேனியும் சிவந்த கண்ணு முள்ளவன் க்ருஷ்ணன்' என்றால், இந்த அடையாளங்கள் க்ருஷ்ணனுக்கு விஶேஷணங்களாய்



அவனைக் குறிக்கின்றன. 'அதோ ஸாரஸ பக்ஷி தங்கியிருக்கும் வயல் தேவதத்தனுடையது' என்றால், அந்தப் பக்ஷியின் ஸம்பந்தம் உபலக்ஷணமாய்த் தேவதத்தன்வயலை அறிவிக்கின்றது. இப்படி விஶேஷணமாயாவது உபலக்ஷணமாயாவது ப்ரஹ்மத்தின் அடையாளங்களைக் குறிப்பதொரு வேதாந்த வசநமு மில்லையாகையால், ப்ரஹ்ம விசாரம் கூடாது. ஆனால், '"யதோ வா இமாநி பூதாநி" என்று தொடங்கி "தத் ப்ரஹ்ம" என்று முடிகிற (தைத்திரீயம் ப்ருகுவல்லி 1) வாக்யம் லக்ஷணமாகாதோ?' என்று கேட்கலாம். இந்த வாக்யத்தால், 'எதிலிருந்து இந்தப் பூதங்களெல்லாம் உண்டாகின்றனவோ, உண்டானபின் எதனால் பிழைத்திருக்கின்றனவோ, முடிவில் எதில் லயத்தை அடைகின்றனவோ அதுதான் ப்ரஹ்மம், அதை அறி' என்று அர்த்தம் ஏற்பட்டபோதிலும், இந்த மூன்று அடையாளங்களும் ப்ரஹ்மத்துக்கு விஶேஷணங்களாய் லக்ஷணமாகா. விஶேஷணங்கள் விலக்கும் குணமுள்ளவைகள். 'கறுத்த மநுஷ்யன் க்ருஷ்ணன்' என்றால், 'கறுத்த' என்னும் விஶேஷணம் கறுப்பில்லாத இதர மநுஷ்யர்கள் எல்லாரையும் விலக்குகிறது. அதுபோல, இங்கு மற்றவர்களை விலக்கி ப்ரஹ்மத்தைக் காட்ட மூன்று விஶேஷணங்க ளிருப்பதால் ஒவ்வொரு விஶேஷணத்தாலும் குறிக்கப்பட்ட ப்ரஹ்மம் வேறாகவே ஆகும். ஆனது பற்றி, ஒரே ப்ரஹ்மத்துக்கு இவை லக்ஷணமாகா. க்ருஷ்ணன் ஒருவனென்று நாம் அறிந்திருக்கும்போது, கறுத்த மேனியன், சிவந்த கண்ணன், நீண்ட கையன் என்று பல விஶேஷணங்கள் சொன்னாலும் இவைகள் ஒருவனையே குறிப்பதாக நாம் அறிகிறோம். ப்ரஹ்மம் ஒன்றா? பலவா? என்று நாம் அறியோமாகையால் முன் சொன்ன மூன்று அடையாளங்களால் ஒரே ப்ரஹ்மமென்று நாம் அறிவது கூடாது. ஆகையால், இந்த வாக்யம் விஶேஷணமடியாக ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாகாது.

மேலும், உபலக்ஷண வழியாலும் இந்த அடையாளங்கள் லக்ஷணத்துக்குத் தகாதவையே. 'ஸாரஸ மிருக்கும் வயல் தேவதத்தன் வயல்' என்னுமிடத்து, நமது கண்ணுக்கு ஒரு வயல் தென்பட்டு அதில் ஸாரஸத்தின் சேர்க்கையும் தெரிந்து இந்த

அடையாளத்தால் 'இது தேவதத்தனுடையது' என்னும் முன் அறியாத ஸம்பந்தத்தை அறிகிறோம். அப்படியே 'சந்த்ரன் எங்கே?' என்போனுக்கு 'அதோ மரக்கிளையினருகில் சந்த்ரன்' என்னும் வாக்யம் சந்த்ரனைக் காட்டுகிறது. இங்கும் முன் இவன் பார்த்தறிந்த சந்த்ரன் மனத்தில் இருப்பதால் மரக்கிளையும் சந்த்ரனும் ஒரே திக்கில் இருப்பன வென்கிற இந்த ஸம்பந்தத்தை அறிந்தவுடன் சந்த்ரனுடைய நிலைமையை அறிய இந்த வாக்யம் ஹேதுவாகின்றது. இதுவும், உபலக்ஷணத்துக்கு உதாஹரணம். அதாவது - உபலக்ஷண ஸ்தலங்களிலெல்லாம், முன் ஒரு ப்ரகாரமாய் அறியப்பட்ட வஸ்து வேறு ஒருஅடையாளத்தால் வேறு ப்ரகாரமாய்க் காணப்படும். இங்கு ப்ரஹ்மம் ஒருவிதமாயும் முன் அறியப்பட்டதல்ல தாகையால் இதை யறிய உபலக்ஷணவழியாய் லக்ஷணம் சொல்வதும் கூடாது. ஆகையால், முன் வாக்யத்தால் ப்ரஹ்ம லக்ஷணம் ஒன்றும் ஏற்படவில்லை.

இந்தப் பூர்வபக்ஷத்துக்கு ஸூத்ரம் ஸமாதாநம். எப்படியெனில், உபலக்ஷணமாயும் விஶேஷணமாயும் இந்த வாக்யத்தில் கண்ட அடையாளங்களே தகுந்த லக்ஷணம்.

**முதலாவது.**—'ப்ரஹ்மம் எது?' என்னும் கேள்விக்கு 'ஜகத்காரணம் ப்ரஹ்மம்' என்பது மறுமொழி. ப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் 'ஜகத்துக்குக் காரணமான வஸ்து' என்றதாயிற்று. பல ஶ்ருதிகளில் எந்த வஸ்து எந்தக் குணங்களுடன் பொருந்தினதாய் எல்லா ஜகத்துக்கும் காரணமாகச் சொல்லப்படுகின்றதோ அதுதான் ப்ரஹ்மம். 'ப்ரஹ்மம்' என்னும் சொல், "𑌬𑍃𑌹𑌤𑌿 𑌬𑍃𑌂𑌹𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" (அதர்வ ஶிரஸ் உபநி.) "𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍍 𑌬𑍃𑌂𑌹𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇" (விஷ்ணுபுராணம்) என்கிற வசநங்களால் அளவற்ற பெருமையை யுடைய ஓர் வஸ்துவைக் காட்டுகிறது. ஜகத்துக்குக் காரணமாய் ப்ரஸித்தமான வஸ்து "𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌦𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂" என்பது முதலான (சாந்தோக்-



6. 2. 1.) வாக்யங்களில் சொல்லப்படுகிறது. இந்த ஶ்ருதிக்குப் பொருள்: '𑌇𑌦𑌂 𑌸𑌦𑍇𑌵 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌸𑍀𑌤𑍍' — நாம் இப்போது விவிதமாய்ப் பார்க்கும் இந்த ப்ரபஞ்சம், முன், (அதாவது - ப்ரளயகாலத்தில்,) ஸத் ஆக (அதாவது - இருக்கிறதென்னும் ஒரே அவஸ்தையை யுள்ளதாய்,) ஒன்றாய் (அதாவது - ஒரே வஸ்துவாய்) இருந்தது. அதாவது - ஸத் என்னும் காரணவஸ்து, பின்புண்டான எல்லாவற்றுக்கும் உபாதாந காரணமாயும், '𑌅𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂' அதுவே எல்லாவற்றுக்கும் நிமித்தகாரணமாயும் ஆயிற்று. '𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯' - அந்த ஸத் என்னும் காரணவஸ்துதானே எல்லா வஸ்துவாயும் ஆகத் தன்னை ஸங்கல்பித்துக் கொண்டது. இந்த ஸ்ருஷ்டி வாக்யத்தில் வ்யக்தமாய் ஒரு வஸ்து ஜகத்துக்கு உபாதாந காரணமாயும் அதுவே நிமித்த காரணமாயும் சொல்லப்படுகிறது. இந்த ஶ்ருதியில் சொல்லப்பட்ட வஸ்துதான் பரஹ்மம் என்று '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌜𑌾𑌤𑌿' என்னும் வாக்யம் குறிப்பிடுகின்றது. பொதுவாய் ஸர்வஜ்ஞமாய் ஸர்வஶக்தியானதென்று அறியப்பட்ட ஒரு வஸ்துவை ஜகத்காரண மென்கிற உபலக்ஷணத்தாலே 'ப்ரஹ்மம்,' அதாவது - ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் அளவற்றது என்று நாம் அறிகிறோம். 𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵மாவது - கல்யாண குணங்களுடன் பொருந்தியிருக்கை; 𑌬𑍃𑌂𑌹𑌣𑌤𑍍𑌵𑌂 - 𑌅𑌖𑌿𑌲𑌹𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌤𑍍𑌵𑌂, ஹேயமான குணங்க ளில்லாமலிருக்கை. இப்படி இரண்டு அர்த்தங்களையும் 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍தம் காட்டுவதால், ஒரு ப்ரகாரமாய் ஸர்வஜ்ஞமாய் ஸர்வஶக்தியாய் அறியப்பட்ட வஸ்து ஜகத்தின் ஜந்மம், ஸ்திதி, லயங்களாகிற உபலக்ஷணங்களால் ப்ரஹ்மமென்று அறியப்படுகிறது. இதை ஸ்ரீ நிகமாந்தமஹாதேஶிகன்,

'𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌃 𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌗𑍁𑌣𑌨𑌿𑌧𑌿𑌰𑌵𑌜𑌿𑌤𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌧𑍇𑌯 𑌉𑌕𑍍𑌤𑌃' என்று அருளிச்செய்தார்.

சித்தையும் அசித்தையும் ஶரீரமாகக் கொண்ட பரமாத்மாவுக்கு இந்த இரண்டும் விஶேஷணங்கள். விஶேஷ்யமான பர

மாத்மாவை ப்ரஹ்ம மென்பது உண்டு. விஶிஷ்டத்துக்கும் ப்ரஹ்மம் என்று வ்யவஹார முண்டு. விஶேஷ்யமான ப்ரஹ்ம ஸ்வரூபத்துக்கு ஜகத்காரணத்வம் உபலக்ஷணம். இதனால், இதுவரையிலும் சொல்லிவந்ததை உபலக்ஷணபக்ஷ மென்கிறது.

**இரண்டாவது**-விஶேஷண பக்ஷத்திலும் இந்த ஜகத்காரணத்வமே ப்ரஹ்மலக்ஷணமாகச் சொல்லப்படுகிறது. அப்போது விஶிஷ்டமான ப்ரஹ்மத்துக்கு அது லக்ஷணமாகும். விஶிஷ்டத்துக்கு லக்ஷணமில்லாமல் விஶேஷ்யாம்ஶத்துக்கு மாத்ரம் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்னும் (தை - ஆந. 1.) வாக்யம் லக்ஷணம்; அதை ஶோதகவாக்யமென்று சொல்வது உண்டு. ப்ராப்யமான ப்ரஹ்மம் விஶிஷ்டமானதனால் விஶிஷ்டத்தின் காரணத்வத்தையே ஸூத்ரக்காரர் லக்ஷணமாக உதாஹரித்தார். இனி, விஶேஷணமாயும் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் ப்ரஹ்மலக்ஷண மென்னப்படுகின்றன; இங்கே ஸ்ருஷ்டிகாரணத்வம், ஸ்திதிகாரணத்வம், லயகாரணத்வம் என்னும் மூன்றும் தனித்தனியாயும் சேர்ந்தும் லக்ஷணங்கள்தான். மூன்று லக்ஷணங்களால் வெவ்வேறு ப்ரஹ்மமாகத் தோன்றுகிறதென்று சொன்னது சரியன்று. விஶேஷணங்கள் பரஸ்பர விருத்தமாயிருந்தால் விஶேஷ்யமான வஸ்துக்கள் பலவாகத்தோன்றும். 'கொம்புள்ளதும் கொம்பற்றதுமான பசு' என்றால் சில கொம்புள்ளன வென்றும் சில கொம்பற்றன வென்றும் அர்த்தமாகும். 'வெளுத்துக் கொழுத்த பசு' என்றால் ஒரே பசு இரண்டு விஶேஷணங்களு முடையதாயிருக்கக் குறையில்லை; அப்படியே ஸ்ருஷ்டிக்கும் ஸ்திதிக்கும்லயத்துக்கும் காரணமான வஸ்து ஒன்றே யாகும். ஏனென்றால், ஸ்ருஷ்டியும் ஸ்திதியும் லயமும் வெவ்வேறு காலமாகையால் ஒன்றுக்கொன்று விரோதமில்லை. 'ஸ்ருஷ்டிகாரணம் ப்ரஹ்மம்' என்றாலும் ஸ்திதிகாரணமாக வேறு ஒன்றும் சொல்லக்கூடாமையால் ஒவ்வொரு லக்ஷணமே பொருந்தும். ஆகிலும், ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு வெவ்வேறு காரணங்களோ என்கிற ஸம்ஶய நிவ்ருத்திக்காக மூன்றும் சேர்ந்து ப்ரஹ்ம லக்ஷணமாகச் சொல்லப்படுகிறது. ஆகை



யால், 'யதோ வா இமாநி' என்னும் வாக்யமே விஶேஷண வழியாக ப்ரஹ்ம லக்ஷண மாகையால் ப்ரஹ்மவிசாரம் செய்வது கூடும் என்றதாயிற்று.

'ஒரே லக்ஷணத்தை விஶேஷணமாயும் உபலக்ஷணமாயும் சொல்லக் கூடுமோ? நித்யஸித்தமான ப்ரகாரம் விஶேஷணமாகும்; சந்த்ரனுக்கு ப்ரகாஶமும் தேவதத்தனுக்குக் கறுப்பு நிறமும் இதற்கு உதாஹரணங்கள். சில ஸமயத்தில் மாத்ரம் சேர்க்கையுள்ள ப்ரகாரம் உபலக்ஷணம்; சந்த்ரனுக்குக் கிளையின் ஸம்பந்தமும், தேவதத்தனுக்குக் குண்டலமும் இதற்கு உதாஹரணங்கள். இப்படி விஶேஷணமும் உபலக்ஷணமும் விருத்தரூபமாயிருக்க, ஒரே லக்ஷணமான காரணத்வத்தை இரண்டுவிதமாயும் சொல்லலாமோ?' என்னும் ஆக்ஷேபத்தை ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் நிவர்த்தித்திருக்கிறார். எப்படியென்றால், "மோக்ஷாபேக்ஷா வாஸ்யஹேது ஹ்ருத்யமயவி ஸமேது விக்யாவிகல்பாஸ" [அதிகரண ஸாராவளி 39.] அதாவது - மோக்ஷபலத்தைக் கொடுக்கும் உபாஸநங்கள் பலவாகையால், அவைகளில் சிலவற்றில் சில குணங்களும் மற்றவைகளில் வேறு குணங்களும் உபாஸ்யமான ப்ரஹ்மத்துக்குச் சேர்ந்தனவாக உபாஸிப்பது ஶாஸ்த்ர ஸித்தம். எல்லாவித்யைகளிலும் ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் ஆநந்தத்வம் அமலத்வம் ஆகிய குணங்களுடனேயே ப்ரஹ்மம் உபாஸிக்கப்பட வேண்டும். இவை நீங்கலான மற்றைக் குணங்கள் ப்ரதிவித்யை பேதிக்கு மாகையால் அந்தந்த வித்யைக்கு அவஶ்யமான குணம் விஶேஷணமாயும் அதே குணம் இதர வித்யைகளுக்கு உபலக்ஷணமாயும் ஆகக்கூடும். "காரணம் து த்யேய:" என்னும் ஶ்ருதியிலும் மற்ற இடங்களிலும் காரணத்வம் விஶேஷணமாயும் மற்றத் தஹரவித்யாதிகளில் அதே உபலக்ஷணமாயும் ஆகலாமாகையால், இந்த ஆக்ஷேபம் ஸரியன்று.

"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" (தை. ஆந. 1.) என்னும் வாக்யம் இந்த ஸூத்ரத்துக்கு ஸாக்ஷாத்தாய் விஷய வாக்யமல்

லாத போதிலும் அதன் அர்த்தமும் இங்கே விசாரிப்பது உசிதம். "யதோ வா இமாநி" என்னும் காரணவாக்யத்தால் லக்ஷணம் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இந்த வாக்யத்தில் நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. அந்த ஸ்வரூபம் எப்படிப்பட்டதென்றால் ஸத்யம் - நிர்விகாரம். அதாவது - ஒரு விதமான மாறுதலுக்கும் உட்பட்டதன்று என்றதாயிற்று. இந்தப் பதத்தால் ஸ்வரூபத்தில் பல மாறுதல்களுள்ள அசித்தும் ஜ்ஞாந ஸங்கோச விகாஸமுள்ள சேதநனும் விலக்கப்பட்டார்கள். ஜ்ஞாநம் - ஜ்ஞாநஸ்வரூபமாயுள்ளது; நித்யமாயும் குறைவற்றதாயுமுள்ள ஜ்ஞாநம் இங்கே விவக்ஷிதம். ஆகையால், முக்திதசைக்கு முன் குறைந்த ஜ்ஞாநத்துடனிருந்த முக்தர்கள் விலக்கப்பட்டார்கள். அநந்தம் - அளவில்லாதது; தேசத்திலும் காலத்திலும் ஸ்வரூபத்திலும் அளவற்றது, எங்குமுள்ளது, எப்பொழுதும் உள்ளது, எதிலும் உள்ளது. இதனால், முக்தர்களைப் போலல்லாமல் நித்யராயும் ஸர்வஜ்ஞராயுமுள்ள நித்யர்கள் விலக்கப்பட்டார்கள். நித்யர்களின் ஜ்ஞாநாதிகள் பகவானுடைய ஜ்ஞாநாதிகளுக்குக் கீழ்ப்பட்டவைகளாகையால் அவர்களுக்கு ஆநந்த்யம் சொல்ல வொண்ணாது. ஆகையால், இந்த வாக்யத்தால் ப்ரஹ்மஸ்வரூபம் இதரமான ஸகல வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமென்று சொல்லப்பட்ட தாயிற்று.

இப்படி ஜகத்காரணத்வாதி குணங்களைக் கொண்டே ப்ரஹ்ம லக்ஷணம் சொல்லவேண்டி யிருப்பதாலும், எல்லா உபநிஷத்துக்களிலும் ஸகுணமான ப்ரஹ்மமே உபபாதிக்கப்படுகிறபடியாலும், இந்த ஸூத்ரமும் பின்வரும் ஸூத்ரங்களும் நிர்குண. வாதிகளுக்கு விரோதமாகுமென்று பொதுவாய்ச் சொல்லலாம்.

(இன்னும் வரும்.)

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# விசிஷ்டாத்வைதம்.

## 11. ஜீவ தத்வம்: அதன் நித்யத்வம்.

சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் ஜீவன் நித்யன் என்பதற்கு உள்ள ப்ரத்யாதாரத்தைப் பற்றி விசாரித்தோம். "ந ஜாயதே ம்ரியதே" இத்யாதியான வாக்யங்கள் ஜீவன் நித்யன் என்பதைச் சொல்லுகின்றனவென்றும், ஸ்ருஷ்டி லயங்களைச் சொல்லும் வாக்யங்களெல்லாம் தேஹ ஸம்பந்தம் தேஹவியோகம் இவைகளைக் குறிக்கின்றன வென்றும், ஜீவன்களுக்குக் கர்மப்ரயுக்தமாக ஜ்ஞாந ஸங்கோச விகாஸாதிகள் மாத்ரம் ஏற்பட்டுக்கொண்டு ஸ்வரூப அந்யதா பாவம் உண்டாகாமல் இருப்பதைத்தான் நாம் 'நித்யம்' என்னும் சப்தத்தால் குறிக்கிறோமென்றும் சொல்லப்பட்டது; இது ஸம்பத்தமான நமது ஸித்தாந்தத்தின் கொள்கைகளும் ஸங்க்ரஹமாகச் சொல்லப்பட்டன. இப்பொழுது இந்த விஷயத்தைப் பற்றியே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தத்வ முக்தா கலாபத்தில், இரண்டு ச்லோகங்களில் சில பூர்வபக்ஷிகளால் ஜீவன்களுக்குச் சொல்லப்படும் அஸ்திரத்தை அநுவாதம் செய்துகொண்டு அந்தப் பூர்வ பக்ஷங்கள் ச்ருதிக்கும் யுக்திக்கும் விருத்தங்களானதால் நிலை பெறமாட்டா என்று உபபாதநம் செய்தருளி யிருக்கிறார். அந்த ச்லோகங்களை இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்து அவைகளின் அர்த்தத்தை விசாரிப்பது ஏற்கெனவே நம்மால் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை நன்றாக போதிப்பிக்குமாதலால், அவைகளை இவ்விடத்தில் எழுதத் துணிகிறோம்.

அந்த ச்லோகங்களுள் முதல் ச்லோகம், 'ஜீவன் ஸ்வரூபத்தாலே ஸ்ருஷ்டி ஸம்ஹார முள்ளவன்' என்று சொல்வது ச்ருதி தாத்பர்யமன்று என்று சொல்லுகின்றது.

"एकं ब्रह्मैव नित्यं तदितरदखिलं तत्र जन्मा
दिमत्त्वाज्जातं तेन जीवोऽप्ययमिह जनिनानित्य
तयोत्प्रेक्ष्यम् । तन्नित्यत्वं हि सांशश्रुतिश
पठितं सृष्टिवाक्यैः परं तु स्याद्देहादि सम्बन्धतोऽ
स्येत्यवहितमनसा भाविरस्यैकवाक्यम् ॥"

'ब्रह्मैकमेव नित्यं, तदितरदखिलं तत्र जन्मादिमत्' इति श्रुतम्; तेन जीवोऽपि कश्चिद् जनिनाश इत्येतत् कर्तव्योत्प्रेक्ष्यम्; तन्नित्यत्वं सांशश्रुतिशतपठितं हि; सृष्टिवाक्यैः परं तु कस्य देहादिसम्बन्धः स्यात् इति अवहितमनसां वेदवाक्यस्य भाविरस्ति. [ப்ரஹ்மம் ஒன்றே நித்யமென்றும், அது நீங்கலாக மற்றை எல்லாப் பொருள்களும் ஜந்மம் முதலியவற்றை உடையன என்றும் ஶ்ருதி சொல்லுகிறபடியால் ஜீவனும் 'அசித்' என்னும் வஸ்துவைப்போல ஜந்மம் முதலியவற்றுடன் கூடியது என்று ஆக்ஷேபிப்பது ஶ்ருதியின் தாத்பர்யத்தை ஸரியாக அறியாதவர்களுடைய கார்யம். ஜீவனுடைய நித்யத்வமானது, வேதங்கள் அவைகளின் உபப்ருஹ்மணங்களாகிற ஸ்ம்ருதிகள் இவைகளால் பலவிடங்களில் பஹுவாகச் சொல்லப்பட் டிருக்கின்றது; சில விடங்களில் காணப்படும் ஜீவனுக்கு ஸ்ருஷ்டி முதலியவற்றை வாதிக்கும் வாக்யங்கள் ஜீவனுக்கு தேஹ ஸம்பந்தம் முதலியன ஏற்படுவதைப்பற்றி ப்ரவ்ருத்தித்தவை என்பது ஶ்ருதியின் தாத்பர்யத்தில் ஏகாக்ரமான மநஸ்ஸை யுடையவர்களின் அபிப்ராயம்.] என்பது இந்த ஶ்லோகத்தின் அர்த்தம்.

இவ்விதமாக, ஜீவனுக்கு ஜந்மம் நாஶம் இவைகளுண்டு என்று சொல்வது வேத விருத்தமென்று சொல்லிவிட்டு, பிறகு 'ஜீவன் அநித்யன்' என்று சொல்பவர்களின் மதங்களை ஶோதிக்கிறார். ஜீவன் அநித்யன் என்று சொல்பவர்கள் நான்கு வகைப் படுவார்கள் :—(1) 'ஜ்ஞாநமே ஆத்மா' என்று சொல்பவர்கள் சிலர்; ஜ்ஞாநம் அடிக்கடி உண்டாகி நஶிக்கக்கூடு மாதலால் ஶரீரம் இருக்கையிலும் ஆத்மாவுக்கு நாஶம் உண்டாகின்றது என்பது இவர்களுடைய கொள்கை; (2) 'ப்ராணன் இந்த்ரியங்கள் இவைகளே ஆத்மா' என்று சொல்பவர்கள் மற்றும் சிலர்; ப்ராணன் முதலியவை, ஶரீரம் நாஶமடையும் பொழுது நஶிப்பவையாதலால், ஶரீரத்துடனே ஆத்மா நஶிக்கின்றது என்பது இவர்களுடைய கொள்கை; (3) 'ஆத்மா என்பது ஶரீரத்தைவிட வேறு பொருள்; ஆனால், ப்ரளயத்துக்கு ப்ரளயம் நாஶத்தை அடைகின்றது' என்று சொல்பவர்கள் மற்றும் சிலர்; (4) 'ஆத்மா என்னும் வஸ்து மோக்ஷம் வரையில் இருந்து, பிறகு நாஶத்தை அடைகின்றது' என்று சொல்பவர்களும் உண்டு. இவர்களுடைய மதங்களில் உண்டாகும் அஸாமஞ்ஜஸ்யத்தைச் சொல்லுகிறது இரண்டாவது ஶ்லோகம்.

"ज्ञेयं चेज्ज्ञानसन्तानं भवति न भवे
दैहिकामुष्मिकार्थप्रवृत्तिर्देहासङ्गे तु यस्मिन्नपि
निरवयिका विश्ववृत्तिर्न सिद्ध्येत् । शुकसुखसायिवक्ष
कृतशेषतया चक्रिणोऽनुग्रहेण मोक्षसायि
कायां शुद्धिं नहि भवेत् प्रलयेऽपि वत प्रलये ॥"

ज्ञेयं ज्ञानसन्तानं चेत् भवति ऐहिकामुष्मिकार्थप्रवृत्तिर्न भवेत् - 'ஆத்மா ஜ்ஞாநமாக இருந்து கொண்டு ப்ரதிக்ஷணமும் நாஶம் அடைகின்றது' என்று ஒத்துக்கொண்டால், ஸம்ஸாரியாக இருக்கும் ஜீவனுக்கு எவ்வித கார்யத்திலும் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்காமலிருக்க ப்ரஸங்கிக்கும். ஒருவன் ஒரு கார்யத்தில் ப்ரவ்ருத்திப்பது, அந்தக் கார்யத்தின் பலமாகப் பிந்தி நேரும் ஒரு ஸுகத்தையாவது து:க்க நிவ்ருத்தியையாவது உத்தேஶித்ததன்றோ? இவர்களுடைய கொள்கைப்படி பல காலத்தில் இந்த ஆத்மா இல்லாததாலும், ஆத்மா இருக்கும் காலத்தில் பலம் இல்லாததாலும் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்க ஹேதுவில்லை. 'நாம் உத்தர காலத்தில் இருக்கப்போகிறோம்' என்கிற எண்ணம் ஒவ்வொருவனிடத்திலும் இருந்து அது காரணமாகக் கார்யங்களில் ப்ரவ்ருத்தி நேர்வதை நாம் லோகத்தில் பார்க்கிறபடியால், இந்த மதம் க்ஷோத க்ஷமமன்று.

देहासङ्गे तु यस्मिन्नपि निरवयिका विश्ववृत्तिर्न सिद्ध्येत् - 'தேஹம் இருக்கும் வரையிலே ஆத்மா இருக்கின்றது, பிறகு இல்லை' என்று ஒத்துக்கொண்டால், த்ரு

ஷ்ட பலத்தின் உத்தேஶமின்றிக்கே தர்மத்தை விட்டு விலகாத மார்க்கத்தில் ஜநங்களுக்கு ப்ரவ்ருத்தியே ஸித்தியாது. ஸத்யம் பேசுவது முதலிய தர்ம்யங்களான ப்ரவ்ருத்திகள், லோகத்தில் கேவலம் த்ருஷ்டமான பலத்தை உத்தேஶித்தே செய்யப்படவில்லை; த்ருஷ்டபலமே நியாமகமானால் சில விஷயங்களில் அஸத்யம் பேசுவதே உசிதமாகக் கூடும். இப்படி தேஹத்துடன் ஆத்மாவும் நஶித்து விடுகின்றது என்று சொல்வது தர்மாநுஷ்டாநத்திற்கு விருத்திக்கு மாதலால், இந்தக் கொள்கையும் ஸமீசீநமன்று.

ஆகல்ப ஸ்தாயிபக்ஷே உபதிஶ்யமாநோபாயவையர்த்யம் கல்பாந்தம் வரையில்தான் ஆத்மா இருக்கின்றது' என்றால், மோக்ஷத்தை அடைவிக்கக் கூடிய மார்க்கங்களை உபதேஶிப்பதெல்லாம் வீணாகிவிடும்; மோக்ஷத்தை அடையும் பொருட்டு நாம் ப்ரயத்நம் செய்யவும் ஸம்பாவனை நேராது. கல்பாந்தத்தில் ஆத்மநாஶம் தன்னாலேயே உண்டாகிறபடியால், அதற்கு உபாயங்களை நாம் ஏன் தேடவேண்டும்? என்று கருத்து. 'அவ்வரையிலும் கல்பாந்தத்திற்கு முன்னமேயே துக்க நிவ்ருத்தியை ஸம்பாதித்துக் கொள்ளும் பொருட்டுத்தான் ஜநங்கள் உபாயங்களைத் தேடுகிறார்கள்' என்று சொல்வது உபபந்நமாகாது; ஆத்ம நாஶம் எவ்விடத்திலாவது புருஷார்த்தத்தை ஸாதித்துக் கொடுப்பது முண்டோ? ஆகையால், இந்தப் பக்ஷமும் ஸரியன்று.

ஆமோக்ஷ ஸ்தாயிதாயாம் ஶ்ருதிர்நஹிசதுர்த்த புருஷார்த்தபரா - 'மோக்ஷம் வரையில் ஜீவனுண்டு, பிறகு ஜீவனில்லை' என்று சொல்லும் பக்ஷத்தில், மோக்ஷம் என்னும் நான்காவது புருஷார்த்தத்தைக் குறித்து வேதம் அபிமுகமாக இருக்க ந்யாயமே இல்லை. ஆத்ம நாஶ ரூபமான மோக்ஷத்தை வேதம் சொல்வானேன்? மோக்ஷத்தைப்பற்றி ஸாமாந்யமாக மாத்ரம் பேசாமல், ஶ்ருதி, மோக்ஷத்திற்குப் பிறகு ஜீவனால் அநுபவிக்கக் கூடியவையான போகங்களையும் விஸ்தாரமாகச் சொல்லுகின்றது. ஆகையால், ஆத்மா நித்யமென்றே சொல்லவேண்டும்.

**எஸ். வாஸுதேவன்.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி
நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி: ।
ஏவம் நிஸர்கஸுஹ்ருதி த்வயி ஸர்வஜந்தோ:
ஸ்வாமிந் ந சித்ரமிதமாஶ்ரிதவத்ஸலத்வம் ॥ 10.

10. பகவானை ஸ்தோத்ரம் செய்வதற்கு அல்ப ஶக்தியையுடைய தாமே தகுந்தவரென்று கீழ்ச் சொல்லப்பட்ட வசநத்தால் பகவானுக்கு இயற்கையாயுள்ள ஆஶ்ரித வாத்ஸல்யம் வ்யஞ்ஜிதமாயிற்று. அந்த ஆஶ்ரித வாத்ஸல்யம் பகவானிடத்தில் இருப்பது எவ்விதத்திலும் ஆஶ்சர்யமன்று என்று, ஒரு கைமுதிக ந்யாயத்தைக் கொண்டு இந்த ஶ்லோகத்தால் ஸ்தாபிக்கிறார். இது முதல் பன்னிரண்டு ஶ்லோகங்களால், 'நாராயண' என்னும் ஶப்தத்தாற் குறிக்கப்படும் பகவானுக்கே ஸர்வஸ்மாத் பரத்வமும் ஸௌலப்யமும் உண்டு என்று ப்ரபஞ்சித்துக்கொண்டு ஸ்ரீ ஆளவந்தார் பகவானை நமஸ்கரிக்கிறார் என்பது, ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய அவதாரிகை.

ஹே ப்ரபோ! த்வம் நாவேக்ஷஸே யதி, தத: அமூநி புவநாநி பவிதுமேவ நாலம்; குத: (தேஷாம்) ப்ரவ்ருத்தி:? ஹே ஸ்வாமிந்! ஏவம் ஸர்வஜந்தோ: நிஸர்கஸுஹ்ருதி த்வயி இதம் ஆஶ்ரிதவத்ஸலத்வம் ந சித்ரம் । 'ஹே ப்ரபோ! உம்முடைய ஸங்கல்பம் இல்லாவிட்டால், விசித்ரமாகத் தென்படும் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் உண்டாகிறதற்காவது ஸத்தை

யுடன் கூடி யிருக்கிறதற்காவது ஸமர்த்தமன்று; அப்படி இருப்பதற்கே அஸமர்த்தமாகிவிட்டால், ப்ரவ்ருத்தி யென்பது அதற்கு எவ்விதமாக ஸம்பவிக்கும்? ஹே ஸ்வாமிந்! இப்படி ஸர்வ ஜந்துக்களுக்கும் ஸ்வாபாவிகஸுஹ்ருத்தாகிய உம்மிடத்தில் இந்த ஆஶ்ரித வாத்ஸல்யம் என்னும் குணம் இருப்பது ஆஶ்சர்யமன்று' என்று அர்த்தம். இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்கி, அதற்கு ஸத்தையைக் கொடுத்து அதை இருக்கும்படி செய்து, அதிலுள்ள ஜீவ கோடிகளுக்கெல்லாம் போகம் மோக்ஷம் முதலியவற்றைக் குறித்து ப்ரவ்ருத்திப்பதற்கு உரிய கரண களேபராதிகளைக் கொடுத்து ஸர்வவித உபகாரத்தையும் செய்யும் பகவானுக்கு ஆஶ்ரித வாத்ஸல்யம் இல்லாவிட்டால், மற்றை எவருக்குத்தான் ஸம்பவிக்கக் கூடும்? என்று கருத்து.

'ஸங்கல்பத்தாலேயே ஜகத்தின் உத்பாதநத்தைச் செய்கிறீர்; அதற்கு ஸத்தையைக் கொடுக்கிறீர்; ப்ரவ்ருத்தியையும் உண்டுபண்ணுகிறீர்' என்று சொல்வதனால், ஸர்வத்திற்கும் காரணம் பகவானென்று சொன்னதாயிற்று. 'நிகில காரணனாகிய பகவான் ஆஶ்ரித வத்ஸலன்' என்று சொல்வதனால், அவனிடத்தில் ஸௌலப்ய முண்டு என்று சொன்னதாயிற்று. ஆகையால், இந்த ஶ்லோகத்தில் - பகவானிடத்திலுள்ள காரணத்வம், நியந்த்ருத்வம், ஸுஹ்ருத்வம், ஸ்வாமித்வம், வாத்ஸல்யம் ஆகிய ஐந்துவித கல்யாண குணங்களும் ப்ரகாஶமாகச் சொல்லப்பட்டன என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் பின்வரும் காரிகையால் வெளியிடுகிறார்.

"காரணத்வம் நியந்த்ருத்வம் ஸௌஹார்த்தம் ஸ்வாமிதா ஹரே: ।
வாத்ஸல்யமிதி பஞ்சைதே கண்டோக்தா இஹ ஸத்குணா: ॥"

ஈக்ஷணேந - 'ஈக்ஷணம்' என்றால் 'ஸங்கல்பித்தல்' என்று அர்த்தம். "ததைக்ஷத" என்னும் ஶ்ருதி இதற்கு ப்ரமாணம். இந்த ஸங்கல்பமும் அநுக்ரஹத்தை முன்னிட்டே செய்யப்படுகின்றது.



ப்ரபோ - 'ப்ரபு' என்று சொல்வதனால், ஸகலமும் பகவானுக்கு ஸ்வாதீநமாயுள்ளது என்று சொன்னதாயிற்று. இச்சிக்கிறபடியெல்லாம் செய்வதற்கு ஸாமர்த்யமுள்ளவன் பகவான் என்று தாத்பர்யம். இப்படிதான் ஸர்வஶக்தனாக இருக்கையிலும் ஸர்வவித்திலும் அஶக்தராக இருக்கும் நம்மிடத்தில் அவன் வாத்ஸல்யம் பாராட்டுவது அவனது ஸௌலப்யத்தைக் காண்பிக்கிறது என்பது குறிப்பு.

ஸ்திதயே - இந்த ஶப்தத்திற்கு 'இருப்பதற்கு' என்று அர்த்தம். இது உத்பத்தியையும் காட்டுமாதலால், பகவான் ஜகத்தின் ஸ்திதிக்கு மாத்ரம் காரணமென்பது இல்லாமல் உத்பத்திக்கும் காரணம் என்று சொன்னதாயிற்று. இந்த 'ஸ்திதயே' என்னும் பதத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் 'அபி' என்னும் பதம், 'இருப்பதற்குக் கூட மற்றவருடைய ஸங்கல்பம் அபேக்ஷிதமோ?' என்று ஸாமாந்யமாக ஜநிக்கும் ஶங்கையை நிவ்ருத்தி செய்கிறது. "கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத் யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்" இத்யாதியான ஶ்ருதிகள் இவ்விடத்தில் அநுஸந்திக்கக் கூடியவை.

நிஸர்கஸுஹ்ருதி - 'இயற்கையாக ஸுஹ்ருத்தாகிய' என்று அர்த்தம். பூர்வோபகாரம் பிந்தி வரும் ப்ரத்யுபகாரம் ஒன்றையும் எதிர் பாராமலே ப்ராஜைகளுக்கு ஹிதத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவன் என்று கருத்து. ஜ்ஞாநம் பலம் அவனுக்கு ஸ்வபாவமாக உள்ளவை போலவே, ரக்ஷணமாகிற க்ரியையும் அவனுக்கு ஸ்வபாவமாகவே உண்டு என்று ஸூசிப்பிக்கப்படுகின்றது.

ஆஶ்ரித வாத்ஸல்யம் - கீழ் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட வாத்ஸல்யம். 'அல்ப ஶக்தியையுடையவர்கள் செய்யும் ஸ்துதியின் ந்யூநதையைக் கவனியாமலே அவர்களிடம் அநுகம்பை செய்து அவர்களை அநுக்ரஹிக்கும் ஸ்வபாவம்' என்று அர்த்தம். "த்விஷதாமபி வத்ஸல:" [தன்னிடம் த்வேஷம் பாராட்டுமவர்களிடம்கூட அவன் வாத்ஸல்யத்தைச் செய்கிறான்] என்

𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑍇𑌶𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 ! 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑍈𑌦𑌿𑌕𑌃 𑌕𑌃 ? ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵𑌃 𑌶𑌤𑌮𑌖𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌡𑌿
𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌰𑍍𑌣𑌵 𑌵𑌿𑌪𑍍𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍇॥ **11.**

---

றன்றோ அவனைப்பற்றிச் சொல்லியிருக்கின்றது? கடவல்லியில், இவனுக்குள்ள அஸாதாரணமான வாத்ஸல்யம் பின் வருமாறு சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

“𑌅𑌂𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌧𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌈𑌶𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇॥”

[ஸர்வத்திற்கும் ஈஶ்வரனாகிய பகவான், அங்குஷ்டமளவு ஆகாரமுடையவனாக நமது ஶரீரத்தினுள் எப்பொழுதும் வஸிக்கிறான்; ஸர்வ அஶுசிக்கும் நிதாநமாகிய இந்த ஶரீரத்தின் நடுவில் இருப்பதில் அவனுக்கு எவ்வித ஜுகுப்ஸையும் ஜநிக்கிறதில்லை] அதாவது - நம்மிடத்தில் அவ்வளவு வாத்ஸல்யமுள்ளவன் என்று தாத்பர்யம். ‘மழலைச் சொல்லைப் பேசும் குழந்தையினிடத்தில் தாய் தந்தையருக்கு ஒரு விதமான கௌதூஹலம் உண்டாவதுபோல, என்னுடைய இந்த அஸமக்ரமான ஸ்துதி வசநத்தைக் கேட்பதில் உமக்கும் கௌதூஹலம் உண்டாகிறது’ என்பது குறிப்பு.

11. தம்முடைய ஸங்கல்பத்தால் ஸர்வ ஜகத்தையும் உத்பாதநம் செய்து அதற்கு ஸ்திதி ப்ரவ்ருத்தி முதலியவற்றைக் கொடுக்கிறபடியால் பகவானுக்கு ஜகத் காரணத்வம் உண்டு என்றும், அது ஸம்பந்தத்தால் ஸர்வ ஸ்வாமித்வம் முதலிய மற்றைக் குணங்களும் ஸ்வபாவத்தினாலேயே உண்டு என்றும் கீழ் ஶ்லோகத்தால் சொல்லப்பட்டது. அந்த ஈஶித்ருத்வம் — (அதாவது - காரணமாகவும் ஸ்வாமியாகவும் இருக்குந் தன்மை) எப்படிப்பட்டது? என்பதை இந்த ஶ்லோகத்தால் விவரிக்கிறார்.

𑌹𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 ! 𑌕𑍋 (𑌵𑌾) 𑌵𑍈𑌦𑌿𑌕𑌃 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑍇𑌶𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 ? 𑌯𑌸𑍍𑌯 𑌤𑍇, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾



---

𑌶𑌿𑌵𑌃 𑌶𑌤𑌮𑌖𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌡𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌹𑌿𑌮𑌾𑌰𑍍𑌣𑌵𑌵𑌿𑌪𑍍𑌰𑍁𑌷𑌃 । ‘ஹே நாராயண! வேதங்களை ப்ரமாணங்களாக ஒத்துக்கொள்பவர்களில் எவர்தான், ஸ்வபாவ ஸித்தமாயும் அளவற்ற மஹிமையுள்ளதாயும் இருக்கும் ஈஶித்ருத்வத்தை உம்மிடத்தில் ஸஹிக்கமாட்டார்? ப்ரஹ்மா, ருத்ரன், இந்த்ரன், முக்தர்கள் இவர்கள் எல்லாரும் உம்முடைய ஸமுத்ரம் போன்ற மஹிமையின் திவலை ஸ்தாநீயர்கள் ஆகிறார்களன்றோ? என்று அர்த்தம். அதாவது - ‘ப்ரஹ்மா முதலியவர்களுக்கு ஒருவிதமான மஹத்வம் ப்ரமாண ஸித்தமாக இருக்கையிலும், அந்த மஹத்வம் உம்முடைய அதீநமாகவும் ஓர் எல்லைக்கு உட்பட்டதாகவுமே இருக்கின்றது; உம்முடைய மஹத்வமோ, மற்றை எவருடைய அதிகாரத்திற்கும் உட்படாததாயும் எவ்வித எல்லையும் அற்றதாயுமிருக்கின்றது’ என்று தாத்பர்யம். இதனால், பரமபுருஷனென்கிற நாராயணனுடைய ஈஶித்ருத்வம் அநந்யாதீநம் அபரிமிதம் என்றும், அப்படி அது அநந்யாதீநமாகவும் அபரிமிதமாகவும் இருக்கின்றது என்பதற்கு வேதங்களே ப்ரமாணம் என்றும் சொன்னதாயிற்று.

“𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌃 𑌸𑌮𑌵𑌰𑍍𑌤𑌤𑌾𑌗𑍍𑌰𑍇” (ப்ரஹ்மா எல்லாவற்றிற்கும் முந்தியே இருந்தவன்), “𑌨 𑌸𑌨𑍍𑌨 𑌚𑌾𑌸𑌚𑍍𑌛𑌿𑌵 𑌏𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃” (முதலில் ஸத்துமில்லை அஸத்துமில்லை, ஶிவன் ஒருவனே இருந்தான்), “𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌾𑌯𑌾𑌭𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌈𑌯𑌤𑍇” (இந்த்ரனுக்கு விசித்ர ஶக்தி யுண்டு, பல ரூபங்களும் உண்டு) இத்யாதியான ஶ்ருதிகள், லோக நாதர்களென்று எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படும் ப்ரஹ்மா முதலியவர்களுக்கு ஒரு வித மஹத்வத்தைச் சொல்லுகின்றன “𑌯𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌮𑌯𑌤𑍇 𑌸𑍋𑌽𑌸𑍍𑌯 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍇𑌵 𑌸𑌮𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿” (முக்தர்கள் எவ்வெவற்றை இச்சிக்கிறார்களோ, அவைகளெல்லாம் அவர்களுடைய ஸங்கல்பத்தினாலேயே உண்டாக்கப்படுகின்றன) இத்யாதியான ஶ்ருதி, முக்தர்களுக்குள்ள ஐஶ்வர்யத்தைச் சொல்லுகின்றது. ஆனால், இந்த ஐஶ்வர்யம், ப்ரஹ்மா முதலிய லோகநாதர்விஷயத்தில் கர்

மாதீநம், துக்கமிஸ்ரம், அநித்யம் என்றும், முக்தர்களுடைய விஷயத்தில் பரமபுருஷாதீநம், பரிமிதவிஷயம் என்றும் நாம் அறிய வேண்டும்.

நாராயண - “ஸர்வே வேதா யத்பதமாமநந்தி”, “ஸர்வே வேதா யத்ரைகம் பவந்தி”, “நாராயணபரா வேதா:” என்று வேதங்களெல்லாவற்றாலும் ஸர்வ காரணனாகவும், ஸர்வ ஸ்வாமியாகவும் ஸர்வ ப்ரவர்த்தகனாகவும், ஸர்வ ஸாக்ஷியாகவும், ப்ரஸித்தமாகச் சொல்லப்படும் பரமபுருஷன். இந்த ஶப்தத்திற்கு நான்கு விதமாக வ்யுத்பத்தி சொல்லுகிறார்கள்; (1) ‘நாரம்’ - ஜீவஸமூஹம்; அதற்கு ‘அயநம்’ - ஆஶ்ரயம்; எல்லா ஜீவன்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறவன். (2) ‘நாரஸ்ய’ - ஜீவஸமூஹத்திற்கு ‘அயநம்’ - ப்ரவ்ருத்தியானது: எவனிடத்திலிருந்து உண்டாகிறதோ; ஜீவன்களெல்லாருக்கும் ப்ரவர்த்தகன். (3) ‘நாரம்’ ஜீவஸமூஹத்தை, ‘வேத்தி’ - அறிகிறான்; அகில லோக ஸாக்ஷியாக இருக்கிறவன். (4) ‘நர:’ - பரமாத்மா; அவனிடமிருந்து உண்டானது ‘நாரம்’ - ஜலம்; அதற்கு ‘அயநம்’ - இருப்பிடம்; ஜலத்திற்கு, அதாவது - ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஆஶ்ரயமாகிறவன். இந்த அர்த்தங்களை ஸ்ரீ பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தில் உள்ள ப்ரஹ்ம ஸ்துதி 14-வது ஶ்லோகத்தில் காணலாம்.

“நாராயணஸ்த்வம் ந ஹி ஸர்வதேஹிநா
மாத்மாஸ்யதீஶாகிலலோகஸாக்ஷீ ।
நாராயணோऽங்கம் நரபூஜலாயநாத்
தச்சாபி ஸத்யம் ந தவைவ மாயா ॥”

இதில் நான்காவது அர்த்தம் மநுஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

“ஆஸீதிதம் தமோபூதம் ............................

....................................................................

ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: ।
தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத: ॥”



[‘நாரம்’ என்றால் ஜலம் என்று அர்த்தம். அது முதலில் பகவானுடைய ‘அயநம்’ ஸ்தாநமாக இருந்தபடியால், ‘நாராயணன்’ என்று அவனுக்குப் பெயர்.] இந்த நாராயணனே ஸர்வரக்ஷகன், எல்லாராலும் த்யாநிக்கத்தகுந்தவன் என்பதற்கு, ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியின் வாக்யமாகிற

“ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா ॥”

இந்த ஶ்லோகமே ப்ரமாணம். எவ்வித ஶாஸ்த்ரம் படித்தாலும், எவ்வித விசாரங்கள் செய்தாலும், நிஷ்க்ருஷ்டமாகத் தேறும் அர்த்தம், ‘ஸர்வரக்ஷகனாகிற நாராயணனையே எப்பொழுதும் த்யாநித்தல் வேண்டும்’ என்பது தான்.

வைதிக: - வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்டவன். ஸநாதநனாகிற பகவாந் வேதத்தாலேயே அறியத்தகுந்தவன்; வேதங்கள் அவனையே பரமாத்மாவென்று சொல்லுகின்றன; இப்படி வேதம் சொல்வதை எவனொருவன் நம்பி உணருகிறானோ அவன்தான் வைதிகன் என்று தாத்பர்யம். ஜீவநத்திற்காக க்ருஷி முதலிய வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் ஒருவனை, வேதத்தில் அவன் விஶ்வாஸமுடையவனாக இருக்கையிலும் வைதிகனல்லன் என்று சொல்வதும், வேதத்தில் யாதொரு நம்பிக்கையுமின்றிக்கே வைதிகவேஷம் மாத்ரம் பூண்டு பிறருடைய பரிஶ்ரமத்தால் எப்பொழுதும் ஜீவநம் செய்துகொண்டு வர்த்தித்துவரும் ஒருவனை லோகவ்யாபாரத்தில் ப்ரவ்ருத்திக்காமல் இருக்கிறான் என்கிற காரணத்தாலே மாத்ரம் வைதிகன் என்று சொல்வதும் ஶாஸ்த்ர ஸம்மதமன்று. வேத ப்ராமாணகத்வம் வைதிக லக்ஷணமாகுமே தவிர மற்றை எதுவும் லக்ஷணமாகமாட்டாது.

ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத்வம் - அதாவது - இந்த ஈஶித்ருத்வம் அந்யாதீநமன்று, அளவற்ற மஹிமையுடையது என்று அர்த்தம். கர்மாதீநரான ப்ரஹ்மா முதலியவர்க

ளுடைய ஐச்வர்யம் ஸ்வாபாவிகமன்று; அளவுக்கு உட்பட்டும் பகவதிச்சாதீநமுமான முக்தர்களுடைய ஐச்வர்யம் அநவதிகாதிசயமன்று. “ஸ ஸ்வராட் பவதி” என்று முக்தர்களை வேதம் ஸ்வதந்த்ரர்களென்று சொன்னாலும், அந்த ஸ்வாதந்த்ர்யம் ‘அவர்கள் கர்ம வச்யர்கள் அல்லர்’ என்பதைக் குறிக்கின்றதே தவிர ‘அவர்களுக்குப் பகவத் பாரதந்த்ர்யமில்லை’ என்று சொல்லவில்லை. பகவானுக்கு சரீரமாக இருக்கும் ஆத்மாக்கள் எப்பொழுதும் பகவானுக்குப் பரதந்த்ரர்களே. முக்தர்களுக்குப் பரமமான ஸாம்யத்தைப் பகவாந் கொடுக்கையிலும், ஜகத் ஸ்ருஷ்டி முதலிய சில அம்சங்கள் அவர்களுக்கு இல்லை [“ஜகத்வ்யாபாரவர்ஜம்”] என்று நிர்தாரணம் செய்யப்பட்டிருக்கிறபடியால், அவர்களுடைய ஐஸ்வர்யம் அளவுக்கு உட்பட்டதே.

கோ (வா) வைதிக: ந ஸஹிஷ்யதி? எந்த வைதிகன் ஸஹிக்கமாட்டான்? எவனொருவன் பரமபுருஷனாகிற நாராயணனுடைய ஐஸ்வர்யத்தை ஸஹிக்கவில்லையோ அவன் வைதிகனல்லன் என்று அர்த்தம். ‘க:’ என்னும் சப்தம் நிந்தையைக் காண்பிக்கிறது.

“சதுர்வேதவிதோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி।
வேதபாரபராக்ராந்த: ஸ வை ப்ராஹ்மணகர்தப:॥”

[ப்ராஹ்மணகுலத்தில் பிறந்து நான்கு வேதங்களையும் அறிந்தவனாக இருந்தாலும், எவனொருவன் பகவானுடைய ஐஸ்வர்யத்தை ஒத்துக்கொள்ளாமல் அவனிடத்தில் பக்தியற்றிருக்கிறானோ, அவன் கேவலம் வேதச் சுமையைச் சுமக்கிற ப்ராஹ்மண அபசதன்]. அதாவது - பகவதநுக்ரஹத்திற்கு அவன் பாத்ரமாகமாட்டான் என்று கருத்து.

பரமஸ்வராட் - முக்தன். ‘ஸ்வராட்’ என்றால் ஸ்வதந்த்ரன் என்று அர்த்தம்; அதாவது - கர்ம வஸ்யனல்லன் என்று தாத்பர்யம். ‘பகவானுக்கும் அஸ்வதந்த்ரன்’ என்கிற கருத்து இல்லை. ‘பரம’ என்னும் பதம், அகர்ம வஸ்யர்களானதால், இவர்கள் கர்மவஸ்யர்களான ப்ரஹ்மா முதலியவர்களைவிட மிகப் பலமடங்கு சிறந்தவர்கள் என்பதைக் குறிக்கிறது.



யஸ்ய தே - யாதொரு உம்முடைய. அதாவது - “தம் துர்தர்சம் கூடமநுப்ரவிஷ்டம்”, “யத்ததத்ரேஸ்யம் அக்ராஹ்யம்” என்று ஸ்ருதிகளால் அத்ருஸ்யனென்றும் அக்ராஹ்யனென்றும் சொல்லப்பட்டிருக்கையிலும் க்ருபையினாலே பக்தர்களுக்குத் தம்முடைய ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிக்கும் ஸ்வபாவமுடைய என்று தாத்பர்யம்.

மஹிமார்ணவ விப்ருஷ: - ‘உம்முடைய மஹிமையோ, ஸமுத்ரம்போல அக்ஷயம், அபாரம்; இவர்களுடைய மஹிமையோ திவலைபோல் அதி பரிமிதம்’ என்று கருத்து. அன்றிக்கே, ‘பகவானுடைய விபூதி ஸமுத்ரம்போல அநந்தம்; அந்த விபூதிக்கு அந்தர்பூதர்களான ப்ரஹ்மா முதலியவர்கள், ஸமுத்ரத்துக்கு உட்பட்ட திவலை போன்றவர்கள்’ என்று தாத்பர்யம்.

“...ஸ்வாஸ்வாஸ்வதந்த்ரப்ரஹ்மாண்டாயுதகோடய:।
க்லேஶகர்மவிபாகாத்யைரஸ்ப்ருஷ்டஸ்யாவிஶேஷித:॥
ஜ்ஞாநாதிஷாட்குண்யநிதேரசிந்த்யவிபவஸ்ய தா:।
விஷ்ணோர்விபூதிமஹிமஸமுத்ரத்ரப்ஸவிப்ருஷ:॥”

என்று இந்த ஸ்ரீ ஆளவந்தார், ‘ஸம்வித்ஸித்தி’ என்னும் மற்றொரு க்ரந்தத்தில் அருளிச்செய் திருப்பதை இங்கே அநுஸந்திக்கலாம்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

# ஸங்க்ரமண புண்யகால நிர்ணயம்.

"அயநே விஷுவே சைவ ஸங்க்ராந்த்யாம் க்ரஹணே ததா ।
ஸ்நாநதாநாதிகம் கார்யம் ஸங்க்ராந்தௌ ச விஶேஷத: ॥
வ்யதீபாதே கஜச்சாயா க்ரஹணம் சந்த்ரஸூர்யயோ: ।
ஶ்ராத்தம் ப்ரதி ருசிஶ்சைவ ஶ்ராத்தகாலா: ப்ரகீர்த்திதா: ॥ "

என்று யாஜ்ஞவல்க்ய மஹர்ஷி ஶ்ராத்த காலங்களைக் குறித்திருக்கிறார். இவைகளில் ஸங்க்ரமம் என்பது, மேஷாதிகளான பன்னிரண்டுராசியில் க்ரமமாக ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற ஸூர்யனுக்கு பூர்வராஶியினின்றும் உத்தரராஶியில் ப்ரவேஶிக்கிற காலம் என்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகிறார்கள். அந்த ஸங்க்ரமண காலமானது "ஸங்க்ராந்தி ஸமய: ஸூக்ஷ்ம: து:ஜ்ஞேய: பிஶிதேக்ஷணை:" என்று சொல்லுகிறபடியே மிகவும் ஸூக்ஷ்மமாகையால், 'ஸங்க்ரமண நிமித்தமாக விதிக்கப்பட்ட ஸ்நாநம் தாநம் ஶ்ராத்தம் இவைகள் எப்பொழுது பண்ணவேண்டியது?' என்று ஸந்தேஹம் வரக்கூடும். அயநம் விஷுவத் ஷடஶீதி விஷ்ணுபதி என்று நான்கு வகைப்பட்ட ஸங்க்ரமணங்களுள், ஒவ்வொன்றுக்கு இவ்வளவு இவ்வளவு நாழிகை புண்யகாலம் என்றும் "ஷோடஶாதிகம் பரே", 'ஷோடஶாத ஜவாஷிஷ' "பூர்வஸிந்நஹனி பஶ்சாத் ஷோடஶ்யாம் நாட்ய: பரத:" "ஷோடஶ நாட்ய: பூர்வத:" என்று அந்தப் புண்யகாலத்திலே தான் ஸ்நாநம் முதலியவைகளைச் செய்யவேணுமென்றும், "யா யா ஸந்நிஹிதா நாட்யஸ்தாஸ்தா: புண்யதமா: ஸ்ம்ருதா:" என்று ஸங்க்ரமணத்திற்கு ஸமீபித்த காலத்திலேயே ஸ்நாநமும்



ஶ்ராத்தமும் பண்ணவேண்டும் என்றும் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 'இரவில் ஸங்க்ரமணம் நேர்ந்தால் ஶ்ராத்தம் முதலியவைகள் இரவிலன்றோ செய்யவேண்டிவரும்?' என்னில், இரவில் க்ரஹணம் முதலிய ஶ்ராத்தத்தைத் தவிர ஸங்க்ரமண நிமித்தமான ஶ்ராத்தத்தை ஶிஷ்டர்கள் அநுஷ்டிக்காததனால் அதைப் பகலிலேயே செய்யவேண்டும். ஆகையால், ஸங்க்ரமண ஶ்ராத்தம் அபராஹ்ணாதி கால நியமமின்றிக்கே பகலிலெப்பொழுதும் செய்யலாம். அப்படியே வைத்யநாததீக்ஷிதரும், "மஹாளய ஶ்ராத்தஸ்ய ப்ரத்யாப்திக காலவத் ஸ்ம்ருத: । காலவாத யவாவ்ய பூர்வாஹ்ணம் காலமோ த்ருஷ்டவ்ய: । க்ரஹ: - க்ரஹணம் ஆதிஶப்தேந ஸங்க்ராந்த்யாதி நிமித்தம் உச்யதே; தஸ்ய ச நிமித்தாயீநத்வாத் காலவிஶேஷ நியமோ ந ஶக்யதே; இதரஸ்ய து ஸாம்வத்ஸரிகாதேஸ்து காலநியம:" என்று ஶ்ராத்தகாண்டத்திற் சொல்லி யிருக்கிறார். அப்படியே தான் ஶிஷ்டாநுஷ்டாநமு மிருக்கின்றது.

சிலர், 'வைத்யநாத தீக்ஷிதருடைய ஆஹ்நிக காண்டத்திலும் ஸ்ம்ருதிரத்நாகரம் ஆஹ்நிக காண்டத்திலு மெடுக்கப்பட்ட வசநங்களெல்லாவற்றிலுஞ் சொல்லப்பட்ட புண்யகாலமானது ஸ்நாநத்துக்கும் தாநத்துக்கும் மாத்திரமேயொழிய ஶ்ராத்தத்துக்குச் சொல்லப்படவில்லை; ஆகையால், ஶ்ராத்தத்துக்கு ஸாமாந்யமாகச் சொல்லப்பட்ட அபராஹ்ண காலத்திலேயே ஸங்க்ரமண நிமித்தமான ஶ்ராத்தமும் செய்யவேண்டும்' என்கிறார்கள். அது அநுபபந்நம். "ஸ்நாநம் தாநம் பரேऽஹநி" என்பவையெல்லாம் ஶ்ராத்தத்துக்கு முபலக்ஷண மாகையால் ஸங்க்ரம நிமித்தமாகிய ஶ்ராத்தமும் அந்தப் புண்யகாலத்திலேயே செய்வதற்கு பாதகமில்லை.

பின்னும், "ஷோடஶாதிகம் பரேऽஹ" "ஷோடஶாஷ்யவிஷுவத்ஸு" "ஷோடஶாத ஜவாஷிஷ" "ஷோடஶ பூர்வத:"

என்கிற வசநங்களிலுள்ள 'ஆதி' பதத்தாலே ஶ்ராத்தத்தை க்ரஹித்துக்கொள்ளலாம். பின்னும், "உதஸ்நாந ஸ்நாநவஸிக்ரியா" "ஸ்நாநாத்யவிவகஸ்யை" என்கிற வசநங்களி லுள்ள க்ரியாவிஶேஷங்களின் ஸமபிவ்யாஹாரத்தாலே அவ்விடத்தில் ஸ்நாநமும் விவக்ஷிதமென்று சொல்லலாம். ஆகையாலே, ஸங்க்ரம நிமித்தமாக எந்த எந்த க்ரியைகள் செய்யவேணுமென்று ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த க்ரியைகளெல்லாம் அந்தப் புண்யகாலத்திலேயே செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. ஆகையாலே, ஸங்க்ரமநிமித்தமான ஸ்நாநமும் ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாக ஶாஸ்த்ரங்களாலே விதிக்கப்பட்ட திலதர்ப்பணமும் கீழ்ச்சொல்லியபடியே பகலில் ஸங்க்ரமத்திற்கு ஸமீபித்தகாலத்திலேயும், இரவில் ஸங்க்ரமம் நேர்ந்தால் ஶாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட புண்யகாலத்திலேயும் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது.

சிலர், 'திலதர்ப்பணம் ஶ்ராத்தத்துக்கு ப்ரதிநிதியாக்ச் சொல்லப்படாததாலே அது ப்ரதிநிதியாக மாட்டாது' என்பார்கள். அதுவும் "அஶ்வமாஸாந்தரேஷ்வேவ விஹிதஸ்ய யதேந ஸ்தயா । ஶ்ராத்தஸ்ய ப்ரதிநிதி ஹோத்ரோ வா த்விஜஸத்தம: ॥ ஸ்நாத்வா வ விதிவத்விப்ர: குர்யாத் திலதர்ப்பணம் ॥" என்கிற தேவல வசநத்தால் திலதர்ப்பணமும் ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாகச் சொல்லபபட்டிருக்கிறதால் அஸமஞ்ஜஸம். இந்தத் தேவலவசநம் வைத்யநாததீக்ஷிதர் ஶ்ராத்தகாண்டத்திலும் நிர்ணய ஸிந்துவிலும் எடுக்கப்பட்டிருக்கிறது.

பின்னும், "அந்நேந வா யதாஶக்தி காலே(அ)ஸ்மிந் பக்தித: । போஜயிஷ்யதி விப்ராக்ர்யாந் ஸ்நாத்வா விஹவோ நர: ॥ அஶக்தௌ ப்ராந்ததாநஸ்ய யாந்யாநீம் ஸ்வஶக்தித: । ப்ரதாஸ்யதி த்விஜாக்ர்யேப்ய: ஸ்வல்பாம் வாபி ச தக்ஷிணாம் ॥ திலைஸ்



ஸப்தாஷ்டபி வாபி ஸமவேதம் ஜலாஞ்ஜலிம் । பக்தநம்ர: ஸமுத்திஶ்ய அஸ்மிந்நாகம் ப்ரதாஸ்யதி ।" என்கிற ப்ரமாணதமமான ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் மூன்றுவது அம்ஶத்தில் பதினைந்தாவது அத்யாயத்தில் திலதர்ப்பணம் ஶ்ராத்தத்துக்கு ப்ரதிநிதியாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஸங்க்ரமேஷு அயநாஹாவே ப்ரவாஸே சந்த்ரஜந்மநி । ஆமஶ்ராத்தம் ஸங்கடே வ த்விஜ ஶூத்ரே ஸூதகாவரோக" என்கிற வசநத்தாலும், "ஆமஶ்ராத்தம் ப்ரகுர்வீத ஹாயநே ரவிஸங்க்ரமே" என்கிற காத்யாயந வசநத்தாலும், "த்விஜாந்நஸத்ருவே(அ)பி ஸ்த்ரீரஜஸ்ஸங்க்ரமாதிஷு ஆமஶ்ராத்தநிமித்தகாநி, கத: ரஜஸ்ஸங்க்ராந்திக்ரஹணாதௌ தஶபூர்வஶ்ராத்தமேவ கர்தவ்ய மிதி ஸித்தம்? கத: ரஜஸ்ஸங்க்ராந்திக்ரஹணாதிஷு த்விஜாந்நஸத்ரு(அ)பி ஸதாமஶ்ராத்தம் குர்யாத்" என்கிற வைதிக ஸார்வபௌமருடைய ஸ்ம்ருதீவிலோசநத்திலிருக்கும் வாக்யங்களாலும் ஸங்க்ரம காலத்தில் அந்த ஶ்ராத்தத்துக்கு ப்ரதிநிதியல்லாத ஆமஶ்ராத்தமே முக்யமாக விதிக்கப்படுகிறது என்று ஏற்படுகிறது. இந்த ஆமஶ்ராத்தமும் கீழ்ச் சொல்லியபடியே புண்ய காலத்திலேயே செய்யவேண்டும். பூர்வாஹ்ணாதி காலம் பார்க்கவேண்டியதில்லை.

சிலர், "ஆமஶ்ராத்தம் து பூர்வாஹ்ணே ஏகோத்திஷ்டம் து மத்யமே । ப்ரதோஷ ஶ்ராத்தம் அபராஹ்ணே" என்று வைதிக ஸார்வபௌமர் ஸ்ம்ருதீவிலோசநத்தில் சொல்லியிருப்பதாலே, ஸங்க்ரம நிமித்தமான அந்நஶ்ராத்தத்துக்கு ப்ரதிநிதியாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம், அபராஹ்ணத்திலேயே பண்ணவேண்டியதாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தாங்கமான திலதர்ப்பணத்தைச் செய்த பிறகு செய்யவேண்டியதாகையால் அபராஹ்ணத்திலேயே செய்யவேண்டுமென்றும், 'ஒரு முக்யத்திற்கு அநேக ப்ரதிநிதிகளிருந்தாலும் ப்ரதிநிதியைச் செபுயவேண்டுமென்று சொன்னால் மாத்ரம் இஷ்ட

மான ஏதாவது ஒரு ப்ரதிநிதியைச் சக்திக்குத் தகுந்தபடி செய்யக்கூடும்; ‘அப்படிக்கில்லாமல் “ஆமஶ்ராத்தம் ஸமாசரேத்” என்று ஆமஶ்ராத்தத்தைச் செய்யவேண்டியதென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்குமிடத்தில் திலதர்ப்பண ரூபமான ப்ரதிநிதியை எடுத்துக்கொள்வதற்கு ந்யாயமேயில்லை; அப்படி திலதிர்ப்பணத்தை ஸங்க்ரம ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாக எடுத்துக்கொண்டாலும் “ஶிஷ்டாஶ்சைவ ஸாசாராத் த்ருஷ்ட்வா திதிபி:, தத்ஸமாசரஸ்யாச” என்கிற ஆபஸ்தம்ப ஸூத்ரத்தின்படியே அபராஹ்ண காலத்தில் செய்யவேண்டிய அந்நஶ்ராத்தத்திற்குப் ப்ரதிநிதியாகவந்த திலதர்ப்பணமும் அபராஹ்ணத்திலேயே செய்யவேண்டும்’ என்றும் சொல்லுகிறார்கள். இதுவும் அநுபபந்நம். ஏனெனில்; “ஸங்க்ராந்தௌ க்ரஹணே சைவ ப்ரவாஸே புத்ரஜந்மநி ‘ஆமஶ்ராத்தம் ஸங்கல்பேவ” இத்யாதிகளான வசநங்களில் அநியத நிமித்தங்களான உபராகத்திலும் ஸங்க்ரமத்திலும் புத்ரஜந்மாவிலும் விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியன்று; அவைகளில் ஆமஶ்ராத்தமே முக்யமாகவே விதிக்கப்படுகிறது. ஏனென்றால் க்ரஹணத்திலும் புத்ரஜந்மாவிலும் அந்நங்கிடையாததனால் ஆமஶ்ராத்தம் ப்ராப்தமாயிருக்க விஶிஷ்ய ‘க்ரஹணே’ யென்றும், ‘புத்ரஜந்மநி’ யென்றும் எடுத்தது வ்யர்த்தமாகிவிடு மாகையாலே க்ரஹணத்திலும் புத்ரஜந்மத்திலும் விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் அக்நஶ்ராத்தத்திற்குப் ப்ரதிநிதியன்றென்று எப்படி ஏற்படுகிறதோ, அப்படியே ஸங்க்ரமண நிமித்தமாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தமும் அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியன்று என்று ஏற்படுகிறது. க்ரஹணம் முதலியவைகளில் விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் முக்யமென்றும் ஸங்க்ரமண நிமித்தமாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியென்றுஞ் சொல்வதற்கு ப்ரமாண மில்லாததுடன் ஒரே ஶ்லோகத்தில் சொல்லிய அநியத நிமித்தஶ்ராத்தங்களுக்குள்



ஒன்று முக்யமென்றும் ஒன்று ப்ரதிநிதியென்றுஞ் சொல்வது ந்யாய விருத்தம். ஆகையால், ஸங்க்ரமமும் உபராகமும் புத்ரோத்பத்தியும் இவைமுதலியவையெல்லாம் வெவ்வேறாகவே முக்யாமஶ்ராத்தத்திற்கு நிமித்தம். “ஶ்ரீராஜஸ்ய க்ரூரா திவஸாத் ஶ்ராத்தநிமித்தகாச” என்று வைதிக ஸார்வபௌமரும் அப்படியேதான் சொல்லியிருக்கிறார். பின்னும், “ததாமஶ்ராத்தம் பூர்வாஹ்ண வ ஶூத்ரை: கார்யாச அபராஹ்ணே” என்று வைதிகஸார்வபௌமர் சொன்னது அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியான ஆமஶ்ராத்த விஷய மென்பது வைதிகஸார்வபௌமருடைய “அநியதாபராஹ்ண காலீநாந்நஶ்ராத்தஸ்யைவ விஹித அபராஹ்ண ஶ்ராத்தஸ்ய ததாந்நாத்யாபராஹ்ண யத்ரோக்தலிங்கை: ததபராஹ்ண காலத்வஸ்யாக்தம், அந்நஶ்ராத்தஸ்யைவ விஹித ஸ்யாதிக் காலக்தவ்யாலிங்கை:” என்கிற வாக்யங்களாலேயே ஏற்படுகிறது.

“ஆமஶ்ராத்தம் து பூர்வாஹ்ணே” என்று ஆமஶ்ராத்தத்திற்கு பூர்வாஹ்ணம் காலம் விதிக்கப்பட்டிருக்க, ஸங்க்ரமநிமித்தமாகவந்த ஆமஶ்ராத்தம் பகலிலெப்பொழுதும் பண்ணலாமென்று சொல்வதெப்படி யென்னில்; “ஶூத்ர: கார்யாத்ஸ்வேச்சயா இதி நித்யவிஹிதாத் ஶ்ராத்தவிஷய ஸ்வாத்பூர்வாஹ்ணஸ்ய” என்கிற ஸார்வபௌமருடைய வாக்யத்தாலே, “ஆமஶ்ராத்தம் து பூர்வாஹ்ணே” என்பது ஶூத்ரவிஷயமென்று ஏற்படுகிறது. ஆகையால், ஸங்க்ரம நிமித்தமாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தமும், அதற்கு ப்ரதிநிதியான திலதர்ப்பணமும் காலநியமமில்லாமல் எப்பொழுதும் பண்ணலாம். இவ்விதமாக அபிப்ராயங்கொண்டு பூர்வீகர்களான ஶிஷ்டர்கள் அநுஷ்டிக்கிறார்கள். அதைப் பிசகென்று “ஶ்ருதிஸ்ம்ருதிஸதாசாரா:” என்கிற வாக்யத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டவர்கள் சொல்லமாட்டார்கள்.

சின்னமு. ஈ. ஸ்ரீநிவாஸ பாட்டாசாரியர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# நிருபாதிக ஸௌஹார்த்தம்.

லோகத்தில் ஸௌஹார்த்தமென்பது பெரும்பாலும் க்ருத ப்ரதிக்ருதத்தை அபேக்ஷித்திருக்கிறதாக நாம் பார்க்கிறோம். ஒருவன் நமக்கு ஓர் உபகாரத்தைச் செய்தால் அது காரணமாக அவனிடத்தில் நமக்கு ஒரு விச்வாஸமும், அபகாரத்தைச் செய்தால் அவனிடத்தில் ஒரு அப்ரீதியும் நமக்கு உண்டாவது ஸஹஜமாக இருக்கிறது. நிருபாதிகமான விச்வாஸத்தையாவது த்வேஷத்தையாவது இந்த லோகத்திலே நாம் பார்ப்பது துர்லபம். ஆனாலும், சில விடங்களில் புத்தி பூர்வமாக நமக்கு யாதொரு உபகாராதிகளுக்கு ஹேது இல்லாமல் இருக்கையிலும், ஆக்ருதி விசேஷத்தாலாவது சப்த விசேஷத்தாலாவது நம்முடைய மநஸ் ஆகர்ஷிக்கப்பட்டு அந்த ஸ்தானங்களில் ஒரு விதமான ப்ரீதியைச் செய்கிறது உண்டு. ரம்யமான பதார்த்தத்தைப் பார்ப்பதனாலும் மதுரமான சப்தத்தைக் கேட்பதனாலும் நம்முடைய ஆத்மாவுக்கு ஒரு ஸுகம் உண்டாகின்றது என்கிற காரணத்தால் இம்மாதிரியான விஷயங்களில் ஜநிக்கும் விச்வாஸமும் ஸோபாதிகம் என்றே சொல்லக்கூடும். மாதா பிதாக்கள் ப்ரஜைகளிடத்தில் வத்ஸலர்களாக இருப்பதும், இதர விதமான பந்துத்வ ப்ரயுக்தமாக ப்ரீதி உண்டாவதும் இவையெல்லாம் ஸாக்ஷாத்தாக நேரும் ஆநுகூல்யாதிகளைக் காரணமாக உடைத்தாயிராமல் இருந்தாலும், பரம்பரையாக ஆத்ம பர்யவஸாயிகள் ஆகின்றன என்பதில் ஸந்தேஹம் இல்லை. ஆனால்,



“வ்யதிஷஜதி பதார்த்தாநாந்தர: கோऽபி ஹேது:
ந கலு பஹிருபாதீந் ப்ரீதய: ஸம்ச்ரயந்தே ।
விகஸதி ஹி பதங்கஸ்யோதயே புண்டரீகம்
த்ரவதி ச ஹிமரச்மாவுத்கதே சந்த்ரகாந்த: ॥”

என்று கவிகள் வர்ணிப்பதை நாம் பார்க்கிறோம். ‘லோகத்தில் ப்ரீதி முதலிய ஹ்ருதய பாவங்கள் உண்டாவதற்கு நம்மால் அறியக்கூடாத ஆந்தரமான காரணங்கள் இருக்கின்றனவே தவிர, பாஹ்யமான காரணங்களை அவைகள் ஆச்ரயித்து நிற்கவில்லை; ஸூர்யோதயத்தில் தாமரஸ புஷ்பம் மலர்வதும், சந்த்ரோதயத்தில் சந்த்ர காந்தக் கல் உருகுவதும் எவ்விதமான பாஹ்ய காரணத்தைப் பற்றி உண்டாகின்றன?’ என்று ஜடமான த்ரவ்யங்களுடைய நிதர்சநத்தைக் கொண்டு ஆத்ம விஷயத்திலும் நிருபாதிக விச்வாஸம் உண்டு என்று கவிகள் நிர்வஹித்திருக்கிறார்கள்.

இது கவிகளுடைய வர்ணனையே. ஸங்குசிதமும் ஸாதாரணமுமான ப்ராக்ருத விச்வாஸத்தை சுத்தமும் உத்தமமுமான விச்வாஸம்போலப் பாவித்துச் சித்தரஞ்ஜநத்திற்காக வர்ணிப்பதான கோஷ்டியை இது சேருமே தவிர, யதார்த்தமாக வஸ்து ஸ்திதியின் நிர்த்தேசம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், உத்க்ருஷ்டமான அந்த நிஷ்காரண விச்வாஸம் குணத்ரயத்தால் அபிபூதர்களான நம்மிடத்தில் நேர்வது துஸ்ஸாத்யம். கல்யாண குணம் நிறைந்த பகவான் நம்மிடத்தில் செய்யும் வாத்ஸல்யத்தை நிஷ்காரணமென்று சொல்லலாம்; அதே மாதிரி ஸத்வம் தலையெடுத்துப் பகவானிடத்தில் பக்திரூபமான ப்ரீதியைச் செய்யும் பாகவதர்களிடத்தில் இப்படிப்பட்ட விச்வாஸத்திற்கு இடம் உண்டு. மற்றை எந்த இடத்திலும் அது ஸம்பவிக்காது என்பது நிச்சயம். லோகத்தில் எவ்விடத்திலாவது அதற்குச் சற்றேறக்குறைய ஸத்ருசமான விச்வாஸம் தென்பட்டால் அது ஸாமாந்ய விச்வாஸத்தைக் காட்டிலும்

உத்க்ருஷ்ட மென்றும், யோகிகளுக்குத் துல்யமாக ஸர்வ பூதங்களிலும் பரமாத்மாவைப் பார்க்கும் பாகவதர்களுக்கே அது ஸாத்யமென்றும் சொல்லவேண்டும்.

யதார்த்தமாகவே, நம்மால் ப்ரீதி செய்யப்படும் வஸ்துக்களுள் பரமாத்மாவே மிகத் தகுந்த ப்ரீதி பாத்ரம். ஜந்து ஸாமாந்யத்திற்கே அவனிடத்தில்தான் நிஷ்காரணமாகவும் நிரதிஶய மாகவும் ப்ரீதி ஸம்பவிக்கக்கூடும்.

“ஸர்வேஷாமேவ ஜந்தூநாம் த்ருவ மாத்மைவ வல்லப: ।
இதரே த்வஸ்ய புத்ராத்யா: தத்வல்லபதயைவ ஹி ॥”

[எல்லாருக்கும் பரமாத்மாவாகிய பரமபுருஷனே நிரதிஶய ப்ரியன்; தேஹம் முதல் ஜீவன் வரையிலுள்ள மற்றைப் பதார்த்தங்களெல்லாம் பரமாத்மாவுக்கு வல்லபங்கள் என்கிற காரணத்தினாலே ப்ரீதி பாத்ரங்கள் ஆகின்றன] என்று ஸ்ரீ பாகவதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஶ்ருதியும், “ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி, ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி” என்று இதே அர்த்தத்தைச் சொல்லுகின்றது. இப்படிப்பட்ட ப்ரீதியே பரம ஶ்ரேயஸ்ஸுக்குக் காரணமாகிறபடியால் அதன் நிஷ்பத்தியைத்தேடவேண்டிய நாம், அதற்கு உபகாரகமாக இருக்கும் ஐஹிகமான ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தை எப்பொழுதும் உணர்ந்து அநுஷ்டித்து வரவேண்டியது அவஶ்யம். நிருபாதிகமாக அதை அநுஷ்டிப்பது ஸாத்யமில்லாவிடினும் ஸோபாதிகமாகவாவது அநுஷ்டிக்க வேண்டும் என்பதே ஸகல ஆசார்யர்களுடைய திருவுள்ளம்.

ஒரு ஆஸ்திகன்.

ஸ்ரீ:.

# புஸ்தகவிமர்ஶம்.

## குருபரம்பரா ப்ரபாவம்.

ஸ்ரீமத் த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகாலஸ்வாமி அருளிச்செய்த மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் என்னும் க்ரந்தம், சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ கொமாண்டூர் அநந்தாசார்யரால் புதிதாகப் பதிப்பிக்கப்பட்டு இப்பொழுது வெளியாகி யிருக்கிறது. நமக்காக அனுப்பப்பட்டுள்ள அந்தப்புஸ்தகத்தின் ஒரு ப்ரதியை மிக்க ஸந்தோஷத்துடன் நாம் வரப்பெற்றோம். புஸ்தகத்தின் ஆக்ருதியும் அச்சுப் பதிப்பு ஸம்பத்தமான மற்றை அம்ஶங்களும் மிக ரமணீயங்களாக இருக்கின்றன. இந்தப் புஸ்தகத்தை வெளியிடுவதில் ஸ்ரீ. கொ. அநந்தாசார்யர் மிகுந்த பரிஶ்ரமத்தை எடுத்துக்கொண்டிருக்கிறதாகவே தெரியவருகிறது. பரமோபகாரர்களான ஆசார்யர்களால் ஜகத்தினுடைய ஹிதத்தின் பொருட்டே அநுக்ரஹிக்கப்பட்டுள்ள இது போன்ற க்ரந்தங்கள் லுப்தங்களாகாமல் பல பெயர்களுக்கு எட்டும்படி பரவுவதே பஹுஜநங்களுடைய நன்மைக்கு ஹேதுவாகு மாதலால், இதை அப்படிப் பரவச்செய்வதில் பரிஶ்ரமத்தை எடுத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ அநந்தாசார்யர் விஷயத்தில் நாம் எல்லாரும் க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாகவே இருக்கிறோம். இந்தப் புஸ்தகம் வேண்டுமவர்கள் ஸ்ரீ. கொ. அநந்தாசார்யருக்கே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் இதன் விலை ரூ. 1—8—0.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1.)

## ஹிந்துக்களின் மதக்கொள்கையும், அநுஷ்டாநங்களும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

அடியேனுடைய மிதஜ்ஞதையைக் கொண்டு எழுதினதைத் தீபிகையில் ப்ரசுரம் செய்ததற்கு க்ருதஜ்ஞதையுடன் இருக்கிறேன். தீபிகை அபிமாநிகளின் அபிப்ராயத்தை அறிய நினைத்திருந்த அடியேனுடைய எண்ணம், தேவரீருடைய அபிப்ராயம் வெளிவந்ததால் பூர்த்தியாக அவகாஶம் இல்லாமற் போய்விட்டது. ஆகிலும், ஏதாவது வெளிவருமென்றும், ப்ரசுரமாகு மென்றும் நம்புகிறேன்.

இப்பொழுது எழுதவேண்டிய அம்ஶம் ஒன்று மாத்திரம் இருக்கிறது. 'வேதாந்திகளிடத்தில் ஸத்யமில்லை' என்று நான் எழுதிய வாக்யத்திலுள்ள 'வேதாந்திகளிடத்தில்' என்கிற பதத்திற்குள் 'இக்காலத்து' என்கிற பதம் தொக்கியிருக்கிறது. ப்ரக்ருதம் நம்முடையவும் இந்தத் தேஶத்தினுடையவும் ஸ்திதியைப்பற்றிச் சொல்லும்போது, ஸத்யத்திலிருந்து தவறுமலிருந்த தர்ம புத்ராதிகளைப் போலிருப்பவர்களைச் சொன்னதாகாது.

நம்மவர்களில் சிலர் வேதாந்திகளென்று பெயர்மாத்ரம் சொல்லிக்கொண்டு அநுஷ்டாநாதிகளில் வேறுபாடாக இருப்பதைக் காணலாமென்று சொன்னபடி. அப்படி இல்லாவிடில், நம்முடைய தேவாலயங்களும் மற்றும் அநேக தர்ம ஆஸ்தாநங்களும் மடங்களும் இவ்வளவு தாழ்ந்த ஸ்திதியை அடைவதற்குத் தகுந்த ஹேதுவில்லை. மதக் கொள்கைகளிலும் ஸம்ப்ரதாயங்களிலும் பேதங்கள் இருப்பது மாத்ரம் த்வேஷத்திற்கும் மற்றைக் குறைவுக்கும் ஸரியான ஹேதுவாகாது.

மேற்சொன்ன அம்ஶங்களில் சீர்திருத்தங்கள் ஏற்படுகிற வரையில், மேற்படி ஸ்தலங்களின் தர்ம பரிபாலநஸ்தர்கள் வேதாந்திகளென்று பெயர் மாத்ரம் கொண்டவர்களேதவிர நிஜ வேதாந்திகளல்லரென்பது

சித்தூர் }
12—5—13. }

நிஜ மதம்.

---

## (2.)

## குருபரம்பரா ப்ரபாவம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

1913-ம் வருஷத்தில் புதிய திருத்தமான பதிப்பென்று ஒரு 'குருபரம்பரா ப்ரபாவம்' பச்சையப்பன் காலேஜில் தமிழ்ப் பண்டிதரொருவராகிய கொமாண்டூர் அநந்தாசார்யர் என்பவரால் அச்சிட்டு ப்ரசுரமாகி வருகிறது.

அதில் 185-வது பக்கத்தில், (1) அபயப்ரதாந ஸாரம், (2) ப்ரபந்த ஸாரம், (3) ஆஹார நியமம் என்கிற க்ரந்தங்கள் நயினாராசார்யர் அருளிச்செய்த க்ரந்தங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிலேயே 170-வது பக்கத்தில் தேஶிகன் செய்திருக்கும் அநேக க்ரந்தங்களில் 121-க்ரந்தங்கள் வேத்யங்களென்றும், 171-வது பக்கத்தில் (1) அபயப்ரதாந ஸாரம், (2) ஆஹார நியமம் பாட்டு 21, (3) ப்ரபந்தஸாரம் பாட்டு 11-ஆகிய இம்மூன்றும் தேஶிகன் செய்த க்ரந்தங்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேல்கண்ட பண்டிதராவது மற்றை வித்வான்களில் யாராவது இதில் எது பிசகு? அல்லது தேஶிகன் அபய ப்ரதாநஸாரம், ஆஹாரநியமம், ப்ரபந்தஸாரம் தவிர, நயினாராசார்யரும் வேறு இப்பெயருள்ள க்ரந்தங்கள் செய்திருக்கிறாரா? அப்படி இருந்தால் அந்தப் புஸ்தகங்கள் எங்கே கிடைக்கும்? என்பதை விவரமாய் எழுதும்படி ப்ரார்த்திக்கிறேன்.

சித்தூர், }
22—7—13. }

நீலமேகம். ஸ்ரீநிவாஸ வரதன்.



## (3.)

## ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதி.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு.

நாகபட்டணம் ஸப்கோர்ட்டில் திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர் முதலிய சிலர், ஸ்ரீ அஹோபிலமடம் அழகிய சிங்கர் முதலிய சிலர் பேரில் வ்யாஜ்யம் செய்திருக்கும் விஷயம் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இந்த வ்யாஜ்யத்தின் பிராது தாக்கலானவுடன், 'முதல் ப்ரதிவாதியாகிய ஸ்ரீ அழகிய சிங்கர், இரண்டாவது ப்ரதிவாதியாகிய ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்காவது அல்லது மூன்றுவது ப்ரதிவாதியாகிய ஸ்ரீ. சக்ரவர்த்யாசார்யருக்காவது ஆஸ்தாநத்தைக் கொடுத்துவிடக் கூடாது' என்று தாத்காலிக மறியல் உத்தரவு (Temporary injunction order) ஆகியிருக்கிறது. சென்ற 26—7—13 ல், இந்த மறியல் உத்தரவு முடிவான டைஸலுக்குக் கோர்ட்டில் எடுக்கப்பட்டபொழுது, மூன்றுவது ப்ரதிவாதியாகிய ஸ்ரீ. சக்ரவர்த்யாசார்யர் ஸந்நிஹிதராக இல்லாததால், அவர் ஸம்பந்தப்பட்ட வரையில் 'கக்ஷி இல்லை' (Ex Parte) என்று கோர்ட்டார்கள் குறித்திருக்கிறார்கள். இப்பொழுது முதல் ப்ரதிவாதியால் எழுதி வைக்கப்பட்ட மரண ஶாஸநம் (Will) அந்த நிலைமையில் ஊர்ஜிததத்திற்கு வாராமலே வெற்றுக் கடிதமாகிவிட்டது என்றே நாம் நினைக்கலாம்.

இந்த ஸந்நிதியில், ஸ்ரீ அஹோபில மடத்தில் ஆஸ்தையுள்ள ஶிஷ்யர்கள் அனைவரும், இந்த வ்யாஜ்யம் மேல் நடவாமல் நின்று விடவேண்டுமென்றும், கொஞ்ச காலம் முன் வரையில் அநேக நூற்றாண்டுகளாக நம்முடைய ஸ்ரீ ஸந்நிதி கார்யங்களெல்லாம் கோப்யமாகவும் கௌரவமாகவும் நடந்து வந்தது போல இன்னும் அநேக நூற்றாண்டுகளுக்கு அவை நடைபெற்று வரவேண்டுமென்றும் எண்ணம் கொண்டு அவ்வித நிஷ்பத்தியைக் குறித்து உந்முகர்களாக இருக்கிறபடியால் இந்த வ்யாஜ்யத்தின் வாதிகள் அந்த எண்ணத்திற்கு இணங்கி, இந்த வ்யவஹாரத்தைக் கோர்ட்டிலேயே முடிவுபெறும்படி விட்டு விட்டிராமல், நமக்குள்ளாகவே ஒரு விதமாகத் தீர்த்துக் கொள்வது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. தேவரீர்களைப்போன்ற ஶிஷ்ய ப்ரமுகர்கள் இதுவிஷயத்தை ஆலோசித்து 'இவ்விதம் செய்யவேண்டும்' என்று தீபிகை மூலமாக ஏற்பாடுசெய்தால் நம்முடைய மடத்திற்குக் கீர்த்தியும் நமக்குக் கௌரவமும் வ்ருத்தியாகும்.

மதுரை, }
4—8—13. }

கே. சேஷய்யங்கார், பி-ஏ., பி-எல்.

---

## ஸ்ரீரங்கம் தேவஸ்தாநம்.

இந்தத் தேவஸ்தாந பரிபாலந விஷயமாக, திருச்சிராப்பள்ளி ஸப்ஜட்ஜ் அவர்களால் சென்ற ஆகஸ்டு மாஸம் 7வ திநம் பின் வருமாறு ஒரு வ்யவஸ்தை ஏற்பாடு செய்யப்பட்டது:—

1. இந்தத் தேவஸ்தாநத்தின் பரிபாலநம், மூன்று நியந்தாக்கள் ஐந்து தர்ம கர்த்தாக்கள் ஒரு கோஶாதிகாரி ஆகிய ஒன்பது அதிகாரிகளுடைய அதீநமாக இருக்கவேண்டும்.

## நியந்தாக்கள்.

2. இவர்களுக்கு, தர்மகர்த்தாக்களுடைய வேலையைப் பரிஶீலநம் செய்ய அதிகாரம் உண்டு; இவர்களில் ஒருவர் தென்கலை ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணராகவும், ஒருவர் வடகலை ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணராகவும், ஒருவர் ஸ்மார்த்த அல்லது மாத்வ ப்ராஹ்மணராகவும் இருத்தல் வேண்டும். தேவஸ்தாந ஸம்பந்தமான கைங்கர்ய பரர்களாவது கோயில் கமிட்டியாராவது நியந்தாக்களாக இருக்கக் கூடாது. இவர்கள் ஐந்து வருஷத்துக்கு ஒரு தடவை புதிதாக நியமிக்கப்படவேண்டும். ஒரு தடவை இருந்தவர்களே திரும்பவும் நியமிக்கப்படலாம்.

## தர்ம கர்த்தாக்கள்.

3. இவர்கள் ஐந்து பெயர்:—(1) இப்பொழுது இருப்பதுபோல மாறி மாறிவரும் பரம்பரை ஸ்தலத்தார் ஒருவர், (2) தென்கலை ப்ராஹ்மணர் ஒருவர், (3) வடகலை ப்ராஹ்மணர் ஒருவர், (4) ஶைவர் ஒருவர் (இவர் மாத்வ ப்ராஹ்மணராகவும் இருக்கலாம்), (5) மாத்வ ப்ராஹ்மணர் ஒருவர். தென்கலை வடகலை, தர்மகர்த்தாக்கள் கோயில் கமிட்டியாராலும், ஶைவ மாத்வ தர்ம கர்த்தாக்கள் கோர்ட்டார் அவர்களாலும் நியமிக்கப்படுவார்கள். ஸந்நிதி கைங்கர்ய பரர்களாவது நியந்தாக்களாவது கோயில் கமிட்டியாராவது தர்மகர்த்தாக்களாக இருக்க அர்ஹர்கள் அல்லர். தர்ம கர்த்தாக்களுடைய நியமநம் ஐந்து வருஷத்திற்கு ஒருதடவை செய்யப்படும்; ஸ்தலத்தாராகிற தர்ம கர்த்தா மாத்ரம் இப்பொழுது இருப்பது போல ப்ரதி ஸம்வத்ஸரமும் நியமிக்கப்படுவர்.

## கோஶாதிகாரி.

4. இவர் கோர்ட்டார் அவர்களால் நியமிக்கப்படுவர்; மாதச்சம்பளம் ரூ. 200, இவர் தென்கலையாகவாவது வடகலையாகவாவது இருக்கக்கூடாது; ஹிந்துவாக இருக்கவேண்டும். ரூ. 5000 ஜாமீன் கட்ட வேண்டும். தேவஸ்தாந ஸம்பந்தமான பணம் முழுவதும் இவரிடமே இருக்க வேண்டும்.

## சில ஸாமாந்ய விதிகள்.

5. நியந்தாக்களாகவாவது தர்ம கர்த்தாக்களாகவாவது இருப்பதற்கு, பின்வருமவர்கள் அர்ஹர்களல்லர்:—(1) 25 வயதுக்கு உட்பட்டிருப்பவர்கள், (2) இன்ஸால்வெண்டான கடனாளிகள், (3) வேலை செய்யக்கூடாதவளவு இந்த்ரியலோபம் அடைந்திருக்கிறவர்கள், (4) தமது குடும்பத்தில் மற்றொருவரை நியந்தாவாகவாவது தர்மகர்த்தாவாகவாவது உடைத்தாயிருப்பவர்கள், (5) இந்தியன் பீனல்கோட் 109, 110 - வது ஸெக்ஷன்படி குற்றவாளியாகக் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டவர்கள்.

[6, 7, 8 - இந்த மூன்று விதிகள், கோயில் கார்யம் நடத்தவேண்டிய பரிபாடியை நிர்த்தாரணம் செய்கின்றன.]

8. இந்த வ்யவஸ்வதை ஸம்பந்தமாகக் கீழ்க்கூறப்பட்டிருக்கும் விதிகளை மாற்றவும், புதிய விதிகளைச் சேர்க்கவும், இருக்கிற விதிகளை நிவ்ருத்திக்கவும் கோர்ட்டார் அவர்களுக்கு அதிகாரமுண்டு. அப்படிச் செய்வதற்குத் தாங்களாகவேயாவது, தேவஸ்தாநத்தில் ஶ்ரத்தையுள்ள யாராவது ஒரு வ்யக்தியின் ப்ரோத்ஸாஹநத்தின் பேரிலாவது கோர்ட்டார் ப்ரவ்ருத்திக்கலாம்.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வருஷம் புரட்டாசி மீ [ஸஞ்சிகை 8.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிஜகத்கமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம். 1-9-33.]

**ஈஶ்வர பக்தியும், ஸாமாந்ய தர்மாநுஷ்டாநமும்.**

“அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ஶௌசமிந்த்ரியநிக்ரஹ: । தாநம் தமோ தயா க்ஷாந்தி: ஸர்வேஷாம் தர்மஸாதநம்” என்னும் ஶ்லோகத்தினால், ப்ராணி பீடையைச் செய்யாமலிருப்பது, உண்மை பேசுவது, திருடாமலிருப்பது, பாஹ்யமாகவும் ஆந்தரமாகவும் ஶுசியாக இருக்குந் தன்மை, புத்தியையும் கர்மேந்த்ரியங்களையும் நியதங்களான விஷயங்களில் ப்ரவர்த்திப்பிப்பது, ப்ராணிகளுக்கு யதாஶக்தி அந்ந பாநாதிகளைக் கொடுத்து உபகரிப்பது, அந்த: கரணத்தை அடக்குவது, ஆபந்நரைக் காப்பாற்றுவது, மற்றவர் தமக்குத் தீங்கு செய்தாலும் தாம் அவர்களைக்குறித்துச் சித்த விகாரம் அடையாமல் இருப்பது இவையெல்லாம் எல்லா மநுஷ்யர்களுக்கும் பொதுவான தர்மங்கள் என்று யாஜ்ஞ

வல்க்ய மஹர்ஷி சொல்லியிருக்கிறார். இவைகளைத் தர்மங்களென்று ஒத்துக்கொள்வதற்கு ஶாஸ்த்ரம் முதலிய ப்ரமாணம் அபேக்ஷிதமன்று; ஸாமாந்யமாக இவை ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டு ஆகின்றன என்னுங் காரணத்தினாலேயே இவைகளை அவஶ்யம் அநுஷ்டிக்கப்படவேண்டிய தர்மங்களென்று எல்லாரும் அங்கீகரிக்கக் கூடும். இவைகளைச் சரிவர அநுஷ்டித்து வந்தால் ஜகத்திற்கு ஶ்ரேயஸ் உண்டாகுமென்றும், இவைகளின் அநநுஷ்டாநமாவது விபரீதஅநுஷ்டாநமாவது ஜகத்தின் ஸ்திதியைச் சீர்குலைத்துவிடு மென்றும் ப்ரத்யக்ஷமாகவே தெரிகின்றது. ஆகையால், ஐஹிக அபிவ்ருத்தியைத் தேடும் நாம், இம்மாதிரியான தர்மங்களுடைய அநுஷ்டாநத்தை மாத்ரம் லோபமடையவொட்டாமல் பாதுகாத்துவந்தால் போதாதோ? அப்ரத்யக்ஷமாக ஈஶ்வரன் என்று ஒருவன் உண்டு என்றும், அவனிடத்தில் எல்லாரும் பக்திசெய்யவேணுமென்றும் சொல்வது அவஶ்யமோ? என்று ஆதுநிகவித்வாங்களில் அநேகர் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஆக்ஷேபத்தைக் கொஞ்சம் பரிஶீலநம் செய்து பார்ப்போம்.

இவர்களுடைய ஸித்தாந்தமாவது - அதீந்த்ரியமான வஸ்து உண்டு என்பதற்கு த்ருப்திகரமான ப்ரமாண மொன்றுமில்லை. ஶாப்தம் என்று நாம் ஒத்துக்கொள்ளும் ஆப்த வாக்யமெல்லாம் பௌருஷேயமானதனால் ப்ரமவிப்ரலம்பாதிகளுக்குப் பாத்ரமாகும்; அவைகளை ஸரியான ப்ரமாணமாக அங்கீகரிப்பதும் ந்யாய்யமன்று; ஆப்த வாக்யமென்று நாம் ஒத்துக்கொண்டிருக்கும் இதிஹாஸ புராணங்களில் யுக்திக்கு விருத்தங்களான அநேக கதைகள் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிவோம். குணதோஷ விவேசநம் செய்யக்கூடிய ஶக்தியையுடைய நாம் அவைகளை யதார்த்தமென்று எவ்விதத்தில் நம்புவது? ஈஶ்வரன் உண்டு என்பதும், அவனிடம் நாம் பயந்து நடக்கவேண்டு மென்பதும், பாமர ஜநங்களுக்காக உத்தேஶிக்கப் பட்டவையேயன்றி, ப்ரபுத்தமான மநஸ்ஸை யுடைய விவேகிகளுக்காகச் சொல்லப்பட்டவையல்ல. பரிநிஷ்பந்நமான ஸம்ஸ்காரத்தை அடைந்திருக்கும் மநஸ்ஸை யுடையவர்கள், குணதோஷ விவேசநம் செய்து, யுக்திக்கு ஒத்தவைகளை க்ரஹித்து யுக்திக்கு விருத்தமானவைகளைக் கைவிடுவார்களே ஒழிய, ஆப்தவாக்யமென்கிற காரணத்தினால்



மாத்ரம் எல்லாவற்றையும் ஸத்யமென்று நம்பிவிடமாட்டார்கள். பண்டைய காலத்தில் ஸத்துக்களையும் அஸத்துக்களையும் பகுத்தறியும் ஜ்ஞாநம் பரவாமல் இருந்தபொழுது, கீழ்க்கூறிய தர்மங்களின் அநுஷ்டாநத்திற்கு ஈஶ்வரபக்தி ஸாதகமாக இருந்திருக்கக் கூடும்; அப்படி ஒருகாலத்தில் சிலருக்கு ஸாதகமாக இருந்த ஈஶ்வர பக்தியை ஸர்வகால ஸர்வஜந ஸாமாந்யமான அதிகாரமாக அங்கீகரிப்பது ந்யாய்ய மாகாது.

இதற்கு நிதர்ஶநமாக இரண்டொரு அநுபவத்தையும் அவர்கள் உதாஹரிக்கிறார்கள். ஆங்க்ல பௌமர்களுடைய தேஶமாகிற இங்கிலாந்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன்னே, இந்தப் பாரத வர்ஷமாகிற இந்தியாவில் இப்பொழுது இருப்பதுபோல, ஈஶ்வர பக்தி ஸர்வாதிகாரமாக க்ரஹிக்கப்பட்டிருந்தது என்றும், அப்பொழுது, அந்தத் தேஶத்திலுள்ள ஜநங்கள் தங்களுடைய புராணாதிகளில் எழுதப்பட்டுள்ள எல்லாக் கதைகளையும் உண்மையென்றே நம்பி யிருந்தார்களென்றும், காலக்ரமேண இக்காலத்திய ஶாஸ்த்ரஜ்ஞாநம் பரவிக் குணதோஷ விசாரம் செய்யக்கூடிய ஶக்தியும் அபிவ்ருத்தமாகவே, ஈஶ்வர பக்தியென்பது குறைந்து கொண்டே வந்துவிட்டது என்றும், அப்படி அது குறைவுபட்டதால் கீழ்க்கூறிய ஸாமாந்யதர்மங்களுக்கு யாதொருலோபமும் ஸம்பவிக்காமலே மேன்மேல் அந்தத் தேஶம் ஐஹிக ஶ்ரேயஸ்ஸில் வ்ருத்தியாகிக்கொண்டே வந்திருக்கிறதென்றும் இவர்கள் அறிகிறார்களாம். தவிரவும், இந்தத் தேஶத்திலே, ஈஶ்வர பக்தியுடையவர்கள் பலர் இருந்தாலும், அவர்களைவிட அப்படிப்பட்ட பக்தியற்றிருக்குமவர்களே ஜகத்தின் ஹிதத்திற்கு ஹேதுவாகும் ஸாமாந்ய தர்மங்களை அநுஷ்டிப்பதில் மிக்க ஶ்ரத்தை யுடையவர்களாகத் தென்படுகிறார்களென்பதும், ஈஶ்வரபக்தி யுள்ளவர்கள் அவ்வளவாக த்ருப்திகரமாய் அந்தத் தர்மாநுஷ்டாநம் செய்வதில்லை யென்பதும் இவர்களுடைய அநுபவமாம்.

இவர்கள், இப்படி ஈஶ்வர பக்தியின் அநாவஶ்யகதையை ஒருவாறாக ஸ்தாபித்துவிட்டு, இப்பொழுது வித்யாஶாலைகளில் வித்யார்த்திகளாகப் படித்துவரும் மாணவகர்களுக்கு ஈஶ்வர பக்தியை உபதேஶிப்பதும் அது ஸம்பந்தமான அநுஷ்டாநங்களைக்

கட்டாயப்படுத்துவதும் மிக்க ந்யாய விருத்தமென்றும் சொல்லுகிறார்கள். பாதிரிகளால் அதிஷ்டிதமான பாடசாலைகளிலும், ஹிந்துக்களுடையவும் மஹம்மதியர்களுடையவுமான சில பாடசாலைகளிலும் தைவ பக்தி ஸம்பந்தமான பாடங்கள் நடப்பதும், அது ஸம்பந்தமாகச் சில அநுஷ்டாநங்கள் சில காலங்களில் அநுஷ்டிக்கப் படுவதும் ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இது மிகவும் பிசகு என்றும், மேன்மேல் உண்டாக வேண்டிய ச்ரேயஸ்ஸுக்கு இது ஓர் இடையூறாக இருக்கின்றது என்றும் இவர்கள் சோகிக்கிறார்கள். இது மாத்ரம் அன்று; வடக்கே கங்காதீரத்தை ஆச்ரயித்திருக்கும் தேசங்களிலுள்ள அநேக ஆஸ்திகர்கள், இப்பொழுது இங்க்லீஷ் பாடசாலைகளில் கேவலம் லௌகிக சாஸ்த்ராதிகளை அப்யஸித்துக்கொண்டு தைவமொன்று உண்டு என்கிற ஜ்ஞாநத்தின் போதமின்றிக்கே, பல பாலர்கள் வித்யா நிஷ்பத்தியடைவதைப் பார்த்து, 'இந்த ஸ்திதி ஜகத்தின் ச்ரேயஸ்ஸின் பொருட்டு ஆகாதே' என்று பயந்து, அதைச் சீர்திருத்தம் செய்ய முயன்றவர்களாய், அநேக லக்ஷக் கணக்கான ரூபாயைச் சேர்த்துக்கொண்டு ஆஸ்திக்யத்துடன் கூடிய வித்யாப்யாஸத்திற்கு உரிய பாடசாலைகளை ஸ்தாபிக்கவும், அவைகளில் அந்த அப்யாஸத்திற்கு அநுகுணமான பரீக்ஷைகளை நடத்தவும், அந்தப் பரீக்ஷைகளில் நிஷ்பத்தியடையும் மாணவகர்களுக்கு ராஜஸேவைக்கு வேண்டுவதான ராஜாங்கீகாரமாகிற ஸ்வரூப யோக்யதையை ஸம்பாதித்துக் கொடுக்கவும் மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வருகிறார்கள். ராஜப்ரதிநிதிகளும் இந்த ப்ரயத்நத்தை ஸாதுவென்றே க்ரஹித்து அதற்கு வேண்டிய ஸஹாயம் செய்வதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம். ஈச்வரபக்தியிலிருந்து நடுங்கும் நம்மவர்களுக்கு இதுவும் பெரியதொரு விபத்தாகத் தோன்றுகிறது. தைவ பக்தியை உபதேசிக்கும் இம்மாதிரியான பாடசாலைகள் உத்பந்நங்களாகிவிட்டால், பல பெயர்களுக்கு ஈச்வர பக்தி உண்டாகி ஜகத்திற்கு எப்படிப்பட்டபெரிய தீங்கை விளைத்து விடுமோ? என்று பயந்து, இவர்கள் அந்த ப்ரயத்நத்திற்கு ராஜாங்கீகாரம் கிடைக்காமலிருப்பதற்கு உரிய வழியைத் தேடுகிறார்கள். தம்மைப்போன்ற அநேகரைக்கொண்டு ஸபைகளைச் சேர்த்து இதைப் பற்றிச் சர்ச்சை செய்து ராஜ ப்ரதிநிதிகளுக்குத் தங்களுடைய



அபிப்ராயத்தை உணர்த்துவதுடன், பத்ரிகைகளிலும் இந்த அக்ரமத்தைப்பற்றி அடிக்கடி உபந்யாஸாதிகளை எழுதி வருகிறார்கள். அர்வாசீந சாஸ்த்ரஜ்ஞாநத்திற்கும் ஈச்வர பக்திக்கும் ஸாமாநாதிகரண்யமில்லையென்றும், ராஜப்ரதிநிதிகள் ஈச்வர பக்தியின் உபதேசத்திற்கு அநுமதி கொடுத்துவிட்டால் ச்ரேயஸ்ஸாதகமான சித்த ஸம்ஸ்காரமே ஜநங்களுக்கு உண்டாகாமல் போய்விடுமென்றும் இவர்கள் கதறுகிறார்கள். இவர்களுடைய நடவடிக்கையைப்பற்றி நாம் என்னசொல்லலாம்?

"அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத் ।
யேநாபத்ரபதே ஸாதுரஸாதுஸ்தேந துஷ்யதி ॥"

எந்த அகார்யத்தைச் செய்வதற்கு ஸாத்விகர்கள் நடுங்குவார்களோ, அந்த அகார்யமே இவர்களுக்கு ஸந்தோஷகரமாகின்றது. தைவபக்தி இல்லாமல் ஐஹிகபோகத்தையே பெரிதாக நினைத்துக் கஷ்டப்படும் ஜநங்களைப் பார்த்து சோகிப்பது போக, இவர்கள், அந்த ஜநங்களுடைய ஸாந்நித்யத்தில் அதிமாத்ரம் உத்ஸாஹம் கொள்ளுகிறார்களே! இது என்ன வைபரீத்யம்?

ஈச்வரன் ஒருவன் உண்டு, ஜீவகோடிகள் எல்லாம் ஸர்வப்ரகாரத்தாலும் அவனுக்கு சேஷபூதர்கள் என்று உணரும் நமக்கு, 'இவ்விதமாகப் பேசுபவர்களும் இருக்கிறார்களோ?' என்று தோன்றக்கூடும். விசித்ர ஸ்ருஷ்டி யடங்கிய இந்த ப்ரபஞ்சத்தில் இவர்களைப் போன்றவர்களும் இருந்தே தீரவேணும். முற்காலத்திலும் கபில மதாநுஸாரிகளான அநேகர் இருந்ததை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஜகத்தின் அநுபவத்தைப் பரிபூர்ணமாக அறியாமல், யானையைக் கண்ட குருடர்கள் போல, தங்கள் தங்களுடைய பரிமிதமான அநுபவத்தையேகொண்டு, எல்லாருக்கும் ஆதிகர்த்தாவாகிய ஈச்வரனை அபலாபஞ்செய்ய முயலும் இவர்கள் விஷயத்தில் நாம் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை மாத்ரம் அவலம்பித்து அதீந்த்ரியமான பொருள்களில் விச்வாஸமின்றிக்கே இருப்பவர்களுக்கு ஈச்வர பக்தியைப் பற்றிப் பேசுவது அரண்ய ருதிதமாகுமாதலால், அது விஷயத்தில் நாம் ப்ரவ்ருத்திசெய்யத் துணியவில்லை. ஆனாலும், எந்த ப்ரத்யக்ஷ அநுபவத்தை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு

இவர்கள் கேவல ஸாமாந்ய தர்ம அநுஷ்டாநம் போதுமென்று சொல்லுகிறார்களோ, அந்த அநுபவம் ஸரியன்று என்று மாத்ரம் நாம் சொல்லவேண்டியது அவஶ்யமாகின்றது.

ஈஶ்வர பக்தியுள்ளவர்களிடம் ஸரியான தர்மாநுஷ்டாநமில்லை என்று சொல்வதும், சில தேஶாந்தரங்களில் காலக்ரமேண ஈஶ்வர பக்தி லோபமடைந்துகொண்டு வருகிறது என்றும் அது லோபமடைவதனால் ஸாமாந்ய தர்மாநுஷ்டாநமும் ஐஹிக ஶ்ரேயஸ்ஸும் வ்ருத்தியாகின்றன என்றும் சொல்வதும், ஸரியான அநுபவங்களல்ல. அந்தத் தேஶாந்தரங்களில் ஈஶ்வர பக்தியுள்ள ஸாதுக்கள் பலர் இருப்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட பக்தி மேன்மேல் வ்ருத்தியாவதனால் தான் அவ்விடங்களில் ஐஹிக ஶ்ரேயஸ் அபிவ்ருத்தமாகி வருகின்றது என்பது நம்முடைய அபிப்ராயம். உண்மையாகவே, ‘ஈஶ்வரன் ஒருவன் உண்டு, அவனுக்குப் பயந்து நடக்கவேணும்’ என்கிற ஜ்ஞாநம் இல்லாதவர்களிடத்தில் தர்மா தர்ம விவேகம் எப்படி ஸம்பவிக்கும்? ஈஶ்வர பக்தி இல்லாவிட்டால், கேவலம் ஸ்வகார்ய பரர்களும் ஆத்மத்ருப்தியைத் தேடும் ஸ்வபாவமுள்ளவர்களுமான ஜநங்களடங்கிய இந்த ப்ரபஞ்சத்தில், ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸுக்கு அவஶ்யம் அபேக்ஷிதமென்று எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படும் தர்மாநுஷ்டாநம் எவ்விதமாக நடைபெறும் என்பதே நமக்குத் தெரியவில்லை. எல்லாரும் அஸத்யம் பேசுவதிலும் பர ஸ்வாபஹாரம் செய்வதிலுமே முயன்று, ஜகத்துக்கு அளவற்ற தீங்கை விளைவித்துவிடுவார்களென்றே நமக்குத் தோன்றுகிறது. தர்மாநுஷ்டாநம் முழுவதும் ஸ்திரமாக இருக்கவேண்டுமானால் ஈஶ்வர பக்தியைக் கொண்டே அதை ஸாதித்துக்கொள்ளவேணுமே தவிர வேறு ஸரியான மார்க்கம் கிடையாது.

மேலும், ஈஶ்வர பக்தி எவ்விதத்தில் சித்த ஸம்ஸ்காரத்திற்கு விருத்தம்? என்பதை நாம் அறியோம். ப்ரத்யுத, சித்தம் தெளிந்து நல்ல ப்ரபோதம் உண்டாவதற்கு ஈஶ்வர பக்தியே ஹேதுவாகின்றது என்பதும், ஈஶ்வர பக்தர்களிடத்திலேதான் உதாரமான ஆஶயம் காணப்படுகிறதே தவிர மற்ற எவரிடத்திலும் அந்த ஔதார்யம் காணப்படவில்லையென்பதும் நம்முடைய அநுபவம். நம்மை ஸ்ருஷ்டித்து ஸர்வ காலத்திலும் பாதுகாத்து நம்மிடத்தில் அளவற்ற க்ருபையுடன் நம்மை அநு-



க்ரஹித்துவரும் பகவான் எவ்விடத்திலும் நிறைந்து இருக்கிறான் என்று உணருமவர்களுக் கல்லாமல் மற்றை எவர்களுக்கு ஸர்வபூத ஸௌஹார்த்தமாகிற ஔதார்யம் ஸம்பவிக்கும்? தவிரவும், ஆதுநிக ஶாஸ்த்ர ஜ்ஞாநமும் ஈஶ்வர பக்தியும் எப்படி விருத்தங்கள்? இந்த ஶாஸ்த்ரத்தை உபதேஶிக்கும் பாடஶாலைகளில் ஈஶ்வர பக்தியை உபதேஶிக்க ப்ரயத்நப்படுவது ஶைத்யஸ்தாநமான ஜலமிருக்குமிடத்தில் வஹ்நியை வளர்ப்பதுபோல உந்மத்த க்ருத்யமாகின்றது என்று இவர்கள் பரிஹஸிப்பதற்குக் காரணம் யாதோ? ஈஶ்வர பக்தனாக இருக்கிறவன், அந்த ஈஶ்வரனுடைய விபூதியாகிற இந்த ப்ரபஞ்சத்தின் யாதார்த்யத்தை அறியக்கூடாதோ? ஈஶ்வரனிடத்தில் பக்தி பண்ணும் மாத்ரத்தால் ஒருவன் குணதோஷ விவேசநம் செய்யும் ஶக்தியை இழந்துவிடுகிறான் என்று சொல்வது கேவலம் ஆக்ரஹிகள் சொல்லும் வார்த்தையே ஒழிய விவேகிகள் சொல்லும் வார்த்தையாகுமா? அதிமாநுஷமான கார்யங்களை ஈஶ்வரன் அவதார தஶையில் தானே செய்ததாகவும், மற்றைத் தஶைகளில் இதரர்களைக் கொண்டு செய்வித்ததாகவும் இதிஹாஸ கதைகளில் சொல்லப்பட்டிருந்தால், அவைகள் ஏன் அஶ்ரத்தேயங்கள் ஆகவேணும்? அகடித கடநா ஸமர்த்தனாகவும் ஸர்வ ஶக்தனாகவுமுள்ள ஈஶ்வரன் விஷயத்தில், ஒவ்வொரு க்ஷணத்திலும் விவிதமான விகாரத்தை அடைந்து கொண்டிருக்கும் அதிஸங்குசிதமான நம்முடைய புத்தி ஶக்தி எம்மாத்ரம்? இன்ன இன்ன பதார்த்தங்களை அறிவதற்கு இன்ன இன்ன ஶக்தி வேண்டுமென்கிற ஆநுகுண்ய ஜ்ஞாநம் கூடவா நமக்குக் கைதவறவேணும்?

ஸர்வரும் ஸர்வத்தையும் நம்பிவிடவேண்டும் என்பது நம்முடைய அபிப்ராயமன்று. நம்முடைய புத்தி ஶக்தியைக்கொண்டு பதார்த்தங்களின் குணதோஷ விவேசநம் செய்து, குணவத்தை க்ரஹித்து தோஷ துஷ்டங்களை த்யஜிக்கவேணும் என்பதே நம்முடைய கருத்து. ஆனால், ‘தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்மா ஒன்று இருக்கின்றது அதற்கு ஸ்வாமியாகவும் ரக்ஷகனாகவும் பகவான் ஒருவன் உண்டு’ இத்யாதியான அதீந்த்ரிய விஷயங்களில் நம்முடைய ஜ்ஞாநேந்த்ரிய கர்மேந்த்ரியங்களைக்கொண்டு நாம் ப்ரவ்ருத்தித்து, அவாங் மநஸ கோசரங்களான ஈஶ்வரனுடைய சேஷ்டிதங்களை அறியவும் அவைகளின்

ஸாத்வஸாது பாவத்தை நிர்ணயிக்கவும் நாம் முயல்வது மௌட்ய பரீவாஹமே யாகும் என்று நமக்குத் தோன்றுகிறது. இம்மாதிரியான அதீந்த்ரிய விஷயங்களில், மஹா ஜ்ஞானிகளான ஆப்தர்களால் கூறப்பட்டுள்ள ஶ்ருதி ஸ்ம்ருதிகளின் வாக்யங்களை நம்பி அவைகளின்படி நடந்து ஶ்ரேயஸ்ஸை நாம் தேடிக்கொள்வது தான் நமது தர்மமாகுமென்பது நம்முடைய அபிப்ராயம். இப்படி ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை அறியாமல், தம்முடைய ஸங்குசிதமான புத்தியை அஸ்கலந ஶீலமென்று நினைத்து, ஐஹிகமான பதார்த்தங்களைத்தவிர வேறு ஒன்றுமில்லையென்று சொல்லிக்கொண்டு, பின்னால் வரும் அநுபந்தத்தைப் பாராமலே ப்ரவ்ருத்திக்குமவர்களை அத்யந்தம் அந்தகர்களென்றே நாம் நினைக்கிறோம். தங்களுடைய நாஶத்தை ஸம்பாதித்துக் கொள்வதுடன், இவர்கள் பரதந்த்ர ப்ரஜ்ஞர்களான கணக்கற்ற ப்ரஜைகளது நாஶத்துக்கும் காரணமாகிவிடுகிறார்களே! எல்லாரையும் ஸதா ஸம்ரக்ஷித்துவரும் பகவான் இவர்களுக்கு நல்ல புத்தியைக்கொடுத்து ஆஸந்நமாக இருக்கும் இந்த ஆபத்திலிருந்து ஜகத்தைத் தப்புவிக்கும்படி க்ருபை செய்யவேணுமென்பது நம்முடைய ஸார்வகாலிக ப்ரார்த்தனை.

"ஹஸெக்ஷ்யாந்த்ஹேஷூ திஷ்ணம் ஹஸெஷ்யா பவிஶரோயஸம் ।
க்ஷத்ராஷிராஷீ ஜ்யஸமெத தாநாபம்யஹேவெக்ஷதெ ॥"

"The angels from their home above
Look down on us with pitying eye,
That where we are such passing guests
We build such strong and solid nests,
And where we hope to live for aye
We scarce take heed one stone to lay."

∴ ∴ ∴

**ஸ்ரீ அஹோபிலம்.**

சென்ற விரோதிக்ருத் வர்ஷம் மார்கழி தை மாஸத்திய ஸஞ்சிகைகளில், ஸ்ரீ அஹோபிலத்திலுள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியின் தைந்ய தஶையைப் பற்றி நாம் விஸ்தாரமாக எழுதியிருந்தோம். கீழ்அஹோபிலம் மேல்அஹோபிலம் என்ற இரண்டு இடங்களிலுமுள்ள ஸந்நிதிகள் அத்யந்தம் ஜீர்ணமாக இருக்கின்றன என்றும், இரண்டு இடங்களிலும் ஆராதநாதிகள் ஸரிவர நடந்துவரவில்லையென்றும், உத்ஸவகாலங்களில் ஸேவார்த்திகளாக அவ்விடத்தில் வந்து சேரும் ஜநங்கள் வஸிக்க ஸ்தலமில்லாமலும் பாநத்திற்குத் தகுந்த தீர்த்தமில்லாமலும் அளவற்ற கஷ்டத்தை அநுபவிக்கிறார்களென்றும், அந்த ஸந்நிதியின் பரிபாலந ஸம்பந்தம் பெற்றவர்கள் அது விஷயமாக மஹத்தான ஔதாஸீந்யத்தை வஹிக்கிறார்களே தவிர யதோசிதம் ஶ்ரத்தாளுக்களாகக் காணப்படவில்லையென்றும் விஸ்தரித்து எழுதி, இந்தத் துர்தஶையை ஶீக்ரத்தில் நிவ்ருத்தி செய்ய வேண்டுவதற்குஉரிய முயற்சிகளை அந்த ஸந்நிதியின் தர்மகர்த்தாவாகிய ஸ்ரீ அழகிய சிங்கர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரை ப்ரார்த்தித்திருந்தோம். அந்த ப்ரார்த்தனை இதுவரையில் கொஞ்சமாவது கவனிக்கப்பட்டதாக யாதொரு சிஹ்நமும் காணப்படவில்லை. இப்பொழுது முன் போலவே ஆராதநாதிகள் அத்யந்தம் அநியதங்களாகவே இருக்கின்றனவாம். சில மாஸங்களுக்கு முன்னே அநுஸ்யூதமாகப் பதினாறு தினங்கள் இந்த இரண்டு ஸந்நிதிகளுள் ஓரிடத்திலாவது ஆராதநமே நடக்கவில்லையென்றும், இதைப்பற்றிச் சிலர் அந்த ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு மனுச்செய்துகொண்டதின்பேரில் 'ஏன் அவ்விதமாக ஆராதநம் நிற்கவேணும்?' என்று அவ்விடத்துத் தாசீல்தார் கலெக்டருடைய உத்தரவின்படி அர்ச்சகரைக் கேட்டதற்குத் தன்னுடைய சம்பளம் ஸரிவரக் கொடுக்கப்படாததால் தான் ஆராதநத்தை நிறுத்திவிட்டதாக அர்ச்சகர் வாக்மூலம் கொடுத்திருக்கிறானென்றும், அர்ச்சகர் சொல்வது உண்மையென்று அங்கிருக்கும் டெபுடி ரேஞ்ஜர் ஒருவர் அதை உறுதிசெய்திருக்கிறாரென்றும், இது ஸம்பந்தமான ரிபோர்ட் கலெக்டருக்குச் சேர்ந்தவுடன் கலெக்டர் அங்கிருக்கும் முத்ணைக் கர்த்தாவை அதற்கு ஸமாதாநம் சொல்லும்படி கேட்டிருக்கிறாரென்றும் இப்பொழுது நாம் கேள்விப்படுகிறோம். இது மிகவும் ஶோச்யமாக இருக்கின்றது. ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸந்நிதி விஷயத்தில் இவ்வளவு பராங்முகராக இருப்பது அவருடைய யோக்யதைக்குக் கொஞ்சமேனும் அழகன்று.

தவிரவும், இந்த ஸந்நிதியின் ஜீர்ணோத்தாரண விஷயமாகக் கவர்ன்மெண்டார் இவர்களைச் செய்யும் நிர்பந்தமும் அவ்வள

37.

வாக ஸபலமானதாகத் தெரியவில்லை. 1901-ம் வருஷம் முதல், இது ஸம்பத்தமாக ரிவின்யு போர்டாரும் டிவிஷனல் ஆபீஸர்களும் மிகுந்த பரிஶ்ரமம் எடுத்துக்கொண் டிருப்பதாக அறிகிறோம். அநேக கலெக்டர்கள் அநேக காலங்களில் ஸந்நிதியை நேரில் பார்வையிட்டு அதைப் பற்றிய ரிபோர்ட்டுகளைப் போர்டாருக்கு அனுப்பி யிருப்பதாகவும், போலிஸ் உத்யோகஸ்தர்களிற் சிலர் இந்த ஸந்நிதியின் ஸாபாயமான ஸ்திதியைப் பார்த்து அதைக் கால வ்யதிக்ரமமின்றிக்கே உத்தாரணம் செய்யவேண்டுமென்று பலமான லேகங்கள் எழுதியிருப்பதாகவும் ஜநஶ்ருதி காதில் விழுகிறது. ஒன்றுக்காவது ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்தவர்கள் இணங்கக் காணோம். சென்ற வருஷத்தில் நடந்த உத்ஸவ காலத்தில் ஸேவார்த்திகளாக வந்திருந்தவர்களில் பலர் ஒன்று சேர்ந்து ஒரு ஸபை கூடி, இந்த ஸந்நிதி ஸம்பந்தப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்விப்பதற்கு உரிய ப்ரயத்நங்களைச் செய்யும்பொருட்டு ஒரு கமிட்டியாரை நியமித்ததாகவும், அந்தக் கமிட்டியார், ஸந்நிதியின் உத்தாரணத்திற்கும் தீர்த்த ஸௌக்யத்தை உண்டுபண்ணுவதற்குமாக ஸந்நிதி ஏஜன்டை ரூ. 500 தாலூகாக் கோஶத்தில் ந்யாஸமாக வைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறதாகவும் ஸமீபகாலத்திய ஸமாசாரம். இதன் நிஷ்பத்தி காலக்ரமேண தெரியவேணும். அங்குள்ள ஸேவார்த்திகளின் ஆர்த்தியைப் பரிஹரிக்கும்பொருட்டாவது ஸ்ரீ அழகிய சிங்கர் அந்த ஸந்நிதியை ஜீர்ணோத்தாரணம்செய்து அந்த ப்ரதேஶத்தை வாஸத்திற்கு ஸுகமாகச் சீர் திருத்தவேணுமென்று மறுபடியும் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:.

# வேதாந்தார்த்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

## ஶாஸ்த்ரயோநித்வாதிகரணம். ௩.

முன் இரண்டு அதிகரணங்களில், ஸித்த விஷயத்தில் வ்யுத்பத்தி கூடுமாகையாலும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமிருப்பதாலும், ப்ரஹ்மத்தை அறிய வேதாந்த விசாரம் செய்யவேண்டுமென்னப்பட்டது. 'ப்ரஹ்மத்தை யறிய வேறு மார்க்க மில்லையோ? அநுமானத்தினு லறியக்கூடாதோ?' என்கிற ஸம்ஶயத்தை அடுத்த அதிகரணத்தில் நிவர்த்திக்கிறார்.

ஶாஸ்த்ரயோநித்வாத் (௧. ௧. ௩.)

ஶாஸ்த்ரம் ஒன்றையே (அறிவதற்குக்) காரணமாய்க் கொண்டிருப்பதால்.

வேதாந்திகள் ஒத்துக்கொண்ட ப்ரமாணங்கள் - ப்ரத்யக்ஷம், அநுமாநம், ஶப்தம் (அல்லது ஆகமம்) ஆகிய மூன்றே. இந்த ஆகமத்தையே ஶாஸ்த்ரம் என்றும் வேதமென்றும் சொல்வது உண்டு. 'இது செய்யவேணும், இது செய்யக்கூடாது' என்று ப்ராயேண விதிப்பதால் வேதங்களுக்கு ஶாஸ்த்ரம் எனப் பெயர் வந்தது. "அப்ராப்தே து ஶாஸ்த்ரமர்த்தவத்" [அதாவது - 'வேறு ப்ரமாணத்தால் கிடைக்காததை விதிப்பதாலேயே ஶாஸ்த்ரம் ப்ரயோஜநமுள்ளது'] என்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். ஜ்யோதிஷ்டோமாதிகளை வேதம் விதிக்காத வரையில் ப்ரத்யக்ஷ அநுமாநங்களால் அவைகள் பலங்கொடுக்கும் க்ரியைகளென்று அறிவது கூடாது. அப்படியே ஶாஸ்த்ரம் ப்ரஹ்மவிஷ

யத்தில் ப்ரமாணமாக வேண்டுமானால், அதற்கு வேறு ப்ரமாணம் ஸாதகமாகக் கூடாது.

இங்கே நையாயிகர்கள் பூர்வபக்ஷம் செய்கிறார்கள். ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மத்தை அறிவிக்கக் கூடியதன்றாகிலும், அநுமானத்தினால்* ப்ரஹ்மம் என்னும் ஈஶ்வரனை அறிவது கூடும். "ஜகத் ஸகர்த்ருகம், கார்யத்வாத்" [இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தவர் ஒருவர் இருக்கவேணும்; அது கார்யமானதையால்] என்றும், "ஜகத் ஸர்வவித்கர்த்ருகம், கார்யத்வாத்" [இந்த ஜகத்துக்கு எல்லாமறிந்த ஒரு ஸ்ரஷ்டா இருக்கவேணும்; அது கார்யமானதையால்] என்றும், இது போன்ற மற்றை அநுமானங்களாலும் இந்த ப்ரபஞ்சமெல்லாம் ஸர்வஜ்ஞத்வமும் ஸர்வஶக்தியுமுள்ள ஒரு சேதநவிஶேஷத்தால் உண்டாயிருக்க வேணும் என்று நாம் அறிகிறோம். அப்படிப்பட்ட சேதந விஶேஷம் நம்மைப்போலிருந்தால் இவ்வளவு விசித்ரமான ஜகத்தைப் படைப்பது கூடாது; ஆகையால், ஸர்வ விலக்ஷணமாய் ஸர்வஜ்ஞராய் ஸர்வஶக்தராய் ஒரு ஈஶ்வரன் அநுமானத்தினாலே ஏற்படுகிறார். அந்த ஈஶ்வரனாகிய ப்ரஹ்மத்தை அறிய வேதமே ப்ரமாணமென்று சொல்வது கூடாது. 'பூமி, மலைகள் முதலானவைகள் ஒருவரால் செய்யப்பட்டனவே; அவயவங்களுடனிருப்பதால்; இதற்கு கடம் த்ருஷ்டாந்தம்' என்பது முதலான அநுமானங்களால் ஜகத்தைக் கார்யமாகவே சொல்லவேணும். கார்யமென்று ஏற்பட்டால் அந்தக் கார்யத்தை நிர்வஹிக்கக்கூடிய ஶக்தியுள்ள ஒரு கர்த்தாவே அநுமிக்கப்படவேண்டும்.

---

* அநுமானமாவது - 'இந்த மலை, நெருப்புள்ளது; புகையுடனிருப்பதனால்' என்பது போன்ற வாக்யம். இதில், மலையில் நெருப்பின் இருத்தலை அறிய, புகை அடையாளமாகிறது. அதாவது - புகை என்னும் குறியால், மலையில் நெருப்பை ஊஹிக்கிறோம். 'மலை' - பக்ஷம், 'புகை' - ஹேது (லிங்கம்) என்றும் சொல்லப்படும், நெருப்பு ஸாத்யம் என்னப்படுகிறது. 'புகையிருக்குமிடமெல்லாம் நெருப்புண்டு' என்னும் நியமம் வ்யாப்தி என்னப்படும். பக்ஷத்தில் ஹேது இருப்பதைக் கொண்டு ஸாத்யமுண்டென்பது அநுமாநம்.



மேலும், ஸர்வ சேதநர்களாலும் செய்யப்படும் தர்மாதர்மரூபமான செயல்களுக்குத் தக்கபடி பலங்களைக் கொடுக்கும் ஸாமர்த்யமுள்ள ஸர்வஶக்தரான சேதநர் ஒருவர் வேண்டும். அவர்தான் ஈஶ்வரன் என்று அநுமானத்தினால் ஸாதிக்கிறோம். மேலும், ஶரீரமில்லாவிடினும் ஈஶ்வரன் ஸர்வத்தையும் நியமிக்கக்கூடும். அவருக்கு 'மநஸ்' இருப்பதாய் ஒத்துக்கொள்ளுகிறோம். ஸர்வ வ்யாபியானவருக்கு ஶரீரமில்லாவிட்டாலும் நித்யமான மநஸ் இருப்பதால் அவர் ஸர்வ வஸ்துக்களின் ஸ்வபாவத்தையும் ஶக்தியையுமறிந்து அவைகளை நியமிக்க வல்லவராகிறார். இதனால், ஒருகடத்துக்கு (பானைக்கு) உபாதாந காரணம் மண்ணும் நிமித்தகாரணம் குயவனுமாயிருப்பது போல, இந்த ஜகத்துக்கு உபாதாநகாரணமாயிராமல் நிமித்தகாரணமாக மாத்ரம் அநுமானத்தினால் ஈஶ்வரன் அறியக் கூடியவரானதையால் அப்படி ஸித்தமான் ஈஶ்வரனாகிய ப்ரஹ்மத்தை ஸாதிக்க "யதோ வா இமானி" முதலான வேதாந்த வாக்யங்கள் வேண்டுவதில்லை. இதனால் வேதாந்தவிசாரம் செய்யத்தக்கதில்லை என்றதாயிற்று.

இந்தப் பூர்வபக்ஷத்தை ஸூத்ரம் நிராகரிக்கிறது. ப்ரஹ்மம் அநுமானத்தினால் அறியக்கூடியதில்லை. அது ஶாஸ்த்ரமென்னும் வேதத்தினாலேயே அறியக்கூடியது. 'ஜகத் கார்யம்' என்பதற்குச்சொன்ன அநுமானங்கள் ஜகத்துக்கு ஒரே கர்த்தாவென்றும் அவர் ஜீவாத்மாக்களைக்காட்டிலும் விலக்ஷணர் என்றும் ஸாதிக்கமாட்டா. எல்லா மலைகளையும் ஸமுத்ரங்களையும் வ்ருக்ஷங்களையும் ஒருவரே ஒரே காலத்தில் ஸ்ருஷ்டித்தாரென்று நாம் அநுமானத்தினால் நிர்ணயிக்கமுடியாது. ஒரே கட்டடத்தைப் பல பேர்கள் பல காலங்களில் கட்டிமுடிப்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால், 'கார்ய மானதையால்' என்கிற ஹேது, 'புத்தியுள்ள ஒரே கர்த்தாவையுடையது' என்று ஸாதிக்கும் விஷயத்தில் 'அநைகாந்தம்' என்கிற தோஷமுள்ளது. [அதாவது - கார்யத்வமென்னும் ஹேது ஒருவரால் செய்யப்படும் குடம் முதலானவைகளிலும் பலரால் செய்யப்படும் ரதம் கோபுரம் முதலானவைகளிலுமிருப்பதால்,

ஸபக்ஷத்துக்கும் விபக்ஷத்துக்கும் பொதுவான இந்த ஹேதுவால் ஜகத் ஒருவரால் உண்டாக்கப்பட்டதென்று நிஶ்சயிக்கமுடியாது.] மேலும், விசித்ர ஶக்தியுள்ள மநுஷ்யர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். விஶ்வாமித்ராதிகள் வேறு லோகங்களையும் ஸ்ருஷ்டித்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன. ஆகையால், அப்படிப்பட்ட ஶக்தியுள்ள ஜீவன் ஒருவனே ஜகத்தை ஸ்ருஷ்டித்திருக்கக்கூடுமாகையால், அநுமாநத்தினால் ஜீவ விலக்ஷணமான ஈஶ்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டித்ததாக ஏற்படாது.

மேலும், ஈஶ்வரன் அநுமாநத்தினால் ஏற்பட்டாலும், அவருக்கு ஶரீரம் இருக்கவேண்டுமென்றாவது இல்லையென்றாவது அநுமாநத்தினால் நிர்ணயிக்கமுடியாது. ஶரீர மில்லாவிட்டால் அவர் ஸ்ருஷ்டிக்க முடியாது. ஶரீரமில்லாதவர்கள் ஒரு கார்யத்தையும் செய்வதை நாம் பார்த்ததில்லை. ஶரீரமிருக்கிறதென்றாலும் அது நித்யமான ஶரீரமாகில் அவயவங்களோடு கூடி நித்யமாயிருப்பதுபோலக் கார்யமான ஜகத்தும் ஈஶ்வரனில்லாமலே நித்யமாயிருக்கக் கூடுமானதால் ஈஶ்வரன் ஸித்திக்கமாட்டார். அநித்யமாகில், அதன் உத்பத்திக்கு அஶரீரியான ஈஶ்வரன் காரணமாகமாட்டார்.

இந்தக் காரணங்களால் அநுமாநத்தினால் ஜீவ விலக்ஷணமாய் ஸர்வஶக்தரான ஒரு ஈஶ்வரன் ஸித்திக்கிறதில்லை. ‘ப்ரத்யக்ஷத்தாலும் ஈஶ்வரனை அறிவது கூடாதாகையால், ஶாஸ்த்ரத்தாலேயே ப்ரஹ்மத்தை அறியவேண்டும். ஆகையால், “யதோ வா இமாநி” முதலான வாக்யம் ப்ரஹ்மத்தை அறிவிக்கிறது என்பது ஸித்தம். அவயவங்களுடன் கூடினதல்லாத ஆகாஶம் முதலான த்ரவ்யங்களும் ப்ரஹ்மத்தினிடம் உண்டான வஸ்துக்களென்பது மேல் (க. ச. உரு, உ - ரு - 1) ஸூத்ரங்களில் உபபாதிக்கப்படும்.

---



## ஸமந்வயாதிகரணம். ச.

ப்ரஹ்மம் ஶாஸ்த்ரத்தினாலேயே அறியப்படவேண்டியது என்று சொல்லப்பட்டது. ஆனால், இந்த விஷயத்தில் மீமாம்ஸகர்கள் மறுபடி ஒரு ஆக்ஷேபம் செய்கிறார்கள். அதாவது - வேதவாக்யங்களெல்லாம் நாம் விரும்பும் பலத்தை உத்தேசித்து நம்மை ஏவுதலாலும், நமக்கு அநிஷ்டமான பலத்தைக் கொடுக்கும் கார்யங்களிலிருந்து நம்மை விலக்குவதாலும் மாத்ரம் ப்ரயோஜநமுள்ளவைகள். ஆகையால், ஏவுதல் விலக்குதலான இரண்டிலொன்றல்லாத ஸித்தமான ப்ரஹ்ம வஸ்துவைப் போதிக்கும் வேதமாகிய ஶாஸ்த்ரம் நமக்கு ஒரு ப்ரயோஜநத்தையும் கொடுக்கக் கூடியதன்றாகையால் அந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கத் தகுந்ததில்லை என்பது தான். இதை அடுத்த ஸூத்ரம் பரிஹரிக்கிறது.

தத்து ஸமந்வயாத். க. க. ச.

(ப்ரஹ்மம், புருஷார்த்தமாக) நன்றாய் அந்வயிப்பதால், அந்த ஶாஸ்த்ரயோநித்வம் ஸித்திக்கிறது.

இங்கே பூர்வபக்ஷியின் அபிப்ராயம் என்னவென்றால் :— ஒரு ப்ரயோஜநத்தை உத்தேஶிக்காமல் லோகத்திலாவது வேதத்திலாவது வாக்யங்கள் உபயோகிக்கப்படுகிறதில்லை. ‘த்ரவ்யம்வேண்டியவன் ராஜஸேவை செய்யவேணும்,’ ‘ஸ்வர்க்கம் விரும்புவோன் யாகம் செய்யவேணும்’ என்கிற வாக்யங்கள் ஒவ்வொரு பலத்தை உத்தேஶித்து ஒவ்வொருவனை ஏவுகின்றன. அப்படி ஏவுதல்பொருள்படாத ‘உனக்குப் புத்ரன் ஜநித்திருக்கிறான்’ ‘இது ஸர்ப்பம் அன்று’ என்னும் வாக்யங்களும் ஸந்தோஷம், பயநிவ்ருத்தி முதலான பலங்களை உண்டாக்குகின்றனவாகிலும், இவைகளைக் கேட்டமாத்ரத்தால் ஸந்தோஷம் முதலானவை உண்டாவதால், அவைகளின் அர்த்தமாகிய புத்ரஜநநம் முதலானவையும் வாஸ்தவமாக இருக்கவேணுமென்பது நிர்ப்பந்தமில்லை. ஆகையால், ப்ரஹ்ம விஷயமான வாக்யங்கள் வேதத்தின் விதி வாக்யங்களில் சேர்ந்தவையல்லவாகையாலும், அப்படிச் சேர்ந்தனவாகிலும் அவைகளுக்குத் தனது அர்த்தம் ஸத்யமாயிருப்பதில்

தாத்பர்யம் இருப்பது நிஶ்சயமில்லை யாகையாலும், வேதவாக்யங்களால் ஸித்தமான ப்ரஹ்மவஸ்து அறியக்கூடியதில்லை.

வேதவாக்யங்களில் விதி நிஷேத வாக்யங்களே ஸாக்ஷாத்தாய் ப்ரயோஜநமுள்ளவைகள். அவை 'யஜேத ஸ்வர்க்ககாம:' [ஸ்வர்க்கம் விரும்புவோன் யாகம் செய்யவேண்டும்] முதலான வாக்யங்கள். விதி நிஷேதங்களல்லாதவைகள் மந்த்ரங்களென்றும் அர்த்தவாதங்களென்றும் நாமதேயங்களென்றும் பிரிக்கப்படுகின்றன. அவைகளில், மந்த்ரங்கள் - யாகத்தில் உத்தேஶ்யமான தேவதையையும், உபயோகப்படும் த்ரவ்யங்களையும் இன்னும் செய்யவேண்டிய மற்றைக் கார்யங்களையும் ஸ்மரிப்பிக்கின்றன. அர்த்தவாதங்கள் - யாகத்தில் அதிகாரிகளுக்கு ருசி பிறக்கவேண்டியதற்காக, மேற்சொன்ன த்ரவ்ய தேவதாதிகளை ஸ்துதிசெய்கின்றன. அவைகளுக்கு இந்த ஸ்தோத்ரத்தில் தாத்பர்யமே ஒழியத் தனது அர்த்தத்தில் தாத்பர்யமில்லை என்பது மீமாம்ஸகர்கள் கொள்கை. நாமதேயங்கள் - யாகங்களுக்குப் பெயர்களைச் சொல்லுகின்றன. 'உத்பிதா யஜேத' 'அக்நிஹோத்ரம் ஜுஹோதி' முதலான வாக்யங்களால் 'உத்பித்' 'அக்நிஹோத்ரம்' என்று பெயருள்ள கர்மங்கள் சொல்லப்படுகின்றன. இப்படி வேதம் முழுவதிலும் விதிகளாயாவது விதிஸம்பந்த முள்ளவைகளாயாவது இருக்கும் வாக்யங்களே ப்ரமாணங்களென்றும், விதிஸம்பந்தமில்லாத உபநிஷத் வாக்யங்கள் அப்ரமாண மென்றும் மீமாம்ஸகர்கள் அபிப்ராயம். ஆனதுபற்றி, ப்ரஹ்மமும் அதன் ஸ்வரூபாதிகளும் உபநிஷத் வாக்யங்களினால் அறியப்பட்டாலும், அவை ப்ராமாணிகமென்று சொல்லமுடியாது என்பது பூர்வபக்ஷம்.

மேலும், 'மோக்ஷம் விரும்புவோன் ப்ரஹ்மத்தை அறியவேண்டும்' என்கிற விதி ஶ்ருதிகளி லிருப்பதால், அந்த விதியுடன் ஸம்பந்தப்பட்டவைகளாக ஏன் ப்ரஹ்மவிஷயமான வாக்யங்களைச் சொல்லக்கூடாது? என்றால், அந்த விதி 'த்ருஷ்டிவிதி' யாயிருக்கலாம். உத்கீதத்தையும், மநஸ்ஸையும், ப்ராணனையும் ப்ரஹ்மமாய் எண்ணும்படி சொல்லும் விதிகள் த்ருஷ்டிவிதிகள்.



இந்த உபாஸநங்கள் ப்ரஹ்மமல்லாதவற்றை ப்ரஹ்மமாய் எண்ணச் சொல்வது போல, ப்ரஹ்மவிஷயமான விதிகளும் பொய்யான ப்ரஹ்மத்தை உண்மையாய் இருப்பதுபோலச் சொல்வது கூடும். இதனால், ப்ரஹ்மம் தத்யம் என்றும், வேதாந்தத்தினால் ப்ரஹ்மம் தத்யமாய் அறியப்படும் என்றும் சொல்வது கூடாது என்பதும் பூர்வபக்ஷியின் அபிப்ராயம்.

இதற்கு ஸமாதாநம் ஸூத்ரம். உபநிஷத்துக்களல்லாத கர்மகாண்டத்தில் அர்த்தவாதங்களுக்குத் தனது அர்த்தத்தில் ப்ராமாண்யமில்லை என்பது வாஸ்தவமாயிருந்தாலும், உபநிஷத்துக்களில் ப்ரஹ்ம ஸ்வரூப பரமானவும் அதன் குண பரமானவுமுள்ள வாக்யங்களெல்லாம் அதன் அர்த்தத்தில் ப்ரமாணங்களே. ப்ரஹ்மம் "அநவதிகாதிஶயாநந்தஸ்வரூபம்" அதாவது - அளவற்ற ஆநந்த ஸ்வபாவமுள்ளது. இது "ஆநந்தோ ப்ரஹ்ம" "யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்" "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" முதலான ஶ்ருதி வாக்யங்களால் தெரிகிறது. இப்படிப்பட்ட ஆநந்தம் ப்ரஹ்மப்ராப்தியில் கிடைப்பதால் அதுவே பரமபுருஷார்த்தம். இந்தப் புருஷார்த்தத்தைப் போதிக்கும் வாக்யங்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான கார்யங்களைப் போதிக்காததால் ப்ரமாணமில்லை என்று சொல்வது ஸரியன்று. பரமபுருஷார்த்தமாகிய ப்ரஹ்மத்தை அறிவிக்கும் வேதாந்தவாக்யங்கள் நன்றாய்ப் புருஷார்த்தாந்வயம் உள்ளவைகளே. ஆகையால், "யதோ வா இமாநி" (தை. ப்ருகு. க.) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (சா. சு. உ, 3) முதலான வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் விஷயத்தில் ப்ரமாணமானவைகளே.

ப்ரஹ்மவிஷயமான வாக்யங்களை விதிஶேஷமாயும் சொல்லலாம். அதாவது - "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்," "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" முதலான வாக்யங்கள் ப்ரஹ்மத்தை அறியவேண்டும் என்று

விதிக்கின்றன. அப்படிப்பட்ட விதிகளுக்கு ஶேஷமாய், ப்ரஹ்ம மென்பது என்னவென்பதை "[illegible]" முதலான வாக்யங்கள் நிரூபிக்கின்றன. ஆகையால், இந்த வாக்யங்கள் விதி ஸாபேக்ஷமென்கிற பக்ஷத்திலும் இவைகளுக்கு விதிஸம்பந்த மிருப்பதால், இவைகள் ப்ரமாணங்களே.

மேலும், விதிஶேஷமாயும் ப்ரீதி ஜநகமாயுமுள்ள வாக்யங் களெல்லாம் பொய்யான அர்த்தங்களைச் சொல்லலா மென்பது ஸரியன்று. விதிஶேஷமான வாக்யங்களின் ப்ரதீதமான அர்த் தத்துக்கு விரோதமில்லாவிட்டால் அவைகளுக்கு ப்ராமாண்யம் ஒத்துக்கொள்ள வேண்டும். அர்த்தவாதங்களுக்குத் தன் அர்த்தங் களில் ப்ராமாண்யமில்லை என்பதை வேதாந்திகள் ஒத்துக்கொ ள்ளவில்லை. ப்ரத்யக்ஷாதி பாதமில்லாத அர்த்தங்கள் ப்ரமாணங் கள்தான். அப்படியே 'உன் பிதா ஸௌக்யமாயிருக்கிறார்' இத் யாதியான வாக்யங்கள் பொய்யாயிருந்தாலும் ப்ரீதியை உண்டு பண்ணுமென்பதும் ஸரியன்று; உண்மையென் றறிந்தாலொழிய இந்த வாக்யங்களால் ப்ரீதி உண்டாகாது.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்ப்ரதாயத்திலே ப்ரஹ்ம விஷயமான ப்ரமாண வாக்யங்கள் ஸ்வதஃ ப்ரமாணங்கள் என்பதே முக்ய பக்ஷம். விதிஶேஷமாயும் அவைகள் ப்ரமாணமென்பது மத்யம பக்ஷம். சிலர் ப்ரஹ்மத்தை, 'ப்ரபஞ்சம் பொய் என்று அறி' என்கிற நிஷ்ப்ரபஞ்சீகரண விதிக்கு ஶேஷமென்றும், சிலர் த்யாந விதிக்கு ஶேஷமென்றும், சிலர் ப்ரஹ்மம் ஒன்றாகையால் மற்றது பொய் யென்றறிய மஹாவாக்யமே போதுமாகையால் த்யாந விதி அவஶ்யமில்லை யென்றும் வேதாந்த வாக்யம் ஸ்வதந்த்ர மாய் ப்ரமாணமென்றும் பல விதமாய்ச் சொல்லுகிறார்கள். இவர் கள் அபிப்ராயங்களும் அவைகளின் கண்டநங்களும் ஸ்ரீ பாஷ்யத் தில் விஸ்தாரமாய் அறியப்படவேண்டும்.

இந்த முதல் நான்கு அதிகரணங்களும், வேதாந்த ஶாஸ்த் ரத்துக்கு உபோத்காத ரூபமாய், ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்



டியதென்பதை ஆக்ஷேப நிவ்ருத்தி பூர்வகமாக ஸ்தாபித்தன. "[illegible] ஸ்லோகம் இந்த நான்கு ஆக்ஷேபங்களையும் ஸங்க்ரஹிக்கின்றது. அதாவது - ஸித்த வஸ் துவை ஶப்தம் போதிக்காதென்றும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷண மில்லையென்றும், அநுமாநத்தினால் அதை அறியலாமென்றும், அதை அறிவதால் ப்ரயோஜநமில்லை யென்றும் ஆகிய இந்த ஆக்ஷேபங்கள் க்ரமமாய் நான்கு ஸூத்ரங்களிலும் நிராகரிக்கப் பட்டன. ஆகையால், வேதாந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கலாம் என் பது, இந்த '[illegible]' ஆகிய முதல் பாகத்திற்குத் தாத் பர்யம். அர்த்தாத், ப்ரஹ்மம்' ஜகத்துக்கு உபயவித காரணம் என் றும், அதற்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணமென்றும், ப்ரஹ்மம் மிகுந்த ஆநந்த ஸ்வரூபமாகையால் அதுவே பரம புருஷார்த்த மென்றும் சொல்லப்பட்டது. இனி, இந்த அத்யாயத்தின் பின்வரும் ஸூத் ரங்கள், இந்த ஜகத்காரணமான ப்ரஹ்மத்தையே எல்லா வேதாந்த வாக்யங்களும் போதிக்கின்றன வென்றும், ப்ரதாநத்தையாவது ஜீவனையாவது அப்படிப்பட்ட ஜகத்காரணமாய்ச் சொல்லவில்லை யென்றும் அறிவிக்கின்றன.

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸுகந்யோபாக்யாநம்.

"𑌨𑌗𑌰𑌸𑍍𑌥𑍋 𑌵𑌨𑌸𑍍𑌥𑍋 𑌵𑌾 𑌪𑌾𑌪𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌃 ।
𑌯𑌾𑌸𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾 𑌮𑌹𑍋𑌦𑌯𑌾𑌃 ॥

𑌦𑍁𑌃𑌶𑍀𑌲𑌃 𑌕𑌾𑌮𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌵𑌾 𑌧𑌨𑍈𑌰𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌪𑌤𑌿𑌃 ॥"

என்று அத்ரி பத்நியாகிற அநஸூயை, ஸீதா பிராட்டிக்குப் பாதிவ்ரத்ய தர்மத்தை உபதேஶம் செய்திருக்கிருள். 'ராஜபோகங்களை அநுபவித்துக்கொண்டு நகர மத்யத்தில் வஸித்தாலும் பல வித க்லேஶத்துக்கு ஹேதுவாஞ அரண்ய மத்யத்தில் வஸித்தாலும், துராசாரனுக இருந்தாலும் ஸதாசாரனுக இருந்தாலும் ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவே பரம ப்ரீதிக்குப் பாத்ரமாகும் பந்து; பர்த்தா என்கிற காரணத்திஞல் மாத்ரம் இவ்விதமாக அவனிடம் ப்ரீதி செய்யும் பதிவ்ரதோத்தமைகளுக்கு ஸகல ஶ்ரேயஸ்ஸும் உண்டாகின்றது. உத்தம குணமுடைய ஸ்த்ரீகள், பர்த்தாவினிடத்தில், அவன் தநிகனுக இருக்கிருன் என்று அதிக ப்ரீதியையாவது நிர்தநனுக இருக்கிருன் என்று குறைந்த ப்ரீதியையாவது செய்யமாட்டார்கள். எந்தத் தஶையிலும் அவர்களுக்குப் பர்த்தாவே பரமமான தைவதம்' என்று இவ்வாறு அநஸூயைசெய்த உபதேஶத்தை அநேக புராணகதைகள் நமக்கு நன்ருக வற்புறுத்துகின்றன. அவைகளுள் அந்யதமமாக இருக்கும் ஸுகந்யோபாக்யாநம் என்னும் சரித்ரத்தை இவ்விடத்தில் நாம் எழுதுகிருேம்.

விந்த்ய பர்வதத்துக்கு அடுத்த நர்மதை நதிக்கு ஸமீபத்தில், ப்ருகு மஹர்ஷியின் புத்ரராகிய ச்யவநருடைய ஆஶ்ரமம்



OFFICE OF THE REGISTRAR MADRAS 162022

ஒன்று உண்டு. ஒரு ஸமயத்தில் அந்த ச்யவநர் [மஹத்தான தபஸ்] செய்பவராய்ப் பஹுகாலம் ஸமாதியில் இருந்தார். அப்பொழுது அவ்வாறு யோகநிஷ்டையில் இருந்த அவர்மீது புற்று வளர்ந்து, கறையான்கள் வஸிக்கும்படியாகவும் ஸர்ப்பங்கள் அடையும்படியாகவும் பெரியதொரு மண்மேடாகக் கால க்ரமேண ஆகிவிட்டது. இப்படி இவர் தீர்க்க ஸமாதியில் இருந்துகொண்டு வருகையில், ஶர்யாதி என்னும் ஒரு மஹாராஜன் தனது பரிவாரங்களுடனும் ஸமஸ்த அந்த:புரத்துடனும், அந்த ஆஶ்ரமத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸரஸ்ஸின் ரமணீயதையைப் பார்த்து அவ்விடத்தில் விஹரிக்கவேணு மென்னும் எண்ணம் கொண்டவனுய் அவ்விடத்திற்கு வந்தான். அந்த மஹாராஜனுக்கு ஸுகந்யை என்னும் பெயருடைய ஓரே ஸ்த்ரீ ப்ரஜை உண்டு. அவள் தனது தோழிமாருடன் அந்த வநத்தின் அழகைப் பார்த்து ஆநந்த மடைந்தவளாய் ஒரு ஸ்தலத்திலிருந்து மற்ருெரு ஸ்தலத்திற்குப் போகிறபோது, யத்ருச்சையாக ச்யவநர் ஸமாதி யிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள். ஸர்வாபரண பூஷிதையாகவும், இயற்கையாகவே அதிமதுரமான ஆக்ருதியை உடையவளாகவும் இருந்த அந்த ஸுகந்யை ஸமீபத்தில் வரவே, ஏதோ காரணத்தால் ஸமாதியிலிருந்து விழித்துக்கொண்டவராய், ச்யவநர், புற்றுக்குள் இருந்தபடியே, ஸகிகளை விட்டு அப்பொழுது கொஞ்சம் விலகியிருந்த ஸுகந்யையைப் பார்த்து, 'ஹே ஸுப்ரு! நீ யார்? விஜநமான இந்த வநத்தில் நீ வருவதற்குக் காரண மென்ன? உன்னுடைய அழகையும் தேஜஸ்ஸையும் பார்க்கும்பொழுது உன்னுேடு கூடவே எப்பொழுதும் வஸிக்கவேண்டுமென்று ஒரு ஆஶை என் மநஸ்ஸில் ஜநிக்கிறது' என்று பல பேச்சுக்களைப் பேசியும், இவர் பசியிஞல் க்ஷாமமான கண்டத்தை உடைத்தாயிருந்தபடியால், அந்தப் பேச்சுக்களில் ஒரு அக்ஷரமும் ஸுகந்யையின் காதுக்கு எட்டவேயில்லை. அவர்வார்த்தை யொன்றையும் அறியாமலிருந்த அந்த ஸுகந்யை யத்ருச்சையாக அந்தப் புற்றண்டைவந்து அதற்குள் ப்ரகாஶித்துக்கொண்டிருந்த ச்யவநருடைய கண்களைப் பார்த்து, 'அஹோ! இந்தப் புற்றுக்குள் ஏதோ ஒரு ப்ரகாஶமுள்ள ஜ்யோதிஸ் தெரிகின்றதே! இது எதுவாக இருக்கக்கூடும்?' என்கிற பால்ய ப்ரயுக்தமான சாபல்யத்தால் அருகிலிருந்த ஒரு முள்ளை எடுத்து அந்த ஜ்யோதிஸ்ஸைக்

குத்தினாள். அதனால் உபத்ரவம் அடைந்தவராய் ச்யவநர் கோபங்கொண்டு மஹாராஜனை ஶபிக்க, மஹாராஜனுடைய ஸமஸ்த பரிவாரத்திற்கும் தேஹத்தில் ஒரு நிரோதம் உண்டாகி எல்லாரையும் அதிமாத்ரம் உபத்ரவித்தது. இதைப் பார்த்து மஹாராஜன், 'நம்மவருள் யாரோ பார்க்கவ மஹர்ஷிக்கு அதிக்ரமத்தைச் செய்துவிட்டார்' என்று ஊஹித்து, ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கேட்டும் எல்லாரும் 'நாம் ஒன்றையும் அறியோம்' என்று சொல்லிவிடவே, கடைசியாக ஸுகந்யை, ஜ்யோதிஸ்ஸை யுடைய ஒரு ஸத்வத்தைத் தான் ஒரு புற்றுக்குள் கண்டதாகவும், தான் அதை இன்னது என்று அறியாததால் ஒரு முள்ளினால் குத்தினதாகவும் சொன்னாள். அதுகேட்ட ஶர்யாதி, உடனே அந்தப் புற்று இருக்கும் இடம் போய் அதற்குள் தபஸ் செய்து கொண்டிருந்த ச்யவநரைக் கண்டு, 'ஹே ஸ்வாமிந்! எனது புத்ரியால் அஜ்ஞாநத்தால் செய்யப்பட்ட இந்த அதிக்ரமத்தை க்ஷமிக்கவேணும்' என்று ப்ரார்த்திக்க, உடனே ச்யவநர், 'மஹாராஜனே! நல்லது; அந்த ஸுகந்யையை எனக்குப் பத்நியாக விவாஹம் செய்துகொடுத்தால் அவளாற் செய்யப்பட்ட அபராதம் க்ஷாந்தமாகும்' என்று சொன்னார். 'அதி வ்ருத்தராகவும் பஹு காலமாகத் தபஸ்ஸில் இருந்தபடியால் எலும்புகளெல்லாம் தெரியக் கூடுமளவு க்ருஶராகவும் இருக்கும் இந்தத் தபஸ்விக்கு நாம் எப்படி நமது அருமையான ஸுகந்யையைக் கொடுக்க ஸஹிப்போம்?' என்று கொஞ்சம் கலங்கி நின்ற தனது பிதாவைப் பார்த்து, ஸுகந்யை, 'ஹே தாத! இந்தக் கலக்கம் வேண்டாம். என்னுடைய அபராதத்தால் அநேக கோடி கணக்கான ப்ரஜைகள் வருந்துவது என்னை அதிமாத்ரம் பீடிக்கின்றது. அதற்கு நிஷ்க்ருதியாக நான் என்னுடைய போகங்கள் எல்லாவற்றையும் இழக்க ஸித்தமாக இருக்கிறேன். கொஞ்சமேனும் ஆலோசியாமல் இந்த மஹர்ஷியின் மநோரதத்தை நிறைவேற்றிவிடவேண்டும்' என்று மந:பூர்வமாக ப்ரார்த்தித்தாள். மஹாராஜனும் அதை யுக்தமென்று க்ரஹித்து, புற்றை வெட்டி ச்யவநரை அதிலிருந்து வெளிப்படுத்தி, அவருக்கு மங்கள ஸ்நாநாதிகளைச் செய்வித்து யதோக்தமாகத் தனது கந்யையை அவருக்கு விவாஹம் செய்து கொடுத்தான். ச்யவநர், மிக்க ஸந்தோஷத்தை யடைந்தவராய் ப்ரஸந்நராகவே, அவர் இட்ட ஶாபம் நிவ்ருத்தியாகிவிட்டது.



அரசன், ஸுகந்யையைத் தனது பர்த்ரு ஸமீபத்தில் விட்டுவிட்டுப் பரிவாரத்துடன் தனது ஸ்தாநம்போய்ச் சேர்ந்தான். தநம் ரூபம் யௌவநம் ஒன்றுமில்லாத இந்தப் பதியை அடைந்த ஸுகந்யை அந்தக் காரணத்தால் யாதொரு ஔத்கண்ட்யத்தையும் அடையாமல், பக்தியுடனும் நியமத்துடனும் ச்யவநருக்கு ஶுஶ்ரூஷை செய்துகொண்டே பஹு காலம் அந்த வநத்திலேயே மநஸ்ஸில் யாதொரு வ்யதையு மின்றிக்கே வர்த்தித்து வந்தாள். இவளது பதிவ்ரதா தர்மமும், மற்றை நற்குணங்களும், ஜகத் முழுவதும் பரவி, "𑌸𑍁𑌕𑌨𑍍𑌯𑌾 𑌚𑍍𑌯𑌵𑌨𑌂 𑌯𑌯𑍌" என்று எல்லாரும் அவளை ஒரு நிதர்ஶநமாக எடுக்கும்படி அவ்வளவு ப்ரஸித்தங்களாயின.

"𑌕𑌸𑍍𑌯𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑍁𑌪𑌨𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌕𑌾𑌨𑍍𑌤
𑌤𑍋 𑌵𑌾 𑌨𑍀𑌚𑍈𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌚 𑌦𑌶𑌾 𑌚𑌕𑍍𑌰𑌨𑍇𑌮𑌿𑌕𑍍𑌰𑌮𑍇𑌣"

என்றன்றோ மநுஷ்யர்களுடைய தஶையின் பரிவ்ருத்தி சொல்லப்பட்டிருக்கிறது? இந்த லோகத்தில் ஏகாந்தமான ஸுகமாவது துக்கமாவது ஒருவனுக்கும் கிடையாது. சக்ரம் சுழல்வதுபோல மநுஷ்யர்களுடைய தஶையும் எப்பொழுதும் சுழன்றுகொண்டு வருகிறதே தவிர, 'ஒருவன் ஸுகத்தையே எப்பொழுதும் அநுபவிக்கிறான், மற்றொருவன் எப்பொழுதும் துக்கத்தையே அநுபவிக்கிறான்' என்பது இல்லை. இந்த ஸுகந்யைக்கும் ஶ்ரேயஸ் அடையும் காலம் ஒரு ஸமயத்தில் நேர்ந்தது. ஒருகால், தேவலோகத்திலிருந்து அஶ்விகள் என்று சொல்லப்படும் இரண்டு தேவதைகள் இந்த வநத்தின் மார்க்கமாகச் செல்லும்படி ஸம்பவித்தது. அவர்கள் இந்த ஆஶ்ரமத்தின் ஸமீபமாகப் போகும் பொழுது, தேவராஜனுடைய பெண்போல அதிஸுந்தரமான அங்கத்தை யுடைய ஸுகந்யையைப் பார்த்துக் காம வஶ்யர்களாய் அவளை அடையக் கருதி, 'ஹே ஸுந்தரி! நீ யாருடைய பார்யை? இங்கே என்ன செய்கிறாய்?' என்று கேட்க, அவள், தான் பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும் நிர்பயமாகவும் மிக்க த்ருப்தியுடனும் சொன்னாள். அஶ்விகள், அது கேட்டு, 'ஐயோ! உன்னுடைய பிதாவின் க்ரௌர்யத்தைப் பற்றி நாம் என்ன சொல்வோம்? அநர்க்கமான போகத்திற்குத் தகுந்த உன்னுடைய இந்த ஶரீரத்தை, என்ன தைர்யத்துடன் ஸர்வ ப்ரகா

ரத்திலும் அநர்ஹனாகவும் அஶக்தனாகவும் இருக்கும் இந்தத் தபஸ்விக்குக் கொடுக்கத் துணிந்தார்? இப்பொழுதும் தப்பில்லை. காம போகங்களுக்கெல்லாம் பஹிஷ்க்ருதனான இவனை த்யஜித்துவிட்டு எங்களுள் ஒருவரைப் பதியாக வரித்துக்கொள். நாங்கள் தேவ வைத்யர்கள். உனது யௌவநத்தை வீணாக்கவேண்டாம்' என்று ஸுகந்யையைப் பார்த்துச் சொல்ல, ஸுகந்யை மிக்க வருத்தத்துடன், 'தேவதைகளாயுள்ள உங்களுக்கு நீங்கள்பேசும் பேச்சுக் கொஞ்சமேனும் தகுந்தது அன்று. பதிவ்ரதா தர்மத்தைக் கைக்கொண்டிருக்கும் என்னை வேறுவிதமாக ஶங்கிப்பதையும் நீங்கள் அஸப்யமான பேச்சுப் பேசுவதையும் பார்க்க எனக்கு லஜ்ஜையாக இருக்கிறது' என்று திக்கரித்தாள். காமம் உந்மஸ்தகமாக ஏறி யிருந்தபடியால் இந்தத் திக்காரத்தைக் கவனியாமலே, ஏதாவது ஒரு உபாயத்தால் இவளை ஸ்வாதீநம் செய்துகொள்ள வேணுமென்று எண்ணிய அந்தத் தேவதைகள் ஸுகந்யையைப் பலவிதமாகப் பயமுறுத்தி, கடைசியில் பின்வருமாறு ஒரு உபாயத்தைச் சொன்னார்கள். 'ஸுகந்யே! உன்னுடைய பதியோ இப்பொழுது ஜரையால் விக்ருதனாக இருக்கிறான். அவனை நல்ல யுவாவாகவும் எங்களைப் போன்ற ரூபமுள்ளவனாகவும் நாங்கள் செய்துவிடுகிறோம். பிறகு எங்கள் மூன்று பெயரில் நீ யாராவது ஒருவரைப் பதியாக வரித்துக்கொள்' என்பதே. தன்னுடைய பாதிவ்ரத்யத்தில் த்ருடமான நம்பிக்கையுள்ள ஸுகந்யை, அதுகேட்டு, 'இப்படிச் செய்வதால் நமக்கு யாதொரு ஹாநியுமில்லை; ஒருபொழுதும் நம்முடைய மநஸ் நம்மை மோசம் செய்யாது. ஆனாலும், பர்த்தாவின் அநுமதியைக் கேட்டு இதற்கு மறுமொழி கூறுவோம்' என்று எண்ணிப் பதியினிடம்போய் அந்தத் தேவதைகளின் நிர்ப்பந்தத்தையும், தனது திக்காரத்தையும், அவர்கள் கடைசியாகச்சொன்ன ஸமயத்தையும் எல்லாவற்றையும் சொன்னாள். யௌவநத்தைப் பெறுவதில் மிக்க உத்ஸுகராயிருந்த அந்த வ்ருத்தர், 'அப்படியே செய்' என்று சொல்லவே, உடனே அஶ்விதேவதைகள் அந்த வ்ருத்தரை அங்குள்ள தொரு ஸரஸ்ஸில் ப்ரவேஶிக்கச் செய்து தாங்களும் அதில் ப்ரவேஶித்தார்கள். ஸரஸ்ஸிலிருந்து உத்தீர்ணர்களாகத் திரும்பி வருகையில், மூன்றுபெயரும் மநஸ்ஸுக்கு ப்ரீதியைக் கொடுக்கக்கூடிய திவ்யமான ஒரே ரூபத்தை உடையவர்களாக



வந்து ஸுகந்யையின் எதிரில் நின்று, 'எங்களுள் யாரையாவது ஒருவனைப் பதியாக வரித்துக்கொள்' என்று சொல்ல, ஸுகந்யை, அதுகண்டு கொஞ்சம் மயங்கி, பிறகு தனது அந்தஃகரண ப்ரவ்ருத்தியை விசாரித்து அவர்களுள் ஒருவனை வரித்தாள். "ஸதாம் ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணமந்தஃகரணப்ரவ்ருத்தயஃ" என்கிறபடி அவளுடைய அந்தஃகரணம் அவளது பதியையே வரிக்கும்படியாகச் செய்தது. ஸுகந்யையின் மனவுறுதியைக் கண்ட அஶ்வி தேவதைகள் மிக்க வியப்படைந்தவர்களாய் அவளுடைய பாதிவ்ரத்யத்தைப் பலவாறாக ஶ்லாகித்தார்கள். ச்யவநரும் தமக்குத் திவ்ய யௌவநம் உண்டானதற்கு இந்தத் தேவதைகளே காரணம் என்று உணர்ந்து, அதற்கு ப்ரத்யுபகாரமாக 'உங்களுக்கு யாகங்களில் ஸோமபாநத்தில் பாகம் இருக்கட்டும்' என்று அநுக்ரஹித்தார். ஸுகந்யையை அநுக்ரஹிக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் வந்த அந்தத் தேவதைகளும் ச்யவநருடைய அநுக்ரஹத்தால் ஸந்துஷ்டர்களாய்த் தங்கள் ஸ்தலத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஶர்யாதி மஹாராஜனும் தனது புத்ரிக்கு நேர்ந்த பாக்யத்தைக் கேட்டு அதி நிர்வ்ருதனாய், தனது பார்யையுடன் ஜாமாதாவின் ஆஶ்ரமத்துக்கு வந்து தம்பதிகளை நேரில்பார்த்து ஆநந்தமடைந்து பிறகு தனது ராஜ்யம் போய்ச் சேர்ந்தான். ரிஷியும் ரிஷிபத்நியும் பஹுகாலம் அங்கிருந்தே அமாநுஷங்களான போகங்களை அநுபவித்துவிட்டுப் பிறகு தமது தபோபலத்தால் பகவத் கடாக்ஷத்தையும் பெற்று ப்ரஜைகளுக்கு ஆத்யந்திகமான ஶ்ரேயஸ் எதுவோ அதையும் அடைந்தார்கள். இதுவன்றோ பாதிவ்ரத்யம்?

**ஒரு பௌராணிகர்.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

க: ஶ்ரீ: ஶ்ரிய: ? பரமஸத்வஸமாஶ்ரய: க: ?
க: புண்டரீகநயந: ? புருஷோத்தம: க: ? ।
கஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே
விஶ்வம் விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம் ? ॥ 12.

12. கீழ் ஶ்லோகத்தில், 'வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்டவர்களெல்லாரும், நாராயணனிடத்தில் அநந்யாதீநமும் அளவற்ற உத்கர்ஷத்தை உடைத்தாயிருப்பதுமான ஈஶித்ருத்வம் இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லி, அதற்கு ஹேதுவாக 'ப்ரஹ்மா ஶிவன் இந்த்ரன் முக்தர்கள் எல்லாரும் நாராயணனுடைய விபூதியின் ஒரு லேஶமன்றோ?' என்று விவரிக்கப்பட்டது. இந்த ஶ்லோகத்தில், 'ப்ரஹ்மா முதலியவர்களை நாராயணனுடைய விபூதியில் அந்தர்பூதர்கள் என்று எப்படி சொல்லலாம்? அநேக ஶ்ருதிவாக்யங்களில் இவர்களுக்கும் பரத்வம் சொல்லப்பட்டிருக்கிறதே!' என்கிற ஒரு ஆக்ஷேபம் ஶங்கிக்கப்பட்டு, 'அந்த வாக்யங்களுக்கெல்லாம் மஹாபுருஷனாகிற நாராயணனே விஷயம்' என்பதை லக்ஷ்மீபதித்வம் முதலிய லிங்கங்கள் த்ருடீகரிக்கின்றன என்று சொல்லப்படுகின்றது.

(ஸ்துத்ய:) க: ஶ்ரிய: ஶ்ரீ: ? க: பரமஸத்வஸமாஶ்ரய: ? க: புண்டரீகநயந: ? க: புருஷோத்தம: ? (ஸ்துத்யஸ்)



கஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே (ஐகம்) விஶ்வம் விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம்? [ஹே நாராயண! தேவரீரைத் தவிர யார் ஶ்ரீக்கும் ஶ்ரீ? தேவரீரைத் தவிர யார் பரமமான ஸத்வத்திற்கு ஸரியான ப்ரவர்த்தகன்? தேவரீரைத் தவிர யார் புண்டரீகாக்ஷன்? தேவரீரைத் தவிர யார் புருஷோத்தமன்? விசித்ரமான சேதநாசேதந விபாகங்களடங்கிய இந்த ஸமஸ்த கார்ய ஸமூஹமும் தேவரீரைத் தவிர மற்றை யாருடைய ஸ்வரூப வைபவ லேஶத்தில் நிஷ்பந்நமாக இருக்கின்றது என்று சொல்லக்கூடும்?] 'ஶ்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் எவனொருவன் ஸ்வதஸ்ஸித்தமான ஐஶ்வர்யத்தை உடையவனென்றும் ஸர்வஸ்மாத் பரனென்றும் சொல்லப்படுகிறானோ, அவன் நாராயணனே; மற்றை எவனுமன்று' என்பதை, 'புருஷஸூக்தம் முதலியவைகளிலுள்ள அநந்யதாஸித்தங்களும் ஸுப்ரஸித்தங்களுமான லக்ஷ்மீபதித்வம் முதலிய லிங்கங்கள் போதிப்பிக்கின்றன. இந்த லிங்கங்களை ஸரியாக அறிபவர்கள் நாராயணனையே பரமமான தைவமாகக் கொள்வார்கள்' என்பது தாத்பர்யம்.

பரமமான ஐஶ்வர்யத்தைச் சொல்லும் ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்கள் எவை? நாராயணனைத் தவிர மற்றவர்கள் இந்த வாக்யங்களுக்கு விஷயமாகிறார்கள் என்று ஶங்கிக்க என்னஹேதுக்கள் இருக்கின்றன? கீழ்க் குறிக்கப்பட்ட அநந்யதாஸித்தங்களான லிங்கங்கள் எவை? அந்த லிங்கங்களைக் கொண்டு நாராயணனே ஸர்வஸ்மாத் பரன் என்று எப்படி நிர்ணயிக்கக்கூடும்? இத்யாதியான ஆகாங்க்ஷைகள் இவ்விடத்தில் க்ரமமாக உண்டானாலும், அவைகளின் ஸமாதாநம் பெரியதொரு ஸமுத்ரமாக இருக்கிறபடியால், இவ்விடத்தில் அதைப் பற்றி நாம் எழுதத் துணியவில்லை. ஸ்ரீ ஆளவந்தார், 'நாராயணனைத் தவிர மற்றை எவன் ஸ்ரீக்கும் ஸ்ரீ ஆவான்?' இத்யாதியான ப்ரஶ்நங்களைச் செய்வதனாலேயே, நாராயணனே அப்படிப்பட்டவன் என்பது அவருடைய நிர்ணயம் என்று மாத்ரம் நாம் அறியவேண்டும்.

கஃ ஶ்ரியஃ ஶ்ரீஃ - தேவரீரைத் தவிர மற்றை யார் ஶ்ரீக்கும் ஶ்ரீ? பிந்தி வரும் ஶ்லோகங்களில் சொல்லப்படும் ‘கஃ பரஃ’ (தேவரீரைத் தவிர்த்து மற்றை எவர்) என்பதை இந்த ப்ரஶ்நம் ஒவ்வொன்றிலும் அநுஸந்தித்துக் கொள்ள வேணும். லோகத்தில், ஶ்ரீயே எல்லாருக்கும் விஶேஷித்த ஒரு உத்கர்ஷத்தை உண்டுபண்ணுகிறாள் என்பது ப்ரஸித்தம்; அப்படிப்பட்ட ஶ்ரீக்கும் ஓர் அதிஶயத்தை இவன் கொடுக்கிறான் என்பது அர்த்தம். “திருவுக்குந் திருவாகிய செல்வா” என்பது பெரிய திருமொழி. லக்ஷ்மிக்கு நாராயணன் பதியாயிருப்பதால், “ஸதீநாம் பரமம் நாரீணாம் பூஷணம் பூஷணாத்மவி” [ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவே பரமமான பூஷணம்] என்கிற ந்யாயப்படி லக்ஷ்மிக்கு இவன் ஓர் உத்கர்ஷத்தைச் செய்கிறான் என்பது குறிப்பு. ‘ஶ்ரீஃ’ என்னும் பதத்திற்குப் பல விதமாக வ்யுத்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது:—

“ஶ்ருணாதி நிகிலாந் தோஷாந் ஶ்ருணாதி ச குணைர்ஜகத். ஶ்ரீயதே சாகிலைர் நித்யம் ஶ்ரயதே ச பரம் பதம்॥”

இவைகளில் முக்யமாக நாம் ஒன்றைக் கைக்கொள்ளலாம். ‘யா ஶ்ரீயதே ஸா ஶ்ரீஃ’ ஸகல சேதநாசேதநங்களாலும் தங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளின் நிஷ்பத்திக்காக, ஆஶ்ரயிக்கப்படுமவள் ஶ்ரீஃ; அப்படிப்பட்ட ஶ்ரீயாலும் அதே விதமாக ஆஶ்ரயிக்கத் தகுந்தவன் நாராயணன் என்று சொன்னதாயிற்று.

புருஷ ஸூக்தத்தில், “ப்ரஜாபதிஶ்சரதி கர்பே அந்தஃ” என்று சதுர்முகனை ஸூசிப்பிக்கக் கூடிய ப்ரஜாபதி ஶப்தம் ப்ரயுக்தமாக இருந்தாலும், “ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ” என்கிற லக்ஷ்மீ பதித்வ லிங்கம் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், ‘ப்ரஜாபதி’ என்னும் ஶப்தத்துக்கு, லக்ஷ்மீ



பதித்வம் அந்வயிக்கக்கூடாத சதுர்முகன் என்னும் ரூடியான அர்த்தத்தை த்யஜித்து விட்டு, ‘பதிம் விஶ்வஸ்ய’ என்னுமிடத்தில் சொல்லியிருக்கிறபடி ‘ஸமஸ்தகார்ய ஜாதத்திற்கும் பதி’ என்னும் அர்த்தத்தைக் கைக்கொள்ள வேணும் என்று ஏற்படுகிறது. ஆகையால், ‘புருஷ ஸூக்தத்திற்கு சதுர்முகன் விஷயம்’ என்னும் ஶங்கை வாரிதமாகி, லக்ஷ்மீ பதியாகிற நாராயணனே விஷயம் என்று ஸித்தம். அங்குச் சொல்லப்பட்டிருக்கும் ஸர்வஸ்மாத் பரத்வமும் அந்த நாராயணனுக்கே அந்வயிக்கும் என்பதை இந்த ப்ரஶ்நம் ஸூசிப்பிக்கிறது. இதே மாதிரி மற்றை ப்ரஶ்நங்களின் தாத்பர்யத்தை அறிந்துகொள்ளவேணும்.

கஃ பரமஸத்வஸமாஶ்ரயஃ? - எவன் பரமமான ஸத்வத்திற்கு ப்ரவர்த்தகன்? ‘பரமம்’ என்றால் ‘மோக்ஷத்திற்கு உபயுக்தமான ப்ரகர்ஷத்தை உடைய.’ ‘ஸத்வம்’ என்றால் ‘ஆத்யந்திகமான ஸுகத்திற்கு ஹேதுவாகும் ஒரு குண விஶேஷம்.’ ‘ஸமாஶ்ரயஃ’ என்றால் ‘நன்றாக ப்ரவர்த்திப்பிக்கிறவன்.’ “மோக்ஷ ப்ரதோ பகவாந் ஸக்ஷ்வஸ்ய ப்ரவர்த்தகஃ” “ஸத்வம் நாராயணாத்மகம்” இத்யாதியான ப்ரமாணங்களால் நாராயணனுக்கே ஸத்வ ப்ரவர்த்தகத்வம் ஸித்தமாகின்றது. அன்றிக்கே, ‘பரம ஸத்வம்’ என்றால் ஶுத்த ஸத்வ மயமான அப்ராக்ருத த்ரவ்யம்’ என்னும் அர்த்தத்தையும் கொள்ளலாம். பாஞ்சராத்ராதிகளில் ப்ரஸித்தமான திவ்ய மங்கள விக்ரஹ யோகம் நாராயணனுக்கே கூடுமாதலால், இந்த அர்த்தத்திலும் ஸத்வ ப்ரவர்த்தகத்வம் அவனுக்கே உபபந்நம்.

கஃ புண்டரீக நயநஃ - யார் புண்டரீகாக்ஷன்? - சாந்தோக்யத்தில், “தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ” என்று புருஷோத்தமனாகிற நாராயணனுக்கே புண்டரீகாக்ஷத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஶ்ருதிவாக்யத்தின் அர்த்தத்தை ஶ்ரீ பாஷ்யகாரர் செய்தருளியிருக்கும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் விஶதமாகக் காணலாம். “கம்பீராம்பஸ்ஸமுத்பூத

ஸும்ருஷ்டநால ரவிகரவிகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண:" என்பது ஸ்வாமியின் வாக்யம். 'அகாதமான ஜலத்தில் உண்டாகி யிருப்பதாயும், செழிப்பான நாளத்தை உடையதாயும், ஸூர்ய கிரணத்தால் தானே மலர்ந்ததாயுமுள்ள புண்டரீக தளம்போல அமலமாய் நீண்ட திருக்கண்களை உடையவன்' என்று அர்த்தம். ஜலஸ்தமாயும் நாளஸ்தமாயும் ஸ்வயம் விகஸிதமாயுமுள்ள புஷ்பத்திற்கு ஶோபை அதிகமானதால், அந்த அர்த்தங்களைக் காண்பிக்கும் மூன்று விஶேஷணம் இந்த வாக்யத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று அர்த்தங்களும் ஶ்ருதி வாக்யத்தில் இருக்கும் 'கப்யாஸம்' என்னும் பதத்தால் ஏற்படுகின்றன. - (1) கே ஜலே ஆஸ்த இதி கப்யாஸம் - ஜலத்தில் இருக்கின்ற; (2) கம் பிபதீதி கபி: நாலம், தஸ்மிந் ஆஸ்த இதி கப்யாஸம் - நாளத்திலே இருக்கும்; (3) கம் பிபதீதி கபி: ஆதித்ய:, தேந அஸ்யதே க்ஷிப்யதே விகாஸ்யத இதி கப்யாஸம் - ஸூர்யனால் விகஸிக்கப்பட்ட. இந்த அர்த்தங்களால் பரிபூர்ணத்வமும் அநுக்ரஹ ஶீலத்வமும் த்யோதிப்பிக்கப்படுகின்றன. விரூபமாக இல்லாமல் அரோஷணமாயுள்ள திருக்கண்கள் நாராயணனுக்கே சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அப்படிப்பட்ட திருக்கண்களை உடையவன் விஷயமாக அந்தச் சாந்தோக்ய ஶ்ருதி, "ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:" என்று கர்ம வஶ்யதா கந்தமே யற்றிருக்கும் தன்மையைச் சொல்லுகிறபடியாலும், நாராயணனே அகர்ம வஶ்யன் ஸர்வஸ்மாத் பரன் என்பது ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம்.

க: புருஷோத்தம: ? - யார் புருஷோத்தமன்? 'புருஷோத்தமன்' என்னும் பதத்தால், பரமாத்மாவாகவும் ஸர்வத்தையும் வ்யாபித்தும் ஸர்வத்தையும் பரித்துக்கொண்டும் ஸர்வநியந்தாவாகவும் ஸர்வஸ்வாமியாகவும் இருக்கும் தன்மைகளை உடையவன் சொல்லப்படுகிறான். இந்த அர்த்தத்திற்குப் பின்வரும் கீதாவாக்யங்கள் ப்ரமாணங்களாகும்: —



"த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச ।
க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்தோऽக்ஷர உச்யதே ॥
உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ।
யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர: ॥
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: ।
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥"

[க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இரண்டு புருஷர்கள் லோகத்தில் ப்ரஸித்தர்கள்; க்ஷரன் என்றால், ஸம்ஸரிக்கும் ஸ்வபாவமுள்ள அசித் ஸம்பந்தம் பெற்றிருக்கும் ஜீவன்கள்; அக்ஷரன் என்றால், அசித் ஸம்பந்தம் நிவ்ருத்தியாகி இயற்கையான ரூபத்துடன் அவஸ்திதரான முக்தர்கள். இப்படி பத்த முக்தர்களைக் காட்டிலும் வேறுபட்ட உத்தமனான புருஷன் ஒருவன் உண்டு. ஶ்ருதிகள் அவனைப் பரமாத்மாவென்று சொல்லுகின்றன; அவன் அசேதநம் பத்தசேதநன் முக்தசேதநன் இந்த மூன்றிலும் ஆத்மாவாக உட்புகுந்து வ்யய ஸ்வபாவ மின்றிக்கே ஸர்வத்தையும் நியமநம் செய்துகொண்டிருக்கிறான். இப்படி க்ஷரனான பத்தஜீவனைக்காட்டிலும் அதீதனாகவும், அக்ஷரனான முக்தனைக்காட்டிலும் உத்க்ருஷ்டதமனாகவும் நானே. ஆகையால், எனக்கு ஶ்ருதியிலும் ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமன் என்று ப்ரஸித்தி உண்டாகி இருக்கிறது.] இப்படிப்பட்ட பரமாத்மத்வம் முதலியவை நாரங்களை அயநமாக உடைய நாராயணனுக்கே உபபந்நங்களாதலால் நாராயணனே ஸர்வஸ்மாத் பரன் என்று சொன்னதாயிற்று.

விஶ்வம் - ஸமஸ்தமான கார்ய ஸமூஹமும்; அதாவது - ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்கள் ஸமஸ்தமும் என்று அர்த்தம்.

அயுதாயுதஶதம் - பதினாயிரம் பதினாயிரம் நூறு. இதனால் அபரிச்சிந்நமான மஹிமை சொல்லப்படுகின்றது. அதன் ஏககலா - ஒரு அம்ஶம். அதன் அம்ஶகம் - அல்பமான ஒரு பாகம்.

𑌵𑍇𑌦𑌾𑌪𑌹𑌾𑌰 𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌤𑌕 𑌦𑍈𑌤𑍍𑌯𑌪𑍀𑌡𑌾 -
𑌦𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌚𑌨 𑌮𑌹𑌿𑌷𑍍𑌠 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌃 ।
𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌶𑍁𑌪𑌤𑍀 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑌿 ? 𑌕𑌸𑍍𑌯
𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑍇𑌨 𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌧𑍃𑌤𑍇𑌨 ? ॥ **13.**

---

அதன் 𑌅𑌂𑌶𑌂 - ஒரு அவயவம். அபரிமிதமான பகவத் ஸ்வரூப வைபவத்தின் அதிமாத்ரம் அல்பமாகிய ஒரு பாகம் என்று கருத்து. அந்தப்பாகத்தில் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் நாநா விதமான விபாகங்களுடன் நிஷ்பந்நமாக நிற்கிறது என்றால், பகவானுடைய பூர்ண மஹிமை எவ்வளவு என்று யாரால் சொல்லக்கூடும் ?

𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 - 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑍋 𑌯𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌃 𑌤𑍇𑌨 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 - சேதநாசேதநங்களுடைய விபாகங்களோ அதி விசித்ரமாக இருக்கின்றன ; அப்படிப்பட்ட விபாகங்களெல்லாம் தங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தியாகிய எல்லாவற்றிற்கும் நாராயணனிடத்திலே அதீநங்களாக நிஷ்பந்நங்களாகி யிருக்கின்றன என்று அர்த்தம். அதாவது - ப்ரஹ்ம ருத்ராதிகள் முதல் ஸ்தம்ப பர்யந்தமான ஸகல கார்யஜாதமும் நாராயணனுடைய ஸ்வரூப ஏகதேஶத்திலேயே இருக்கின்றது.

“𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌤𑌾𑌯𑍁𑌤𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌮𑍇𑌰𑍋𑌰𑌿𑌵𑌾𑌣𑌵𑍋 𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌮𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌤𑍍 ”
“ 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌵 𑌦𑍇𑌵! 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 𑌭𑍂𑌤
𑌵𑌿𑌶𑍇𑌷 𑌸𑌙𑍍𑌘𑌾𑌨𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂 ”

என்கிற வாக்யங்களால் நாராயணனே ஸர்வ வ்யாபியாக இருக்கிறான், ப்ரஹ்ம ருத்ராதிகளெல்லாம் அவனுடைய ஸ்வரூப ஏகதேஶத்தில் இருக்கிறார்கள் என்பது வ்யக்தமாகின்றது.

13. கீழ் ஶ்லோகத்தில், ப்ரத்யக்ஷங்களான வேத வாக்யங்களிலுள்ள லக்ஷ்மீபதித்வம் முதலிய ப்ரஸித்த லிங்கங்களாலும் ஸ்ம்ருதி வாக்யங்களின் பலத்தாலும் நாராயணனுக்கே பரத்வம்



---

உண்டு என்று சொல்லப்பட்டது ; இந்த ஶ்லோகத்தில், இதிஹாஸ புராணங்களும் அப்படியே சொல்லுகின்றன என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஸாமாந்யமாக மற்றை எவருக்கும் பரத்வமில்லை யென்று கீழ்ஶ்லோகத்திற் சொல்லப்பட்டது ; இப்பொழுது விஶேஷித்து ப்ரஹ்மா ருத்ரன் என்னும் இருவருக்கும் பரத்வமில்லையென்று சொல்லப்படுகிறது என்றும் சொல்லலாம்.

𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌃 𑌕𑌃 𑌵𑍇𑌦𑌾𑌪𑌹𑌾𑌰𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌤𑌕𑌦𑍈𑌤𑍍𑌯𑌪𑍀𑌡𑌾𑌦𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌮𑌹𑌿𑌷𑍍𑌠𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌶𑍁𑌪𑌤𑍀 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑌿 ? 𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌧𑍃𑌤𑍇𑌨 (𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌸𑍍𑌯) 𑌕𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑍇𑌨 𑌸 𑌶𑌿𑌵𑌃 ? [மது கைடபர்களாற் செய்யப்பட்ட வேதாபஹாரம், ப்ராஹ்மணோத்தமராகிற பிதாவை வதம்செய்த பாதகம், தைத்யர்களால் உண்டான உபத்ரவங்கள் ஆகிய பெரிய ஆபத்துக்களிலிருந்து ப்ரஹ்மருத்ரர்களைத் தப்புவித்தும், உத்தமங்களான வரங்களை அவர்களுக்குக் கொடுத்தும் இவ்வாறு ப்ரஜாபதியாகிற சதுர்முகன் பஶுபதியாகிற ருத்ரன் இரண்டு பெயரையும் தேவரீரைத் தவிர்த்து மற்றை எவர் ஸம்ரக்ஷிக்கிறார் ? தேவரீரைத் தவிர்த்து மற்றை எவருடைய திருவடி தீர்த்தத்தைத் தனது ஶிரஸ்ஸால் க்ரஹித்துக்கொண்டு ருத்ரன் பரிஶுத்தனானன் ?]

𑌵𑍇𑌦𑌾𑌪𑌹𑌾𑌰 - வேதங்களுடைய அபஹாரம். ‘ஆதிகாலத்தில் பகவான் மஹத் முதலிய ஸ்ருஷ்டி க்ரமப்படி சதுர்முகனை முதலில் ஸ்ருஷ்டித்து, ப்ரளய திரோஹிதங்களாயிருந்த வேதங்களை ஆவிஷ்கரித்து, அவைகளை அவனுக்குக் கொடுத்து அநுக்ரஹித்தான். அந்த வேதங்களைக் கண்ணுகக்கொண்டு சதுர்முகன் விஶ்வ ஸ்ருஷ்டியைச் செய்ய ஆரம்பித்த பொழுது, பகவானிடத்தினின்று ரஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றிய மது கைடபன் இரண்டு அஸுரர்கள், அந்த வேதங்களை

அபஹரித்துக் கொண்டு சதுர்முகன் பார்த்திருக்கையிலேயே ஜலத்தால் பூர்ணமாயிருந்த மஹோததியில் ப்ரவேஶித்துப் பாதாள லோகத்திற்குப் போய்விட்டார்கள். வேதங்களைப் பறிகொடுத்துச் சதுர்முகன் தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தேருது திகைப்புக்கொண்டு பஹுகாலம் கதறி பிறகு சிறிது தெளிந்து பகவானை ஸ்தோத்ரம் செய்ய, பகவான் ஹயக்ரீவ ரூபியாக எழுந்தருளிப் பாதாளத்திற்குப் போய் மது கைடபர்களை ஸம்ஹரித்து வேதங்களைத் திரும்பவும் சதுர்முகனிடம் கொண்டுவந்து கொடுத்தான்' என்கிற புராணகதை இவ்விடத்தில் அநுஸந்திக்கத் தகுந்தது.

மஹாபாதகே - குருவிஷயமான பாதகம், அல்லது குருவான பாதகம். 'ப்ராஹ்மணோத்தமனுகிய பிதாவை வதம்செய்த மஹாபாபம்' என்று அர்த்தம். 'ஒரு காலத்தில் சதுர்முகனுடைய புத்ரனுகிற ருத்ரன் அளவற்ற கோபபரவஶனுகி, தனது இடக்கைக் கட்டை விரலின் நகத்தால் பிதாவினுடைய ஶிரஸ் ஒன்றைக் கிள்ளிவிட்டான். பிதாவும், 'நீ கபாலியாகப் போகக் கடவாய்' என்று ருத்ரனை ஶபிக்க, அச்சாபத்தால் ருத்ரன் தனது கையில், ஒட்டிக்கொண்ட ப்ரஹ்ம கபாலத்துடனே அது முதல் பஹுகாலம் தீர்த்தாடநம் செய்துகொண்டு, பிறகு ஒரு ஸமயத்தில் ஹிமவத் பர்வதம்வந்து, நாராயணனைப் பார்த்து ஶாபநிவ்ருத்திக்காக ப்ரார்த்திக்க, பகவான் அவனுக்கு ஶாபநிவ்ருத்தியைச் செய்தான்' என்பது புராண கதை. "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும், நாயகனவனே கபாலநன் மோக்கத்துக் கண்டுகொண்மின்" என்பது திருவாய்மொழி.

தைத்யபீடா - அஸுரர்களிடமிருந்து உண்டான உபத்ரவம். முன் ஒருகாலத்தில் அந்தகாஸுரர்களுடன் ருத்ரனுக்கு யுத்தம் நேர்ந்தபொழுது, அந்தகர்களால் ஆகுலீக்ருதனுய் ருத்ரன் நாராயணனை ஶரணம் அடைய, நாராயணன் ஶுஷ்கரேவதியை ஸ்ருஷ்டித்து ஒரு க்ஷணத்திற்குள்ளாகவே அந்தகர்களுடைய ரக்தத்தைப் பாநம் செய்வித்து விட்டான் என்பது புராண கதை. அன்றிக்கே, ருத்ரனுல் வரம்பெற்ற வ்ருகாஸுரன் தனது ஸாமர்த்யத்தை அந்த ருத்ரனிடத்திலேயே பரீக்ஷித்துப் பார்க்க வேணுமென்று ஆரம்பித்தபோது, அந்த வ்ருகாஸுரனுடைய தௌராத்ம்யத்தைப் போக்கி நாராயணன் ருத்ரனுக்குப் பயநிவ்ருத்தியைச்செய்தான் என்கிற கதையும் இவ்விடத்தில் விவக்ஷிதம்.

ஆதி - இவை முதலிய. த்ரிபுரர்களை ஜயிக்க வேணுமென்கிற இச்சை முதலியவைகளால் உண்டான ஆபத்தும் இங்கே ஸங்க்ரஹிக்கப்படுகின்றது.

உத்க்ருஷ்டைஸ்ச ப்ரதாநை: - உத்தமங்களான வரதானங்களால். "யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: । புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும ॥" [கணக்கற்ற யுக கோடிகாலம் விஷ்ணுவை ஆராதித்து, சதுர்முகன் மறுபடியும் த்ரைலோக்யாதிபத்யத்தை அடைந்தான்] இத்யாதியான வர தாநங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. ருத்ரனுக்குப் பஶுபதித்வம் கிடைத்ததும் நாராயணனுடைய அநுக்ரஹத்தாலே தான். "ஸோऽப்ரவீத்ருத்ரோ நாராயணமேவ பஶூநாமதிபதிஸ்ஸ்யாமீதி தஸ்மை ருத்ர: பஶூநாமதிபதி:" [ஒரு காலத்தில் ருத்ரன், 'நான் பஶுபதியாக இருக்க விரும்புகிறேன்' என்று நாராயணனை ப்ரார்த்திக்க, நாராயணன் அப்படியே அநுக்ரஹித்தான்] என்று ஶ்ருதி சொல்லுகின்றது.

ப்ரஜாபஶுபதீ - சதுர்முகனுகிற ப்ரஜாபதி ருத்ரனுகிற பஶுபதி இவர்களை.

'ஶிரோதார்யேண கஸ்ய பாதோதகேந ஸ ஶிவ: ?' யாருடைய திருவடி தீர்த்தத்தை ஶிரஸ்ஸால் க்ரஹித்து அவனுக்குப் பரிஶுத்தி ஏற்பட்டது? 'ஸ:' என்னும் பதத்தால் 'ப்ரஜாபஶுபதீ' என்னும் பதத்திலுள்ள பஶுபதியை க்ர

ஹிக்கவேணும். கங்கை நாராயணனுடைய பாதாங்குஷ்டத்திலிருந்து ப்ரவ்ஹிக்கிறது என்பதும், அவ்வாறு உத்பத்தியாகி ஆகாஶத்திலிருந்து விழும் கங்கையை ருத்ரன் ஶிரஸ்ஸால் க்ரஹித்து லோகத்திற்குக் கொடுத்தான் என்பதும் ஸுப்ரஸித்தம். இந்தக் கங்கை ருத்ரனுக்குப் பரிஶுத்தியைச் செய்வது என்பதற்கு, “𑌤𑌦𑌮𑍍𑌬𑍁 𑌧𑌾𑌰𑌯𑌾 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌦𑌧𑌾𑌰 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌹𑌰𑌃 । 𑌪𑌾𑌵𑌨𑌾𑌯 𑌜𑌟𑌾𑌮𑌧𑍍𑌯𑍇” [அந்தத் தீர்த்தத்தைப் பரமமான பக்தியுடன் ருத்ரன் தனது பரிஶுத்திக்காக ஜடா மத்யத்தில் தரித்துக்கொண்டான்] இத்யாதியான வாக்யங்கள் ப்ரமாணம். ஸ்ரீ பாகவதத்திலும் இந்த அர்த்தத்தை ஸ்ரீஶுகர் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்:—

“𑌯𑌚𑍍𑌛𑍌𑌚𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌸𑌰𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌰𑍋𑌦𑌕𑍇𑌨
𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌨 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌧𑌿𑌕𑍃𑌤𑍇𑌨 𑌶𑌿𑌵𑌃 𑌶𑌿𑌵𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 ॥”

[பகவானுடைய சரணாரவிந்தத்திலிருந்து ப்ரவஹிக்கும் கங்கையின் தீர்த்தத்தை ஶிரஸ்ஸால் க்ரஹித்துக்கொண்டு ஶிவன் ஶிவத்வத்தை (அதாவது - பரிஶுத்தியை) அடைந்தான்.]

இதைப் போன்ற மற்றை அநேக புராண கதைகள் நாராயணனுடைய பரத்வத்தைச் சொல்லுகின்றன. இவைகளைத் தான் நமது ஆசார்யர்கள் ஸாத்விக புராணங்களென்று பரிக்ரஹித்திருக்கிறார்கள்; ருத்ரனுக்கும் சதுர்முகனுக்கும் பாரம்யத்தைச் சொல்லும் புராண கதைகளை ராஜஸ தாமஸங்களென்று த்யஜித்து விட்டார்கள்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ꞉.

## வைதிக ஶாஸ்த்ரங்களின் அத்யாபநம்.

இந்த விஷயத்தைப்பற்றி, ப்ரொபெஸ்ஸர் காக்ஸ் என்னும் ஒருவர், ‘மாடர்ன் ரிவ்யு’ என்னும் இங்க்லிஷ் பத்ரிகையின் நாளது மாஸத்திய ஸஞ்சிகையில், ஓர் உபந்யாஸம் எழுதியிருக்கிறார். நமது பாடஶாலைகளில் ஈஶ்வரபக்தி விஷயமான பாடங்கள் நடத்தவேண்டுமா வேண்டாமா என்கிற சர்ச்சை பலவிடங்களில் இப்பொழுது நடக்கிறபடியால், வேண்டாம் என்று சொல்பவர்களின் அபிப்ராயத்தை ஜநங்களுக்கு விஶதமாக ப்ரசரிப்பிக்க வேணும் என்கிற எண்ணத்துடன் அந்த உபந்யாஸத்தை ஸங்க்ரஹித்து இவ்விடத்தில் எழுதுகிறோம்.

“வேதங்களும் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்களென்று சொல்லப்படும் புராணங்களும் என்ன உபதேஶங்களைச் செய்கின்றன என்பதை முதலில் விசாரிப்போம். க்ரைஸ்தவ மதவேதங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒரு கந்யகைக்கு ஶிஶு ஒன்று ஜநித்ததென்றும், மநுஷ்யனொருவன் ம்ருதி யடைந்து புதைக்கப்பட்ட பிறகு மறுபடியும் ஜீவனோடு எழுந்திருந்து வந்தானென்றும், இந்த மநுஷ்யன் பிறகு பூமியை விட்டு ஆகாஶத்தில் போய் அந்தர்த்தாநத்தை அடைந்தானென்றும், ஒரு ஸமயத்தில் ஒரு ஸ்த்ரீ லவணமாக மாறுதல் அடைந்தாளென்றும், ஆதிகாலத்தில் பெரியதொரு ப்ரளயம் உண்டாகிப் பூலோகம் முழுவதும் பரவிப் பர்வதங்களின் ஶிகரங்களும் அமிழ்ந்துபோகும்படி வ்யாபித்திருந்தது என்றும், இன்னும் இவை போன்ற கதைகளை அந்த மதம் உபதேஶிக்கின்றது என்று அறிகிறோம். ஜேஸு க்ரிஸ்துவே இந்தக் கதைகளைச் சொல்லியிருக்கிறபடியால், அந்த மதத்தை அவலம்பிக்கும் ஒருவன் இவைகளை நம்பியே தீரவேணும். ஹிந்து மஹம்மதிய மதங்களிலும் இவை போன்ற கதைகள் ஏராளமாகவே இருக்கின்றன; அந்த மதஸ்தர்களால் அவைகள் விஶ்வஸிக்கப்பட்டும் இருக்கும்.

இம்மாதிரியான உபதேஶங்கள் பாலர்களுக்கு எந்த ப்ரகாரத்தில் அநுகூலமென்று தெரியவில்லை. ஒருகால் கால விஶேஷத்தில் சில அதிகாரிகளுக்கு இந்தக் கதைகள் அநுகூலங்களாக இருந்திருக்கக் கூடுமாயினும், இக்காலத்தில் இவை அநுகூலங்களா? என்பதை வஸ்து ஸ்திதி பராமர்ஶத்தைக் கொண்டே நிர்ணயிப்போம். இந்தியாவிலுள்ள வஸ்து ஸ்திதியைப் பராமர்ஶித்தால், வேதத்தை நம்பினவர்கள், தர்மாநுஷ்டாந விஷயத்தில், வேதத்தை நம்பாதவர்களை விட அதிக ஶ்ரத்தாளுக்களாகக் காணப்படவில்லை. ஒரு காலத்தில் நான் என்னுடைய சில ஸ்நேஹிதர்களுடன் லோகாபிராமமான பேச்சுக்களைப் பேசிவரும்பொழுது, எங்களுள் ஒருவர் ஒரு

இங்க்லீஷ்கார உத்யோகஸ்தரைப்பற்றி ‘அவர் லஞ்ஜம் வாங்குகிறதாக நான் கேள்விப்படுகிறேன்’ என்று சொல்லும்படி ஸம்பவித்தது. ‘அது வாஸ்தவமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், அதற்குத் தகுந்த அளவு அவர் வைதிகராக இருந்தார்’ என்று மற்றொருவர் மறுமொழி கூறினார். இது கொஞ்சம் அத்யுக்தியாக இருந்தாலும், வைதிகர்களுள் தர்மபரர்கள் அதிம்ருக்யம் என்பதே என்னுடைய அநுபவம். என்னுடைய அபிப்ராயமும், வைதிக கதைகளுடைய ஜ்ஞாநம் ஒருவன் தர்மபரனாக இருப்பதற்கு ப்ரயோஜகமன்று என்பதே; ஸுதராம், லோக விஷயஜ்ஞாநம் அதிகரித்து சித்த ஸம்ஸ்காரம் அடைந்திருக்கும் ஜநங்கள் விஷயத்தில் அது அத்யந்தம் அப்ரயோஜகமே.

வேதங்கள் அபௌருஷேயங்களென்றும் ப்ரம விப்ரலம்பங்களுக்கு அவைகளில் அவகாசமில்லையென்றும் நினைப்பது பண்டைய காலத்திற்குத் தகுந்தது. குணதோஷ விவேசநம் செய்யும் சக்தியுள்ள இக்காலத்திய ஜநங்கள் விஷயத்தில் அந்த நினைவு அநுபபந்நம். குணதோஷ விவேகமும் பௌராணிக கதைகளில் விச்வாஸமும் ஸ்வபாவத்தில் வ்யதிகரணங்கள்; ஒருவனிடத்தில் இவை இரண்டும் சேர்ந்திருப்பது சேராச்சேர்த்தி. ஒரே பாடசாலையில் வ்யதிகரணங்களான இவை இரண்டையும் அப்யஸிப்பிக்க முயல்வது அத்யந்தம் பரிஹாஸாஸ்பதமாகும். ஒரு பாலனுக்கு, ஒரு பாடத்தில், ‘இந்தப் பூமி அநேக காலமாகக் கொஞ்சம் கொஞ்சமாக வ்ருத்தியாகி வந்திருக்கின்றது’ என்கிற ஆதுநிக சாஸ்த்ர நிர்ணயத்தையும், மற்றொரு பாடத்தில் ‘ஈச்வரன் ஸங்கல்பித்தான், ஸங்கல்ப மாத்ரத்தாலே இந்தச் சராசரம் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதும் ஆவிர்பவித்தது’ என்கிற வைதிகக் கொள்கையையும் உபதேசிப்பது எவ்விதத்தில் உபபந்நமாகும்? இம்மாதிரியான உபதேசங்களெல்லாம் வ்யர்த்தமாகிவிடுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஐரோப்பா தேசத்தில் மிகுந்த ஊக்கத்துடன் க்ரைஸ்தவ மதத்தைப் பாலர்களுக்கு உபதேசித்தே வருகிறார்கள்; அப்படியிருந்தும் க்ரைஸ்தவ மதம் வரவர லோபம் அடைந்து கொண்டே வருகின்றது. ‘பஹுகாலமாக நமது ஆப்தர்கள் ஒரு விஷயத்தை விச்வஸித்து வந்தார்கள்; ஆகையால் நாமும் அதனை விச்வஸிக்கவேணும்’ என்பது இக்காலத்திற்குத் தகுந்தது அன்று. குண தோஷங்களைப் பராமர்சித்தே இக்காலத்தில் ஒருவன் ஒரு விஷயத்தை நம்ப ப்ரவ்ருத்திப்பனே தவிர, பெரியோர்களுடைய அருளிச்செயல் என்பதனால் மாத்ரம் அதை நம்பிவிடமாட்டான். இம்மாதிரியான நோக்கத்தை இக்காலத்திய வித்யாப்யாஸ சைலியானது மிகவும் வ்ருத்தி செய்கிறது. அது காரணம் பற்றியே ஐரோப்பாவில் வேதத்திற்கு அவலம்பம் குறைந்துவிட்டது; இந்தியாவிலும் சீக்ரத்தில் வேதம் அநாதரிக்கப்படும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இந்தியர்களும் மற்றை ஜாதியார்களைப் போல மநுஷ்யர்களானதால், இவர்களிடத்தில் மாத்ரம், வேதம் கொஞ்சம் அதிக பலமான பிடிப்புடன் கவ்வி



நிற்கும் என்று சொல்வதற்கு ஹேது வொன்றையும் காணோம். குணதோஷ விவேசநத்திற்கு ப்ராதாந்யத்தைக் கொடுக்கும் இக்காலத்திய வித்யாப்யாஸரீதி அந்த மூட விச்வாஸத்தை வேரறுப்பாக அறுத்தே விடும்.

‘வேதத்தை நம்புகிற ஒருவன் இருந்தால், அவன் அதன் கொள்கைகளை ஆதரிப்பதில் என்ன ஆக்ஷேபமிருக்கக்கூடும்?’ என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அவன் அவைகளை ஆதரிப்பதில் நமக்கு யாதொரு விவாதமுமில்லை; மற்றவர்களுக்கு அந்தக் கொள்கைகளை அவன் உபதேசிக்க ஆரம்பிக்கும்பொழுதுதான் நம்முடைய விவாதம் உண்டாகின்றது. இப்பொழுது பங்காளத்தில் ‘ஹிந்து யுநிவெர்ஸிடி’ என்னும் பெரியதொரு பாடசாலாஸ்தாநத்தை ஸ்தாபிக்க அநேக ஆஸ்திகர்கள் ப்ரயத்நப்படுகிறார்கள். அதில் வித்யார்த்திகளாக வரும் எல்லாரும் ஹிந்து வேத ஸம்பந்தமான உபதேசத்தைப் பெற்றுக்கொள்ள வேணும் என்று ஒரு நிர்பந்தம் இருக்கின்றது. இந்த நிர்பந்தம், அல்ப ஜநங்களில் விசேஷமாகக் காணப்படும் ஒரு க்ஷுத்ர நைஷ்டுர்யத்தை ஸூசிப்பிக்கிறதே தவிர, இக்காலத்திற்கு உரிய ஹ்ருதய வைசால்யத்தைக் காண்பிக்க வில்லை. இந்த உபதேச நிர்பந்தத்தைக் காட்டிலும் சில அநுஷ்டாந நிர்பந்தம் இன்னும் அஸம்பத்தமாக இருக்கின்றது. ‘ஆலிகர் காலேஜ்’ என்னும் மஹம்மதிய பாடசாலையில் வித்யார்த்திகளெல்லாரும், மஹம்மதியர்களுடைய வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் ஜபத்தை ப்ரதிதிநமும் ஐந்து காலங்களிலும் அநுஷ்டிக்க வேண்டுமாம். அதே மாதிரி இந்த ஹிந்து யுநிவெர்ஸிடியிலும் ஸந்த்யாவந்தந அநுஷ்டாநமும் நிர்பந்திக்கப்படும். வித்யார்த்திகளாகச் சேர்பவரெல்லாரும் ஆஸ்திகர்கள் என்று சொல்லமுடியாதாதலால் இந்த அநுஷ்டாந நிர்பந்தம் அநார்ஜவ சிக்ஷணத்தில் பர்யவஸிக்கும் என்பதில் ஆக்ஷேபமேயில்லை. இது எப்படி தர்மமாகும்? சுஷ்க வேதாந்த விசாரத்தையும் புராண கதா படநங்களையும் அஸம்பத்தமான ஸந்த்யாவந்தநாத்யநுஷ்டாநங்களையும் விடப் பரோபகாரமும் ஸர்வபூத ஸௌஹார்த்தமும் ஸத்ய வசநாதிகளும் சிறந்தவையானால், இந்தத் தேசத்தின் அபிவ்ருத்தியை ஹார்த்தமாக அபேக்ஷிக்கும் இந்த ஆஸ்திகர்கள் ஹிந்து யுநிவெர்ஸிடி ஆலிகர் காலெஜ் முதலிய பாடசாலைகளில் வேத ஸம்பந்த சிக்ஷணத்தை நிர்பந்திக்காமல் ஸாமாந்ய தர்மங்களை உபதேசிப்பதில் பத்த சித்தர்களாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய அபிப்ராயம்.”

---

ஸ்ரீ:

## கடிதங்கள்.

### ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

நாளது புரட்டாசி மாஸம் 20உ ஞாயிற்றுக்கிழமை திநம் (5-10-13) ஸ்ரீ அஹோபில மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ஆதிவண் சடகோப ஜீயரின் திருநக்ஷத்ரம் ஸம்பவிக்கின்றது என்பதை எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அறிந்திருக்கக்கூடும். ஸமீபித்த காலத்தில் அவதரித்த நமது ஆசார்யர்களுள், ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியே அநேக ப்ரகாரங்களில் சிறந்தவரென்

பதற்கு ஸந்தேஹமில்லை. தூரத்ருஷ்டியும், தத்வஜ்ஞாநமும், ஸர்வஜநங்களுக்கும் உபகாரத்தைச் செய்யவேண்டுமென்கிற ஹ்ருதயமும், பூததயையும் இவரிடத்தில் குடிகொண்டிருந்தன. தென்கலையார் வடகலையார் என்று இருவகைப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பிந்ந அபிப்ராயத்தை மாற்றி, இரண்டு வகையாருடைய கொள்கைகளிலு முள்ள பொதுவான முக்ய அம்ஶத்தை க்ரஹித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை பேதமின்றிக்கே வ்யாபிக்கச்செய்ய முயன்றது மல்லாமல், தேஶபேத குலபேத பாஷா பேதங்களினால் வேறுபட்ட கன்னட மலையாள அரவ ஆந்த்ர தேஶவாஸிகளை ஒரே செங்கோலின் கீழ் ஐக்யப்படுத்திய விஜயநகர ஸம்ஸ்தாநத்திலுள்ள பிந்ந பிந்ந ஸ்ரீ வைஷ்ணவர்களையும் ஒன்று சேர்த்து அந்த ஸ்ரீவைஷ்ணவ மதத்தை ராஜாங்க மதமாகவும் செய்வித்தவர் இந்த மஹாந்தான். மலைகளிலும் காடுகளிலும் வஸிக்கும் வில்லியர் செஞ்சு ஜாதியாரையும், நாட்டில் வஸிக்கும் பஞ்சம வர்ணத்தாரென்று உபேக்ஷிக்கப்படுகிற பஞ்சமர்களையும்கூட கைநழுவவிடாமல், கொண்டதாஸரி ('Hill-men Preachers) மால தாஸரி (Pariah Preachers) ஆகிய இருவகையரான மத போதகர்களைப் பயிர்ப்பித்து, அந்தப் போதகர்கள் மூலமாக அந்த ஜநங்களுக்கு ஆர்ய நாகரிகமும் ஸித்தாந்த ஜ்ஞாநமும் எட்டும்படி முதல் முதலில் ப்ரவ்ருத்தித்த உத்தமரும் இவரே.

இந்த யதீந்த்ரன், கன்னட தேஶமாகிய மைஸூர் ராஜ்யத்தில் ஜநித்து, அரவதேஶத்தில் பூர்வ வைஷ்ணவ ஆசார்யர்களின் முக்ய ஸ்தாநமாகிய காஞ்சீ நகரத்தில் வித்யாப்யாஸம் செய்து, ஆந்த்ர தேஶமாகிய பூர்வ விஜயநகர ஸம்ஸ்தாநத்திலுள்ள ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு முக்ய ஸ்தாநமாக வஹித்து, அவ்விடத்தில் பெரியதொரு மடத்தையும் பாடஶாலையையும் அக்ரஹாரத்தையும் ப்ரதிஷ்டை செய்து, ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யத்திற்கும் பரம ஆசார்யனாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ம அர்ச்சாவதார மூர்த்தியை எழுந்தருளப்பண்ணி, தென் இந்தியாமுழுவதும் க்ராமங்கள் நகரங்கள் தோறும் ஸஞ்சாரம் செய்து, ஸித்தாந்தத்தை உபதேஶித்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாருக்கும் பரம ஶ்ரேயஸ்ஸை ஸம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். மஹாராஜனுகிற க்ருஷ்ண தேவராயனது தண்டயாத்ரை ஸம்பத்தமும் ஸ்ரீ ஸ்வாமியினுடைய மதபோதனை யாத்ரை ஸம்பத்தமுமான சரித்ரத்தை, விஜயநகர சரித்ரத்திலும் ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளியிலும் குரு பரம்பரா வைபவத்திலும் படிப்பவர்களுக்கு, ஸ்ரீ ஜீயரின் ஸித்தாந்த போதனையானது மஹாராஜனது திக்விஜய யாத்ரைக்குப் பூர்வ ஸூசகமாகக் காணப்படும்.

இந்த மஹானுடைய திவ்ய சரித்ரம் ஸவிஸ்தாரமாயும் யதார்த்தமாயும் இவ்வளவு காலமாகியும் வெளிப்படாமலிருப்பது இந்தத் தேஶவாஸிகளுடைய அஶ்ரத்தையைப் புலப்படுத்துகின்றது. ஸ்ரீ ஜீயருடைய திருநக்ஷத்ர திநத்தை ப்ரபலமாகக் கொண்டாடிக் களிப்பதுடன் அவருடைய சரித்ரத்தையும் ஸுலக்ஷணமாய் ப்ரசுரம் செய்வது அவஶ்யமென்று இந்தியாவின் ஶ்ரேயஸ்ஸைக் கோரும் கனவான்களை ப்ரார்த்திக்கிறேன்.

எல்லூர்,
10—9—13 } டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யன்.

(கார்யதர்ஶி, ஸ்ரீ அ. ஶி. ஸபைப் பிரிவு, மஸூலிபட்டணம்.)

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
20 NOV 1913
MADRAS.

ஸ்ரீ:.
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்
ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.
பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வருஷ ஐப்பசி மீ [ஸஞ்சிகை 9.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

“ஸ்வயா ஸ்வமாயயா குணமய்யா யாம் ஸ்ருஷ்டாஸ் தே விபோ! கிமிவ நநு ந நிர்மிமீதே?” ஹே

மத ஆக்ரஹம்.

பகவந்! ஸ்வல்ப லீலையை அநுபவிக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றித் தேவரீர் த்ரிகுணாத்மகமான இந்த மாயையை ஸ்ருஷ்டித்தீர்; அப்படி தேவரீரிடமிருந்து ஸ்ருஷ்டியைப்பெற்றுள்ள இந்த மாயை தேவரீரால் அப்ரதீக்ஷிதமான பல கேளிக்கைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டதுபோலத் தோன்றுகிறதே! இது என்ன ஆஶ்சர்யம்? தபஸ்ஸால் த்ரிணேத்ரனை ஆராதித்து அவனிடமிருந்து பலிஷ்டமான ஒருவரத்தைப் பெற்ற வ்ருகாஸுரன், அந்த வரத்தின் யாதார்த்யத்தைப் பரீக்ஷிக்கத் தனக்கு வரத்தை அளித்த அந்த த்ரிணேத்ர

ணிடத்திலேயே ப்ரவ்ருத்தித்ததுபோல, இக்காலத்தில் வித்வாங்களென்று பெயர் பெற்று மற்றவர்களால் வ்யபதிஷ்டர்களென்று ஆதரிக்கப்படும் பலர், பகவானால் தமக்குக் கிடைத்திருக்கும் ஸ்வல்ப புத்தி ஶக்தியைக் கொண்டு யுக்தி மாத்ரைக ஶரணர்களாய், பகவானுடைய ஸத்தையையே ஆக்ஷேபிக்கவும், அந்த ஸத்தையை ஒருவாறு ஒத்துக்கொண்டாலும் அவனது ஸர்வஜ்ஞதை முதலிய குணங்களை நிராகரிக்கவும் ப்ரயத்நப் படுகிறார்களே! இப்படியெல்லாம் ஸம்பவிக்க வேண்டுமென்று பகவான் ஸங்கல்பித்திருக்கக் கூடுமோ? இது நிற்கட்டும். மற்றும் சில வித்வான்கள், ஶாஸ்த்ரங்களின் ப்ராமாண்யத்தை ஒத்துக்கொண்டு, ஶ்ருதி ஸ்ம்ருதிகளைப் பகவதாஜ்ஞை யென்று அறிந்து, அந்த ஆஜ்ஞைகளின் சில அம்ஶங்களில் தீவ்ரமான அபிநிவேஶமுள்ளவர்களாய், மற்றை அம்ஶங்களை அத்யந்தம் அநாதரித்து, அப்படி அநாதரிப்பதனால் பகவந் நிக்ரஹம் ஸம்பவிக்குமே என்னும் ஜ்ஞாநமின்றிக்கே தமது வாழ்நாள் முழுவதையும் கழித்து வருகிறார்கள். ஆஜ்ஞையின் ஏகதேஶ அநுஷ்டாநத்தினால் பகவத் ப்ரீதியை ப்ரதீக்ஷிக்கும் இவர்களுக்கு, ஏகதேஶ விஷயத்தில் விருத்தித்து அநுஷ்டிப்பதனால் பகவானுடைய அப்ரீதி நேருமே என்கிற எண்ணம் எப்படி உண்டாகாமல் இருக்கக்கூடும்? பகவந் முகோல்லாஸத்தை ப்ராப்யமான வஸ்துவென்றும், பகவதாஜ்ஞையின் அநுஷ்டாநமே அதன் ப்ராப்திக்கு உபாயமென்றும் உணர்ந்திருக்கும் இவர்கள், ஏகதேஶத்தில் ஜாகரூகர்களாகவும் ஏகதேஶத்தில் அந்தகர்களாகவும் இருப்பது அதி விசித்ரமான கார்யமே. இதை மாயையின் ப்ரபாவமென்று சொல்லாமல் வேறு என்ன வென்று சொல்லக்கூடும்?

இந்த வைசித்ர்யத்தை நிதர்ஶநமாக நமக்குள்ளாகவே நாம் காணலாம். அநேக திவ்ய தேஶங்களில் எம்பெருமான் உத்ஸவம் கண்டருளும் காலத்தில் பகவத் கைங்கர்யத்தில் அந்வயிக்கும் பாகவதர்களில் அநேகர், "ஸர்வபூதஹிதே ரதா:" என்று பக்தர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஸர்வ பூத ஸௌஹார்த்த ரூபமான முக்ய தர்மத்தை அடியோடு மறந்து, 'நாம் ப்ராஹ்மணர்களாச்சுதே; அஸஹ்யாபசாரத்துக்கு இடமாகிற க்ஷாத்ரத்தை அவலம்பிக்கக் கூடுமோ?' என்னும் ஜ்ஞாநமின்றிக்கே, அஹங்காரத்தால் புரஸ்காராதிகளை ப்ரதீக்ஷித்து பகவத் ஸந்நிதியிலேயே பரஸ்பரம் வைதுகொண்டும் அடித்துக்கொண்டும் பூதாவிஷ்டர்கள்போல நடந்துகொள்வதை நாம் பார்க்கிறோம். பகவத் கைங்கர்யத்தைப் பெரிதென்று நினைக்கும் இவர்களுக்கு, 'ஸர்வ பூதங்களிடத்திலும் ஸுஹ்ருத்தாக இருக்கவேண்டும்,' 'ரஜஸ் தமோ குணங்களுடைய கார்யமாகிற க்ரோதம் முதலியவற்றுக்கு ஆளாகாமல் ஸாத்விகராகவே வர்த்தித்து வரவேண்டும்' ["அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச"] இத்யாதியான பகவதாஜ்ஞைகள் அவ்யாவர்த்தகங்களாகத் தோன்றி விடுகின்றனவே! என்பது தான் இதில் ஆஶ்சர்யத்திற்கு ஹேதுவான அம்ஶம். இவர்களெல்லாரும் கேவலம் வேஷதாரிகளென்றும், தமக்கு நைஸர்க்கிகமாயுள்ள கலஹாபிநிவேஶத்திற்கு த்ருப்தியை ஸம்பாதித்துக்கொள்ளும் பொருட்டே பகவத் கைங்கர்யமென்னும் ஒரு வ்யாஜத்தை அவலம்பிக்கிறார்களென்றும் சொல்வது ந்யாய்யமாகாது. பலர் அப்படி கலஹத்திலேயே உத்ஸுகர்களாக இருக்கையிலும், சிலர் யதார்த்தமாகவே பகவத் ஸேவையில் ஆஸ்தையுள்ளவர்களாய்ப் 'பகவத் கைங்கர்யத்தில் ஆத்மோபயோகியான பலமுண்டு' என்று நினைத்துக்கொண்டே அத்யந்தம் நிஷேதிக்கப்பட்டுள்ள சச்சரவிலும் யுத்தத்திலும் ப்ரவ்ருத்திக்கிறார்கள். இவர்கள் விஷயத்தில் தான் மாயையின் ப்ரபாவம் நன்றாகத் தெரிகின்றது. 'ஈஶ்வரன் ஸர்வ ப்ராணிகளுடைய தேஹத்திலும் அவஸ்திதனாய் ஸர்வத்திற்கும் காரயிதாவாய் இருக்கிறான்; ஆகையால், அஹங்காராதிகளை விட்டுப் பரஸ்பரம் த்வேஷிக்காமல் இருத்தல் வேண்டும்; அப்படி த்வேஷித்தால் பகவாந் நிக்ரஹிப்பன்' ["அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ஶ்ரிதா:। மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா:॥ தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்। க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥" (ஸ்ரீ பகவத் கீதை 16-18-19)] என்கிற பரோபதேஶத்தைக் காலக்ஷேப கோஷ்டிகளில் ஶுத்தமான சித்த வ்ருத்தியுடனே செய்யும் இவர்களே, பகவத் ஸேவைக்கு உபக்ரமிக்கும்பொழுது ஆசார்யர்க

ளுடைய தனியன்களை அநுஸந்திக்கும் ப்ரகரணத்தில், தம்முடையவரல்லாத மற்றை ஆசார்யர்களின் தனியன்களை அவர்களுடைய ஶிஷ்யர்கள் அநுஸந்திக்கும்படி நேர்ந்தால், அதை ஸஹிக்கமாட்டோம் என்கிறார்களே! ‘பகவானுடைய உத்ஸவம் நின்றாலும் நிற்கட்டும்; ஆராதநாதிகளுக்கு லோபம் வந்தாலும் வரட்டும்; கலாந்தரத்திற்கு மாத்ரம் இடம் கொடுக்கக் கூடாது’ என்பதுதானு தாத்விகமான பக்தியின் லக்ஷணம்? “[illegible]” என்கிறபடி இவ்விதமாக த்வேஷிப்பது மோஹ வ்யாப்தியாகாதோ?

இந்த ஆக்ரஹம் கேவலம் தனியன்களுடைய வ்யத்யாஸம் நேருமிடத்தில் மாத்ர மில்லை; இன்னும் விசித்ரதரமாக இப்பொழுது சில விடங்களில் காணப்படுகின்றது. ஓரே தனியனை ஸேவித்துக்கொண்டு ஓரே ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்துப் பகவத்கைங்கர்யத்தை அநுஷ்டித்துவரும் சில பாகவதர்களுள், ‘தமிழ் வேதமென்று சொல்லப்படும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகள் ப்ரதாநமா? ஸம்ஸ்க்ருத வேதமென்று சொல்லப்படும் கர்மகாண்டம் ப்ரஹ்மகாண்டம் அடங்கிய வேத வாக்யங்கள் ப்ரதாநமா?’ என்னும் விஷயத்தைப்பற்றி அநாவஶ்யமாக விவாதம் செய்துகொண்டு, அந்தந்த வேதத்தை அப்யஸித்திருக்கும் பாகவதர்கள், தங்கள்தங்களுக்கே முதல் மர்யாதை நடக்கவேண்டுமென்று ஆக்ரோஶப்பட்டு, அந்த ஆக்ரோஶத்தின் பலமாக எம்பெருமானுடைய உத்ஸவாதிகளை எவ்வித வேதாத்யயநமுமின்றிக்கே நடந்து வரும்படி பார்த்து வருகிறார்களாம். இவ்விரு வகையாரும் இரண்டு வேதங்களுக்கும் ப்ராதாந்யத்தை ஒத்துக்கொண்ட நமது பூர்வாசார்யர்களுடைய அநுசரர்கள்; இரண்டு வகையாரும் ‘உபயவேதாந்தாசார்ய’ என்னும் பிருதில் லோபம் வருவதற்கு ஸஹியார். அப்படி யிருக்கையிலும், வேத பாராயண பரர்கள் அத்யாபகர்களைத் தூஷிப்பதும் அத்யாபகர்கள் வேத பாரகர்களைத் தூஷிப்பதும், பரஸ்பரம் சச்சரவு செய்வதும், இது காரணமாகப் போஜந ப்ரதி போஜநத்தை விடுவதும், பந்துத்வத்தை இழப்பதும் ஸஹஜமாகிவிட்டது. அந்தத் திவ்ய தேஶங்களில் உத்ஸவங்களெல்லாம் க்ஷுத்ரதேவதைகளின் உத்ஸவங்கள்போல அத்யாபக



வேதபாராயண கோஷ்டிகளின்றிக்கே இப்பொழுது நடைபெற்று வருகின்றனவாம். இந்த ஆக்ரோஶம் மேன்மேல் வ்ருத்தியானால், இன்னும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் உத்ஸவங்களே நின்றுவிட்டாலும் விடலாம். பக்தியின் பரீவாஹம் உத்ஸவத்தை நிறுத்துமளவு இம்மாதிரி ப்ரவஹிக்கின்றது.

இப்படி யெல்லாம் ப்ரஜைகள் பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டு நாஶம் அடையவேண்டுமென்பதுதானே பகவத் ஸங்கல்பம்? ஓரே விஷயத்தில் கிஞ்சித் ஜ்ஞாநத்தையும் கிஞ்சித் ஆந்த்யத்தையும் உண்டு பண்ணி, அதனால் தடுமாறும் ப்ரஜைகளைப் பார்ப்பதும் பகவானுக்கு ஒரு லீலையாகுமோ? இந்த அர்ச்சாவதாரம், யது குலத்திற்கு வாள் கோரைபோல ஸ்ரீ வைஷ்ணவ குலத்தின் நாஶத்திற்காகவா உண்டுபண்ணப்பட்டிருக்கிறது? அப்படிக்கில்லையென்பதை ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் நன்றாக உணர்ந்து, “[illegible]” என்கிறபடி பரஸ்பரமுள்ள மாத்ஸர்யத்தை உதறிவிட்டு, எல்லாருக்கும் பொதுவான எம்பெருமானை ஸேவித்து எல்லாரும் க்ருதார்த்தர்களாக வேண்டுமென்பது நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை. “[illegible]” என்னும் பகவத் வாக்யம் ஸதா மநஸ்ஸில் நின்றுகொண்டு எல்லாருடைய நடவடிக்கைகளையும் நியமித்து வரவேண்டும். விவேகிகளான பெரியோர்கள் இது விஷயத்தில் கொஞ்சம் ஶ்ரத்தை எடுத்துக்கொண்டா லொழிய இந்தப் பரிநிஷ்பத்தி ஸித்தியாதாதலால், இந்த விஷயத்தைக் கொஞ்சம் கவனிக்கும்படி அவர்களையும் ப்ரார்த்திக்கிறோம்.

∴ ∴ ∴

**நமது ராஜாங்கத்தாரின் தர்ம புத்தி.**

சென்ற விரோதிக்ருத் வர்ஷம் மார்கழி மாஸத்திய ஸஞ்சிகையில், நமது சக்ரவர்த்தியாகிற ஐந்தாவது ஜார்ஜின் பட்டாபிஷேகத்தைப்பற்றி எழுதி வரும் பொழுது, அவர் அந்தப் பட்டாபிஷேக காலத்தில் அளித்த ஸாமாந்ய வரங்களைப் பற்றிக் கொஞ்சம் ப்ரஸ்தாவித்துவிட்டு, பிறகு, பங்காளத்தை ஒன்று சேர்த்ததாகிய ஒரு விஶேஷித்த வரத்தைப் பற்றிப் பின் வருமாறு எழுதியிருந்தோம். “ஆக்ரஹத்தைவிட ந்யாயமே பெரி

தென்றும், ப்ரஜைகளின் ஆநுகூல்யத்தைத் தேடுவதே நமது தர்மமென்றும், பஹுஜந இஷ்டத்துக்கு விரோதம் செய்வது தைவத்துக்கு ஸம்மதமாகாது என்றும் எண்ணுகிறவர் நமது சக்ரவர்த்தி என்பதை விளக்குவதற்கு (இந்த வரம் அளித்ததைவிட) வேறு என்ன ஹேதுக்கள் வேணும்?" இப்பொழுது நமது தேசத்தைப் பரிபாலநம் செய்துவரும் லார்ட் ஹார்டிஞ்ஜ் என்னும் வைஸ்ராய், 'அந்தச் சக்ரவர்த்திக்குத் தாம் அநுரூபமான ப்ரதிநிதி' என்பதை நன்றாக விளக்கிக்கொண்டு ஸ்வல்ப திநங்களுக்கு முன்னே அந்யாத்ருசமான ஒரு தர்ம ஸம்ஸ்தாபநத்தைச் செய்து, முந்திச் சக்ரவர்த்தி நமது ஹார்த்தமான ப்ரீதிக்குத் தம்மைப் பாத்ரமாகச் செய்துகொண்டது போலவே, இவரும் தம்மை நமது த்ருடமான விச்வாஸத்திற்குப் பாத்ரமாகச் செய்துகொண்டிருக்கிறார். தர்மத்தையே பெரிதாக நினைக்கும் இம்மாதிரியான ப்ரபுக்கள் ராஜ்யதந்த்ர நிர்வாஹகர்களாக இருக்கும் வரையில், இந்த ராஜ்யத்திற்கு யாதொரு ஹாநியும் ஸம்பவியாது; நமக்கும் ச்ரேயஸ்ஸுக்குக் குறைவில்லை என்று நாம் தைர்யத்துடன் சொல்லத் துணிவோம்.

வடக்கே கங்காதீரத்தில் கான்பூர் என்று ஒரு பத்தநம் உண்டு. அதில் கொஞ்ச நாள்களுக்கு முன்னே, ராஜாங்கத்தார், மஹம்மதீயர்களின் ஆலயமொன்று இருந்த இடத்தைப் பொதுநன்மைக்காக உபயோகப் படுத்தும்பொருட்டு ப்ரவேசித்ததாகவும், அப்படி அவர்கள் ப்ரவேசிக்கும்பொழுது மஹம்மதீயர்கள் ஏராளமாகத் திரண்டுவந்து தடுத்ததின் பேரில் போலிஸாருக்கும் மஹம்மதீயர்களுக்கும் சச்சரவு உண்டானதாகவும், அந்தச் சச்சரவு கொஞ்சம் அதிகரித்தபடியால் போலிஸார் துப்பாக்கியை உபயோகப்படுத்திக் கலஹத்தை அடக்கினதாகவும் ஸமாசாரம். அந்தக் கலஹத்தில் இரு கக்ஷியிலும் அநேகர் அடிபட்டதோடு ஸ்வல்ப உயிர்ச்சேதமும் உண்டாயிற்றாம். அந்தக் கலஹத்தில் முக்யமாக ஸம்பந்தப் பட்டவர்களென்று சற்றேறக்குறைய நூறு மஹம்மதீயர்களைப் போலிஸார் பிடித்து, அவர்கள்மீது கலஹம் செய்தார்களென்னும் குற்றத்தைச் சாற்றி, மாஜிஸ்ட்ரேட்டினிடம் வ்யாஜ்யம் செய்திருந்தார்கள். அது கொஞ்சகாலமாக விசாரணை செய்யப்பட்டு வந்தது. இது இப்படியிருக்க, பலவிடங்களிலுமிருந்த மஹம்மதீயர்களெல்லாரும் ஒன்று



சேர்ந்து அநேக கூட்டங்கள் கூடி, ஆலயமிருக்குமிடத்தில் ராஜாங்கத்தார் ப்ரவேசித்தது பிசகு என்றும், அப்படி ப்ரவேசித்த பொழுது உண்டான கலஹத்தில் ஸம்பந்தப்பட்டதாகச் சிலரைப் பிடித்து அவர்கள்மீது போலிஸார் வ்யாஜ்யம் செய்வது ந்யாய விருத்தமென்றும் பல தீர்மானங்களைச் செய்து கொண்டு இந்தியா கவர்ன்மெண்டாரிடம் இந்த ந்யாய விரோதத்தைப் பற்றி முறையிட்டுக் கொண்டார்கள். யதார்த்தமாகவே, மஹம்மதீயர்களெல்லாருக்கும் பெரியதொரு அநீதி நடந்து விட்டதென்கிற எண்ணம் த்ருடமாக உண்டாகி இருந்தது. மத விஷயங்களில் தாங்கள் யாதொரு ப்ரவேசமும் செய்கிறதில்லையென்று ராஜாங்கத்தார் ஏற்கெனவே அளித்திருக்கும் உறுதிமொழியை இப்பொழுது அவர்கள் கைதவற விட்டார்கள் என்கிற எண்ணம் பலவிடங்களில் பரவ ஆரம்பித்தது. ஜநங்களால் அக்ரமமென்று நினைக்கப்படும் கார்யத்தில் ப்ரவ்ருத்தித்த ராஜாங்கத்தாரைத் தடுக்கும்பொருட்டு முயன்றதற்காக, போலிஸார் தர்மவிருத்தமாய் ஜநங்களின்மீது வ்யாஜ்யம் கொண்டுவருகிறார்களென்றும், ராஜாங்கத்தாரும் அந்த அதர்மத்திற்கு உட்பட்டிருக்கிறார்களென்றும் அநேக இடங்களில் அநேகர் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். இவையெல்லாவற்றையும் உணர்ந்த வைஸ்ராய், ராஜாங்கத்தாரிடம் ஜநங்களுக்கு விச்வாஸக்குறைவை ஸம்பாதிக்கக் கூடிய ஹேதுவுக்கு இடம் கொடுப்பது பிசகு என்று எண்ணி, ஸ்வல்ப திநங்களுக்கு முன்னமே தாமே நேரில் கான்பூர்க்குப் போய், அந்த ஸ்தலத்தைப் பார்வையிட்டு, மஹம்மதீயர்களுக்கு அந்த ஆலயத்தைத் திரும்பக் கட்டிக்கொள்ள அநுமதி கொடுக்கவேண்டுமென்றும், போலிஸாரால் குற்றம் சாற்றப்பட்டு மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற கைதிகள் அனைவரையும் விட்டுவிடவேண்டுமென்றும் அந்த ஸ்தலத்துக் கவர்ன்மெண்டாருக்கு உத்தரவு செய்தார். இம்மாதிரியாக உத்தரவு செய்வது ஸாமாந்ய வ்யக்திகளால் ஸாத்யமில்லை. மஹத்தான ஔதார்யத்தையும் தர்மாபிநிவேசத்தையும் உடைய வ்யக்திகளே எவ்வித ஆக்ரஹமுமின்றிக்கே இவ்விதமாக இணங்கத் தகுந்தவர்கள். அதிலும், தகுந்த அதிகாரிகள் செய்த கார்யத்தை அந்யதாவாக மாற்றுவது ஸுலப மன்று. இவர், ப்ரஜைகளுடைய நன்மையையே பெரிதாக நினைத்தபடியால் இப்படிச் செய்யத் துணிந்தார்.

கவர்ன்மெண்டார் அந்த ஸ்தலத்தில் ப்ரவேஶித்ததின் ந்யாயாபந்யாயத்தைப்பற்றியாவது குற்றம் சாற்றப்பட்ட மஹம்மதீயர்களின் ஸாபராத நிரபராதத் தன்மையைப் பற்றியாவது எவ்வித நிர்ணயமும் இப்பொழுது ஒருவராலும் செய்ய முடியாது. ஆனாலும், பல ஜநங்கள் பல விடங்களில் இதை ந்யாய விருத்தமென்று நினைக்கிறார்கள் என்கிற ஜ்ஞாநம் வந்தவுடன், வைஸ்ராய் இம்மாதிரியாக அந்த விஷயத்தை முடித்துவிட்டார் என்பது, ப்ரஜைகளிடத்தில் அவர் வைத்திருக்கும் விஶ்வாஸத்திற்கும் ப்ரஜைகளின் த்ருப்தியையே மற்ற எல்லாவற்றையும் விட மிகப்பெரிதாகப் பாவிக்கிறார் என்பதற்கும் த்ருடமான நிதர்ஶநமாகின்றது. இப்படிப்பட்ட ப்ரபுக்கள் ராஜப்ரதிநிதிகளாக இருக்குங் காலத்தில் ப்ரஜைகள் த்ருப்தர்களாக இருப்பார்கள் என்பதில் என்ன ஆக்ஷேபம்? இந்த விஷயத்தில் இந்த வைஸ்ராயினுடைய நடத்தை,

“ஸ்நேஹம் தயாம் ச ஸௌக்²யம் ச யதி³ வா ஜாநகீமபி ।
ஆராத⁴நாய லோகஸ்ய முஞ்சதோ நாஸ்தி மே வ்யதா² ॥”

[ப்ரஜைகளை த்ருப்தி செய்வதே எனக்கு அத்யந்தம் ப்ரியம். அந்த த்ருப்தியை ஸம்பாதிக்கும் பொருட்டு என்னுடைய ஸௌக்யம் முதலியவற்றை விடும்படி நேர்ந்தாலும் எனக்கு அதனால் வ்யதையே இல்லை; என்னுடைய ப்ராணஸ்தாநமாகிற ஜாநகியையும் விட்டுவிட ஸித்தமாக இருக்கிறேன்] என்று கதறியிருக்கும் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனது நடத்தையை அநுகரிக்கிறது என்று நிஶ்சயமாகச் சொல்லலாம்.

∴ ∴ ∴

**ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கம்.**

வருகிற மார்கழி மாஸத்தில் நடக்கவேண்டிய ஶிஷ்ய ஸபையின் மஹா ஸங்கத்தை, இந்த ஸம்வத்ஸரத்தில் ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்துவதாக ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் அபிப்ராயப் பட்டிருக்கிறார்கள். இது அநேக விஷயத்தில் ஶ்லாக்யமே. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு அத்யந்தம் உகப்பான இந்தத் திவ்யதேஶத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பரதேவதையாகக் கொண்டாடும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாரும் ஸமாஜம் சேர்ந்து அவனது விபூதியின் அபிவ்ருத்தியைத் தேட முயல்வதன் ஆநுரூப்யத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஸாமாந்யமாக அந்தத் திவ்யதேஶத்து எம்பெருமானுடைய ஸேவையையும் அந்த ப்ரதேஶத்தின் ரமணீயதையையும் துர்லபமாக நினைக்கும் அஸ்மதாதிகளுக்கு இது ஒரு வ்யாஜமாக ஆகிப் பெரியதொரு ஆநுகூல்யத்தைச் செய்யும் என்பதில் ஆக்ஷேபமில்லை. மஹாஸங்கத்தில் அந்வயிக்க வேண்டுமென்கிற ஆஸ்தையையுடைய ஆஸ்திகர்களெல்லாரும், தங்களுக்கு ஸ்ரீ அஹோபிலம் ஸுலபமாக ப்ராப்யமான ஸ்தலமாக இல்லாமலிருந்தாலும், தூரதேஶத்து யாத்ரையால் நேரக்கூடிய அஸௌகர்யங்களைப் பாராட்டாமலே, பகவத் ஸேவையையும் பாகவத கோஷ்டியையும் பெரிதாக நினைத்து, அந்தக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாகி எல்லாராலும் காங்க்ஷிதமான ஸித்தாந்த ஶ்ரேயோபிவ்ருத்திக்கு முக்யமான ப்ரயோஜகர்களாகத் தங்களைச் செய்துகொள்ள வேண்டுமென்று நாம் நிரம்பவும் ப்ரார்த்திக்கிறோம். பகவானுடைய ப்ரீதிக்காகவே சேர்க்கப்படும் இந்த ஸங்கம், அவனுடைய க்ருபையால் பரிபூர்ணமான நிஷ்பத்தியை அடையவே வேண்டும்.



∴ ∴ ∴

**தர்ம ஸ்வத்துக்களின் பரிபாலநம்.**

இந்த விஷயத்தைப்பற்றி ‘இன்டியன் எம்பயர்’ என்னும் பத்ரிகையில் எழுதப்பட்டுள்ள ஒரு வ்யாஸத்தின் ஸங்க்ரஹத்தை இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். கலியின் ப்ராபல்யத்தால் ஜநங்களுக்குத் தர்மபுத்தி அதில் சொல்லியிருக்குமளவு க்ஷீணதஶையை அடைந்திருக்கிறது பற்றி நமக்கு மிக்க ஶோகமுண்டாகிறது. ஆனாலும், இம்மாதிரியான தர்மலோபம் இனி அதிக காலம் நடக்காதென்றும், அதைத் தடுக்கத்தகுந்த வ்யவஸ்தைகள் ஶீக்ரத்தில் ஏற்பாடு செய்யப்படுமென்றும் கேள்விப்படுகிறோம். இது கொஞ்சம் ஆறுதலைக் கொடுக்கக்கூடிய ஸமாசாரம். துஷ்டஜநங்கள் எக்காலத்திலும் இருந்திருக்கிறார்கள்; ஆனால், அந்தத் துஷ்டர்கள் தர்மாதிகாரிகளாகவும் ஶாஸ்த்ர போதகர்களாகவும் இப்பொழுது அதி தார்ஷ்ட்யத்துடன் வெளிவரும்படி நேர்ந்துவிட்டதே என்பதுதான் கலியின் கொடுமை.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# விஶிஷ்டாத்வைதம்.

## 12. ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கு முள்ள அம்ஶாம்ஶி பாவம்.

இது வரையில் நாம் விசாரித்து வந்ததில், ப்ரஹ்மம் நீங்கலாகமற்றைப் பொருள்கள் எல்லாம் உத்பத்தியுள்ளவையென்றும், ஆனால் ஜீவதத்வத்தைப் பற்றினவரையில் அந்த உத்பத்தியானது கர்ம ப்ரயுக்தமான ஜ்ஞாந ஸங்கோச விகாஸாதிகளைக் குறிக்கின்றதே தவிர ஸ்வரூப அந்யதா பாவத்தைக் குறிக்கவில்லையென்றும், அக்காரணம் பற்றி ஜீவனை நித்யமென்றே நாம் சொல்லவேண்டுமென்றும் நிர்த்தாரணம் செய்யப்பட்டது. இப்படி நித்யமாக இருக்கும் ஜீவன் ப்ரஹ்மத்துடன் எவ்விதமான ஸம்பந்தத்தை உடையது? ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ஜீவன் அத்யந்தம் வேறுபட்ட பொருளா? அப்படி வேறுபட்டதாக இருந்தால் எந்த ப்ரகாரத்தில் வேறுபட்டது? இத்யாதியான சில விஷயங்களை இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம்.

இது விஷயமாக நமது ஸித்தாந்தம், ப்ரஹ்மத்தை ‘அம்ஶி’ என்றும் ஜீவனை ப்ரஹ்மத்தின் ‘அம்ஶம்’ என்றும், இப்படி ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் அம்ஶாம்ஶி பாவம் இருக்கின்றது என்றும் சொல்லுகின்றது. அதாவது – ‘ப்ரஹ்மம் என்பது பொதுவான ஒரு வஸ்து, அதன் ஏகதேஶம் (அல்லது ஒரு பாகம்) ஜீவன் என்னும் பொருள்’ என்று ஆயிற்று. ஆனால், ‘ப்ரஹ்மம் விபஜிக்கக்கூடிய பொருளாக இருந்தாலன்றோ ஜீவனை அந்த ப்ரஹ்மத்தின் ஒரு அம்ஶம் (அதாவது – ஒரு கண்டம்) என்று சொல்லக்கூடும்? ப்ரஹ்மம் அப்படிப்பட்ட கண்டனத்திற்கு அநர்ஹமாச்சுதே! அப்படியிருக்க, அதன் அம்ஶம் ஜீவன்



என்று நாம் எவ்விதம் வ்யவஹரிக்கலாம்?’ என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். ‘அம்ஶம்’ என்னும் ஶப்தத்திற்கு இரண்டு வித ப்ரயோகம் உண்டு. ஒரு பொருளைக் கண்டம் கண்டமாகத் துண்டித்து, அப்படித் துண்டிப்பதனால் கிடைக்கும் துண்டுகளைப் பற்றி வ்யவஹரிக்கும்பொழுது, அந்தத் துண்டுகளை அம்ஶங்களென்றும், துண்டிக்கப்பட்ட பொருளை ஸமுதாயமென்றும் ஜநங்கள் சொல்வதை நாம் பார்த்திருக்கிறோம். இது ‘அம்ஶ’ ஶப்தத்தின் ஒரு ப்ரயோகம். இதே மாதிரி, ஒரு பொருளுக்கு உள்ள குணம் முதலியவற்றை அந்தப் பொருளுக்கு ‘ஒரு அம்ஶம்’ என்று சொல்வதும் உண்டு. குணத்துடன் கூடிய ஒரு பொருளை ஸமுதாயமாகப் பாவித்து, அந்த ஸமுதாயத்துக்குள் அடங்கிய குணங்களைப்பற்றிப் பேசும்பொழுது, அந்தக் குணங்களை அம்ஶமென்றும் குணியை அம்ஶியென்றும் பெரியோர்கள் வ்யவஹரிக்கிறார்கள். இது ‘அம்ஶ’ ஶப்தத்தின் மற்றொரு ப்ரயோகம். தேஜஸ்ஸுடன் கூடிய ஸூர்யனுக்குத் தேஜஸ்ஸை ஒரு அம்ஶமாக வ்யவஹரிப்பதும், பஶு குதிரை முதலிய பொருள்களுக்குப் பஶுத்தன்மை முதலியவற்றை அம்ஶங்களென்று சொல்வதும், ஆத்மாவுக்குத் தேஹத்தை அம்ஶம் என்று சொல்வதும் இந்த ப்ரயோகத்தைக் கொண்டே. இந்த இரண்டு ப்ரயோகங்களில் முதல் ப்ரயோகத்தில் தான் ‘அம்ஶ’ ஶப்தம் ‘கண்டம்’ என்கிற அர்த்தம் கொள்ளும்; அந்தக் கண்டத்தை ஒரு பாகமாக வுடைய பொதுவான பொருளும் கண்டநார்ஹமாக இருக்கவேண்டுமென்று ஒரு நிர்பந்தமும் ஸம்பவிக்கும். ஜீவனை ப்ரஹ்மத்தின் அம்ஶமென்று நாம் சொல்வதில் இந்த அர்த்தம் கொள்ளவில்லை; ஜீவனைத் தேஜஸ் முதலிய ஸ்தாநத்திலும் ப்ரஹ்மத்தை ஸூர்யன் முதலிய ஸ்தாநத்திலும் வைத்து, ஸூர்யனுக்கு அதன் தேஜஸ்ஸை அம்ஶம் என்று சொல்வதுபோல, ப்ரஹ்மத்திற்கு ஜீவனை அம்ஶமென்று நாம் வ்யவஹரிக்கிறோம். ஆகையால், கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் ஆக்ஷேபம் நிற்காது.

இந்த அர்த்தத்தை மற்றும் ஒரு விதமாகச் சொல்வது உண்டு. அதாவது – கேவலம் ப்ரஹ்மம் விஶேஷ்யம், ஜீவன் அந்த ப்ரஹ்மத்தின் விஶேஷணங்களில் ஒன்று, அந்த ஜீவன் விஶேஷ்யமான ப்ரஹ்மத்தின் ஏகதேஶ ரூபமான ஒரு அம்ஶம் அன்று, விஶிஷ்டமான ப்ரஹ்மத்தினுடைய ஏகதேஶ ரூபமாகிற ஒரு

விஶேஷண அம்ஶமாகவே இருக்கின்றது என்பதுதான். ஒரு பொருளை விபாகித்து, அந்த விபாகத்தால் உண்டாகும் விபாகங்களை அம்ஶங்களென்று நாம் சொல்லும் பொழுது தான் விஶேஷ்யத்தின் ஏகதேஶத்தையே அம்ஶ ஶப்தத்தால் குறிக்கிறோம். அப்படிக்கல்லாமல் கோத்வம் என்னும் விஶேஷணத்துடன் கூடிய கோவை ஸமுதாயமாக எடுத்துக்கொண்டு, அதில் கோத்வம் என்னும் விஶேஷணத்தை அம்ஶமென்று நாம் சொல்லும்பொழுது விஶிஷ்டத்தின் ஏகதேஶமாகிற விஶேஷணத்தை அம்ஶ ஶப்தத்தால் நாம் குறிக்கிறோம். இந்த இரண்டாவது குறிப்புத்தான் ‘ப்ரஹ்மத்தின் அம்ஶம் ஜீவன்’ என்னுமிடத்தில் அம்ஶ ஶப்தத்தால் சொல்லப்படுகிறது. அப்ருதக் ஸித்த விஶேஷணமாகிற ஜீவன், விஶேஷ்யமாகிற ப்ரஹ்மத்திற்கு அம்ஶம் என்று சொன்னதாயிற்று. “யதாக்நிப்ருதீநாம் பாஸ்வதாம் ப்ரபா ஏகதேஶோம்ஶோ பவதி, யதா கவாஶ்வஶுக்லக்ருஷ்ணாதீநாம் கோத்வாதி விஶிஷ்டாநாம் கோத்வாதீநி விஶேஷணாந்யம்ஶா:, யதா வா தேஹிநோ தேவமநுஷ்யாதேர் தேஹோம்ஶ:, தத்வத் (ஜீவ: பரஸ்யாம்ஶ:)” [2 - 3 - 45] என்னும் ஸ்ரீ பாஷ்ய வாக்யம் இந்த அர்த்தத்தை விளக்குகின்றது.

ஆனல், ‘விஶிஷ்ட வஸ்துவில் விஶேஷணம் அம்ஶமாக இருப்பது போல விஶேஷ்யமும் ஒரு அம்ஶம் ஆகலாமே! அப்படியானல் பரஹ்மமும் ஒரு அம்ஶமாகவேண்டுமே தவிர அம்ஶியாவதற்குக் காரணமென்?’ என்று கேட்டால், ப்ராதாந்யத்தை விவக்ஷித்து ப்ரஹ்மத்திற்கு ‘அம்ஶி’ என்னும் வ்யவஹாரம் உபபந்நமாகின்றது என்று ஸமாதாநம் ஏற்படுகின்றது. ப்ரகாஶத்தைக் குறித்து ஸூர்யன் ப்ரதாநமாவது போலவும், தேஹத்தைக்குறித்து ஆத்மா ப்ரதாநமாவது போலவும் ஆதாரமாக இருக்கும் ப்ரஹ்மம் ஆதேயமான ஜீவனைக் குறித்து ப்ரதாநமாகின்றது. ஆகையால்தான் ப்ரஹ்மத்திற்கு அம்ஶித்வம்.

இந்த ஸம்பந்தத்தைத்தான் நமது ஆசார்யர்கள் ஶரீர ஶரீரி பாவமென்றும் வ்யவஹரிக்கிறார்கள். சேதந வர்க்கங்களாகிற ஜீவன்களும் அசேதந பதார்த்தங்களாகிற ப்ரக்ருதி முதலியவைகளும் பகவானுக்கு ஶரீரமாகின்றனவென்றும், இவைகளைப் பற்றப் பகவான் ஶரீரி (அல்லது ஆத்மா) என்றும் இவர்களுடைய நிர்ண



யம். அதாவது - ஶரீர ஸ்தாநத்திலிருக்கும் சேதநா சேதநங்களுடைய ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்தி இவைகளெல்லாம், ஆத்மா ஸ்தாநத்திலிருக்கும் பகவானுடைய ஸ்வரூபத்தையும் ஸங்கல்பத்தையும் ஆஶ்ரயித்து நிற்கின்றன என்று அர்த்தம். பகவத் ஸ்வரூபமும் பகவத் ஸங்கல்பமும் இருந்தால்தான் இவைகளுக்கு ஸத்தை முதலியவை உண்டு; அவை இல்லாவிட்டால் இவையுமில்லை என்று ஏற்படுகின்றது. *

இப்படிப்பட்ட ஸம்பந்தம் ஜீவனுக்கும் பகவானுக்கும் உண்டு என்று சொல்வதற்கு ப்ரமாணமென்ன? என்று ஒரு ஆகாங்க்ஷை ஜனிக்கக்கூடும். இதற்கு ஶ்ருதி வாக்யங்களே முக்யமான ப்ரமாணம். “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ” [இரண்டு பெயர் பிறப்பு இல்லாதவர்கள்; அவர்களில் ஒருவன் ஸர்வஜ்ஞன் மற்றொருவன் அஜ்ஞன்; ஒருவன் ப்ரபு மற்றொருவன் பராதீநன்], “ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா” [ஜீவனையும் அவ

[* இந்த ஶரீர ஶரீரி ஸம்பந்தத்தைக் கொஞ்சம் விஶதமாக நிஷ்கர்ஷிப்போம். ஒரு பொருள் மற்றொரு பொருளைச் சார்ந்து நின்றுகொண்டு அந்தப் பொருளுடைய ஸ்வரூபத்தாலேயே தனக்கு உள்ள ஸத்தையையும் (அதாவது - விஶேஷித்த ஒரு நாம ரூபத்துடன் இருப்பு), ஸ்திதியையும் (அதாவது - அந்த இருப்பு ஒருக்ஷணத்திலிருந்து மற்றொரு க்ஷணத்திற்கு அநுவ்ருத்தித்து இருத்தல்), ப்ரவ்ருத்தியையும் (அதாவது - வ்யாபாரம் முதலியவை) அது அடைந்திருந்தால், சார்ந்து நிற்கும் பொருளை ‘ஆதேயம்’ என்றும், எந்தப்பொருளின் பேரில் சார்ந்து நிற்கின்றதோ அந்தப்பொருளை ‘ஆதாரம்’ என்றும் சொல்வது உண்டு. இதே மாதிரி ஒரு பொருளின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மற்றொரு பொருளுடைய ஸ்வரூபத்தாலன்றி ஸங்கல்பத்தால் ஏற்பட்டிருந்தால், அந்தப் பொருள் ‘நியாம்யம்’ என்றும், மற்றொரு பொருள் ‘நியாமகம்’ என்றும் சொல்லப்படும். இப்படியே, ஒரு பொருள், தன் ப்ரயோஜநத்துக்காகவே மற்றொரு பொருளை உபாதாநம் செய்துகொண்டு அதனல் தான் அதிஶயமுள்ளதாக ஆனல், அந்தப் பொருளை ‘ஶேஷி’ என்றும் மற்றொரு பொருளை ‘ஶேஷம்’ என்றும் சொல்வார்கள். இப்படி ஒரு பொருளைப்பற்ற மற்றொரு பொருள் ஆதாரமாகவும் நியாமகமாகவும் ஶேஷியாகவும் இருந்தால், அது ‘ஶரீரி’ என்றும், ஆதேயமாகவும் நியாம்யமாகவும் ஶேஷமாகவும் இருக்கும் பொருள் ‘ஶரீரம்’ என்றும் சொல்லப்படும். லோகத்தில், ஜீவனுக்கும் தேஹத்திற்கும் இம்மாதிரியான ஸம்பந்தம் இருப்பதை நாம் காண்கிறோம். இதே மாதிரியான ஸம்பந்தமே பரமாத்மாவுக்கும் ஜீவனுக்கும் உண்டு என்பது தான் இந்த அம்ஶாம்ஶி பாவத்தால் சொல்லப்படுகிறது.]

னுக்கு நியந்தாவாக இருக்கும் பரமாத்மாவையும் பின்னர்களாக நினைத்து], "தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி" [இவர்களுள் ஒருவன் கர்ம பலத்தைப் புஜிக்கிறவன், மற்றொருவன் அகர்மவஶ்யன்] இத்யாதியான கணக்கற்ற வாக்யங்கள், ப்ரஹ்மம் ஜீவன் இவர்களுள், ஒருவனை ஸ்ருஷ்டிக்கிறவன் நியந்தா ஸர்வஜ்ஞன் ஸ்வாதீநன் ஶுத்தன் கல்யாணகுணாகரன் பதி என்றும், மற்றொருவனை ஸ்ருஷ்டிக்கப்படுகிறவன் நியாம்யன் அஜ்ஞன் பராதீநன் அஶுத்தன் ஹேயகுணம்பொருந்தினவன் ஶேஷன் என்றும் வ்யவஹரித்துக்கொண்டு, ப்ரஹ்மத்திற்கும் ஜீவனுக்கும் பேதத்தை உபதேஶிக்கின்றன. அன்றிக்கே, "தத்த்வமஸி" [ப்ரஹ்மம், ஜீவனாகிற நீ தான்], "அயமாத்மா ப்ரஹ்ம" [இந்தஜீவன் ப்ரஹ்மமே] இத்யாதியான அநேக வாக்யங்கள் ப்ரஹ்மமும் ஜீவனும் ஒன்றே என்று அபேதத்தை உபதேஶிக்கின்றன. இன்னும் சில வாக்யங்கள், ப்ரஹ்மத்தை ஸர்வஜீவ வ்யாபியாக, "ப்ரஹ்ம தாஶா ப்ரஹ்ம தாஸா ப்ரஹ்மைவேமே கிதவா:" இத்யாதிவாக்யத்தால் சொல்லி, நிக்ருஷ்டர்களுடனும் ப்ரஹ்மத்திற்கு ஸாமாநாதிகரண்யத்தைப் போதிப்பித்து, 'இதர வாக்யங்களாற் சொல்லப்படும் அபேதம் உண்மையே' என்று த்யோதிப்பிக்கின்றன. இப்படிச் செய்யப்பட்டிருக்கும் வ்யபதேஶங்களெல்லாம் முக்யங்களே தவிர, சில முக்யங்கள் சில கௌணங்கள் என்று சொல்லவொண்ணாது. 'ஜீவனும் ப்ரஹ்மமும் அத்யந்த பின்னங்கள், லோகத்தில் காணப்படும் ஸ்வாமி தாஸர்கள் போலக் கேவலம் நியோஜக நியோஜ்ய ஸம்பந்தமுள்ளவர்களே தவிர வேறு யாதொரு ஸம்பந்தமும் அவர்களுக்கு இல்லை' என்று சொன்னால், அபேதத்தைச் சொல்லும் "தத்த்வமஸி" முதலிய வாக்யங்களுக்கு அப்ராமாண்யம் ப்ரஸங்கிக்கும். 'பரம் ப்ரஹ்மமே ஜீவன், ப்ராந்தமாகவோ உபாத்யவச்சின்னமாகவோ இந்தப் பரிணாமத்தை அடைந்திருக்கிறது' என்று சொன்னால், பேதத்தைச் சொல்லும் "ஜ்ஞாஜ்ஞௌ" முதலிய ஶ்ருதிகளுக்கு அப்ராமாண்யம் ப்ரஸங்கிக்கும். ஒரு வாக்யத்திற்கும் அப்ராமாண்யம் ப்ரஸங்கியாமல் ஶ்ருதி சொல்லும் வ்யபதேஶம் எல்லாவற்றிற்கும் முக்யத்வம் ஸித்திக்க வேணுமானால், ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் கீழ்ச் சொல்லியிருக்கிறபடி அம்ஶாம்ஶி பாவத்தை



அப்யுபகமம் செய்தே தீரவேணும். ஜீவனை விஶேஷணமாகவும் ப்ரஹ்மத்தை விஶேஷ்யமாகவும் க்ரஹித்துக் கொண்டு, இவர்களிருவருக்கும், தேஹத்திற்கும் ஆத்மாவுக்கும் இருப்பது போல ஶரீர ஶரீரி பாவம் உண்டு என்று ஒத்துக்கொண்டால், பேத ஶ்ருதி அபேத ஶ்ருதி இந்த இரண்டிற்கும் ப்ராமாண்யம் ஏற்படும். லோகத்தில், ஶரீரமும் ஶரீரியும் பின்னங்களாக இருக்கையிலும், ராமன் க்ருஷ்ணன் முதலிய ஶப்தங்களை ப்ரயோகிப்பதில், ஶரீரம் ஶரீரவிஶிஷ்டனான ஆத்மா இவைகளுக்கு அபேதத்தை ஒத்துக்கொள்வதுபோல விஶேஷணமும் விஶேஷ்யமும் பின்னங்களாக இருக்கையிலும், விஶேஷண விஶிஷ்டமான வஸ்துவுக்கு ஐக்யம் ஸம்பவிப்பதில் யாதொரு விப்ரதிபத்தியும் இராது. இதைத்தான் நமது ஸித்தாந்தம் சொல்லுகின்றது. 'விஶேஷணங்களான சேதநாசேதநங்களைக் காட்டிலும் விஶேஷ்யமான ப்ரஹ்மம் அத்யந்தம் விலக்ஷணமே; ஆனால் சேதநாசேதநங்கள் ப்ரஹ்மத்திற்கு விஶேஷணம்ஶங்களான ஶரீரமாகவும், ப்ரஹ்மம் சேதநாசேதநங்களுக்கு அம்ஶியான ஶரீரியாகவும் இருக்கிறபடியால், சேதநாசேதந விஶிஷ்டமான ப்ரஹ்மம் ஒன்றே' என்பதுதான் நமது ஸித்தாந்தம். இப்படி விஶிஷ்ட ப்ரஹ்மத்திற்கு ஐக்யத்தைப் போதிப்பதால்தான் நமது ஸித்தாந்தத்திற்கு விஶிஷ்டாத்வைதம் என்கிற பெயர் வழங்கிவருகின்றது.

'பரஸ்பரம் விருத்தங்களான ஶ்ருதி வாக்யங்களை ஸமந்வயம் செய்வதற்காக இம்மாதிரியான ஒரு ஸம்பந்தத்தை அங்கீகரிக்கிறோம்' என்று சொல்வது அவ்வளவு ஸமஞ்ஜஸமாகுமா? 'ஶ்ருதியில் இரண்டு விதமான வ்யபதேஶங்கள் இருக்கின்றன என்பதைக் கொண்டு அம்ஶத்வத்தை நாம் கல்பிக்கிறோமே! இம்மாதிரியாகக் கல்பிக்கிறதற்கு இது தகுந்த ஹேதுவாகுமா? என்று ஶங்கிக்கக்கூடும். ஏன் அது போதுமான ஹேதுவன்று? கேவல் யுக்தியையும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தையும் கைக்கொள்ளாமல் ஆப்த வாக்யத்தையே ஶரணமாக அடைந்திருக்கும் நமக்கு, ஸமந்விதமான அந்த ஆப்த வாக்யத்தின் அர்த்தமே பெரிதாகுமே தவிர, அந்த ஆப்த வாக்யத்தில் ஏகதேஶத்தில் மாத்ரம் அந்வயிக்கும் அர்த்தம் க்ராஹ்யமாகாது. ஆபாதத: விருத்தம் போலத் தோன்றும் கம்பீரமான ஆப்த வாக்யத்தின் சித்த வ்ருத்திக்கு அநுகுணமாகவும், ஏகதேஶத்யாகமும் ஏகதேஶ பரிக்ரஹமுமில்லாத

படிக்கும் நிர்ணயிக்கப்படும் ஸித்தாந்தமே நமக்கு க்ராஹ்யதம மாகவேணும். ஆகையால், அம்ஸாம்ஸிபாவத்தை ஸ்தாபிக்கக் கீழ்க் கூறப்பட்டிருக்கும் ஹேதுவைத் துர்பலமென்றாவது அஸமஞ்ஜஸ மென்றாவது சொல்லக் காரணமில்லை. தவிரவும், இந்த அம்ஸாம்ஸி பாவம் கண்டோக்தமாகவே ஸ்ருத்யந்தரங்களில் காணப்படுகின்றது. ப்ருஹதாரண்யகத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணம் என்னும் ஒரு ப்ராஹ்மணம் உண்டு. அதில், "𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌤𑌂 𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿" [ஸகல பூதங்களையும் நியமநம் செய்துகொண்டு அந்தர் யாமியாக இருக்குமவனை எனக்குச் சொல்லவேணும்] என்னும் ஒரு ப்ரஸ்நத்திற்கு "𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍.........𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌏𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃" என்று உபக்ரமித்து, "𑌯𑍋𑌽𑌪𑍍𑌸𑍁" "𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑍌" என்று ஸர்வ பூதங் களையும் பற்றிப் பேசி, "𑌯𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍.....𑌏𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃" என்று ஆத்ம பரமான விஜ்ஞாநத் தைப் பற்றியும் சொல்லும் ஒரு ஸமாதாநம் இருக்கின்றது. இந்த வாக்யத்திற்குப் பின் வருமாறு அந்வயமும் அர்த்தமும்—'𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌤𑌤𑍍𑌤𑌦𑌪𑌿 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀 𑌤𑍇 𑌅𑌮𑍃𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾', [ப்ருதிவீ முதலிய அசேதந வர்க்கத்திலும் விஜ்ஞாநம் என்று சொல்லப்படும் சேதநவர்க்கத்திலும் உட்புகுந்து அவையவைகளை நியமநம் செய்துகொண்டுவரும் இந்த அந்தர்யாமி, உன்னுடைய அம்ருதமான ஆத்மா]. அதாவது - பல வகைப்பட்ட அசேதந வர்க்கத்தினுள் அந்தர்யாமியாக இருக்கும் ஆத்மாவும் ஜீவ வர்க்கத்தினுள் அந்தர்யாமியாக இருக்கும் ஆத்மாவும் எல்லாம் ஒன்றே என்று சொன்னதாயிற்று. இப்படிப்பட்ட வ்யதிரேக நிர்த்தேஸத்தால், அந்தர்யாமியாக இருக்கும் பகவானை விட ஜீவன் வேறுபட்டவனென்றும், அந்தப் பகவானே அசேதநவர்க்க மெல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பதுபோலச் சேதநனுகிற ஜீவனுக்கும் ஆத்மாவாக இருக்கிறுனென்றும் விஸதமாக விளங்குகின்றது. இதனால், சேதநாசேதநவர்க்கங்கள் ஸரீரமாகவும் ப்ரஹ்மம் ஆத்மாவாகவும் ஸ்ருதியிற் சொல்லப்பட் டிருக்கின்றது என்பது வ்யக்தம்.



தவிரவும், புருஷ ஸூக்தத்தில், ஜீவனுடைய அம்ஸத்வத் தைக் கண்டோக்தமாகச் சொல்லும் வாக்யமொன்று உண்டு. "𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿" [ஸகல ஜீவன்களும் பகவானுடைய ஒரு அம்ஸம்] என்பது அந்த வாக்யம். இதில் "𑌪𑌾𑌦" என்னும் ஸப்தத்திற்கு 'அம்ஸம்' என்று அர்த்தம். இன்னும் இது போலவே இந்தக் கொள்கைக்கு ப்ரகாஸமான பல வேறு ப்ரமாண வாக்யங்களை ஸ்ருதியில் காணலாம்.

ஸ்ரீ பகவத் கீதையிலும் இந்த அர்த்தம் சொல்லப்பட் டிருக்கிறது. பதினைந்தாவது அத்யாயத்தில், ஜீவ வர்க்கமும் பகவானுடைய விபூதி என்று சொல்லுமிடத்தில்,

"𑌨 𑌤𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌤𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌨 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑍋 𑌨 𑌪𑌾𑌵𑌕𑌃 |
𑌯𑌦𑍍𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮 ||
𑌮𑌮𑍈𑌵𑌾𑌂𑌶𑍋 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 |
𑌮𑌨𑌃𑌷𑌷𑍍𑌠𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌷𑌤𑌿 ||"

என்னும் ஸ்லோகங்கள் காணப்படுகின்றன. பகவானை ஸரணமாக அடைந்து, ஆத்ம அநாத்ம ஸ்வபாவ ஜ்ஞாநம் பெற்றவர்களாய்ப் பக்தர்கள் யதாவஸ்திதமான பரிஸுத்த ஆத்மாவை அடைகிறுர்கள் என்று முந்தின ஸ்லோகத்தால் சொல்லிவிட்டு, இந்த இரண்டு ஸ்லோகங்களால், ஸ்ரீ பகவான், பரிஸுத்த ஆத்மாவின் ஜ்ஞாந ஸ்வரூபத்தையும் பகவதம்ஸமாக இருக்குந் தன்மையையும் சொல்லி, நித்யமுக்த ஆத்மாவைப்போல ஸம்ஸாரியாக இருக்கும் ஆத்மாவும் தனது அம்ஸமே என்று விவரிக்கிறுன்: ஸ்லோகார்த்தமாவது - ஜ்ஞாந ஜ்யோதிஸ்ஸாக இருக்கும் ஆத்மாவுக்குப் பாஹ்ய ஜ்யோதிஸ்ஸாகிற ஸூர்யனும் சந்த்ரனும் அக்நியும் ப்ரகாஸகங்களாகா. எந்த ஆத்மாவைப் பார்த்துவிட்டால் ஸம்ஸாரத்திற்குப் புநராவ்ருத்தி இல்லையோ, அந்தப் பரமமான ஆத்ம ஜ்யோதிஸ், என் அம்ஸமே [𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮]. இந்த ஆத்மாக்களுள் சில, கர்ம பந்தத்தால் ஸம்ஸரித்து நிற்கின்றன;

அவைகளும் என் அம்ஶமே [உபயேவாம்ஶ:]. அதாவது - ஜீவ வர்க்கமெல்லாம் பத்தர்களாக இருந்தாலும் முக்தர்களாக இருந்தாலும் பகவதம்ஶமே என்பது இந்த ஶ்லோகங்களால் சொன்னதாயிற்று.

சேதநா சேதநங்களுக்கும் ஈஶ்வரனுக்கும் இவ்விதமான அம்ஶாம்ஶி பாவத்தை ஒத்துக்கொள்வது நமது ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமாயுள்ளது. அத்வைத த்வைத ஸித்தாந்தங்களில் இதுபோன்ற அம்ஶாம்ஶிபாவம் அங்கீகரிக்கப்படவில்லை. பேதாபேத ஶ்ருதிகளுடைய தாத்பர்யமே இதுதான் என்பது, நமது ஆசார்யர்களுடைய நிர்வாஹம். 'இப்படி, ப்ரஹ்மைக தேஶத்வத்தால் ஜீவனுக்கு அம்ஶத்வத்தை ஒத்துக்கொண்டால், ஜீவகதங்களான தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் ஸம்பவிக்குமே! ஸர்வ ஜீவன்களையும், ப்ரஹ்மாம்ஶமாகப் பாவிக்க வேண்டுமென்பது ஶ்ருதியின் தாத்பர்யமானால், சில ஜீவன்களுக்குச் சில அநுஜ்ஞைகளையும், சில ஜீவன்களுக்குச் சில பரிஹாரங்களையும் ஶாஸ்த்ரம் சொல்வது எப்படி உபபந்நமாகும்?' இத்யாதியான பல பூர்வபக்ஷங்களை மதாந்தரஸ்தர்கள் நம்மீது செய்கிறார்கள். ப்ரகாஶத்தையுடைய ரத்நம் முதலியவைகளின் விஷயத்தில், விஶேஷணமாகிற ப்ரகாஶத்திற்குத் தோஷஸம்பவம் நேர்ந்தாலும் விஶேஷ்யமாகிற ரத்நத்திற்கு அவத்யம் நேர்வதில்லைபோல, ஜீவன்களுக்குத் தோஷஸம்பந்தம் ஸம்பவித்தாலும் பரமாத்மா நிரவத்யனாக இருக்கிறானென்றும், அநுஜ்ஞை பரிஹாரங்களெல்லாம் தேஹ ஸம்பந்தத்தால் உபபந்நமாகின்றனவென்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ பாஷ்யத்தில் நிர்வாஹம் செய்திருக்கிறார். இதுதான் நமக்கு ப்ரமாணம்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# யவக்ரீதோபாக்யாநம்.

"குலம் ரூபம் வயோ வித்யா தநம் ச மதகாரணம்"

[நல்ல குலம், அழகு, யௌவநம், வித்யை, தநம் இவைகளெல்லாம் ஜநத்திற்கு மதத்தை உண்டுபண்ணக்கூடியவை] என்று லோகாநுபவத்தை அறிந்திருக்கும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவை யிருக்குமிடத்தில் ப்ராயேண புத்திப்ரம்ஶம் ஸம்பவிக்கிறதென்பதும், தர்மாதர்ம விவேகத்திற்கு லோபம் வந்து அஹங்காரம் உந்மஸ்தகமாகி வழியல்லா வழியில் ப்ரவ்ருத்தி ஏற்படுகின்றதென்பதுமே இப்படிச் சொல்பவர்களின் அபிப்ராயம். நல்ல நிரூபணமும் ஸாத்விகஜ்ஞாநமும் இருந்தாலொழிய இவை மநுஷ்யர்களைக் கெடுத்துவிடும் என்பதுதான் அவர்களின் கருத்து. இக்காலத்தில் இதற்கு நிதர்ஶநமாக அநேக வ்யக்திகளை ப்ரத்யக்ஷமாகக் காணலாம். முற்காலத்திலும் இவைகள் ப்ரபலமாக ஜநங்களை ஆக்ரமித்து நின்றன என்பதைக் காண்பிக்க நாம் ஓர் உபாக்யாநத்தை எழுதுகிறோம். கலியின் ப்ராபவத்தில் அகப்படாமல் ஸாத்விக காலத்தில் வாழ்ந்து முநிவ்ருத்தியை அநுஷ்டித்து வந்தவர்களும், இந்த விஷயத்தில் இக்காலத்திய மனிதர்களைவிடச் சிறந்தவர்களாகக் காணப்படவில்லை என்பதை இந்த உபாக்யாநம் நன்றாக விளக்குகின்றது.

கங்காதீரத்தை ஆஶ்ரயித்திருக்கும் ஒரு பெரிய வநத்தில் ஒருகாலத்தில் பாரத்வாஜரென்றும் ரைப்யரென்றும் இரண்டு ரிஷிகள் தபஸ்விகளாக வஸித்து வந்தார்கள். அவர்களுக்கு நைஸர்க்கிகமாகப் பரஸ்பரம் மைத்ரம் ஏற்பட்டிருந்தது. ஸ்வபாவத்தால் ரைப்யர் அதி கோபநராகவும் பாரத்வாஜர் அதி பீருவாகவும்

இருக்கையிலும், அவர்கள், மித்ரபாவத்தை முன்னிட்டு ஒருவருக்கொருவர் இணங்கியே எவ்வித வைமநஸ்யத்துக்கும் இடங்கொடாமல் மிக்க ஒற்றுமையுடன் சேர்ந்தேயிருந்தார்கள். ரைப்யருக்குப் பராவஸு அர்வாவஸு என்று இரண்டு புத்ரர்களும், பாரத்வாஜருக்கு யவக்ரீதன் என்று ஒரு புத்ரனும் உண்டு. ரைப்யருக்கு வைதுஷ்யமிருந்தபடியால் அவருடைய புத்ரர்களும் வித்வாங்களாக ஆனார்கள்; அவருக்கு ஶிஷ்யஸம்பத்தும் பூர்ணமாக உண்டாயிற்று. மற்றை ப்ரதேஶங்களிலிருந்து யாராவது ரிஷிகள் புதிதாக வந்தால், அவர்கள் பாரத்வாஜரை அவ்வளவாக ஆதரியாமலே ரைப்யரிருக்கும் இடம் போய் அவருக்கு விஶேஷித்த மர்யாதையைச் செய்வது வழக்கமாக இருந்தது. 'தனக்குத் துல்யமான வயஸ்ஸுள்ள அர்வாவஸு பராவஸுக்களின் பிதா மாத்ரம் ஸத்காராதிகளுக்குப் பாத்ரமாகிறார்' என்பதும், 'தனது பிதா அதி வ்ருத்தராக இருக்கையிலும் எல்லாராலும் அநாதரிக்கப்படுகிறார்' என்பதும் யவக்ரீதனுக்குப் பெரிய மநஸ்தாபத்தை உண்டுபண்ணின. யவக்ரீதன் இதைப்பற்றி மாத்ரம் ஶோகிப்பனே தவிர, தானும் அவர்கள்போல ஶாஸ்த்ராதிகளைப் படித்து வைதுஷ்யத்தை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தை ஒருபொழுதும் கொண்டவனல்லன். ஒரு ஸமயத்தில் இதைப்பற்றிய வருத்தம் அதிகமாகி யவக்ரீதனை உபத்ரவிக்கவே, யவக்ரீதன், மிகுந்த ஆக்ரஹத்துடன், 'தபஸ் செய்து தேவதைகளை ஆராதித்து ஸமக்ரமான வித்யையை ஏக காலத்திலேயே அடைந்துவிட வேண்டும்' என்று தனது உள்ளத்தில் தீர்மானித்துக்கொண்டு, மநுஷ்ய ஸஞ்சாரமில்லாத ஒருகாட்டைத் தேடிப்போய் இந்த்ரனைக் குறித்து அதிகோரமான தபஸ் செய்தான். பஹு காலம் இப்படி தபஸ் செய்த பிறகு, தபோபலத்தால் அவ்விடத்துக்கு ஆகர்ஷிக்கப்பட்ட இந்த்ரனை ப்ரத்யக்ஷமாகப் பார்த்து, தன்னுடைய மநோரதத்தை யவக்ரீதன் தெரிவித்துக்கொள்ள, இந்த்ரன் பின்வருமாறு மறுமொழி கூறினான் :—

"𑌅𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣𑍈𑌷 𑌵𑌿𑌪𑍍𑌰𑌰𑍍𑌷𑍇 𑌯𑍇𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌯𑌾𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ।
𑌕𑌿𑌂 𑌵𑌿𑌘𑌾𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌗𑌚𑍍𑌛𑌾𑌧𑍀𑌹𑌿 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌤𑍍 ॥"



'ஹே விப்ரர்ஷியே! வித்யையை ஸம்பாதித்துக்கொள்ளும் பொருட்டு நீர் செல்லும் வழி ஸரியான மார்க்கமன்று. ஏன் வீணில் ஆத்மாவை ஆயாஸப்படுத்துகிறீர்? உமக்கு வித்யை வேண்டுமானால், நீர் திரும்பவும் உம்முடைய ப்ரதேஶம் போய்த் தகுந்த குருவைத் தேடி ஆஶ்ரயித்து அவரிடமிருந்து வித்யைகளை அடைய முயலும்; அதுதான் ஸரியான மார்க்கம்.'

இந்த மறுமொழி யவக்ரீதனுக்குக் கொஞ்சம்கூட த்ருப்தியைக் கொடுக்கவில்லை. மநோரதத்தை அடைவதில் மிக்க ஆக்ரஹமுள்ளவனாக இருந்தபடியாலும் முரட்டுத்தனம் அதிகமாக இருந்தபடியாலும் மறுபடியும் அந்தக் கோரமான தபஸ்ஸிலேயே அவன் ப்ரவ்ருத்தித்தான். மறுபடியும் இந்த்ரன் அவனுக்கு ப்ரஸந்நமாகி, 'ஹே யவக்ரீத! அஶக்யமான விஷயத்தில் நீர் ப்ரவ்ருத்திக்கிறீர். இது புத்திஶாலித் தனமன்று. உம்முடைய மநோரதம் இந்த உபாயத்தால் ஒருபொழுதும் ஸாத்யமாகாது' என்று அவனை அந்த ப்ரயத்நத்திலிருந்து தடுத்தான். எவ்வளவு தடுத்தும் அவன் திரும்பாமலிருப்பதைப் பார்த்து, இந்த்ரன், 'இவனுடைய முரட்டுத்தனத்தைத் தடுக்க ஏதாவது ஒரு தகுந்த உபாயத்தைச் செய்யவேண்டும்' என்று எண்ணி, துர்பலனும் க்ஷயரோக பீடிதனுமான வயது சென்ற ஒரு ப்ராஹ்மண வேஷம் பூண்டு, அங்குள்ள கங்காநதியில் யவக்ரீதன் ஸ்நாநாதிகளுக்கு வழக்கமாக இறங்கும் துறையை அடைந்து, கரையில் நின்றுகொண்டு மிக்க பரபரப்புடன் ஒவ்வொரு முஷ்டியாக மணலைக் கையில் எடுத்துக் கங்கா நதியில் போகட்டுக்கொண்டே நின்றான். அங்கே போன யவக்ரீதன் அந்த வ்ருத்தனைப் பார்த்து 'என்ன உத்தேஶத்துடன் நீர் இந்தக் கார்யம் செய்கிறீர்?' என்று கேட்க, அந்த வ்ருத்தன், 'இந்தக் கங்கையைத் தாண்டுவதில் ஜநங்கள் மிக்க ஶ்ரமப்படுகிறார்கள்; அந்த ஶ்ரமத்தைப் போக்கவேண்டுமென்று எண்ணிக் கங்கைக்கு ஓர் அணை போகடலாமென்று நான் முயலுகிறேன்' என்று உத்தரம் சொன்னான். இதைக் கேட்ட யவக்ரீதன் மிக்க ஆஶ்சர்யமடைந்து, 'ஹே ப்ராஹ்மண! கங்கையின் ப்ரவாஹம் அளவற்றது;

உம்முடைய மணல்முஷ்டிகளால் அணையிடுவது ஸாத்யமாகாது. அஶக்யமான இந்த விஷயத்திலிருந்து விரதராய் ஶக்யமான மற்றை ஏதாவது கார்யத்தில் ப்ரவ்ருத்தியும்' என்று அவனுக்குப் புத்தி சொன்னான். அப்பொழுது அந்த வ்ருத்தன்,

"യഥൈവ ഭവതാ ചേദം തപോ വേദായ ചോദിതം ।
അശക്യം തദ്വദേവാഹി മയായം ഭാരഃ സമാഹിതഃ ॥"

'தபஸ்ஸினால் வித்யைகளெல்லாவற்றையும் ஸமக்ரமாக ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்கிற உம்முடைய இந்த ப்ரவ்ருத்தி ஶக்யமாகையில், ஏன் நான் கங்கைக்கு இவ்வாறு அணைகட்ட முயல்வது மாத்ரம் அஶக்யமாக வேண்டும்?' என்று கேட்க, யவக்ரீதன் அந்த வ்ருத்தனை இந்த்ரனென்று அறிந்துகொண்டு, 'ஹே இந்த்ர! என்னுடைய ப்ரவ்ருத்தி நீர் சொல்லுகிறபடி புத்திக்ருதமில்லாவிட்டால், நான் இப்பொழுதே அந்தக் கார்யத்திலிருந்து விலகுகிறேன். ஆனால், வேறு எவ்விதத்திலாவது என் பிதாவுக்கும் எனக்கும் வைதுஷ்யம் வரும்படியாக நீர் அநுக்ரஹிக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்தான். இந்த்ரன், அவனுடைய பிடிவாதத்தைப் பார்த்து ஶ்லாகித்து அவனது ப்ரார்த்தனைக்கு இணங்கி 'உமக்கும் உம்முடைய பிதாவுக்கும் நீர் இச்சிக்கிறபடியே ஸகல வித்யைகளும் ப்ரதிபாஸிக்கட்டும்' என்று அநுக்ரஹித்தான். லப்தகாமனான யவக்ரீதன் உடனே தனது பிதாவின் ஸமீபம் வந்து, 'தபஸ்ஸால் வித்யைகளை ஸாதித்து வந்திருக்கிறேன்; ரைப்யருக்கும் அவருடைய புத்ரர்களுக்கும் தெரியும் வித்யைகளைக் காட்டிலும் மிகப் பல மடங்கு அதிகமான வித்யையை நாம் அறிவோம்' என்று பெருமை பாராட்டினான். ஸாத்விகரான பாரத்வாஜர், 'ஐயோ! இவன் இந்த வித்யையின் ஸம்பாதநத்தால் அஹங்காரமடைந்து தனக்குத் தீங்கை விளைவித்துக்கொள்ளப் போகிறானே!' என்று பயந்து, 'ஹே யவக்ரீத? நீ வித்யைகளைப் பெற்று வந்ததில் எனக்கு மிகவும் ஸந்தோஷமே; ஆனால், அதனால் அஹங்காரமடைந்து நீ அவிநீதனாக ஆனால், உன்னை அது கெடுத்துவிடும். உனக்கு உண்டாகியிருக்கும் பெருமையையும் ஔத்ஸுக்யத்தையும் பார்த்தால், நீ இப்பொழுதே ரைப்யரிடம் போய் அவரை மதத்தால் அவமதிப்பாய்போலத் தோன்றுகிறது. அப்படிச் செய்யவே கூடாது. ரைப்யர் அதி கோபநர், பெரிய தபஸ்வீ, உன்னுடைய அவிநயத்தை ஸஹியாமல் உன்னை நாஶஞ்செய்துவிடுவர். நீ அவ்விடம் ஸர்வதா போகக்கூடாது' என்று மிக்க பரிதாபத்துடன் அவனைக் கேட்டுக்கொண்டார். 'அப்படியே செய்கிறேன்' என்று ஶ்லக்ஷ்ணமாகப் பிதாவுக்குப் பதிலைச் சொல்லிவிட்டு, யவக்ரீதன், தன் மனம்போனபடியெல்லாம் மற்றவர்களை அவமதித்துக்கொண்டு, பிதாவைக்கூட ஒரு பொருட்டாக எண்ணாமல் வர்த்தித்து வந்தான்.



இப்படி அவன் வர்த்தித்து வருகையில், ஒரு ஸமயத்தில் ரைப்யருடைய ஆஶ்ரமத்திற்கு அருகில் அவன் போகும்படி நேர்ந்தது. அப்பொழுது வஸந்தகாலமாக இருந்தது; மந்தமாருதம் ஹ்ருதமாக வீசிக்கொண்டும் குயில்கள் நாலா பக்கங்களிலும் கூவிக்கொண்டும் வ்ருக்ஷங்களெல்லாம் அதிமநோஹரமாகப் புஷ்பித்துக் கொண்டும் இருந்தபடியால், மஹான்களான யோகிகளுக்குக்கூடக் காமோத்ரேகம் ஸம்பவிக்குமளவு அதிரமணீயமாக அந்த ப்ரதேஶம் காணப்பட்டது. யவக்ரீதன் அப்பொழுது அந்த ஆஶ்ரமத்திற்கு வெளியில் ஏகாகிநீயாக ஸஞ்சரித்துக்கொண்டிருந்த பராவஸுவின் பார்யையைப் பார்த்து, அவளுடைய ரூபத்தாலும் கால பலத்தாலும் புத்தி ப்ரம்ஶம் அடைந்தவனாய், தான் செய்யப்போகும் கார்யத்தின் அதர்மத்தன்மையை நன்றாக அறிந்திருந்தும், தான் வித்யாவாந் என்கிற மதத்தால் அந்த அதர்மத்தை அதர்மமாக உணராமலே அவளைப் பலாத்கரித்து உபபோகிக்க ப்ரயத்நப்பட்டான். அவள் அதிமாத்ரம் ஆர்த்தையாகக் கதறிக்கொண்டு தனது ஶ்வஶுரராகிய ரைப்யர் இருக்குமிடத்துக்கு ஓடிவந்து, யவக்ரீதன் செய்த அக்ரமத்தைச் சொல்லித்துக்கப்படவே, ரைப்யர் மஹாகோப மடைந்தவராய், தமது ஜடைகளிலிருந்து ஒருரோமத்தை எடுத்து அக்நியில் ஹோமம் செய்து, அதனால் ஒரு க்ருத்யையை ஸ்ருஷ்டித்து அந்த க்ருத்யையைப் பார்த்து, 'ஹே க்ருத்யே! நீ யவக்ரீதனை நாஶம்

செய்துவிட்டு வருவாய்' என்று ஆஜ்ஞாபித்தார். தபோ பலத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அந்த க்ருத்யை, உடனே அதிபயங்கரமான ரூபத்துடன் யவக்ரீதனை நோக்கி ஓடித் துரத்த, அவன் பயந்து தேஶாத் தேஶம் அலைந்து எவ்விடத்திலும் ஸம்ரக்ஷணத்தைப் பெறாமல் கடைசியாகத் தனது பித்ரு க்ருஹத்தில் புகுந்து அந்த க்ருத்யையால் ப்ரவேஶிக்கக்கூடாத அக்நிகாரமென்னும் பரிஶுத்த ஸ்தலத்துள் பதுங்கிக்கொள்ள ப்ரயத்நப்படுகையில் அந்த அக்நிகாரத்தைக் காத்திருந்த ஒரு ஶூத்ர அந்தகனால் தடுக்கப்பட்டு வெளியிலே நின்று க்ருத்யையின் ஹஸ்தகதனாகி அதனால் கொல்லப்பட்டு மரணமடைந்தான். அந்தக் காலத்தில் நித்ய கர்மங்களைச் செய்வதற்காக நதிக்குப் போயிருந்த பாரத்வாஜர், திரும்பிவந்து தமது புத்ரன் ப்ரேதமாகக் கிடப்பதைப் பார்த்து அங்கிருந்த அந்தகனை 'இது ஏன்?' என்று கேட்க, அவன் அங்கே நடந்த வரலாற்றைச் சொன்னான். அது கேட்ட பாரத்வாஜர், 'என்ன அபராதத்தால் தமது புத்ரன் இவ்விதமான விபத்தை அடைந்துவிட்டான்?' என்பதைத் தெரிந்துகொள்ளாமலே, புத்ரஶோகத்திற்குப் பரவஶராகி,

"ஸுகிநோ வை நரா யேஷாம் ஜாத்யா ஸுதோ ந வித்யதே । யே ஸுதஶோகஸந்தப்தா விசரந்தி யதா ஸுகம் ॥"

[புத்ரனை ஜநிக்காமல் இருக்கும் மநுஷ்யர்களே மஹத்தான ஸுக்ருதம் செய்தவர்கள். புத்ர ஶோகத்தின் ஸம்பவத்திற்கு ஹேதுவே இல்லாமல், அவர்கள் விசாரமற்று ஸ்வச்சந்தமாக லோகத்தில் ஸஞ்சரிக்கிறார்கள்] இத்யாதியாகப் பலவாறு கதறி அழுதுவிட்டு, தாமும் புத்ரனுடன் மரித்து விடுவதாக நிஶ்சயித்து, தமது புத்ரநாஶத்துக்குக் காரணரான ரைப்யரிடம் அதிமாத்ரம் க்ருத்தராய் அவரைப் பின்வருமாறு ஶபித்தார்.

"யதாஹம் ஸுதஶோகேந தேஹம் த்யக்ஷ்யாமி கில்பிஷீ ।
ததா ஜ்யேஷ்டஸுதேநைவ ரைப்யோ ஹிம்ஸ்யோ ஹ்யநாகஸம் ॥"



[இப்பொழுது நான் மஹாபாபத்தின் பலமாகப் புத்ரநாஶத்தை அடைந்து, அதனால் வருந்தி ப்ராணனை விடுவதுபோல, எனக்கு இப்படிப்பட்ட தீங்கை விளைவித்த ரைப்யனும், ஶீக்ரத்தில் தனது ஜ்யேஷ்டபுத்ரனால் நிரபராதியாக இருக்கையிலேயே அடிக்கப்பட்டு மரணத்தை அடையவேண்டும்.]

இப்படி ஶபித்த பிறகு அவருடைய கோபமும் கொஞ்சம் ஶமநமடைந்தது. அவர் பால்யாத் ப்ரப்ருதி ஸாத்விகராகவும் பாபத்திலிருந்து மிகப் பயந்தவராகவுமே தமது வாழ்நாள் முழுவதையும் போக்கிக்கொண்டு வந்திருந்தபடியால், இப்பொழுது தம்மைப் பரவஶமாக்கின கோபம் கொஞ்சம் தணியவே, 'ஐயோ! என்ன அகார்யம் செய்துவிட்டோம்? யவக்ரீதன் தனது கர்ம பலத்தால் இம்மாதிரியான விபத்தை அடைந்தால், அதற்கு ரைப்யர் என்ன செய்வர்? அவரை அஜ்ஞாநத்தால் ஶபித்துவிட்டேனே! அவர் எனக்குப் பரமமித்ரராக இருக்கையிலும், புத்ர நாஶத்தால் உண்டான புத்தி ப்ரம்ஶமன்றோ என்னை அவருக்கு ஶாபத்தைக் கொடுக்கும்படி செய்துவிட்டது? ஶோகத்தாலும் கோபத்தாலும் புத்தியை இழந்து இப்படிப்பட்ட அதர்மத்தைச் செய்பவர்களைவிட வேறு பாபிஷ்டர்களும் உண்டோ?'

"யே து ஸுதக்ருதாத் ஶோகாத் தேஹம் த்யக்ஷ்யந்தி தாபஸா: । ஶபந்தி ஸஹஸா ஸாதூந் தேப்ய: பாபதரோ நரக: ॥"

என்று துக்கித்துக்கொண்டே பாரத்வாஜர் அக்நி ப்ரவேஶம் செய்து ப்ராணனை விட்டார்.

தம்மால் நியமிக்கப்பட்ட க்ருத்யை யவக்ரீதனைக் கொன்றுவிட்டது என்றும், புத்ரஶோகம் தாங்காமல் பாரத்வாஜரும் மரித்துவிட்டாரென்றும் மாத்ரம் அறிந்த ரைப்யர், 'இதுவும் ஒருகால் வைபரீத்யம்' என்று மநஸ்ஸில் ஒருவாறு ஸமாதாநமடைந்தவராய், தமது புத்ரர்களுடன் ஸுகமாக ஜீவித்து வந்தார். பாரத்வாஜர் தமக்கு இட்ட ஶாபம் அவர் காதுக்கு எட்டவே இல்லை. ரைப்யருடைய புத்ரனாகிற பராவஸுவும், ஏற்கெனவே யவக்ரீ

தனை வெறுத்துக்கொண்டிருந்தபடியால் அவனுடைய மரணத்திலாவது அவனுடைய பிதாவின் மரணத்திலாவது அதிகமான துக்கமடையவில்லை. அர்வாவஸு மாத்ரம், 'ஐயோ! நமக்கு ஸர்வவித ஸுஹ்ருத்தாக இருந்த பாரத்வாஜருக்கு இப்படிப்பட்ட விபத் நேர்ந்துவிட்டதே! அத்யந்தம் துராசாரனாக இருந்தபோதிலும், யவக்ரீதன், இவ்விதமாக மரணமடைந்தான் என்பதை நினைக்க எனக்கு மிக்க வருத்த முண்டாகின்றது. ஆனால், பகவத் விசேஷ்டிதத்திற்கு நாம் என்ன செய்யக்கூடும்?' என்று விவிதமாக சோகிப்பான். அவனுடைய ஹ்ருதயம் கொஞ்சம் ம்ருதுவான படியாலும், அவன் கொஞ்சம் ஸாத்விக குணம் பொருந்தினவனான படியாலும், தனக்கு அபராதம் செய்பவர்களிடத்திலும் அவனுக்குப் பஶ்சாத்தாப முண்டாவது ஸ்வபாவமாக இருந்தது. ஆனாலும், யவக்ரீதன் விஷயத்தில் ப்ரதீகாரம் ஒன்றும் தென்படாததால் அவனும் காலக்ரமேண ஒருவாறு ஸ்மாதானத்தை அடைந்துவிட்டான்.

இவ்விதமாகக் காலம் செல்லுகையில், ஒரு ஸமயத்தில், ப்ருஹத்யும்நன் என்னும் ஒரு ராஜா, யாகமொன்று செய்ய வேணுமென்று எண்ணங் கொண்டவனாய், தனது குருவான ரைப்யரிடம் வந்து ஸஹாயார்த்தம் யாசிக்க, ரைப்யர் தாமே போவதற்கு அஶக்தராய், தமது புத்ரர்களை அந்த யாகத்தைச் செய்விக்கும்படி ஆஜ்ஞாபித்தார். புத்ரர்கள் இருவரும் அந்த ஆஜ்ஞையை அங்கீகரித்தவர்களாய், பிதாவையும் அவருடைய ஸ்நுஷையையும் க்ருஹத்தில் நிறுத்திவிட்டு, ராஜா இருக்கும் இடம் போய் யாகத்தை உபக்ரமித்தார்கள். பஹு கால ஸாத்யமான அந்த க்ரது ப்ராஹ்மணோத்தமர்களால் அநுக்ரஹிக்கப்பட்டதாக எவ்விதமான குறைவுமின்றிக்கே நடைபெற்று வந்தது. க்ரது பூர்ணமாகாதிருக்கையில் ஒரு ஸமயத்தில், பராவஸு இரண்டொரு திநம் தனது க்ருஹம்போய்வர விரும்பினவனாய், அர்வாவஸுவை யாகத்தைப் பார்த்துவரும்படி சொல்லிவிட்டு ராஜாவின் அநுமதியின்பேரில் க்ருஹம்வந்து சேர்ந்தான். இரவில் தான் தனது க்ருஹத்துக்கு வெளியில் வந்த பொழுது, தூரத்தில் க்ருஷ்ணாஜிநத்



தைப் போர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த தனது பிதாவை ஏதோ ஒரும்ருகமென்று ஶங்கித்து ஒரு பாணத்தை ப்ரயோகிக்கவே, அந்தப் பாணத்தால் அடிக்கப் பட்டவராய் ரைப்யர் ம்ருதியை அடைந்தார். அஜ்ஞாநக்ருதமான இந்தப் பாபத்திற்கு ப்ராயஶ்சித்தம் அநுஷ்டிக்கவேண்டும் என்கிற எண்ணம் ஒரு பக்கத்திலும், க்ரதுவைப் பூர்ணம் செய்து கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் மற்றொருபக்கத்திலும் பராவஸுவைப் பீடிக்க, அவன் யாகஶாலைக்கு வந்து நடந்த விஷயங்களெல்லாவற்றையும் அர்வாவஸுவினிடம் சொல்லி, 'ஹே அர்வாவஸோ! க்ரதுவை ஸமாப்தி செய்து கொடுக்கவேண்டியது முக்யமாக இருப்பது போலவே, நான் செய்த ப்ரஹ்மஹத்யைக்கு நிஷ்க்ருதி செய்ய வேண்டியதும் முக்யமாகவே இருக்கிறது. நீ தனிமையாக க்ரதுவை நிர்வஹிக்க அஶக்தனானதால், எனக்காக நீ ப்ரஹ்மஹத்யா ப்ராயஶ்சித்தத்தை அநுஷ்டித்துவா; நான் க்ரதுவை நிர்வஹித்துக் கொள்ளுகிறேன்' என்று அர்வாவஸுவினிடம் ஒரு வ்யவஸ்தையைச் செய்துகொண்டு, தான் க்ரது கார்யத்தில் ப்ரவ்ருத்தித்தான். ஸாத்விகனான அர்வாவஸு, ஜ்யேஷ்ட ப்ராதாவின் ஆஜ்ஞையை மீறி நடப்பது பிசகு என்று எண்ணி ப்ராயஶ்சித்தத்தின் அநுஷ்டாநத்தைத் தான் ஏற்றுக்கொண்டு வெளியில் வந்து ஶாஸ்த்ரோக்த வ்ரதாதிகளால் பாபத்திற்கு நிஷ்க்ருதியைச் சரிவரச் செய்துவிட்டு, பிறகு யஜ்ஞவாடத்தை நோக்கித் திரும்பிப்போனான். யஜ்ஞ வாடத்தின் வாசலில் இருந்த ராஜபடர்கள் ஸ்வரூப வ்யத்யாஸத்தால் அவனை ப்ரஹ்மஹத்யை செய்தவன் என்று எண்ணி யஜ்ஞஶாலைக்குள் ப்ரவேஶிக்கவொட்டாமல் தடுத்தார்கள். அவன், 'ப்ரஹ்ம ஹத்யை செய்தவன் நானல்ல' என்று பஹுப்ரகாரமாகச் சொல்லியும் ராஜா அநுமதி கொடுக்காததனாலும், தனது ஜ்யேஷ்ட ப்ராதாவும் தன்னை யஜ்ஞஶாலைக்குள் அழைப்பித்துக்கொள்ள யாதொரு ப்ரயத்நமும் செய்யாமல் ஸ்வகார்ய பரனாக இருந்துவிட்டபடியாலும், அதி துக்கிதனாய், தேவதைகளைக் குறித்துத் தபஸ் செய்ய உபக்ரமித்தான். அவனுடைய ஸாத்விகத் தன்மையால் மிக்க ப்ரீதியடைந்த தேவதைகள் உடனே ப்ரத்யக்ஷமாக ப்ரஸந்நர்களாகி, 'அர்வாவஸோ!

வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்' என்று நியமிக்கவே, அர்வாவஸு, தன்னுடைய ஸாத்விக குணத்துக்குத் தக்கபடி, ரைப்யர் பாரத்வாஜர் யவக்ரீதன் இவர்கள் மறுபடியும் ஜீவிக்கவேண்டுமென்றும், தனது ப்ராதாவாகிற பராவஸு ப்ரஹ்மஹத்யா தோஷத்திலிருந்து விடுபடவேண்டுமென்றும் வரன்களைக் கேட்டுக்கொண்டான். அப்படியே தேவதைகள் அநுக்ரஹிக்க, ம்ருதர்களான அந்த மூன்று பெயரும் தூங்கி யெழுந்திருப்பவர்கள்போல எழுந்து வந்தார்கள். பாரத்வாஜரும் ரைப்யரும் ஒருவரை ஒருவர் முன்போலவே பார்த்துக்கொள்ள மிக்க ஆநந்தமடைந்தவர்களாய், ஏற்கெனவே பரஸ்பரம் உண்டாகியிருந்த த்வேஷத்தை மறந்து, முன்னிருந்ததைவிட மிகப் பல மடங்கு அதிகமான மைத்ரத்துடன் ஸுகமாக வெகுகாலம் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய புத்ரர்களும், தமக்குள் இருந்த அஸூயை த்ருப்தி முதலிய தோஷங்களை உதறிவிட்டு, ஒரே மாதாவுக்கு ஜநித்த ப்ரஜைகள் போல மிகுந்த ஸௌப்ராத்ரத்துடன் பரஸ்பரம் வர்த்தித்துக்கொண்டு ஆஶ்ரம தர்மங்களுக்கு லோபமின்றிக்கே ஸுசிரம் வாழ்ந்து, தங்களுடைய பிதாக்களின் காலமான பிறகு தாங்களும் பரலோகத்தை அடைந்தார்கள்.

ஒரு பௌராணிகன்.

---

## ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபை.

ஷை ஸபையின் கார்யதர்ஶியாகிற சித்தூர் ஸ்ரீ. உப. வி. ராஜகோபாலாசார்யர், ஷை ஸபைக்குப் பின்வரும் ஆஸ்திகர்களாற் செய்யப்பட்ட த்ரவ்ய ஸஹாயத்தை அப்யுபகமம் செய்கிறார் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ. உப. | டி. கோதண்டராமய்யங்கார் | ரூபா. | 100—0—0 |
| 2. | „ | பாலூர் ஶேஷாத்ரியாசார்யர் | „ | 50—0—0 |
| 3. | „ | திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர் | „ | 35—0—0 |
| 4. | „ | டி. ராஜகோபாலாசார்யர் | „ | 25—0—0 |
| 5. | „ | டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர் | „ | 15—0—0 |

ஸ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுக: ப்ரபஞ்ச:
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட ச கஸ்ய நாபே: ।
க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய:
க: கேந வைஷ பரவாநிதி ஶக்யஶங்க: ॥ 14.

---

14. கீழ் இரண்டு ஶ்லோகங்களால், நாராயணனைத் தவிர்த்து மற்றை எல்லாச் சேதநர்களும் அநீஶ்வரர்கள் கர்மவஶ்யர்களென்றும், நாராயணனே ஸர்வேஶ்வரன் அகர்மவஶ்யனென்றும் சொல்லப்பட்டது. அவைகளுள் முதல் ஶ்லோகத்தில் ப்ரத்யக்ஷ ஶ்ருதிகளும் அவ்விடத்திலுள்ள லிங்கங்களும் பகவத் பரத்வத்தை ஸூசிப்பிக்கின்றனவென்றும், இரண்டாவதில் இதிஹாஸ புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கும் வ்ருத்தாந்தங்கள் நாராயணனுக்கே பரத்வத்தைச் சொல்லுகின்றனவென்றும் நாம் தெரிந்துகொண்டோம். இந்த ஶ்லோகத்திலும் அந்த நாராயணனுடைய பரத்வமே சொல்லப்படுகின்றது; ஆனால், அந்தப் பரத்வம், ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார ரூபமாகிற ஆஶ்சர்ய சேஷ்டிதங்களைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது என்பதுதான் வ்யத்யாஸம்.

(ஏஷ) ஹரவிரிஞ்சிமுக: ப்ரபஞ்ச: (த்வதந்யஸ்ய) கஸ்யோதரே (திஷ்டதி)? இதம் (த்வதந்ய:) கோ ரக்ஷதி? (த்வதந்யஸ்ய) கஸ்ய நாபேரயமஜநிஷ்ட? த்வதந்ய: க: இதம் க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி? த்வதந்யேந கேந வா

வஊஷ வாவாநிதி ஶக்ஶங்கஃ ? - [இப்பொழுது ப்ரஹ்ம ருத்ராதி ரூபமாக நமக்குத் தென்படும் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரளயதஶையில் உம்மைத் தவிர்த்து மற்றை எவனுடைய உதரத்தில் நிற்கின்றது? உம்மைத்தவிர மற்றை எவன் அதை ரக்ஷிக்கிறான்? உம்மைத்தவிர மற்றை எவனுடைய நாபியிலிருந்து அதற்கு உத்பத்தி உண்டாகிறது? உம்மைத் தவிர மற்றை எவன் ஒரு ஸமயத்தில் அதன் உள்ளிலும் வெளியிலுமாக ஆக்ரமித்து நின்றுகொண்டும், மற்றொரு ஸமயத்தில் அதை க்ரஸித்துக் கொண்டும், மற்றுமொரு காலத்தில் அதை வெளிப்படுத்திக் கொண்டும் இருக்கிறான்? உம்மைத்தவிர மற்றை எவனுக்கு அது பாதந்த்ரமாக இருக்கின்றது என்று ஶங்கிக்கக் கூடும்?]

ஹாவிரிஂவஉுவஷவஂவஃ - ப்ரஹ்ம ருத்ராதிகள் அடங்கிய இந்த ப்ரபஞ்சம். ப்ரஹ்ம ருத்ரர்களை அவரவருடைய பக்தர்கள் பரமமான தைவமாகக் கல்பித்துக்கொண்டு ஆராதித்து வருவதை நாம் பார்க்கிறோம். அப்படி அவர்களுக்குப் பரத்வத்தைக் கல்பிப்பது அஜ்ஞாந கார்யமென்பது, ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம். அதை த்ருடமாகச் சொல்லும்பொருட்டே 'ஹாவிரிஂவ' என்றும், 'ஷஜாவஶுவதீ' என்றும் விஶேஷித்து ப்ரஹ்ம ருத்ரர்களை அவர் உபாதாநம் செய்வது.

உஊரெ - வயிற்றில். ப்ராக்ருத ப்ரளயகாலத்தில் இந்த ப்ரபஞ்சம் முழுவதையும் தனது உதரத்தில் வைத்துப் பகவாந் ஸம்ரக்ஷிக்கிறான் என்பது ப்ரஸித்தம். 'உதரம்' என்பது - ஔபசாரிகமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது; 'தன்னுள்' என்றே அதற்கு அர்த்தம். அதாவது - ப்ரளய காலத்தில் ஸகல ப்ரபஞ்சமும் பகவானிடத்தில் லயிக்கின்றது என்பதுதான் விவக்ஷிதம். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில்

"ஷக்ருதி யஹா உயாऽऽவ்யாகா வ்க்தாவ்க்த ஸ்வரூபிணீ। வுருஷஸ்வாவ்யுஹாவெதஸ்மிஂ வெலெதவுஉாதுநி॥"

[வ்யக்தமும் அவ்யக்தமுமான ஸ்வரூபத்தையுடைய ப்ரக்ருதியும்,



ருஷனென்று சொல்லப்படும் ஜீவனும் இவையிரண்டும் கடைசியாகப் பரமாத்மாவிடம் லயிக்கின்றன] என்று சொல்லியிருப்பது இதற்கு ப்ரமாணம். "நாராயணே ஷலீயதெ" என்று ஶ்ருதியிற் சொல்லியிருப்பதனால், இந்த லயம் நாராயணனிடத்திலேயே ஏற்படுகின்றது என்று தாத்பர்யம். "நின்னுளே பிறந்து நிற்பவுந் திரிபவும், நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே" என்றார் திருமழிசைப்பிரானும்.

ஜஉஂ கொ ரக்ஷதி - இதை யார் ரக்ஷிக்கிறான்? ஸ்திதி காலத்தில் ப்ரபஞ்சத்தை ரக்ஷிப்பதும் நாராயணனே;

"ஸ்திதௌ வாதி ஸநாதநஃ"

என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்,

"ரக்ஷாயூஂ ஸவலோகாநாஂ விஷ்ணுஃ உவெஜஜ்ஞிவாந்"

என்று உத்தர ஸ்ரீ ராமாயணத்திலும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

'ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம்' என்று ஒரு க்ரமம் ஏற்பட்டிருக்கையிலும், இவ்விடத்தில் ஸ்ருஷ்டியைப்பற்றிப் பேசுவதற்கு முன்னமே ஸ்திதியைப் பற்றிப் பேசுவதற்குக் காரணம் ஸ்ருஷ்ட்யபேக்ஷயா ஸ்திதிக்கு ப்ராதாந்யமொன்று இருக்கின்றது என்பதுதான் என்று ஸ்ரீ நிகமாந்தார்யருடைய பாஷ்யம்.

கஸ்ய நாஹெஜநிஷ் - இந்த ப்ரபஞ்சம் யாருடைய நாபியிலிருந்து உண்டாயிற்று? இதில் ஸ்ருஷ்டியைப் பற்றிச் சொல்லுகிறார்.

"யஸாவிவஷாஉ ஹவநஹாதா
ஷஜாவதி விஶ்வஸ்ய விஶ்வ ரூவஃ"

"நாராயணா உஹாயொ ஶாஹாஶுஹ விவஜிகஃ।
ஸஸஜ நாஹிஜஂ வஜ்ஂ ஹஹாண உதிதஷஹஂ॥"

இத்யாதியான கணக்கற்ற வாக்யங்கள் நாராயணனுடைய நாபீ கமலத்திலிருந்தே ப்ரஹ்மா உண்டானான் என்று சொல்லுகின்றன,

இவ்விடத்தில் 'நாபி' என்னும் பதம் மநஸ் முதலிய மற்றவைகளுக்கும் உபலக்ஷணம். ஏனென்றால், சில விடங்களில்

"க்ஷெ2த்ரா ெவெ ஶா2நஸம் ஜஜ்ஞெ"

என்று நாபியைத் தவிர்த்து மற்ற இடத்திலிருந்தும் ப்ரஹ்மாவின் உத்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

க்ராந்த்வா - ஆக்ரமித்து. அந்தர்யாமி ப்ராஹ்மணத்திற் சொல்லியிருக்கிறபடி ஸர்வ தத்வங்களையும் ஆக்ரமித்து அதிஷ்டாதாவாக நிற்குந் தன்மையை இந்தப் பதம் குறிக்கின்றது. அப்படி நிற்பவனும் நாராயணனே என்று,

"ஸஷ ஸவபூ ஸூ-ெதாஷோரந்தா ஸஹந வாஷா
ஜிவெஹா ஷெவ ஸகொ நாராயணஃ"

என்னும் வாக்யத்தால் அந்த ப்ராஹ்மணம் சொல்லுகின்றது. அன்றிக்கே, இந்தப் பதம் பாத்வ ஸூசகமான த்ரிவிக்ரம வ்யாபாரத்தைக் குறிக்கின்றது என்றும் சொல்லக்கூடும்.

நிமீய பூநருந்மிஷதி - நிகரணம் செய்து மறுபடியும் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறான்.

"த்ருஜஷோஹஸம்வ ஶ்வாஸொ ஷ்வாஸஷ்யெந வ"

என்று ஸ்ரீ ஸாத்வதத்திற் சொல்லியிருக்கிறபடி, ஈச்வரன் ப்ரபஞ்சத்தை க்ரஸிப்பதும் மறுபடியும் வெளிப்படுத்துவதும், ஒரு மநுஷ்யன் ச்வாஸம் விடுவது போல, திரும்பத்திரும்ப ஸம்பவிக்கின்றன என்று தாத்பர்யம்.

கெந வா ஸஷ பரவாநிதி ஶக்ஷுாஂகஃ - 'பரஃ'- அதிகன், உத்க்ருஷ்டன். ஈச்வரன் எல்லா ப்ரபஞ்சத்திற்கும் ஆதாரமாகவும் நியந்தாவாகவும் சேஷியாகவும் இருக்கிறபடியால், அவன்தான் 'பர' சப்தத்தால் சொல்லப்படுகிறான். 'பரவாந்'- அப்படிப்பட்ட அதிகனை உடைத்தாயிருக்கிற. 'கெந வா ஸஷ பரவாந்'- இந்த ப்ரபஞ்சம் யாரால் அப்படிப்பட்ட அதிகனை உடைத்தா யிருப்பதாக ஆகிறது? 'உம்மாலேதான்' என்று



க்ஷாஂ ஶீலரூவ சரிதைஃ பரமப்ரக்ருஷ்ட
ஸத்வெந ஸாத்விகதயா ப்ரபலைஶ்ச ஶாஸ்த்ரைஃ।
ப்ரக்யாதைதவபரமார்த்தவிதாஂ மதைஶ்ச
நைவாஸுரப்ரக்ருதயஃ ப்ரபவந்தி போத்துஂ ॥ 15.

தாத்பர்யம். அதாவது - ஸர்வஸ்மாத் பரன் நாராயணன், நாராயணனுக்கே பராதீநம் ப்ரபஞ்சம் முழுவதும் என்று சொன்னதாயிற்று. முதல் மூன்று பாதங்களிற் சொல்லியிருக்கிறபடி, நாராயணன் ஸ்ருஷ்டிக்கிறவனாகவும் ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கப்படுகிறதாகவும், அவன் ஸம்ஹரிக்கிறவனாகவும் இது ஸம்ஹரிக்கப்படுகிறதாகவும், அவன் அதிஷ்டாதாவாகவும் இது அதிஷ்டிக்கப்படுகிறதாகவும், இது ஸதா அவனால் க்ரஸிக்கப்பட்டு விடப்படுகிறதாகவும், இப்படிப்பட்ட ஸம்பந்தம் நாராயணனுக்கும் ப்ரபஞ்சத்திற்கும் இருந்தால், நாராயணனைப் பரனென்றும் அவனுக்குப் பராதீநம் இந்த ப்ரபஞ்சம் என்றும் சொல்வதற்கு ஆக்ஷேபமென்ன? என்று நாலாவது பாதத்தால் நிகமநம் செய்யப்பட்டிருக்கிறது.

15. 'ஆனால், இந்தப் பரத்வம் நாராயணனிடத்தில் இருப்பதாக, சாஸ்த்ரமறிந்த எல்லாரும் ஒத்துக்கொள்ளவில்லையே! ச்ருதசாஸ்த்ரர்களில் சிலர், வேறு தேவதைகளுக்குப் பாரம்யத்தைச் சொல்லுகிறார்களே! சிலர் ஈச்வரனே இல்லையென்றும் சொல்லுகிறார்களே! அது ஏன்?' என்று கேட்டால், 'நாராயணனுக்குப் பரத்வத்தைச் சொல்லும் ப்ரமாணங்கள் மிகப்பலவாக இருக்கையிலும், அவைகளை ஸரியாக அறியாமல் அவனுக்குப் பரத்வத்தை ஒப்பமாட்டோம் என்று சொல்பவர்கள், தாமஸ ப்ரக்ருதியை உடையவர்கள்; அவர்களுக்குக் கணக்கற்ற ந்யாயங்களை எடுத்துக்காட்டினாலும் தத்வாத்யவஸாயம் உண்டாகாது' என்பது ஸமாதாநம் என்று இந்த ச்லோகத்தாற் சொல்லப்படுகிறது.

ஶீலரூவ சரிதைஃ, பரமப்ரக்ருஷ்டஸத்வெந, ஸாத்விகதயா ப்ரபலைஃ ஶாஸ்த்ரைஃ, ப்ரக்யாதைவபரமார்த்தவிதாஂ மதைஶ்ச க்ஷாஂ போத்துஂ ஆஸுரப்ரக்ருதயொ நைவ ப்ரபவந்தி! - [உம்முடைய உதாரமான சீலம் ரூபம் சரிதம் இவைக

ளாலும், அத்யந்தம் உத்க்ருஷ்டமாக இருக்கும் ஸத்வகுணத்தாலும், ஸாத்விகங்களும் அந்தக்காரணத்தினால் தத்வத்தை உள்ளபடி உணர்த்துவதில் ப்ரபலங்களுமாயுள்ள இதிஹாஸ புராணாதிகளான ஶாஸ்த்ரங்களாலும், ப்ரஸித்தர்களும் தைவத்தின் யாதார்த்யத்தை ஸரியாக அறிந்தவர்களுமான மஹான்களுடைய மதங்களாலும் உம்மை ஸர்வஸ்மாத் பரனாக அறிவதற்குத் தாமஸ ப்ரக்ருதியை உடையவர்கள் ஶக்தராகார்.]

ஶீலாதுவ வஶிதெதஃ - தான், அதிமாத்ரம் உயர்ந்தவனாக இருக்கையிலும், தனக்கு மிகத் தாழ்ந்தவர்களாக இருக்குமவர்களுடன் எவ்வித வ்யத்யாஸ பாவனையுமின்றிக்கே ஒருவன் ஸம்ஶ்லேஷிப்பது அவனது 'ஶீலம்' என்று சொல்லப்படும். கேவலம் ஒருவேடஸ்த்ரீயான ஶபரியாற் கொடுக்கப்பட்ட பல மூலாதிகளை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் உகப்போடு திருவுள்ளம் பற்றினதும், அத்யந்தம் நிஹீநர்களான கோபர்களுடன் தானும் ஒரு கோபன்போல ஸ்ரீ கண்ணபிரான் விஹரித்ததும் அவர்களுடைய ஸௌஶீல்யத்தை நன்றாக விளக்குகின்றன. "ஆதித்யவணம் தமஸஃபராஸ்தாத்" என்று நாராயணனுக்கே அப்ராக்ருதமும் திவ்யமுமான ரூபம் ஶ்ருதி ப்ரஸித்தம். சித்தும் அசித்தும் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதையும் அந்தர்யாமியாக வ்யாபித்து எல்லாவற்றையும் ஆக்ரமித்து நிற்கிறது முதலிய திவ்ய சரிதமும் அந்த நாராயணனுடையதே என்பதும் அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளில் ஸுப்ரஸித்தம். இப்படி அஸாதாரணமும் அத்யத்புதமுமான ஶீலம், ரூபம், சரிதம் நாராயணனுக்கே சொல்லப்படுகிறபடியால், அவனே பரனென்பதற்கு ஶங்கையென்ன? என்று தாத்பர்யம்.

வரஉஹ்ருஷ்ட ஸத்வேந - அப்ராக்ருத ஶுத்த ஸத்வம் அத்யந்தம் உத்க்ருஷ்டமான ஸத்வமென்று சொல்லப்படுகின்றது. அது ஸ்ரீமந் நாராயணனிடத்திலேயே ஸ்வாதீநமாக இருக்கின்றது. நித்ய முக்தர்களிடமும் அது இருந்தாலும், அவ்விடங்களில் அது பகவத்கடாக்ஷாதீநமே தவிர ஸ்வாதீநமன்று.



இப்படி ஸ்வாதீநமாக இருக்கும் தன்மையையும் இவ்விடத்திலிருக்கும் 'வரஉஹ்ருஷ்ட' என்னும் பதம் ஸூசிப்பிக்கிறது.

ஸாத்விகதயா ப்ரபலைஃ ஶாஸ்த்ரைஃ - 'ஶாஸ்த்ரம்' என்னும் பதம் இதிஹாஸ புராணாதிகளைக் காண்பிக்கின்றது. அவைகளுள் சில, வேதத்திற்கு அவிருத்தங்களாகவும் ஸத்வத்தையே மூலமாக உடையனவாகவும் இருக்கின்றன; அவைகள் ஸாத்விகங்களென்று சொல்லப்படும். அவைகளுக்குத் தான் தத்வ போதந விஷயத்தில் ப்ராபல்யம். அம்மாதிரியான ஶாஸ்த்ரங்களெல்லாம் நாராயண பரத்வத்தையே சொல்லுகின்றன.

ப்ரக்யாததைவபரமார்த்தவிதாம் மதைஶ்ச - ப்ரக்யாதாஶ்ச தே தைவபரமார்த்தவிதஶ்ச - ப்ரஸித்தர்களான தைவத்தின் உண்மையை அறிந்தவர்கள். அதாவது - ஶ்ருதியின் அர்த்தத்தை ஸரியாக அறிந்து அதை யதாவஸ்திதமாகச் சொல்லும் ஶக்தியுள்ள ஆப்ததமர்கள் இவ்விடத்தில் 'ப்ரக்யாதர்கள்' என்னும் பதத்தால் சொல்லப்படுகிறார்கள். அவர்களுக்கில்லாமல் மற்றை எவருக்கும் தேவதா பாரமார்த்யஜ்ஞாநம் ஸம்பவிக்க ஹேதுவில்லையாதலால், அவர்களுடைய வார்த்தையே நம்பத் தகுந்தது.

"அயம் ஸ தேவோ நாமைஷ ஶோகே ஜஜ்ஞே விஷ்ணுஸநாதநஃ"

"அபிஷம் தேஜிரே விஷ்ணும்"

"வ்யக்தமேஷ மஹாயோகீ பரமாத்மா ஸநாதநஃ"

இத்யாதியான ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி வாக்யமும்,

"க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபி சாவ்யயஃ"

இத்யாதியான ஸ்ரீ வ்யாஸ வாக்யமும், இன்னும் இவைபோன்ற கணக்கற்ற வாக்யாந்தரங்களும் நாராயணனையே ஸர்வாதிகனாகச் சொல்லுகின்றன.

த்வௌ பூதஸர்கௌ - பூத ஸ்ருஷ்டி, தைவம் ஆஸுரம் என்று இருவகைப்பட்டது என்றும், அவைகளுள் தைவமென்

பது விஷ்ணுபக்தியுள்ளது, ஆஸுரமென்பது விஷ்ணு பக்தியில்லாதது என்றும் ஸ்ரீ ஶௌநக மஹர்ஷி

"𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍋 𑌭𑍂𑌤𑌸𑌰𑍍𑌗𑍋𑌽𑌯𑌂 𑌦𑍈𑌵 𑌆𑌸𑍁𑌰 𑌏𑌵 𑌚 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑍋 𑌦𑍈𑌵𑍋 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌸𑍁𑌰𑌃 ॥"

என்னும் வாக்யத்தால் சொல்லுகிறார். ஆகையால், விஷ்ணுபக்தி இல்லாமல் இருக்கும் ஜநங்கள் தான் இந்தப் பதத்தால் குறிக்கப்படுகிறார்கள்.

𑌨𑍈𑌵 𑌶𑌕𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 - அவர்கள் ஶக்தராகிறார்களில்லை. இந்த அஶக்தி அந்தத் தாமஸ ப்ரக்ருதியின் ப்ரபாவம்; அதற்குப் பரவஶர்களான இவர்கள் என்ன செய்யக்கூடும்? என்று தாத்பர்யம். '𑌏𑌵' என்னும் பதத்தால், 'யார் என்ன போதித்தாலும் அவர்கள் புத்தியில் அது தோன்றாது' என்பது சொல்லப்படுகின்றது.

"𑌨 𑌮𑌾𑌯𑌾 𑌮𑌾𑌯𑌿𑌨𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿 𑌵𑌕𑍍𑌤𑍃 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍 𑌮𑌾𑌯𑌤𑌿 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌯𑌾 ॥ !"

என்னும் ஶ்லோகத்தால், ஜந்மாந்தரங்களில் பாவிதமான புத்தியை ஜந்துக்கள் அடைகின்றனவென்றும், அவர்கள் விஷயத்தில் உபதேஶம் நிரர்த்தகமென்றும் ஸ்ரீ பாரதம் சொல்லுகிறபடி, எவ்வளவு படித்திருந்தாலும் தாமஸப்ரக்ருதிகளுக்குத் தத்வாத்யவஸாயம் ஸம்பந்நமாகாது என்று இங்கே சொன்னதாயிற்று. ஆகையால், நாராயணனுடைய பாரம்யத்தை அறியாத தாமஸப்ரக்ருதியான சில ஶ்ருதஶாஸ்த்ரர்கள் இருந்தால், அது ப்ரமாணஸித்தமான அர்த்தத்தைப் பாதிக்காது என்பது ஸித்தம்.

எஸ். வாஸுதேவன்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஹிந்து மத ஸம்பந்தமான தர்ம சொத்துக்கள்.

[நமது தேஶத்தில் ஏராளமான சொத்துக்கள் தர்மத்திற்காக விடப்பட்டிருக்கின்றன. அவைகளுடைய பரிபாலநம் எல்லாருக்கும் த்ருப்தியைக் கொடுக்கும்படி நடந்துவரவில்லையென்பது ப்ரஸித்தமான விஷயம். தர்மத்துக்கு உபயோகப்படுவதை விட்டுச் சில அத்ருஷ்டஶாலிகளுடைய சொந்த அதர்மச் செலவுக்கு அவை உபயோகப்பட்டு வருகின்றன. இந்த அநீதியைப் பற்றி 'இந்தியன் எம்பயர்' என்னும் பத்ரிகையில் ப்ரசுரமாகியிருக்கும் ஒரு உபந்யாஸத்தின் ஸங்க்ரஹத்தை இவ்விடத்தில் எழுதுகிறோம்.]

"தர்ம சொத்தின் பரிபாலநஸம்பந்தமான விஷயங்கள் வரவர துஃஸ்திதியை அடைந்து வருகின்றன. கவர்ன்மென்டார் அவைகளுடைய பரிஷ்காரத்தைப் பற்றிய சட்டங்களை ஏற்படுத்தும் வரையில் இந்த துஃஸ்திதி மேல்மேல் அபிவ்ருத்தமாகிக்கொண்டிருக்கும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. தர்ம சொத்துக்களின் பரிபாலநத்தை, மனம்போன போக்கெல்லாம் நடக்கும் மடாதிபதிகளிடம் நிராபாதமாக விட்டுவிடுவதன் அஸாதுத்வத்தைப்பற்றி வ்யபதிஷ்டர்களான பெரியோர்களெல்லாரும் மிகவும் ஶோகித்து அதைச் சீர்திருத்த வேண்டுவது அவஶ்யமென்று நிஸ்ஸந்தேஹமாகச் சொல்லியிருக்கிறார்கள். தாம் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கும் சொத்தைத் தைவபக்தியினாலும் பாபபயத்தினாலும் தர்மத்திற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று எண்ணி ஶ்ரத்தையுடன் ஸாதுக்கள் கொடுக்கும் தநத்தை, விஷய ப்ரவணர்களாயுள்ள மடாதிபதிகள் தங்களுடைய சொந்த த்ருப்திக்கு உபயோகப்படுத்துகிறார்களென்பது அஸஹ்யமான அபந்யாயம். உபஶாந்தர்களாகவும் விஷயஸுகங்களிலிருந்து விரதர்களாகவும், ஶத்ரு மித்ர உதாஸீந பாவனையின்றிக்கே காயக்லேஶாதிகளைச்செய்து பகவத் பக்தியைச் செய்துகொண்டு ஜகத்தின் ஆத்மோஜ்ஜீவநத்திற்குத் தம்மால் இயன்றமட்டும் நிஷ்பக்ஷபாதமாக உபகரித்துக்கொண்டு வர்த்தித்து வரவேண்டியதுபோக, ஏழைகளுடைய சொத்தைத் தாம் ஆத்ருப்தி பக்ஷிக்கிறதும் தமக்கு இந்த்ரிய ஸுகத்தை ஸம்பாதித்துக்கொடுக்கும் பரிஜநங்களுக்கு அதை விநியோகிக்கிறதும், ப்ராக்ருத ஜநங்களைவிடப் பல மடங்கு அதிகமாகத் தாம் காமக்ரோதாதிகளுக்கு இரையாகி அதிமாத்ரம் ஜுகுப்ஸிதமான மார்க்கத்தில் ஸஞ்சரிக்கிறதும் இந்த மடாதிபதிகளுடைய தர்மமாகிவிட்டது. இதற்கு நிதர்ஶநமாக, 'தாரகேஶ்வரம்' என்னும் மடத்துக்கு அதிபதியாக இருந்து இப்பொழுது காலம் சென்ற மாதவ கிரி என்பவருடைய சரித்ரத்தைப் பார்க்கலாம்.

இந்தத் 'தாரகேஶ்வரம்' என்னும் ஸ்தலம் பங்காள தேஶத்திலுள்ள ப்ரஸித்த ஸ்தலங்களில் ஒன்று. அதன் மடாதிபதி, அந்த மடத்தின் தநத்

தைக்கொண்டு தானே ராஜபோகங்களை அநுபவித்தும், ஸாத்விகளான பரஸ்த்ரீகளை ப்ரதாரணம் செய்தும், இன்னும் இம்மாதிரியான மற்றைத் துர்மார்க்கத்தில் ப்ரவ்ருத்தித்தும், தைவத்தாலும் மநுஷ்யர்களாலும் ஸஹிக்கக் கூடாத அளவு ஜுகுப்ஸிதமான மார்க்கத்தில் நடந்து வந்தான். அவன் தனது துஷ்க்ருத்யத்தின் பலமாகக் காராக்ருஹத்திற்குப் போகும்படி ஸம்பவித்தது. அதிலிருந்து நிவ்ருத்தி கிடைத்தபிறகு, கொஞ்சமேனும் லஜ்ஜையின்றிக்கே தான் பூர்வமிருந்த மடத்திற்கே, அதிபதியாக வந்து சேர்ந்தான். ஹிந்து மதத்தை அவலம்பித்திருக்கும் அவ்விடத்திய மஹாஜநங்களுக்கு அவனை வரவொட்டாமல் தடுக்க ஶக்தியற்றுப் போய்விட்டது. அந்தப் பாபியும், தான் லஜ்ஜைப்படும்படியான கார்யம் ஒன்றும் நடக்கவில்லைபோல, தனக்கு மரணம் நேரும்வரையில் அந்த ஆஸ்தாநத்தை அநுபவித்துவிட்டுப் பிறகு லோகாந்தரம் அடைந்தான். அவிவேகிகளும் மூடபக்தியுள்ளவர்களுமான அநேக ஜநங்கள் அந்தப் பாபிஷ்டனை, அவன் மரணம் அடையும் வரையில் ஆசார்யனாகக் கொண்டாடிக்கொண்டு வந்தார்கள்.

இவ்வளவு துர்மார்க்கத்திற்கும் அந்த மடத்தின் சொத்துதானே அவனுக்கு ப்ரயோஜகமாயிற்று. ஸேஷன்ஸ் கோர்ட்டில் அவன் கைதியாக நிற்கும் காலத்தில் வ்யாஜ்ய விஷயமாகச் செலவிட்ட தநமெல்லாம் அந்த மடத்தின் தநமே. ஆராத்யமான விக்ரஹத்தின் ஆபரணங்களெல்லாம் விற்கப்பட்டன; ஸந்நிதிக்குச் சொந்தமான ஜங்கம சொத்தெல்லாம் அடமானமாக வைக்கப்பட்டன. இந்தத் தூர்த்தனை ராஜ ஶிக்ஷையிலிருந்து மீட்கும் பொருட்டு, கணக்கற்ற ஏழைகளுடையவும் ஸாதுக்களுடையவுமான தநம் விநியோகிக்கப்பட்டது. அவன் ராஜஶிக்ஷையை அடைந்து, குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஜெயிலில் வாஸம்செய்து, அது நிவ்ருத்தமான பிறகு மிகுந்த தார்ஷ்ட்யத்துடன் அந்த ஆஸ்தாநத்தைத் தேடி அவன் திரும்பவும் தர்ம சொத்தைக்கொண்டு துஷ்டவ்ருத்தியை வர்த்திக்க வருகையில், அவனைத் தடுக்க யாராவது ஶக்தராக இருந்தார்களோ? ‘நீ அயோக்யன்; நீ இதற்கு அநர்ஹன்; தர்மசொத்தைக் கொள்ளைகொடுப்பதுபோலச் செலவிட்ட பாபியாச்சுதே நீ!’ என்று யாராவது அவனை தீக்கரித்தார்களோ? தர்ம சொத்து இம்மாதிரியான அக்ரமங்களில் செலவழிவதைப் பார்க்க எவனுக்குத்தான் மனம் தபிக்காது? ‘இவனைப் போன்றவர்கள் செய்வதெல்லாம் ந்யாயமே’ என்று அவைகளை அங்கீகரிக்குமளவு ஹிந்து மஹாஜநங்கள் அஶக்தர்களாகி விட்டார்களோ?

இந்த ஸ்திதி கேவலம் தாரகேஶ்வரத்தில் மாத்ரமில்லை; தர்ம சொத்துக்கள் சேரும் இடங்களுள் அநேக ஸ்தலங்களி லெல்லாம தென்படுகின்றது. திருப்பதி, வைத்யநாதம் முதலிய பெருத்த தேவஸ்தாநங்களிலும் இந்த அக்ரமம் நடந்து வந்ததாக நாம் படித்திருக்கிறோம். ‘இம்மாதிரியான தர்ம சொத்துக்களின் விநியோகத்தைப் பற்றி விசாரிக்க ஜநங்களுக்கு அதிகாரமில்லை’ என்று சொல்வது கேவலம் விவேகமற்றவர்கள் சொல்லும் வார்த்தை. ‘தர்மத்திற்கு என்றே கொடுக்கப்படும் தநம், தர்மத்தில் விநியோகிக்கப் படுகிறதா? இல்லையா?’ என்று விசாரிக்க அந்தத் தநத்தைக் கொடுக்கும் ஜநங்களுக்கு அதிகாரமில்லாவிட்டால் மற்றை எவருக்கு அது இருக்கக்கூடும்? ‘ஒரு தர்ம சொத்தின் பரிபாலநத்தை வஹிக்குமவன், தனக்குத் தோன்றினபடி யெல்லாம் அந்தச் சொத்தை விநியோகிக்க அதிகாரமுள்ளவன்’ என்று சொல்வது தைவ ஆஜ்ஞைக்கும் ஸாமாந்ய நீதிக்கும் மஹாஜநங்களுடைய அபிப்ராயத்திற்கும் அத்யந்தம் விருத்



தம். மடாதிபதிகள், மற்றைப் பொது சொத்துக்களின் அதிகாரிகள்போல ஜநங்களுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களே. அப்படி ஒப்புவிக்கத் தவறுமலும், தர்மம் ஸரிவர நடக்கும்படியாகவும் பாதுகாக்கவேண்டியது கவர்ன்மென்டார் பர மென்பதில் ஆக்ஷேபமில்லை.”

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## ஸங்க்ரமணம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

வேதாந்ததீபிகையின் ஆவணி மாஸத்திய ஸஞ்சிகையில் ஸ்ரீ. உப சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்ராசார்ய ஸ்வாமி ஸங்க்ரமண புண்யகாலத்தைப் பற்றி அநுக்ரஹித்ததை நாம் வாசித்துப் பார்த்தோம். அங்ஙனமே, ஆனி மாஸத்து ஸஞ்சிகையில் ஸ்ரீ. உப. மஹா மஹோபாத்யாய ரங்காசார்ய ஸ்வாமிகள் அதே விஷயத்தைப்பற்றி அநுக்ரஹித்ததையும் பார்த்த நமக்கு, பாட்ராசார்யர் எழுதியது, ரங்காசார்யஸ்வாமிகள் எழுதியதற்குத் தூஷணபரமென்று தோன்றுகிறது. ஆகவே, தத்வநிர்ணயத்தில் அபிமானமுள்ள மத்யஸ்தர்களான நாம், பாட்ராசார்யர் எழுதிய தூஷணங்கள் ஸமாதாநீகரணங்களோ? என்று சற்று ஆலோசிப்போம்.

அதாவது – “இரவில் க்ரஹணம் முதலிய ஶ்ராத்தத்தைத் தவிர ஸங்க்ரமண நிமித்தமான ஶ்ராத்தத்தை ஶிஷ்டர்கள் அநுஷ்டிக்காததனால் அதைப் பகலிலேயே செய்யவேண்டும்” என்பது பாட்ராசார்யருடைய அபிஸந்தி. இங்கு புண்யகாலாநுஸாரேண ஶ்ராத்தங்களைச் செய்யவேண்டுமென்கிற நியமத்திற்கு ப்ராப்தமான வ்யபிசாரத்திற்குப் பரிஹாரகமாய் ஶிஷ்டாசாரத்தைத் தவிர வேறொன்றும் பாட்ராசார்யருக்குத் தோன்றவில்லை போலும். அங்கு ஶிஷ்டாசாரம் யந்மூலகமென்று பாட்ராசார்யர் அநுக்ரஹிக்காததால், மேற்சொன்ன ந்யாயமும் அத்யந்தம் ஆதரணீயமென்று தோன்றவில்லை.

மேலும், “அது அநுபபந்நம்.”......................................................

‘ஸ்நாநம் தாநம் [illegible]’ என்பவை யெல்லாம் ஶ்ராத்தத்துக்கு முபலக்ஷணமாகையால், ஸங்க்ரமநிமித்தமாகிய ஶ்ராத்தத்தையும் அந்தப் புண்யகாலத்திலேயே செய்வதற்குப் பாதகமில்லை” என்று பாட்ராசார்யரின் வாக்யம். இங்கு, ஶ்ராத்தத்திற்கு உபலக்ஷணமெவ்வாறு உபபந்நமோ? எந்த ஶப்தம் உபலக்ஷகம்? ‘தாநம்’ என்னும் ஶப்தத்தால் ஶ்ராத்தத்தை உபலக்ஷிப்பது அத்யந்தம் க்லிஷ்டகல்பநை.

இன்னும், “சிலர்..................................................ஸ்ரீ விஷ்ணுபுராணம் மூன்றாவது அம்ஶம் பதினைந்தாவது அத்யாயத்தில்.....................ப்ரதிநிதியாகக் கூறப்பட்டிருக்கிறது” என்று காண்கிறோம். அந்த அம்ஶத்தைப் பக்ஷாந்தரமாய்ச் சொல்லியிருப்பதாலும், ஆமத்தைப்போல விஶிஷ்யாப்யஸ்தமா யில்லாததினாலுமே அது ஸ்வரஸமன்று என்று தாத்பர்யமே தவிர பூர்வோக்த வாக்யம் ஸர்வதா தர்ப்பணத்திற்கு ப்ரதிநிதித்வ அபலாபகமென்று சொல்வது ஸமீசீநமன்று என்று நமக்குப் புலப்படுகின்றது

இன்னும், "இதுவும் அநுபபந்நம் ............ அநியத நிமித்தங்களான உபராகத்திலும், ஸங்க்ரமத்திலும், புத்ரஜந்மாவிலும் விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் அந்ந ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியன்று. அவைகளில் ஆமஶ்ராத்தமே முக்யமாய் விதிக்கப்படுகிறது. ஏனென்றால், க்ரஹணத்திலும் புத்ரஜந்மாவிலும் அந்நம் கிடையாததனால், ஆமஶ்ராத்தம் ப்ராப்தமாயிருக்க ...... ................ ......... அப்படியே ஸங்க்ரமண நிமித்தமாக விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தமும் அந்நஶ்ராத்தத்திற்குப் ப்ரதிநிதியன்று என்று ஏற்படுகிறது. .................... ஒரே ஶ்லோகத்திற் சொல்லிய ............... வெவ்வேறாகவே முக்யாம ஶ்ராத்தத்திற்கு நிமித்தம்" என்பது பாட்ராசார்யரின் திருவுள்ளம். க்ரஹணத்திலும், புத்ரஜந்மாவிலும் அந்நம் கிடையாததால், ஆமஶ்ராத்தம் ப்ராப்தமாயிருக்க விஶிஷ்ய சொன்னதற்கு ஸார்த்தக்ய ஸம்பாதநார்த்தமாய்ப் பாட்ராசார்யர் ஆமஶ்ராத்தமே முக்யமாக விஹிதமென்று சொல்வது ஸயுக்திகமென்று நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், ஸாமாந்யமாய் ஶ்ராத்தத்தைச் செய்யவேண்டுமென்று சொன்னால், எந்த த்ரவ்யத்தைக்கொண்டு செய்வது? என்று ஆகாங்க்ஷா பூர்வகமாய் வந்தால் அந்நத்தால்தானென்று (ப்ராம்ஹணனுக்கு அந்நஶ்ராத்தம் நியதமானதுபற்றி) நிர்ணயிப்பது ஸம்பாவிதமானதுபற்றி, அவ்விதம் முக்யதயா ஸம்ப்ராப்தமான அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாகத்தான் ஆமஶ்ராத்தம் விஹிதமே தவிர, முக்யமாக விதிக்கப்படவில்லை. மேலும், க்ரஹணத்தில், அந்நம் கிடையாதென்று சொல்பவரின் அபிப்ராயம் சரியாய் விளங்கவில்லை. எவ்விதமும், ஆகாங்க்ஷாவஶாத் ஸ்பூர்த்தியான அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாகவே ஆமஶ்ராத்தம் விதிக்கப்பட்டதென்று தோன்றுகிறது. ஆகையால், ஸார்வபௌமருடைய க்ரந்தத்தை மாத்ரம் அவலம்பநம் செய்து ஒரு விஷய விஶேஷத்தை ஸமர்த்தநம் செய்பவரின் மேல், க்ரந்தாந்தர வசநங்களைக் கொண்டு தூஷணங்களைச் சொல்வது ஸரியல்ல. அங்கு இரண்டு க்ரந்தங்களின் பலாபல பரிஶீலநத்தால் பாட்ராசார்யர் அவலம்பித்த க்ரந்தமும் துர்பலமாகலாமென்று ஸமதூஷணம். கடைசியாக "அதைப் பிசகென்று, 'ஶ்ருதி: ஸ்ம்ருதி: ஸதாசார:' என்கிற வாக்யத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டவர்கள் சொல்லமாட்டார்கள்" என்று பாட்ராசார்யர் தம்முடைய லேகத்தை முடித்திருக்கிறார். அங்குக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவஶ்யம். அதாவது - ஶாஸ்த்ர ப்ரமாண விருத்தமாய் அநுஷ்டானங்களைச் செய்பவர்கள் எந்தக்காலத்திலாவது, ஶிஷ்டர்கள் என்று சொல்லப்படுவாரேயாயின், நாம் ஶிஷ்டாசாரத்திற்கு ப்ராமாண்யத்தை அக்காலத்தில் ஒத்துக்கொள்வது அவஶ்யமாகும்.

ஆனதுபற்றி ஸங்க்ரமநிமித்தமாய் விதிக்கப்பட்ட ஆமஶ்ராத்தம் அந்நஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாகத் தான் விதிக்கப்பட்டிருக்கிறதென்று, ஸித்தமானபடியால் அதை அநுஸரித்த ந்யாயங்களால் அதை அபராண்ஹ காலத்திலே தான் செய்யவேண்டும் என்று தீபிகையில் ப்ரசுரித்த இரண்டு வ்யாஸங்களைப் பரிஶீலநம் செய்வதால் நிஶ்சயமாய் ஏற்படுகிறது.


தத்காலம் இவ்வளவு பர்யாப்தம் என்றெண்ணி, இந்த விஷயத்தை அதிகமாக நிரூபிக்காது, ஸங்க்ஷிப்தமாய்ச் சொன்னோம். காலாந்தரத்தில் இதைப்பற்றி விஸ்தாரமாய் விஜ்ஞாபநம் செய்கிறோம்.

கமலாவிலாஸ்,
திருக்குடந்தை
18—9—18.

கே. ஆர். நாகராஜஶர்மா.



H. E. LADY HARDINGE
*Vicereine*



H. E. LORD HARDINGE
*Viceroy*

THE GUARDIAN PRESS
MOUNT ROAD MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - DEC 1913
MADRAS.

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வருஷ கார்த்திகைமீ [ஸஞ்சிகை 10.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬
𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 விஜய
𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**வைஸ்ராயின் நல்வரவு.**

லார்ட் ஹார்டிஞ்ஜ் என்னும் நமது வைஸ்ராய், இந்த நவம்பர் மாஸம் 24வ இவ்விடம் வருகிருர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நம்முடைய சக்ரவர்த்தியின் ப்ரதிநிதியாக அவர் நமது மத்யத்தில் வரும்பொழுது, அவருக்கு நாம் ஸ்வாகதம் சொல்லவேண்டியது நமது தர்மமே; ஆனுல், இவர் விஷயத்தில் இந்த ஸ்வாகதத்தை, நமது தர்மமென்று மாத்ரமல்லாமல், அத்யந்தம் ப்ரியமென்றும் மிகுந்த ஆநந்தத்துடன் நாம் சொல்லத் துணிகிருேம். ராஜ்யபரிபாலந விஷயத்தில் தர்மத்தை விட்டு நழுவாமல் இவர் நடந்து வருவதையும், இவர் ப்ரஜைகளிடத்தில் தமது புத்ராதிகளிடம் போலவே மிகுந்த வாஞ்சை வைத்திருப்பதையும் நாமெல்லாரும் அறிவோமாகையால், சக்ர

வர்த்தித் திருமகன் ப்ரஜைகளின்மீது வைத்திருந்த ப்ரீதியை அறிந்த குஹன், அவன் தனது ஸ்தாநத்தை அடைந்திருக்கிறுன் என்பதைத் தெரிந்துகொண்டவுடன் பரமாநந்த பரிதனுய் அவனே ஸ்வாகதம் சொல்லி அழைத்ததுபோல, நாமும், நமக்கு அத்யந்தம் ப்ரியத்தைச் செய்யவேண்டும் என்னும் அபிஸந்தியையுடைய இந்த ஸுஹ்ருத்தை,

> "ஸ்வாகதம் தே மஹாபாஹோ தவேயமகிலா மஹீ ।
> வயம் ப்ரேஷ்யா பவாந் பர்த்தா ஸாது ராஜ்யம் ப்ரஶாதி ந: ॥"

என்று நல்வரவுக்குரிய வார்த்தையைச் சொல்லி அழைப்போம். நமக்கும் இந்த வைஸ்ராய்க்குமுள்ள ப்ரேஷ்ய பர்த்ரு பாவம், குஹனுக்கும் ஸ்ரீராமனுக்கு மிருந்ததுபோல இல்லாமலிருந்தாலும், இவர் நமக்கு ஸம்ரக்ஷகஸ்தாநத்தி லிருக்கிறுர் என்பதிலும், நாம் அவருடைய ப்ரஜைகளென்பதிலும் எவ்வித ஸந்தேஹமுமில்லை; இவர் ராஜ ப்ரதிநிதியாக இருப்பதால், நாம் நம்முடைய ஸர்வஸ்வத்தையும் இவருக்கு நிவேதநம் செய்வதும் உசிதமேயாகும்.

இப்பொழுது நமக்கு ராஜஸ்தாநத்தி லுள்ள பிந்ந ஜாதியர்களான இந்த ஆங்கில பௌமர்கள் விஷயத்தில் ஹிந்துக்களான நாம் பாவிக்கும் விஶ்வாஸம் ருஜுவான விஶ்வாஸமாகுமா? ஸ்பர்ஶத்தையும் போஜந ப்ரதிபோஜநத்தையும் இந்த ஆங்கில பௌமர்களுடன் அங்கீகரிக்காம லிருக்கும் இந்த ப்ராஹ்மண வைதிகர்களாகிற நாம் அவர்களிடத்தில் கொண்டாடும் விஶ்வாஸமெல்லாம் கபடமான விஶ்வாஸமாகவே இருக்கவேண்டுமென்றோ? என்று சில பெரியோர்கள் ஶங்கிக்கிறுர்கள். இந்த ஶங்கை, வஸ்து ஸ்திதியைத் தெரிந்துகொள்ளாமையாலும் ஹிந்துமதக் கொள்கைகளில் விபரீத பாவனையினுலும் உண்டாகின்றது என்றே நாம் நிஶ்சயமாகச் சொல்வோம். வேதத்தையும் அதன் உபப்ருஹ்மணங்களையும் ப்ரமாணமாக ஒத்துக்கொண்டு இங்க்லீஷ் பாஷாஜ்ஞாநமின்றிக்கே வைதிக தர்மத்தை அநுஷ்டித்துவரும் ஆஸ்திகர்களுள் தென் இந்தியா வாஸிகளான பெருத்த ஜந ஸமூஹத்தை நாம் நன்றுக அறிவோம். அவர்களிடம் ராஜ விஶ்வாஸம் பூர்ணமாக இருக்கின்றது என்றும், அந்த விஶ்வாஸம் கபடமற்றதென்றும் நம்முடைய அநுபவத்தைக்கொண்டு நாம் தைர்யமாகச் சொல்லக்கூடும். இந்த வாஸ்தவத்தை வைதிகர்களோடு



வைதிகர்களாகப் பழகும் நம்மைப் போன்றவர்கள் அறிவார்களே தவிர, உபபந்நர்களாகவும் உயர்ந்த ஸ்திதியி லிருப்பவர்களாகவுமுள்ள பெரியோர்கள் அறியார். உந்நதஸ்திதியி லிருந்தபடியே அதற்கு அநுரூபமான வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்துக்கொண்டிருக்கும் பெரியோர்களுக்கு, அவர்களுடன் ஸார்வகாலிக ஸம்பர்க்கம் நேராமலிருக்கும் வைதிக ஹிந்து ஜநங்களுடைய அபிஸந்தியையும் நடத்தையையும் ஸரியானபடி உணர்ந்து சொல்லத் தகுந்த திறமை எப்படி ஸம்பவிக்கும்? இது விஷயத்தில் நம்மைப் போன்றவர்களுடைய வாக்யமே ஶ்ரத்தேயமாகவேணும்.

தவிரவும், ஶாஸ்த்ரத்தையே நம்பும் இந்த ஹிந்துவைதிகர்கள் அந்த ஶாஸ்த்ர விதிகளுக்கு விபரீதமாக ஒருநாளும் அநுஷ்டிக்கத் துணியார்.

> "யதா த்ருஷ்டி: ஶரீரஸ்ய நித்யமேவ ப்ரவர்த்ததே ।
> ததா நரேந்த்ரோ ராஷ்ட்ரஸ்ய ப்ரபவ ஸத்ய யதர்மயோ: ॥
> ராஜா ஸத்யம் ச தர்மஶ்ச ராஜா குலவதாம் குலம் ।
> ராஜா மாதா பிதா சைவ ராஜா ஹிதகரோ ந்ருணாம் ॥"
> யமோ வைஶ்ரவண: ஶக்ரோ வருணஶ்ச மஹாபல: ।
> விஶேஷ்யந்தே நரேந்த்ரேண வ்ருத்தேந மஹதா தத: ॥

[ஸ்ரீ ராமாயணம் அயோத்யாகாண்டம் 67 33 - 35.]

[த்ருஷ்டியானது, ஶரீரத்திற்கு ஹித ஸாதகமாகவும் அஹித நிவாரகமாகவும் எப்பொழுதும் ப்ரவ்ருத்திக்கிறதுபோல, ராஜாவும் ப்ரஜைகளின் விஷயத்தில் எப்பொழுதும் ஸத்ய தர்மங்களுக்குக் காரணமாகவே ப்ரவ்ருத்திக்கிறுன். ப்ரஜா ஸமுதாயத்திற்கு ராஜாதான் ஸர்வ விதமான பந்து. ஸர்வ ப்ரகாரரக்ஷணரூபமான சரித்ரத்தால் தர்மராஜன் முதலிய தேவதைகளும் ராஜாக்களுக்கு நிகராகிறுரில்லை] என்னும் ஸ்ரீ ராமாயண வாக்யங்களையும், இன்னும் இவைபோன்ற கணக்கில்லாத ஸ்ம்ருதி வாக்யங்களையும் ஸர்வ ப்ரமாணமாகக் கொண்டு வர்த்திக்கும் ஹிந்துக்கள், இவைகளுக்கு விபரீதமாக எப்படி ராஜத்ரோஹத்தை மநஸ்ஸில் நினைப்பார்கள்? இந்தத் தேஶத்தில் முற்காலத்திலிருந்த க்ஷத்ரிய ராஜர்களிடம், பிந்ந ஜாதியர்களான ப்ராஹ்மண ப்ரஜைகள், கீழ்க்

கூறியவைபோன்ற ஶாஸ்த்ரங்களின் ப்ராமாண்யத்திற்குக் கட்டுப்பட்டு அளவற்ற விஶ்வாஸத்துடன் வர்த்தித்து வந்திருப்பதை நாம் படிக்கவில்லையா? "அதந்த்ரஷ்டே விஜயேஷ்டே ஜாதயஸ்ஸஸ்ய நாத த்வயி தஉபரிஶோஷம் பம்ய ந்ருதஸ்ய ப்ரஜாநாம்" என்னும் வாக்யம், ஒரு ப்ராஹ்மண கவியால் ப்ராஹ்மண பாத்ரத்தின் முகத்தில் ஒரு க்ஷத்ரிய ராஜனைக் குறித்து ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றதன்றோ? இப்படியெல்லாம் அக்காலங்களில் ஜாதிபேதம் ராஜவிஶ்வாஸத்திற்கு ப்ரதிபந்தகமாகாமலிருக்க, இப்பொழுது மாத்ரம் ப்ரதிபந்தகமாகுமோ? இதன் யதார்த்தமாவது – இந்த விஶ்வாஸத்திற்கு ஜாதி நியாமகமே அன்று, தர்மமே நியாமகமாகின்றது என்பதுதான். ஸ்வஜாதீயனாக இருந்தாலும் ஒருவன் தர்மத்தை ஸரிவர அநுஷ்டிக்காவிட்டால் அவனிடம் விஶ்வாஸம் வைக்கக் கூடாதென்றும், பிந்ந ஜாதீயனாக இருந்தாலும் தர்மத்தை யதாக்ரமம் அநுஷ்டித்து வருமவனையே நாம் விஶ்வஸிக்கவேண்டுமென்றும் நமது ஶாஸ்த்ரம் நமக்குப் போதிப்பிக்கின்றது. ஆகையால், 'இக்காலத்திய நம்முடைய ஆங்க்ல பௌமராஜர்களிடத்தில் நமக்கு விஶ்வாஸம் ஸம்பவிக்காது' என்று சொல்லுபவர்களே, பெரியதொரு அபத்தத்தையே பேசுகிறார்கள் என்று நாம் உறுதியாகச் சொல்வோம்.

ஶாஸ்த்ரப்படி அநுஷ்டானங்களைச் செய்துவரும் நம்முடைய விஷயத்தில், தர்மத்திலிருந்து நழுவாமலிருக்கும் ஆங்க்ல பௌமராஜர்கள் அதிஶங்கைப் படுவதற்குக் கொஞ்சமேனும் காரணமில்லை. ஸ்பர்ஶத்தையும் போஜந ப்ரதிபோஜநத்தையும் ஹிந்துக்கள் அங்கீகரியாதது ராஜவிஶ்வாஸமில்லாமையைக் காண்பிக்கின்றது என்று சொல்வது ஸரியான தர்க்கமே யாகாது. ஹிந்துக்களிடம் ஶாஸ்த்ர நம்பிக்கையும், ஆங்க்லபௌமர்களிடம் தர்ம்யமான பரிபாலநமும் எவ்வளவுகாலம்வரையில் இருக்கின்றனவோ, அவ்வளவு காலம்வரையில் இவ்விருவர்க்குள் பரஸ்பரம் விஶ்வாஸமும் அஸாதாரணமான ஒரு ஸமாதாநமும் நிலைபெற்று நிற்குமென்று நாம் உறுதியாகச் சொல்வோம். மற்றை எவர்கள் எவ்வளவுதூரம் ராஜத்ரோஹத்தைச் சிந்தித்து ஆங்க்லபௌமர்களிடம் த்வேஷத்தைப் பாராட்டினாலும், ஶாஸ்த்ர பீருக்களான



ஹிந்துக்கள் ராஜ விஶ்வாஸத்தை உறுதியாக அவலம்பித்தே நிற்பார்கள் என்பதில் கொஞ்சமேனும் ஆக்ஷேபமேயில்லை. தர்மமிருக்கு மிடத்தில் விஶ்வாஸம் ப்ரவ்ருத்திப்பது அவர்களுக்கு நைஸர்க்கிகம்.

மேலும், ஆங்க்ல பௌமர்கள் இந்தத் தேஶத்திற்கு வந்தது முதல், ப்ரஜைகளுடைய ஶ்ரேயோபிவ்ருத்தியைக்குறித்து அவர்கள் பட்டிருக்கும் ஶ்ரமத்தை இந்த நமது ஹிந்துக்கள் நன்றாக அறிவார்கள். வ்யக்தி நிஷ்டமான சில காதாசித்க தோஷங்களை விலக்கிவிட்டால், ஆங்க்லபௌம பரிபாலநம் நமது க்ஷேமத்தின் பொருட்டே நிஷ்பந்நமாகியிருக்கிறது என்பது இவர்களுடைய மநஸ்ஸில் த்ருடமாகப் பதிந்திருக்கிறது. அப்படியிருக்கையில், "க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்று க்ருதக்நதா தோஷத்திலிருந்து நடுங்கும் இவர்களின்மீது க்ருதக்நதா ஸூசகமான விஶ்வாஸாஸத்பாவத்தை ஆரோபிப்பது அத்யந்தம் ந்யாயவிருத்தம். இவர்கள் விஶ்வாஸாவிஷ்கரணம் செய்வதெல்லாம் அநார்ஜவம் என்று சொல்வதும் ஒரு பெரிய அநீதி. ஸாத்விகர்களாகவும் ருஜு ஸ்வபாவமுள்ளவர்களாகவுமுள்ள இவர்களை வேஷதாரிகளென்று சொல்வதைவிட வேறு பெரிய பாபத்தை நாம் அறியோம். தத்வாதத்வங்களை உள்ளபடி அறியும் ஸ்வபாவமுள்ள நம்முடைய வைஸ்ராய், எளியவர்களுடைய வார்த்தையென்று நம்முடைய வசநத்தை அவிஶ்வஸிக்காமல், நாம் இப்பொழுது சொல்லும் ஸ்வாகதத்தை விஶ்வாஸத்தால் நிறைந்திருக்கும் ஹ்ருதயத்திலிருந்து ஆர்ஜவத்துடன் வருவதாக உணர்ந்து, அதைத் தக்ஷிண தேஶத்திலுள்ள ஶாஸ்த்ர பீருக்களான வைதிக ஹிந்துக்களுடைய ஸ்வாகதமாக க்ருபையுடன் அங்கீகரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். யதார்த்தமாகவே, இந்த வைஸ்ராயின் நல்வரவைப் பூர்வ ஸுக்ருதத்தின் பலமென்றே நாம் நினைத்து அதிமாத்ரம் ஆநந்தபரிதர்களாக இருக்கிறோம் என்பது உண்மை.

அத்வேஷ்டா யதி ஸர்வதோ ந்யாயஶீல: ப்ரஜாஸு
ஸந்துஷ்ட: பரகீயவர்ணாந் யோஜநாநாம் ஶதாநி ।
ஶ்ராந்தா ப்ராப்த: ஸஹஸா க்ருதஜ்ஞோ யோ நாஸௌ நாவேக்ஷ
ஶிஷ்டாநாம் ப்ரபவதி நா ஸாயுஜ்யாஸ: கயம் ஸ்யாத் ॥

∴ ∴ ∴

**ஸ்ரீ அஹோபில மடத்தைப் பற்றிய வ்யாஜ்யம்.**

ஸ்ரீ. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர் முதலிய ஏழு பெயர்கள், ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ பராங்குஶ யதீந்த்ர மஹாதேஶிகன் முதலிய மூன்று பெயர்களின் பேரில் நாகபட்டணம் ஸப்கோர்ட்டில் ஒரு க்ரம வ்யாஜ்யம் செய்திருக்கிறார்களென்றும், அந்த வ்யாஜ்ய விஷயமாகக் கோர்ட்டார், முதல் ப்ரதிவாதியை, ஆஸ்தாநத்திற்கு உத்தராதிகாரியை நியமிக்கும் விஷயத்தில் எவ்வித வ்யவஸ்தையையும் தத்காலம் செய்யக்கூடாதபடிக்கும், இரண்டாம் ப்ரதிவாதியாகிற காரக்குறிச்சி ஸ்வாமியை ஆஸ்தாநத்தை ஒத்துக்கொள்ளாதபடிக்கும் தடைநோடீஸ் (interim injunction) கொடுத்திருக்கிறார்களென்றும் நாம் சென்ற சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில் எழுதியிருந்தோம். நாளது நவம்பர்மாஸம் 8-ம் ௳ அந்த வ்யாஜ்ய ஸம்பந்தப்பட்ட தடைநோடீஸ் விசாரணை விசாரிக்கப்பட்டு முடிவு பெறாமல் அடுத்த மாஸத்திற்கு ஒத்திப்போடப்பட்டிருக்கின்றது. வ்யாஜ்யத்தின் மாதிரி இவ்விதமென்பதையும் ப்ரதிவாதிகளின் வ்யபதேஶம் இப்படி இருக்கிறது என்பதையும் மஹாஜநங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு வாதிகளின் வேண்டுகோளின் பேரில், வாதிகளின் பிரியாதையும் ப்ரதிவாதிகளின் லிகித ரூபமான ப்ரத்யுக்தியையும் ஓர் அநுபந்தமாக இந்த ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். கோர்ட்டார் அவர்களுடைய விசாரணைக்கு உட்பட்டிருக்கும் இவைகளின் குணதோஷ பராமர்ஶத்தை நாம் தத்காலம் செய்யக்கூடாதவர்களாக இருக்கிறோம்.

∴ ∴ ∴

**மைஸூர் முஜராய் சட்டம்.**

நாளது வருஷத்திய சென்ற ஆடிமாஸத்து ஸஞ்சிகையில், மைஸூர் ராஜ்யத்தில், தர்ம ஸொத்துக்களின் பரிபாலந விஷயமாக ஒரு சட்டத்தை ஏற்படுத்துவதாக ராஜாங்கத்தார் ஆலோசித்து வருகிறார்களென்று எழுதிவிட்டு, அம்மாதிரியான ஒரு சட்டம் ஏற்படுவதன் குணதோஷங்களை நாம் விசாரித்திருந்தோம். இப்பொழுது அந்தச் சட்டம், மஹாராஜா அவர்களின் அநுமதியை அடைந்துவிட்டதென்றும், வருகிற 1914-ம் வர்ஷம் ஜநவரி மாஸம் முதல் தேதி முதல் நடவடிக்கைக்கு வரப்



போகிறதென்றும் மைஸூர் கஜட்டில் ராஜாங்கத்தார் விளம்பரம் செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் முழுவதையும் அநுபந்தமாக இங்க்லிஷ்பாஷையினால் இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். ஏற்கெனவே நாம் குறித்திருந்த தோஷ பாகங்கள் நிவ்ருத்தங்களாகி, ஸர்வ ப்ரகாரத்திலும் ஸர்வ ஸம்மதமாக இருக்கும்படி ராஜாங்கத்தார் இந்தச் சட்டத்தை நிஷ்பத்தி செய்திருக்கிறார்கள் என்பது, அதைப் படித்துப் பார்க்குமவர்களெல்லாருக்கும் நன்றாக விளங்கும். இக்காலத்தில் அநேக இடங்களில் தேவஸ்தாநத்துச் சொத்துக்களும் இன்னும் மற்றைத் தர்ம விஷயங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சொத்துக்களும் ஸரியாகப் பரிபாலநம் செய்யப்படாமலும் ந்யாய்யமாக விநியோகம் செய்யப்படாமலும் அழிந்து போகின்றன என்பது ஸுப்ரஸித்தமான விஷயம். இனி இம்மாதிரியான அழிவை இந்தச் சட்டம் நிவ்ருத்தி செய்யுமென்பதில் ஆக்ஷேபமில்லை. நமக்கு ஸம்பந்தப்பட்டிருக்கும் இந்த இங்க்லீஷ் ராஜ்யத்திலும் இதுபோன்ற அவஶ்யமான ஒரு சட்டத்தை ராஜாங்கத்தார் ஏற்படுத்தி, தர்ம சொத்துக்களின் க்ரம விருத்தமான செலவுக்கு இடங்கொடாதபடி தகுந்த வ்யவஸ்தைகளை ஶீக்ரத்தில் உண்டுபண்ணுவார்களென்று நம்புகிறோம்.

∴ ∴ ∴

**ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கம்.**

வருகிற மார்கழி மாஸத்தில் நடக்கவேண்டிய நான்காவது மஹாஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்துவதாக ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்களென்று சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் நாம் எழுதியிருந்தோம். அப்படி அவர்கள் அபிப்ராயப்பட்டு, அவ்விடத்தில் நடத்துவதற்காக வேண்டிய ப்ரயத்நங்களைச் செய்து, அவ்விடத்திய வ்யபதிஷ்டர்களுக்குக் கொஞ்சம் ஸஹாயார்த்தம் இவர்கள் எழுதினதற்கு, அவர்கள், அஹோபிலத்தில் இப்பொழுது அஸஹ்யமான குளிர் உண்டென்றும், இக்காலத்தில் அவ்விடத்தில் மஹா ஸங்கம் சேர்வது உசிதமன்று என்றும் பதில் எழுதியிருக்கிறார்கள். அந்த ப்ரதேஶங்களில் பரிசயமுள்ள மற்றவர்களும் அம்மாதிரியே சொல்லுகிறார்கள். ஆகையால், ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் பூர்வம் அபிப்ராயப்பட்டிருந்ததை

மாற்றி, ஸ்தலாந்தரங்களைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவர்களுடைய நிர்ணயம் தெரிந்தவுடன் ஸங்கத்தைப் பற்றிய ஸவிஸ்தரமான ஸமாசாரங்கள் தீபிகையில் ப்ரசுரம் செய்யப்படும்.

∴ ∴ ∴

**ஸ்ரீ அழகிய சிங்கரின் திருமேனி.**

ஸ்வல்ப காலமாக மறுபடியும் ஸ்ரீ அழகிய சிங்கர், திருமேனி பாங்காக இல்லாமல் எழுந்தருளியிருப்பதாக ஸமாசாரம் கிடைத்திருக்கிறது. எம்பெருமானிடத்தில் ந்யஸ்த பரராகவும் பரம வைராக்ய நிதியாகவும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு, திருமேனியின் அஸ்வாஸ்த்யம் அத்யந்தம் அநாதரணீயமான அல்ப விஷயமானாலும், ப்ராக்ருதி பரவஶர்களாக இருக்கும் நமக்கு, அது உபத்ரவ கரம்போலவும் அதனால் அவர்கள் வ்யதையை அடைவது போலவும் தோற்றமுண்டாகிறபடியால், நாம் அது விஷயத்தில் ஶோகிக்கும்படியாக ஸம்பவிக்கிறது. அது விஷயத்தில் மற்றை எவ்வித ப்ரதீகாரத்தையும் செய்ய அஶக்தர்களாக இருக்கும் நாம், நமக்கெல்லாம் பரம தேவதையாக இருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை, ப்ராக்ருத ஸ்ரீ ஸ்வாமிவிஷயத்தில், ஶீக்ரத்தில் இந்த அஸ்வாஸ்த்யத்தை நிவ்ருத்திசெய்து ஸ்ரீ ஸ்வாமிக்கு ஆநுகூல்யத்தை அநுக்ரஹிக்கவேணுமென்று மாத்ரம் ஸதா ப்ரார்த்திக்கிறோம்.

---

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌉𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑌿𑌤𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌸𑍀𑌮𑌸𑌮𑌾𑌤𑌿𑌶𑌾𑌯𑌿 -
𑌸𑌮𑍍𑌭𑌾𑌵𑌨𑌂 𑌤𑌵 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌢𑌿𑌮𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 ।
𑌮𑌾𑌯𑌾𑌬𑌲𑍇𑌨 𑌭𑌵𑌤𑌾𑌽𑌪𑌿 𑌨𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑌨𑌿𑌶𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌃 ॥ 16·

---

16· கீழ்ஶ்லோகத்தால், ஆஸுர ப்ரக்ருதியை யுடைய சிலர் நாராயணனுடைய பரத்வத்தை அங்கீகரியாவிட்டால், அது ப்ரமாண ஸித்தமான அர்த்தத்தைப் பாதிக்காது என்று சொல்லப்பட்டது. இப்படி பலவாறாக நாராயண ஶப்த வாச்யனாக இருக்குமவனுடைய பாரம்யத்தை ப்ரபஞ்சித்துவிட்டு, இப்பொழுது, 'அந்தப் பாரம்யம் கேவலம் ஶாஸ்த்ரத்தால் மாத்ரம் அறியத் தகுந்ததோ? இல்லாவிட்டால் அதை ஸாக்ஷாத்கரிக்கும் மஹாந்களும் உண்டோ?' என்னும் ஶங்கையைப் பரிஹரிக்கிறார்.

𑌉𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑌿𑌤𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌸𑍀𑌮𑌸𑌮𑌾𑌤𑌿𑌶𑌾𑌯𑌿𑌸𑌮𑍍𑌭𑌾𑌵𑌨𑌂 𑌭𑌵𑌤𑌾𑌽𑌪𑌿 𑌮𑌾𑌯𑌾𑌬𑌲𑍇𑌨 𑌨𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌤𑌵 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌢𑌿𑌮𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂, 𑌤𑍍𑌵𑌦𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌃 𑌕𑍇𑌚𑌿𑌦𑌨𑌿𑌶𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - [பகவானுடைய ப்ராபவத்தில் எவ்வித பரிச்சேதத்திற்கும் ஸம்பாவனையில்லை; அதற்கு ஸமமான வஸ்துவாவது, அல்லது அதை அதிஶயிக்கும் வஸ்துவாவது உண்டு என்று சொல்வது அஶக்யம். இப்படிப்பட்ட ஸம்பாவனையெல்லாவற்றையும் தாண்டியும், பகவானாகிய உன்னாலேயே மாயாபலத்தைக்கொண்டு மறைக்கப்பட்டதாயுமுள்ள உன்னுடைய ப்ரபுத்வ ரூபமான தர்மத்தை, உன்னிடத்திலேயே சித்த வ்ருத்தியை உடைத்தாயிருக்கும் சில தந்யர்கள்

எப்பொழுதும் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டே இருக்கிருர்கள்.]
பகவத்ப்ராபவம் அபரிச்சேத்யமாகவும் மாம்ஸசக்ஷுஸ்ஸால் அறியக்கூடாதபடி பகவானாலேயே மறைக்கப்பட்டதாகவுமிருந்த போதிலும், அவனிடத்தில் அநந்ய பக்தி செய்யும் பக்ஷத்தில் அதை ஸாக்ஷாத்கரிப்பது ஸுலபமாகும் என்பது, இந்த ஶ்லோகத்தின் கருத்து.

உஜ்ஜ்ரும்பித த்ரிவிதபரிச்சேதாதிஶாயி ஸம்பாவநம் - த்ரிவிதச் ஸ பரிச்சேதச் த்ரிவிதபரிச்சேத; ஸ சாஸௌ அதிஶாயீச ஸம்பாவநா; உஜ்ஜ்ரும்பிதா த்ரிவிதபரிச்சேதாதிஶாயிநீ ஸம்பாவநா யேந தத் - 'பரிச்சேதம்' என்றால் பரிச்சேதம், அதாவது - அளவு. அது, தேஶத்தாலும் காலத்தாலும் விஷயத்தாலும் மூன்றுவகைப்படும். அதாவது - ஒரு பொருளை நாம் இவ்வளவு இடங்கொண்டது என்று சொல்லுங் காலத்தில் தேஶத்தால் அதன் அளவைக் குறிக்கிறோம்; இவ்வளவு கால மிருக்குமென்றால் காலத்தால் அளவு ஏற்படுகின்றது; இப்படிப்பட்டது என்று சொன்னால் விஷய பரிச்சேதமாகின்றது. இந்த மூன்றுவித பரிச்சேதங்களுக்கும் பகவானுடைய ப்ரபுத்வத்தில் ஸம்பாவனையே இல்லை. பகவானுடைய ப்ரபுத்வத்திற்கு ஸமமும் அதிஶயிக்கத்தக்கதுமான ப்ரபுத்வம் எவ்விடத்திலும் கிடையாதாதலால், 'உஜ்ஜ்ரும்பித பரிச்சேதாதிஶாயி ஸம்பாவநம்' என்று சொல்லப்பட்டது.

"ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே"

என்று ஶ்ருதி சொல்லுகின்றது.

மாயாபலேந பவதாபி நிகூஹ்யமாநம் - 'மாயாபலம்' என்றால் குணமயமான ப்ரக்ருதியின் ஸாமர்த்யம். அதனால் தனது ப்ராபவத்தை ஸாமாந்ய ஜனங்கள் அறியாதபடி பகவானே மறைத்துக்கொள்ளுகிறான்.

"நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத:"

"மம மாயா துரத்யயா"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 4 1913 MADRAS



இத்யாதி வாக்யங்களால் பகவானே தனது ப்ராபவத்தை மறைத்திருக்கிறானென்று நாம் படிக்கிறோம். ஸர்வஶக்தனாகவும் ஸர்வஜ்ஞனாகவுமுள்ள அவனுடைய இந்த ப்ரயத்நமும் விதநமாகும் படியன்றோ அவனுடைய பக்தர்கள் அவனது ப்ராபவத்தை அறிந்து விடுகிறார்கள்? பக்தர்களுக்கு இம்மாதிரியான ஒரு ப்ரபாவாதிஶயம் இருக்கின்றது என்பதைக் காண்பிக்கும்பொருட்டே 'பவதாபி' என்னுமிடத்தில் 'அபி' ஶப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

ப்ரபுத்வஸம்பாவம் - 'ப்ரபு:' என்றால் ப்ரபு என்று அர்த்தம். 'ப்ரபுத்வம்' என்றால் ப்ரபுத்வம்; அதாகிற ஸ்வபாவம்; அதாவது - ப்ரபுத்வ ரூபமான தர்மம். அவனுக்கேயுள்ள பரத்வத்தையே இந்தப் பதம் விவக்ஷிக்கின்றது.

த்வதேகநிஷ்டா: - உன்னிடத்திலேயே வைத்திருக்கும் சித்தவ்ருத்தியை யுடையவர்கள். பகவானைத் தவிர்த்து வேறு ப்ரயோஜநத்தை அறியாதவர்கள், வேறு ஶரண்யனையும் அறியாதவர்கள். இப்படிப்பட்ட பக்தர்களுக்கே தனது ப்ராபவத்தைப் பகவான் காண்பிக்கிறான் என்று

"யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்"

"பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப॥"

இத்யாதியான ஸ்ரீகீதா வாக்யங்களிலிருந்து நாம் அறிகிறோம். ஶ்ருதியும்,

"யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்"

இத்யாதி வாக்யங்களால் இந்த அர்த்தத்தை விளங்கச் சொல்லுகின்றது.

கேசித் - அப்படிப்பட்ட பக்தர்கள் அதி துர்லபர்கள் என்பதை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது. "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்பது ஸ்ரீகீதா வாக்யம்.

𑌯𑌦𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑍋𑌚𑌰𑌂 𑌚 𑌯
𑌦𑍍𑌦𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌵𑌰𑌣𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌚 ।
𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌂
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌚 𑌤𑍇 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ॥ **17.**

---

𑌅𑌨𑌿𑌶𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - எப்பொழுதும் பார்க்கிறார்கள். "𑌯𑍋𑌗𑌿𑌨𑌸𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂" என்கிறபடி, பக்தர்கள் அவனது ப்ராபவத்தைக் கேவலம் ஶாஸ்த்ரங்களிலிருந்து அறிகிறார்களென்பது மாத்ரம் இல்லை; யோகபலத்தால் ஸாக்ஷாத்தாகவும் அநுபவிக்கிறார்கள் என்று அர்த்தம்.

"𑌮𑌾𑌯𑌾𑌂 𑌨 𑌸𑍇𑌵𑍇 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌨 𑌵𑍃𑌥𑌾 𑌧𑌰𑍍𑌮𑌮𑌾𑌚𑌰𑍇 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌭𑌾𑌵𑌂 𑌗𑌤𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌂 ॥"

என்று ஸஞ்ஜயர் சொல்லியிருக்கிறபடி, பகவானுடைய வைபவம், எவ்வளவு அபரிச்சிந்நமாக இருந்தாலும், பக்தர்களுக்கு கோசரமாகும் என்று அறியவேண்டும்.

17. கீழ் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப்ரபுத்வத்தை அவனுடைய விபூதி மஹிமையைக்கொண்டு இந்த ஶ்லோகத்தில் ஸ்திரீகரிக்கிறார்.

𑌯𑌤𑍍 𑌅𑌣𑍍𑌡𑌂, 𑌯𑌤𑍍 𑌅𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑍋𑌚𑌰𑌂, 𑌯𑌾𑌨𑌿 𑌦𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌵𑌰𑌣𑌾𑌨𑌿, (𑌯𑍇) 𑌗𑍁𑌣𑌾𑌃, (𑌯𑌤𑍍) 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂, (𑌯𑌃) 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃, (𑌯𑌤𑍍) 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌂, (𑌯𑌤𑍍) 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂, (𑌯𑌤𑍍) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, (𑌏𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌪𑌿) 𑌤𑍇 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 - [அண்டமும், அதற்குள்ளேயே அடங்கியிருக்கும் பதார்த்தங்களும், அதற்கு வெளியில் அதைச்சுற்றிக்கொண்டு நிற்கும் ஏழு ஆவரணங்களும், ஸத்வம் முதலிய ப்ரக்ருதி குணங்களும், ப்ரதாநமும், ஜீவன்களும், பரமபதமென்று சொல்லப்படும் முக்திஸ்தாநமும், ப்ரதாநத்தைக் காட்டிலும் பரமாயுள்ள யாதொரு க்ஷேத்ரஜ்ஞ வர்க்கமுண்டோ அதை விடப் பரமான முக்த ஜீவன்களும், ஶுபாஶ்ரயமாயுள்ள நித்ய விக்ரஹமும், இவையெல்லாம் உன்னுடைய விபூதிகளே.]



---

நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கும் சராசரங்களை கணக்கற்றவை; இவைகளெல்லாவற்றையும் அடக்கியுள்ளது ஒரு லோகம். அப்படிப் பதினான்கு லோகங்களை அடக்கி அவைகளை ஆவரணம் செய்துகொண்டு நிற்கும் ஹேமகடாஹ ரூபமாயுள்ள பெரியதொரு கோளம்தான், இவ்விடத்தில் அண்டமென்று சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்ட அண்டங்களின் தொகை கணக்கற்றது. ஒவ்வொரு அண்டத்திலும், அண்டாதிபதி என்னும் ஒரு அதிகாரியும், கர்ம வஶத்தால் போகத்திற்காக அந்த அண்டத்திற்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சதுர்வித ஜந்துக்களும், அந்த ஜந்துக்களுக்கு போக்யமாயும் போகோபகரணமாயுமுள்ள பதார்த்தங்களும் கணக்கற்று இருக்கின்றன. இவைகள்தாம் இவ்விடத்தில் 'அண்டாந்தர கோசரம்' என்று சொல்லப்படுகின்றன. கணக்கற்றிருக்கும் இந்த அண்டங்களைச் சுற்றி நிற்கின்றன அநேக ஆவரணங்கள்; இவைகளில் ஒவ்வொன்றும் மேன்மேல் பப்பத்து மடங்கு அதிகமாயுள்ளது. இவைகள்தாம் தஶோத்தரங்களான ஆவரணங்களென்று சொல்லப்படுகின்றன. இவ்வாறு பலவிதமாக ஆவிர்பவித்து நிற்குமவையெல்லாம் ப்ரக்ருதியென்று சொல்லப்படும் வஸ்துவின் ஒரு சிறிய அம்ஶத்தில் உண்டாகும் புத்புத ரூபமான ஒரு விகாரமென்றும், இப்படி புத்புதிக்காமல் இருக்கும் ப்ரக்ருதியின் பாகம் மநஸ்ஸால்கூட எட்டமுடியாத அளவு விஸ்தரித்து நிற்கின்றது என்றும் நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். இவைகளெல்லாவற்றிற்கும் ஆதாரனாகவும் நியாமகனாகவும் ஶேஷியாகவும் ஈஶ்வரன் இருக்கிறபடியால், இவைகளை அந்த ஈஶ்வரனுடைய விபூதிகளென்று நாம் சொல்லுகிறோம். ஈஶ்வரனுடைய விபூதிகள் இவைகள்தாம் என்பது இல்லை; இவைகளுக்கு அதீதமாயுள்ள ஸத்வ ரஜஸ் தமோகுணங்களும், பத்த முக்த ஜீவகோடிகளும், முக்தி ஸ்தாநமும், பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹமும், இவையெல்லாமும் அவனுடைய விபூதிகளே. அவனுடைய ப்ரபுத்வம் இப்படியெல்லாம் இருந்தால், அவனை ஸர்வஸ்மாத் பரனென்று சொல்வதற்கு ஆக்ஷேபமென்ன? என்பது தாத்பர்யம்.

அண்டம் - இந்தப் பதம் அநேக அண்டங்களுடைய ஸமுதாயத்தைக் குறிக்கின்றது.

"அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச ।
ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடிகோட்யயுதாநி ச ॥"

என்பது புராணவசநம்.

அண்டாந்தர்வர்த்திநம் · அண்டாந்தரேவ வர்த்தந்தே யஸ்ய ஜந்தவ: - அண்டத்திற்கு உட்பட்டவைகள் மாத்ரம் எதற்கு ப்ரத்யக்ஷமாக இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட ஜந்து ஜாதமென்று அர்த்தம். அதாவது - அந்த ஜந்துக்களுக்கு, உதும்பரத்திலுள்ள மஶகத்திற்குப் போல, அந்த அண்டத்திற்கு வெளிப்பட்டிருக்கும் வஸ்துவொன்றும் கோசரமாகாது என்று கருத்து.

உத்தராண்யாவரணாநி - ஜலம், அக்நி, வாயு, ஆகாஶம் இந்த நான்கும், பூதாதியாகிற மஹத் முதலியவைகளுமாக ஏழு ஆவரணங்கள் ஒவ்வொரு அண்டத்திற்கும் உண்டு என்பது, "உத்தராணி ஶேஷாணி ஏதேஷ்வேதாநி ஸப்தைவ" இத்யாதியான புராண வாக்யங்களில் ப்ரஸித்தம்.

குணா: - ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று சொல்லப்படும் ப்ரக்ருதி தர்மங்கள்.

ப்ரதாநம் - விகாரமற்றிருக்கும் குணத்ரயமுள்ள த்ரவ்யம்.

புருஷ: - ப்ராக்ருதியை வ்யாபித்து நிற்கும் க்ஷேத்ரஜ்ஞ ஸமுதாயம், இந்தப் பதத்தால் சொல்லப்படுகின்றது. அப்படி க்ஷேத்ரஜ்ஞ ஸமுதாயம் ப்ராக்ருதியை வ்யாபித்திருக்கின்றது என்பது,

"தாருண்யக்நிர் யதா தைலம் திலே தத்வத் புமாநபி ।
ப்ரதாநேऽவஸ்தித:"

[கட்டைக்குள் அக்நிபோலவும், எள்ளுக்குள் எண்ணெய் போலவும், புமாந் என்று சொல்லப்படும் க்ஷேத்ரஜ்ஞ ஸமுதாயம் ப்ரதாநத்தில் நிற்கின்றது] இத்யாதி வாக்யத்தால் ஏற்படுகின்றது.



பரம் பதம் - முக்தி ஸ்தாநம். 'பரம்' என்னும் பதம் அப்ராக்ருதம் என்னும் அர்த்தத்தைக் காண்பிக்கின்றது; 'எவ்விடத்தை அடைந்தால் திரும்பவும் கர்ம பந்த ரூபமான ஸம்ஸாரம் கட்டுப்படுத்துகிறதில்லையோ அப்படிப்பட்ட' என்னும் அர்த்தத்தையும் குறிக்கின்றது என்றும் சொல்லலாம். 'பதம்' என்றால்; அடையக்கூடும் ஸ்தாநம் என்று அர்த்தம் [பத்யத இதி பதம் - ப்ராப்யம்].

"விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்ரஹவாந் நர: ।
ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥"

என்று, பரமபதத்தை ஸம்ஸாரமாகிற மார்க்கத்திற்குப் பாரமாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

"தத்ர கத்வா ந ஶோசந்தி ந ச்யவந்தி வ்யதந்தி ச"

[அந்த இடத்தை அடைந்தவர்களுக்கு ஶோகம், நழுவுதல், வ்யதை என்பது ஒன்றுமில்லை] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பரமபதத்தைக் கூரத்தாழ்வான் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார்:—

"யத்வைஷ்ணவம் ஹி பரமம் பதமாமநந்தி
வ்யோம வா யதேவ பரமம் தமஸ: பரஸ்தாத் ।
தேஜோமயம் பரமஸத்த்வமயம் த்ருவம் ய-
தாநந்தகந்தலிதஸர்வரஸோர்ஜிதம் யத் ॥

யத் வ்யூஹஹார்த்தபரஹாஸ்தவிபூதிபேத
நித்யம் நிவ்ருத்திநிரதைஸ்ஸநகாதிபிர்வா ।
ஸாயுஜ்யஸாஜ்வ்ருஶ்யபதம் பராவரோக்ஷ்யம்
யத்ஸாத்வரம் ந பதமம்பிதஸ்தி கிம்சித் ॥

ரூபேண ஸத்குணகணை: பரயா ஸம்ருத்யா
ஶாரீரபாரமயபூரவி வா ததாஸ்தா ।

தாத்ருக்கீத்ருகிதி த்வத்பவணயஜ்ஞா
பாபோ யதீயவிபவஸ்ய திரஸ்க்ரியாயை ॥

யத்ப்ரத்யக்ஷவிநாஶநோத்தவே விகாரோ-
ரோதோத்தரஸம்ஸ்தத்மஸ்திதாதிஸம்பும் ।
யத்ஸர்வாத்ருஷ்டிஷ்ட ஸம்ஸ்ம ஸம்ஸம் க்ரியாணா-
மாதிஷு மத்யஸந்தோஷ்டரமப்ரதவம் ச ॥

நிஷ்க்ஷேஷ நிர்ஹதஜநஜராவிகாரோ-
ஸம்ப்ருயிஷ்ஷக்திவிபவைவரபவைரவாவ்யம் ।
கவெமத்ரயநத்வபாரோஷெ மஹநஸாவத்மாவ்யம்
வெகுண்ணநாம தவ யாம தஷாமநஷி ॥"

**பராத்பரம்** - ப்ரக்ருதியைக் காட்டிலும் பரமாக இருக்கிற க்ஷேத்ரஜ்ஞ ஸாமாந்யத்தை 'பராத்' என்னும் பதம் குறிக்கின்றது; அதைக் காட்டிலும் பரமாக இருக்கிறது முக்த ஜீவஜாதம்.

**ப்ரஹ்ம** - ஶுபாஶ்ரயமாயுள்ள நித்ய விக்ரஹம். ஸாமாந்யமாக 'ப்ரஹ்ம' ஶப்தத்தால் பகவத் ஸ்வரூபமே குறிக்கப்பட்டாலும், இவ்விடத்தில் அந்த அர்த்தம் உசிதமாகாது; ஸ்வரூபத்தை விபூதியாக வர்ணிப்பது விருத்திக்குமன்றோ?

**தே விபூதய:** - இவையெல்லாம் உன்னுடைய விபூதிகள். அதாவது - உனக்கு ஆதேயங்களாகவும் நியாம்யங்களாகவும் ஶேஷங்களாகவு மாகின்றன என்று அர்த்தம்.

இப்படி இவையெல்லாம் தனித்தனியாகப் பகவத் விபூதிகளென்று வர்ணிக்கப்படுகிறபடியால், ஒவ்வொன்றும் வெவ்வேறான பொருள் என்று சொன்னதாயிற்று. அதாவது - குணங்களையே ப்ரக்ருதியென்றும், ஜீவனையே ப்ரஹ்மமென்றும், பகவானுக்குத் திவ்ய மங்கள விக்ரஹமே இல்லையென்றும், இன்னும் இவ்வாறு பலவிதமாகச் சொல்லும் மதங்களெல்லாம் ஸ்ரீ ஆளவந்தாருக்கு அநபிமதங்களென்று ஏற்படுகின்றது.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# தர்மவ்யாதோபாக்யாநம்.

"பஹுதா த்ருஶ்யதே தர்ம: ஸூக்ஷ்ம ஏவ அபிஜாநத:"

"ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம"

என்று, நம்மால் மிக்க ஆப்தங்களென்று அங்கீகரிக்கப்பட்ட இதிஹாஸங்கள், தர்ம ஸௌக்ஷ்ம்யத்தைப் பற்றிப் பேசுகின்றன. 'எது தர்மம்? எது அதர்மம்? என்னும் ப்ரஶ்நங்களுக்கு ஸுலபமாக ப்ரத்யுத்தரம் சொல்வது ஸாத்யமில்லை; ஸரியான தர்மம் அதி ஸூக்ஷ்மம், ப்ரயாஸத்தாலேயே தெரிந்துகொள்ளத் தகுந்தது' என்பது தான் இந்த வாக்யங்களுடைய கருத்து. இந்த விஶேஷத்தை, ஸ்ரீ வ்யாஸர், ஸ்ரீ பாரதத்தில் தர்ம வ்யாதோபாக்யாநம் என்னும் ஓர் உபாக்யாநத்தால் நன்றாக விளக்குகின்றார். 'நாம் உத்தமமான ப்ராஹ்மண குலத்தில் ஜநித்திருக்கிறோம்; வேத வேதாங்கங்களின் கரைகண்டிருக்கிறோம்; நம்மைப் போன்ற வேறு தபஸ்வியாவது தர்மஶீலனாவது இந்த ப்ராந்தங்களில் அகப்படுவது இல்லை' என்கிற துரபிமாநம் கொண்டு எப்பொழுதும் கோபத்திற்கு அடிமையாக இருக்கும் ஒரு ப்ராஹ்மணனுக்கு, தர்மஸூக்ஷ்மத்தை நன்றாக அறிந்து அதன் ப்ரகாரம் ஸரிவர அநுஷ்டாநங்களைச் செய்துவரும் ஒரு வேடன், இந்த உபாக்யாநத்தில் தர்மோபதேஶம் செய்கிறான். அந்த உபதேஶத்தின் சீர்மையைப் பற்றி இவ்வளவுதான் என்று சொல்வது ஸாத்யமில்லை; அந்த உபதேஶம் முழுவதையும் இவ்விடத்தில் எடுத்து எழுதுவதும் அஶக்யம். இப்பொழுது அந்தக் கதையை மாத்ரம் எழுதிவிட்டு, பிறகு அவகாஶம் நேரும்பொழுது தர்மங்களை எடுத்து எழுதுவோம்.

முன் ஒரு காலத்தில், ஒரு உத்தம குலத்தில் ஜநித்து, வேத வேதாங்கங்களையெல்லாம் குறைவற அத்யயநம் செய்து, தனது

ஜாதிக்கு விதிக்கப்பட்ட தபஸ்ஸையும் செய்துகொண்டுவந்த ப்ராஹ்மணன் ஒருவன் இருந்தான். அவன்பெயர் கௌஶிகன். ஒரு ஸமயத்தில் இவன், பெரியதொரு வ்ருக்ஷத்தினடியில் உட்கார்ந்து வேதத்தைப் பாராயணம் செய்து கொண்டிருந்தபொழுது, இவனுக்கு நேராக உயர்ந்துள்ள அந்த மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்த ஒரு கொக்கு மலவிஸர்ஜநம் செய்ய, அது இவன் மீது விழுந்தது. இதைப் பார்த்த அந்த ப்ராஹ்மணன் மிக்க கோபங்கொண்டு, 'ஹே பக்ஷியே! உத்தமகுலத்தில் ஜநித்து வேதங்களின் கரைகண்ட ஒரு ப்ராஹ்மணோத்தமனென்று என்னைக் கிஞ்சித்தேனும் ஆதரியாமல், நீ உன் ஜாதி ஸ்வபாவத்துக்குத் தக்கபடி என்மீது எச்சிலைப் பெய்தாய். அவ்வளவு மதம் கொண்டிருக்கும் நீ இந்த க்ஷணமே மரிக்கக் கடவாய்' என்று சொல்பவன் போலத் தீப்பொறிகளைக் கக்கிக்கொண்டிருக்கும் கண்களால் அந்தப் பக்ஷியைப் பார்த்தான். பார்த்தமாத்ரத்தில், அது, உடனே உயிரொழிந்து பிணமாகக் கீழே விழுந்துவிட்டது. "விப்ரா: பஸ்சாத் புத்தய:" என்கிறபடி ப்ராஹ்மணர்களுக்கு ஸாமாந்யமாக அதீத காலத்தில்தான் நல்ல புத்தி ஜநிக்கின்றது. அந்தப் பக்ஷி ப்ராணனை இழந்து கீழே விழுந்ததைப் பார்த்த அந்த ப்ராஹ்மணன், 'ஐயோ! என்ன அகார்யம் செய்தோம்! ஸ்வல்ப அபராதத்திற்காக இந்தப் பக்ஷியின் ப்ராணனை நாம் வாங்கினோமே! இந்தப் பாபம் எவ்விதமாகக் கழியும்?' என்று சொல்லிக்கொண்டு, மனம் உருகி, அந்தப் பக்ஷியைப் பார்த்துப் பரிதபித்தான். ஆனாலும், இந்த விஷயத்தில் எவ்வித ப்ரதீகாரத்தையும் காணாமையால், கொஞ்சகாலம் இவ்விதமாகத் துக்கித்து விட்டு, பிறகு தனது ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு, ஸமீபத்திலிருக்கும் ஒரு க்ராமத்திற்குப் பிக்ஷார்த்தம் புறப்பட்டுப் போனான். அவ்விடத்தில் பிக்ஷை வாங்கிக்கொண்டே வருகையில், ஒரு வீட்டில் 'தேஹி' (கொடு)' என்று இவன் கேட்க, உடனே 'திஷ்ட (இரும்)' என்னும் மறுமொழி காதில் விழுந்தது. சற்றுநேரம் நின்றும் பிக்ஷை வராதது பற்றிக் கோபங் கொண்டவனாய், அந்தப்ராஹ்மணன், திரும்பிப்போய்விடலாமா என்று ஆலோசித்தும், 'இரும்' என்று க்ருஹ குடும்பினி சொன்ன வார்த்தையின் பலத்தால் அப்படிச் செய்யாமல் நின்றபடியே காத்திருந்தான்.



இந்த ப்ராஹ்மணன் பிக்ஷைக்கு வந்த க்ஷணத்திலேயே, அந்தக் குடும்பினியின் பர்த்தா வெளியிலிருந்துவர, அவனுக்கு அர்க்ய பாத்யாதிகளைக் கொடுப்பதிலும் இன்னும் வேறு ஶுஶ்ரூஷைகளைச் செய்வதிலும் வ்யாப்ருதையாக இருந்த படியால், அந்த ஸ்த்ரீ இந்த ப்ராஹ்மணனைக் காத்திருக்கும்படி செய்ய நேர்ந்தது. ஶுஶ்ரூஷை முடிந்தவுடன் அந்த ஸாத்வீ ப்ராஹ்மணனைக்குறித்துப் பிக்ஷையெடுத்துக்கொண்டு வருகையில், ப்ராஹ்மணன், அவளைப்பார்த்து 'ஹே ஸாத்வி! தபோநிதியாக இருக்கும் நான் இவ்விடம் வந்திருக்கையில், என்னைக் காக்க வைத்து நீ உன் கார்யத்திலேயே வ்யாப்ருதையாக இருந்தது ந்யாய்யமா? 'இரு' என்று என்னை நீ நிறுத்திவைக்காமலிருந்தால் எனக்கு இந்த உபரோதம் நேர்ந்திராது' என்று மிக்க கோபத்துடன் பேசினான். அதற்கு அவள், ஸாந்த்வ பூர்வமாக, 'ஹே ஸ்வாமிந்! எனது அபராதத்தைப் பொறுத்துக்கொள்ள வேணும்; எனக்குத் தைவதம் போலவிருக்கும் எனது பர்த்தா அதி க்ஷுதிதராகவும் ஶ்ராந்தராகவும் வந்தபடியால், அவரைக் கவனிக்கும் படியாக நேர்ந்துவிட்டது' என்று மறுமொழிசொல்ல, ப்ராஹ்மணன் அதிக கோபத்துடன், 'ஹே கர்விஷ்டே! ப்ராஹ்மணர்களைவிட உன் பதி உயர்ந்தவனா? ப்ராஹ்மணர்கள் இந்த்ரனால்கூடப் பூஜிக்கப்படுகிறார்கள்; நீ அவர்களை அவமதிக்கிறாய் என்பது உனது தார்ஷ்ட்யத்தைக் காண்பிக்கிறது. ப்ராஹ்மணர்கள் அக்நிக்கு ஸத்ருஶர்கள்; பூமி முழுவதையும்கூடச் சாம்பலாக அடிக்கும் திறமையுள்ளவர்கள்' என்று அதட்டினான்.

வீணான அஹங்காரத்திற்கும் க்ரோதத்திற்குமே பாத்ரமாகி அத்யந்த நாஶத்தைத் தேடிக்கொள்ளும் இந்த ப்ராஹ்மணனைப் பார்த்து மிகவும் ஶோகித்து, இவனுக்கு நல்ல புத்தியைப் போதித்துத்தன்னால் இயன்றமட்டும் உபகரிக்க வேண்டுமென்று எண்ணி, அந்த ப்ராஹ்மண ஸ்த்ரீ பின் வருமாறு அவனுக்கு மறுமொழி சொன்னாள். 'ஹே ப்ராஹ்மண! தேவர்களுக்குத் துல்யமாகவுள்ள மநஸ்விகளான ப்ராஹ்மணர்களை நான் அவமதிக்கவே இல்லை. அவர்களுடைய ப்ரபாவத்தை நான் நன்றாக அறிவேன். அவர்களை அதிக்ரமிக்கவேண்டுமென்னும் எண்ணம் என் மநஸ்ஸில் ஒருபொழுதும் தோன்றவில்லை. இப்பொழுது நேர்ந்த அதிக்ரமத்தின் காரணத்தை மறுபடியும் விஜ்ஞாபநம் செய்கிறேன்;

அதைக் கொஞ்சம் கவனிக்கவேணும். ஸ்த்ரீகளுக்குத் தங்களுடைய பர்த்தாவே பரமமான தைவதமாகிற படியால், என்னுடைய பர்த்தா ப்ரோக்ஷிதராக வந்தபொழுது அவரை அநாதரித்துவிட்டு உம்முடைய ஆதித்யத்தைப் பெரிதாகப் பாவிப்பது ஸரியான தர்மமாக என் புத்தியில் தோன்றவில்லை. பதி ஶுஶ்ரூஷைக்கு உபரோதமின்றிக்கே அநுஷ்டிக்கப்படும் தர்மத்தைத்தான் ஸ்த்ரீகள் விஷயத்தில் நான் ந்யாய்யமான தர்மமாக உணருகிறேன். அநுபவத்திலும் அது ஸரியென்றே ஏற்பட்டிருக்கின்றது. ஹே ப்ராஹ்மண! ரோஷத்தை அடக்குவதற்கு ஶக்தியற்று, நிரபராதியான ஒரு கொக்கை நீர் கொன்றதை நான் என்னுடைய பதி ஶுஶ்ரூஷையாகிற தர்மத்தால் அறிவேன். கோபமென்பது, மநுஷ்யர்களுக்கு உடன்பிறந்த ஶத்ரு. அதை ஜயிக்காமல் எவ்வித தர்மாநுஷ்டானங்களைச் செய்தாலும் அவைகளெல்லாம் வீணே. 'நாம் ப்ராஹ்மண குலத்தில் பிறந்திருக்கிறோம்; தபஸ் முதலியவற்றை அநுஷ்டித்திருக்கிறோம்' என்ற இத்யாதியான கர்வத்தால் நீர் உமக்கு நாஶத்தை விளைவித்துக் கொள்ளுகிறீர். ப்ராஹ்மண்யமென்பது கேவலம் ஜன்மத்தால் உண்டானதன்று; அதற்கு அநுகுணமான ஆசாரமுமிருந்தாலொழியப் பூர்ணமான ப்ராஹ்மண்யம் ஸம்பவிக்க ஹேதுவில்லை. கோபத்திற்கும் மோஹத்திற்கும் வஶமாகிறவர்களும் ப்ராஹ்மணராவார்களோ? எவனொருவன் ப்ராணாத்யயத்திலும் ஸத்யம் தவறாமலும், தன்னைப் பிறர் ஹிம்ஸித்தாலும் அவர்களைப் பதிலுக்கு ஹிம்ஸிக்க வேண்டுமென்கிற எண்ணம் கொள்ளாமலும், லோகம் முழுவதையும் ஆத்மஸமமாகப் பார்த்தும், ஒருபொழுதும் மதத்தை அடையாமல் இந்த்ரியங்களைத் தனது வஶத்தில் எப்பொழுதும் அடக்கிக்கொண்டும் வர்த்தித்து வருகின்றானோ, அவனையன்றோ பெரியோர்கள் ப்ராஹ்மணனென்று சொல்லுகிறார்கள்?

["𑌯𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍋𑌹𑍌 𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌯𑍋 𑌵𑌦𑍇𑌦𑌿𑌹 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌿 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌸𑌂𑌤𑍋𑌷𑌯𑍇𑌤 𑌚 ।

𑌹𑌿𑌂𑌸𑌿𑌤𑌶𑍍𑌚 𑌨 𑌹𑌿𑌂𑌸𑍇𑌤 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌪𑌰𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ।

𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌 𑌵𑌶𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥



𑌯𑌸𑍍𑌯 𑌚𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍋 𑌲𑍋𑌕𑍋 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑌃 ।

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌚 𑌰𑌤𑌸𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥"]

இந்த்ரிய நிக்ரஹத்தையும் ஆர்ஜவத்தையும்தான் ப்ராஹ்மணர்களுக்குத் தநமென்று வ்யவஹரிக்கிறார்கள். அதை ஸரியாக அறியாமல், நீர் வீணை அஹங்காரங்கொண்டு தீங்கை விளைவித்துக் கொள்ளுகிறீர். உமக்குத் தத்வமான தர்மம் தெரியவேண்டுமானால், மிதிலாபத்தநத்திலிருக்கும் தர்மவ்யாதனைத் தேடி அடைந்து அவனை ப்ரஶ்நம் செய்து தெரிந்து கொள்ளும். அவன் ஸத்யவாதியாகவும் ஜிதேந்த்ரியனாகவும் தனது மாதா பிதாக்களுக்கு ஸதா ஶுஶ்ரூஷை செய்துகொண்டும் காலத்தைக் கழித்து வருகிறான். அவனிடம் போய்ச் சேர்ந்தால் உமக்கு ஶ்ரேயஸ் உண்டு. நான் இம்மாதிரி சொல்வதை ந்யாயத்தை மீறிச் சொன்னதாக நினைக்கக்கூடாது. தர்ம மார்க்கத்தில் ஸஞ்சரிக்க வேண்டுமென்கிற விருப்பமுள்ளவர்கள், எந்த அவஸ்தையிலும் ஸ்த்ரீகள் அவத்யர்களென்பதை அறிவார்கள் என்பதையும் நான் உமக்கு ஸ்மரிப்பிக்கிறேன். எனக்கு அநுஜ்ஞை கொடுத்துவிட்டு நீர் போய்வரவேணும்.' இப்படி அந்த ஸ்த்ரீ பரமமான தர்மோபதேஶம் செய்து முடித்தவுடன், ப்ராஹ்மணன், நல்ல புத்தி அடைந்தவனாய்,

"𑌪𑍍𑌰𑍀𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌤𑌵 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌗𑌤𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌶𑍍𑌚 𑌶𑍋𑌭𑌨𑍇 ।

𑌉𑌪𑌾𑌲𑌮𑍍𑌭𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥"

'ஹே ஸாத்வி! நீ உபதேஶம் செய்தது எனக்கு அத்யந்தம் ப்ரியமாக இருக்கிறது. பேய் பிடிப்பதுபோல என்னைப்பிடித்திருந்த கோபமும் என்னை விட்டு விலகிவிட்டது. என்னை நீ திக்கரித்துச் சொன்னதுமுழுதும் என்னுடைய க்ஷேமத்தின் பொருட்டே ஆகியிருக்கிறது. நான் தர்ம வ்யாதனிடம் போய் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை அடைகிறேன்' என்று சொல்லிவிட்டு, தன்னை நிந்தித்துக்கொண்டே மிதிலாபத்தநம்நோக்கிப் போனான்.

(இன்னும் வரும்.)

ஒரு பௌராணிகர்.

ஸ்ரீ:

# புஸ்தக விமர்ஶம்.

1. **த்ராவிட ஆசார்யர்களுடைய திவ்யஜ்ஞாநம்.** மைஸூர் ஸ்ரீ. அ. கோவிந்தாசார்ய ஸ்வாமியால் இங்க்லிஷ் பாஷையில் இயற்றப்பட்டும், சற்றேறக்குறையப் பத்து வர்ஷங்களுக்கு முன்னமே ப்ரசுரம் செய்யப்பட்டுமுள்ள இந்தப் பெயர் பூண்ட க்ரந்தம் ஒன்றை நாம் இப்பொழுது வரப்பெற்றிருக்கிறோம். நமது ஆசார்யர்களுடைய ஜ்ஞாநாதிஶயத்தையும் பக்த்யதிஶயத்தையும் பாஶ்சாத்யர்களுக்கு விளங்கச் செய்யவேணுமென்பதே, இந்த க்ரந்த கர்த்தாவினுடைய தாத்பர்யமென்று தெரியவருகிறது. இந்த மாதிரியான அபிப்ராயத்துடனே இவர், ஸ்ரீகீதா பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இங்க்லிஷ் பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார். இப்படி ஆசார்யர்களால் ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்து உபதேஶிக்கப்பட்டுள்ள ஜ்ஞாநத்தைப் பல பெயருக்கும் எட்டும்படி பரவச்செய்வதே பெரியதொரு உபகாரமானதால், அப்படிப்பட்ட உபகாரத்தைச் செய்யும் இந்த ஸ்ரீ கோவிந்தாசார்ய ஸ்வாமியினிடம் நாம் எல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாகவே இருக்க வேண்டும்.

ப்ரக்ருதமான இந்த க்ரந்தம், பகவத்விஷயம் என்று சொல்லப்படும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளின் அர்த்தத்தை ஸங்க்ரஹமாக அடக்கிக் கொண்டுள்ளது. இந்த அர்த்தத்தைப் பல விஷயங்களாக விபாகம் செய்து, ஒவ்வொரு விஷயத்தையும் தனித்தனியாகவே, குரு ஶிஷ்ய பரம்பரையால் கிடைத்திருக்கும் ரஹஸ்யங்களுடன் அதி ரஞ்ஜகமாக இவர் விளக்கியிருக்கிறார். இந்த அர்த்தங்களுக்குத் துல்யமாயுள்ள பாஶ்சாத்ய க்ரந்தங்களிலுள்ள வாக்யங்களையும் கதைகளையும், அங்கங்கே டிப்பணீ ரூபமாக இவர் எழுதியிருப்பதும் மிக ஶ்லாக்யமாகவே இருக்கின்றது. நமது ஸித்தாந்தப்படி வேதநமும் உபாஸநமும் ஒன்றாகையால், 'திவ்ய ஜ்ஞாநம்' என்று இந்த க்ரந்தத்திற்குப் பெயரிட்டிருந்த போதிலும், பக்த்யதிஶயத்தையே பெரும்பாலும் இது விளக்குவது உபபந்நமே. பகவத் விஷயத்தை யதாக்ரமமாகக் காலக்ஷேபம் செய்வதற்குப் பூர்வாங்கமாக இந்த க்ரந்த படநம் உபகாரகமாகும் என்பது, நம்முடைய அபிப்ராயம். இந்த க்ரந்தம் வேண்டுமவர்கள் நேரில் மைஸூர் ஸ்ரீ. அ. கோவிந்தாசார்ய ஸ்வாமிக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. **ஆத்மாபிவர்த்தனி.** இப் பெயர்பெற்ற ஒரு மாஸாந்தர தமிழ்ப் பத்ரிகையை நாம் வரப்பெற்றோம். திருநெல்வேலி ஜில்லா கீழநத்தம் என்



னும் க்ராமத்தில் 'இந்த்யா ஶாஸ்த்ர கல்விச்சாலை' என்னும் ஒரு கல்விச்சாலை இருக்கின்றதென்றும், டாக்டர் கெ. டி. ராமஸ்வாமி என்னும் ஒரு ஶாஸ்த்ரஜ்ஞர் அதற்கு ப்ரெஸிடென்ட் என்றும், அந்தக் கல்விச்சாலையின் அங்கத்தினர்களாயுள்ள அநேக தேஶவாஸிகளான ஜநங்கள் கரெஸ்பாண்டென்ஸ் (பத்ரிகைகள்) மூலமாக 'ஆத்மயோக மநோ வஶ்ய ஶாஸ்த்ரம்' என்னும் ஒரு ஶாஸ்த்ரத்தை அப்யஸித்து வருகிறார்களென்றும், அவர்களுடைய நன்மையைக் கருதியே இந்த ஆத்மாபிவர்த்தநியை இங்க்லிஷ் பாஷையில் ப்ரசுரமாகி வரும் Self Culture என்னும் ஒரு பத்ரிகைக்கு ஸப்ளிமென்டாக ஷை டாக்டர் ப்ரசுரம் செய்து வருகிறாரென்றும் இந்தப் பத்ராதிபரின் குறிப்பிலிருந்து நாம் அறிகிறோம். இந்தப் பத்ரிகை போதிப்பிக்கும் 'ஆத்மயோக மநோவஶ்ய ஶாஸ்த்ர' விஷயத்தில் அத்யந்தம் அநபிஜ்ஞர்களாக இருக்கும் நாம், அதன் குணதோஷங்களை எடுத்துச்சொல்ல முயல்வது அஸம்பத்தமாக இருக்குமாதலால் அது விஷயத்தில் நாம் ப்ரவ்ருத்திக்கத் துணியவில்லை. ஆனாலும், ஸாமாந்யமாகப் பத்ரிகையைப் பார்க்குங்காலத்தில், அது எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளதென்றும், ரஞ்ஜகமான அநேக சிறு கதைகளையும் ஹிதோபதேஶத்தையும் அடக்கியுள்ளதென்றும் நாம் சொல்லக் கூடும். பத்ராதிபர் சொல்வது போல, மநோவஶ்ய ஶாஸ்த்ரங்களில் பிடிப்புள்ளவர்களெல்லாரும் இந்தப் பத்ரிகையை அதிமாத்ரம் உபகாரமாக அறிவார்கள் என்பதில் ஆக்ஷேபமிராது. இந்தப் பத்ரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 1—8—0. இதை அபேக்ஷிப்பவர்கள், திருநெல்வேலி ஜில்லா கீழநத்தம் டாக்டர் கெ. டி. ராமஸ்வாமி ஶாஸ்த்ரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபிலம் ஸ்வாமி ஸம்பந்தமான பிரியாது.

வாதிகள் :— திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர் முதலாக ஏழு பெயர்கள்.

ப்ரதிவாதிகள் :— ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ பராங்குஶ யதீந்த்ர மஹா தேஶிகன் முதலாக மூன்று பெயர்கள்.

வாதிகள் சொல்வதாவது :—

3. ஸ்ரீ அஹோபில மடமென்பது, ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவசநத்திற்கும் மடத்தின் ஶிஷ்யர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆத்மோ

ஜ்ஜீவந உபாயங்களைச் செய்விப்பதற்குமாக ஏற்படுத்தப்பட்ட மதவிஷயமும் தர்ம விஷயமுமான ஒரு புராதந ஸம்ஸ்தாநம். இது, 500 - வர்ஷங்களுக்கு முந்தியே ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மதிராஸ் ராஜதாநியிலும், மைஸூர் ஹைத்ராபாக்கம் முதலிய ராஜாங்கத்திலும் இந்த மடத்திற்கு ஏராளமான ஶிஷ்யர்கள் இருக்கிறார்கள்.

4. கர்னூல் ஜில்லாவிலிருக்கும் அஹோபிலம் ஸந்நிதியின் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி இந்த மடத்திற்கு முக்யமான தேவதை. இந்தத் தேவதைக்கு ஜங்கமமும் ஸ்தாவரமுமான சொத்துக்கள் அநேக இடங்களில் இருக்கின்றன.

5. இந்த மடம், ஸந்யாஸியாகிற ஒரு ஜீயருடைய பரிபாலநத்திற்கு உட்பட்டது. இப்படி உட்பட்டிருப்பது ஆதிகாலம் தொடங்கி வழக்கமாக இருக்கின்றது. அந்த ஸந்யாஸி, மடத்து ஶிஷ்யர்களுக்குள்ளிருந்து நியமிக்கப்படுவதுடன் சிறந்த ஜ்ஞாந பக்தி வைராக்யம் பொருந்தினவராக இருக்க வேண்டும். இந்த ஸந்யாஸி, அந்த ஆஸ்தாநாதிகாரியாக இருப்பது பற்றியே ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதிக்கு ஸந்யாஸதாரி அல்லது தர்மகர்த்தாவாக ஆகிறார். அப்படி தர்மகர்த்தாவாக இருக்கிறபடியால், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கும் இன்னும் இந்த மடத்தைச் சார்ந்த இதர தேவாலயங்களுக்கும் சொந்தமான ஜங்கம ஸ்தாவர சொத்துக்கள் எல்லாவற்றையும் இவர் தமது ஸ்வாதீநத்தில் வைத்து வருவது உண்டு.

6. இந்த மடம், பண்டையகாலத்து ஆசாரப்படி ஶிஷ்யாதீநம். வாதிகளும் மற்றை ஶிஷ்யர்களும் இந்த மட விஷயத்தில் மிக்க ஶ்ரத்தையுள்ளவர்களாயிருப்பதுடன் இந்த மடத்தின் பல போக்தாக்களாகவும் இருக்கிறார்கள். அது காரணமாகவே, பஹு காலமாக அவர்கள், இந்த மடத்தின் ஆஸ்தாநத்தில் காலி நேரும்பொழுதெல்லாம் அநுரூபமான ஸ்ரீ ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணுவதற்கு உரிய அதிகாரத்தை உடையவர்களாகவும் (அது காரணம் பற்றி ஓர் அம்ஶத்தில்) ப்ரஶாஸிதாக்களாகவும் இருக்கிறார்கள்.

7. ஒரு ஸ்ரீ ஸ்வாமி ஜீவித்திருக்கும் காலத்திலேயே ஆஸ்தாநத்திற்கு உத்தராதிகாரியை நியமிக்கும்படி நேர்ந்தால், பின்வருமாறு ஒரு பரிபாடியை ஸ்ரீ ஸ்வாமி அநுஸரிப்பது உண்டு. ஸ்ரீ ஸ்வாமியின் நியமநத்தின் பேரிலாவது ஶிஷ்யர்களுடைய விஜ்ஞாபநத்தின் பேரிலாவது ஒரு விளம்பர பத்ரிகை ப்ரசுரம் செய்யப்பட்டு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அப்பொழுது எழுந்தருளியிருக்குமிடத்தில், அவ்விடத்திலுள்ள ஶிஷ்யர்களின் ஸங்கமொன்று கூட்டப்படும். அப்படி ஸந்நிஹிதர்களான ஶிஷ்யர்கள், ஒன்று சேர்ந்து, அநுரூபமான ஒரு ஸ்வாமியைக் குறித்து, அவரை உத்தராதிகாரியாக நியமிக்கலாமென்று ஸ்ரீ ஸ்வாமியினிடம் விஜ்ஞாபநம் செய்வார்கள். அந்த விஜ்ஞாபநத்தை ஸ்ரீ ஸ்வாமி, ஏற்றுக்கொண்டு, ஶிஷ்யர்களால் குறிக்கப்பட்டவரை வரவழைத்து அவருக்கு ஸந்யாஸாதிகளைக் கொடுத்து ஆஸ்தாநத்திற்கு வரவேண்டியதற்கு உரிய வ்யவஸ்தைகளெல்லாவற்றையும் செய்வார்.



8. ஸ்ரீ ஸ்வாமி ஜீவித்திருக்கும் பொழுது உத்தராதிகாரி நியமிக்கப்படாவிட்டால், முக்யமான ஶிஷ்யர்களிற் சிலர், ஸந்நிஹிதர்களான ஶிஷ்யர்களெல்லாரையும் வரவழைத்து ஒரு ஸங்கம் சேர்ப்பது உண்டு. அந்த ஸங்கத்தில் நியமிக்கப்படுமவரே ஸ்ரீ ஸ்வாமியாக வருவது வழக்கம்.

9. இந்த இரண்டு பரிபாடிகள்தான், ஸ்ரீ ஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணுவதில் ஆதிகாலம் முதல் நடைபெற்றுவரும் ஆசாரம். இந்த ஆசாரத்திற்கு விருத்தமாக ஒரு நியமநம் ஏற்பட்டால் அது செல்லாது. ஶிஷ்யர்களுடைய விஜ்ஞாபநமின்றிக்கே உத்தராதிகாரியை நியமிப்பதில் ஸ்ரீ ஸ்வாமிக்கு அதிகாரமேயில்லை.

10. இது ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான ஆசாரமாக இருக்க, இந்த மடத்து 38 - வது ஜீயரும் முதல் ப்ரதிவாதியின் பூர்வாதிகாரியுமான ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ஶடகோபஸ்வாமி, தமக்கு நிர்யாணகாலம் நேரும்பொழுது, ஶிஷ்யர்களுடைய ஜ்ஞாநமின்றிக்கே, முதல் ப்ரதிவாதியை உத்தராதிகாரியாக நியமித்து, 7 - 5 - 1909 - ல் ஒரு மரண ஶாஸநம் எழுதிவைத்துப் போனார். அப்பொழுது அங்கிருந்த ஶிஷ்யர்கள், அது ஆசார விருத்தமென்றும் அது செல்லாதென்றும் தடுத்தார்கள். ஆனால், முதல் ப்ரதிவாதி, ஶ்ரத்தை பக்தியுள்ளவராக இருக்கிறார் என்பதை உணர்ந்து, அந்த ஶிஷ்யர்கள், மரணஶாஸநத்தால் அவருக்கு உண்டாகுமென்று நினைக்கப்படும் பாத்யதையை அநாதரித்தே, தாங்களே அவரை உத்தராதிகாரியாக எழுந்தருளப் பண்ணினார்கள். அதை அங்கீகரித்தே முதல் ப்ரதிவாதி ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளினார்.

11. 1910-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸத்தில் முதல் ப்ரதிவாதி அஸ்வஸ்தராக இருந்தபடியால், அவர் ஜீவித்திருக்கும்பொழுதே உத்தராதிகாரியை எழுந்தருளப் பண்ணிவிடுவது நலமென்று நினைத்த அநேக ஶிஷ்யர்கள், அக்டோபர் மாஸத்தில் நரஸிம்ஹபுரத்தில் ஒரு ஸங்கம் சேர்ந்து, ஆஸ்தாநத்திற்கு உரிய யோக்யதையுள்ள மூன்று பெயர்களை நிர்தேஶித்து, இவர்களுள் யாராவது ஒருவரை எழுந்தருளப் பண்ணுவது உசிதமென்று முதல் ப்ரதிவாதியிடம் விஜ்ஞாபநம் செய்தார்கள். முதல் ப்ரதிவாதி, அந்த விஜ்ஞாபநத்தை யதோசிதம் ஆலோசித்து, ஆசாரத்திற்கு விருத்தமின்றிக்கே நடப்பதாக நியமித்தார். 1911, 1912 - வது வர்ஷங்களிலும் ஶிஷ்யர்கள் இம்மாதிரியான விஜ்ஞாபநங்களைச் செய்திருக்கிறார்கள்.

12. 1913 - வர்ஷம் ஜநவரிமாஸத்தில் முதல் ப்ரதிவாதி மறுபடியும் அஸ்வஸ்தரானபொழுது அவர், சட்டத்திற்கு விருத்தமாகவே இரண்டாவது ப்ரதிவாதியைத் தமக்குப் பிறகு ஆஸ்தாநாதிகாரியாக நியமித்தும், மூன்றாவது ப்ரதிவாதியை அவருக்குப் பிறகு அதிகாரியாக நியமித்தும் ஒரு மரணஶாஸநத்தை எழுதி ரிஜிஸ்தர் செய்து வைத்தார். அது எழுதின மறுதினமே இரண்டாவது ப்ரதிவாதிக்கு ப்ரேஷ மந்த்ராதிகளையும் உபதேஶி

த்துவிட்டார். அது முதல் இரண்டாவது ப்ரதிவாதியும் மன்னார்குடியில் மடத்திலேயே வஸித்து வருகிறார்.

13. அடுத்த பிப்ரவரிமாஸத்தில் வாதிகளிற் சிலரும் மற்றும் சில ஶிஷ்யர்களும் முதல் ப்ரதிவாதியிடம் போய், அவர் செய்திருப்பது ந்யாயத்திற்கும் வழக்கத்திற்கும் சட்டத்திற்கும் விருத்தமென்று விஜ்ஞாபநம் செய்தார்கள். அதற்குப்பதிலாக முதல் ப்ரதிவாதி, தாம் நியமித்திருக்கும் ஸ்வாமி மற்றை எல்லாரைக் காட்டிலும் சிறந்தவராக இல்லாவிடினும் தம்முடைய நியமநத்தை ஶிஷ்யர்கள் அப்யுபகமம் செய்யவேண்டு மென்று நியமிக்கும்படியாக இருந்தது.

14. இப்படி ஶிஷ்யர்களை ப்ரதீக்ஷிக்காமலே உத்தராதிகாரியை நியமிப்பதற்கு முதல் ப்ரதிவாதிக்கு அதிகாரமில்லை யென்றும், இப்பொழுது அவரால் மரணஶாஸநமூலமாகச் செய்யப்பட்டிருக்கும் இரண்டாவது மூன்றாவது ப்ரதிவாதிகளுடைய நியமநம், ஶிஷ்யர்களுடைய பாத்யதையை விரோதிப்பதுடன் பஹுகாலமாக வந்திருக்கும் மடத்தின் ஆசாரத்திற்கும் விருத்தமாக இருக்கிறபடியால் நிரர்த்தகம்; ஶிஷ்யர்களையும் கட்டுப்படுத்தாது என்றும் வாதிகள் வாதிக்கிறார்கள்.

15. தவிரவும், முதல் ப்ரதிவாதி, இரண்டாவது ப்ரதிவாதிக்கு ஜீவஶ்ராத்தாதிகளைச் செய்வித்துத் தமது நியமநத்தைப் பூர்த்தி செய்யவும், மடத்தையும் மடத்திற்குச் சொந்தமான ஸொத்துக்களையும் அவரிடம் ஒப்புவிக்கவும் ப்ரயத்நப்பட்டுக் கொண்டிருக்கிறபடியால், அவரை அப்படிச்செய்வதிலிருந்து தடுக்கவும், இரண்டாவது மூன்றாவது ப்ரதிவாதிகளை மடத்தின் ஆசாரத்திற்கு விருத்தமாக ஆஸ்தாநாதிகாரத்தை ஒத்துக்கொள்வதிலிருந்து தடுக்கவும் ஶாஶ்வத தடை கோரூஸனை (Permanent injunction) கோர்ட்டார் அவர்கள் பிறப்பிக்க வேண்டுவது அவஶ்ய மென்றும் வாதிகள் சொல்லுகிறார்கள்.

16. மடத்தின் ஶிஷ்யர்கள் அனைவரும் வாதிகளாகச் சேர்வது ஸாத்யமில்லை யாதலால், ஸகல ஶிஷ்யர்களுக்காகவும், ஸகல ஶிஷ்யர்களுடையவும் நன்மைக்காகவும் இந்த வ்யாஜ்யத்தைச் செய்வதற்குத் தங்களுக்குக் கோர்ட்டார் உத்தரவு கொடுக்க வேண்டு மென்றும் வாதிகள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

17. பின்வருமாறு கோர்ட்டார்கள் நிர்ணயிக்க வேண்டுமென்பது வாதிகளுடைய ப்ரார்த்தனை:—

(1) ஆஸ்தாநத்திற்கு உத்தராதிகாரிகளை நியமிக்கும் பாத்யர், ஆதிமுதல் அநுஷ்டாநத்திற்கு வந்திருக்கும் ஆசாரப்படிக்கு, மடத்தின் ஶிஷ்யர்களுடையதே என்றும்,

(2) ஜீயர் ஜீவித்திருக்கும்பொழுது உத்தராதிகாரியை நியமிக்கும்படி நேர்ந்தால், கீழ் 5-வது பாராவில் சொல்லியிருக்கிறபடி ஸங்க்ஷிப்தர்க



ளான ஶிஷ்யர்கள், ஸகல ஶிஷ்யர்களுக்குமுள்ள இந்தப் பாத்யதையை உபயோகிக்கத் தகுந்தவர்க ளென்றும்,

(3) அப்படி ஶிஷ்யர்களால் நிர்தேஶிக்கப்படுமவரையே ஜீயர், மடத்தின் ஆசாரப்படிக்கு அங்கீகரித்து ஆஸ்தாநத்தில் ப்ரதிஷ்டாபநம் செய்ய வேண்டுமென்றும்,

(4) ஶிஷ்யர்களை அநாதரித்து, மரணஶாஸந மூலமாகவாவது வேறு விதமாகவாவது உத்தராதிகாரிகளை நியமிக்க ஜீயருக்கு யாதொரு அதிகாரமுமில்லை யென்றும்,

(5) 1913-ம் வர்ஷம் ஜநவரிமீ 19உயில் முதல் ப்ரதிவாதியால் செய்யப்பட்டிருக்கும் மரண ஶாஸநப்படி ஏற்படும் இரண்டாவது மூன்றாவது ப்ரதிவாதிகளுடைய நியமநம் நிரர்த்தகம், ஶிஷ்யர்களையும் கட்டுப்படுத்தாது என்றும் கோர்ட்டார் அவர்கள் ப்ரக்யாபநம் செய்வதுடன்,

(6) இரண்டாவது ப்ரதிவாதிக்காவது மூன்றாவது ப்ரதிவாதிக்காவது மற்றை எவருக்காவது மடத்தின் ஆசாரத்திற்கு விருத்தமாக ஆஸ்தாநத்தைக் கொடுப்பதிலிருந்தும், அவர்களுக்கு மடத்தின் ஸொத்தை ஒப்புவிப்பதிலிருந்தும் முதல் ப்ரதிவாதியைத் தடுக்கும்படிக்கும், மடத்தின் அதிகாரத்தையாவது ஸொத்துக்களையாவது ஒத்துக்கொள்வதிலிருந்து இரண்டாவது மூன்றாவது ப்ரதிவாதிகளைத் தடுக்கும்படிக்கும் ஒரு தடையைப் (injunction) பிறப்பிக்கவேண்டு மென்றும் வாதிகள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

---

## முதல் ப்ரதிவாதியின் லிகித மூலமான ப்ரத்யுக்தி.

1. நம்மால் மேல் ஒத்துக்கொள்ளப்படாமலுள்ள பிரியாதில் சொல்லப்பட்டிருக்கும் வாதிகளுடைய வ்யபதேஶங்களை நாம் ப்ரத்யாக்யாநம் செய்கிறோம். அவர்கள் அவைகளை உபபத்தி புரஸ்ஸரமாக ஸாதிக்கவேண்டும்.

2. வ்யாஜ்யத்திற்கு ஹேது விருப்பதாகப் பிரியாதில் ஏற்படவில்லை; வாதிகள் வ்யாஜ்யத்தை நடத்துவதற்குத் தகுந்த அதிகாரிகளுமல்லர்.

3. இந்த ஆஸ்தாநத்திற்கு நமக்குள்ள பாத்யதையை வாதிகள் ஒத்துக்கொண்டிருக்கிறபடியால், வ்யாஜ்யத்திற்கு இப்பொழுது யாதொருஹேதுவுமிருக்க முடியாது; வ்யாஜ்யத்திற்கு இது ஸமயமு மன்று.

4. சட்டப்படி வாதிகளுக்கு இந்த வ்யாஜ்யத்தில் எவ்வித அதிகாரமும் இருப்பதாகப் பிரியாதில் ஏற்படவில்லை; சொத்துக்கள் விஷயத்திலும் அவர்களுக்கு யாதொரு பாத்யமுமில்லை; ஆகையால், வ்யாஜ்யம் நிற்காது.

5. பிரியாதின் 7, 8-வது பாராக்களில் கண்டிருக்கும் வ்யபதேஶங்கள் விஷயமாக வாதிகள் பரிஹாரம் தேடிக்கொள்ளும் ஸ்திதியில் இருக்கையிலும், அப்படிப்பட்ட யாதொரு பரிஹாரத்தையும் அவர்கள் கேட்டுக்கொள்ளவில்லை யாதலால், சட்டப்படிக்கு இந்த வ்யாஜ்யம் நிற்காது.

6. நம்மை மடத்துக்கும் அதன் சொத்துக்களுக்கும் நிக்ஷேபதாரிபோன்ற தர்மகர்த்தாவென்று அவர்களால் சொல்லப்பட்டிருக்கும் உக்தியை நாம் நிஷேதிக்கிறோம். நாம் மடாதிபதி; ஆகையால், மடத்திற்குச் சொந்தமான ஆலயங்களுக்கு நாம் ஆதீநகர்த்தா.

7. ‘மடம் ஶிஷ்யாதீநம்’ என்று வாதிகள் சொல்லும் வ்யபதேஶத்தை நாம் நிஷேதிக்கிறோம்.

8. பிரியாதின் 6-வது பாராவில் சொல்லியிருக்கிறபடி, ஶிஷ்யர்கள் மடத்தின் பல போக்தாக்களல்லர். ஆஸ்தாநத்தில் காலிவரும்பொழுது உத்தராதிகாரிகளை எழுந்தருளப்பண்ணுவதற்குரிய அதிகாரத்தை உடைத்தாயிருக்கும்படி அவர்கள் மடத்தின் ப்ரஶாஸிதாக்களுமல்லர்.

9. பிரியாதின் 7-9-வது பாராக்களில் சொல்லியிருப்பதை நாம் ப்ரத்யாக்யாநம் செய்கிறோம். ஆஸ்தாநத்திலிருக்கும் ஜீயரே உத்தராதிகாரியை நியமிப்பது வழக்கம். ஶிஷ்யர்களுக்கு இது விஷயத்தில் யாதொரு பாத்யமுமில்லை. அவர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்கிற நிர்பந்தமும் கிடையாது. இந்த ஆஸ்தாநம் அலௌகிகம், குருஶிஷ்ய பரம்பரையைப் பொறுத்தது; ஆகையால், ஜீயரே ஒருவரைப் பொறுக்கியெடுத்து ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்வித்து, அவரை ஆஸ்தாநத்தில் ப்ரதிஷ்டை செய்ய பாத்யமுள்ளவர். அதில் ஶிஷ்யர்களுக்கு எவ்வித பாத்யமும் கிடையாது.

10. ஜீயருடைய நியமநத்தை எவ்விதத்திலும் நியந்த்ரணம் செய்ய ஶிஷ்யர்களுக்கு அதிகாரமில்லை. ‘ஶிஷ்யர்களின்றிக்கே ஜீயர்கள் உத்தராதிகாரிகளை நியமிக்கக்கூடாது’ என்று அவர்கள் சொல்வதை நாம் நிராகரிக்கிறோம்.

11. நாம், 38-வது ஜீயரால், அவருடைய 7-5-1909 மரணஶாஸநப்படி இந்த ஆஸ்தாநத்துக்கு நியமிக்கப்பட்டோம். மரணஶாஸநத்தை அநாதரித்து ஶிஷ்யர்கள் நம்மை நியமித்ததாகச் சொல்வது பிசகு. ஶிஷ்யர்களிடமிருந்து நாம் எவ்வித அதிகாரத்தையும் பெறவில்லை.

12. பிரியாதின் 11-வது பாராவில் சொல்லியிருப்பது ஸரியன்று. 1910-ஸெப்டம்பர் மாஸத்தில் நாம் அஸ்வஸ்தமாக இருந்த பொழுது சில ஶிஷ்யர்கள் நம்மிடம்வந்து, உத்தராதிகாரத்திற்கு மூன்று பெயர்களை நிர்த்தேஶித்துச் சொன்னது உண்மைதான். ஆனால், அப்படி அவர்கள் சொன்னபொழுது, அவர்கள் அதில் யாதொரு பாத்யதையையும் கொண்டாடினதாகக் காண்பிக்கவில்லை; நாமும் அவர்கள் ஒரு அதிகாரத்துடன் வந்து சொன்னதாக அப்யுபகமம் செய்யவில்லை. அவர்கள் சொன்னதைப் பற்றி ஸமயம் வரும்பொழுது நாம் ஆலோசிப்போமென்றும், ஆசாரத்திற்கு அவிருத்தமாகவும் மடத்திற்கு அநுகூலமாகவும் நம்முடைய அதிகாரத்தை நாம் உபயோகிப்போமென்றும் நாம் அவர்களுக்குப் பதில் சொன்னோம்.



13. 1913-ஜநவரியில் நாம் மறுபடியும் அஸ்வாஸ்த்யத்தை அடைந்தபொழுது, 19-1-1913-ல் ஒரு மரணஶாஸநம் எழுதி அது வழியாக இரண்டாவது ப்ரதிவாதியை ஆஸ்தாநத்திற்கு நியமித்தோம்; 20-1-13-ல் காஷாயத்தையும், அதற்கு அடையாளமாக ஒரு ஸ்ரீமுகத்தையும் கொடுத்தோம். 14-4-13-ல் அவர் ஸந்யாஸியானார்; அது முதல் அவர் சட்டப்படி எனக்கு உத்தராதிகாரியாகிவிட்டார்; நம்முடன் கலந்து ஆஸ்தாநத்தின் தர்மங்களை அநுஷ்டித்து வருவதுடன், நம்முடைய நியோகத்திற்கு உட்பட்டுச் சொத்துக்களையும் பரிபாலநம் செய்து வருகிறார். இதற்கும் நாம் ஒரு ஸ்ரீமுகத்தைக் கொடுத்திருக்கிறோம்.

14. நம்மால் நியமிக்கப்பட்டிருக்கும் இரண்டாவது ப்ரதிவாதி பெரிய வித்வான், ஸாத்விகர், மடத்தின் ஸம்ப்ரதாயங்களை நன்றாக அறிந்தவர். ஶிஷ்யர்களுடைய ஸம்மதியை மடத்தின் ஆசாரம் அபேக்ஷிக்கின்றது என்று ஒத்துக்கொண்டாலும், இவருடைய நியமநம், அநேக ஶிஷ்யர்களுக்குத்தெரிந்து செய்யப்பட்டதானதாலும் அவர்களால் அப்யுபகமம் செய்யப்பட்டதானதாலும் ஸாதுவே.

15. பிரியாதின் 14-வது பாராவில் சொல்லப்பட்டிருப்பதை நாம் ப்ரத்யாக்யாநம் செய்கிறோம்.

16. பிரியாதின் 15-வது பாராவில் சொல்லப்பட்டிருப்பது ஸரியன்று. இந்த வ்யாஜ்யம் போடுவதற்கும், இந்த வ்யாஜ்யம் போடப்பட்டிருக்கிறது என்று நாம் அறிவதற்கும் முன்னமேயே, இரண்டாவது ப்ரதிவாதியின் நியமநம் பூர்ணமாகிவிட்டது.

17. பிரியாதுத் தொகை ஸரியன்று.

18. வாதிகளால் அபேக்ஷிக்கப்படும் எவ்வித பரிஹாரத்திற்கும், அவர்கள் அதிகாரிகளல்லர்.

19. வ்யாஜ்யம், இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் நிலைமையில் ப்ரதிபாதநார்ஹமன்று.

20. ஆகையால், வாதிகளின் வ்யாஜ்யத்தைக் கோர்ட்டார்கள் தள்ளிவிட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபைக்கு த்ரவ்ய ஸஹாயம் செய்வதாக ஒத்துக்கொண்டவர்களில் அநேகர், க்ருபையாகத் தாங்கள் ஒத்துக்கொண்ட தொகையை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் நாம் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கிறோம். மற்றவர்களும், தாங்கள் கொடு

ப்பதாக ஒத்துக்கொண்ட தொகையை ஶீக்ரத்தில் அனுப்ப க்ருபைசெய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். வேதாந்த தீபிகைக்கு ஸஹாயம் செய்வதாகவும் வ்யாஜ்பச் செலவுக்கு ஸஹாயம் செய்வதாகவும் ஒத்துக்கொண்ட மஹாங்களும் ஶீக்ரத்தில் அவரவர்களுடைய தொகைகளை அனுப்பினால் அத்யந்தம் உபகாரமாக இருக்கும். சென்ற ஸஞ்சிகையில் நாம் அப்யுபகமம் செய்து கொண்டதற்குப் பிறகு, பின்வரும் தொகைகளை நாம் வரப்பெற்றிருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. உ. டி. நரஸிம்ஹ ஐயங்கார், மதிராஸ். ... | ரூ. | 100. |
| ,, ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கூடலூர். ... | ,, | 50. |
| ,, எஸ். ராஜகோபாலா சார்யர், கூடலூர். ... | ,, | 10. |
| ஆக | ரூ. | 160 |

வி. ராஜகோபாலாசார்யர்,
பொதுக்கார்யதர்ஶி
ஸ்ரீ. அ. ம. ஶி. ஸபை.

சித்தூர்,
12—11—13.

## பிரிவுகளின் அறிக்கை.

### மதிராஸ் சைதாப்பேட்டைப் பிரிவு.

ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்ய ஸ்வாமியின் திருமேனியின் அஸ்வாஸ்த்யத்தாலும், மற்றும் சில அஸௌகர்யங்களாலும் திருப்பாவை ஸம்பந்தமான உபந்யாஸம் பஹு காலமாக நின்றிருந்தது. இப்பொழுது பகவத் க்ருபையால் அந்த விக்நங்கள் நிவ்ருத்தங்களாகவே, சென்ற ஆகஸ்டு மாஸம் 30௳ சனிக்கிழமையிலும், அதற்கு அடுத்த ஸெப்டம்பர் மாஸம் 4௳ வியாழக்கிழமையிலும் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் இந்தப் பிரிவின் ஸங்கம் சேர்ந்து, திருப்பாவை உபந்யாஸமும் நடந்தது. ஆனால், உபந்யாஸத்தின் மஹிமைக்கு அநுகுணமாக ஶ்ரோதாக்கள் ஏராளமாகக் காணப்படவில்லை. நமது மதக்ரந்தங்களின் தத்வார்த்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆஸ்தை நம்மவர்களுக்கு யதார்த்தமாகவே இருந்தால், இதுபோன்ற அவகாஶத்தை இழப்பது உசிதமன்று என்று மாத்ரம் நாம் ஸ்மரிப்பிக்கலாம்.

நாளது நவம்பர்மீ 2௳ ஞாயிற்றுக்கிழமை இந்தப் பிரிவின் வர்ஷாந்த ஸங்கம் கூட்டப்பட்டது. சென்ற ஸெப்டம்பர்மீ 30௳ யுடன் முடிவான வர்ஷத்தின் அறிக்கையும் அவ்வர்ஷத்தின் வரவு செலவு கணக்கும் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. பிறகு ப்ரக்ருத வர்ஷத்திற்காக மானேஜிங் கமிட்டியார் நியமிக்கப்பட்டார்கள்.

---

APPENDIX

# THE MYSORE MUZRAI REGULATION.

*(Received the assent of His Highness the Maharaja on the 11th day of October 1913.)*

Preamble.

Whereas it is expedient to consolidate and amend the law relating to Muzrai Institutions in Mysore and to provide for certain remedies in respect of religious and charitable endowments; His Highness the Maharaja is pleased to enact as follows :—

## CHAPTER I.

*Preliminary.*

Short title and extent.

1. (1) This Regulation shall be called the Mysore Muzrai Regulation, 1913; and shall come into force from 1st January 1914.

(2) It extends to the whole of Mysore.

Definitions.

2. (1) 'Muzrai Institution' shall mean and include—

(i) every temple, mosque, or other place of worship or religious service, any *Chatra* or house of feeding or rest for travellers without charge, or other institution of a religious or charitable nature, which is now actually in the sole charge of Government, or for the support of which any annual grant in perpetuity is made from the public revenues, or an inam has been granted and is recognized and registered at the inam settlement as a *devadaya* or dharmadaya grant;

(ii) every institution of a religious or charitable nature which, under the provisions of this Regulation, has been taken under the sole management of Government, so long as it remains under such management.

(2) 'Muzrai Officer' shall mean the Deputy Commissioner of the District in which the whole or any part of the property of a religious or charitable institution shall be situated; and an Assistant Commissioner to whom the power of disposing of any question or class of questions connected with such institutions shall have been delegated in writing by the Deputy Commissioner.

## CHAPTER II.

*Provisions relating to Religious and Charitable Institutions.*

Management of a religious or charitable institution by Government.

3. Government may undertake the management of a religious or charitable trust, (1) at the option of the creator of the trust, provided he has reserved no interest of a residuary or beneficial nature for himself; (2) when the trustees provided by the instrument of trust or actually in charge of the institution all expire or disclaim; (3) when the trustees, or surviving trustees, or the person or all the persons in actual possession and management of the institution voluntarily transfer the management; or (4) when the sole beneficiary or all the surviving beneficiaries voluntarily agree to transfer possession and management.

Reference by the Muzrai Officer to District Judge in cases of dispute.

4. Whenever a dispute arises whether any charitable or religious trust has been actually constituted in respect of any institution, endowment or property, the Muzrai Officer may make a reference to the Court of the District Judge in whose jurisdiction the greater part of the institution or property is situated.

Disposal of the reference.

5. The letter of reference shall be registered and disposed of as a suit between the Muzrai Officer as plaintiff and the parties in possession of the property or opposing the contention of the Muzrai Officer as defendants.

Authorisation of persons to file a suit under Section 92 of the C. P. C.

6. Instead of making the reference, the Muzrai Officer may authorise any one or more persons to file a suit under the provisions of Section 92 of the Code of Civil Procedure.



Award and apportionment of costs.

7. In disposing of references and suits under the foregoing sections, the Court shall have full power to apportion and award costs either against the parties or against the estate in dispute: Provided that no Court fees shall be charged in respect of proceedings following on a reference under Section 4.

Enquiry regarding mismanagement of the property of a religious or charitable institution.

8. When it is brought to the notice of the Muzrai Officer that any religious or charitable institution dedicated for the benefit of the public or a defined section of the public or any property pertaining thereto is being grossly and persistently mismanaged, he may institute an enquiry into the truth of the allegations against the persons in possession and management of the property or the institution.

Order by Muzrai Officer in such cases.

9. If it is proved that there has been gross and persistent mismanagement of the institution or of any property pertaining thereto, or any misapplication or misappropriation of any part of the property, or any breach of trust in respect thereof; the Muzrai Officer may order—

(1) that the institution may be taken under the management of Government;

(2) that the property which has been mismanaged or misappropriated may be delivered back either to the institution or to the possession of Government for the institution.

(3) that security may be given for the proper performance of the trust or management of the property;

(4) may frame a scheme for the proper management of the institution or management of its property and the application thereof; and

(5) pass such other ancillary or necessary orders as the case may require in accordance with justice and equity.

Procedure in cases of wrongful alienation of property belonging to a religious or charitable institution.

10. Where property belonging to a religious or charitable institution has been wrongfully alienated by way of sale, barter, mortgage, lease or otherwise within three years before the date of issuing a notice under this section, the Muzrai Officer may, after giving notice to the alienee and ho-

lding a summary enquiry in accordance with the provisions of the Mysore Land Revenue Code, direct that possession be restored to the institution or that Government assume possession thereof on behalf of the institution.

Failure of the object of trust.

11. Where the whole or part of the objects of a religious or charitable trust has failed, the Muzrai Officer may, subject to such general rules or special orders as Government may have issued, after notification in the official Gazette and hearing such parties as may appear in an enquiry, pass an order directing that the property or the proceeds thereof in respect of which the object has failed, may be utilized for some object of a similar nature, and may frame a scheme for administration thereof.

Suit by a person aggrieved by an order passed under Sections 9, 10 and 11.

12. Any person against whom an order has been passed under Sections 9 and 10 directing dispossession or recovery of possession of property or any person who is aggrieved by an order of the Muzrai Officer passed under Section 11 may, within six months from the date of such order, file a suit in the Court of the District Judge in whose jurisdiction the greater part of the property is situate, for cancellation of such order, making the Muzrai Officer one of the defendants.

If no such suit has been filed or if it has been dismissed by the Court, the Muzrai Officer may, after the lapse of six months from the date of his original order, execute his order and may exercise for that purpose all the powers of a Civil Court in executing decrees;

Provided that in which the property to be disposed of under Section 11 exceeds rupees three thousand in value or the annual income thereof is more than rupees three hundred in value, the sanction of Government shall have been obtained for the order.

Power to make rules for the maintenance of accounts, etc., by persons in charge of religious or charitable institutions.

13. Governmet shall have power to make rules directing that persons in charge of religious or charitable institutions shall—

(a) keep regular accounts of income and expenditure,



(b) submit such returns and supply such information as may be necessary,

(c) allow such inspection and verification as may be necessary:

And may, by said rules, prescribe a penalty not exceeding one hundred rupees for any infraction thereof.

Wrongful alienation of inams granted for the upkeep of religious or charitable institutions.

14. Where any inam granted by Government for the upkeep of any religious or charitable institution is wrongfully alienated or has passed to the possession of a third party in any manner, and the proceeds thereof have been diverted from the purpose for which it had been granted, the Muzrai Officer may, after enquiry, direct that the property may be resumed and retransferred to the institution for whose benefit the inam was intended, or may cancel the inam tenure and impose the full assessment due to Government under the provisions of the Land Revenue Code or cancel the tenure and direct the assessment recovered to be handed over for the benefit of the original institution;

Provided that no person who has had adverse possession of a property for a period of 12 years shall be deprived of such possession.

Appointment of *Dharmadarsis*.

15. Government may appoint *Dharmadarsis* to manage the affairs of religious or charitable institutions for such term and with such powers as may be prescribed and may frame rules for the conduct of business among them.

Investment of *Dharmadarsis* with the powers of a corporate person.

16. Government may invest *Dharmadarsis* with the powers, functions and responsibilities of a corporate person, including power to hold and dispose of property and to sue and be sued.

Appointment of Committees with powers of management.

17. Government may also appoint a Committee of persons chosen by election or otherwise with such powers of management and supervision as may be prescribed by rules, over one or more religious or charitable institutions.

*Investment of trust money.*

18. It shall be lawful for any trustee or person or persons having the management or control of any religious or charitable institution to invest money belonging to the institution and not required for immediate use on any of the following securities, and on no others, *viz.* :—

(*a*) In promissory Notes, debentures, stock or other securities of the Government of India or Mysore;

(*b*) In stock or debentures of, or shares or as deposits in, Railway or other Companies approved by Government;

(*c*) On a first mortgage of immovable property situate in Mysore; provided that the property is not a lease-hold for a term of years and that the value of the property exceeds by one-half, or if it consists of buildings exceeds by three-fourths, the mortgage money; or

(*d*) On any other security expressly authorised by the Instrument of Trust or approved by Government.

*Recovery of arrears of rent or revenue due to a Muzrai institution.*

19. Arrears of rent or revenue due from tenants in respect of property belonging to a Muzrai institution may be recovered by the officers empowered to recover revenue due to Government in the same manner as arrears of land revenue due to Government.

*Procedure when property is situated in more districts than one.*

20. When the property of any religious or charitable institution is situated in more districts than one, the Deputy Commissioner in whose district the institution itself is situated, or with his consent, any other Deputy Commissioner in whose district any part of the property is situated, may exercise all the powers conferred by this Regulation as regards the whole of the property; provided that, in cases of doubt or difference, Government may direct any one of the Deputy Commissioners having jurisdiction to take cognizance of the whole matter.



*Appeals from orders of a Muzrai Officer.*

21. Every order passed under this Regulation which is not liable to be set aside by suit filed under any of the provisions of this Regulation shall be subject to an appeal to Government—where the order has been passed by a Deputy Commissioner—and to the Deputy Commissioner—where it has been passed by an Assistant Commissioner—in the same manner and subject to the same limitations as appeals under the Land Revenue Code.

*Revision.*

22. Every order passed by a Muzrai Officer either in an original case or on appeal shall be subject to revision by Government.

*Saving of suits under Section 92 of the Civil Procedure Code.*

23. Any order passed under this Regulation or the rules framed thereunder by a Muzrai Officer or by Government shall not bar a suit under the provisions of Section 92 of the Code of Civil Procedure.

## CHAPTER III.

### *Provisions relating to Mathas or similar institutions.*

*Exemption of Mathas from the operation of the foregoing provisions.*

24. The foregoing provisions shall not apply to *Mathas* or other institutions of a similar nature or the property belonging to them which are in the possession of *Mathadhipatis* or other persons entitled by law or general or particular usage to exercise powers of management or ownership.

*When management of Mathas may be assumed by Government.*

25. Government may take over the management and possession of the property of any *Matha* or other institution of a similar nature (1) when the *Mathadhipati* or other head of the institution voluntarily applies for such help and places the institution or its property under the management of Government; (2) when he is dead or has left the country and has not been heard of for more than seven years, and has not made legal and satisfactory arrangement for the carrying on of the ordinary business of the institution, and there is no successor duly appointed according to the rules applicable to succession to

the office; (3) when he is a minor without a legally appointed guardian, fit and willing to act as such or is by reason of physical or mental infirmity unable to manage the affairs of the *Matha* or other institution.

Enquiry into allegations of mismanagement of a *Matha* or other institution.

26. Whenever a complaint is made by at least half the number of householders, or in cases in which the *Matha* or other institution has a large following, by at least a hundred house-holders, subject to its jurisdiction as disciples, that the *Mathadhipati* or the head of the institution has been grossly mismanaging the property or alienating the bulk of it for enriching his bodily relations or for other improper purposes, Government may order an enquiry.

Authority before whom the enquiry is to be held.

27. Such enquiry shall be before a Committee of not less than three members appointed by Government in each case.

Execution of orders passed.

28. When the decision of the Committee has been approved by Government, Government may pass such orders as may be deemed fit concerning the management of the affairs and property of the institution.

Appointment of *Mathadhipat* is by Government.

29. Where any *Matha* or other similar institution has come under the management of Government under clause (2) of Section 25, Government may take such steps as are necessary to fulfil the indispensable functions of the institution till a proper *Mathadhipati* is nominated in accordance with law or usage.

Powers of Government in regard to management of a *Matha*.

30. When property of a *Matha* or other similar institution has for any reason come into the possession of Government under the provisions of this Regulation, Government may exercise all the powers of management and disposal possessed by a duly appointed *Mathadhipati* or other head of the institution in possession; and may make and carry out a scheme either directly by Officers appointed or by a Committee constituted for the purpose.



Disposal of income of institution.

31. Government shall also have full power to dispose of the income of the institution as long as it is under its management (after making due provision for the maintenance of the *Mathadhipati* or other head of the institution, for carrying on services in temples and other places of worship appertaining to the institution in a reasonable manner) on objects of charity or for the spread and encouragement of religious instruction according to the tenets of the said institution.

## CHAPTER IV.

### *Pujaris and other hereditary temple servants.*

Enquiry into the claims to the office of a *Pujari* or other servant of a Muzrai institution.

32. When there is a dispute about the office of a *Pujari* or other servant of a Muzrai institution which by law or usage descends by hereditary right, the Amildar of the Taluk in which the institution is situated shall hold an enquiry in the presence of the parties interested and record statements and evidence relevant to the case.

Decision by Deputy Commissioner or Assistant Commissioner.

33. The Muzrai Officer shall, after reading the record of enquiry by the Amildar and hearing the parties interested, and after making such further enquiry as he thinks necessary, pass a decision on the merits of the case.

No temple office or service in a Muzrai institution to be hereditary; except under certain circumstances.

34. In the absence of proof to the contrary, no office or service in a Muzrai institution shall be deemed to descend by hereditary right unless it has been conferred originally with such an express stipulation in writing by a person with due authority or has been held successively by three generations of the same family in succession in due legal course.

Appointment of a *Pujari* or other officer in a Muzrai institution.

35. Where there is no claimant entitled to succeed to the office of a *Pujari* or other office in a temple or other place of worship, the appointment shall be made by the Muzrai Officer in cases of institutions under the direct management of the Muzrai Department, or in cases of other institutions dedicated to the public or a section of the public by

the devotees of the institution living in its vicinity under such rules as may from time to time be made by Government.

Removal of a *Pujari* at the instance of *Bhaktas*.

36. Where a majority of not less than three-fourths of the inhabitants of a village or other unit being devotees of a temple, object to the employment as *Pujari* of a person claiming by hereditary right, such person shall be set aside provided that the objectors pay to the claimant such amount by way of compensation as may be fixed by the Muzrai Officer.

## CHAPTER V.

*Miscellaneous.*

Mode of enquiry referred to in Sections 8, 11, 14 and 27.

37. The enquiry referred to in Sections 8, 11, 14 and 27 shall be conducted in the manner prescribed for a formal enquiry under the Mysore Land Revenue Code, after issue of notices to the parties interested and the Muzrai Officer or other person or persons holding the enquiry shall have all the powers of a revenue officer empowered to conduct such formal enquiry.

Bar of jurisdiction of Civil Courts in cases falling under the Regulation.

38. In all matters in which a Muzrai Officer or Government has power to pass any order or to take any action, Civil Courts shall exercise jurisdiction only to the extent allowed by this Regulation.

---

OFFICE OF THE REGISTRAR ... 19 JAN 1914 MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: [illegible]

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர் :—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச வருஷ மார்கழி மீ [ஸஞ்சிகை 11.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

இக்காலத்திய நிலைமை.

“𑌕𑍃𑌤𑍇 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌤𑍍𑌸𑌕𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑍋𑌪𑌾𑌧𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 । 𑌵𑍃𑌷𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍋 [illegible] ॥ [illegible] 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌂𑌶𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 । 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 [illegible] 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ [illegible] 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌤𑌾𑌮𑌸𑌂 [illegible] ॥” என்று சதுர்யுகத்தின் ஆதி யுகமாகிற க்ருதயுகத்தில் தர்மம் நிஷ்கபடமாகவும் லோபம் முதலியவையற்றும் பூர்ணமாக அநுஷ்டிக்கப்படுகின்றதென்றும், அதற்கடுத்த த்ரேதாயுகத்தில் தர்மம் ஒரு பாகம் குறைந்து அதர்மம் கொஞ்சம் ஆவிர்பவிக்கின்றதென்றும், அதற்குப் பின்

வரும் த்வாபர யுகத்தில் தர்மமும் அதர்மமும் ஸமமாக லோகத்தை வ்யாபித்து நிற்கின்றதென்றும், கடைசியான கலியுகத்தில் தர்மம் அத்யந்தம் லுப்தமாகி அதர்மம் தலையெடுத்து ஜகத்முழுவதையும் ஆக்ரமித்து நிற்கின்றதென்றும் ஸ்ரீ பாரதம் முதலிய இதிஹாஸங்களிலும் மற்றைப் புராணங்களிலும் நாம் படிக்கிறோம். இதை அநுஸரித்து, இக்காலத்திலுள்ள சில வைதிக வ்ருத்தர்கள், இப்பொழுது தர்மம் அநுஷ்டிக்கிறவர்களில் அநேகர் தர்ம ஜாலத்தை விஸ்தரித்து லோகங்களை வஞ்சிக்கிறார்களென்றும், ஸத்யம் முதலியவை இப்பொழுது லோபத்தை அடைந்து அந்த ஸத்ய ஹாநியினால் ஆயுஸ் க்ஷயித்துப் போய் ஜநங்களெல்லாம் வித்யாஹீநர்களாகவும் லோபமோஹபரர்களாகவும் காமாஸக்தர்களாகவும் இருக்கிறார்களென்றும் மிக்க நிர்வேதத்துடன் சொல்லிக்கொண்டு, 'இனி ஜகத்துக்கு ஶ்ரேயஸ் எவ்விதமாக ஸம்பவிக்கப்போகின்றது?' என்று வருந்துகிறார்கள். க்ஷணத்துக்கு க்ஷணம் தர்மம் குறைவடைகின்றதென்றும், தங்கள் பால்யத்திலிருந்த ஆயுஸ்ஸும் வீர்யமும் புத்தியும் பலமும் தேஜஸ்ஸும் கூட இப்பொழுது இல்லை என்றும் அவர்கள் மிகவும் ஶோகிக்கிறார்கள். இவர்கள் ஶோகிப்பது முழுவதும் ஸரியான காரணத்துடன் கூடியதா? இல்லாவிட்டால், அதீதமான காலத்தைச் சிறந்த காலமாகவும் ஸந்நிஹிதமான காலத்தை தோஷதுஷ்டமாகவும் தோன்றச் செய்யும் வார்த்தக ப்ரயுக்தமான ப்ரமத்தால் உண்டானதா? என்பதைச் சற்று விசாரிப்போம்.

இப்பொழுது இருக்கும் காலஸ்திதியைக் கவனித்துப் பார்த்தால், உண்மையாகவே சில தர்மங்கள் லுப்தங்களாகி வருகின்றன என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஜாதி ப்ரயுக்தமான தர்மங்களும், ஶாஸ்த்ரம் முதலியவைகளில் விஶ்வாஸமும், பரம்பரையாக நடைபெற்றுவரும் ஆசாரங்களில் ப்ரதிபத்தியும் இக்காலத்தில் மிகவும் குறைந்திருக்கின்றன. ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரர்களென்னும் வர்ணபேதங்கள் க்ரமஶ: அழிந்து போவதையும், போஜநாதிகளில் பஹுகாலமாக ஏற்பட்டு வந்த நியமங்கள் சீர்குலைவதையும், அப்ரத்யக்ஷமான தேவ பித்ருக்களுடைய ஆராதநாதிகளில் ஶ்ரத்தை குறைவதையும், உடனுக்குடன் பலங்களைக் கொடுக்காமலுள்ள ஸந்த்யாவந்தநம் முதலியவைகளில் அஸங்கத புத்தி உண்டாவதையும், அர்த்த ஸம்பாதநமே மிகப் பெரிதான தர்மம் போலக் கொண்டாடப்படுவதையும் நாலா பக்கங்களிலும் எல்லாரும் பார்க்கக் கூடும். பாஷாந்தரத்தை அப்யஸித்து ஶாஸ்த்ர வஶ்யர்களுடைய ஸம்பர்க்கமின்றிக்கே வளர்ந்து வந்துள்ள லௌகிகர்களுள் இம்மாதிரியான நோக்கம் பெரும்பாலும் காணப்பட்டாலும், சில ஸாத்விகர்களான மஹான்களை விலக்கிவிட்டால், பாஷாந்தர அப்யாஸமின்றிக்கே வேதாத்யயநத்தைச் செய்துகொண்டு வேறு எவ்வித வ்ருத்தியையும் அவலம்பிக்காமலிருக்கும் வைதிகர்களுள்ளும் இதே விதமான நோக்கத்தை நாம் காண்கிறோம். ஆனால், ஸத்யம் ஆத்யந்திகமாகத் தவறிவிட்டதென்றாவது, ஜநங்களெல்லாரும் லோபம் மோஹம் முதலியவற்றால் ஆக்ராந்தர்களாகி விட்டார்களென்றாவது நமக்குத் தோன்றவில்லை. கணக்கற்ற மஹான்கள் ஸத்யஸந்தர்களாகவும் தர்ம பரர்களாகவும் இருப்பதை இக்காலத்திலும் காண்கிறோம். ஆகையால், 'இந்தக் காலம் அத்யந்தம் கெட்டுப்போய்விட்டது; இனி ஜகத் க்ஷேமமடைவது ஸாத்யமில்லை' என்று சொல்வது கொஞ்சம் அத்யுக்தியே. ஜாதி ஸாங்கர்யமும் சில கட்டுப்பாடுகளில் ஒரு வித தளர்ச்சியும் சில இடங்களில் உண்டாகிக்கொண்டிருக்கின்றன என்பது மாத்ரம், ஸர்வமும் ப்ரதீகாரமின்றிக்கே நஷ்டமாகிவிட்டது என்று சொல்வதற்குத் தகுந்த காரணமாகுமா? நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கும் நமக்கு இக்காலத்திய ஸ்திதி அவ்வளவு இருள் மூடினதாகத் தோன்றவில்லை; ப்ரத்யுத, சில அம்ஶங்களில் முற்காலத்து ஸ்திதியைவிடச் சிறந்ததாகவே தோன்றுகின்றது. அந்த அம்ஶங்களிற் சில வற்றை இப்பொழுது எடுத்துக் கூறுவோம்.



ஸாமாந்யமாக, தங்மத்தில் ஒருவித அபிருசி உண்டாவதற்கும் பாபத்திலிருந்து பயப்படுவதற்கும் தைவமொன்று உண்டு என்று விஶ்வஸிப்பதற்கும் பரஸ்பரம் ஸுஹ்ருத் பாவத்தை முன்னிட்டு வர்த்திப்பதற்கும் ஜ்ஞாநம் முக்யமான ஹேதுவென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். எவ்வித ஜ்ஞாநமுமில்லாமல் ம்ருக ப்ராயர்களாக ஜீவித்துவரும் காட்டு மனிதர்களிடம் தர்மாநுஷ்டாநத்தையாவது தைவ பக்தியையாவது சிறந்த ஸௌஹார்த்தத்தையாவது நாம் காண்கிறோமில்லை. லோக வ்ருத்தாந்தங்களைத் தெரிந்தும் பெரியோர்களுடன் பழகியும்

ஜகத்தின் ஸ்திதியைத் தமது புத்தியைக் கொண்டு நிரூபித்தும் இவைகளால் புத்திக்கு ஒருவித விகாஸத்தை அடைந்துள்ளவர்களே தர்ம பரர்களாக இருக்கிறார்களென்பதை நாம் பார்க்கிறோம். இவ்விதமான ஜ்ஞாநம் முற்காலத்தில் சிலருக்கு மாத்ரம் லப்யமாக இருந்ததே தவிர எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்ததில்லை. ஜாதியினாலோ சரித்ரத்தினாலோ இவைபோன்ற மற்றைக் காரணங்களினாலோ, சிலரே இந்த ஜ்ஞாநத்திற்குப் பாத்ரமாக இருந்தார்கள். மற்றவர்கள் ஸ்தூலமாகத் தங்கள் தர்மங்களைத் தெரிந்துகொண்டு அவைகளைச் சந்தேகக்குறையச் சரிவர அநுஷ்டித்து வந்தார்களே தவிர ஜ்ஞாந வ்ருத்தியைத் தேடிக்கொள்ள அஶக்தர்களாகவே இருந்தார்கள். இப்பொழுது அவ்வித ஸங்கோசம் கொஞ்சம் கொஞ்சமாக நிவ்ருத்தியாகி, ஒவ்வொரு மநுஷ்யனுக்கும் ஈஶ்வரன் தனது அளவற்ற க்ருபையால் கரண களேபராதிகளைக் கொடுத்திருக்கிறானென்றும், அந்தக் கரணங்களைச் சரிவரப் பயிற்சிசெய்து அவைகளை யதாக்ரமம் உபயோகித்து ஶ்ரேயஸ்ஸைத் தேடிக்கொள்வது எல்லாருக்கும் உபபந்நமென்றும், அப்படிச் செய்யாமலிருப்பது பகவானுடைய திருவுள்ளத்திற்கு விருத்தமென்றும் இத்யாதியான எண்ணம் இக்காலத்தில் பரவி வருகின்றது. ஜ்ஞாநத்தை வ்ருத்தி செய்துகொள்வதிலிருந்து எவனும் அநர்ஹனென்று நிராகரிக்கப்படவில்லை. ஜ்ஞாநம், ஸகலருக்கும் அபிவ்ருத்தமாகி எவ்வித ஸங்கோசமுமின்றிக்கே பூர்ணமாக இருக்கும் தன்மையை அடைவதே ஸர்வஶ்லாக்யமான ஸ்திதியாதலால், அந்த ஸ்திதியை ஸாதித்துக் கொடுப்பதுபோலுள்ள இக்காலத்தை எப்படி சீர்குலைந்த காலமென்று நாம் சொல்லக் கூடும்?

தவிரவும், ஜ்ஞாந விஷயத்திற் போல, ஐஹிக ஸுகாநுபவங்களிலும் மநுஷ்யர்களுக்குள் பரஸ்பரம் தாரதம்ய பாவனை வரவரக் குறைவடைந்து வருகின்றது. விஷயாநுபவமும் அதனால் உண்டாகும் ஆநந்தமும் அத்யந்தம் ஹேயமானாலும், ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றிருக்கும் நமக்கு அவைகளில் ப்ரவ்ருத்தியுண்டாவது ஸஹஜமே. அப்படி அவைகளை அநுபவிக்கும் விஷயத்தில், சிலரே அதற்கு அர்ஹர் மற்றவர்கள் அர்ஹரல்லர் என்று சொல்வது ந்யாய்யமாகுமா? ஶீத வாத ஆதபங்களினால் ஒருவன் வருந்தும்பொழுது அவனை அப்படி வருந்தும்படி பார்த்திருப்ப



தும், இந்த்ரிய த்ருப்தியை ஸம்பாதித்துக் கொள்வதில் ஆஸ்தையுள்ளவர்களை அவர்கள் தேடும் த்ருப்தி ந்யாய்யமாக இருக்கும் வரையில் அதைத் தேடவொட்டாமல் தடுப்பதும், சிலர் இவ்வளவு ஸுகத்தைத்தான் அநுபவிக்கலாம் இதற்குமேல் அநுபவிக்கக் கூடாது என்று சொல்வதும் பெரிய பக்ஷபாதமாகுமன்றோ? இப்படிப்பட்ட தாரதம்யங்கள் முற்காலத்தில் கொஞ்சம் நடைபெற்றுக் கொண்டே வந்திருந்தன. அவைகளை இப்பொழுது அவ்வளவாகக் காணோம். சில துஷ்டர்களிருக்குமிடத்தில் மாத்ரம் ந்யாய விருத்தமான இம்மாதிரி சில நிர்பந்தங்கள் காணப்படுகின்றன. ஆனாலும், அவைகள் ஸரியல்ல என்றும் தௌஷ்ட்ய ப்ரயுக்தங்களென்றும் பலர் உணர்வதை நாம் பார்க்கிறோம். ஏழைமைத் தனத்தினாலும் இன்னும் மற்றை அஶக்தியினாலும் சிலர் கஷ்டங்களை அநுபவித்தால், அவர்கள் விஷயத்தில் அநுதாபத்தையே ப்ராயேண எல்லாரும் கொள்ளுகிறார்களே தவிர, ‘அவர்கள் அவ்விதமாகக் கஷ்டப்படவே வேண்டும்; ப்ரதீகாரத்திற்கு ஸர்வதா அநர்ஹர்கள்’ என்று நினைப்பவர்கள் அவ்வளவாக இப்பொழுது இல்லை. இவையெல்லாம், காலம் அநிஷ்டமான வைபரீத்யத்தை அடைகின்றது என்பதற்குச் சிஹ்நமாகுமோ?

விவேசந ஶக்தியையுடைய ஸகல ஜீவன்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று மஹான்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்கள், இக்காலத்தில் எவ்வளவு தூரம் ப்ரசாரமாகி இருக்கின்றனவென்றும், புத்திக்கு ஒரு ப்ரபோதத்தை உண்டுபண்ணக் கூடிய ஸாமாந்ய புஸ்தகங்கள் இப்பொழுது ஸர்வ ஜநங்களுக்கும் எவ்வளவு ஸுலபமாகக் கிடைக்கின்றனவென்றும், அக்ஷர ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொண்டிருக்கும் ஸ்த்ரீ ஶூத்ரர்களும் புஸ்தக பரிஶீலநத்தால் எவ்வளவுதூரம் ஜ்ஞாநவ்ருத்தியை ஸம்பாதித்துக் கொள்ளுகிறார்களென்றும் நிரூபித்துப் பார்க்கும் ஒருவன், காலம் இப்பொழுது கெட்டுப்போய் விட்டது என்று சொல்லத் துணியான். ஸ்வல்ப காலம் முன்பு வரையில், புராணம் தர்ம ஶாஸ்த்ரம் வேதாந்தம் இவை ஸம்பந்தப்பட்ட க்ரந்தங்கள், சிலவித்வாங்களிடம் மாத்ரம் இருந்தனவே தவிர, மற்றை எவருக்கும் அகப்படமாட்டா. அந்த வித்வாங்களிடம் சென்று அவர்களை ஆஶ்ரயித்து பஹுவிதமாக ப்ரயாஸப்படுமவர்களாலே மாத்ரம் அந்தப்

புஸ்தகங்களிலுள்ள விஷயங்கள் தெரிந்துகொள்ளப்பட்டு வந்தன. இப்பொழுதோ, அந்த ஸ்திதி அடியோடு மாறிவிட்டது. ஸகல புஸ்தகங்களும் அச்சில் பதிப்பிக்கப்பட்டு இஷ்டமுள்ளவர்களெல்லாரும் அடையும்படி பலவிடங்களில் ப்ரசுரம் செய்யப்படுகின்றன. ஸ்ரீராமாயணம் ஸ்ரீ பாரதம் முதலிய க்ரந்தங்களும் உபநிஷத் ஸூத்ர பாஷ்யம் முதலியவைகளும் முற்காலத்தில் எவ்வளவு பெயர்களால் பரிஶீலநம் செய்யப்பட்டனவோ, அதைவிடப் பல மடங்கு அதிகமான பெயர்களால் இப்பொழுது படிக்கப்படுகின்றன என்பதை யார் நிராகரிக்கக்கூடும்? இந்த க்ரந்தங்கள் ஜ்ஞாநப்ரதங்கள் என்பதை நாம் அங்கீகரித்தால், முற்காலத்தைக் காட்டிலும் இக்காலத்தில் ஜ்ஞாநத்தை அடையும் ஜநங்கள் அதிகமாக வ்ருத்தியாகிறார்கள் என்பதில் ஆக்ஷேபமிருக்குமோ? இம்மாதிரியான ப்ரசாரம் நமது தேஶத்தில் மாத்ரம் என்பது இல்லை; தேஶாந்தரங்களிலும் இதே ஸ்திதி தென்படுகின்றது. அச்சிடுவது என்னும் ஏற்பாடு உண்டானபிறகு ஸர்வஜந ஸுலபமாக வெளிப்படுத்தப்படும் புஸ்தகங்கள் கணக்கற்றவை; புஸ்தகம் படிக்கும் ஜநங்களும் ஏராளமாக வ்ருத்தியாகி இருக்கிறார்கள்; அதற்கு அநுகுணமாக ஜகத்துக்கு ஆநுகூல்யமும் வ்ருத்தியாகிக் கொண்டே வரவேண்டும். இப்படி ப்ரசுரம் செய்யப்படும் புஸ்தகங்களுள் சில ஆக்ஷேபார்ஹங்களாக இருந்தாலும், ஶ்ரேயஸ்ஸாதகமாய் ஆக்ஷேபாநர்ஹங்களான புஸ்தகங்கள் ஸங்க்யையில் அதிகமாக இருப்பதால், பொதுவில் இம்மாதிரியான ப்ரசாரம் ஜநஸாமாந்யத்திற்கு ஆநுகூல்யத்தை உண்டுபண்ணுமே தவிரத் தீங்கை விளைவிக்காது. தவிரவும், தோஷ துஷ்டங்களான க்ரந்தங்கள் ஶீக்ரத்தில் லுப்தமாகி விடுமென்பதிலும் ஶங்கை தோன்றவில்லை.

இது மாத்ரமன்று. விஷயங்களைச் சர்ச்சை செய்தே ஒத்துக்கொள்ளுகிறது என்கிற ஒரு பரிபாடி இக்காலத்தில் க்ரமஶ: ஏற்பட்டு வருகின்றது. பெரிய ஆப்ததமர்களால் சொல்லப்படும் விஷயங்களில்கூட, அவைகள் புத்தியில் தெளிவாகப் படியும் வரையில், அவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணமுள்ள எல்லாரும் திரும்பத் திரும்ப ப்ரஶ்நம் செய்வதையும், மநஸ்ஸில் தோன்றும் ஶங்கைகளை நிராபாதமாகவும் கூச்சமற்றும் வெளியிடுவதையும் நாம் காண்கிறோம். முற்காலத்தில், பெரி



யோர்கள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு நிர்த்தாரணம் சொன்னால், அந்த நிர்த்தாரணத்தை மற்றவர்களெல்லாரும் எவ்வித ஆக்ஷேபத்தையும் செய்யாமல் அப்யுபகமம் செய்யவேண்டும் என்னும் நியமமொன்று இருந்தது. அந்த நியமம் இப்பொழுது ஶிதிலமாகிக்கொண்டே வருகின்றது. பெரிய ஆசார்யர்கள் செய்யும் உபதேஶத்திலும், ஶிஷ்யர்கள், தங்களுக்கு நிர்விஶங்கமாக நிர்ணயம் ஏற்படும் வரையில் விவதிக்கலாம் என்பதை எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஆவாபோத்வாபம் செய்து ஸம்பாதிக்கப்படும் ஜ்ஞாநமே த்ருடமாக இருக்குமாதலால், இந்தப் பரிபாடி ஸர்வ விதத்திலும் ஶ்லாக்யம். ஈஶ்வரனால் கொடுக்கப்பட்டுள்ள புத்திக்கு ஸரியான ஸம்ஸ்காரம் உண்டாக வேண்டுமானால், இதுவே உசிதமான மார்க்கமாகும். முற்காலத்தில், குதர்க்கமாக ஆக்ரஹத்துடன் விவதிக்கிறவர்களைக் கண்டிக்கும் பொருட்டே, விவதிப்பதே பிசகு என்று பெரியோர்கள் நிர்பந்தமொன்றை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த நிர்பந்தம் அப்ரதீக்ஷிதமான மார்க்கத்தில் ப்ரவ்ருத்தித்து, ப்ரபோதத்திற்கு முக்ய ஹேதுவாயுள்ள சர்ச்சையையே பஹுவாக அடக்கிவிட்டது. இப்பொழுது, அதிலிருந்து மீண்டு, ஜநங்கள், எந்த விஷயத்திலும் ஊஹாபோஹங்களைச் செய்கிறதென்றும் மநஸ் ஸாக்ஷ்யத்திற்கு விருத்தமாக ஒன்றையும் ஒத்துக்கொள்ளுகிறதில்லையென்றும் இம்மாதிரியான ஒரு வித ஸ்வாச்சந்த்யம் அநுபவித்து வருவதைப் பார்க்க நாம் ஸந்தோஷிக்கிறோம். இந்த ஸ்வாச்சந்த்யம் சில அம்ஶங்களில் அநிஷ்டமாக இருந்தாலும், முடிவில் அநுகூலமாகவே பரிணமிக்கும் என்கிற நிஶ்சயம் நமக்கு உண்டு.

இப்படி அநேக ப்ரகாரங்களில், ஜாதி குணம் வ்ருத்தம் முதலிய ஹேதுக்களினால் உண்டாகக்கூடிய எவ்வித வைஷம்யமுமின்றிக்கே, ஜ்ஞாநத்தை வ்ருத்திசெய்து கொள்வதிலும் அது வழியாக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்வதிலும் ஜநங்கள் தமக்குள்ளாகப் பரஸ்பரம் ஒருவித ஸாம்யத்தைப் பாவித்துவரும் இந்த யுகத்தை அத்யந்தம் விநாஶஹேதுவென்றும் கொடுமையுள்ள காலமென்றும் ஶ்ரேயஸ்ஸுக்கு ஸாதகமன்றென்றும் சொல்வது ந்யாய்யமாகுமா? “ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்”, “ஸர்வலோகஶரண்யாய”, “ஸுஹ்ருதம் ஸர்வபூதா

𑌰𑌂", "𑌸𑌮𑍋𑌽𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁" என்றன்றோ எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணம் கொண்டாடப்பட்டிருக்கின்றது? ஸாம்ய ரூபமான அந்த எம்பெருமானுடைய குணத்தை அடியொற்றி ஜ்ஞாந ஸம்பாதந விஷயத்தில் எவ்வித விசேஷத்தையும் பாவிக்காமல் ஜநங்கள் இப்பொழுது நடந்துகொண்டு வந்தால், இக்காலம் கெட்ட காலமாகுமோ? ஜாதி ஸாங்கர்யம் உண்டாகி விட்டது என்னும் ஒரு காரணம், பெரிதான இந்த நிந்தைக்குப் போதுமான காரணமாகாது. உண்மையாகவே, ஜாதி தர்மங்கள் லோப மடையாமலே கீழ்க்கூறிய ஸாதகங்களான அம்சங்களெல்லாம் நமக்குக் கிடைத்திருந்தால் மிகச் சிறப்பாகவே இருக்கும். அது இல்லாததுபற்றி 'ஸர்வமும் கெட்டுப்போய் விட்டது' என்று நாம் சோகிப்பது அஜ்ஞாநக்ருதமே ஆகின்றது என்று நாம் த்ருடமாகச் சொல்வோம்.

∴ ∴ ∴

**நமது வைஸ்ராய்**

நமது தேசத்தின் பரிபாலநத்துக்கு முக்யாதிகாரியாக இருக்கும் நமது வைஸ்ராய், சென்ற மாஸத்தில் இந்தச் சென்னை ராஜதாநியைப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் வந்திருந்தாரென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், எவ்வளவு காலம் அவர் இவ்விடம் தங்கி எவ்வளவு ஸ்தலங்களைப் பார்த்துப் போனால் அவருக்கும் நமக்கும் இன்னும் இந்த ராஜ்ய ஸம்பந்தப்பட்ட மற்றவர்களுக்கும் த்ருப்தியாக இருக்குமோ, அவ்வளவு காலம் தங்கியிருக்கவாவது அவ்வளவு இடங்களைப் பார்த்துப்போகவாவது அவருக்கு ஸாத்யமில்லாமல் போய் விட்டது. ராஜ்ய பரிபாலநமாகிற பெரியதொரு பாரத்தை வஹிக்குமவருக்குக் கணக்கற்ற வ்யாபாரங்களிருந்திருக்கக் கூடும். அவைகளுக்கு உபரோதமின்றிக்கே மற்றைக் கார்யங்களில் அவர் ப்ரவ்ருத்திக்க வேண்டியது தர்ம்யமாதலால், அவர் அதித்வரிதமாக இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போனதைப் பற்றி நாம் வருத்தப்பட ஹேது வில்லை. யாதொரு தீங்கு மின்றிக்கே ஸௌக்யமாக அவர் தமது இடம்போய்ச் சேர்ந்தாரென்பதே நமக்கு மிக்க ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. அவருக்கு எவ்வித ஹாநியும் ஸம்பவியாமல் அவர் ஸௌக்யமாக இருக்கவேண்டுமென்பதே நம்முடைய ப்ரார்த்தநை.

OFFICE OF … 10 JAN 1914 … MADRAS



[illegible] ।
[illegible] ॥

யாதொரு வைஷம்ய பாவனையுமில்லாமல் எல்லாரிடத்திலும் ப்ரீதியுடன் அவர் நடக்கிறபடியால், அவர்மீது நமக்கு அவ்வளவு விச்வாஸம் உண்டாகி இருக்கின்றது.

அவர் சென்றமாஸத்தில் சென்னைபட்டணத்தில் வந்திருந்த பொழுது, அவருடைய தர்ம ஸ்வபாவம், நம் எல்லாருடைய சித்தத்தையும் அதிமாத்ரம் ஆகர்ஷிக்குமளவு ஒரு விஷயத்தில் வெளிப்பட்டது. அது இன்னது என்பதைக் கொஞ்சம் எழுதுவோம். கொஞ்ச காலமாக, நமது தேசத்திலுள்ள சூத்ரர்களில் அநேகரும் இதர ஜாதியர்களில் அநேகரும் இவ்விடத்தில் வ்ருத்தி கர்சிதர்களாய் த்வீபாந்தரங்களுக்குப் போய் அர்த்த ஸம்பாதநம் செய்துகொண்டு, சிலர் திரும்பி வருவதையும் சிலர் திரும்பாமல் அவ்விடங்களிலேயே நிலைத்து விடுவதையும் நாம் எல்லாரும் அறிவோம். இப்படி இவர்களால் போய்ச்சேரப்படும் த்வீபாந்தரங்களுள் சில, நம்முடைய இங்க்லிஷ் கவர்ன்மென்டாருக்கு ஸாக்ஷாத்தாக அதீநமானவை; சில இங்க்லிஷ் காரர்களுடைய ஸம்பந்தம் பெற்றிருந்தாலும் ஒரு விதமான ஸ்வாதந்த்ர்யத்தை அநுபவித்து வருகின்றன. இப்படி ஸ்வதந்த்ரமாக இருக்கும் த்வீபாந்தரங்களுள் தென் ஆப்ரிகா என்பது ஒன்று. அது, ஆப்ரிகா என்னும் கண்டத்தின் தென் பாகத்திலுள்ளது. ஐரோப்பாவிலிருந்து அங்கே போய்க் குடியேறினவர்களே அதன் ராஜ்ய பரிபாலநத்தைப் பார்த்து வருகிறார்கள்; ஆனால், இங்க்லிஷ்ராஜாங்கத்திற்கும் அதற்கும் அவ்வளவாக ஸம்பந்தமில்லை. அவ்விடத்திற்கு நமது தேசத்தவர்கள் பஹுகாலமாகப் போய் வருவது உண்டு; அநேகர் அவ்விடத்திலேயே தங்கியும் இருக்கிறார்கள். அந்தக் கவர்ன்மென்டார் இவர்கள்மீது விச்வாஸம் பாராட்டாமல் இவர்களை அத்யந்தம் நிஹீநர்களாகப் பாவித்து வேலை செய்வதற்கு மாத்ரம் இவர்கள் தகுந்தவர்களே தவிர வேறு ஸ்வாதந்த்ர்யத்திற்கு அநர்ஹர்களென்று இவர்களைப் பஹிஷ்கரித்து வருவது வழக்கம். இப்பொழுது கொஞ்ச காலமாக இவர்கள் அந்தக் கவர்ன்மென்டாரிடம் அநுபவிக்கும் துன்பம் இவ்வளவுதான் என்று சொல்லமுடியாது. அதைப் பற்றி இங்

தத் தேசத்தில் அநேக ஜநங்கள் வருத்தப்பட்டு, இதற்கு ப்ரதீகாரம் இன்னது என்பதை ஆலோசிக்கவும், அங்கே கஷ்டப்படும் ஜநங்களுக்கு யதாசக்தி த்ரவ்ய ஸஹாயம் செய்யவும் பலவித முயற்சியைச் செய்து வருகிறார்கள். ஒருகால், கேவலம் ஜநங்கள் முயற்சிசெய்வதைக் காட்டிலும் நமது இந்தியா கவர்ன்மென்டார் இது விஷயத்தில் கொஞ்சம் ச்ரமத்தை எடுத்துக்கொண்டு ப்ரதீகாரத்தைத் தேட ப்ரவ்ருத்தித்தால் கொஞ்சம் அநுகூலம் கிடைக்கலாமென்று நினைத்து, நம்மவர்களில் ப்ரமுகர்களாயுள்ள அநேகர், நமது வைஸ்ராயிடம் போய் வஸ்துஸ்திதியை விண்ணப்பம் செய்துகொண்டார்கள். 'நம்மைச் சேர்ந்தவர்களாகவுள்ள நம்முடைய தேசத்து ஜநங்களின்மீது இவர்கள் குற்றம் சாற்றுகிறார்கள்' என்று எண்ணுமல், நமது வைஸ்ராய், அவ்விடத்தில் நடக்கும் அக்ரமத்தை அக்ரமமாகவே உணர்ந்து, இதை ஶீக்ரத்தில் நிறுத்தும்படியான மார்க்கத்தைத் தேட வேண்டுமென்று இங்கிலாந்திலுள்ள நமது மந்த்ரி (Secretary of State) க்கு எழுதினதுடன், ஶ்ரீவர் சென்னைபட்டணத்துக்கு வந்திருந்த பொழுது தகுந்ததொரு ஸமாஜத்தின் முன்னிலையில், தமக்கு இது விஷயமாக உண்டாகியிருக்கும் வருத்தத்தையும், தென் ஆப்ரிகாவில் கஷ்டப்படும் ஜநங்களின்மீது தமக்குள்ள மிக்க அநுதாபத்தையும், இது விஷயமாக ப்ரதீகாரமொன்றைத் தேடுவதில் தாம் பலவிதமான முயற்சியைச் செய்வதான ஓர் உறுதியையும் நன்றாக வெளிப்படுத்திப் பேசினர். இது அவருக்குத் தகுந்த பேச்சே. அஸாதாரணமான தர்ம ஸ்வபாவம் இல்லாவிட்டால் இப்படிப்பட்ட நிஷ்பக்ஷபாதமான நோக்கம் உண்டாகுமோ? இப்படி இருக்கும் இவருடைய நோக்கம் இந்தியாவில் எவ்விடத்திலும் பரவி

"ஸந்தே வயம் ஸர்வஸம்ருத்தகாமா யேஷாமயம் ந:
குஶல: ப்ரஶாஸ்தா - ராஜோ ஜநஸ்யாஸ்ய யதேஷ ஸர்வம்
ப்ரவர்த்வா ராஷ்ட்ரமிதம் ரக்ஷிதா"

என்று இந்தியாவிலுள்ள ஜநங்களெல்லாருக்கும் இவர் ராஜ்யாதிகாரியாக வந்ததில் அளவற்ற ஆநந்தத்தை உண்டுபண்ணி இருக்கின்றது. இப்படி இவர் வைஷம்ய மற்று நம்மிடத்தில் ஸௌஹார்த்தம் பாராட்டினதற்காக, வைஷம்யமுள்ள அநேக இங்கிலீஷ்காரர்கள் இவரை நிந்திக்கிறார்கள். ஸாத்விகமான மார்க்கத்தில் நடக்கிற இவரை இந்த நிந்தை என்ன செய்யும்?



∴ ∴ ∴

**ஶ்ரீ அஹோபிலம் ஸந்நிதி.**

நாளது டிஸம்பர் மாஸம் 6-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் ஶ்ரீ அஹோபிலம் ஸந்நிதி ஸம்பந்தமான விளம்பரமொன்று ப்ரசுரம் செய்யப்பட்டிருந்தது. ஶ்ரீ அஹோபிலத்தில், ஸந்நிதியின் கைங்கர்ய பரர்கள் வஸிப்பதற்காக எட்டு க்ருஹங்களை ஶ்ரீ அழகிய சிங்கர் கட்டுவிக்கப் போகிறாரென்றும், அவ்விடத்திலுள்ள ஶ்ரீபாஷ்யகாரர்ஸந்நிதிமுதலிய சில ஸந்நிதிகளுக்கு ஜீர்ணோத்தாரணம் நடக்கப்போகின்றதென்றும், அவைகளின் நிஷ்பத்திக்காக ஶ்ரீ மடத்திலிருந்து ரூ. 20000 செலவிடும்படி ஶ்ரீ அழகிய சிங்கர் நியமித்திருக்கிறாரென்றும் அந்த விளம்பரத்திலிருந்து நாம் அறிகிறோம். இந்தத் தொகையைச் சரிவரச் செலவிடவும், ஶ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளப்படி கார்யத்தை ஸாதிக்கவும் 5-பெயர் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்றும், அந்தக் கமிட்டியார் கட்டடத்துக்கு வேண்டிய கல் சுண்ணும்பு மர ஸாமான்கள் முதலியவற்றைச் சேர்க்க ப்ரயத்நப்படுகிறார்களென்றும், இந்தக் கைங்கர்யத்தில் அந்வயிக்க இஷ்டமுள்ள எல்லாரும் அந்தக் கமிட்டியாருக்கு எழுதி அவர்களுடைய அநுமதியின் பேரில் அந்வயிக்கலாமென்றும், இன்னும் இது ஸம்பந்தமான சில ஸாமாந்ய அம்ஶங்களும் அந்த விளம்பரத்தில் காணப்படுகின்றன. இது மிக்க ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய ஸமாசாரம். பலம் மாத்ரமின்றிக்கே, பலத்தை ஸாதித்துக் கொடுக்கும்பொருட்டு உத்தேஶிக்கப் பட்டிருக்கும் உபாயமும் மிகவும் புகழத்தக்கதாக இருக்கின்றது. 'இப்படிப்பட்ட நற்காலமும் வருமோ?' என்று எண்ணியிருந்த நமக்கு, பஹு காலமாகத் தாரித்ர்யத்தால் வருந்தும் ஒருவனுக்குப் பெரியதொரு நிக்ஷேப மகப்பட்டால் எப்படியோ, கண்ணை ஆத்யந்திகமாக இழந்துவிட்டோமென்று நிர்விண்ணனாக இருக்கும் குருடனொருவனுக்கு அப்ரதீக்ஷிதமாகக் கண் கிடைத்தால் எப்படியோ, கதியே போய்விட்டதென்று துக்கிதனாக இருக்கும்

முடவனுக்கு ஒரு விசித்ர ஶக்தியால் கால் முளைத்தால் எப்படியோ, அப்படியே அளவற்ற ஆநந்தமொன்று ஜநிக்கின்றது. இப்பொழுது ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி பாங்கு இல்லாமல் எழுந்தருளி யிருப்பதையும், ஸ்ரீ ஸந்நிதிக்கு அநேக ப்ரகாரங்களில் நேரிட்டிருக்கும் செலவையும், இம்மாதிரியான வ்யாபாரங்களில் ஸாமாந்யமாக ஸ்ரீ ஸந்நிதியின் அதிகாரிகளுக்குள்ள அநாதரவையும், இன்னும் இவை போன்ற மற்றை ஸ்திதிகளையும் உணர்ந்திருக்கும் நமக்கு முதலில் இந்த வ்ருத்தாந்தம் முழுவதும் அஶ்ரத்தேயமாகத் தோன்றிற்று. பின்பு மித்யையாக இவ்வளவு வார்த்தை ஜநிக்காது என்னும் ஒரு அநுமாநத்தினால் இதை நம்பலானோம். இருந்த போதிலும், இப்பொழுது இந்தக் கைங்கர்யத்தில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருவுள்ளம் ப்ரவேஶித்ததற்குக் காரண மென்ன? யார் இதை இப்பொழுது உத்போதநம் செய்தார்? எந்த வருமானத்திலிருந்து பெரியதான இந்தச் செலவு செய்யப்படப் போகின்றது? இத்யாதியான அம்ஶங்கள் தெளிய விளங்கும் வரையில் அந்த நம்பிக்கை த்ருடமாகப் பதியாது போலிருக்கின்றது. அநேக ஶிஷ்யர்களால் பலதடவைகளில் இம்மாதிரியான சீர்திருத்தங்களைப்பற்றிப் பலவாறாகச் செய்து கொள்ளப்பட்ட விஜ்ஞாபநங்களை அநாதரித்தும், இது போன்ற மற்றை விஷயங்களில் மஹத்தான ஔதாஸீந்யத்தை வஹித்தும் எழுந்தருளியிருக்கும் இந்த ஸ்ரீ ஸ்வாமிக்குத் திடீரென்று இதனிடத்து ஓர் ஆவலும் ஶ்ரத்தையும் ஜநித்தது மிகவும் ஆஶ்சர்யகரமாக இருக்கின்றது. “[illegible] பவிதவ்யாநாம் த்வாராணி பவந்தி ஸர்வத்ர” என்பதுதான் ஸமாதாநமாக வேண்டும். எது காரணமாக இருந்தாலும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளத்தில் இப்பொழுது உதித்திருக்கும் இந்த நோக்கம் ஸ்வப்ந ப்ராயமாகி விடாமல் நிலைபெற்று நிற்கவேண்டு மென்றும், ப்ரதம ப்ரவ்ருத்தியாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும் இந்த அஹோபில கைங்கர்யம் எவ்வித விக்நமுமின்றிக்கே ஶீக்ரத்திலேயே பூர்த்தி யடையவேண்டு மென்றும், இதே மாதிரி மற்றை இடங்களில் அவஶ்யம் அபேக்ஷிதமாயுள்ள கைங்கர்யங்களும் யதாவகாஶம் நடைபெற வேண்டுமென்றும் திரும்பத் திரும்ப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம். “அதிஸ்நேஹ: பாபஶங்கீ” என்னும் ந்யாயத்தால், அதிஶங்கை மாத்ரம் நமது



மனத்தை விட்டு விலகாது நிற்கின்றது. பகவதநுக்ரஹத்தால் அந்த அதிஶங்கை நிராதாரமாகப் போகவேண்டும்.

∴ ∴ ∴

**நான்காவது மஹாஸங்கம்.**

இந்த வருஷத்தில் நடக்கவேண்டிய ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்த வேண்டுமென்று முதலில் ஆலோசித்து, பிறகு இந்தக் குளிர்காலத்தில் அவ்விடத்தில் ஸங்கம் சேர்ப்பதன் ஶ்ரமத்தையும் அநௌசித்யத்தையும் நினைத்து ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் வேறு ஸ்தலங்களைப்பற்றிப் பர்யாலோசித்துக் கொண்டிருக்கிறார்களென்று சென்ற ஸஞ்சிகையில் எழுதியிருந்தோம். அப்படி பர்யாலோசித்ததில், ஶிஷ்ய ஸபையின் ஸங்கமொன்றை அஹோபிலத்தில் நடத்துவதில் தீவ்ரமான அபிநிவேஶம் அநேகருக்கு இருப்பதாகத் தெரியவந்தது., ஸுதராம், இந்த வருஷத்திய ஸங்கத்தை எப்படியாவது அவ்விடத்திலேயே நடத்த வேண்டுமென்றும், இந்தக் குளிர்காலம் அநுசிதமாக இருந்தால் குளிர் நிவ்ருத்தமாகி வஸந்தம் ஆரம்பிக்கும் வரையில் காத்திருந்து அவ்விடத்திலேயே சேர்வதுதான் மிக ஶ்லாக்ய மென்றும் அவர்கள் அபிப்ராயப்பட்டார்கள். அந்த அபிப்ராயத்துக்கு இணங்கி, வருகிற பங்குனி மாஸத்தின் கடைசியில் ஸம்பவிக்கும் ‘ஈஸ்டர் வகேஷன்’ என்னும் விராம காலத்தில் அஹோபிலத்தில் இந்த வருஷத்திய ஸங்கத்தைச் சேர்ப்பதாக ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் தீர்மானித் திருக்கிறார்கள். இப்படி செய்வது உசிதமே. ஆனால், உத்திஷ்டமான விராம காலம் அதிமாத்ரம் மிதமானதால், தூரதேஶத்திலிருந்து வருமவர்களுக்கு, அஹோபிலத்துக்குப் போய் ஸங்கத்தில் அந்வயித்து ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஸேவித்துத் திரும்பி ஸ்வஸ்தலம் போகப் போதுமான அவகாஶம் இருக்காது என்கிற பீதி நம்முடைய மநஸ்ஸில் ஜநிக்கின்றது. இது ஒரு அஸௌகர்யமானாலும், இதைப் பெரிதாக ஒருவரும் பாராட்ட மாட்டார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌵𑌶𑍀 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑍋 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌋𑌜𑍁𑌃 𑌶𑍁𑌚𑌿
𑌮𑍃𑌦𑍁𑌰𑍍 𑌦𑌯𑌾𑌲𑍁𑌰𑍍 𑌮𑌧𑍁𑌰𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌃 𑌸𑌮𑌃 ।
𑌕𑍃𑌤𑍀 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤
𑌸𑌮𑌸𑍍𑌤 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌗𑍁𑌣𑌾𑌮𑍃𑌤𑍋𑌦𑌧𑌿𑌃 ॥ **18.**

18. இம்ஶ்லோகத்தில் விபூதி மஹிமைகளைக் கொண்டு ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ரபுத்வ ரூபமான பரத்வம் ஸ்திரீகரிக்கப்பட்டது. இந்த ஶ்லோகத்தில், அவனுடைய கல்யாணகுணங்களும், அவனுடைய விபூதிகளைப்போல அநந்தங்களே என்று சொல்லப்படுகின்றது.

𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤 (𑌏𑌵) 𑌵𑌶𑍀, 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌃, 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍, 𑌋𑌜𑍁𑌃, 𑌶𑍁𑌚𑌿𑌃, 𑌮𑍃𑌦𑍁𑌃, 𑌦𑌯𑌾𑌲𑍁𑌃, 𑌮𑌧𑍁𑌰𑌃, 𑌸𑍍𑌥𑌿𑌰𑌃, 𑌸𑌮𑌃, 𑌕𑍃𑌤𑍀, 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌃, (𑌅𑌤𑌃) 𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌮𑍃𑌤𑍋𑌦𑌧𑌿𑌃 𑌅𑌸𑌿.

[நீ, ஸ்வபாவத்தினாலேயே ப்ரபுவாகவும், மஹோதாரனாகவும், ஸௌஶீல்யம் பொருந்தினவனாகவும், ருஜு ஸ்வபாவனாகவும், ஶுசித்வமுள்ளவனாகவும், ம்ருதுவாகவும், தயாளுவாகவும், அகோப்யனாகவும், வைஷம்ய மற்றவனாகவும், க்ருத க்ருத்யனாகவும், க்ருதஜ்ஞனாகவும், இப்படி ஸமஸ்தமான கல்யாண குணங்களுக்கும் பெரியதொரு அம்ருத ஸமுத்ரமாக இருக்கிறாய்.]

'பகவான் கணக்கற்ற கல்யாணகுணம் நிறைந்தவன்; அந்தக் குணங்களுக்கு எவ்வித பரிச்சேதமும் கிடையாது; அவனுடைய ஸ்வரூபம் போல அவனது குணங்களும் அதிபோக்யங்கள்; ஶ்ருதி பகவானை நிர்குணனென்று சொன்னால், அப்படிச் சொல்வதன் தாத்பர்யமானது அவன் ஹேயகுணமற்றவன் என்பது தான்' என்பது நமது ஸித்தாந்தம். இதைத் தான் ஸ்ரீ ஆளவந்தார் இந்த ஶ்லோகத்தால் விவரிக்கிறார். இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கும் குணங்கள் தான் பகவானுக்கு உண்டு என்றாவது, அவைகளுள் தாரதம்யம் உண்டு என்றாவது நாம் க்ரஹிக்கக் கூடாது. எவ்வித க்ரமத்தையும் அநுஸந்திக்காமல் அநுபவத்தினால் உண்டாகும் ஆநந்தத்தால் தமது திருவுள்ளத்தில் தோன்றின ப்ரகாரம் சில குணங்களை மாத்ரம் இங்கே வெளியிட்டிருக்கிறார் என்று நாம் அறியவேண்டும்.

வஶீ - ப்ரபுத்வம் நிறைந்தவன். 'வஶ:' என்றால் ப்ரபுத்வமென்று அர்த்தம். '𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀', '𑌜𑌗𑌦𑍍𑌵𑌶𑍇 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌦𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌂' இத்யாதியான இடங்களில் இந்த அர்த்தம் ப்ரஸித்தம். இந்த ப்ரபுத்வம் முந்திய ஶ்லோகத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், இந்த ஶ்லோகத்தில் குணங்களுடைய ஆநந்த்யம் சொல்லப்படுகிறபடியால் மறுபடியும் இவ்விடத்தில் அது அநுவதிக்கப்படுகின்றது. 'வஶ:' என்றால் ஒருவனுக்கு அதீநனாக இருக்குந் தன்மை என்று அர்த்தம் கொண்டு, இவன் ஆஶ்ரிதர்களுக்கு அதீநனாகி விடுகிறபடியால் இவன் இவ்விடத்தில் 'வஶீ' என்று சொல்லப்பட்டிருக்கிறானென்றும் அர்த்தம் சொல்லக்கூடும். பாண்டவர்களுக்கு தௌத்யமும் பார்த்தனுக்கு ஸாரத்யமும் இவன் செய்ததே இவனுடைய ஆஶ்ரிதபாரதீநதையை விளக்குகின்றது.

"[illegible]"

என்னும் வாக்யமும் இதற்கு ப்ரமாணமாகும்.

𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌃 - ப்ரியமான வார்த்தையைச் சொல்லுகிறவனும் தாநஶீலனுமாக இருப்பவன் 'வதாந்யன்' என்று சொல்லப்படு

வன். அப்படிப்பட்ட ப்ரியவாதித்வமும் ஸ்வாத்ம பர்யந்தமாக ஸர்வஸ்வத்தையும் தாநஞ் செய்யும் ஸ்வபாவமும் ஸ்ரீமந் நாராயணனுக்கல்லாமல் மற்றை எவனுக்கு ஸம்பவிக்கும்?

“கஸ்த்வந்ய: கோ மஹோதார: ப்ரார்த்திதம் தாதுமீஶ்வர:”

[நாராயணனைத் தவிர்த்து மற்றை எந்த மஹோதாரன், ஆஶ்ரிதர்களால் அபேக்ஷிக்கப்படுவதைக் கொடுக்க ஶக்தன்?]

“யதா கல்பதரு: ஸர்வம் ப்ரார்த்திதே ததாதி வாஞ்சிதம் |
ததா ஸம்ப்ரார்த்திதே விஷ்ணுர் துர்லபமபி யச்சதி ||”

[கல்ப வ்ருக்ஷம் நம்முடைய இஷ்டமெல்லாவற்றையும் கொடுப்பதுபோல, விஷ்ணுவும், எவ்வளவு துர்லபமாக இருந்தாலும் நம்முடைய ப்ரார்த்திதமெல்லாவற்றையும் கொடுக்கிறார்] இத்யாதியான புராண வாக்யங்களும்,

“யோ யதிச்சதி தஸ்ய தத்”

[எவன் எதை விரும்புகிறானோ அவனுக்கு அதாகவே ஆகிறான்]

“ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்”

[ஸகல ஜீவன்களுக்கும் ஸகல மனோரதங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கிறவன் ஈஶ்வரன் ஒருவனே] இத்யாதியான ஶ்ருதி வாக்யங்களும் நாராயணனுடைய ஔதார்யத்தை விளக்குகின்றன.

குணவாந் - இந்த ஶப்தத்திற்கு - ஸாமாந்யமாக ‘குணமுடையவன்’ என்று அர்த்தமாகும். சில குணங்களைக் குறிப்பிட்டுச் சொல்லும் ப்ரகரணத்தில் நடுவே ‘குணமுள்ளவன்’ என்று ஸாமாந்யமாகச் சொல்வது அஸங்கதமாகுமாதலால், இந்த ஶப்தத்திற்கு அந்த அர்த்தம் சொல்லக் கூடாது. ‘குண்யத இதி குண:’ ‘அப்யஸநீய:’ ‘ஆநுகூல்யத்வேந ஶீலநீய:’ என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய பாஷ்யம். அதாவது - அத்யந்த அநுகூலமென்று ஆஶ்ரிதர்களால் ஆதரிக்கப்படும் ஸ்வபாவமே இவ்விடத்தில் குண ஶப்தத்தால் குறிக்கப்படுகின்றது. அப்படி ஆதரிக்கப்படுந் தன்மை மற்றைக் குணங்களுக்குக் காட்டிலும் ஸௌஶீல்யம் என்னும் குணத்திற்கு விஶேஷமாக இருப்பதால், அந்தக் குணமே இவ்விடத்தில் குண ஶப்தத்தால் சொல்லப்படுகின்றது. அதை உடையவன் என்று ஶப்தார்த்தம். ஸௌஶீல்யமாவது - மஹாநாக இருக்கும் ஒருவன் நிஹீநர்களாக இருக்குமவர்களுடன் எவ்வித விஶேஷமுமின்றிக்கே ஒக்கக் கலந்து பரிமாறும் தன்மை. குஹன், ஶபரீ, கோபாலர்கள் இவர்களுடன் கலந்து ஸௌஹார்த்தத்தைப் பாவித்த எம்பெருமான் அப்படிப்பட்ட ஸௌஶீல்யம் நிறைந்தவன் என்று சொல்லவும் வேண்டுமோ?

ருஜு: - மநஸ் வாக் காயம் என்னும் த்ரிகரணங்களிலும் கபடமற்று இருக்கும் தன்மையுள்ளவன். ஆஶ்ரிதர்களிடத்தில் இப்படிப்பட்ட ஆர்ஜவம் நிறைந்து நடக்கிறபடியால், நாராயணனை ருஜுஸ்வபாவமுள்ளவனென்று சொல்லுகிறார்கள். இந்தக் குணமிருப்பதனால்தான் அவன் நம்முடைய விஶ்வாஸத்திற்கு அர்ஹனாகிறான் என்பது குறிப்பு.

“த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத் ஹிமவாந் ஶகலீபவேத் |
ஶுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே ந மே மோகம் வசோ பவேத் ||”

[ஆகாஶம் கீழே விழுந்தாலும் விழும்; பூமி சிதறினாலும் சிதறும்; ஹிமவத் பர்வதம் சின்னம் பின்னமானாலும் ஆகும்; ஸமுத்ரம் ஶோஷித்தாலும் ஶோஷித்துப் போகும்: ஹே த்ரௌபதி! என் வார்த்தை ஒருகாலும் வீண் போகாது] என்று உறுதிமொழி அளித்திருக்கும் ஸ்ரீ பகவாந் விஶ்வஸநீயனாகாவிட்டால் மற்றை எவன் நமது விஶ்வாஸத்திற்குப் பாத்ரமாவான்?

ஶுசி: - பரிஶுத்தன். அபஹத பாப்மத்வம் முதலிய குணம் இவனிடத்தில் இருக்கிறபடியால் இவனைப் பரிஶுத்தனென்று சொல்லுகிறார்கள். அல்லது, ஆஶ்ரிதர்களைக் காப்பாற்றுவதில் ப்ரத்யுபகாரம் முதலியவற்றை அபேக்ஷிக்காமலிருப்பதாகிற பாவ ஶுத்தியுடன் கூடியிருப்பதாலும் இவனை ‘ஶுசி’ என்று சொல்லக்கூடும். அல்லது, பக்தியினால் மாத்ரம் ப்ரஸந்ந

னுகும் தன்மையை இந்தப் பதம் குறிக்கின்றது என்றும் சொல்லலாம். அல்லது, "பவித்ராணாம் பவித்ரம் ய:" என்கிறபடி. இவன் பாவநன் என்பதை இந்த ஶப்தம் ஸூசிப்பிக்கின்றது என்றும் சொல்லலாம்.

க்ஷமீ - தன் திறத்தில் அபராதம் செய்திருக்குமவர்களால் கூட நிர்விஶங்கமாக ஆஶ்ரயிக்கப்படும் ஸ்வபாவமுள்ளவன். தன்னை ஆஶ்ரயித்திருக்கிறான் என்கிற ஒரு காரணத்தினாலேயே அவன் ஏற்கெனவே செய்திருக்கும் அபராதங்களெல்லாவற்றையும் மறந்துவிடும் குணமுடையவன் என்பதை இந்தஶப்தம் காண்பிக்கின்றது.

தயாளு: - தயையுள்ளவன்; அதாவது - ஸ்வ ப்ரயோஜநமொன்றையும் அபேக்ஷியாமலே பிறருடைய துக்கத்தைப் போக்குவதில் இச்சையுள்ளவன்.

"ஆந்ருஶம்ஸ்யமநுக்ரோஶ: ஶ்ருதம் ஶீலம் தம: ஶம: |
ராகவம் ஶோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம் ||"

என்னுமிடத்தில் ப்ரதாநமாகப் படிக்கப்பட்டிருக்கும் குணம்தான் இந்த ஶப்தத்தால் சொல்லப்படுகின்றது.

ஆநந்த: - நிரதிஶயமான ஆநந்தத்தையே ஸ்வரூபமாக உடையவன். "ரஸோ வை ஸ:" என்றன்றோ ஶ்ருதி சொல்லுகின்றது? "ஸோமவத் ப்ரியதர்ஶந:" "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" "ஸாக்ஷாந்மந்மதமந்மத:" இத்யாதியான வாக்யங்கள், அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் மாதுர்யத்தையும், "ப்ரியவாதீ ச பூதாநாம் ஸத்யவாதீ ச ராகவ:" இத்யாதியான வாக்யம் அவனுடைய வாசிகமான மாதுர்யத்தையும் பற்றிப் பேசுகின்றன. அன்றிக்கே, தாபத்ரயத்தில் அகப்பட்டு வருந்தும் நமக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடியது ஏதாவது இவ்விடத்தில் உண்டானால், அது அவனுடைய திவ்யநாம ஸங்கீர்த்தநமும் திவ்ய சேஷ்டிதங்



களின் அநுஸந்தாநமுமே தவிர மற்றை எதுவுமாகாது என்பது அவனை ஆஶ்ரயித்த பக்தர்களுடைய அநுபவம். அவைகளில் தான் மாதுர்யமென்பது உண்டு என்பதை,

"ஶ்ரோத்ரமநோபிராமாத் | க உத்தமஶ்லோககுணாநுவாதாத் புமாந் விரஜ்யேத"

என்னுமிடத்திற் காணலாம்.

ஸ்திர: - உறுதியுள்ளவன், கலக்கக் கூடாதவன். அதாவது - ஆஶ்ரிதர்கள் செய்யும் அபராதங்கள் அவனைக் கலக்கமாட்டா என்று தாத்பர்யம். நம்முடைய அபராதங்களால் அவன் கலங்குகின்றான் என்பது இருந்தால், எப்பொழுதும் அபராத ஶீலர்களாகும் நாம் அவனுடைய ப்ரஸாதத்தை அடைவது என்பதே ஸம்பவிக்காது. ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன்,

"மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந |
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்"

[என்னிடத்தில் விஶ்வாஸ புரஸ்ஸரமாக என்னை ஒருவன் அணுகி ஆஶ்ரயித்து விட்டால், அவனிடத்தில் எவ்விதமான அபராதமிருந்தாலும், நான் அவனைக் கைவிட மாட்டேன்] என்று சொல்லியிருப்பதை நாம் மறந்தோமோ?

ஸம: - எல்லாருக்கும் துல்யன். ஜாதி முதலியவைகளால் சிறந்தவனுக்குத்தான் அவன் ஶரண்யன், மற்றவர்களுக்கு அவன் ஶரண்யனல்லன் என்பது கிடையாது என்று அர்த்தம். "ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்" [எல்லாருக்கும் அவன்தான் பரம ஸுஹ்ருத், உண்மையான ரக்ஷகன்] என்று ஶ்ருதியும், "ஸர்வலோகஶரண்யாய", "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்", "ஸமோऽஹம் ஸர்வபூதேஷு" இத்யாதியான ஸ்ம்ருதிகளும் அவனுடைய ஸர்வ ஶரண்யத்வத்தை க்யாபநம் செய்கின்றன.

க்ருதீ - க்ருத க்ருத்யன். ஆஶ்ரிதர்களை எப்பொழுதும் ரக்ஷித்து வருவதால் அவன் க்ருத க்ருத்யன் என்று தாத்பர்

யம். அல்லது, நமக்கு இருப்பது போல, அவனுக்கு ஸ்வார்த்த மாகச் செய்துகொள்ள வேண்டிய அம்ஶமொன்றுமில்லை என்பதை இந்தப் பதம் காண்பிக்கின்றது என்றும் சொல்லலாம். “ந மே பார்தாஸ்தி கர்தவ்யம்” என்று அவனே சொல்லியிருக்கிறான்.

க்ருதஜ்ஞ: - பிறரால் செய்யப்படும் உபகாரத்தை மறக்காதவன். உபகாரலேஶத்தையும் பஹுவாக பாவிக்கும் ஸ்வபாவமுள்ளவனென்று தாத்பர்யம்.

“ந ஸ்மரத்யபகாராணாம் ஶதமப்யாத்மவத்தயா |
கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி ||”

[அவன் நம்மிடத்தில் வைத்திருக்கும் வாத்ஸல்யத்தினால், நாம் எவ்வளவு அபராதம் அவனிடத்தில் செய்தாலும் அவன் அதை நினைக்கிறானில்லை; எப்பொழுதாவது ஒரு உபகாரத்தை அவனுக்கு நாம் செய்தால் அவன் அதனால் அதிமாத்ரம் ஸந்துஷ்டனாக ஆகிறான்] என்று ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி இந்தக் குணத்தைக் கொண்டாடி இருக்கிறார். நாம் அவனுக்குச் செய்யும் உபகாரமாவது - அவனை நமது ஶரண்யனாக மநஸ்ஸால் த்யானித்து அவனை ஆஶ்ரயிப்பது தான். க்ருதக்ருத்யனாக இருக்குமவனுக்கு வேறு என்ன உபகாரம் நம்மிடமிருந்து ஸம்பவிக்கக் கூடும்?

“கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் |
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி ||”

[“கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதம்” என்று த்ரௌபதி, மநம் உருகிக் கஷ்டம் தாங்கமாட்டாமல் அதிதூரத்தில் இருந்த என்னைப் பெயர் சொல்லிக் கதறி அழைத்தாளே! அதற்கு அநுகுணமாக நான் அவளுக்கு எவ்விதமான பதிலும் செய்யவில்லையே! கடன் ஏறுவதுபோல அது வ்ருத்தியாகிக்கொண்டு என் மனத்தை எப்பொழுதும் கலக்கிக்கொண்டே நிற்கின்றது] என்று ஸ்ரீ கண்ணபிரான் சொன்ன வார்த்தையை



அநுஸந்திக்கும் நமக்கு அவன் க்ருதஜ்ஞன் என்பதில் எப்படி ஶங்கை ஜநிக்கும்?

(ஏவம்) ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: - இப்படி எல்லாக் கல்யாண குணங்களுக்கும் பெரியதொரு அம்ருத ஸமுத்ரமாய். அவனிடத்தில் இல்லாத கல்யாண குணம் கிடையாது என்பதைக் காண்பிக்க இவ்விதமான உபஸம்ஹாரம்.

“யதா ரத்நாநி ஜலதே: அஸம்க்யேயாநி புத்ரக |
ததா குணாஹ்யநந்தஸ்ய அஸம்க்யேயா மஹாத்மந: ||”

[ரத்நாகரமாகிற ஸமுத்ரத்திலுள்ள ரத்நங்கள் அஸங்க்யேயங்களாக இருப்பதுபோல், அநந்தனாகிற நாராயணனுடைய குணங்களும் அஸங்க்யேயங்கள்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக் குணங்களை அம்ருத ஸமுத்ரத்திற்கு ஒப்பிட்டிருப்பதால், பகவானுடைய ஸ்வரூபம்போல் அவைகளும் போக்யங்கள் என்பது ஸூசிப்பிக்கப்படுகின்றது.

த்வம் ஸ்வாபாவத: கிலாஸி - இவ்விதமாக இருப்பது உன்னுடைய ஸ்வபாவம். நித்யர்களுக்கும் முக்தர்களுக்குமுள்ள கல்யாண குணங்கள் பகவானுடைய ஸங்கல்பாதீநங்கள்; பத்த ஜீவன்களுக்கு எப்பொழுதாவது ஸம்பவிக்கும் ஒரு நற்குண லேஶமும் கர்மாதீநம்; பகவானுக்குள்ள இந்தக் கல்யாண குணங்களோ ஸ்வபாவ ஸித்தங்கள் என்று தாத்பர்யம். “ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச” என்று ஶ்ருதி சொல்லுகின்றது. ‘த்வம் கிலாஸி’ நீர் இருக்கிறீர். ‘கிலாஸி’ [இருக்கிறீர்] என்னும் பதம் இருந்தாலே போதும்; ‘த்வம்’ [நீர்] என்னும் பதம் அநபேக்ஷிதம் என்று தோன்றலாம். இரண்டையும் ப்ரயோகித்த ஸ்ரீ ஆளவந்தாருடைய தாத்பர்யம் என்னவென்றால், ‘ஹே பகவந்! இந்தக் குணங்களெல்லாம் சிறந்தவைகளே! ஆனால் அவைகளுக்கு ஏற்படும் இந்த மஹிமை உம்மை ஆஶ்ரயித்திருப்பதனாலன்றோ?’ என்பதைக் காண்பிக்க வேண்டுமென்பதுதானென்று, ‘குணாநாம் குண்யபிநோத்கர்ஷம் த்வதே’ என்னும் வாக்யத்தால் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் வெளியிட்டிருக்கிறார்.

உபர்யுபர்யப்ஜபுவோऽபி பூருஷாந்
ப்ரகல்ப்ய தே யே ஶதமித்யநுக்ரமாத் ।
கிரஸ்த்வதேகைககுணாவதீப்ஸயா
ஸதா ஸ்திதா நோத்யமதோऽதிஶேரதே ॥ **19.**

---

“குணா: ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா ।
ஶஶீ ஸங்க்யாதாநிதி ஹி நிரணைஷ்ஶ்ருதிவஶாத் ॥”
என்பது, ஸ்ரீ பட்டருடைய திவ்ய ஸூக்தி.

19. கீழ் ஶ்லோகத்தில் பகவானுடைய திருக் கல்யாண குணங்கள் கணக்கற்றவை என்று சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் அப்படிக் கணக்கற்ற குணங்களுள் ஒவ்வொன்றும் எல்லையில்லாத மஹிமையை உடையது என்று சொல்லப்படுகின்றது.

‘கிர:, த்வதேகைககுணாவதீப்ஸயா, அப்ஜபுவோऽபி பூருஷாந் உபர்யுபரி ‘தே யே ஶதம்’ இதி அநுக்ரமாத் ப்ரகல்ப்ய, ஸதா ஸ்திதா: (ஸத்ய:) உத்யமதோ நாதிஶேரதே’ [ஹே பகவந் ! உன்னுடைய ஒவ்வொரு திருக் கல்யாண குணத்தினுடைய எல்லையையும் கண்டுகொள்ளவேண்டுமென்னும் எண்ணமுடையவைகளாய், ஶ்ருதிகள், பத்மஸம்பவனை ப்ரஹ்மாவை ஒரு ஸார்வபௌமனென்கிற மநுஷ்யனுடைய ஸ்தானத்தில் வைத்து, அவனுக்கு மேன்மேலாக அநேகம் பெயர்கள் இருப்பது போலவும் பூர்வம் சொல்லப்பட்டுள்ளவர்களை அபேக்ஷித்துப் பின்பின் சொல்லப்படுமவர்களுடைய குணங்கள் நூறு மடங்கு பெரியவைகளாக இருக்கின்றன போலவும் க்ரமமாகக் கல்பித்துக்கொண்டு, அப்படிப் பெருக்கிக் கடைசியாகவரும் தொகையை உன்னுடைய கல்யாண குணத்தின் அளவாகச் சொல்லலாமென்று எண்ணி, எப்பொழுதும் அந்தக் கார்யத்தில் உத்யுக்தங்களாக இருக்கின்றன; ஆனால், இன்னும் முடிவை அடையவில்லை; இன்னுமும் ஆரம்பாவஸ்தையிலேயே இருக்கின்றன.]

தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்தவல்லி யென்னும் ஒருபாகமுண்டு. அந்த வல்லி, எம்பெருமானுடைய கல்யாணகுணங்களுள்



அந்யதமமாகிய ‘ஆநந்தம்’ என்னும் குணத்தைப் பற்றிப் பேசுகின்றது. அந்த ஆநந்தத்தை இவ்வளவு கொண்டது என்று சொல்லமுடியாததாதலால், ‘ஒருவனுக்கு ஸமஸ்தமான பூமியும் ஸ்வாதீநமாக இருந்தால் அவன் எவ்வளவு ஆநந்தத்தை அநுபவிப்பனோ அதைப்போல நூறு மடங்கு அதிகமான ஆநந்தத்தை அவனுக்கு மேலிருக்கும் ஒருவன் அநுபவிக்கிறான்’ என்று ஒரு கல்பனையைச் செய்துகொண்டு, அந்த ஶ்ருதி, ‘அவனுக்கு மேல் இருக்கும் மற்றொருவனுடைய ஆநந்தம் அதைப்போல நூறு மடங்குள்ளது; அவனுக்கும் மேல் காணப்படும் ஆநந்தம் அதைவிட நூறு மடங்குள்ளது’ என்று இம்மாதிரி மேன்மேல் பெருக்கிக்கொண்டே போய், எல்லையை அடையாமலே சதுர்முகன் பர்யந்தம் போய்த் திரும்பி விடுகின்றது. அப்படித் திரும்பும் ஶ்ருதியின் தாத்பர்யமாவது - அந்த ‘ஆநந்தம்’ என்னும் குணம், எவ்வித பரிச்சேதத்திற்கும் உட்படாது என்பது தான். ஆனால், இந்த ஶ்ருதி, ‘ஆநந்தம்’ என்னும் ஒரு குணத்தைப் பற்றி மாத்ரம் இம்மாதிரி சொல்லுகின்றது. இருந்த போதிலும், அவனது மற்றைக் குணங்களும் அதுபோலவே எல்லையற்றவைகள் என்பது ஶ்ருதியின் தாத்பர்யம் என்பதைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ ஆளவந்தார், இவ்விடத்தில், அந்த ஶ்ருதியைக் குறிப்பிட்டே ‘ஶ்ருதி, ஒவ்வொரு குணத்தின் அளவை அளக்க ப்ரயத்நப்பட்டு ஸாத்யப்படாமல் திரும்பிவிட்டது’ என்று ப்ரகாஶித்திருக்கிறார்.

கிர: - வேத வாக்யங்கள்; உள்ளபடி பேசும் ஸ்வபாவமுள்ளவை என்று கருத்து. ‘ஒருகால், இந்த ஆநந்தம் இவ்வளவு பெரிதாகச் சொல்லப்பட்டிருக்கின்றபடியால், இப்படிச் சொல்வது கொஞ்சம் அத்யுக்தியாக இருக்குமோ ?’ என்கிற ஶங்கைக்குக் கொஞ்சமேனும் அவகாஶமில்லை என்று தாத்பர்யம். ‘ஸதா ஸ்திதா:’ என்பதை இதற்கு விஶேஷணமாக எடுத்துக்கொள்வதுமுண்டு. அந்தப் பக்ஷத்தில் இந்த ‘கிர:’ என்னும் பதம், அபௌருஷேயங்களாகவும் ஸநாதநங்களாகவுமுள்ள வேதங்களின் சொற்களையே குறிக்கின்றது என்பது வ்யக்தமாகின்றது.

அப்ஜஸம்பவோऽபி பருஷாநந்த பாரஸ்த்வரீ - அப்ஜ யோநியாயுள்ள புருஷர்களுக்கும் மேல். லோகத்தில், ‘தாமரஸ புஷ்பத்தில் ஜநித்த மாஹாத்ம்யத்தை உடையவன் ப்ரஹ்மா’ என்று ஒரு பெருமை அவனுக்குச் சொல்வது உண்டு; அவனுடைய பெருமையும் இந்தக் கல்பனையில் அல்பமாகி விட்டது என்பதை ‘அபி’ என்னும் ஶப்தம் ஸூசிப்பிக்கின்றது.

‘தே யே ஶதம்’ - இவ்விடத்தில் பின்வரும் ஶ்ருதிவாக்யம் குறிக்கப்படுகின்றது.

‘‘தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் - ஸ ஏகோ மாநுஷ ஆநந்த: - ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய - தே யே ஶதம் மாநுஷா ஆநந்தா: - ஸ ஏகோ மநுஷ்யகந்தர்வாணாம் ஆநந்த: - ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய - தே யே ஶதம் மநுஷ்யகந்தர்வாணாம் ஆநந்தா: - ஸ ஏகோ தேவகந்தர்வாணாம் ஆநந்த:.................... ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:’’

ப்ரக்ல்ருப்ய - ப்ரகர்ஷேண கல்பித்துக்கொண்டு. யதார்த்தமாக இம்மாதிரி ஒரு க்ரமமும் இல்லை; ‘இப்படி ஒரு க்ரமம் இருந்தால், எப்படி அந்தக் குணம் வ்ருத்தியாகி வருமோ, அப்படி’ என்பதைச் சொல்வதற்காக மாத்ரம் இவ்விதமான கல்பனையை ஶ்ருதி செய்கின்றது என்று அறியவேண்டும்.

‘ஸதா உதிதா:’ - எப்பொழுதும் இருந்துகொண்டு. ‘அபி’ என்னும் பதத்தை இவ்விடத்தில் அந்வயித்தால், ‘ஸதோதிதா அபி’ என்று கிடைக்கும். அப்பொழுது ‘ஸர்வதா உத்யுக்தர்களாக இருந்தும்’ என்று அர்த்தம்.

உத்யதோ: நாதிஶேரதே - அந்த உத்யமத்திலிருந்து வெளிப்படாதவைகளாகவே இருக்கின்றன. திரும்பத் திரும்ப முதலில் இருந்த உபக்ரமாவஸ்தையே பரிஶேஷமாக நிற்கின்றது என்று தாத்பர்யம்.

எஸ். வாஸுதேவன்.

ஶ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# விஶிஷ்டாத்வைதம்.

## 13. ஜீவனுடைய ஜ்ஞாத்ருத்வம்.

ஜீவதத்வமென்பது நித்யமான ஒரு தத்வமென்றும் பரதத்வமாகிற பகவானுடைய அம்ஶமென்றும் இது வரையில் விசாரித்ததால் தெரிந்துகொண்டோம். அப்படி நித்யமாயும் பகவதம்ஶமாயுமுள்ள இந்தஜ் ஜீவதத்வத்தின் ஸ்வரூபம் என்ன? என்பதை இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம்.

ஸௌகதர் கபிலர் முதலிய ஆசார்யர்கள் ‘இந்தஜ் ஜீவதத்வத்தின் ஸ்வரூபம் கேவலம் ஜ்ஞாநமே; அது சைதந்யத்தையே வபுஸ்ஸாக உடைத்தானது; ஜ்ஞாத்ருத்வமென்பதே அதற்கு இல்லை’ என்றும், கணபுக் முதலிய ஆசார்யர்கள் ‘ஜீவன் பாஷாணம் போன்ற ஒரு ஜடமான வஸ்து; அசித் ஸ்வபாவமுள்ளது; அதற்கு எப்பொழுதோ சைதந்யம் என்னும் குணம் வருகின்றது’ என்றும் சொல்லுகிறார்கள். நமது ஆசார்யர்களோ, ‘ஜீவன் ஜ்ஞாந மாத்ரமல்லன், ஜட ஸ்வரூபனுமல்லன்; ஜ்ஞாத்ருத்வத்தை ஸ்வரூபமாக உடையவன்’ என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதை அநுஸரித்தே, இவர்கள் தத்வங்களை விபாகம் செய்யுங் காலத்தில், முதலில் பரதத்வமென்றும் அவரதத்வமென்றும் தத்வங்களை விபாகித்து, பிறகு அவர தத்வத்தைச் சேதந அவர தத்வமென்றும் அசேதந அவர தத்வமென்றும் இருவகைப் படுத்தி, இந்தச் சேதந அவர தத்வத்தையே ஜீவ தத்வமென்று வ்யவஹரித்திருக்கிறார்கள். அதாவது - ஜீவன் சேதநன், அறிவை உடையவன், கேவலம் அறிவு மாத்ரமல்லன்

என்பது இவர்களின் அபிப்ராயம். எந்தக் காரணங்களினால் நமது ஆசார்யர்கள் இவ்விதமாக நிர்ணயித்திருக்கிறார்கள்? ஸாங்கர் முதலியவர்களுடைய அபிப்ராயம் ஏன் நிராகரிக்கப்படுகின்றன? என்பதைக் கொஞ்சம் பரிஶீலநம் செய்வோம்.

எவ்வித விஸ்தாரமுமின்றிக்கே ஸ்ரீ பாஷ்யகாரருடைய நிர்ணயம் பின்வருமாறு இருக்கின்றது: — 'ஆத்மா' என்னும் வஸ்து ஜ்ஞாதாவே; அது ஜ்ஞாந மாத்ரமன்று. அதற்கு 'ஜ்ஞாநம்' என்னும் வ்யபதேஶம் ஶ்ருதி முதலியவைகளில் தென்பட்டால், அந்த வ்யபதேஶம், ஆத்மாவினிடத்தில் ஜ்ஞாநமென்னும் குணம் ப்ரதாநமாக இருக்கிறபடியாலாவது, அந்தக் குணம் ஆத்மாவினிடத்தில் ஸ்வரூபாநுபந்தியாகக்கொண்டு ஆத்ம ஸ்வரூபத்தை நிரூபிக்கும் குணமாக இருக்கிறபடியாலாவது, ஆத்ம ஸ்வரூபமும் ஜ்ஞாநம் போல ஸ்வப்ரகாஶமாக இருக்கிறபடியாலாவது உபபந்நமாகக்கூடும் (ஸத்யபி ஜ்ஞாத்ருத்வே; ஜ்ஞாநமாத்ர வ்யபதேஶோ ஜ்ஞாநஸ்ய ஸ்வரூப நிரூபண குணத்வாத், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக குணத்வாத், ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாஶத்வாத்வா உபபத்யதே). [ஸ்ரீ வேதாந்ததீபம் 2 - 3 - 19]. ஸ்ரீ ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் இதைப் பற்றி இரண்டு ஸூத்ரங்கள் காணப்படுகின்றன.

"தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத்" [2-3-19.

"யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷஸ்தத்தர்ஶநாத்" [2-3-20.

இந்த ஸூத்ரங்களின் பாஷ்யத்தில் இந்த அர்த்தம் நன்றாக விளங்குகின்றது. 'ஜீவன் ஜ்ஞாதாவே' என்று முதலில் நிர்ணயித்துவிட்டு, பிறகு, அப்படி ஜீவன் ஜ்ஞாதாவாக இருக்க "யோ விஜ்ஞாநே திஷ்டந்" "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" இத்யாதியான ஶ்ருதிகளில் அந்தஜ் ஜீவன் ஜ்ஞாநமாகவே வ்யபதேஶிக்கப்பட்டிருப்பது எப்படி உபபந்நமாகுமென்று ஒரு சோத்யத்தைச் செய்துகொண்டு, இந்த ஸூத்ரங்களால், அப்படி வ்யபதேஶிப்பது தோஷமன்று என்று ஸித்தாந்தம் செய்யப்படுகின்



றது என்று ஸ்ரீ பாஷ்யகாரர் பாஷித்திருக்கிறார். ஸூத்ரங்களின் அர்த்தமாவது:— தத்குணஸாரத்வாத் - ஜ்ஞாநமே ஆத்மாவினுடைய ஸாரபூதமான குணமாகிறபடியால்; தத்வ்யபதேஶ: - ஜ்ஞாநமென்னும் வ்யபதேஶம் (உபபந்நம்); ப்ராஜ்ஞவத் - ப்ராஜ்ஞனாகிற ப்ரஹ்மத்தினிடத்தில் போல. அதாவது - ஆநந்தத்தையே ஸாரபூதமான குணமாக உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மத்தை, 'ஆநந்தம்' என்னும் ஶப்தத்தாலே வ்யபதேஶிப்பதுபோல, ஜ்ஞாநத்தை ஸாரபூதமான குணமாக உடைத்தாயிருக்கும் ஆத்மாவை 'ஜ்ஞாநம்' என்று வ்யபதேஶிக்கக் கூடும் என்று கருத்து. யாவதாத்மபாவித்வாத் - ஆத்ம ஸ்வரூபமுள்ள வரையில் இந்த ஜ்ஞாநமென்னும் குணமும் இருக்கிறபடியால், ந தோஷ: - ஆத்மாவை ஜ்ஞாநமென்று வ்யபதேஶிப்பது தோஷமாகாது; தத்தர்ஶநாத் - அந்த மாதிரி வ்யபதேஶம் லோகத்தில் காணப்படுகிற படியால். இப்படி இரண்டு ஸூத்ரங்களுக்கும் பாஷ்யத்தை அருளிச்செய்துவிட்டு, ஸ்ரீ பாஷ்யகாரர், இவைகளுள் இரண்டாவது ஸூத்ரத்திலிருக்கும் 'யாவதாத்மபாவித்வாச்ச' என்னுமிடத்திலுள்ள 'ச' என்னும் பதம், இந்தமாதிரி வ்யபதேஶிப்பது தோஷமன்று என்பதற்கு மற்றும் ஒரு காரணத்தை ஸமுச்சயம் செய்கின்றது என்று விவரித்திருக்கிறார். அந்தக் காரணமாவது - ஜ்ஞாநம் போல ஆத்மாவும் ஸ்வப்ரகாஶம் என்பதுதான். ஸ்வப்ரகாஶமாக இருப்பதை ஜ்ஞாநமென்று வ்யவஹரிக்கலாமாதலால் ஆத்மாவை ஜ்ஞாநமென்று சொல்லக் கூடும் என்பது தாத்பர்யம். இந்த மூன்று காரணங்களும் தான் கீழ்க்கூறப்பட்டிருக்கும் ஸ்ரீ வேதாந்த தீப வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்படியெல்லாம் அருளிச்செய்யப் பட்டிருக்கும் ஸ்ரீ பாஷ்யத்தின் தாத்பர்யத்தைப் பார்த்தால், 'ஆத்மா என்னும் வஸ்து யதார்த்தமாக ஜ்ஞாதாவே ஒழிய ஜ்ஞாநமன்று, ஜ்ஞாநமென்று செய்யப்படும் வ்யபதேஶத்தை ஒரு விதமாக ஸமர்த்தித்துக்கொள்ளலாம்' என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவுள்ளம்போலத் தோன்றுகிறது. ஆனால், "சகாராச் ஜ்ஞாநவத்த்வேऽபி ஸ்வப்ரகாஶத்வேந விஜ்ஞாநமிதி வ்யபதேஶோ ந தோஷ இதி

ஸம்ஜிக்ரோதி" என்னுமிடத்தில். 'ஆத்மா ஜ்ஞாநம் போல ஸ்வப்ரகாஶமான வஸ்து' என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், 'அதுவும் ஒரு ஜ்ஞாநமோ! ஸ்வப்ரகாஶமாக இருப்பதெல்லாம் ஜ்ஞாநமன்றோ?' என்று ஸாதிக்கக்கூடும் என்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம்பற்றி யிருப்பதாக நாம் ஊஹிக்கலாம். அதாவது — 'ஜீவன், ஸ்வப்ரகாஶமாக இருக்கிறபடியால், ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையவன்; ஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமாகக் கொண்டு ஜ்ஞாதா வாகவும் இருக்கிறான்' என்று சொன்னதாயிற்று.

ஶ்ருதிகளில், ஜீவனைப் பற்றிப் பேசும் வாக்யங்களுள் சில, ஜீவனை ஜ்ஞாதாவாகப் பேசுவதையும், மற்றும் சில, அவனை ஜ்ஞாநமாகப் பேசுவதையும் நாம் பார்க்கிறோம்.

"அத யோ வேதேதம் ஜிக்ராணீதி ஸ ஆத்மா" [முகருகிறேன் என்று எவனொருவன் அறிகிறானோ அவன்தான் ஆத்மா],

"மநஸைதாந் காமாந் பஶ்யந் ரமதே" இந்தக் காமங்களெல்லாவற்றையும் மநஸ்ஸினால் அறிந்துகொண்டு ஆத்மா வென்னும் சேதநன், ரமிக்கிறான்],

"விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்", "ஜாநாத்யேவாயம் புருஷ:" "ஏஷ ஹி த்ரஷ்டா ஶ்ரோதா க்ராதா ரஸயிதா மந்தா போத்தா கர்தா விஜ்ஞாநாத்மா புருஷ:"

இத்யாதியான அணக்கற்ற வாக்யங்கள் ஆத்மாவை ஜ்ஞாதாவாகவே சொல்லுகின்றன.

"விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே"

"ஜ்ஞாநஸ்வரூபமத்யந்த நிர்மலம் பரமார்த்தத:"

இத்யாதியான ஶ்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் ஆத்மாவை ஜ்ஞாநமாகவே வ்யபதேஶிக்கின்றன. இவைகளுள் ஜ்ஞாநமென்னும் வ்யபதேஶத்திற்கு கீழ்ச்சொல்லி யிருக்கிறபடி உபபத்தியைக் கல்பித்து



விட்டு ஜீவன் ஜ்ஞாதா வென்பதே ஶ்ருதியின் தாத்பர்யம் என்று நமது ஆசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். ஜீவனை ஜ்ஞாதாவாக வ்யபதேஶம் செய்யும் ஶ்ருதிகளுக்கு, 'ஜீவன் சைதந்ய மாத்ரமே' என்றும் 'ஜீவன் பாஷாணம் போல ஜடன்' என்றும் சொல்லும் ஸித்தாந்தங்கள் விருத்திக்கிறபடியால், ஸுகத கபில கணபுக் ப்ரப்ருதிகளுடைய மதங்கள் நிராகரிக்கப் படுகின்றன. ஆனால், இந்த மதஸ்தர்கள் நமது ஸித்தாந்தத்தின் மீது மற்றும் ஒரு சோத்யத்தைச் செய்கிறார்கள். 'ஆத்மாவை ஜ்ஞாதா என்று ஒத்துக்கொண்டால், ஆத்மா ஸர்வத்ர வ்யாபித்திருப்பதால், எல்லாப்பொருளுடையவும் ஜ்ஞாநம் எப்பொழுதும் ஸம்பவிக்கவேண்டி வருமே! ஆத்மா ஸர்வ வ்யாபி அன்று, அணுவே என்று சொன்னால், ஶரீரத்தில் பலவிடத்தில் வ்யாபித்திருக்கும் வேதனை ஒரே ஆத்மாவுக்கு ஸம்பவிக்காமலிருக்க ப்ரஸங்கிக்குமே! இவை அநுபவ விருத்தங்களன்றோ?' என்பது தான் அவர்களுடைய ஆக்ஷேபம். இதற்கு ஸமாதாநம், 'ஜீவன் ஸர்வவ்யாபி அல்லன், அணுவே; ஆனால், ஒரே இடத்தில் இருக்கும் ரத்நம் முதலியவைகளுடைய ப்ரகாஶம் சுற்றிப் பலவிடங்களில் ப்ரஸரிப்பதுபோல, ஹ்ருதய தேஶத்தில் மாத்ரம் இருக்கும் அணுவான ஆத்மாவினுடைய ஜ்ஞாநம், தேஹம் முழுவதும் வ்யாபிக்கின்றது' என்பது தான்.

ஆகையால், ஜீவனை அணுவென்றும் அவனுடைய ஸ்வரூபத்தை ஸ்வயம் ப்ரகாஶமான ஜ்ஞாநமாத்ர மன்று ஜ்ஞாத்ருத்வமும் பொருந்திய தென்றும் நமது ஆசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருப்பது எவ்விதத்திலும் அநுபபந்நமாகாது.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன், இது விஷயமான ஸித்தாந்தத்தைப் பின்வருமாறு விஸ்தரித்திருக்கிறார். ஜீவனுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநமே; ஆனால், ஜீவன் கேவலம் ஜ்ஞாந மாத்ரமாக இருந்தால், ஜ்ஞாநம் அசேதந மாதலால் ஜீவனுக்கு அறியும் யோக்யதை இல்லாமலிருக்க ப்ரஸங்கிக்கும். ஆகையால் அப்படிப்பட்ட ப்ரஸங்கம் வராமலிருக்கும் பொருட்டு மற்றை விஷயங்களை அறிவிப்பதற்கு ஹேதுவான ஜ்ஞாநமொன்று ஜீவனை ஆஶ்ரயித்து நிற்கின்றது என்று ஒத்துக்கொள்ள வேண்டும்,

இப்படி ஜ்ஞாநாஶ்ரயமாக இருப்பதுடன், தன்னையே தானே அறிந்துகொள்ளும் ஸ்வபாவத்தையும் ஜீவன் உடைத்தாயிருக்கிறான். இந்த அறிவுக்கு, தன்னை ஆஶ்ரயித்திருக்கும் ஜ்ஞாநம் ஹேதுவாகாது; தனது ஸ்வரூபமாக நிற்கும் ஜ்ஞாநமே இதில் ஹேது. இந்த இரண்டு ஜ்ஞாநங்களும் வேறு வேறு ஸ்வபாவத்தை உடையவை. ஆஶ்ரயித்திருக்கும் ஜ்ஞாநத்திற்கு விஷயாந்தரங்களை மாத்ரம் தெரிவிப்பதில் ஶக்தியே தவிர 'நான்' என்னும் உணர்ச்சியை உண்டு பண்ண ஶக்தியில்லை; ஸ்வரூபமாயுள்ள ஜ்ஞாநமோ, தன்னையே தான் உணர்த்திக்கொள்ளுமே தவிர விஷயாந்தரங்களை ப்ரகாஶிப்பிக்காது. இவைகளுள் முதல் ஜ்ஞாநத்தைத் தர்ம பூத ஜ்ஞாந மென்றும் இரண்டாவது ஜ்ஞாநத்தை தர்மிஜ்ஞாநமென்றும் வ்யவஹரிப்பார்கள்.

தர்மபூத ஜ்ஞாநத்தை அவலம்பித்து விஷயாந்தரங்களை க்ரஹிக்கும் ஶக்தியைச் சேதநத்வமென்றும், தர்மி ஜ்ஞாநத்தால் தன்னையே தான் தெரிந்து கொள்வதை ப்ரத்யக்த்வமென்றும் வ்யவஹரிப்பது உண்டு. இந்த வ்யவஹாரத்தை ஒத்துக்கொண்டால் சேதநத்வத்தையும் ப்ரத்யக்த்வத்தையும் ஜீவேஶ்வரர்களுக்குப் பொதுவான லக்ஷணமாகச் சொல்லக்கூடும். 'ப்ரத்யக்த்வம்' என்னும் ஶப்தத்தின் அர்த்தமாவது - ப்ரதீபமஞ்சதீதி ப்ரத்யக்; 'விபரீதமாகப் போகும்'. 'போகின்றது' என்னும் அர்த்தத்தை உடைய தாதுக்களுக்கெல்லாம் 'அறிகின்றது' என்னும் அர்த்தமும் உண்டு என்று ஸம்ஸ்க்ருத பாஷையில் ஒரு ஸங்கேதம் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனது பற்றி 'ப்ரத்யக்' என்னும் ஶப்தத்திற்கு 'விபரீதமாக அறியும்' 'விபரீதமாகத் தோன்றும்', அதாவது - 'லோகரீதிப்படி தோற்றமுண்டாகாமல் விபரீதமான ஒரு மார்க்கத்தால் தோற்றுகை' என்னும் அர்த்தம் கிடைக்கிறது. தனக்குத் தான் தோற்றுகை யென் விபரீதமான தோற்றமாக வேண்டுமென்றால் - லோகத்தில், 'ப்ரகாஶிக்கிற ஜ்ஞாநமொன்று, ப்ரகாஶிக்கப்படும் விஷயம் வேறு, அப்படி ப்ரகாஶிப்பிக்கப்பட்ட விஷயத்தை அறியும் பொருள் வேறு; தர்மபூதஜ்ஞாநம் ப்ரகாஶிக்கின்றது, விஷயம் ப்ரகாஶிக்கப்படுகின்றது, தர்மபூத ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமாயுள்ள ஜீவன் அறிகிறான்' என்னும் பரிபாடி ஒன்று உண்டு. அப்படிக்கில்லாமல், 'எந்த ஜ்ஞாநம் ப்ரகாஶிக்கின்றதோ, அதுவே ப்ரகாஶிக்கப்பட்டு அதுவே அறிகின்றது; தர்மி ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடைய ஜீவன் தன்னையே தான் அறிகின்றான்; தனக்கே தான் தன்ப்ரகாஶத்தைக் கொண்டே தோன்றுகின்றான்' என்னும் ரீதி லோக மார்க்கத்திற்கு விபரீதமானதே! ஆகையால் தான் இதற்கு ப்ரத்யக்த்வமென்று பெயர் வந்தது.



ஸ்ரீ தேஶிகனுடைய இம்மாதிரியான விஸ்தாரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் - 'ஜீவனுடைய ஸ்வரூபம், ஜ்ஞாநம் ஜ்ஞாத்ருத்வம் இரண்டுங் கொண்டது அதாவது - ஜீவன் ஜ்ஞாந ஸ்வரூபனாக இருக்கையிலும் தன்னையும் விஷயாந்தரங்களையும் அறியும் யோக்யதையையும் உடைத்தாயிருக்கிறான்' என்பதுதான். 'ஜ்ஞாநம்' என்னும் ஶப்தத்தின் அர்த்தமென்ன? என்பதை இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம். 'ஜ்ஞாநம்' என்றால் அறிவு, அதாவது - ஸ்வயம் ப்ரகாஶரூபமான அவபாஸம் என்று அர்த்தம்; இப்படிப்பட்ட அவபாஸம், சித் அசித் ஈஶ்வரன் என்னும் மூன்று தத்வங்களுள் ஈஶ்வரனுக்கும் ஜீவனுக்குமுண்டு; அசித் தத்வத்தில் உள்ளடங்கிய தர்ம பூத ஜ்ஞாநத்துக்குமுண்டு; ப்ராக்ருதி காலம் இவைகளுக்கு இல்லை. இந்த அவபாஸம், தான் அசேதநமாக இருந்துகொண்டு விஷயங்களை ப்ரகாஶிப்பித்து ஜ்ஞாதாவாகிற ஆத்மாவுக்கு அறிவிப்பிக்கும்; அறிகிற ஆத்மாவாகிற கர்த்தாவும், அறியப்படும் விஷயமாகிற கர்மாவும், இந்த அவபாஸத்தைவிட வேறுபட்டதாக இருப்பதால், இதை ஸகர்த்ருக ஸகர்மக அவபாஸம் என்று சொல்வார்கள். இது தர்மபூத ஜ்ஞாநமேயாகும். அப்படிக்கில்லாமல், இந்த அவபாஸமே, தான் சேதநமாக இருந்து கொண்டு தனக்கே தன்னை தோற்றுவித்துக்கொள்வதுமுண்டு. இதை 'ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாஶம்' என்று சொல்வார்கள். இது தர்மி ஜ்ஞாநமே யாகும்.

வ்யவஹார ஆநுகுண்ய ஹேதுத்வத்தையே ஜ்ஞாநத்வமென்று சிலர் பரிஷ்கரிப்பது முண்டு. ஜ்ஞாநம் இருந்தாலொழிய ஒரு பொருளைப்பற்றி வ்யவஹரிப்பதற்கு வேண்டிய ஆநுகுண்யம் ஏற்படாதாதலால் ஜ்ஞாநமே வ்யவஹார ஆநுகுண்யத்திற்கு ஹேதுவென்று சொல்லக்கூடும். இந்த ஜ்ஞாந லக்ஷணத்தைப்பற்றி அதிகமாக விசாரிப்பது இவ்விடத்தில் ஸாத்யமில்லையாதலால் இந்த விசாரத்தை இவ்வளவோடு நிறுத்துகிறோம்.

மற்றும் ஒரு விஷயத்தை இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டும். 'ஜீவன்கள் ஸம்ஸரிக்கும்பொழுது ஜ்ஞாநத்துக்கு ஸங்கோச விகாஸங்கள் உண்டாகின்றன; அப்படிப்பட்ட விகாரங்கள் உண்டாவதைத்தான் ஜீவன் விஷயத்தில் ஸ்ருஷ்டி விநாஶம் என்று நாம் வ்யவஹரிக்கிறோம்' என்று ஏற்கெனவே நாம் படித்திருக்கிறோம். இம்மாதிரியாக ஜநிக்கும் விகாரம், ஜீவனை ஆஶ்ரயித்திருக்கும் தர்மபூதஜ்ஞாநத்திற்கா? இல்லாவிட்டால் ஜீவ ஸ்வரூபமாகிற தர்மி ஜ்ஞாநத்திற்கா? என்று ஒரு ஆகாங்க்ஷை ஜநிக்கக்கூடும். இந்த ஸங்கோச விகாஸங்கள் தர்மபூத ஜ்ஞாநத்திற்கே தவிர தர்மிஜ்ஞாநத்திற்கு இல்லை என்பது நமது ஸித்தாந்தம்.

இப்படி ஜ்ஞாநம் தர்மபூதம் தர்மி ஸ்வரூபம் என்று இருவகைப்பட்டதென்றும், சேதநத்வம் ப்ரத்யக்த்வம் என்று இரண்டு தர்மங்கள் ஆத்ம தத்வத்தை ஆஶ்ரயித்து நிற்கின்றனவென்றும், ஸம்ஸார தஶையில் தர்மபூத ஜ்ஞாநத்திற்கே ஸங்கோச விகாஸங்கள் ஸம்பவிக்கின்றனவென்றும் இத்யாதியான விஶேஷித்த அம்ஶங்களை ஸ்ரீ பாஷ்யகாரர் கண்டோக்தமாக விஸ்தரிக்காவிடினும், இவ்வளவு விஸ்தாரங்களைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே இது ஸம்பத்தங்களான ஸ்ரீ பாஷ்ய பங்க்திகளை அருளிச்செய்திருக்கிறார் என்று நாம் அறியவேண்டும்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

# ஸ்ரீ அஹோபிலம்.

அஹோபிலநம்பி என்று கையொப்ப மிட்டுக்கொண்டு, ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திகர், 'ஹிந்து' பத்ரிகையில் ஸ்வல்ப காலமாக ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியைப் பற்றிச் சில வ்யாஸங்களை எழுதி வருகிறார். சென்ற நவம்பர் மீ 8௳ பத்ரிகையில் ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமி யுடையவும், அவருக்குப்பின் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளின சில ஸ்வாமிகளுடையவுமான வைபவங்கள் காணப்படுகின்றன. பூர்வம் ஸ்ரீ அஹோபிலம் அநுபவித்த மஹிமையையும் இப்பொழுது அதற்கு உண்டாகியிருக்கும் தைந்யத்தையும் நன்றாக உணர்ந்தவராய், இந்த ஆஸ்திகர், தாத்காலிக தைந்யத்தைப்பற்றி மிக்க நிர்வேதத்துடன், 'மறுபடியும் ஸ்ரீ அஹோபிலத்துக்குப் பூர்வகாலத்து மஹிமை திரும்ப வந்து நம் எல்லாரையும் தந்யர்களாகச் செய்யப் போகின்றதோ?' என்று ஶோகித்து, அந்தக் கதைகளைச் சொல்லியாவது ஒருவித ஆறுதலை அடையலாமென்று எண்ணி இந்த வ்யாஸங்களை எழுதி வருவதுபோலத் தோன்றுகிறது. அவர் எழுதியிருக்கும் விஷயங்களெல்லாவற்றையும் இந்தப் பத்ரிகையில் விவரமாக எழுதுவது அஶக்யமாக இருப்பதால், சில அம்ஶங்களை மாத்ரம் ஸங்க்ரஹமாக எழுதுகிறோம்.

ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமியின் சரித்ரத்தைப் பற்றி எழுதி வரும்பொழுது, அவருடைய ஸர்வபூத ஸௌஹார்த்தத்தைப் பின்வருமாறு அவர் புகழ்ந்து பேசுகிறார்:— " ஜகத் முழுவதும் உஜ்ஜீவநம் அடையவேண்டுமென்கிற எண்ணம் அவருடைய

திருவுள்ளத்தில் குடிகொண்டிருந்தபடியால், அதை நிறைவேற்றுவதற்காகவே இந்த மடத்தை ஏற்படுத்தி, க்ராமங்தோறும் ஸஞ்சரித்து ஸகல ஜநங்களுக்கும் தத்வ ஜ்ஞாநத்தை உபதேஶம் செய்து எல்லாரையும் பகவத் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகும்படி நடத்திவந்தார். அவருடைய ஸஞ்சாரம், பெரியதொரு பகவதாலயமும் வித்யாஸ்தாநமும் சேர்ந்து ஸஞ்சரித்தது போல இருந்தது. பகவானிடத்தில் பக்தியும் பகவத் ஸ்ருஷ்டங்களான ப்ராணிகளுக்கு உபகரிப்பதும் அக்காலத்தில் மிகவும் வ்ருத்தியாகிவந்தன. தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய தேஶங்களெல்லாவற்றிலும் பகவத் ராமாநுஜார்யருடைய திவ்யாஜ்ஞை த்ருடமாகப் பரவிவந்தது. ஸ்ரீ அஹோபிலத்தில் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு ப்ரஹ்மோத்ஸவம் நடக்கும் பொழுதெல்லாம் பலதேஶங்களிலிருந்து ஏராளமான ஜநங்கள் வந்து பகவத் ஸேவையைச் செய்துகொண்டு, பரஸ்பரமுள்ள பாகவதத்வ ஸம்பந்தத்தை நன்றாக உணர்ந்து போனார்கள். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனைக் குலதேவதையாகக் கொண்டாடிவந்த விஜயநகரம் மஹாராஜனும் மற்றவர்களைப் போலப் பகவத்ஸேவையையும் ஸ்வாமி ஸேவையையும் ப்ரார்த்தித்து அந்தக் கூட்டங்களுக்கு நடுவில் வந்து நிற்பதைப் பார்க்கலாம். பஞ்சமர்களென்று இப்பொழுது நம்மால் விலக்கப்படும் கீழ்ஜாதியரும், ஸ்ரீ ஸ்வாமியின் க்ருபைக்குப் பாத்ரமானவர்களாய்ப் பகவத்ஸந்நிதிக்குஎதிரில் வந்து ஆநந்தத்தோடு நர்த்தநாதிகளைச் செய்வதும் பகவத் ப்ரஸாதத்தைப் பெற்றுப்போவதும் வழக்கமாக இருந்தது. இப்படியெல்லாம் ஸர்வஜந ஸாமாந்யமாகத் தமது அநுக்ரஹத்தை ப்ரஸரிப்பித்துத் தமக்குப்பின் வருமவர்களும் இந்தமாதிரி ஸர்வ ஜகத்துக்கும் உபகாரகர்களாக இருக்கவேண்டுமென்றன்றோ அவர் இந்த மடத்தை ஸ்தாபித்தது?"

அவருக்குப்பின் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளின ஸ்ரீ ஸ்வாமிகளைப்பற்றி எழுதிவருங் காலத்தில், ஐந்தாவது பட்டத்திற்கு எழுந்தருளின ஸ்ரீ ஸ்வாமி தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரென்றும், அவர்காலத்தில் தென்கலையாரும் வடகலையாரும் பரஸ்பரம்



மிக்க ஸௌஹார்த்தத்துடன் வர்த்தித்து வந்தார்களென்றும் சொல்லிவிட்டு, இந்த அஹோபிலநம்பி, ஆறாவது பட்டத்திற்கு எழுந்தருளின ஷஷ்ட பராங்குஶ ஸ்வாமியைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார் :—

"ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமிக்குப் பிறகு இவர்தான் மிகச்சிறந்தவர். விஜயநகரம் மஹாராஜர்கள் இவரிடத்தில் மிக்க ப்ரதிபத்தி யுள்ளவர்களாக இருந்தார்கள். இந்தஸ்வாமி ஜகந்நாதம் வரையில் வடக்கே ஸஞ்சாரம்செய்து ஓரிஸ்ஸா தேஶத்து அரசனாயிருந்த முகுந்ததேவராயனால் மிகவும் ஆதரிக்கப்பட்டுத் திரும்பிவந்தார். விஜயநகரத்து அரசர்களில் ஒருவனான ஸதாஶிவராயன் திருப்பதிக்கு யாத்ரைபோய்த் திரும்பிவருகையில் கமலாபுரமென்னும் கடப்பைக்கு ஸமீபத்தில் அநேக தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்தானென்றும், அந்த ஸந்நிதிகளுக்கு ஸம்ப்ரோக்ஷணை செய்யுங்காலத்தில் ஸ்ரீஷஷ்டபராங்குஶ ஸ்வாமியை ப்ரார்த்தித்து எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து அப்பொழுது அவருக்குப் பிநாகிநீ தீரத்திலுள்ள ஸ்ரீ பாஷ்யபுரமென்று வ்யவஹரிக்கப்படும் ஒரு பெரிய க்ராமத்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் சொத்தாக இருக்கவேண்டுமென்று ஸமர்ப்பித்தானென்றும் ரிக்கார்டுகளிலிருந்து தெரியவருகிறது."

"இப்படி மேன்மேல் வ்ருத்தியை அடைந்துகொண்டுவந்த இந்த ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதி, 1577-வது வர்ஷத்தில் துருஷ்கர்களால் ஆக்ரமிக்கப்பட்டது; ஆலயத்திற்குள்ளிருந்த ஸகல சொத்துக்களும் அபஹரிக்கப்பட்டன. அப்பொழுது 'ஹாண்டி' என்று சொல்லப்படும் ஶைவர்களும் இந்தக் கைங்கர்யத்தில் துருஷ்கர்களுக்கு மிகுந்த ஸஹாயம் செய்தார்கள். ஆனால், ஆராதநாதிகள் மாத்ரம் நிறுத்தப்படவில்லை. ஸேவார்த்திகளாக வருமவர்களிடமிருந்து பெரியதொரு வரி வஸூல் செய்துகொண்டு அதனால் ஏராளமான த்ரவ்ய ஸம்பாதநத்தைச் செய்துவந்தபடியால், துருஷ்கர்கள் ஆராதநத்தை நிறுத்துவதை உசிதமாக எண்ண

வில்லை. இப்படிச் சற்றேறக்குறைய ஏழு வருஷங்கள் கழிந்தன. அப்பொழுது ஏழாவது ஸ்வாமியின் காலமாக இருந்தது. இவர், லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடமிருந்து ஸ்வப்நத்தில் ஓர் ஆஜ்ஞையைப் பெற்றவராய், அப்பொழுது பெனுகொண்டாவில் ராஜ்ய பரிபாலநம் செய்துவந்த ரங்கராயனென்னும் விஜயநகரம் மஹாராஜனிடம் போய், 'ஹே மஹாராஜனே! திருமலைராஜுவென்றும் வெங்கடராஜுவென்றும் உம்மிடம் இரண்டு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களைத் தகுந்த ஸைந்ய ஸஹாயத்துடன் நம்மோடு அனுப்பவேணும். அவர்கள் ஸ்ரீ அஹோபிலத்திலிருக்கும் துருஷ்கர்களை அடித்துத் துரத்திவிட்டு முன்போல அந்த ஸந்நிதியை நம்முடைய ஸ்வாதீநஞ்செய்து கொடுப்பார்கள். இப்படி பகவாந் எமக்கு ஆஜ்ஞாபித்திருக்கிறார்' என்று சொல்லவே, அந்த மஹாராஜன் மிகவும் ஸந்தோஷம் அடைந்து, தானே அந்த யுத்தத்திற்குப் போக வேண்டுமென்கிற எண்ணம் தனக்குத் தீவ்ரமாக உண்டாகையிலும் பகவதாஜ்ஞை இல்லையென்னுங் காரணத்தால் தன்னுடைய உத்ஸாஹத்தை அடக்கிக்கொண்டு, தன்னுடைய அதிகாரிகளான அவ்விருவரையும் ஸ்ரீ ஸ்வாமி நியமநப்படி சதுரங்க ஸைந்யத்துடனும் மஹார்க்கங்களான உபஹாரத்துடனும் அஹோபிலத்தை நோக்கி அனுப்பினான். அந்த அதிகாரிகள், ஸ்ரீ ஸ்வாமியை ஸேநாமுகத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய், அஹோபிலத்தில் துருஷ்கர்களுடன் யுத்தஞ்செய்து, அவர்களை அடித்துத் துரத்திவிட்டு, ஸந்நிதியை ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸ்வாதீநஞ்செய்து கொடுத்தார்கள். இந்த ஜயத்தை ப்ரஸித்தம் செய்வதற்காக, ஸ்ரீ ஸ்வாமி, அவ்விடத்தில் ஒரு ஜயஸ்தம்பத்தை நாட்டுவித்து, அதன்கீழ் இந்த ஜயஸம்பந்தமான சரித்ரத்தையும் ஶிலையில் எழுதிவைத்திருக்கிறார். அந்த ஶிலாஶாஸநம் 1584-ம் வர்ஷத்தில் எழுதப்பட்டது என்று அந்த ஶாஸநத்திலிருந்தே தெரியவருகிறது. கீழ் அஹோபிலத்தில் இந்தக்காலத்திலும் அந்த ஶாஸநத்தையும் ஸ்தம்பத்தையும் காணலாம்."

அஹோபில நம்பி.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

இந்த வர்ஷத்திய மஹாஸங்கம் ஸ்ரீ அஹோபிலத்தில் சேரப்போவதாக முதலில் கேள்விப்பட்டோம். பிறகு, அதைப்பற்றி எவ்வித ப்ரஸ்தாவமும் கிடைக்காததால், இவ்விடத்திலுள்ள ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்கள் அனைவருக்கும் அதுவிஷயமாக அதிஸந்தேஹம் ஜநித்திருக்கின்றது. ஒருகால், இப்பொழுது குளிர்காலம் என்று எண்ணி, வரும் ஏப்ரல் மாஸத்தில் குளிர் நிவ்ருத்தமானபிறகு ஸங்கத்தைச் சேர்க்கலாம் என்று ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் நிர்ணயித்திருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். எது காரணமாக இருந்தாலும், இந்த வர்ஷத்திய ஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்திலேயே சேர்க்கவேண்டுமென்று அடியேனுக்குத் தோன்றுகின்றது. வடதேஶத்திலிருந்து இவ்விடம் வந்திருந்த ஒருவர், மைஸூர் ப்ரதேஶத்திலிருந்து ஸ்ரீ பரகால ஸ்வாமி மடத்தைச் சேர்ந்தவர்களிற் சிலர், கத்தவால் மஹாராஜாவை ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தை விட்டு மாற்றிவிடும்பொருட்டு சில ப்ரயத்நங்களைச் செய்கிறார்களென்றும், அது மஹாராஜாவுக்கு அபிமதமாக இருக்கின்றதென்றும் அடியேனிடம் சொன்னார். தவிரவும், தெலுங்குதேஶத்திலுள்ள நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள், ஸ்ரீ ஸ்வாமியும் ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்துள்ள மற்றவர்களும் தங்கள் விஷயத்தில் உதாஸீநர்களாக இருக்கிறார்களென்று நினைத்திருக்கிறார்கள். மேலும், ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதி அதிமாத்ரம் ஜீர்ணமாக இருக்கிறபடியால், அதை உத்தாரணம் செய்வதற்கு வேண்டிய ப்ரயத்நங்களைச் செய்வதும் நம்முடைய ப்ரதம கைங்கர்யங்களில் ஒன்றாக இருக்கின்றது. இவை யெல்லாவற்றையும் உத்தேஶித்து வருகிற பங்குனி மாஸத்திலாவது ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் ஸ்ரீ அஹோபிலத்தில் சேரும்படி ஶிஷ்யஸபையின் ப்ரவர்த்தகர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

சித்தூர்,
10—12—13.

வேலாமூர் வீரராகவதாஸன்.

ஸ்ரீ:

# புஸ்தக விமர்ஶம்.

ஸ்ரீ தேஶிக ப்ரபந்தம். திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ. உ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் ஸஹாயத்தை அவலம்பித்து, ஸ்ரீ இடாம்பி ஸ்ரீ ராமாசார்யராலும் ஸ்ரீ கொமாண்டூர் ஸுதர்ஶநாசார்யராலும் நூதநப்ரதியாக இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புஸ்தக மொன்றை நாம் வரப் பெற்றோம். இந்த ப்ரபந்தத்தை அருளிச் செய்தவர் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் என்னும் நமது ஆசார்யோத்தமர். சேதநோஜ்ஜீவநத்திற்காக அநேக ரஹஸ்யங்களை அவர் அருளிச்செய்திருக்கிறார் என்பது ஸுப்ரஸித்தம். ஒவ்வொரு ரஹஸ்யத்தின் ஆத்யந்தங்களிலும் மற்றும் சில ஸந்தர்ப்பங்களிலும் அந்தந்த ரஹஸ்யத்தின் அர்த்தத்தை எல்லாரும் எளிதில் அநுஸந்தாநம் செய்யத்தக்கவாறு அதி க்ருபையுடன் பாசுர ரூபமாக அந்த மஹாநே ஸங்க்ரஹித்திருக்கிறார். அப்படி ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ள இந்தப் பாசுரங்களின் தொகுதியே ஸ்ரீ தேஶிக ப்ரபந்தம் என்னும் இப் பெயர் பெற்றது. இது, உத்தமங்களான ரஹஸ்யார்த்தங்களை அடக்கியுள்ளதாதலால், ஜகத்துக்கு மிகவும் உபகாரகமானது. இப்படி ஜகதுபகாரகமான இந்த ப்ரபந்தம், எவ்வித பிழையுமில்லாதபடிக்கே க்ரமமான ப்ரபந்த வரிசையுடன் மிக த்ருப்திகரமாக அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றது என்பது நமக்கு மிக்க ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது. இது விஷயமாக ஸ்ரீ ராமாசார்யரும் ஸ்ரீ ஸுதர்ஶநா சார்யரும் அதிகமான பரிஶ்ரமத்தை எடுத்துக்கொண்டதாகத் தெரியவருகிறது. அந்தப் பரிஶ்ரமத்திற்கு அநுகுணமாக, நமது ஸித்தாந்தத்தில் ஶ்ரத்தையுள்ள எல்லாரும் அவர்களை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியின் ஸம்பந்தம் ஏற்பட்டிருப்பதே, இந்த ப்ரதியின் ஸாதுத்வத்திற்குப் போதுமான நிரூபணம். இதன் விலை அணா - 8. இதை அபேக்ஷிப்பவர்கள், சென்னை திருவல்லிக்கேணி தேரடிவீதி 38 - ம் நம்பர் க்ருஹத்திலிருக்கும் ஸ்ரீ. கொ. ஸுதர்ஶநாசார்யரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் சைதாப்பேட்டைப் பிரிவு.

சென்ற நவம்பர்மீ 2-ம் ௳ யில் நடந்த வர்ஷாந்தக் கூட்டத்தில் பின் வருமாறு மானேஜிங் கமிட்டியார் நியமிக்கப்பட்டார்.

| | |
|---|---|
| ஸபாத்யக்ஷர்:— | ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர். |
| உபஸபாத்யக்ஷர்:— | ,, வி. ராகவாசார்யர். |
| கார்யதர்ஶி: — | ,, எஸ். வாஸுதேவாசார்யர். |
| இதர மெம்பர்கள்:— | ,, டி. நரஸிம்ஹம் ஐயங்கார். |
| | ,, ஸி. துரைஸ்வாமி ஐயங்கார். |
| | ,, ஆர். க்ருஷ்ணமாசார்யர். |
| | ,, ஆர். நரஸிம்ஹ ஐயங்கார். |
| | ,, ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர். |
| | ,, வி. எஸ். ராஜகோபாலாசார்யர். |

இது முடிந்தவுடன், 16 - வது விதிப்படி, பொது ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்டில் இந்தப் பிரிவின் ப்ரதிநிதியாக இருக்கும் பொருட்டு ஸ்ரீ. வி. ராகவாசார்யர் நியமிக்கப்பட்டார். பிறகு, திருப்பாவையின் பதினைந்தாவது பாசுரத்தைப்பற்றி ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யருடைய உபந்யாஸம் நடந்தவுடன், ஸங்கம் கலைந்தது.

## ஷை பிரிவின் சென்ற வருஷத்திய அறிக்கை.

சென்ற வர்ஷம் முதலில் பிரிவின் அங்கத்தினர்களின் தொகை - 57; வர்ஷாந்தத்தில்-55. இவர்களில் 10-பெயர்கள் முதல் வகுப்பினர்; 44-பெயர்கள் இரண்டாவது வகுப்பினர்; ஒருவர் அஸோஸியேட். சென்ற வருஷத்தின் அங்கத்தினர்களுள் ஒருவர், தாம் அங்கத்தினராக இல்லை என்று தம்மைத்தாமே நிவ்ருத்திசெய்துகொண்டார்; மற்றொருவர், சென்னபட்டணத்தைவிட்டு வெளியில் வஸிக்கப் போய்விட்டபடியால், அவர் இந்தப் பிரிவின் அங்கத்தினராக எண்ணப்படவில்லை.

சென்ற வர்ஷத்தில் 4 - தடவை அங்கத்தினர்களின் ஸங்கம் சேர்க்கப்பட்டது. இவைகளில் ஒன்று 1912 - வது வருஷம் நவம்பர் மாஸம் 17௳ நடந்த வர்ஷாந்த ஸங்கம். ஒன்று, சென்ற ஜநவரி மாஸத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதி விஷயமாகச் செய்த சில வ்யவஸ்தைகளைப் பற்றி ஆலோசிப்பதற்காக 1913௵ பிப்ரவரி௴ 2௳ சேர்ந்தது. மற்றை இரண்டும், சென்ற ஆகஸ்டு ஸெப்டம்பர் மாஸங்களில் சேர்க்கப்பட்டன. இவைகளுள் மூன்று ஸங்கங்களில் ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர், திருப்பாவை உபந்யாஸங்களைச் செய்தார். தமது திருமேனி அஸ்வஸ்தமாக இருக்கையிலும் அதைப் பாராட்டாமல் ஸித்தாந்தத்திலுள்ள உத்ஸாஹத்தைக்கொண்டே, கேட்குமவர்களுக்கு அம்ருத வர்ஷம் போன்ற இந்த உபந்யாஸங்களைச் செய்த ஸ்ரீ. சேட்லூர் ஸ்வாமிக்கு இந்த ஸபையின் அங்கத்தினர்கள் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

---

## வர்ஷாந்த வரவு செலவு கணக்கு.

(1-10-12 முதல் 30-9-13 வரையில்.)

| | | வரவு. | செலவு. |
|---|---|---|---|
| வரவு - வருஷம் முதலில் கை இருப்பு | ரூபா. | 9—11—2 | |
| ,, முதல் வகுப்பினரின் சந்தா | ,, | 37— 0—0 | |
| ,, இரண்டாவது ௸ | ,, | 20— 0—0 | |
| செலவு - ஸபையின் 26-வது விதிப்படி பொதுக் கார்யதர்ஸிக்கு அனுப்பினது | ,, | | 20—12—9 |
| ,, ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யருக்கு உபந்யாஸார்த்தம் ஸமர்ப்பித்தது | ,, | | 15— 0—0 |
| ,, ஸ்டாம்பு அச்சுக்கூலி வகைரா | ,, | | 7—15—9 |
| ஆக ரூபா. | | 66—11—2 | 43—12—6 |
| 30—9—13 ல் இருப்பு | | | 22—14—8 |
| ஆக ரூபா. | | 66—11—2 | 66—11—2 |

இந்தக் கணக்கைப் பரிசோதித்துப் பார்த்தேன்; இது ஸரியாகவே இருக்கின்றது.

மயிலாப்பூர், 25-10-13. அ. வரதாசார்யர். 25-10-13.

எஸ். வாஸுதேவன். கார்யதர்ஸி, ஸ்ரீ. அ. ம. ஸி. ஸபை. மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 FEB 1914
MADRAS

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஸிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச௵ தை௴ [ஸஞ்சிகை 12.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஸம்ஸ்க்ருத பாஷையின் தாத்காலிக ஸ்திதி.**

“ஹிமஹதநளிநீவ நஷ்டஶோபா வ்யஸநபரம்பரயாऽதிபீட்யமாநா ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருபணாம் தஶாம் ப்ரபந்நா” என்று, ராவணனுடைய அஸோகவநத்தில் அகப்பட்டு வாங்மநஸ்ஸுக்கு அபரிச்சேத்யமான துர்தஸையை அநுபவித்து வந்த ஸீதா பிராட்டியைப் பார்த்தபொழுது, ஹநுமாந், தனக்கு உண்டான துக்கத்தை அடக்கமாட்டாமல் கதறினன். கேவலம் ஸுக ஸம்வர்த்திதையாகவும் துக்கத்திற்கு ஸர்வதா அநர்ஹையாகவும் இருந்த அந்த ஸீதை, விதி வஸத்தால், பனியில் வாடின தாமரஸபுஷ்பம்போலவும், ஸஹசரனை விட்டுப் பிரிந்த பெண்சக்ரவாகப்பறவை போல

வும் கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது யாருடைய மனஸ்தான் உருகாமல் நிற்கும்? ‘‘ஜீர்ணவதி வ்யாதி சம் . . .’’ என்றன்றோ மஹநீயமான் தனது ஶாகா ம்ருகத் தன்மையை நினைந்து வருந்தினன்? அதே மாதிரி, ஸௌராஜ்ய பத்தோத்ஸவையான தனது விபூதியில் மஹத்தான உந்மேஷ தசையை ஒருகாலத்தில் அநுபவித்து விட்டு, இப்பொழுது ஆதரிப்பவர்களின்றியே அதி ஶோசநீயமான துர்தசையை அநுபவித்துவரும் இந்த ஸம்ஸ்க்ருத பாஷையைப் பார்க்கும் நமக்கு, அதன் குணபூர்த்தியை ஸரிவரத் தெரிந்துகொள்ளும் யோக்யதை இல்லாவிடினும், அளவற்ற கேதம் உண்டாகின்றது. இதிஹாஸ புராண காவ்யங்களை விலக்கிவிட்டாலும், அவைகளைவிட ஸமீபித்த காலத்தவரான போஜ மஹாராஜன் முதலியவர்களுடைய காலங்களில் இந்தப் பாஷை அதிகமான உந்நத பதவியை அடைந்திருந்தது என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான விஷயம். பிறகு இந்தத் தேசத்து அரசர்களுக்கு ஒரு வித மாலிந்யம் ஸம்பவிக்கவே, ஜநங்களுக்கும் மஹத்தான கஷ்டங்கள் உண்டாகி, அநாதரணமாக அவர்களால் வ்யவஹரிக்கப்பட்டுவந்த இந்தப் பாஷையும், பெரிய மேன்மையை அடைந்து, பஹுகாலம் பீஜமாத்ரமாக மூலை முடுக்குகளில் அஜ்ஞாதவாஸமாக ஜீவித்து வந்தது. கொஞ்ச காலம் முன்பே, துஷ்ட ராஜாக்களால் ப்ரஜைகளுக்கு உண்டான பீடை நிவ்ருத்தமாகும்படி இந்தத் தேசம் இங்கிலிஷ்காரர்கள் வசமாகி, ஒடுங்கியிருந்த ஜநங்கள் நிர்விசங்கமாக வெளிவரவும் பயமின்றியே ஒரு ஜீவநத்தை அவலம்பிக்கவும் ஸாத்யமான பொழுது, மறுபடியும் இந்தப் பாஷைக்கு ஸ்வல்ப ப்ரசாரம் ஸம்பவிக்க அவகாசம் உண்டாயிற்று. இங்கிலிஷ்காரர்களும், ஜநங்களிடத்தில் ஒருவித விஸ்வாஸமுள்ளவர்களாய் வித்யாஹீநமாயிருக்கும் ஜந ஸாமாந்யத்திற்கு வித்யையைப் போதிப்பிக்கவேண்டுமென்று அநுகூலமாகப் பல ஏற்பாடுகளைச் செய்தபொழுது, இந்த ஸம்ஸ்க்ருத பாஷைக்கு அந்த வித்யாசாலைகளில் ஸ்வல்ப ப்ராதாந்யத்தைக் கொடுத்து, வ்ருத்தியின் பொருட்டு வித்யாப்யாஸம் செய்பவர்களில் அநேகர் இந்தப் பாஷையையும் அப்யஸிக்கும்படியும் அதில் ஒரு ப்ராவீண்யத்தை ஸம்பாதித்துக்கொள்ளும்படியும் சில வ்யவஸ்தைகளைச் செய்தார்கள். அதனால் இந்தப் பாஷையின் ப்ரசாரம் கொஞ்சம் பலப்பட ஆரம்பித்தது. அப்படிப் பலப்பட்டதன் பயனாக,



இக்காலத்தில் ராஜபாஷையை அப்யஸித்திருக்கும் அநேகரில் ஸம்ஸ்க்ருதஜ்ஞாந முள்ளவர்களை நாம் காண்கிறோம். ததேக வ்யாபாரமாக அப்யஸிக்குமவர்களுக்கு உண்டாகும் ஜ்ஞாநம் போல த்ருடமான ஶாஸ்த்ரஜ்ஞாநம் ஸம்பவிக்காவிட்டாலும், உசிதமாகப் பாஷாஜ்ஞாநம், பஹுதூரம் ப்ரசாரமாகி யிருக்கின்றது என்பதை இந்த விஷயத்தைப் பராமர்ஶித்தவர்களெல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன்னே, ‘பாஷாபிவ்ருத்திக்கு ராஜாங்கத்தின் ஆதரவு ஹேதுவென்று நினைப்பது பிசகு; பாஷையில் உண்மையான அபிநிவேஶமுள்ளவர்கள் ராஜாங்கத்தின் ஆதரவை எதிர்பாராமலே பாஷையை அப்யஸித்துவரக் கூடும்’ என்னும் தவறான ஒரு அநுமாநத்தைச் செய்துகொண்டு, இந்த ராஜதாநியின் ராஜாங்கத்தில் அதிகார விஶேஷங்களை வஹித்துவந்த நம்மவர்களில் சிலர், பர்யாலோசனை செய்யாமலே, ‘வித்யாஶாலைகளில் ஸம்ஸ்க்ருத பாஷைக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் ப்ராதாந்யம் இனி வேண்டுவதில்லை’ என்று ஒரு மாறுதலைச் செய்துவிட்டார்கள். அது முதல் இந்த ராஜதாநி ஸம்பந்தப்பட்ட வரையில் இந்தப் பாஷைக்கு வந்திருக்கும் ஹாநியைப்பற்றி நாம் என்னசொல்வோம்? வித்யாஶாலைகளில் ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வித்யார்த்திகளின் ஸங்க்யையைப் பார்த்தால், இந்த மாறுதல் எவ்வளவு ப்ரதிகூலமாகப் பரிணமித்துவிட்டது என்பது நன்றாக விளங்கும். இந்த ஸ்திதி ஸமீபத்தில் மாறக்கூடியதாக இல்லை. கால வைபரீத்யமோ நமது தௌர்பாக்யமோ இம்மாதிரியான நிஷ்பத்தியை உண்டுபண்ணி விட்டது என்று நாம் தூஷ்ணீம் பாவத்தை அவலம்பித்து நிற்க வேண்டிய ஸ்திதியில் இருக்கிறோமே தவிர, வேறு விதமாக ராஜாங்கத்தாரை மறுபடியும் பூர்வ ப்ரத்தையை எடுத்துக்கொள்ளும்படி செய்யக்கூடிய அம்ஶமொன்றும் ஸாத்யமாகத் தென்படவில்லை.

‘ஒரு பாஷை அபிவ்ருத்திக்கு வரவேண்டுமானால், அதற்கு ராஜாங்கீகாரம் அவஶ்யமோ? அப்படிப்பட்ட அங்கீகாரம் அநபேக்ஷிதம் என்று சொல்பவர்களின் அநுமாநம் தப்பான அநுமாநம் என்று சொல்வது ஏன்?’ என்று ஒரு ஶங்கை ஜநிக்க

லாம். ‘வஸ்து ஸ்திதியைப் பராமர்ஶித்துப் பார்க்குமவர்களுக்கு இந்த ஶங்கை ஜநிக்காது’ என்பது நம்முடைய எண்ணம். லோகத்தில் வித்யாப்யாஸம் செய்வது ப்ராயேண ஒரு வ்ருத்தியை உத்தேஶித்து நடக்கிறதே தவிர, கேவலம் ததேக ப்ரயோஜநமாக நடைபெறுகின்றது என்று சொல்வது ஸாத்யமில்லை. வ்ருத்திக்குக் காரணமாகாத வித்யைகள் க்ஷயிப்பதையும், வ்ருத்திக்கு ப்ரயோஜகமாயுள்ள வித்யைகள் அபிவ்ருத்திக்கு வருவதையும் எல்லாரும் எல்லாவிடங்களிலும் காணலாம். வ்ருத்திகர்ஶிதர்களாக மஹத்தான கஷ்டத்தை அநுபவித்துக் கொண்டிருக்குமவர்கள், பசியினால் வருந்தும் தம்மையும் தமது பந்துஜநத்தையும் அநாதரித்துத் ததேக ப்ரயோஜநமாக வித்யாப்யாஸத்தில் ப்ரவ்ருத்திப்பார்கள் என்று ப்ரதீக்ஷிப்பது புத்திஶாலிகளின் க்ருத்யமாகுமோ? பசி தாஹம் அடங்குமளவு த்ரவ்யம் இருந்தாலும், போகங்களை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய அதிக த்ரவ்யத்தைத் தேடுவதிலும் அதற்கு உபயுக்தமான வித்யைகளை அதற்கு உபாயமாக அப்யஸிப்பதிலும் மநுஷ்யர்களுக்கு நோக்கம் இருப்பதை நாம் பார்த்ததில்லையோ? இப்படியெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்க, நாம் எந்தப் பலத்தை அவலம்பித்து ‘வித்யாபிவ்ருத்தியில் உண்மையான அபிநிவேஶமுள்ளவர்கள், வேறு ப்ரயோஜநத்தை உத்தேஶியாமல் அந்த அபிவ்ருத்தியைத் தேட முயல்வார்கள்’ என்று சொல்லக்கூடும்? இப்படிச் சொல்வதெல்லாம் வீண் வார்த்தை. இந்த ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநம், ஏதாவது ஒரு ஜீவநத்திற்கு ப்ரயோஜநமாகாத வரையில், அது ஒருவராலும் ஆதரிக்கப்படாது, காலக்ரமேண நஶித்தேவிடும் என்பது திண்ணம்.

ஆனால், ‘ஶோச்யமான இந்த ஸ்திதிக்கு யாதொரு ப்ரதீகாரமும் இல்லையோ? இந்தப் பாஷை இப்படி நஶிப்பதைப் பார்த்துத் துக்கிப்பதைத் தவிர்த்து, அதை ஜீவித்திருக்கும்படி செய்ய உபாயமொன்றும் ஸம்பவியாதோ?’ என்று கேட்கலாம். ‘உபாயம் ஸம்பவிக்கக்கூடும்; ஆனால், அது ஒரு ஜீவநத்தை அவலம்பித்தே நிற்கவேண்டும்’ என்பதுதான் நமது ப்ரத்யுத்தரம். இந்தக் காலத்தில் இங்க்லிஷ் பாஷாப்யாஸமே வ்ருத்திக்கு முக்ய ஸாதநமாக இருக்கிறபடியால், ஸம்ஸ்க்ருத பாஷைக்கு அபிவ்ருத்தியைத் தேடுமவர்கள், அந்த இங்க்லிஷ் பாஷையைப் போ



திப்பிக்கும் வித்யாஶாலைகளில் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும் ப்ராதாந்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்க ப்ரயத்நப்பட வேண்டும்; இல்லாவிட்டால், ஸம்ஸ்க்ருத பாடஶாலைகளை ஏற்படுத்தி அவைகளில் படித்து நிஷ்பத்தியை அடையும் வித்யார்த்திகளுக்கு உசிதமான வ்ருத்தியையாவது கல்பித்துக் கொடுக்கவேண்டும். இம்மாதிரியான உபாயங்களில் ஏதாவது ஒன்று ஸாத்யமானாலொழிய, நாம் இது விஷயமாக ப்ரத்யாஶையைக் கொள்வது வ்யர்த்தமாகவே முடியும்.

இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் இதுபோன்ற உபாயங்களில் ஒன்றைப்பற்றி நாம் தத்காலத்தில் சிந்திக்கக்கூடுமோ? என்பதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம். இங்க்லிஷ் வித்யாஶாலைகளின் நிர்வாஹகர்கள், ஸம்ஸ்க்ருத பாஷையைப் பூர்வமிருந்ததுபோல மறுபடியும் ஒரு ப்ரதாந விஷயமாக அங்கீகரிக்க ஸித்தமாக இல்லையென்பது நமக்குத் தெரியும். கேவலம் ஸம்ஸ்க்ருதத்தை அப்யஸிக்குமவர்களுக்கு ராஜாங்கத்தாருடைய ஆதரவின்றிக்கே என்ன வ்ருத்தியைக் கல்பித்துக் கொடுக்கக்கூடுமென்பதும் நமக்கு நன்றாகப் புலப்படவில்லை. ஆனால், ஆத்யந்திக நாஶத்தைத் தடுக்குமளவு ஒரு மார்க்கத்தை நாம் தேடலாம். அங்கங்கிருக்கும் தநிகர்கள் அங்கங்கே ஸம்ஸ்க்ருத பாடஶாலைகளை ஏற்படுத்தி, அவைகளில் ஸம்ஸ்க்ருத பாடம் மாத்ரமன்றிக்கே இதர ஆதுநிக ஶாஸ்த்ரம் ராஜபாஷை இவைகளின் பாடத்தையும் நடத்திவந்து, அதனால் அப்படிப் படித்துவருமவர்களுக்கு ஒரு வ்ருத்தியைத் தாமே ஸம்பாதித்துக்கொள்வதற்கு உரிய ஸ்வரூப யோக்யதையை உண்டு பண்ணுவதுடன், பலவிடங்களில் வித்வத் ஸதஸ்ஸுகளைச் சேர்ப்பதிலும் அவைகளில் சேருமவர்களுக்கு உசிதமான ஸம்பாவனையைச் செய்வதிலும் வ்யாப்ருதர்களாக இருந்தால், ஒருவாறு நமது குறை நீங்குமென்று நாம் நினைக்கிறோம். இது அத்யந்தம் த்ருப்திகரமான உபாயமாகாவிட்டாலும், ஸ்வல்பபாகத்திலாவது ஸாதகமாகலாம். இதற்கு உபகாரத்தைச் செய்யக்கூடிய ஶக்தியுடையவர்களெல்லாரும் இதை ஒரு முக்யதர்மமாக நினைத்து அவஶ்யம் யதாஶக்தி உபகரிக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

**இக்காலத்திய நிலைமை.**

சென்ற ஸஞ்சிகையில், 'இக்காலத்திய நிலைமை ஸகல விஷயங்களிலும் சீர்குலைந்திருக்கின்றது' என்று சில வ்ருத்தர்கள் சோகிப்பதன் ந்யாயாபந்யாயத்தைப் பற்றிக் கொஞ்சம் விசாரித்து, 'ஸாமாந்யமாக சாஸ்த்ர ஸம்பந்தப்பட்ட சில கட்டுப்பாடுகள் தளர்ச்சியை அடைந்திருந்த போதிலும், தர்மம் முழுவதும் லோபத்தை அடைந்துவிட்டது என்று சொல்வது ஸரியான வார்த்தை யாகாது' என்றும், 'சில அம்சங்களில் முற்காலத்தை விட இக்காலத்தில் ச்லாகிக்கத்தக்க சில சிஹ்நங்கள் காணப்படுகின்றன' என்றும் நிரூபித்து எழுதியிருந்தோம். அப்படி நாம் எழுதினதன் கருத்து என்னவென்றால்:—ச்ரேயஸ்ஸுக்கு விரோதிகளாயுள்ள தோஷங்களையே எப்பொழுதும் கண்ணுற்று, 'ஐயோ! இப்படிப்பட்ட ஹீந ஸ்திதி வந்துவிட்டதே! இனி நாம் எவ்விதத்தில் க்ஷேமத்தை அடையப்போகிறோம்?' என்று மஹத்தான விஷாதத்திற்குப் பாத்ரர்களாய் க்ரமமாக அநுஷ்டிக்கப்படவேண்டிய கர்மங்களில் உத்யோக மின்றிக்கே ஸதா சோகித்து நிற்பது ஜகதுபகாரகர்களின் தர்மமாகாது என்பதை வற்புறுத்த வேண்டும் என்பதுதான். மஹாஜநங்களை அடக்கியுள்ள இந்த ஜகத்தில் தோஷங்கள் ஸம்பவிப்பது ஸஹஜமே. அப்படிப்பட்ட தோஷங்கள் ஸம்பவிப்பதனால் ப்ரஜைகளெல்லாம் நாசத்தையே அடைவார்கள் என்று நாம் நினைப்பது, பரமகாருணிகனுயுள்ள இந்த ஜகந்நியந்தாவின் விஷயத்தில் கொஞ்சமேனும் ந்யாய்யமாக மாட்டாது. நமது க்ஷேமத்தையே ஸதா ஸங்கல்பித்து நிற்கும் பகவாந், நமக்குத் தீங்கை விளைவிக்கக்கூடிய ஹேதுக்கள் நம்மை ஆக்ரமித்து விடும்படி ஒருகாலும் பார்த்து வரமாட்டான்; ச்ரேயஸ் ஸாதகங்களான பலஹேதுக்களை உண்டுபண்ணி அவைகளின் அவஷ்டம்பத்தினால் நாம் நன்மையை அடையும்படியே க்ருபையோடு செய்து வருவன். அப்படிப்பட்ட நன்மையைக் கொடுக்கக்கூடிய ஹேதுக்கள் எவை? அவைகளை நாம் எப்படி அவலம்பிக்கலாம்? என்பதைப் பராமர்சித்து, அவைகளை அடைவதில் ஜநங்களை ப்ரோத்ஸாஹநம் செய்வதே எல்லாக் காலங்களிலும் எல்லாருடையவும் தர்மமாகுமே தவிர, தோஷங்களைப் பார்த்து மனங் கலங்கி ஒருவித கச்மலத்தையும் ஹ்ருதய தௌர்பல்யத்தையும் நாம் அடைவதும், இதரர்களுக்கும் புத்தி பேதத்தை ஜநிப்பிப்பதும் தர்ம்யமாகாது ந்யாய்யமுமாகாது என்பதுதான், நம்மை இவ்விதமாக எழுதும்படி ப்ரேரிப்பித்தது. "ஈநிவெடிஃ ஶ்ரியொ உ-ஞூம்" என்னும் ந்யாயமும், இந்த ஜகத்தை நியமித்து வருகிற பகவானுடைய அளவற்ற கருணையில் நமக்கு இருக்க வேண்டும் த்ருடமான விச்வாஸமும், 'ப்ரஜைகளுக்கெல்லாம் ஆத்யந்திகமான நாசத்தை விளைவிக்குமளவு காலம் கெட்டுப்போய்விட்டது' என்று சோகிப்பதிலிருந்து நம்மை விலக்கவேண்டும்.



ஆனால், 'எவ்வித ஆபத் வந்தபோதிலும் அந்த ஆபத்தை ஆபத்தென்று உணராமல் க்ஷேமமென்றே பாவித்து ஆஹ்லாதப்படுவது மௌட்யமாகாதோ?' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும். 'ஆபத் வரும்பொழுதெல்லாம் ஆஹ்லாதப்படவேண்டும்' என்று நாம் சொல்லவில்லை; 'ஆபத் வந்துவிட்டதே!' என்று நிர்விண்ணர்களாய் எவ்வித கர்மங்களிலும் ப்ரயத்நமின்றிக்கே வருந்தி வாடுவது அதிக்ஷுத்ரமான கார்யமென்று மாத்ரம் நாம் சொல்லுகிறோம். ஆபத்தைப் பெரிதான ஆபத்தாக நினையாமல் தம்தம் கர்மங்களில் ப்ரவ்ருத்தித்து நிற்கும் இதரர்களின் புத்தியைப் பேதித்து அவர்களையும் நிருத்ஸாஹர்களாகச் செய்து அப்படியே அவர்கள் அழிந்துவிடும்படியான ஸ்திதியை அவர்களுக்குத் தேடிவைப்பது, பகவந் நிக்ரஹத்திற்கு ஹேதுவான பெரியதொரு பாபமாகும்; எது நேர்ந்தபோதிலும், நாம் விஷாதத்தை அடையாதவர்களாய் நமது தர்மங்களை அநுஷ்டித்து வருவதிலேயே எப்பொழுதும் உத்ஸாஹத்துடன் கூடியிருப்பதே ந்யாய்யம் என்பது தான் நம்முடைய கருத்து. ஆபத் நேர்ந்தால் அதற்கு ப்ரதீகாரம் தேடுவது அவச்யமே. இக்காலத்தில் சில தர்மங்கள் லோபத்தை அடைந்து வருகின்றன; வர்ண ஸாங்கர்யம் ஏராளமாக நடக்கின்றது; இன்னும் இவை போன்ற சில கெடுதிகள் அநேக இடங்களில் வேர் ஊன்றிப் பெரிய ஹாநிகளுக்குக் காரணமாகின்றன என்பதை நாம் உணராதவர் அல்லர். நம்மால் ஸாமாந்யமாகக் குணமென்று எடுத்துக் கூறப்பட்ட ஜ்ஞாந ப்ரசார விஷயத்திலும், அதிகாரி அநதிகாரி பேதமில்லாமலே மிதமான புத்தி பரிபாகத்தை யுடையவர்களும் ஸர்வ ஸாமாந்யமாக ஸகல க்ரந்தங்களையும் படிக்க ப்ரயத்நப்பட்டு அதனால் சில தீமைகளை விளைவித்துக்கொள்வதும், ஸ்வல்ப வித்

யையை அறிந்து அதனால் கொஞ்சம் ஜ்ஞாநத்திற்கு விகாஸம் ஏற்பட்டவுடன் சிலர் அது காரணமாக விநயம் முதலிய நற்குணங்களை இழந்து மதாந்தர்களாய் இதரர்களைத் திக்கரிப்பது தம்மை ஸர்வஜ்ஞர் போலப் பாவிப்பது இத்யாதியான துர்குணங்களை ஸம்பாதித்துக் கொள்வதும், மற்றும் சிலர் ஜ்ஞாநமே பெரிதென்றும் ஸர்வபூத ஸௌஹார்த்தமே ச்லாக்யமென்றும் எண்ணி நமது அபிவ்ருத்தியின் பொருட்டு மஹர்ஷிகளால் விதிக்கப்பட்டுள்ள சில நியமங்களைக் கைதவறவிட்டு இரண்டு விதங்களிலும் ப்ரஷ்டர்களாய்த் தடுமாறுவதும் நமக்குத் தெரியாத விஷயமல்ல. ஜ்ஞாந ப்ரசாரத்திற்கு ஹேதுவாயுள்ள அநேக நன்மைகளை நமக்குக் கொண்டுவந்த பாச்சாத்யர்களின் ஸம்பர்க்கத்தால், நாம் நமக்கு ஸாதாரணமாயிருந்த ஶுத்தமான நடை உடை பாவனைகளை இழந்து, நம்முடைய யோக்யதைக்கு மீறி, அதிமாத்ரம் உத்தமமான ஆஹாரங்கள் மஹார்க்கமான அலங்காரங்கள் விலையுயர்ந்த வஸ்த்ரங்கள் இத்யாதியான அநுசித போகங்களில் ஓர் ஆஸ்தையைக் கொண்டு, அந்தப் போகங்களை அடையும் பொருட்டுக் கார்யாகார்ய விவேகமின்றிக்கே ப்ரவ்ருத்திகளைச் செய்வதையும், அந்தப் போகங்கள் கிடைக்காவிட்டால் அதனால் வீணில் வருந்தித் துக்கிதர்களாக ஆவதையும் நாம் நன்றாக உணர்வோம். இப்படி உணர்ந்த போதிலும், இவைகளின் ஆக்ரமத்தால் ச்ரேயஸ்ஸில் நைராச்யத்தை அடைவது புருஷலக்ஷணமன்று என்றும், இந்தத் தீமைகளை யதாஶக்தி நிவ்ருத்தித்து இங்கு மங்கும் தென்படும் நன்மைகளை த்ருடமாகவும் பலமாகவும் செய்து ப்ரஜைகளை அவைகளில் உத்ஸாஹமுள்ளவர்களாகச் செய்பவர்களே ஸரியான உபகாரகர்களாவார்களென்றும் நாம் அபிப்ராயப் படுகிறோம். ‘கலிகாலம்’ என்று இந்தக் காலத்தை மிக்க இகழ்ச்சியுடன் பேசுமவர்கள் பெரியதொரு பிசகு செய்கிறார்கள் என்பது நம்முடைய நிர்ணயம்.

∴ ∴ ∴

**ராஜத்ரோஹிகளின் ஸாஹஸ க்ருத்யங்கள்.**

ராஜத்ரோஹமே இன்னது என்று தெரியாமல் இருந்த நமது தேஶத்தின் ஒரு பாகமாகிற பங்காளத்தில், கொஞ்ச காலமாக ராஜத்ரோஹத்தை ஸூசிப்பிக்கும் சில கார்யங்கள் நடைபெற்று வருகின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இர



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1 FEB 1914 MADRAS.

ண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன்னே, நிரபராதிகளான அநேக ராஜஸேவகர்கள், சில த்ரோஹிகளால் அப்ரதீக்ஷிதமாகத் திடீரென்று சுடப்பட்டு ம்ருதியை அடைந்தார்கள். சென்ற வர்ஷத்தில், நமது வைஸ்ராயாகிற லார்ட் ஹார்டிஞ்ஜ் என்னும் தர்மாத்மா, ஒரு மஹா பாபியினுடைய தௌஷ்ட்யத்தால் அடிபட்டு வருந்தினார். அடிக்கடி அந்தப் பங்காளத்தி லுள்ள அநேக ஸாத்விகர்களும் இந்தத் துஷ்டர்களுடைய அவிநயத்திற்குப் பாத்ரமாகி மஹத்தான க்லேஶத்தை அநுபவிக்கிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்பொழுது, நாளது ஜநவரி மாஸம் 19வ ஸாயம் 8 - 15 - மணிக்கு ந்ருபேந்த்ர நாத கோஷன் என்னும் ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டர், தனது திந க்ருத்யம் முடிந்து கச்சேரியிலிருந்து திரும்பி வீட்டுக்குப் போகுங்கால், மத்யே மார்க்கத்தில் ஒளிந்திருந்த சில துஷ்டர்களால் சுடப்பட்டு அந்த க்ஷணத்திலேயே ப்ராண வியோகத்தை அடைந்தானென்று ஸமாசாரம் வந்திருக்கின்றது. அவனுடன் வந்த ஒரு ஸேவகன் சுட்டவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினதாகவும், அது பார்த்திருந்த ப்ராஹ்மண னொருவனும் இன்னும் சில பெயருமாகத் தைர்யத்துடன் அந்தக் காதகர்களில் ஒருவனைப் பிடித்துவிட்டதாகவும், அப்படிப் பிடிபடுவதற்கு முன்னே அநியதமாக அவர்கள் சுட்டதனால் வழியில் போய்க்கொண்டிருந்த ஒரு பாலன் அடிபட்டு இறந்துவிட்டதாகவும் ஸமாசாரம். இவையெல்லாம் மஹத்தான அபந்யாயங்களே. ஐரோப்பாவி லுள்ள ரஷ்யா முதலிய சில தேஶங்களில் உந்மத்த ப்ராயர்களாயுள்ள சிலர், ஒன்றுசேர்ந்து, ‘ராஜா என்று ஒருவனை நாம் அங்கீகரிப்பது ஸரியன்று; ராஜாவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஸமயத்தை ப்ரதீக்ஷித்திருந்து கொல்வதே நமது தர்மமாக இருக்கவேண்டும்’ என்று ஒரு நிர்ணயத்தைச் செய்துகொண்டு அதி துர்விநீதர்களாக ஸஞ்சரிக்கிறார்களென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தக் கெட்ட எண்ணம் நமது தேஶத்திலும் ப்ரவேஶித்திருக்கின்றது என்பதைப் பார்க்க நமக்கு அளவற்ற ஶோகம் ஜநிக்கின்றது. எல்லாருக்கும் அத்யந்தம் ஜுகுப்ஸாவஹமாகவும் ஸ்வபாவத்திலேயே அதிதுஷ்டமாகவு முள்ள இந்த அவிநயத்தைக் கண்டிக்க ராஜாங்கத்தார் தகுந்த முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டியது அவச்யமே. அந்த முயற்சியில், அபந்யாயத்தை ஸஹிக்காத ஸகல ப்ரஜைகளும் தங்களால் இயன்ற

மட்டும் ராஜாங்கத்தாருக்கு ஸஹாயம் செய்வார்கள் என்பதில் ஆக்ஷேப மில்லை. ஆனால், ஒன்றுமாத்ரம் ராஜாங்கத்தாருக்கு நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டியது உண்டு: இந்தத் தேசத்து ஸ்திதியை நன்றாக அறியாமல் இருக்கும் சில ஆங்க்ல பௌமர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு ப்ரஜைகள் எல்லாரிடத்திலுமே ராஜாங்கத்தார் ஓர் அதிசங்கையை மனங் கொள்ளக்கூடாதென்றும், இந்த ராஜத்ரோஹரூபமான தௌஷ்ட்யம் ப்ராந்தர்களான சில அவிவேகிகளிடம் மட்டும் இருக்கின்றதே தவிர ப்ரஜா ஸாமாந்யம் பாப பீருக்களாகவும் சாஸ்த்ர வச்யர்களாகவும் இருக்கிறார்களென்றும், சில விடங்களில் சில துஷ்டர்கள் செய்யும் அக்ரமத்திற்காக ஜந ஸாமாந்யத்திற்கு உபத்ரவ கரங்களான சட்டங்களை விதிப்பது தர்ம்யமாகாது, அநிஷ்டமாகவும் பர்யவஸிக்குமென்றும் நாம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறோம்.

**தீபிகையின் மூன்றாவது அப்த பூர்த்தி.**

இந்த வர்ஷத்திய இந்தப் பன்னிரண்டாவது ஸஞ்சிகையுடன் நமது பத்ரிகைக்கு மூன்றாவது வர்ஷம் பூர்த்தியாகின்றது என்று நமது சந்தாதாரர்கள் அறிவார்கள். எவ்விதத்திலாவது இந்தப் பத்ரிகை யாருக்காவது உபகாரகமாக இருந்திருக்குமோ? என்பதைப் பற்றி நமக்கு ஒருவித நிச்சய புத்தியும் இது வரையில் உண்டாகவில்லை. அநேக தோஷங்களும் ந்யூநதைகளும் இதில் இருந்திருக்கலாம் என்னும் அதிசங்கை மாத்ரம் நமக்கு உண்டு. அப்படி இருக்கையிலும், பல ஆஸ்திகர்கள் மிக்க க்ருபையுடன் இதை ஆதரித்துவருகிறார்கள் என்பது, நமக்கு ஒருவித தைர்யத்தை உண்டுபண்ணி இன்னும் இந்த வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி தூண்டுகின்றது. இது வரையில் இதன் குறைவுகளை மிகுந்த பொறுமையுடன் எல்லாரும் பொறுத்து வந்ததுபோல இனியும் பொறுத்து வரவேண்டுமென்று நாம் மிக்க வணக்கத்துடன் ப்ரார்த்திக்கிறோம். இந்தப் பத்ரிகைக்கு விஷய ப்ரதாநம் முதலிய பரமோபகாரத்தைச் செய்த வித்வான்களிடத்திலும், இன்னும் இதன் ஸாதுத்வத்திற்கு உபகாரகர்களாக இருந்த மற்றை மஹான்களிடத்திலும் மிக்க க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை இப்பொழுது இதனால் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

---

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌸𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌗𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿
𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌾𑌦𑌯𑌃 ।
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌲𑍀𑌲𑌾 𑌵𑌿𑌧𑌯𑌶𑍍𑌚 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾
𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌮𑌨𑍋𑌽𑌨𑍁𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 ॥ 20.

20. இதுவரையில் ‘எம்பெருமானுடைய விபூதிகளும் குணங்களும் அளவற்றவைகள்; அவைகளில் ஒவ்வொன்றும் நிரதிசயமான மஹிமையை உடையது’ என்று சொல்லப்பட்டது. இப்பொழுது ‘அப்படி அபரிச்சேத்யமாயுள்ள குணங்களும் விபூதிகளும், எம்பெருமானுக்கு லீலார்த்தமாக உபயுக்தங்களாக இருக்கையிலும், அவனை ஆஶ்ரயிக்கும் பக்தர்களுடைய ஆநந்தத்திற்காகவே முக்யமாக உபயோகப்படுகின்றன’ என்று சொல்லப்படுகிறது.

𑌜𑌗𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌾𑌦𑌯 𑌸𑍍𑌤𑌵 𑌲𑍀𑌲𑌾𑌃, 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌮𑌨𑍋𑌽𑌨𑍁𑌸𑌾𑌰𑌿𑌣 𑌸𑍍𑌤𑌵 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾 𑌵𑌿𑌧𑌯𑌶𑍍𑌚 𑌤𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 (𑌕𑍃𑌤𑍇) 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥ - [ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மோக்ஷம் முதலிய உன்னுடைய லீலைகளும், அகாதமான உன்னுடைய ஸங்கல்பத்தை அநுஸரித்தும் வேதத்திற் சொல்லப்பட்டுமுள்ள விதி பாகங்களும் இவையெல்லாம் உன்னை ஆஶ்ரயித்திருக்கும் பக்தர்களின் அநுக்ரஹத்திற்காகவே ஏற்பட்டிருக்கின்றன.] ‘ஹே பகவந்! அநந்தங்களான குணங்களையும் விபூதிகளையும் வஹிக்கிறவன் நீ; அவைகளை அநுபவிக்குமவர்கள் நாங்கள். எங்களை அநுக்ரஹிக்க வேண்டுமென்றன்றோ நீ மிக்க கருணையுடன் வேதாதிகளில் விதி நிஷேதங்களை நிய

மித்திருக்கிறாய்? உன்னுடைய அதிகம்பீரமான ஸங்கல்பத்தின் மஹிமை யாரால் அறியக்கூடும்?' என்பது கருத்து.

எம்பெருமானிடத்திலுள்ள குணம் முதலியவற்றையும் அவனுடைய ஜகத்காரணத்வத்தையும் ஒத்துக்கொள்ளாமலிருக்கும் சிலர், 'எம்பெருமானுக்கு இவையொன்றும் உபபந்நமாகாது. ஏனென்றால், இவை அவனுக்கு உண்டானால், அவனுடைய அல்லது இதரர்களுடைய ப்ரயோஜநத்திற்காக இவை இருக்கவேண்டும்; அவனுடைய ப்ரயோஜநத்திற்காக இருக்கின்றன என்று ஒத்துக்கொண்டால் அவன் அபூர்ணன் என்று ப்ரஸங்கிக்கும்; பூர்ணன்விஷயத்தில் தன்னுடைய ப்ரயோஜநத்திற்காக வேண்டியது என்பது ஸம்பவியாதன்றோ? மற்றவர்களுடைய ப்ரயோஜநத்திற்காக இருக்கின்றன என்றால், ஸம்ஸாரம் து:க்கமயமாகிறபடியால் அதுவும் ஸம்பவியாது; து:க்கமயமான வஸ்து ப்ரயோஜநத்தின்பொருட்டு ஆகாதன்றோ? இரண்டும் ஸம்பவியாதாதலால், எம்பெருமானுக்கு இரண்டும் அநுபபந்நம்' என்று ஓர் ஆக்ஷேபம் செய்கிறார்கள். இதற்கு ஸமாதாநமாக, ஸ்ரீ ஆளவந்தார், 'ஸ்வார்த்தமாகவும் பரார்த்தமாகவும் இரண்டு விதத்திலும் இந்த ஜகத்வ்யாபாரம் எம்பெருமானுக்கு உபபந்நமாகும்' என்று இவ்விடத்தில் அருளிச்செய்கிறார். எம்பெருமான் அவாப்த ஸமஸ்த காமனாகவும் பரிபூர்ணனாகவும் இருக்கையிலும், இந்த ஜகத்வ்யாபாரத்தால் ஒருவிதமான லீலையை அவன் அநுபவிப்பது உபபந்நமே என்று, "லோகவத்து லீலாகைவல்யம்" என்னும் ஸூத்ரத்தில் ஸ்ரீ ஸூத்ரகாரர் அநுக்ரஹித்திருக்கிறார். லோகத்தில், ஸப்த த்வீபவதியான இந்தப் பூமி முழுவதையும் அதிஷ்டாநம் செய்துகொண்டும் ஸம்பூர்ணமான ஐச்வர்ய வீர்ய பராக்ரமங்களை உடையவனுயுமுள்ள ஒரு மஹாராஜனுக்கும் கந்துகம் முதலிய ஆரம்பங்கள் கேவல லீலைக ப்ரயோஜநங்களாக ஆவது போல, பரத்வத்தை வஹித்துவரும் ப்ரஹ்மத்திற்கும் அவனது ஸங்கல்ப மாத்ரத்தினால் ஏற்படும் ஜகத் வ்யாபாரம் முழுவதும் அவனது லீலார்த்தமே ஆகக் கூடும் என்பது தான், ஸூத்ரகாரரின் அபிப்ராயம். தவிரவும், நாம் ப்ரத்யக்ஷீகரிக்கும் இந்த ப்ரபஞ்சம் அதிகோரமான து:க்கங்களுடன் கலந்திருந்தாலும், ஜீவகோடிகளுடைய கர்மாநுகுணமாகவும் அவைகளின் உத்தாரணத்திற்காகவும் அது ஸ்ருஷ்டிக்கப்படுகிறபடியால், ஈச்வரனுடைய இந்த ஜகத் வ்யாபாரம் அந்த ஈச்வரனுக்கு லீலையாக ஆவதுடன் ஜீவாத்மாக்களுடைய ப்ரயோஜநத்தின்பொருட்டும் ஆகின்றது என்பது ஸித்தம். ஆகையால், ஜகத் வ்யாபாரத்தை ஈச்வரனிடத்தில் அநுபபந்நமென்று சொல்லுமவர்களின் வாதம் நிலைபெறக் கூடியதன்று. இப்படி இரண்டுவித ப்ரயோஜநமும் உண்டு என்பதைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே ஸ்ரீ ஆளவந்தார், 'லீலா:' என்னும் பதத்தையும், 'த்வதாச்ரிதாநாம் ஜகதே ஭வந்தி' என்னும் வாக்யத்தையும் ப்ரயோகித்திருக்கிறார்.

ஜகதுத்பவஸ்திதிப்ரணாசஸம்ஸாரவிமோசநாதய: ஭வ லீலா: - 'உத்பவம்' 'ஸ்திதி', 'ப்ரணாசம்' ஆகிய இந்த மூன்று பதங்களும், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைக் குறிக்கின்றன. ஸாதாரணமாக இந்த மூன்று பதங்களுக்கும் உத்பத்தி ஸ்திதி நாசம் என்னும் அர்த்தங்கள் தாம் கிடைக்கும்; இவ்விடத்தில், உத்பத்தியைச் செய்வது (அதாவது - ஸ்ருஷ்டிப்பது), ஸ்திதியைச்செய்வது (அதாவது - காப்பாற்றுவது), நாசத்தைச்செய்வது (அதாவது - ஸம்ஹரிப்பது) என்னும் அர்த்தங்களில் அவைகள் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் அறியவேண்டும். ஸம்ஸாரவிமோசநம் என்றால் மோக்ஷம் என்று அர்த்தம். 'இவை முதலிய' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய 'ஆதி' சப்தம், ஸ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுள் பகவாந் அநுப்ரவேசம் நியமநம் முதலியவற்றைச் செய்வதையும், அவதாரங்களைச் செய்வதையும் குறிக்கின்றது. 'லீலைகள்' என்னும் பதம், கீழ்க்கூறியபடி இந்த வ்யாபாரம் முழுவதும் பகவானுக்கு ஸ்வார்த்தமாகவும் ஆகின்றன என்பதைக் குறிக்கின்றது.

த்வதீய கம்பீர மநோநுஸாரிண: ஸ்வ வைதிகா விதயஸ்ச - இவ்விடத்தில் 'மநஸ்' என்னும் பதத்திற்கு 'ஸங்கல்பம்' என்று அர்த்தம். 'கம்பீரமான மநஸ்' என்றால், மற்

நமோ நமோ வாங்மநஸாதிபூமயே
நமோ நமோ வாங்மநஸைகபூமயே ।
நமோ நமோऽநந்தமஹாவிபூதயே
நமோ நமோऽநந்ததயைகஸிந்தவே ॥ **21.**

---

றை எவராலும் அறியக்கூடாத தாகவும் எவ்விதத்திலும் அக்ஷோப்யமாகவு முள்ள ஸங்கல்பம் என்று அர்த்தம். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதிபாகங்க ளெல்லாம் அப்படிப்பட்ட ஸங்கல்பத்தை அநுஸரித்திருக்கின்றன என்பது,

"ஶ்ருதிஃ ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா"

இத்யாதியான வாக்யங்களிலிருந்து தெரிகின்றது.

**த்வதாஶ்ரிதாநாம் (க்ருதே) பவந்தி** - உன்னை ஆஶ்ரயிக்கு மவர்களின் ப்ரயோஜநத்தின் பொருட்டே ஆகின்றன. இப்படிக் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அபரிமித குண விபூதிகளின் மஹிமையை அநுபவிக்க ஒருவரும் இல்லாவிட்டால், அவைகளெல்லாம் காநநத்தில் காயும் நிலாப்போல ஆகிவிடுமன்றோ? 'பவந்தி' என்னும் நிகழ்காலவினையினால், ஒவ்வொரு கல்பத்திலும் இந்த ஸ்திதி அநுவ்ருத்தித்து வருகின்றது என்பது ஏற்படுகின்றது.

21. ஸ்தோத்ரம் ஆரம்பித்தது முதல் இதுவரையில், பகவானுடைய பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் பலவாறுகப் புகழ்ந்துகூறி அவனுடைய குணங்களுடையவும் விபூதிகளுடையவுமான ஆநந்த்யத்தை ப்ரபஞ்சித்துவிட்டு, இப்பொழுது, 'இப்படி ஸர்வ ஶக்தனுகவும் நம்முடைய அஸாதாரண ஸ்வாமியாகவும் அத்யந்தம் ஸ்வதந்த்ரனுகவும் அளவற்ற ஸௌலப்யத்துடன் கூடினவனுகவு முள்ள அவன்விஷயத்தில் நாம் செய்யவேண்டிய வ்ருத்தி, அவனை ஶரணமாக அடைவதே தவிர மற்றொன்றுமில்லை' என்பதைக் காண்பித்துக்கொண்டு ஸ்ரீ ஆளவந்தார், அப்படிப்பட்ட வ்ருத்தியைத் தாமே இந்த ஶ்லோகத்தால் அநுஷ்டித்துக் காட்டுகிருர்.

**வாங்மநஸாதிபூமயே (துப்யம்) நமோ நம:; வாங்மநஸைகபூமயே (துப்யம்) நமோ நம:; அநந்தமஹாவிபூ**



---

**தயே (துப்யம்) நமோ நம:; அநந்ததயைகஸிந்தவே (துப்யம்) நமோ நம:** ॥ - [ஸாமாந்யமாக வாங் மநஸ்ஸுக்கு எட்டாதவனுகவும், உன்னுடைய அநுக்ரஹத்தைப் பெற்றுள்ள தந்யர்களின் விஷயத்தில் வாங் மநஸ்ஸுக்கு ஒரே விஷயமாகவும், அநந்தங்களான மஹா விபூதிகளை உடையவனுகவும், அளவற்ற தயைக்கு ஒரே ஸிந்துவாகவு முள்ள உன்னை நான் ஶரணமாக அடைகிறேன்.]

**வாங்மநஸாதிபூமயே** - வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாமலுள்ள. பரமயோகிகளாலும் இப்படிப்பட்டவனென்று பரிச்சேதிக்க முடியாத உனக்கு என்று தாத்பர்யம்.

"யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ"

[மேன்மேல் சொல்லிப்போயும் எவனொருவனை எட்டக் கூடாமல் வாக்கும் மநஸ்ஸும் திரும்பிவருகின்றனவோ] என்றும்,

"யத்வாசாऽநப்யுதிதம்"

[எந்த ஒரு வஸ்து வாக்கினால் இப்படிப்பட்டது என்று சொல்லக் கூடவில்லையோ] என்றும் ஶ்ருதிகள் ப்ரஹ்மத்தின் மஹிமையைப் பற்றிப் பேசுகின்றன.

**வாங்மநஸைகபூமயே** - 'கீழ்ச் சொல்லியபடி, பகவாந், வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதவனுக இருப்பானுனல், ஒருகால் அத்யந்தம் அகோசரனுகி விடுவானே! அவனை ஆஶ்ரயிப்பதனுல் என்ன ப்ரயோஜந முண்டாகக்கூடும்?' என்னும் ஶங்கை வருமோ வென்று நினைத்து, 'அப்படிக்கன்று; அவன், தன்னை ஆஶ்ரயித்தவர்களின் விஷயத்தில் ஸர்வ ஸுலபனுக இருக்கிறுன்; அப்படி ஆஶ்ரயிக்கு மவர்களுடைய வாக்கும் மநஸ்ஸும் அவனை எட்டுகின்றன வென்பது மாத்ரமன்றிக்கே அவைகள் அவனைத் தவிர்த்து மற்றை எதையும் விஷயீகரிக்கமாட்டா' என்று இந்தப் பதத்தால் அருளிச்செய்கிருர். கோப கோபிகாதிகள் விஷயத்தில் நாம் இந்த ஸௌலப்யத்தைப் பார்த்திருக்கிறோமன்றோ? தவிரவும், ஶ்ருதியிலேயே,

"सर्वे वेदा यत्पदमामनन्ति"

"सर्वे वेदा यत्रैकं भवन्ति"

என்று வேதவாக்யங்களெல்லாம் அவனைப்பற்றியே பேசுகின்றன என்று சொல்லியிருக்கிறபடியால், அவனுக்கு வாங்மநஸைகபூமித்வம் இவ்வாறும் ஸம்பவிக்கக்கூடும்.

अनन्तविभूतये -'என்ன காரணத்தினால், அவன், வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டக்கூடாதவனாக இருக்கிறான்?' என்றால், 'அவனுடைய விபூதிகள் அநந்தங்களன்றோ?' என்னும் ஸமாதாநத்தை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது.

अनन्तदयैकसिन्धवे - இப் பதம் ஸர்வ விபூதி ப்ரகர்ஷத்தைக் குறிப்பதுபோல, ஸர்வகுண ப்ரகர்ஷத்தைக் குறிக்கும் இந்தப் பதம், அவன் ஆஶ்ரிதர்களின் விஷயத்தில் வாங்மநஸைகபூமியாக இருப்பதற்கு உரிய காரணத்தைக் காண்பிக்கின்றது. 'தயைக்கு ஒரே ஸமுத்ரம்' என்று சொல்வதன் தாத்பர்யம், அவனது தயை ஸமுத்ரம்போல அபேக்ஷாப்யம் என்பதுதான். இவன் துஷ்டர்களை நிக்ரஹிப்பதும் அவர்கள் விஷயத்திலும் தன்னை ஆஶ்ரயித்தவர்கள் விஷயத்திலும் அவன் வைத்திருக்கும் தயையினால் ஏற்படுகிறபடியால், அந்த நிக்ரஹமும், அவனுக்குள்ள தயையைக் காண்பிக்கின்றதேதவிர அவனுக்கு நைர்க்ருண்யமுண்டு என்று சொல்வதற்கு ஹேதுவாகாது.

नमो नमः - திரும்பத் திரும்ப நமஸ்கரிக்கிறேன். எம்பெருமானுடைய குண விபூதிகளின் ஆநந்த்யத்தை அநுபவித்து அந்த அநுபவத்தினால் உண்டாகும் ஆநந்தம் தாங்கமாட்டாமல், 'நமோ நம:' என்று திரும்பத் திரும்ப நமஸ்கரிக்கிறார். 'नमः' என்னும் பதம் அஹங்கார மமகார நிவ்ருத்தியைக் குறிக்கின்றது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்; அதாவது - 'நாம் செய்கிறோம்' 'இது நம்முடையது' என்னும் ஜ்ஞாநம் அஹங்கார மமகாரங்கள்; அவைகளை விட்டு 'பகவாந் செய்து கொள்ளுகிறான்' 'ஸர்வமும் பகவானுடையது' என்னும் ஜ்ஞாநத்தை அவலம்பிப்பதுதான் அவைகளின் நிவ்ருத்தி; இதுதான் 'नमः' என்னும் ஶப்தத்தின் அர்த்தம் என்று சொன்னதாயிற்று. இந்த அர்த்தத்தைப் பின்வரும் நிருக்தி போதிப்பிக்கின்றது:—



"याः काश्चन कृतयो मम भवन्ति, न मम ममताऽस्ति तासु, भगवत एव ताः, अहमोऽहं भवति, अहमपि न मम, भगवत एवाहमिति स्वत्वममतां योजयेत्ततो नमः".

ஸ்ரீ பாரதத்திலும்,

"ममेति द्व्यक्षरो मृत्युः न ममेति च शाश्वतम्"

['என்னுடைய பொருள்' என்னும் ஜ்ஞாநம் இருக்கும்வரையில் ஸம்ஸார பந்தம் விடுகிறதில்லை; 'எல்லாம் பகவானுடையது, எனக்கு ஒன்றுமில்லை' என்னும் ஜ்ஞாநம்தான் மோக்ஷத்தைக் கொடுக்கும்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"अतसीपुष्पसंकाशं पीतवाससमच्युतम् ।
ये नमस्यन्ति गोविन्दं न तेषां विद्यते भयम् ॥"

[அதஸீ புஷ்பம் போல ஶ்யாமளனாகவும் பீதாம்பரதாரியாகவும் பக்தர்களைக் கைவிடாதவனாகவுமுள்ள கோவிந்தனை நமஸ்கரிக்கிறவர்களுக்கு ஒரு பொழுதும் பயமில்லை] என்று சொல்லும் புராண வசநங்கள், நமஸ்காரத்தின் ப்ரபாவத்தை விளங்கப் பேசுகின்றன.

இப்படி ஸர்வஸ்மாத் பரனாகவும் ஸர்வஸுலபனாகவும் அநந்த கல்யாண குணங்களை உடையவனாகவும் ஜகத் காரணனாகவுமுள்ள பகவானிடத்தில் நிருபாதிக ஸ்வாமித்வத்தையும், அவனுடைய ஸ்வரூபத்தினாலும் ஸங்கல்பத்தினாலும் ஸத்தை முதலியவற்றைப் பெற்றுக் கர்ம பரவஶராக நிற்கும் நம்மிடத்தில் ஸ்வரூபத்தினாலும் குணத்தினாலும் ஏற்படும் தாஸத்வத்தையும் நாம் அநுஸந்தித்து, 'அவன் நிஶ்சயமாக நம்மைக் காப்பாற்றுவன்' என்னும் நம்பிக்கையுடன் அவனை ப்ரணமம் செய்வதை விட வேறு ஒன்றும் நமது க்ருத்யமாகாது என்பது இந்த ஶ்லோகத்தினால் விளங்குகின்றது.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# தர்மவ்யாதோபாக்யாநம்.

(தொடர்ச்சி.)

அந்த ப்ராஹ்மணன், வழியில் போரும்பொழுதெல்லாம், ப்ராஹ்மணஸ்த்ரீ பேசின தர்மயங்களான வார்த்தைகளையும் அவளுடைய பாதிவ்ரத்ய மாஹாத்ம்யத்தை விளக்கின கொக்கின் வ்ருத்தாந்தத்தையும் மிக்க ஆச்சர்யத்துடன் மநஸ்ஸில் திரும்பத்திரும்ப த்யாநித்துக்கொண்டே, அநேக அரண்யங்களையும் க்ராமங்களையும் நகரங்களையும் கடந்து கடைசியாக மிதிலாபத்தநத்தைச் சேர்ந்தான். ஜநக மஹாராஜனால் பரிபாலநம் செய்யப்பட்டதாகிய அந்தப் பத்தநம், மிகச்செழிப்பாயும் ஸந்துஷ்டர்களாகவும் புஷ்டர்களாகவுமுள்ள ஜநங்களால் நிறைந்ததாயும் நித்யோத்ஸவம் காணுவதுபோல சோபித்துக்கொண்டிருந்தது. அங்கிருந்த ப்ராஹ்மணர்களை விசாரித்து, அந்த ப்ராஹ்மணன் தர்ம வ்யாதன் இருக்கும் இடத்திற்கு ஸமீபத்தில் போகையில், ஒரு மாம்ஸக்கடையின் நடுவில் நின்றுகொண்டு அங்கு வந்து சேரும் ஜநங்களுக்கு நாநாவித மாம்ஸங்களை விற்றுக்கொண்டிருந்த அந்த வ்யாதன் தென்பட்டான். கூட்டம் அதிகமாகவும் அந்த ஸ்தலம் ஜுகுப்ஸாவஹமாகவும் இருந்தபடியால், ப்ராஹ்மணன் கொஞ்சம் தூரத்திலேயே நிற்கும்படியாக நேர்ந்தது. அப்படி ஒதுங்கி நிற்கும் ப்ராஹ்மணனைப் பார்த்து, வ்யாதன், ஸம்ப்ரமத்துடன் எழுந்து அந்த ப்ராஹ்மணனிருக்குமிடம் வந்து, அபிவாதநாதிகளைச் செய்த பிறகு, 'ஹே ப்ராஹ்மண! பதிவ்ரதையான ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயால் ஏவப்பட்டவராகக்கொண்டு நீர் ஒரு கார்யத்தை உத்தேசித்து இவ்விடம் வந்திருக்கிறீர் என்பதை நான் அறிவேன்' என்று சொன்னான். இப்படி வ்யாதன் சொன்ன அந்த வார்த்தையைக் கேட்ட ப்ராஹ்மணன்,



'ப்ராஹ்மண ஸ்த்ரீயின் வார்த்தைதான் பெரியதொரு ஆச்சர்யமாக இருந்தது; இது அதைவிடப் பெரிய ஆச்சர்யமாக இருக்கின்றதே!' என்று நினைத்து ப்ரமித்து நிற்கையில், வ்யாதன், 'ஹே ப்ராஹ்மண! நீர் இவ்விடத்தில் நிற்பது உசிதமன்று' என்று சொல்லி ப்ராஹ்மணனைத் தனது வீட்டுக்கு அழைத்துப்போனான். அங்கே போனவுடன், ப்ராஹ்மணன், வ்யாதனை நோக்கி 'ஹே வ்யாத! மாம்ஸக் கடையில் நீர் மாம்ஸம் விற்றுக்கொண்டு நிற்பது உம்முடைய ஜ்ஞாநத்திற்கும் யோக்யதைக்கும் அத்யந்தம் அநநுரூபமாக இருக்கின்றதே! இது ஏன்!?' என்று கேட்க, வ்யாதன், அந்தத் தொழில் தனக்குப் பரம்பரையாகக் கிடைத்திருக்கின்றது என்றும், குலோசிதமான கர்மத்தை அநுஷ்டிப்பதுதான் ந்யாய்யமென்றும், க்ரம ப்ராப்தமான ஸ்வதர்மத்தை விட்டுப் பரதர்மத்தை அநுஷ்டிப்பது மிகப் பிசகு என்றும், பிறரால் கொல்லப்படும் ம்ருகங்களின் மாம்ஸத்தை விற்பதிலேதான் தனக்கு வ்ருத்தியே தவிர தான் ம்ருகங்களைக் கொல்வதே இல்லையென்றும், மிக்க ஆபத்திலும் ஸத்யத்தையே பேசிக்கொண்டும் யதாசக்தி பிறருக்கு உபகாரம் செய்துகொண்டும் மாதா பிதாக்களுக்கு எவ்வித குறைவுமின்றிக்கே சுச்ரூஷையைச் செய்துகொண்டும் லோப மோஹங்களை விட்டு விட்டு ஆஹாராதிகளில் நியமத்துடனே ஜீவித்து வருவதுதான் ச்லாக்யமான தர்மமாகையால் அதை சக்திக்குத் தகுந்தபடி அநுஷ்டித்து வரும் தன்னிடத்தில் பிசகு ஒன்றும் தென்படவில்லையென்றும் இன்னும் இம்மாதிரியான பல தர்மங்களடங்கிய வார்த்தையைப் பேசினான். இந்தத் தர்ம வார்த்தையைக் கேட்கக் கேட்க ப்ராஹ்மணனுக்கு அதில் மேல்மேல் அபிருசி வ்ருத்தியாயிற்று. ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாக அநேக விதமான தர்மங்களைப்பற்றி ப்ராஹ்மணன் ப்ரச்நம் செய்யவும், அவைகளுக்குப் பூர்ணமாக ப்ரத்யுத்தரம் வ்யாதன் சொல்லவும், இவ்வாறு ஸகல தர்மங்களையும் நன்றாக அறிந்துகொள்ள ப்ராஹ்மணனுக்கு இது அநுகூலமான ஒரு ஸமயமாயிற்று.

இவ்விதமாக ஸகலதர்மங்களையும் அறிந்துகொண்டு தாத்விகமான க்ருதஜ்ஞதையுடன் தனது ஆநந்தத்தைப் பலவிதமாக ப்ராஹ்மணன் வெளியிட, வ்யாதன், 'ஹே ப்ராஹ்மண! ப்ரத்யக்ஷமான தர்மமொன்றை நான் அநுஷ்டித்துவருகிறேன்; அதை

நீர் பார்க்கக்கடவீர்' என்று சொல்லிக்கொண்டு, ப்ராஹ்மணனை க்ருஹத்திற்குள் அழைத்துப்போய் வ்ருத்தர்களான தனது மாதா பிதாக்கள் இருக்கு மிடத்தைக் காண்பித்தான். அப்பொழுது தான் ஆஹாரத்தை முடித்துவிட்டு அதிமாத்ரம் ஸுபூஜிதர்களாகவும் ஸந்துஷ்டர்களாகவும் உட்கார்ந்திருக்கும் வ்ருத்தர்களைக் கண்டவுடன், வ்யாதன், அவர்களின் பாதங்களில் ஸாஷ்டாங்கமாக வந்தநம் செய்து, அவர்களால் ப்ரீதிபூர்வமாக அநுக்ரஹிக்கப்பட்டவனாய்க் கொண்டு, தன்னுடன் வந்திருக்கும் ப்ராஹ்மணனை அவர்களுக்கு நிவேதநம் செய்ய, அவர்கள் ப்ராஹ்மணனுக்கு ஸ்வாகதம் முதலிய ஸத்காரங்களைச் செய்தார்கள். ப்ராஹ்மணனும், அந்த ஸத்காரங்களெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு அவர்களைக் குஶல ப்ரஶ்நம் செய்தான். அந்த ஸமயத்தில், வ்யாதன், ப்ராஹ்மணனை நோக்கி, மாதா பிதாக்களுக்கு ஶுஶ்ரூஷை செய்வதே முக்யமான தர்மமென்பதையும், அதைச் செய்யாமல் அவர்களை அநாதரித்துவிட்டுத் தபஸ் முதலியவற்றில் ப்ரவ்ருத்தித்தாலும் அந்தத் தபஸ் முதலியவை வீணாகிவிடுமென்பதையும் ப்ராஹ்மணனுடைய புத்தியில் வற்புறுத்தவேண்டுமென்னும் அபிப்ராயத்துடன் மாதா பிதாக்களுடைய ஶுஶ்ரூஷையைப்பற்றிப் பின்வருமாறு புகழ்ந்து பேசினான்.

"𑌪𑌿𑌤𑌾 𑌮𑌾𑌤𑌾 𑌚 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑍇𑌤𑍌 𑌮𑍇 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌪𑌰𑌂 ।
𑌯𑌦𑍍𑌦𑍈𑌵𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍋𑌮𑍍𑌯𑌹𑌂 ॥

𑌉𑌪𑌹𑌾𑌰𑌾𑌨𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌦𑍇𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍋𑌮𑍍𑌯𑌹𑌮𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ॥

𑌏𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃 𑌸𑍁𑌹𑍃𑌜𑍍𑌜𑌨𑌾𑌃 ।
𑌸𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌃 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌰𑍋𑌮𑍍𑌯𑌹𑌂 ॥

𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌸𑍍𑌨𑌾𑌪𑌯𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑍌 𑌤𑌥𑌾 𑌪𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌧𑌾𑌵𑌯𑍇 ।
𑌆𑌹𑌾𑌰𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮 ॥

𑌅𑌨𑍁𑌕𑍂𑌲𑌾𑌃 𑌕𑌥𑌾 𑌵𑌚𑍍𑌮𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇 ।
𑌪𑌂𑌚𑍈𑌵 𑌗𑍁𑌰𑌵𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌬𑍁𑌭𑍂𑌷𑌤𑌃 ।
𑌪𑌿𑌤𑌾𑌮𑌾𑌤𑌾𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮 ॥



𑌏𑌤𑍇𑌷𑍁 𑌯𑌤𑍍𑌨𑌂 𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌸𑌦𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮 ।
𑌭𑌵𑍇𑌯𑍁𑌰𑌗𑍍𑌨𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌚𑍀𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃 ॥"

[ஹே ப்ராஹ்மண! வ்ருத்தர்களான இந்த மாதா பிதாக்களை நான் பரமமான தைவம் போலக் கொண்டாடுகிறேன். தைவ பக்தியுள்ள ப்ராஹ்மணர்கள், தேவதைகளின் பூஜார்த்தம் பூஜார்ஹமான த்ரவ்யத்தைச் சேர்ப்பதுபோல, நானும் இந்த வ்ருத்தர்களின் ஸத்காரத்திற்கு அபேக்ஷிதமான ஸகல பதார்த்தங்களையும் மிக்க ஶ்ரத்தையுடன் சேர்க்கிறேன். நான் எனது ப்ராணனை ஸம்ரக்ஷித்து வைப்பதும் இவர்களுக்காகவே. ப்ரதிதிநமும் ஸகல பந்து ஜநங்களுடனும் நான் இவர்களுக்குக் கைங்கர்யம் செய்வது வழக்கம். நானே இவர்களுக்கு ஸ்நாநாதிகளைச் செய்வித்து ஆஹாராதிகளைக் கொடுத்து அவர்கள் நிர்வ்யாபாரமாக இருக்குங் காலத்தில் அநுகூலங்களான கதைகளைச் சொல்லிக்கொண்டு ஒரு விதத்திலும் அவர்களின் மநஸ் நோகாமல் பார்த்து வருகிறேன். ஶாஸ்த்ரம் முக்யமாகச் சொல்வது என்னவென்றால்,—பிதா, மாதா, அக்நி, ஆத்மா, குரு இந்த ஐந்து பெயர்களும் அத்யந்தம் ஆராதநீயர்கள்; இவர்களை ஶ்ரத்தையுடன் ஆராதித்து வரும் ஒருவன் அதிமாத்ரம் உத்தமமான கதியை அடைகிறான் என்பது தான்.]

இப்படி மாதா பிதாக்களின் ஶுஶ்ரூஷையைப்பற்றி ஶ்லாகித்துப் பேசிவிட்டு, வ்யாதன், மறுபடியும் ப்ராஹ்மணனுக்கு ஹிதத்தைச் செய்யக் கருதி, அவனால் செய்யப்பட்டுள்ள தர்மத் தவறுதலை அவனுக்குப் போதித்தான். 'ஹே ப்ராஹ்மண! தபஸ் செய்ய ப்ரவ்ருத்தித்ததனால் மாத்ரம் ஸகல தர்மத்தையும் பூர்ணமாக அநுஷ்டித்து விட்டதாக நீர் நினைத்தது பிசகு. வ்ருத்தர்களான மாதா பிதாக்களை அநாதரித்துவிட்டு அவர்களுடைய அநுமதியின்றிக்கே வேதாத்யயநம் செய்வதற்காக நீர் வீட்டை த்யஜித்து வெளிப்புறப்பட்டு வந்ததை ஶாஸ்த்ரம் ஒத்துக்கொள்ளாது. உம்மால் அநாதரிக்கப்பட்ட மாதாபிதாக்கள், உம்முடைய வியோகத்தாலுண்டான ஶோகத்தினால் கண்களை இழந்துவிட்டார்கள். அவர்களை இப்படி வருந்தும்படி செய்துவிட்டபடியால், நீர் தபஸ் செய்ய உபக்ரமித்தது முழுவதும் அபார்த்தமாகிவிட்டது. ஆகையால், நீர் ஶ்ரேயஸ்ஸை அபேக்ஷிக்கும் பக்ஷத்

தில், இப்பொழுதே க்ருஹத்திற்குத் திரும்பிப்போய், தைவத ப்ரதிமர்களான அவர்களுக்குத் தகுந்த பூஜநத்தைச் செய்ய வேண்டும்.'

இதுகேட்ட ப்ராஹ்மணன், தனது தவறுதலைத் தவறுதலாக உணர்ந்து அதனால் மிக்க அநுதாபம் அடைந்தவனாய், வ்யாதனைப் பார்த்து, 'ஹே வ்யாத! நரகத்தில் விழுந்துகொண்டிருந்த என்னை நீர் கைபிடித்துத் தூக்கிவிட்டீர். உண்மையாகவே, நான் தர்மாதர்மம் தெரியாதவனாய், தபஸ் செய்வதே முக்யமென்று நினைத்து, வ்ருத்தர்களை அநாதரிப்பதாகிற மஹத்தான பாபத்தைச் செய்துவிட்டேன். தவிரவும், நான் ப்ராஹ்மணனென்றும் தபஸ்வியென்றும் பெரியதொரு கர்வத்தையும் அடைந்திருந்தேன். ஸகல தர்மங்களையும் அறிந்திருக்கும் உம்மைப் போன்றவர்களின் விநயத்தையும் ஸாத்விக ஸ்வபாவத்தையும் பார்க்கும் எனக்கு மிக்க லஜ்ஜை உண்டாகின்றது. பதிவ்ரதோத்தமையான அந்த ப்ராஹ்மண ஸ்த்ரீயின்மீது அஹங்காரத்தினால் நான் கோபங்கொண்டு அவளைத் திக்கரிக்க ப்ரயத்நப் பட்டேனே! அதன் மௌட்யத்தைப்பற்றி நான் என்ன சொல்வேன்? என்னுடைய கோபத்தினால் உத்வேகத்தை அடையாமல் அந்த ஸாத்வீ, என்னுடைய மௌட்யத்தைப் பார்த்து ஶோகித்து, என்னைக் காப்பாற்ற வேண்டுமென்னும் எண்ணத்துடன் எனக்குத் தர்மோபதேஶத்தைச்செய்தும், பரமோபகாரகராயுள்ள உம்மிடத்திற்கு என்னை அனுப்பியும் இம்மாதிரியான ஆநுகூல்யத்தைச் செய்தாளே! அவளுடைய ஔதார்யமன்றோ ஸரியான ஔதார்யமாகும்? ஹே வ்யாத! எனக்கு ஸரியான புத்தி வந்துவிட்டது; லோபமோஹங்கள் என்னைவிட்டு விலகிவிட்டன; இந்தக்ஷணமே நான் எனது க்ருஹம் போய், நீர் நியமிக்கிறபடி வ்ருத்தர்களுக்கு ஶுஶ்ரூஷை செய்வதாகிற பரம தர்மத்தை அநுஷ்டிக்கிறேன். ஆனால், எனக்கு ஸம்ஶயம் ஒன்று இப்பொழுது ஜநிக்கின்றது. அதைமாத்ரம் கொஞ்சம் நிவ்ருத்தி செய்யவேண்டும். இவ்வளவு ஜ்ஞாநமும் அநுஷ்டாநமும் குணபூர்த்தியும் நிறைந்துள்ள உம



க்கு ஏன் ஶூத்ர ஜந்மம் வந்தது? அதன் காரணத்தை க்ருபையுடன் எனக்குச் சொல்லவேண்டும்' என்று ப்ரார்த்தித்தான்.

ப்ராஹ்மணனுடைய ஆர்ஜவத்தினால் ஸந்தோஷமடைந்த வ்யாதன், தனக்கு ஶூத்ர ஜந்மம் கிடைத்த காரணத்தை அவனுக்குச் சொல்ல ஆரம்பித்தான். 'ஹே ப்ராஹ்மண! நான் ஜந்மாந்தரத்தில் ப்ராஹ்மணன்; தநுர் வித்யையில் நைபுண்யத்தை அடைந்த ஒரு ராஜா எனக்குப் பரம ஸ்நேஹிதனாக இருந்தான். அவனுடைய ஸம்பர்க்கத்தால் எனக்கும் தநுர் வித்யை பூர்ணமாகத் தெரியவந்தது. ஒரு ஸமயத்தில் அவனும் நானுமாகக் காட்டில் வேட்டையாடிக்கொண்டு போனபொழுது, அஜ்ஞாநத்தினால் நான் ஒரு மஹர்ஷியைப் பாணத்தினால் அடிக்கும்படி நேர்ந்தது. அஜ்ஞாநக்ருதமான அந்தக் கார்யத்தைப் பார்த்து நான் வருந்திநிற்கையில், அந்த மஹர்ஷி, என்னுடைய தைந்யத்தை அறிந்திருந்தும், கோபத்தை அடக்கக் கூடாதவராய், 'நீ அடுத்த ஜந்மத்தில் வ்யாதனாகப் பிறக்கக் கடவாய்' என்று எனக்கு ஶாபமொன்றைக் கொடுத்தார். 'ஹே ஸ்வாமிந்! அஜ்ஞாநத்தினால் உண்டான இந்த அபராதத்தை க்ஷமிக்கவேண்டும்' என்று நான் ப்ரார்த்திக்க, அவர் என்மீது க்ருபை கூர்ந்து, 'நீ ஶூத்ர ஜந்மத்தை அடைந்தபோதிலும், உனக்கு தர்மஜ்ஞாநம் குறையாது நிற்கும்; மாதா பிதாக்களுக்கு ஸரியான ஶுஶ்ரூஷை செய்து மஹத்தான ஸித்தியை அடைவாய்; ஜந்மாந்தர ஜ்ஞாநமும் உன்னைவிட்டு விலகாது: முடிவில் உனக்கு ஸ்வர்க்கமும் கிடைக்கும்' என்று அநுக்ரஹித்தார். அந்த மஹர்ஷி குறிப்பிட்டிருக்கும் காலம் எப்பொழுது வரப் போகின்றது? என்று ஸதா ப்ரதீக்ஷித்துக்கொண்டே இருக்கிறேன்.'

வ்யாதனாற் சொல்லப்பட்ட இந்தப் பூர்வகதையைக் கேட்டு ப்ராஹ்மணன், வ்யாதனை நோக்கி, 'ஹே வ்யாத! உம்முடைய சரித்ரம் முழுவதையும் நான் அறிந்தேன்; இப்பொழுது, நீர் ப்ராஹ்மணனே தவிர ஶூத்ரனன்று என்று நான் நினைக்கிறேன். அகார்யத்தைச் செய்துகொண்டும் லோபமோஹங்களுக்குப் பாத்ர

மாயுமிருக்கும் ஒருவன் ப்ராஹ்மண ஜந்மத்தை அடைந்திருந்தாலும், அவன் ஶூத்ரனுக்குத் துல்யனே. ஒருபொழுதும் ஸத்யத்தைவிட்டு விலகாமலும் தர்மங்களை ஸரிவர அநுஷ்டித்துக்கொண்டும் காம க்ரோதங்களை ஜயித்தும் ஒருவன் வர்த்தித்துவந்தால், அவன் ஶூத்ர ஜந்மத்தை அடைந்திருந்தாலும் ப்ராஹ்மணனுக்கு ஸத்ருஶனாகிறான். அநுஷ்டாநமன்றோ முக்யமான அம்ஶம்?'

[𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌤𑌨𑍀𑌯𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌦𑌾𑌮𑍍𑌭𑌿𑌕𑍋 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍇𑌣 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌦𑌮𑍇 𑌸𑌤𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌚 𑌸𑌤𑌤𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌤𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥]

என்னும் வார்த்தைகளைச் சொல்லி அவனைப் பலவாறாக ஶ்லாகித்து, அவனிடம் அநுமதி பெற்றவனாய் அவனை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டுத் தனது ஸ்தாநத்திற்குத் திரும்பிப்போனான். க்ருஹத்திற்குப் போய் வ்ருத்தர்களுக்கு ஸரியான ஶுஶ்ரூஷையைச் செய்துகொண்டும் இதர தர்மங்களையும் குறைவின்றிக்கே அநுஷ்டித்துக்கொண்டும் தனது வாழ்நாள் முழுவதையும் ஸாத்விகமாகவே கழித்துவிட்டு, கடைசியில் பகவதநுக்ரஹம் பெற்றவனாய் அந்த ப்ராஹ்மணன் நல்ல கதியை அடைந்தான்.

ஒரு பௌராணிகர்.

ஶ்ரீ:.

## ஈஶ்வர பக்தனைப்பற்றிய ஒரு சிறிய கதை.

[இங்க்லிஷ் காவ்யங்களுள் தத்வங்களை உணர்த்தும் காவ்யங்கள் பல உண்டு. 'தாமஸ் பார்னெல்' என்னும் கவியால் இயற்றப்பட்ட 'ஹெர்மிட்' என்னும் காவ்யம், அவைகளுள் மிகச் சிறந்தவைகளில் ஒன்று. பகவத் ஸங்கல்பமின்றிக்கே ஒரு கார்யமும் ஸம்பவிக்காது என்றும், நம்முடைய மிதமான புத்திக்கு ஏதாவது ஒரு அம்ஶம் அஸங்கதமாகத் தோன்றினாலும் அது பகவத் ஸங்கல்பத்துக்கு ஒத்திருப்பதால் ஸங்கதமேயாகுமென்றும், நமக்கு அஸங்கதமாகத் தோன்றினது பற்றி அதை நாம் நிந்திக்கவும் வெறுக்கவும் முயல்வது அஜ்ஞாந கார்யமென்றும், ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்தும் நியமித்தும் வரும் ஸர்வஜ்ஞனாகிற ஈஶ்வரனுடைய கார்யங்கள் ஒருபொழுதும் பிசகமாட்டா என்றும் அறிவதே பக்தனுடைய முக்யலக்ஷணமென்று இந்தக் காவ்யம் போதிக்கின்றது. சிறந்த இந்தத் தத்வத்தை அது அடக்கியுள்ளதால், அதன் அர்த்தத்தைத் தீபிகையைப் படிக்குமவர்கள் அறியலாமென்று இவ்விடத்தில் அதை ஸங்க்ரஹித்து எழுதலானோம்.]

மாநுஷஸஞ்சாரமற்றதும், க்ராம நகரங்களுக்கு வெகு தூரத்திலிருப்பதும் வ்ருக்ஷங்கள் நெருங்கியுள்ளதுமான ஒரு வநத்திலே, தபஸ்ஸே முளைத்தெழுந்தாற்போல ஒரு முநிபுங்கவர் வஸித்து வந்தார். அங்கே அவர் கந்த மூலங்களையே புஜித்து, ஶுத்தஜலத்தையன்றி வேறெதையும் பாநம் செய்யாமல் மநோ வாக் காயம் என்னும் த்ரிகரணங்களாலும் பாபம்செய்வதை ஒழித்து ஜிதேந்த்ரியராய் விளங்கினார்.

இப்படியாக அவர் பரிஶுத்தராய் வஸித்து வருகையில் ஒரு ஸமயத்தில், அவர் மநஸ்ஸில், 'அதர்மம் ஜயிக்கவும் தர்மம் பணியவும் என்ன காரணம்? இஃது பகவதாஜ்ஞைக்கு விருத்தமன்றோ? அன்றி, அவரது நியமநம் என்பதே மித்யையோ?' என்று ஒரு ஶங்கை உண்டாயிற்று. இந்த ஶங்கை ஜநிக்கவே, அவருக்குப் பரகதியில் ஸம்ஶயமுண்டாகி மநஸ்ஸின் உத்ஸாஹமும் குறைந்தது. நீர் தெளிந்து அசைவற்று நிற்கும் ஒரு தடாகத்

தில் அதன்கரையிலுள்ள மரம் முதலியனவும் ஆகாசத்திலுள்ள ஸூர்யன் முதலியனவும் ரூபம் மாறாமல் ப்ரதிபலிக்கும்போது, ஒரு சிறிய கல் அந்த நீரில் விழுமானால் எப்படி அலைகள் வட்டம் வட்டமாய் மறிய அங்கு ப்ரதிபலித்த யாவும் ரூபம் குலைந்து ஒரே குழப்பமாகப் போய்விடுமோ, அப்படியே சாந்தமடைந்திருந்த அந்த முனிவரது மனஸ்ஸும் கலங்கி ஒரே குழப்பமாகப் போய்விட்டது. அதன்மேல், அவர், உலகத்தில் நடப்பனவற்றை ப்ரத்யக்ஷத்திலேயே கண்டு ஸம்சய நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணி, ஒருநாள் ஸூர்யோதயத்துக்கு எழுந்து லோக ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டார்.

கல்லுகளும் முள்ளுகளும் நிறைந்த அந்த வனத்தில் ப்ராதஃகாலம் முழுவதும் ஏகாகியாக ப்ரயாணம் செய்து அலுத்து அவர், மத்யாஹ்நமானதும் ஓரிடத்தை யடைந்தபொழுது, ஒரு யுவா, ஆங்கு வந்து கூடிய ஒரு கவட்டை நெறிவழியாக வந்து அவருடன் கூடிக்கொண்டான். அவன் நல்லவஸ்த்ரங்களை உடுத்தும், காந்தியுள்ள முகவிலாஸத்தைக் கொண்டும், ப்ரகாசமும் ம்ருதுத்வமு முள்ள ஶிகையுடன் கூடியவனாயு மிருந்தான். அந்த யுவா, இந்த முனிவரை அணுகியதும் வினயத்துடன் ப்ரணாமம் செய்தான். தபஸ்வியும் ஆசீர்வாதம் செய்து குசலம் விசாரித்தார். இப்படியாக ப்ரஸம்போத்தாங்கள் விருத்தியாக, அவ்விருவரும் மார்க்கத்தில் ஶ்ரமம் தோன்றாமலே வெகுதூரம் ப்ரயாணம் செய்தார்கள். முனிபுங்கவரும் அந்த யுவாவும் இதற்குள் அத்யந்தம் ஸ்நேஹிதர்களாகி மனம் ஒன்றியிருந்தனர்.

இப்படியிருக்க, ஸூர்யன் அஸ்தமயகிரியை அடைந்தான்; ஆகாசம் முழுவதும் சிவந்து விளங்கிற்று. இத்தருணத்தில் மார்க்கத்தின் ஒருபுறத்தில் ஓர் உன்னதமான மாளிகை காணப்பட்டது. பங்க்தி பங்க்தியாய் வைத்து வளர்த்துள்ள பூவரிசையின் வழியாயும், புல்தரைகளின் வழியாயும் ரம்யமான சந்த்ரிகையின் உதவியால் இவர்கள் அம்மாளிகையின் வாசலை அணுகினர். அந்த மாளிகைக்கு யஜமானனாகிய க்ருஹஸ்தன் அந்நபோஜநம் செய்விப்பதில் மிகுந்த ஆஸக்தி யுடையவன். ஆனால், மஹா டம்பன்; அதியாகச் செலவுசெய்து கீர்த்தி பெறுவதையே ப்ரயோஜநமாகக் கொள்பவன். இவ் விருவரும் அவ்விடம் சென்றதும், அங்குள்ள ஸேவகர்கள் வணக்கத்துடன் எதிர்வந்து மர்யாதையுடன் அழைத்துக்கொண்டுபோய் யஜமானன்முன்னே விட்டனர்.



அவன், இனிய முகத்துடன் வரவேற்று, அவர்களுக்கு அர்க்ய பாத்ய ஆசமநீயாதிகளைத் தந்து அவர்களைப் போஜநத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அறுசுவையன்னம் படைத்துப் புஜிக்கும்படி ப்ரார்த்தித்தான். போஜநம் ஆனபிறகு ஹம்ஸதூல மஞ்சத்தில் ஶயநிக்கும்படி நல்கினான். இருவரும் ப்ரயாணஶ்ரமம் தீர ஶயநித்து நித்ரை செய்தனர்.

மறுநாள் உதயமானதும், இருவரும் நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட ஸித்தரானார். அதற்குள் அந்த க்ருஹஸ்தன் பொன்வட்டிலில் மதுபர்க்கம் கலந்து இருவர்க்கும் கொடுத்தான். அன்புடன் நல்கிய அதை அவ் விருவரும் புஜித்து, மநஸ்ஸில் க்ருதஜ்ஞதையுடன் ப்ரயாணமானார்கள்.

இத்தருணத்தில் அந்த க்ருஹஸ்தன் மனம் நோக, ஒருகார்யம் நடந்தது: அதாவது – அவனுடைய பொன்வட்டில் காணமற்போயிற்று. தபஸ்வியுடன் வந்த அந்தக் குமாரனே அதைக் களவுசெய்து வந்துவிட்டான். மார்க்கத்தின் மத்யத்தில் அக்குமாரன் தான் களவாடிவந்த அந்த வட்டிலைத் தபஸ்விக்குக் காட்டியவுடன், வழியின் நடுவில் செங்கண் அரவைக் கண்டானொருவன் அணுகவும் அஞ்சி யோடவும் கூடாமல் தழுதழுத்த காலுடன் விலவிலத்து எப்படித் தபிப்பானோ, அப்படி மனம் பதைத்தார் அந்த முனிபுங்கவர். மேலடி எடுத்துவைக்கவும் அவருக்குக் காலெழவில்லை. 'ஐயோ! இவன் தொலையானா!' என்று பலதரம் நினைத்தார்; ஆனால், வாய்திறந்து பேச என்று சொல்ல அவர்க்கு நா எழவில்லை. தம் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டும் ஆகாசத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டும், 'ஐயோ! செய்ந்நன்றிக்கு ப்ரதி ப்ரயோஜநமாக த்ரோஹமா விளையவேண்டும்?' என்று சொல்லிப் புலம்பினார். இவ்வாறு செல்லுகையில், ஸூர்யன் மறைய, கரிய மேகங்கள் கவிந்துகொண்டு, ஆகாசத்தை இருளச்செய்தன. காற்றும் எழும்பி மழையின் ஸூசகமான ஶீகாரஶப்தத்தை உண்டாக்கிற்று. பஶு முதலிய ம்ருகங்கள் இக்குறியைக் கண்டு குழைத்த வாலோடு தத்தமிடத்திற்கு ஓடின. இவற்றையெல்லாம் கண்ட அந்தப்ரயாணிகள் அருகிலிருந்த ஒரு மாளிகையைக் கண்டு, ஆங்குத் தங்கியிருக்க உத்தேசித்துச் சென்றனர்.

அம்மாளிகை, கோபுரம் முதலிய அலங்காரங்களுடன் ஓர் உயர்ந்த மேட்டில் அமைந்திருந்தது. விசாலமாயும் உறுதியாயுமிருந்தாலும் சுற்றுப்பக்கங்கள் நன்றாக வேலைசெய்து செப்பனிடப் பெறாதிருந்தது. அம்மாளிகைக்கு யஜமானன் அதி க்ருபணனாயும் பயங்கொள்ளியாயும் தயையற்றவனாயுமிருந்ததனால் அந்த ப்ரதேசத்தை இருங்கானக மாக்கிவிட்டான். அத்தகையோனது மாளிகைவாசலை அவ்விருப்ரயாணிகளும் அணுகுமுன், மிகக் கொடுமையாக மழைத்தாரைகள் மின்னலுடனும் இடியுடனும் காற்றுடனும் சேர்ந்து அவர்களை ஹிம்ஸித்தன. அதனால் அவர்கள் அம்மாளிகையின் அடைத்த கதவைப் பலதரம் பலமாக இடித்தனர்; உரக்கக் கூப்பிட்டனர். என்ன கூவியும் இடித்தும் ஏன் என்று கேட்பார் அங்கு ஒருவருமில்லை. காற்றால் அடிபட்டும், மழையால் துளைபட்டும் அவ்விருவரும் கதவைப் பலமாய்ப் பிளந்தனர். எந்தத் தைவத்தின் அநுக்ரஹத்தினாலோ கடைசியாக அந்த மாளிகையின் யஜமானனது மனஸ்ஸில் சிறிது தயை தோன்றிற்று. வாசற்கதவு திறந்து அப்போது தான் அவன் முதன் முதலாக ஓர் அதிதியைக் கண்ணால் கண்டான். பன்னெடுநாளாய் அடைத்திருந்த அந்தக் கதவு மிகவும் அஸம்மதத்தோடு 'கிரீச்' என்று ஒலித்துக்கொண்டு பாதி திறந்தது. நடுக்கலெடுத்து உதறும் அவ்விருவரையும் அவன் அர்த்த ஸம்மதத்தோடு உள்ளே அழைத்தான்.

அவ்விருவரும் அப்பொழுது செய்யவேண்டிய க்ரியைகளை முடித்துக் கொண்டதும், அவர்களுக்குப் பற்றும் பற்றாததாய்க் காந்திக் கருகிய அந்நத்தைக் கொஞ்சம் படைத்தான். அவர்கள், பசியின் கொடுமையால் அதைப் புஜித்துக் கொஞ்சம் ச்ரமம் தீர்ந்தனர். இத்தருணத்தில் பெருமழையும் காற்றும் சிறிது தணிய ஆரம்பித்தது. அதை நோக்கிய அந்த க்ருபணன், 'இனி நீங்கள் போய்விடலாம்' என்று சொல்லிவிட்டான். தபஸ்வி, அம்மாளிகையையும் அதிலுள்ள செல்வத்தையும் பார்த்து, 'ஐயோ! இவ்வளவு ஸம்பத்தையும் வைத்துக்கொண்டு, இவன் ஏன் இப்படி வயிற்றுக்குக் கூடத் தின்னாமலிருக்கவேண்டும்? இவன் வாழ்க்கை என்ன வாழ்க்கை? இவ்வளவு அநாகரிகனாக இவன் ஏன் காலங் கழிக்கிறான்? ஹா! பகவான் இவ்வளவு செல்வத்தையும் இங்கே வீணுக்கு அடைத்துவிட்டு, பல்லாயிரம் ஏழைகளைக் கஷ்டப்படுத்து



கிறாரே!' என்று எண்ணிக்கொண்டிருக்கையில், அவர் மனத்தில் பின்னும் அதிக வியப்புண்டாக, அந்த இளைஞன், தான் திருடிவந்த அந்தப் பொற்கிண்ணத்தை இந்த க்ருபண அக்ரேஸரனுக்கு ஸம்மானம் செய்தான்!.

மேகம் விலகிக் காற்றும் மிதப்படவே, ஸூர்யன் ஜ்வலித்துக்கொண்டு வானத்திற் ப்ரகாசித்தான். புல்பூண்டுகளெல்லாம் பச்சைப்பசேலென்றும் இளவிளவென்றும் இளந்தென்றலில் தலையசைத்து ஆடின. இந்த ரம்யமான காலத்தில் ப்ரயாணிகளிருவருக்கும் மேலும் செல்லவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அவர்கள் வழிக்கொள்ள, பரமாநந்தத்துடன் அந்த க்ருஹஸ்தன் முன்போலக் கதவடைத்துக் கொண்டான். செல்லுகையில் முனிவர் மனஸ்ஸில் பலப்பல எண்ணங்கள் உதிக்க, அவர் ஒன்றும் விளங்காமல் மயங்கினார். தம்முடன் வந்த ஸகாவின் கார்யத்தைப் பர்யாலோசனை பண்ணுகையில், அவர், 'முதலிலே அவன் அந்நமிட்டார் வீட்டில் கன்னமிட்ட த்ரோஹியானான்; இப்பொழுதோ அபாத்ரத்தில் தானம்பண்ணின மூடனானான்' என்று முன்னைய த்ரோஹத்தை நினைத்து அவனிடத்து வெறுப்புற்றும், பின்னைய மௌட்யத்தை நினைத்து இரக்கங்கொண்டும், அந்த யுவாவினுடைய பலவகையான சேஷ்டைகளை நினைத்துக்கொண்டே அவர் மயங்கிய சித்தத்தையுடையவராய் நடந்தார்.

மறுபடி ஸூர்யன் அஸ்தமய கிரியை அடைந்தான்; இருள் கம்மிக்கொண்டது; அவர்களுக்கோ தங்குவதற்கு இடம் அவஶ்யம் அபேக்ஷிதமாக இருந்தது. அவர்கள் சுற்றுமுற்றும் பார்க்க, முன்போலவே ஒரு மாளிகையைக் கண்டனர். அம்மாளிகையைச் சுற்றியுள்ள ஸ்தலம், சீர்திருத்தம் பெற்றிருந்தது. க்ருஹமும், அலங்காரம்பெற்று விளங்கிற்று. இஃது, வறுமையால் ஹீநஸ்திதியை அடையாமலும், செல்வமிகுதியால் வீண்டம்பம் அதிகரிக்காமலுமிருந்தது. இதனால் அந்த க்ருஹஸ்தனது மனநிலை விளங்குவதாயிற்று. அவன், ஸந்துஷ்டி யடைந்தவனாகவும், அதிதிகளிடத்துப் புகழை வேண்டியல்லாமல் அறத்தைவேண்டி அன்புடைமை கொண்டவனாகவுமிருந்தான். அங்கு அந்த ப்ரயாணிகள் சென்று மாளிகையைக் கண்டவுடனே, அவர்களுக்கு மனஸ்ஸில் ஓர் ஆநந்தமுண்டாயிற்று. உடனே அந்த மாளிகையின் யஜமானனும் எதிர்வந்து ஸுமுகத்துடன் வரவேற்றான்.

கால்நொந்து வந்த அவ் வதிதிகளை நோக்கி, ‘என் அதிதிகளே! ஆதித்யம் பண்ணுகிறேன் என்னும் மமதையில்லாமலும், ஐயோ கொடுக்கிறேனே என்று மனமெரியாமலும் எனக்கு ஸர்வத்தையும் தந்தளிக்கிற பகவானுக்கு அதில் ஏகதேசத்தை நான் ஸமர்ப்பிக்கிறேன்; தேவரீர் அந்தப் பரந்தாமனிடத்திலிருந்தே வந்தவர்கள்; அவ் வச்யுதனுக்காக இதை அங்கீகரிக்கக் கடவீர்’ என்று சொல்லி, அதி விநயத்துடன் உள்ளே அழைத்துச்சென்று ஷோடசோபசாரமுஞ்செய்து ஷட்ரஸங்களும் பொருந்திய அந்நத்தை அளித்தான். பிறகு தர்மகதைகளையும் சாஸ்த்ர மர்மங்களையும்பற்றி ஸ்வல்பகாலம் பேசிக்கொண் டிருந்து, பிறகு சயனித்துக் கொள்ளவேண்டிய காலம் வந்ததும் நல்ல சயநத்தில் அவர்களைக் கண்வளரும்படி செய்தான்.

ப்ரயாணிக ளிருவரும், நடையின் ச்ரமம் தீர நித்ரைசெய்தனர். மறுபடியும் ஸூர்யோதயமானவுடன் அவ் விருவரும் ப்ரயாணத்துக்கு ஸந்நத்தரானார்கள். புறப்படுமுன், அவ் விளைஞன், குழந்தை ஒன்று நித்ரைசெய்யும் மூடிய தொட்டிலுக்கு அருகே ஒருவருமறியாமல் ஊர்ந்து சென்று, அங்குள்ள குழந்தையின் கழுத்தைத் திருகிக் கொன்றுவிட்டான். அந்த சிசு ஒன்றே அந்த க்ருஹஸ்தனுடைய நெடுங்காலத் தவக்குழந்தை. இதைப் பார்த்த அந்தத் தபஸ்வீ, இப்படிப்பட்ட மஹாபாபியினுடைய ஸம்ஸர்க்கமே கூடாதென்று எண்ணி, மநஸ்ஸில் மிக்க வெறுப்புடனும் நிர்வேதத்துடனும் ஓட ப்ரயத்நப் படுகையில், கொலைசெய்த கொடும்பாவியான யுவாவும் உடன் தொடர்ந்தான். எங்கே ஓடியும் அவன் தம்மைவிட்டுப் பிரியாததை நோக்கி மநஸ் கலங்கி, தாம் தமது ஆச்ரமத்தைவிட்டு வெளிவந்த காலத்தையும் தமது தௌர்பாக்யத்தையும் நிந்தித்துக்கொண்டு அந்தப் பாபியுடன் பேசாமலே மேன்மேல் நடந்துபோகையில், எதிரில் ஐந்தாறு வழி பிரிந்து, எந்த மார்க்கத்தைப் பற்றுகிறதென்று அறியக் கூடாமல் நிற்கும்படி நேர்ந்தது.

அப்போது அந்த மாளிகையைச் சேர்ந்த ஸேவகன் ஆங்கு வந்து அவர்கட்கு வழிகாட்டி, ஓர் ஆற்றின் குறுகிய பாலத்தின் வழியாகச் செல்லவேண்டுமெனச் சொல்லி தான் முதலில் அதில் ஏறிப்போனான். அந்த யுவா பாபம் செய்வதற்கு எது ஸமயம் என்று காத்துக்கொண்டிருப்பவன் போல, அந்த ஸேவகன் பாலத்



தின் நடுவில் அஜாக்ரதையாகச் செல்லும் ஸமயம்பார்த்து, அவனை அடியிலுள்ள புரண்டு ஓடும் வெள்ளத்தில் தள்ளிவிட்டான். அவன் இரண்டு மூன்று தரம் முழுகிக் கிளம்பிக் கடைசியில் மாண்டுபோனான்.

இதைப் பார்த்த தபஸ்விக்கு சாந்தகுணம் பறந்துபோய் நேத்ரங்களில் அக்நிஜ்வாலை சொரிய, அவர், மிக்க கோபங் கொண்டவராய், ‘ஹா! படுபாபி! த்ரோஹி!’ என்றார். இவ் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து முழுவதும் வருமுன்னமே, அந்த யுவாவின் மாநுஷரூபம் மாறி, அவன் ஒரு கந்தர்வனாக விளங்கினான். அவனுடைய ஸுந்தரமுகமும், திவ்யபரிமளமும், ஸ்வர்ணமேனியும், யாழினைப் பழித்த மதுர வசநமும், அதி லாவண்யமுள்ள இரண்டு பக்ஷங்களும் முனிவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவர் ப்ரமித்துப்போய் ஒன்றும் தோன்றாமல் நின்றுவிட்டார். கடைசியில் அந்தத் திவ்யபுருஷனே வாய் திறந்து வசனிக்க லுற்றான்:—

‘ஹே! தபோநிதே! உம்முடைய பக்தியும் நிர்த்துஷ்டமான வாழ்க்கையும் பகவான் திருவடிக்கு எட்ட, உமக்கு இடையில் நிகழ்ந்த ஆசங்கையை நிவர்த்திக்கும்படி அந்தப் பரந்தாமா என்னை அனுப்பினார். நான் உம்முடைய மநஸ்ஸுக்கு சாந்தியைக் கொடுத்தற்காகவே இந்த லோகம் வந்தது. பகவதாஜ்ஞையும் அவர் சித்தமும் யாருக்குத் தெரியும்? அவர் ஸங்கல்பித்தது ஒருபோதும் பிசகாது. அவர் செய்வன யாவும் தாமே நேரில் செய்வதில்லை. மற்றவரைக் கொண்டு செய்விப்பதே அவரது வழக்கம். இந்த ரஹஸ்யம் மநுஷ்யருக்குத் தெரியாது. அவருடைய செய்கையைப் பழிப்பது மஹாபாதகம். இப்பொழுது நீர் நேரிற் பார்த்த அத்புதத்திலும் மேலான தொன்றைக் காணக்கூடுமோ? அவற்றிற்குக் காரணத்தை விளக்குகின்றேன்; அதன்பின்பு பகவத் சேஷ்டிதங்கள் எவ்வளவு நீதியுள்ளவை யென்பது தெரியும். முதலில் தங்க வள்ளத்தில் மதுபர்க்கம் கலந்து கொடுத்த டம்பன் வீண்செலவு செய்து மதத்தை அடைந்திருந்தான்; அவன் ஸ்வர்ண வட்டிலைப் பறிகொடுத்ததும், ‘இனி வீண்பெருமை பாராட்டக்கூடாது’ என்று மிதமான செலவுசெய்து அதிதிபோஜநம் பண்ணுவித்துக் கொண்டு வருகிறான்.

இரண்டாவதாகக் கண்ட க்ருபணனுக்கு நான் தங்கவட்டிலைத் தந்தேன்; அவன் அதைப் பார்த்துப்பார்த்து, 'ஹா! ஹா! அன்புடையார்க்கே அனைத்து முண்டு' என்று தெரிந்துகொண்டு, பின்னும் ஏழைகளுக்கு உபகாரம் செய்து வருகிறான்.

மூன்றாவதாக நாம் கண்ட க்ருஹஸ்தன் மிகவும் தர்மிஷ்டனே. ஆயினும், இதற்குமுன் அவன் பகவானிடத்து நிரந்தரம் அன்பு பூண்டு ஒழுகிவந்தான்; இப்பொழுது அருமையாக ஒரு புத்ரன் ஜநிக்கவே, அவன் முன்போலக் "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையவனா" யில்லை. புத்ரன் மரணமடையவே, அவன் இப்பொழுது, "தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும், நோயே பட்டொழிந்தேன்" என்று சொல்லிக் கொண்டு முன்போல ப்ரீதிபண்ணத் தொடங்கிவிட்டான். நான் கொன்றதை நீர் மாத்ரம் பார்த்தீரேயன்றி, மற்றவர் கண்ணுக்கு அந்த பிள்ளை வலிப்பு நோயால் மாண்டதென்றே பட்டிருக்கும்.

கடைசியாக ஸேவகன் வ்ருத்தாந்தத்தைப் பற்றி,— அவன் இன்று ராத்ரி அந்த க்ருஹஸ்தனது பொருளனைத்தையும் கொள்ளையிட ஏற்பாடு செய்துகொண் டிருந்தான். அவனை நான் பிழைத்துப்போக விட்டிருந்தால், ஸத்பாத்ரத்தில் விநியுக்தமாகி வரும் அந்தத் தர்மபுருஷனது ஸொத்து முழுவதும் தீயோர்கையில் சென்று விடுமன்றோ! அப்படிப் போய்விட்டால் அப்புருஷன் இனி எவ்வாறு அதிதிபோஜநம் செய்விப்பன்? ஆதலால், இனிமேல் தேவரீர் கண்ணால் பார்ப்பதைக் கொண்டே ஒரு தீர்மானமும் செய்யத் துணியவேண்டாம். எங்கே மானுஷஜ்ஞானத்துக்கு அதிக்ரமித்து அறியக்கூடாமல் ஒருகார்யம் நடக்குமோ, அங்கே 'இது பகவத் ஸங்கல்பம்; நாம் குணதோஷம் சொல்ல அசக்தராயிருக்கிறோம்; எல்லாம் முடிவில் நலமாகவே இருக்கும்' என்று நம்பி விடக்கடவீர்' என்று சொல்லி அந்தத் திவ்யபுருஷன் அந்தர்த்தான மடைந்தான்.

முநிபுங்கவர், ஸம்சய நிவ்ருத்தி யடைந்தவராய்த் தமது ஆச்ரமம் திரும்பி, பகவானிடத்து ஏகாக்ர சித்தராய்த் தபஸ் செய்து, முடிவில் உத்தமமான கதியை யடைந்தார்.

வி. ராஜகோபால ஐயங்கார்.

## APPENDIX.

# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, NEGAPATAM.

**O. S. No. 94 of 1913.**

1. Dewan Bahadur T. T. Rangachariar, B.A., B.L. and six others } *Plaintiffs.*

*Versus*

1. Sri Van Satakopa Sri Parankusa Yatindra Mahadesikan and two others. } *Defendants.*

The Plaintiffs above named beg to state as follows under:

1. The Ahobilam Mutt is an ancient, religious and charitable institution founded more than 500 years ago for inculcating the principles of the Visishtadvaitic school of Vedanta philosophy and for imparting spiritual instruction to the disciples of the Mutt who are Sri Vaishnavas. It has a large number of disciples throughout the Madras Presidency as well as in the province of Mysore, Hyderabad and elsewhere.

2. The presiding deity of the Mutt is Sri Lakshmi Narasimhaswami of the Ahobilam temple, in the Kurnool District. The said Lakshmi Narasimhaswami owns extensive moveable and immoveable properties in several districts of the Madras Presidency and in other places.

3. According to immemorial usage the Mutt is managed by a Jeer, who is an ascetic, who has renounced the world, who is chosen from among the disciples of the Mutt for his great piety and learning and who is held in great veneration by all Vaishnavites on account of his position as the foremost religious preceptor among them. The Jeer is *ex-officio* the Trustee of the said Ahobilam temple, and the tradition runs that Sri Adi Van

Satakopa Swami the first Jeer of this Mutt was given Sanyasam directly by God Sri Lakshmi Narasimha under whose command the Mutt was founded for the spiritual benefit of the disciples. As such Trustee, the Jeer is in possession and management of all the moveable and immoveable properties, belonging to the said Sri Lakshmi Narasimhaswami and to the various pagodas attached to the said Mutt.

4. The Plaintiffs and the other disciples of the Mutt are deeply interested in the due administration of its temporal and spiritual affairs, the Mutt being according to usage *Sishyadhinam*, that is, under the control of the disciples. The body of disciples, being the beneficiaries for whose spiritual and temporal benefit the Mutt has been founded, are by the immemorial usage governing the Mutt, entitled as such to select a successor to the Jeership of the Mutt whenever there is, or is likely to be, a vacancy in the said office.

5. According to the immemorial usage of the Mutt, whenever a successor has to be appointed during the lifetime of the Jeer, such appointment is made in the manner following; *that is to say*, notice is given at the instance of the Jeer or of the disciples of the Mutt, calling for a general meeting of all the disciples at the place where Sri Lakshmi Narasimhaswami is for the time being located, for the purpose of electing a successor. The disciples who in response thereto assemble together at such place, either unanimously or by a majority select a fit and proper person for the office among the disciples of the Mutt and announce their choice to the Jeer. The Jeer approves of such choice and makes the person so selected a Sanyasi and instals him as Jeer by adopting the usual ceremonies observed on such occasions in accordance with the usage of the Mutt

6. If no such appointment takes place during the lifetime of the Jeer as aforesaid, it has been the custom of the prominent disciples present at the place where Sri Lakshmi Narimhaswami, the presiding deity of the Mutt, is for the time being located, to convene a meeting of all the disciples at such place, and the disciples so assembled together select, from among the disciples, a fit and proper person as successor who thereupon becomes a Sanyasi and the lawful Jeer of the Mutt.



7. The plaintiffs state that according to the usage of the Mutt, a Jeer can be appointed only in one of the two modes aforesaid and that any appointment not so made is null and void and incapable of conferring on the appointee the status of Jeer of the Mutt. The Jeer has no right, independently of the disciples, to appoint a successor to the office of the Jeership to the Mutt.

8. While such has been the immemorial and well-recognised custom of the Mutt, the late Sri Srinivasa Satakopaswami, the 38th Jeer of the Mutt and predecessor of the 1st Defendant, secretly and without the knowledge of the disciples, left a will dated 7th May 1909, whereby he directed that the 1st Defendant should be the successor. After the death of the said Sri Srinivasa Satakopaswami, the disciples who assembled together at Narasimhapuram, where Sri Lakshmi Narasimhaswami was then located, protested against the validity of the appointment of the 1st Defendant under the said will. But as the 1st Defendant was a pious and devout person the disciples appointed him as Jeer, ignoring his claim under the said will. The first Defendant accepted such appointment by the disciples, became a Sanyasi and the lawful Jeer of the Mutt.

9. In or about the end of September 1910, the 1st Defendant became seriously unwell and several of the prominent disciples were anxious to have a successor forthwith appointed during the lifetime of the 1st Defendant. Accordingly in the beginning of October 1910, a meeting of the disciples was duly held at Narasimhapuram, a village in the Kumbakonam Taluk, and the disciples assembled unanimously selected three persons from among the disciples, as fit to hold the office of the Jeer, and informed the 1st Defendant of the said selection and requested him to instal any one of the three at his option as the next Jeer of the Mutt. Similar meetings were also held on subsequent occasions at Tanjore and other places where similar resolutions were passed selecting certain fit persons for the office and the 1st Defendant was requested to instal one of them as Jeer. The 1st Defendant, however, promised to consider the request so made and do what was proper in accordance with the usage of the Mutt.

10. In or about January 1913, the 1st Defendant again became seriously ill and the Plaintiffs learn that he has thereupon executed

on or about 19th January 1913 a will, which has been registered, by which he has unlawfully directed that the 2nd Defendant should be the successor to the office of the Jeer and after him the 3rd Defendant. The 1st Defendant on the following day took the preliminary steps for making the 2nd Defendant a Sanyasi and has initiated him in the Presha Mantram and the 2nd Defendant has ever since been residing in the Mutt at Mannargudi.

11. The 4th Plaintiff and several other disciples, as soon as they learnt of the said act of the 1st Defendant, waited upon him in February 1913 at Mannargudi and protested against his attempting by will to nominate a successor to the Mutt independently of the disciples and thereby ignoring the rights of the disciples in this behalf. The 1st Defendant replied that, though he has not nominated the fittest among the candidates chosen by the disciples, he still desired that they should approve of the nomination he has made of the 2nd Defendant.

12. Plaintiffs charge that the 1st Defendant has no right either by will or otherwise to appoint a successor independently of the disciples and the nomination by him of Defendants 2 and 3 as successors by the will aforesaid is null and void and not binding on the disciples of the Mutt as being in violation of their rights and of the usage of the institution.

13. The Plaintiffs further state that, as the 1st Defendant is contemplating the completion of the appointment of the 2nd Defendant as Jeer by causing Jeevasradham and other ceremonies to be performed and is threatening to do so and make over to the 2nd Defendant possession of the Mutt and its properties, it is necessary that permanent injunction should be issued restraining the 1st Defendant from further proceeding with the appointment and of the installation of the 2nd Defendant or of the 3rd Defendant as his successor and delivering possession of the Mutt to either of them, and Defendants 2 and 3 from being appointed and installed as Jeer and from taking possession of the same except in accordance with the usage of the Mutt aforesaid.

14. Plaintiffs state that, as the disciples of the Mutt are too numerous to join as Plaintiffs and are scattered throughout the



Presidency, they crave permission to institute the suit on behalf of and for the benefit of themselves and all other disciples of the Mutt.

The cause of action for this suit arose at Mannargudi within the jurisdiction of this Court from and after the 19th January 1913.

15. The Plaintiffs estimate the value of the relief sought at the sum of Rs. 5,100 for purposes of jurisdiction and court fees.

16. The Plaintiffs therefore pray for judgment as follows:—

1. That it be declared

(a) that in accordance with immemorial usage and custom of the Ahobilam Mutt, the right to select the successor to the Jeership of the Mutt is vested in the whole body of disciples of the Mutt,

(b) that during the lifetime of the Jeer, the said right is exercised by the disciples who attend and are present at the place where the presiding deity is for the time being located, after reasonable notice calling upon the disciples to attend for the said purpose in accordance with the usage set out in para 5 above,

(c) that the Jeer should install the person selected or nominated by the disciples as aforesaid, and no other, in accordance with the usage of the Mutt;

2. That it be declared

(a) that the Jeer of the Ahobilam Mutt has no right either by will or otherwise to appoint a successor to the office of Jeer independently of the disciples,

(b) that the appointment by the 1st Defendant of Defendants 2 and 3 as per his will dated 19th January 1913 or thereabouts is null and void and not binding on the Mutt or the disciple thereof;

3. That an injunction be issued restraining the 1st Defendant from proceeding with the appointment and installation of the 2nd Defendant or of the 3rd Defendant or any other person as

his successor in disregard of the usage of the Mutt in this behalf as aforesaid; or from delivering possession of the Mutt or its properties to them or either of them; and against defendants 2 and 3 restraining them from entering upon and taking possession of the office or of the Mutt and its properties;

4. For costs and for such further or other relief as to this Court may seem fit.

---

The written statement of Srivan Satakopa Sree Parankusa Yatindra Mahadesigan, the 1st Defendant herein, is as follows:—

1. This Defendant denies the allegations in the plaint not herein expressly admitted and puts the Plaintiffs to proof of the same.

2. The plaint discloses no cause of action and on the averments in the plaint the Plaintiffs are not legally entitled to maintain the suit.

3. As the title of the 1st Defendant is admitted by the Plaintiffs on the allegations contained in paras. 7 and 8 of the plaint, the Plaintiffs have yet no cause of action and the suit is premature.

4. The plaint contains no allegations that the Plaintiffs are entitled to any legal character; nor have they any right to any properties; and the suit is therefore unsustainable.

5. The Plaintiffs being in a position to ask for further relief with reference to the allegations in paras. 7 and 8 of the plaint and no such relief having been prayed for, the suit contravenes the provisions of Section 42 of the Specific Relief Act and is therefore unsustainable.

6. The Defendant denies the allegations in paras. 2 and 5 of the plaint that he is a trustee of the Mutt or of its properties. He is the Mathadhipati or head of the *Ahobilum Mutt* which is exclusively a religious institution. As such Head, the 1st Defendant is *ex-officio* the Adhinakartar of some temples attached thereto and subject to its control.



7. This Defendant denies the allegations in para. 6 of the plaint that "Mutt, according to usage, is Sishyadhinam, *i.e.*, under the control of the disciples."

8. This Defendant denies that the disciples of the Mutt are "beneficiaries" of the Mutt, or are, by immemorial usage, governing the Mutt, entitled as such to select a successor to the Jeership of the Mutt whenever there is, or is likely to be, a vacancy to the said office as alleged in para. 6 of the plaint.

9. He denies the allegations in paras. 7 and 9 of the plaint and avers that, according to the immemorial usage of the institution, each Jeer in office has the right to appoint his successor; such right of appointment being uncontrolled by the disciples or by any one else. He is not bound to consult the disciples. The office of Jeer being spiritual and succession to the said office being from Guru to disciple, the Jeer for the time being selects a proper person, gives him *Preshamantropadesam* and *Kashayam*. The person so selected and initiated becomes a Sanyasi and, on the death of the Jeer, succeeds to his office. The disciples have no voice in any of the facts aforesaid and have no right to question the same.

10. The disciples have no right to control the choice of Jeer or in any other manner interfere with it. This Defendant denies the allegations in para. 9 of the plaint that "the Jeer has no right independently of the disciples to appoint a successor to the office of the Jeership of the Mutt."

11. This Defendant was appointed to the office by his predecessor, the 38th Jeer, under his Will, dated 7—5—1909, and not by the disciples ignoring the aforesaid Will. He denies that he accepted any appointment from the disciples of the Mutt as alleged untruly in para. 10 of the plaint.

12. This Defendant does not admit the correctness of the allegations in para. 11 of the plaint. When he was ill in September 1910, some of the disciples of the Mutt approached him in the matter of the appointment of a successor and suggested to him the names of 3 persons who might be thought of. In making the suggestion the disciples did not even profess to assert any right

in the appointment of a successor nor did the 1st Defendant recognise any such right to them. The 1st Defendant informed them that he would take the suggestion into consideration when the necessity for the appointment of a successor arose and he would exercise his powers in accordance with usage and in the best interests of the institution.

13. The 1st Defendant recovered in 1910; he fell ill again in January 1913 and it became necessary to appoint a successor. The 2nd Defendant was appointed as his successor under his Will, dated 19—1—13; subsequently the 2nd Defendant was given the *Mantropadesa* and *Kashayam* on the 20th January 1911 and a *Srimukham* was also given to him in proof thereof. He became a Sanyasi on the 14th April 1913 and has, since that date, become lawfully entitled to succeed to the 1st Defendant; and he has been participating and co-operating with the 1st Defendant in the discharge of the duties of the office and managing the properties thereto attached under the 1st Defendant's direction and guidance, and another *Srimukham* was given to him in token thereof.

14. The 2nd Defendant is a learned and pious personage, well versed in all traditions of the Mutt, and his appointment which, as a matter of fact, was made with the knowledge and consent of a large body of disciples who happened to be present, even assuming that such consent was necessary according to usage, has given immense satisfaction to the general body of disciples.

15. This Defendant denies the allegations in para. 14 of the plaint.

16. The allegations in para. 15 of the plaint are incorrect. The 2nd Defendant's appointment has become complete by his becoming a Sanyasi even before this Suit and before this Defendant had any reason to know anything about it.

17. The plaint is not properly valued.

18. The Plaintiffs are not entitled to any of the reliefs claimed.

19. The Suit, as framed, is unsustainable.

20. The 1st Defendant therefore prays that the Plantiff's Suit may be dismissed with costs.

162022